(உகஇ) மேலே கூறப்பட்ட வித்தைகளுள் எவ்வெவர்க்கு எந்தெந்த வித்தையினியமோ, அவ்வவர் அதனைக் குரு உபதேசத்தினால் அறிந்து உமாசகாயராகிய சிவபெருமானை உபாசனை செய்து நிரதிசயானந்தமடைக. இவ்வித்தைகள் அனைத்துள்ளும் தகராகாயவித்தையே மிகுத்து எல்லாவுப நிடதங்களினும் கூறப்பட்டிருக்கின்றது. இது சாந்தோக்கியம், பிருகதார ணியம், மகாநாராயணம், கைவல்லியம் என்பவற்றில் விரிவுறவும், பிறவிடங் களிற் சுருக்கமுறவும் குறிக்கப்பட்டிருக்கின்றது. விளக்கிருந்த இடம் விளக்கெனத் தானியாதுபெயராய்ப் போந்தவாறு போலத் தகராகாயம்

எனப்படும் சூக்குமாகாயம் விளங்கும் திவ்வியானது சிதம்பரம் எனப்படும். அந்தச் சிதம்பரத்தின் பெயர்களாகிய

(உகசூ) இரண்மயகோசம்
(முண். உ. உ. கூ) னும்,

(உகஎ) சத்து
(சாந். சு. உ. க) னும்,

(உகஅ) பரம்
(சுவே. ஈ. எ) னும்,

(உகசூ) விவிக்தம் (தனி)
(கைவ. க) னும்,

(உஉ0) புண்டரீகம்
(கைவ. ககு) னும்,
(சாந். அ. க. க, உ) னும்,
(மகா. க0. எ) னும்.

(உஉக) குகை
(தைத். உ. க) னும்

(உஉஉ) ககனம்
(மகா. க0. எ) னும்

(உஉஈ) அற்புதம்
(கைவ. சு) னும்,

(உஉச) சத்தியமாயதனம் (மெய்ப்பதம்)
(கேந. ஈஈ) னும்,

(உஉஞ) சபை
(சாந். அ. கச. க) னும்,

(உஉட) சத்தியம்
(சாந். சு. அ. எ) னும்,

(உஉண) பரமவியோமம்
(சுவே. ச. அ) னும், (தைத். ஈ. சு. க) னும்,
(தைத். உ. க. க) னும், (இரு. வே. கு. கசுச. ஈசு) னும்,

(உஉஅ) பரமாலயம் (சிவாலயம்)
(மைத். கூ. உஎ) னும்,

(உஉகூ) ஆகாயம்
(சாந். க. கூ. க) னும், (பிரு. கூ. ச. உஉ) னும்,
( ,, கே. கஉ. கூ) னும், (தைத். க. கூ. க) னும்,
( ,, அ. க. க) னும், ( ,, உ. எ. க) னும்,
( ,, அ. கச. க) னும், அதர்வசிகையினும்,
(பிரு. ச. க. கஎ) னும், (வே. சூ. க. க. உகூ) னும்,

(உகூ) கம் (வெளி) ஆகாயம் (சாந். ச. கஅ. இ) னுமாகக் காணப்படுகின்றன. இவை சிதம்பரத்தின் நாமங்களாமாறு

சூலம் வஜ்ரம் நிதி சஹா ஸ்ரீகரா ஹிரண்யம்
சுஹோவாரம் விஷ்ணு வாஸுகி ஹாவாரவி
மஹாநம் வாரிவாஹம் வாஜிஹ்ரீத சீதவி
வஜ்ராவஹ வாஷ்டீயா சாஜாநவாவெளியவி
ஷிஷ்வாரம் வ்ருஷ்டி ஸவஹ்ரேவ வாரொதவி
ஸாதி சஹதீ ஷிவா விவாயு சிவாலயம்
வாகாதி வைதரணி ஸ்ரீதாரிணி கௌரிபா
உக்ராதி நியதம் வெளெ ராமஸே ரவிவெ ரவி
வாவசூரா வரா ஸாலோ நர்த்தஹரி வ்விஷ்ணு தா

என்னுஞ் சிதம்பரமான்மியத்துப் பத்தாம் அத்தியாயச் சுலோகங்களானும், அச்சுலோகங்களின் பொருளை அடக்கிய

அத்தன் பாதத் துவனித் தாடத் தமரும் பொதுவின் மெய்மன் றமலஞ்
சத்தும் பரிரண் மயகோ சமகத் தனிபுண் டரிகங் குகைவண் கனலஞ்
சுத்தம் பரமற் புதமெய்ப் பதமச் சுழுநா வழிஞா னசுகோ தயநற்
சித்தம் பரமுத் திபரப் பிரமந் திகழுஞ் சபைசத் சிவோ லயமே.

என்னும் கோயிற்புராணச் செய்யுளானும் அறியப்படும்.

(உகக) கைவல்லியோபநிடதமுதலியவற்றிற் கூறப்பட்டவாறு, உமாசகாயராகிய சிவபெருமான் நீலகண்டத்துவமுதலிய இலக்ஷணங்களையுடையராய் இதய தகராகாயத்தின்கண்ணே தியானிக்கப்படுவாரேல், அவர் சரீரம் நமது சரீரம் போலத் துக்கமுதலியவற்றுக்கு ஆஸ்பதமாய்விடுமாலோ எனின், ஆகாது; நம்முடைய போல அவர் சரீரம் ஜரை, மரணம், சோகமுதலியவற்றுக்குறைவிடமாகாதென மறுத்தற்கு (சாந். அ. க. கூ) ல் அபஹதபாப்மத்துவாதி குணங்கள் கூறப்பட்டனவாதலின்.

(உஉ) எங்கும் வியாபகராயிருரை இங்ஙனம் ஓர் இ[illegible]துள் வரை யறுத்துத் தியானித்தல் பழுதாமெனின், அன்று ; அவர் கொ[illegible] வடிவம் உபாசகர்பொருட்டாம் என்றும், கடத்துள் அடங்கிய ஆகாயம் உபாதி வசத்தினுற் சிறிதாயினும், சொரூபத்தினுற் பெரிதாம் என்று (வே. சூ. க. உ. எ) ல் நிரூபிக்கப்பட்டிருக்கின்றமையின், சிவபெருமான் பிண்டம் அண்டம் இரண்டினும் உபாசிக்கற்பாலர் என்று பெறப்படுகின்றது. பிண்டம் என்றது பிரமபுரமாகிய சரீரம், அண்டம் என்றது பிருதிவிமுதற் சிவதத்துவாந்தமீறிய முப்பத்தாறு தத்துவபுவனங்கள் அடங்கிகின்ற உலகம்.

(உங) தகராகாசம் என்றதில் தகரம் என்றது சிறுமையையும் ஆகாயம் என்றது அம்பலத்தையும் உணர்த்துதலின், **தகராகாசமானது சிற்றம்பலம்** எனப்படும். எங்ஙனமெனின்,

தகராகாசம் = தகரம் + ஆகாசம்
= சிறுமை + அம்பலம். இது நன். கங. நி-ம், கங. சூ-ம்
= சிற்றம்பலம் என்றபிற்று. [சூத்திரப்பிரகாரம்

வடமொழியிலே ஸ்ரீ என்பது போல, தமிழிலே திரு என்னும் பலபொருளொருசொல் மேன்மையுடைய எப்பொருட்கும் விசேடணமொழியாகி அவற்றிற்கு முன்னர் மகிமைப்பொருளை உணர்த்திவரும். வடமொழியில் **ஸ்ரீ தகராகாசம்** எனற்பாலது தென்மொழியிலே **திருச்சிற்றம்பலம்** எனப் படுகின்றது.

(உச) (திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனர் என்னும்) மூவர் (அருளிய) தேவாரமும், ஸ்ரீமாணிக்க வாசகசுவாமிகள் அருளிய திருக்) கோவை திருவாசகமும், திருமூலநாயனர் (அருளிய) திருமந்திரமுமாகிய இவை தங்கருத்தெலாம் திருச்சிற்றம்பலத்திலே நிறீஇ நிற்பனவாக, (திருவள்ளுவ) தேவர் (திருக்) குறளும், (சிவபெருமானருளிய) திருநான்மறை முடிவும் (உபநிடதங்களும்), வேதவியாச முனிவர் (அருளிய) வேதாந்த சூத்திரமும் ஆகிய இவைகளும் திருச்சிற்றம்பலத்திலேயே தங்கருத்தெலாம் நிறீஇ நின்றவென்று உணர்த்துவாராய் ஔவையார்

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு"
மொருவா சகமென் றுணர்.

என்றருளிச் செய்தார்.

# தேவர் குறள்.

(உகூ) மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

சண்டு மலர் என்றது தகரபுண்டரீகத்தின் மேற்று. "தகரபுண்டரீகமிசை ஏகினன்" எனவே, அது "தகரபுண்டரீகத்துள்ளேயுள்ள தகராகாயத்தின் கண்ணே ஏகினன்" எனச் (சாந். அ. க. க) சுருதிப்பிரகாரம் பொருட் படுத்தப்படும். ஏகினன் என்றது ஆதிபகவன் மேற்று. ஆதிபகவன் என்றது உமையோடியைந்த பகவானுகிய சிவபெருமான் மேற்று.

அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய்கின்ற சிவத் துக்குச் சகளம், சகளநிஷ்களம், நிஷ்களம் என முத்திறத் திருமேனிக ளுண்டென்றும், சகளத் திருமேனியுடையார் மகேசுவரர் எனவும், நிஷ் கள சகளத் திருமேனியுடையார் சதாசிவர் எனவும், நிஷ்களத் திருமேனி யுடையார் சிவன் எனவுங் கூறப்படுவர் என்றும்,

சூஷ்மாதி ஸ்ரீவஸ்து ஸ்தூலாந்தரவஸ்து ஸ்ரீமாயாதீ ஸ்ரீமஹாவஸ்து
ஸ்வாநீ ஸ்யா அதிரிவ்வ தீரயா பேதா (காமி. மஸ். கரிசு)

(உகூசு) காமிகாகமத்திலே "மகேசுவரருடைய சத்தியார் பவானி எனவும், சதாசிவனுடைய சத்தியார் மனேன்மனி எனவும், சிவனுருடைய சத்தியார் ஆதி எனவும் திருநாமம்புனைவர் என்றுள்" கூறப்படுகின்றது. ஞானயோகஸ்தானமாய திஷ்டி எல்லைகண்டாராகிய சிவரைது சத்தி ஆதி எனப்படுவாராதலின்,

ஏதமில் வள்ளுவ ரின்குறள் வெண் பாவிலு
லோதிய வொன்பொரு ளெல்லா—முணர்த்தலுற்
றுதவிழ் தார்மாற னாமம் நமைபயந்த
வேதமே மேழ்க்கனை.

என்று சங்கப்புலவருள் ஒருவராகிய பெருந்தித்தனர் கூறியாங்கு, வேதப்பொருள்களெல்லாம் குறள் வெண்பாக்களினுலருளினேராய், வேதாகமப்பொருள்களெல்லாம் உணர்ந்தோராயுள்ள திருவள்ளுவநாயனர் விஷ்ணு, தேவர், இருடிகண்முதலிய பலர்க்கும் செல்லும் பகவன் என்னும் மொழியை அங்ஙனமாகவொட்டாது சிவபெருமானுக்கே சண்டுச் செல் லுமாறு, உமையம்மையாரை உணர்த்தும் ஆதி என்னும் விசேஷணமொழி யைப் புணர்த்தி ஆதிபகவன் என்றனர். ஆகலின், ஆதிபகவன் என்றது

சாந்தோக்கிய கைவல்லிய உபநிடதங்களிற் கூறப்பட்ட கிருஷ்ணபிங்களராகிய உமாசகாயனை உணர்த்திற்று.

சாந்தோக்கியத்திற் கூறப்பட்டவாறு, தகரபுண்டரீகத்துள்ளேயுள்ள ஆகாயத்துள்ளே "ஏகினன்" என்றவாறு கூறுது "ஆகாயத்தை" விடுத்து மலரைமாத்திரங்கொண்டு "மலர்மிசையேகினன்" என்று கூறினமை சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளைக் கூறும் அழகுபற்றியாம்; இமாசலத்துள்ளார் ஒருவர் "காசிக்கப்புறத்துள்ளார் இராமநாதர்" என்றவிடத்து இடையிற் நிதம்பரமில்லை என்று கொள்வாருண்டா? அதுபோல மலருக்குமேல் "ஏகினனை" க் கூறியவிடத்தும், திருச்சிற்றம்பலமாகிய தகராகாயம் தகரபுண்டரீகத்ததெனக் கோடற்பாற்று. இத்திருக்குறள் கைவல்லியோபநிடதப்பொருளைத் தொடர்ந்து அருளிச்செய்யப்பட்டது; இரண்டினும் மலராகிய இதய புண்டரீகமும் ஆதிபகவனுகிய உமாசகாயரும் பிரதிபாதிக்கப்பட்டிருத்தலின்.

சேர்ந்தார் என்றது ஆவிருத்தியதிகரணத்திற் (ச. க. உ) கூறப்பட்டவாறு திருச்சிற்றம்பலத்தின்கண்ணேயுள்ள சிவனுரோடு ஒற்றுமையுற இடையறுது சோஹம்பாவனையாகிய சிவோஹம்பாவனை செய்தலின்மேற்று.

"நிலம்" என்றது சாந்தோக்கியாதி உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட பிரமலோகமாகிய சிவலோகத்தின் மேற்று.

ஞானயோகிகள் மகாமாயோற்பன்ன விசுத்தகாரியகரணர்களாய் (தைத். உ. க. னும், சாந். அ. கஉ. ரு) னுங் கூறப்பட்டவாறு, நிரதிசய பிரமானந்தத்தோடு மற்றைய வேட்ட போகங்களையும் நீடு துய்த்து வாழ்வார் என்றுணர்த்துவாராய் வள்ளுவநாயனர் "நீவோழ்வார்" என்றனர்.

# திருநான்மறைமுடிவு.

## இருக்குவேதம்.
## சுவேதாசுவதரோபநிடதம்.

ஐவோ zகூரை வாரை வெ்ரா நூவுலி நூவா கூயிலிரை நிஷை ஞை| யஷ்ஹ வெ கிரீஆ கூரிஷ்ரீதி ய ஹ்ரீவ்ஹ்ஹ ஹை ஷ ரோஷ்ரை|

(உரை) "மூன்று வேதங்களின் நிதியாய்ப் பெரியோர் பற்றிநிற்கும் பரமாகாயத்ததாயுள்ள அழியாப் பொருளை அறியாதவனெவனே,

அவனுக்கு அவ்வேதத்தினும் பயன் என்? அதனை அறிபவர்களே கிருதார்த்தராயமர்ந்தனர்" என்று (இரு. வே. க. கசுச. நூகூ. னும், கவே. ச. அ) னும்,

## தைத்திரீயோபநிடதம்.

யொ வெஏ நிஹிதம் முஹாயாம் வரஃஇ வெ்யாஃ ஸ்ரூ்ஹெத ஸவஃஹ நூசோ நூஹ வ்ரஹ்மணா விபஶ்சிதா।

(உநூஅ). இதய குகைக்கண்ணதாகிய பரமாகாயத்தில் இருக்கும் (சச்சிதானந்த பிரமத்தை) எவன் அறிகின்றானே, அவன் சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடி சமஸ்த வேட்ட போகங்களையுங் துய்க்கின்றனன்" என்று (வே. சூ. நூ. கூ. சம)ற் கூறப்பட்டவாறு (தைத். உ. க)னும்,

ஸெஷோ ஹாம்ஸ்மீ வாய்ஸ்ணீ விஶ்வா வரஃஇ வெ்யாஃ நீர்ஜிஹிதா।

(உநூகூ) "பரமாகாயத்திலே நிறுத்தப்பட்ட அந்த வித்தை (வருணன் கூற) பிருகுவாருணியினால் அறியப்பட்டது" என்று (தைத். நூ. சு) னும்,

## கடோபநிடதம்.

ஸொஉ்வநஃ வாயாகாஎ்தி கஶ்மிஞ்ஶாஃ வாஸம வடிழ।

(உசம) அவன் (அறுவித) அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அந்தப் பரப்பிரமத்தின் பரமாகாய சிவபதத்தை அடைகின்றனன்" என்று (வே. சூ. ச. ச. உஉ. னும், ச. நூ. கசு) னுங் கூறப்பட்டவாறு, (கட. நூ. கூ) னும்,

## பிருகதாரணியோபநிடதம்.

ய ஏஷோகஹ்ரு்தய ஆகாஸ ஸ்தஸ்மிஞ்ஶெதே ஸவஃஹ்ரு வஸீ ஸவ்ரு்யெஷாந ஸவஃஹ்ரு்யாயிவதிஃ।

(உசக) "எது இதயத்துள் ஆகாசமாயிருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசிகரிப்பவரும், அனைத்துக்கும் சுசானரும், அனைத்துக்கும் அதிபதியுமாயினர் அமர்கின்றனர்" என்று (பிரு. சூ. ச. உஉ) னும்,

கஸ்மி ந்வஹ்ரு்ஷெ மாஹ்ரு்காஸ ஓதஶ்ச ப்ரோதஶ்ச।

(உசஉ) "கார்க்கியே! அந்த அக்ஷரப்பிரமத்திலன்றே ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் ஊற்றது" என்று (பிரு. கி. அ. கக) னும்,

## சாந்தோக்கியோபநிடதம்.

ஹய யதிஉவிஷ்டி ஹ்ரஷுவ்ரெ உஹரம வ்ணுஸீகம வெஷ்ட உஹ
ரொ zவிஷுஹஹராகாரஷுவிஷ்டிஸ்யுஉஹ வுஉநெஷுவ்யம கதுராவ விஜிஜ்ஞா
விதவ்யிழ |

(உசஙு) "பிரமபுரம் என்னும் இதிலே தகராபுண்டரீக வீடு உள்ளது; இதிலே தகராகாசம் உள்ளது; இந்தத் தகராகாசத்துக்குள்ளேயுள்ளது நாடற்பாற்று; அறியற்பாற்று" என்று (சாந். அ. க. க) ஹும்,

ஹவ்ரணி ஹவா உசாநி ஹ்ருதாநி சூகாராதெவ வஸ்ரூத
ஷ்ருஹ சூகாரம வ்ரதிஷ்டம யஹி|

(உசச) "ஆகாயத்திலிருந்து இப்பூதமனைத்தும் உற்பத்தியாகி, ஆகாயத்தைப் போய் அடைகின்றன" என்று (சாந். க. கூ. க) ஹும்,

## கைவல்லியோபநிடதம்.

ஹ்ரத்ரணுஸீகம விரஜம விமலம விசிஜ்ய பெஜ்ய விஷம வி
ஸொகழ| கூசிஜ்ய வெதுஹ நஹராஹ்வம ஸிவம ப்ரஸாஹ ஜ்ரதம
ஹ்ரவுயொநிழ|

(உசடு) "இதயபுண்டரீகத்தைத் துகளற்ற சுத்தமாகக் கருதி அதன் மத்தியிலே தெளிவுடையராய், சோகமில்லாதவராய், எண்ணப்படாதவராய், வெளிப்படாதவராய், அனந்தரூபராய், சிவனுய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமயோனியாயுள்ளாரை ..... தியானித்து" என்றற் றொடக்கத்தனவாகக் கைவல்லியோபநிடதத்தினும்,

## மகாநாராயணோபநிடதம்.

ஹம கதகுடிரெ வரஷெ வெயாதீ|

(உசசு) "இந்த அந்தப் பிரமம் அழியாத பரமாகாயத்துள்ளது" என மகாநாராயணத்தினும்,

*உஹரம விவாவ்ய வரவெஷ்ட ஹ்ருதம யத்ரணுஸீகம வ்ரரஷெஜ்ய
ஸம்ஷ்ய கதராவி உஹரம முமநம விஸொக ஸுவஷ்டி* ந்யுஉஹவுஉ
வாஸிதவ்யிழ|

*உஹரம விவாவம வரஷெஜ்ஹ்ருதிழ என்று பாடாந்தரமுண்டு.

(உசள) "(பிரம)புரமத்தியிலே இருப்பதாய்ப் பாவமிலதாயுள்ள தகர புண்டரீக வீடு என எதுவுண்டோ, அதிற் சோகமிலதாகிய தகராகாசம் உள்ளது; அதனுள் உள்ளது உபாசிக்கற்பாற்று" என்று மகாநாராயணத்திலும்,

## மூண்டகோபநிடதம்.

ஏவெ ஸுஹுவுரெ ஹெஷு வெரா3நுரா தா வ்ரதிஷ்டி3।

(உசஅ) "திவ்ய பிரமபுரத்திலே உள்ள ஆகாயத்திலே ஆன்மா (சிவபெருமான்) அமர்ந்தனர்" என (மூண். உ. உ. எ) லும்,

## அதர்வசிகோபநிடதம்.

ஸ0ஹு ஸாகோஸி2ஷு ஷ்வயி3।

(உசசு) "சிவபெருமான் ஆகாயமத்தியிற் தியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகையிலும்,

## பிரசிநோபநிடதம்.

ஸ வஸ்தஷ்டா ஜீவஸ்தா ஷ்ரா ஷ்ர0 வ்ருிஸ்ரய0 வ்ரு்ஷ தீகூ3ஸ்தி3।

(உநி0) "அவன் இந்தச் சிவகனராகிய (இரணியகருப்பரினின்றும்) உற்கிருட்டராகிய (நாராயணர்க்கும்) பரமாய்த் (தகரபுண்டரீக) புரிக்கணுள்ள புருஷரைச் (சிவனரைக்) காண்கின்றனன்" என்று (பிர. நி. நி) லும்,

## மாண்டேக்கியோபநிடதம்.

கூர்த்ர ஸ்ரு்தயெ-ர வ்யவஹாயு-ர் வ்ரவஹெந்ரவஸி ஸ்ரி வொ zஜெத ஸ்வவஜோ0கா3ர்।

(உநிக) "அளவில்லாதவராய், வாக்கிந்திரிய வியவகாரத்துக் கெய்தாதவராய், சமஸ்தப் பிரபஞ்சோபசாந்தராய், அத்துவிதராய், துரியராய், ஓங்காரராய் நின்ற சிவபெருமான்" என்றவிடத்துக் கூறப்பட்ட சிவபெருமான் நிவிர்த்திகலாசக்கரம், பிரதிஷ்டாகலாசக்கரம், வித்தியாகலாசக்கரம், சாந்திகலாசக்கரம் என்னும் நான்குக்கும் மேலாய் (கூ0-ம் இலக்கத்திற்) கூறப்பட்ட சாந்தியதீத அத்துவாதீத பரமாகாய துரியமூர்த்தியாம் என்பது போதர மாண்டேக்கியோபநிடதத்தினுங் கூறப்பட்டிருக்கின்றது.

## உபநிடத உபக்கிரமணிகை.

### ஈசாவாசியோபநிடதம்.

(உநிஉ) ஈசாவாசியோபநிடதத்து முதன் மந்திரத்திற் கூறப்பட்ட ஈசரும் அச்சிவபெருமானேயே உணர்த்திற்று.

### கேநோபநிடதம்.

(உநிஙு) கேநோபநிடதத்திற் கூறப்பட்ட உமை பிருகதாரணிய சாந்தோக்கியாதி உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பரமாகாயமாம்.

### தைத்திரீயோபநிடதம்.
### கண்ணுவசாகை.
### சதபதப்பிராம்மணம்.

(உநிச) (தைத். உ. அ. ணும், கண். சா. சு. கூ. கூஉ, கூஙு) னும் மநஷ்யானந்தமுதல் ஒன்றுக்கொன்று மேன்மேலாகக் கூறி உயர்த்திக் கொண்டுபோய் முடித்த பதினைஎவது பிரமானந்தம் (சத. பி. கச. சு. சு. க. ணும், பிரு. நி. சு. க) னும் பிரதிபாதிக்கப்பட்டு, பிருதிவி சலில வாயு அந்தரிக்ஷலோக கந்தருவலோக ஆதித்தியலோக சந்திரலோக நக்ஷத்திரலோக தேவலோக இந்திரலோக பிரஜாபதிலோகம் என்னும் லோகங்களையெல்லாம் கடந்த பிரமலோகமாகிய சிவலோகத்தின்பாலதாம் என்றும்,

### ஐதரேயோபநிடதம்.
### அதர்வசிரோபநிடதம்.

(உநிடு) இந்தப் பிரமலோகத்தையே ஐதரேயமும் அதர்வசிரசும் (ஐத. நி. சு. ணும், சு. ச) னும் சுவர்க்கலோகம் என்றுங் கூறியவாம் என்க.

(உநிசு) (தகரா) காசம் நட்பமாய்விடின் பிரமபுரமாகிய சரீரத்துள் மாத்திரம் அடங்கிய தொன்றுய்விடுமே எனின், அன்று;

ல ஹொவாஅ யஉ-ூஙூ-ற மாமி-ஃ ஞிவொ யஉவ-ூரூ வூயிவூர யஉஹரா ஏூவாவூயிவீ ஐஉ யஉ-ூ-ஙஊ ஹவஅ ஹவிஷ்ஷூஎ தூஅகூஉ ஞுகாரய வாவ கஎொஙஊ வொஅகஞைதி

(பிரு. நி. அ. எ)

(உநிஎ) "கார்க்கியே, வானத்துக்கு மேலும் பூமிக்குக் கீழுமாக வானம், பூமி, இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பவற்றை அடக்கிக் குறுக்கும் மறுக்குமாய், அமைந்ததெதுவோ அது ஆகாயத்தில் (அமர்ந்தது)" என, (அரைமாத்திரையிலடங்கும்மடி யகலமளக்கிற்பாரில்லாவடி * என்றவாறு) கூறப்பட்டிருத்தலின், அந்த ஆகாயம் அணுத்துக்கும் மேலாய் அளவுட் படாது விரிந்துபோந்தமை உணரற்பாற்று. இங்ஙனம் வேதாந்த சூத் திரத்துக்கு ஆதாரமாய் நின்ற ஈசகேநாதி உபநிடதமணித்தும் ஆகாசம் பரமாகாசம் எனப்படும் தகராகாசத்தில் தங்கருத்தெலாம் நிறீஇ நின்றமை வெளிப்படை.

# மூவர் தமிழ்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

(உநிஅ) கற்றுங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றுர்வாழ்தில்லேச்சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றுநின்றுரைப்பற்றுபாவமே.

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லேயுட் சிற்றம்பலமேய
கருமாணுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணுதுள்ளமே.

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனையதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னீயே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே.

பொன்றயங்கிலங்கொளிர்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவரய்யிஞ்ஞகாயிறட்டிலீ
கொன்றையம்முடியினுய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதெனியமமே.

பெரியபுராணம்.

ஒன்றுவே றுணர்வு மில்லே ஞெழிவற நிறைந்த கோல்
மன்றினுண் மறைக ளேத்த மாணுட ரூய வேண்டி

* திருவதிகை, திருவடித்தாண்டகம். எ.

நின்றுநீ யாடல் செய்தை நினைப்பதே நியம மாகு
மென்றபூம் புகலி மன்ன ரின்தமிழ்ப் பதிகம் பாட.

## திருநாவுக்கரசு நாயனார்.

(உஅசு) வில்லைவட்டப்படவாங்கியவணர்தம்
வல்லைவட்டம்மதின்மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டந்திசைசனகதொழுவார்வினை
யொல்லைவட்டங்கடந்தோடுதலுண்மையே.

### பெரியபுராணம்.

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொ னம்பலத்து
ளரவும் புனலுஞ் சடையாட வாடு வார்கூத் தாராமை
விரவுங் காதன் மிக்கோங்க வேதம் படியுந் திருப்படிக்கீ
ழிரவும் பகலும் பணிந்தேத்தி யின்பஞ் சிறக்கு மக்காளில்.

## பூரீசுந்தரமூர்த்திநாயனார்.

(உசo) பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
ணூரூரன்றருமனந்தமர்செகிஷ்டும்போதுதடுத்தாட்கொள்வா
னூரூரன்றம்பிரானூரன்மிகொங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூர்பெருமானேப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றுமன்றே.

### பெரியபுராணம்.

அத்திருப் பதிய யணைந்தரமன் றம்மை யாண்டவர் கோயிலுட்புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனர் தில்லை மன்றுளின் ருட வீடிய் தோலநோ் கரட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார்.

## மணிமொழி.

(உசுக) வேதாந்த சூத்திர நீலகண்டபாடியத்தி ஜன்மாதிகரணத்தினும் (க. க. ஒ), ஆகாயப்பிராணாதிகரணத்தினும் (க. க. உரு, உச), சர்வத்திரப்பிரசித்தாதிகரணத்தினும் (க. உ. க), அக்ஷராதிகரணத்தினும் (க. ரு. கூ, கo), ஈக்ஷதிகர்மாதிகரணத்தினும் (க. ரு. கஉ), தகராதிகரணத்தினும் (க. ரு. கங—உஉ), பிறவிடங்களினும் ஆகாசமே தகராகாயவிஷயம் கூறப்பட்டிருத்தல் சிவார்க்கமணிதீபிகையுள் நன்கு புலப்படும்.*

## திருக்கோவையார்.

(உசுஉ) எறும்பாலணியிறையம்பலத்தோனெல்லிசெல்குறுவோர்
கலம்பாவியமுற்றுங்கல்லினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமூலியின்விலையென்னீகருதுவதே.

(இ—ள்) சிலம்பா, எறும்புகளால் அலங்கரிக்கும் இறைவர், திருச்சிற்றம்பலத்தின்கண்ணர், அவரது (சிற்றம்பலத்தில்லை) எல்லைக்கண்ணே அவரை அருண்ஞானத்தினல் வியாபித்தணுகுதற்குக் கருதும் சிவன் முத்தராயினரது நன்மைபரந்த (பிருதிவி முதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள) பிரபஞ்சமனைத்தையும் நீ கொடுப்பினும், எம்முடைய தமராகிய கல்வரைநாடர் வடுவகிர்போலும் கண்ணையுடையாளது சிறிய இடைக்கே விலையாகச் சொல்லுதல் இயையார், கலம்பரந்த மூலியின் விலையாக யாதனை நீ கருதுவது? ஒன்றற்கும் அவர் உடம்படார்; என்பதாம்.

பெரியபுராணம்.

அறிவி னல்லை யாயதிருத் தில்லை யுள்ளே யமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப் பெருகு முள்ளத் தினிற்பெற்றுச்
செறிவு ஞான போனகர்வர் தருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார்.

## திருவாசகம்.

(உசுங) எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீறு போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
யும்பரர் போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி.

## திருமந்திரம்.

(உசுச) வீழ்நிழ லெருவும் விழுமெழு மெய்சோருந்
தம்மைநந் தாமறி யார்கள் சதிர்கெடுஞ்
செம்மை சிறந்த திருவும் பலக்கூத்து
எம்மலர்ப் பொறியாதத் தண்புவைப் பார்கட்கே.

இங்ஙனம் திருக்குறுமுனிமுதலிய முனிவர்களிருந்து ஒவ்வோர் பிரமாண மாத்திரம் ஸ்தாலீபுலாக நியாயங்கொண்டு எடுத்துக் காட்டினம். மற்ற வைகீக முன்பின் மலிவற ஆராயவல்ல பெரியோர் திருச்சிற்றம்பலத்தி லேயே எப்பொருள்களுங் கோவைபட்டிருத்தல் காணவல்லுநரவர்.

ஜ்ஞாந0 க்ரியா ச யய்-ா ச யொகஸ்ததி ஸ்ரைஸ்ரயி।
உதஷ்டாடி ஸ்ரோவ்ரதொ ஜ்ஞ யந்ி-ஸ்ஸ நாதநः।

(வாயு. உத். கக. கூ0)

தெத்ராதஃ வாஸோ யஜ்ஞ ஸ்ரயு-ாதி ஸ்ரா உதவி-யஃ।
தெஷ்ட வாஸ்ரவதொ யொ ஸ்ரிஷ்0 ஸ்ரதிக்ஷயெஜ்ஜுஷ்டி

(வாயு. பூ. உஅ. கள)

(உசுரு "சரியை கிரியை யோகம் ஞானம் எனச் சிவபுண்ணியம் நால்வகைப்படும்; அவற்றுட் பாசுபதயோகம் உறுதியாய்ச் சிவபிரானு ரைப் பிரத்தியக்ஷமாக்கும்" என்று வாயுசங்கிதை கூறலானும், அந்தப் பாசுபதயோகத்தையே நீலகண்டசிவாசாரியர் கன்மயாகம் தபஸ்யாகம் ஜப யாகம் என்னும் இந்த மூன்றுக்கும் மேற்பட்ட ஞானதியானம் (ஞான யோகம்) என்றும், இது பிரமசொரூபத்தை அடைதற்கு நேரே ஹேது வாயுள்ளதென்றும் அக்கினிகோத்திராதிகரணத்தில் (ச. க. ககூ) கூறினராக, சைவசித்தாந்த சந்தான சாரியருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியர் தில் லைச் சிற்றம்பலத்தை ஞானயோகஸ்தானம் என்பாராய்

பிறந்தில மாரூர் தன்னிற் பேசிய தூசி மேவி
யிறந்தில மிரண்டு மூத்தி யின்பமும் பின்ப தாகா
முறைந்திடுந் தில்லை ஞான யோகமார் தான மாமாற்
செறிந்தடி காணச் சீவன் முத்தராய்த் திரியலாமே

என்றருளிச் செய்தனர்.

ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் முத்திறத் தத்துவங்களுள்ளே அதிதாபாக ஆன்மதத்துவத்தினின்ற ஏகான்மவாதியார் அதிதாபாக சிவதத்துவத்தின்பாலராம் திருச்சிற்றம்பலவரை மந்தபுத்தி யினர் உபாசனையின்பொருட்டுள்ளார் என்று தூஷித்தலானும், அங்ங னம் வைணவருக்கும் அத்திருச்சிற்றம்பலம் உருசிக்காமையானும், சமஸ்த சாஸ்திரப்பிரதிபாதிதமாகிய திருச்சிற்றம்பலமானது சைவசமயிகளுக்கே வீற்புடைத்தாய் வாய்த்த பெருஞ் செல்வமாயிற்றென்க.

(உசுசு) "இருடிவாமதேவர் நான் மனுவாயினேன் சூரியனுயினேன் என்றனர்; இங்ஙனம் நான் பிரமமாகின்றேன் என்று அறிபவன் (பாவிக்கிற

வன்) எல்லாமாயாகின்றனன்; தான் வேறு தேவதை வேறெனக்கொண்டு அன்னியமாய்த் தேவதையை வழிபடின் அவன் அறிந்தவனுகான்" என்று (பிரு. கூ. ச. க0) கூறுகின்றமையின், அஃதபாவனையொழிந்து அத்துவித பாவனை செய்யக்கடவன். "தேவனென்றே, இராஜனென்றே, ஈனே ஈதெல்லாம் என்றே தியானிக்குங்கால், அவன் ஆசை குறந்தவனுய், அபகத பாப்மத்துவகுணமுடையனுய், பயமிலனுயாகின்றன். அவன் மனவியினல் ஆலிங்கனஞ் செய்யப்பட்டவிடத்தும் யாதும் அறியானுய், (அருள்) ஞான பரமான்மாவினுற்றழுவப்பட்டு, உள்ளும் புறம்பும் அறியாது நிற்கின்றனன்" (எனவே, பரமானந்தமடைந்து நிற்கின்றனன்)" என்று (பிரு. சு. கூ. உக) ற் கூறப்படுகின்றது.

ஹிஹை டெஹை ஸிவொ ஹ-ஓஹ்வா ஸிவயூ3-ஹ்வஸ்ரிதஃ।
ஸிவா நo3ஷ ஃநு-வ்ராவ்ய ஸுஹ்ருதாய கஸ்யசித்।

(உசுஎ) "பின்னமாகிய தேகத்திலே சிவகுணங்களோடியைந்து சிவனுகிச் சிவானந்தம் அநுபவித்து வேறுபடாதிருக்கின்றனன்" என இரௌரவாகமத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. பரமான்மாவைக் (குருப் பிரசாதத்தினுற்) கண்டு, கேட்டு, நினைந்து, அறிந்தால் இஃதெல்லாம் அறியப்பட்டதாயிற்று என (பிரு. சு. நி. சு) பிரமபாவனை கூறி, சைந்தவ வுப்புக்கட்டியானது உள்ளும் புறமுமின்றி எல்லாம் இரசகனமாயிருத்தல் போல, இந்தப் பரமான்மாவும் உள்ளும் புறம்புமாகியவெல்லாம் (அருண்) ஞானகனமாயிருக்கின்றதென்று (பிரு. சு. நி. கஉ) னும்,

ஸுஷ்நாஸீ வா ஸுரே ஸயோ3தா ஸுநஸ்ஸீ3தியூ3-ஹ்வ।

(உசுஅ) "இந்தப் பரமான்மா நாசமிலாததும் சேதிக்கப்படாதது மாகிய குணத்தையுடையது" என்று (பிரு. சு. நி. கச) னும், "அங்கே துவிதமாயிருந்தாலன்றே ஒருவன் ஒன்றைப் பார்ப்பதும், ஒருவன் ஒன்றை மணப்பதும், ஒருவன் ஒன்றை உருசிப்பதும், ஒருவன் மற்றொருவனை வாழ்த்துவதும் பிறவும் நிகழும்; அவன் பிரமபாவனையினுல் எல்லாம் பிரமமாய் இருக்குங்கால், அவன் மற்றொன்றைப் பார்ப்பதெங்ஙனம்! மணப்பதெங்ஙனம்! உருசிப்பதெங்ஙனம்! வாழ்த்துவதெங்ஙனம்! கேட்பதெங்ஙனம்! பரிசிப்பதெங்ஙனம்! அறிவதெங்ஙனம்!" என்று (பிரு. சு. நி. கசு) னும் கூறியதாலும் அப்பரமானந்தநிலைபற்றியேயாம், மேலும், பிரமபாவனை (தைத். கூ. க0. ச, நி, சு)னும், (முண். கூ. க. உ, கூ) னும் கூறப்பட்டிருக்கின்றது.

ஸிவொ zநு3ஷ்ஹ ஹெவா நு3ஷ்' வ்ரூஹ்வ0 விவஜ்ஜ-ஹ்யெஷ்| யஸ்ரி வ ஷ்லோஹஷ்டெவ்தி கஷ்டெதக0 ஹாவயெ-ஹ்வா।

(உசுக) "இவன் வேறு தான் வேறு என்னுந் தனித்தபாவனை யொழிந்து இவனே நான் என்னும் அத்துவிதபாவனையை எப்போதும் பயில்க" என்று சர்வஜ்ஞரானேத்தரங் கூறியதாயும் மேலே கூறிய சுருதிப் பொருளேயெயாம்; இந்தச் சிவானந்தலஹரியில் நிற்பவன் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் பார்ப்பதில்லை என்றஞ்சொடுக்கத்தனையும் ஆனந்த மேலீட்டினல் அவன் மனசு பிற விஷயும்பற்றிக் கவரப்படாதென்பதை உணர்த்தின.. பெத்தாவஸ்தையில் ஆன்மாவேனும், மற்றைச் சுட்டுபொருளேனும் அறிவித்தால் அறிவதுங் காட்டினுற் காண்பதும், இயக்கினல் இயங்குவனவுமாயிருத்தலால், அறிபவரும், காட்டுபவரும், இயக்குபவரும் பரப்பிரமசிவனர் என்று பிருகதாரணியத்து அந்தரியாமிப்பிராம்மணம் கூறிற்று.

ஸஷ ஹ்யேவா நந்தயாதி।

(உஎ0) "இவரே ஆனந்தத்தை விளைவிக்கின்றாரன்றே" என்று (தைத். உ. எ) னும்,

ஸஸ0 ஹ்யேவாய0 ஆத்ம நந்தீ ஸவ்தி।

(உஎக) "இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றனன்" என்று (தைத். உ. எ) னும்,

ஸ்ரவாஸஸ0 ஆத்ம நந்தீ ஸவதி நா நூயா।

(உஎஉ) "பிரமானந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றனன்; மற்றோர் பிரகாரத்தால் அன்று" என்று சிவாகமத்தினுங் கூறப்பட்டது. இங்ஙனம் சர்வஜ்ஞதாதி குணஸ்தோயுடையவனுய் விளங்குதலே சிவத்துவம் எனப்படும்.

விஜ்யா தஜ்ஜாஸ்ரு வ்ருஹ்யோ யாதி நா நூயா।
ஊத ஹ்யோ தயோ ஹ்ருஹ்மா ஜ்ஞேரு சிவ ஈ ஸ்ம்ருதா।

(உள்ங) "வித்தையினுலே அவித்தை நீங்கியவிடத்துத் தானே சித்திக்கும் ஐக்கியமே சிவசுயர்க்கு எய்தின்றது; அதுதான் சாமியம் என்ற பிரமதைதையிற் புருத்திய சுலோகமும், அதன் தாற்பரிய தீபிகையும், ஏகான்மவாதினர் (மூண். உ. க. ந.) ற் பொறித்த உரையும் கற்பனைகளாம் ஆன்ய பின்வரும் பிரமாணங்களாற் சித்திக்கின்றது.

ஸவ-ஜ்ஞ கா கூவ்ரி ஜ்ஞாநிவைராயஃ வ்ருதஜ்ஞ தா நித்ய ஜ்ஞாவ்ருதிஃ।
ஊநஜ்ஞாதிரு நிராஸ்ரோ தா, விஸ்ரஉஎஉ ஸ்ரு ஸ்ரிஸ்ரு ஸ்ரீ।

(உசை) "முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங் களினீங்குதல், தன்வயமுடைமை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடை மை, இயற்கையுணர்வினனாதல், தூயதேகமுடையனாதல் (என்னும் எண் குணங்களை) அடைபவன் சிவத்துவத்தைப் பெறுகின்றான்" என்று சர்வஞ் ஞாநேத்தரங் கூறுகின்றது.

ரூஶ்வரா தத்ர்ணா ஸ்ருவ்ர் வஸ்ருஜ்ஜெ தடா தந்ரி।
வ்ணுவ்ர்ஷவஸ்வகர் தர்ணாநீவ திதொ ஸ்ருதீ।
வ்ணுர் வஸ்ருஜ்தெ வ்ஸ்வா ஶிதாழி வஜநாஜ ஸ்ர்டி।
தவா ஜ ஶிவவ்ர்தா ஸ்ருவ்ர்ஜ்ஜுவாழி யாந்ரி்கர்।
உதெயுஸ் ர்ணவஸ் கராஜ வாஜ்வஷ்ணா நிர்ம்ஜி்தர்।

(உஎடு) "சிவபெருமானிலிருந்து அக்குணமனைத்தும் அப்போது ஆன்மாவிற் சங்கிரமிக்கின்றன; புண்ணியபுருஷசம்பர்க்கத்தினாற் புண்ணி யங்கள் ஒருவனுக்கு எய்துமாறு போல என்றற்றொடக்கத்தவற்றால் வெளி ப்படை; அங்ஙனமே சிவபெருமானைப் போல முக்தராயினோரும் சர்வஞ் ஞத்துவாதி குணங்களையுடையராகின்றனர்; இங்ஙனம் குணங்கள் ஆன்மா விற் சங்கிரமிக்கும் என்னும் சாமியபக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகத்திலும்,

யஸ்யைதெ மஹாரிஷ்ர்தஷ்ஸ்ராரா சுஷ்ஷ ஸாதி்ர்ணா ஸ்ரு வ்ரஜ்ஜண ஸ்ராய்ர்ஜ்யி।

(உஎசு) "எவனுக்கு இந்த நாற்பது சம்ஸ்கீரங்களும் பரமான்மா வின் (சர்வஞ்ஞதாதி) எண் குணங்களும் ஏய்துகின்றனவோ, அவன் பிர மத்தின் சாயுச்சியத்தை அடைகின்றனன்" என்று கவதமசூத்திரத்து எட் டாவது கண்டத்திலும்

(உஎள) உக்ஷா வ்ர்ண-ர்ம வியாநெந ர்ணாவ்ர்தந ஶாவ ரொஜ। ஓம் ஹாஶ்தாதி ஸ்ருவ-ர்ஜ்ஜொ ஜவ ஸ்வாஹா। ஓம் ஹீஶ்தாதி வரி்தாபெவொ ஜவ ஸ்வாஹா। ஓம் ஹ்ரூஶ்தாதி ஸுநாதிவொயொ ஜவ ஸ்வாஹா। ஓம் வைஶ்தாதி ஸ்வாதிஜ்ஞெரா ஜவ ஸ்வாஹா। ஓம் வொஶ்தாதி ஸ்ருவ்ர்ஜ்ஜுவாழி ஜ-ர்வ ஸ்வாஹா। ஓம் ஹம் ஸுதி ஸ்ருதி ஸ்ருவ ஸ்வாஹா என்று(அக்ஷ அ அ சை)ம் சுலோகத்துக்குப் பின்னும்,

(உஅ) யஸ்யைதா ர்ணாஸ்தெ ஸ்ர்ந ஸ்ரஸ்யை வெவா ஏயெழ। ஸவ-ர்ஜ்ஜாய (illegible)

MAHAMAHOPADHYAYA
No 11 V S IVER LIBRARY

சுஷ்வாத்மிo வ்யாதஹரந்ரு உநஹரo ஸத்யிவே ச என்று (வாயு. உத். கஞ். கoக, கoஉ) னும் உணர்த்தப்பட்டவாறு

ஆன்மாவிலே சர்வஜ்ஞதைமுதலிய சிவகுணங்கள் பதிதலே சாமிபம் என்பது போதர

ஶுத்த ஶிவஸ்யோ ஹவெஷ.

(உஎசு) "முக்தன் சிவசமமாகின்றான்" என்று (வாயு. பூ. உ. எசு. னும், உஅ. உஉ) னும்,

வாஜ்ய்o ஶிவஸ்யோ நதா.

(உஅo) "சாதிக்கப்பட்டது சிவசாமிபம்" என்று (வாயு. உத். கக. கஉo) னும்,

(உஅக) வ்யஷ்டிர்ஸ்ருஜ ச நியொஜ்ய கதே வரயா ஶிஷ்டிவ்ரு ஜிஉத்திகாo வவ-ஜ்ஞகுவஸ்-தத்வ்ரு நாதிகஶ்தி வ்யாதஹரந்ரு வஜ்ஞாதி ச. ஸத்யிo வ்ரூஹித்-ஶிதிஶ்நஹ விஷயாo ஷட்டo ஸ்ருஷ்டிர்நாo கத ஸ்ரூவா ஸ்ருஷ்டிவ நஜ்ஞத ஶ்ரூவெந வஜ்யஸ்o ஶிஷ்டிவ்ரு கதா யொஜயெத.

என்று சித்தாந்தசாராவளியினும் கூறப்படுகின்றது. இத்தச் சிவத்துவத்தை உபநிடதங்கள் அமிர்தத்துவம் என்று வழங்குகின்றன.

ஹ்ரூதகுo ஹி விoதெத.

(உஅஉ) "சிவத்துவத்தைத் திரிச்கின்றனன்" என்று (கேந. கஉ) னும்,

ஶ்ரவணஸoஸ்தோ zர்ஜ்தகுவ ஶெத்தி.

(உஅஞ) "பிரமத்திலே (சிவோஹம்பாவனையினல்) நிறீஇ நின்றே னை சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சாந். உ. உசு. க) னும்,

தயொர்ஷ்வோயஹர்ஜ்தகுவெத்தி.

(உஅச) "(தலைநாடிவாயிலாக) மேலே போய்ச் சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சாந். அ. சு. சு. னும் கட. சு. கசு) னும்,

ஹ்ரூதகுவ்ரு த ந்ரூஸாவ்ரு விவித்ந.

(உஅஎ) "செல்வத்தினும் சிவத்துவம் எப்தும் என்னும் நம்பிக்கை இல்லை" என்று (பிருஹ. [illegible] னும், து. இ. சு) னும்,

23172

## உபநிடத உபக்கிரமணிகை.

வஜ்காவதரே வல்ஷ்யகுப்ய:।

(உஅசு) "இவ்வளவுதான் சிவத்துவம்" என்று (பிரு. சு. இ. கஇ) ஆ

ஸ்வர்லோகா ஜ்யோகம ஜஜ்ஞே।

(உஅள) "சுவர்க்கலோகத்துள்ளார் (சிவலோகத்துள்ளார்) சிவத்துவத்தை அடைகின்றனர்" என்று (கட. க. கசு) ஹும்,

ஸய யீஸா ஜ்யோகம விதிஷா।

(உஅஅ) "வித்துவான்கள் சிவத்துவத்தை அநுபவித்து" என்று (கட. சு. உ) ஹும்,

ஜ்யோகமேதி மஹதீ।

(உஅசு) "சிவத்துவத்தையும் அடைகின்றனன்" என்று (கட. சு. அ) ஹும்,

ஜ்யோகமேதி।

(உசுஅ) "சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சுவே. க. சு) ஹும் கூறப்பட்டிருத்தலான் வேதாந்தாகமார்த்தங்களெல்லாம் ஒரே பொருட்பட நின்றவாறு தெள்ளிது.

இங்ஙனம் சிவத்துவம் அடையும் வித்துவானுக்குத் தலைமாடிவாயிலாக உற்கிரமணமுஞ் சிவலோகப் பிராப்தியும் உளவாம்.

(உசுக) "இதயத்துள்ள நூற்றேர் நாடிகளுள்ளே ஒன்று தலைவாயிலாகப் போந்தது. இந்நாடிவாயிலாக (மரணகாலத்தில்) உற்கிரமணஞ் செய்வோன் மேலுலகத்தை (பிரமலோகத்தை) அடைந்து சிவத்துவம் எய்துகின்றனன். மற்றைய நாடிகள் மற்றைய உலகங்களைப் பிறர் (அவித்துவான்கள்) அடைதற்கு உதவாநின்றன" என்று (சாந். அ, சு. இ. ஹும், கட. சு. கசு) ஹும் காணப்படுகின்றது. படவே, வித்துவான் சிரநாடிவாயிலாகவும், அவித்துவான் மற்றைய நாடிகள்வாயிலாகவும் உற்கிரமிக்கின்றனர் என்றாயிற்று. இங்ஙனம் புறப்படுவார்க்கு உத்தராயணமார்க்கம் தக்ஷிணாயனமார்க்கம் என இரண்டு கூறப்படுகின்றது. உத்தராயணமார்க்கமானது அர்ச்சிராதிமார்க்கம் எனவும், ஒளிமார்க்கம் எனவும், தேவயாணம் எனவும், தக்ஷிணாயனமார்க்கமானது தூமமார்க்கம் எனவும் படும். பஞ்சாக்கினிவித்தை அறிந்தவர்களும், வனத்திலிருந்து பத்தினிரானம்வாயிலாக உபாசிப்பவர்களும் ஒளியை அடைந்து, இதிலிருந்து பகலை அடைந்து,

இதினிருந்து பூருவபக்கம் அடைந்து, இதினிருந்து உத்தராயணமடைந்து, இதினிருந்து தேவலோகத்தை அடைந்து, இதினிருந்து ஆதித்தியலோகத்தை அடைந்து, இதினிருந்து மின்னல் அடைய, அங்கே ஓர் அமானவன் வந்து அவர்களைப் பிரமலோகத்துக்கு நடாத்தச் சென்று அங்கே போய்ப் பெரியோராய் நீடு வசிக்கின்றனர்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை (மீளுதல் இல்லை) என்றும், வேள்விகளானும், தானங்களானும், தபசுகளானும், உலகத்தை வெல்வோர் தூமமார்க்கம்வாயிலாகப் போய்ச் சந்திரனை அடைகின்றனர் என்றும், அங்கே கன்மம் புசித்து எஞ்சிய கன்மத்தோடு அங்கிருந்து பின்னர்ப் பூமிக்கு மீளுவார் என்றும், இவ்விரு மார்க்கமும் அறியாதோர் பறவை புழு முதலியவைகளாய்ச் செனிப்பார் என்றும் (பிரு. அ. உ. கடி, கசு. னும், சாந். நி. க0. க—அ. னும், கௌஷீ. க. உ. ங) னுங் கூறப்பட்டிருக்கின்றது.

(உகூஉ) உபகோசலவித்தை கூறியவிடத்துத் தேவயானம் (ஒளிமார்க்கம்) வாயிலாகப் பிரம (லோக)த்தை அடைந்து, மீளத் திரும்புவானல்லன் என ஒளிமார்க்கமாத்திரம்(சாந். ச. கடி. க—சு)ற் கூறப்பட்டுள்ளது.

(உகூங) உத்தரம் தக்ஷிணம் என்னும் இரு மார்க்கங்களையும் சுருக்கிச் சூசித்து, ஆன்மாவை நாடினோர் சிவனுர் (அமிர்தர்) லோகத்தை அடைந்து மீளத் திரும்புவாரல்லர்" என்று (பிர. க. க0) ற் கூறப்பட்டிருக்கின்றது.

(உகூச) இங்ஙனமாக, வித்துவான் ஆப்தகாமனையாவது, அகாமனையாவது, நிஷ்காமனையாவது, பிரம (சிவ), பாவனையினுற் பரமசாமியம் அடைந்து (முண். ங. க. ங), மரணகாலத்திலே தன் ஆன்மாவைப் பிராணன்களெல்லாம் பிரியாது குழும, தனது உடற்கணுள்ள நூற்றோர் நாடிகளுட் சிறந்த தலைநாடிவாயிலாகப் புறப்பட்டுத் தேவயானம் எனப்படும் உத்தராயணமார்க்கமாகப் போய்ப் பிரமலோகத்தை அடைந்து, புநராவர்த்தியின்றிப் பிரமானந்தத்தோடே சமஸ்த போகங்களையும் துய்த்து நீடு வசிக்கின்றனன் என்பதே எல்லா முக்கிய உபநிடதங்களின் கருத்து. ஆன்மா போக்கு மீட்சியின்றி இலயமடைவதாக முக்கிய உபநிடதங்களில் ஓர் பிரமாணத் துணுக்கை வாக்கியமேனும் இல்லை.

(உகூசி) சரீரத்தைத் தலைநாடிவாயிலாகச் செல்லுதல் (விதேகமுக்தி யடைவதற்கு அடைந்து) அவித்துவான்களை (அவிவேகிகளை) ஆன்மா போக்கு மீட்சியின்றி ஆவர்த்தனம் பண்ணும், மற்றவர்கள் (அவித்துவான்கள்) கர்மருவலோக முதலியவைகளுக்கு மற்றை நாடிவாயிலாகச் செல்கின்றனர் என்றும் (கட. க. ஙசி) ற் கூறப்பட்டிருக்கின்றது.

(உக்க) தன் இதயத்துள்ள ஆசைகளெல்லாம் நீங்கப்பெற்று நிஷ்காமனையுள்ள மனிதன் (வித்துவான்) அமிர்தனுகிப் பிரமத்தைப் பேரயடைகின்றனன் என்று (கடோ. கசு) கூறுகின்றது; பிரமத்தை அடைகின்றனன் என்றமையால், அவன் சென்ற மார்க்கம் தேவயானம் (உத்தராயணம்) என்றும், ஆசையறுத வித்துவான்கள் சென்ற மார்க்கம் தக்ஷிணயனம் என்றும் பெறப்படுகின்றது.

(உகஎ) "வித்துவான் புண்ணியபாவமொழிந்து நிரஞ்சனனுய் (மலமிலனுய்) பரமசாமியத்தை (சிவசாமியத்தை) அடைகின்றனன்" என்று (முண். கூ. க. கூ) ற் கூறி, "மெய்ப்பொருளால் விரிக்கப்பட்டது தேவயானம் என்றும், ஆப்தகாமர்களாகிய (ஆசைகளில் இளிப்பற்று வேண்டாம் என்று திருப்தி பூண்டவர்களாகிய) இருடிகள் இத்தத் தேவயானம்வாயிலாக அந்த மெய்ப்பொருளாகிய சிவபெருமானது (பரமாகாயை) உலகத்தை அடைகின்றனர் என்றும் (முண். கூ. க. சு) ற் கூறப்படுகின்றது. இதனுற் சிவபாவனை செய்து சிவப்பிரமத்தினுற் தேவயானம்வாயிலாக ஆப்தகாமர்களாகிய இருடிகள் (வித்துவான்கள்) சிவலோகத்தை அடைகின்றனர் என்று பெறப்படுகின்றது.

(உகஅ) ஜனகனைதேகர் என்பார் யாஞ்ஞவல்கியரை நோக்கி மோக்ஷத்தின்பொருட்டுக் கூறல் வேண்டுமென்று (பிரு. சூ. கூ. கஇ) ல் வேண்ட, யாஞ்ஞவல்கியர் கேவல சகலாவஸ்தைகளை (பிரு. சூ. கூ. கஅ, கசு) ல் உணர்த்தி, பிரமாஹம்பாவனை செய்யுமியல்பை (பிரு. சூ. கூ. உ0) ற் கூறி, (பிரு. சூ. கூ. உக) ற் சிவோஹம்பாவனை செய்வோனுக்கு (சாக். அ. கூ) ற் கூறப்பட்ட சர்வஜ்ஞதாதி குணங்களை உணர்த்தும் அபகதபாப்மத்துவாதி எண் குணங்களும் ஆன்மாவிற் பரமசாமியமாய் விளங்குதல் சிவனைத் மிகுதிக்கு வேண்டப்படும் என்பதுணர்த்த அவ்வெண்குணங்களுள் முதற்கணின்ற அபகதபாப்மத்துவத்தை (சர்வஜ்ஞதையை) உணர்த்தி, அந்த ஞானத்தைமேலிட்டினுல் மண்ணி முதலாயினுர் தமுமினும் அவன் அதனை அறியமாட்டான், இவன் ஆப்தகாமனுய், ஆன்மகாமனுய் (பரமான்மாவிற் பற்றுடையனுய்), அகாமனுய் (வேறு பற்றிலனுய்), சோகமிலனுய் இருப்பினன்றைத்து, பின்னரும் அந்தச் சிவமுமுக்ஷுவினுடைய (சுத்தாவஸ்தை) நிலையைப் பலபிரகாரம் (பிரு. சூ. கூ. உஉ—கூஉ) வினையும் உணர்த்தி, அவனை ஆனந்தம் பூரணவகை ஆனந்தத்தினும் இறந்த பரமானந்தமும் என்று (பிரு. சூ. கூ. கூகூ) ற் கூறி, மாணுகாலத்தில்

ஸ்ரீவைத்யநாத சுவாமிகள்
யதீந்த்ரதீக்ஷாபீடாதிபதி ஸ்வதி

(உகூ) "பிராணன்களெல்லாம் அவன் ஆன்மாவைச் சூழ்ந்திருக்கின்றன, அவன் ஊர்த்துவமாக உச்சுவாசஞ் செய்பவனுகின்றனன்" என்று (பிரு. சு. கூ. கூஅ)ல் விளக்கினர். இதனுற் பிரமபாவனை செய்து பிரமாணர்த்மடைந்த வித்துவான் ஆப்தகாமனும், அகாமனும், ஆன்மகாமனுமிருப்பான் என்றும், மரணகாலத்தில் அவன் பிராணன்கள் அவன் ஆன்மாவைச் சூழ்ந்திருப்ப, அவன் உயிர் உற்கிரமணஞ் செய்கின்றதென்றும் பெறப்படுகின்றது.

(கூ00) (அவித்துவான் விஷயநோக்கி) (பிரு. சு. ச. சு) ற் கூறுமிடத்து, எதிலே ஒருவனுக்கு மனசு பதிந்ததோ, அதனையே தொடர்ந்து அவன் செய்கின்றனன் என்றும், அந்த உலகத்திலே தனது கன்மபயன் அநுபவித்து, சேஷித்து நின்ற கன்மத்தோடு இந்தக் கன்ம பூமிக்கு மீளுகின்றனன் என்றும், இதுதான் பற்றுடையானது (அவித்துவானது) இயற்கை என்றும் (பிரு. சு. ச. சு) ல் மூற்பாதி மந்திரம் உணர்த்திற்று; எனவும்

(கூ0க) ஆசை நீங்காத வித்துவான் சரீரத்தை விடுத்து மற்றேர் பிதிர்வடிவத்தையோ, கந்தருவர்வடிவத்தையோ, தேவவடிவத்தையோ, பிரஜாபதிவடிவத்தையோ, பிறர் வடிவத்தையோ எடுப்பன் என்று அம் மந்திரம் உணர்த்திற்றெனவும், அதனல் அவன் சென்ற மார்க்கந் தகஷிணையன்மார்க்கம் எனவும் பெறப்படும்.

(கூ0உ) வித்துவான் இலக்ஷணங் கூறப்போந்து (பிரு. சு. ச. சு) ற் பிற்பாதி மந்திரம் (வித்துவானுவான்) அகாமனும், நிஷ்காமனும், ஆப்தகாமனும், ஆன்மகாமனும் உள்ளவனென்றும், "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்றும், பிரமமாகிப் (பிரமசாமியமுற்று) பிரமத்தைப்போய் அடைகின்றனன்" என்றுங் கூறுகின்றது. (பிரு. சு. கூ. உக. னும், முண். கூ. க. கூ, சு. னும், கட. சு. கச) னும் பிரமபாவனையுற்ற வித்துவானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்ட ஆப்தகாமத்துவம், அகாமத்துவம், ஆன்மகாமத்துவம் என்னும் குணங்களுக்கும், சண்டி (பிரு. சு. ச. சு) ற் பிற்பாதி மந்திரத்திற் பிரமபாவனையினுற் பிரமசாமியமுற்ற வித்துவானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்ட ஆப்தகாமத்துவம், அகாமத்துவம், நிஷ்காமத்துவம், ஆன்மகாமத்துவமுதலிய குணங்களுக்கும் பேதமேதுமில்லை.

(கூ0ங) (கட. சு. கசஅ) ல் தலைமாடிவாயிலாகச் செல்லும் வித்துவானுக்கு இலக்ஷணமாகக் (கட. சு. கச) ற் கூறப்பட்ட மந்திரமே சண்டி (பிரு. சு. ச. எ) னுமுள்ளது. அவ்வித்துவான்கள் செல்லும் தேவயானமும், அது பிரமத்தினுலாக்கப்பட்டனமும், தேவயானம்வாயிலாக அடையப்படும் பரமதானமும் (வெலோசமும்) கூறும் (முண். கூ. க, சு) ற் காணப்படும் மந்

நெப் பொருள்களே சண்டு (பிரு. சு. ச. ।அ, கு) லும் காணப்படுகின்றன. (பிரு. சு. கூ. கூஅ) ல் தலைமாடியாயிலாக, ஊர்த்துவகாசசஞ் செய்து போகும் வித்துவானுடைய ஆன்மாவைப் பிராணன்கள் சூழ்ந்து குழுமிக்கிடக்கின்றன என்னும் பொருளே (பிரு. சு. ச. சு) ல்

ந தஸ்ய ப்ராணா உத்க்ரமந்தி।

(கூ0ச) "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்றதற்கும் பொருளாகும்.

தெவோ ஹ॒ைவ்ஹா தெவா நவெ்ருதி।

(தேவோ பூத்துவா தேவா நப்யேதி. பிரு. சு. க. கூ) என்றவிடத்து,

(கூ0டு) "தேவனுகித் தேவர்களைப் போயடைகின்றனன்" என (பிரு. சு. க. கூ) ல் அப்யேதி என்றதற்குப் போயடைகின்றனன் என்று கூறிய பொருளே, சண்டு

ப்ரஹ்மாவெ்ருதி।

(பிரம்மாப்யேதி. பிரு. சு. ச. சு) என்றவிடத்து,

(கூ0சு) "பிரமத்தைப் போயடைகின்றனன்" என (பிரு. சு. ச. சு) ல் "அப்யேதி" என்றதற்கும் எய்தும் பொருளாம். (ஆவெ்ருதி) "அப்யேதி" என்னும் பரஸ்மைபதமானது இடப்பெயர்ச்சியை உணர்த்திற்று. உணர்த்தவே, அது மற்றோர் உலகத்தை அடைதலின் மேற்றுமன்றி இங்கே போக்கு மீட்சியின்றி இலயமடைதலே ஓர்காலும் உணர்த்துமாறின்றும்.

யொ ஸ்காமோ நிஷ்காமோ ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்யாத்ப்ராணா உத்க்ரமந்தி।

(கூ0எ) எவன் அகாமனும், நிஷ்காமனும், ஆப்தகாமனும், ஆன்ம காமனும் இருக்கின்றானே, அவனை விட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்ற மத்தியந்தினசாகாமந்திரம் கூறலான், (கூ0ச-ம் இலக்க) மந்திரமானது அவனுடைய ஆன்மாவைப் பிராணன்கள் சூழ்ந்திடக்கின்றன என்ற (பிரு. சு. கூ. கூஅ) ம் மந்திரம் கூறும் பொருளையே தழுவி நின்றது கண்டு (பிரு. சு. ச. சு) ல் ஆறும் வேற்றுமையில் வருவிக்கப்பட்ட (தஸ்ய) "தஸ்ய" (அவனுக்கு) எனப் பொருள்படும் பதத்திற்கு அவனை விட்டு (அஸ்மாத்) "தஸ்மாத்" என்று பொருள் கொள்ள வேண்டுமென்ற அம்மத்தியந்தினசாகா மந்திரம் வெளிப்படையாய் விளக்கிக் காட்டுகின்றது.

(கூ0அ) (பிரு. கா. ச. கூ)ன் முற்பாதி மந்திரம் அவித்துவான் விஷயமும், (பிரு. கா. ச. எ-ம், அடம், கூ-ம்) மந்திரங்கள் (கடம், முண்டகம், சாந்தோக்கிய முதலியனற்றிற் காணப்படும்) வித்துவான் விஷயமுமாகப் போதர, இவ்விரு விஷயத்துக்கும் நடுவே மற்றோர் மகாவித்துவானைக் கண்டு பிடித்து, அவன் அங்கே போக்கு மீட்சியின்றி இலயமடைந்தான் என்றமை விந்தையினும் விந்தையே!!! ஈண்டுப் பிராணன்கள் என்றது வாயுக்களின் மேற்றன்றி ஆன்மாக்களின்மேற்றன்று; ஒருவனுக்கு ஆன்மா ஒன்றேயாதலின். பிராணன்கள் பிரிந்தால் என்! பிரியாதிருந்தாலென்!! சீவான்மா இங்கே இலயமடைவதாகவேதாந்த சூத்திரங்களுக்கு ஆதாரமாய்நின்ற இந்த முக்கிய உபநிடதங்களுள்ளே பிரமாணம் காட்டிஅலன்றே ஏகான்மவாதியார் பக்கம் செயம் பெறும்!!! ஏகான்மவாத உபநிடதங்களும் பிரமசீத்த முதலியவற்றின் கற்பனை சுலோகங்களும் பிரமாணமாக அங்கீகரிக்கப்படமாட்டா.

(கூ0கூ) (பிரு. பி. உ. க0) ம் மந்திரத்திலே ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "ஒவ்வொன்றும் மரணத்துக்கு உணவாயிருக்கின்றனவே, மரணம் எந்தத் தெய்வத்துக்கு உணவாகின்றது? என, யாஞ்ஞவற்கியர் (மரணம்) அக்கினிக்கு உணவாகும்; அது சலத்துக்கு உணவாகும் என்றனர், பின் மரணஞ் செயிக்கப்பட்டது."

(கூக0) (பிரு. பி. உ. கக) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "இந்த மனிதன் இறக்கும்போது பிராணன்கள் அவனை விட்டுப் புறத்தே போகின்றனவா? இல்லையா?" என,

யாஜ்ஞவல்க்ய ஏதேந்ரவ ஸவே நீயந்தே ந உத்க்ரமந்த்யாஹோய தாஹ்ருதமேவாபி ஸ்ரூதே |

(கூகக) "யாஞ்ஞவற்கியர் அந்தப் பிராணன்கள் இவனிலே குழுமுகின்றன; அவன் வீங்கி உப்பிச் செத்துக்கிடக்கின்றனன்" என்றனர்.

(கூகஉ) பின்னர் (பிரு. பி. உ. கஉ) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் "அப்படிப்பட்ட மனிதன் இறக்குங்கால் அவனை யாது விட்டுப் பிரிவதில்லை" என, "அவன் நாமம் அழிவதில்லை" என்றும், "அந்த நாமமும் முடிவில்லாதது" என்றும், "தேவதேவர் முடிவில்லாதார்" என்றும், "அதனால் அவன் அளவிறந்த உலகத்தை அடைகின்றனன்" என்றும் கூறினர்.

(கூகக) பின் (பிரு. பி. உ. கஈ) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "இந்தப் புருஷன் செத்தபோது அவனது வாக்கு

அக்கினியையும், பிராணன் வாயுவையும், கண் சூரியனையும், மனசு சந்திரனையும், சுரோத்திரம் திக்குகளையும், சரீரம் பிருதிவியையும், இருதயம் ஆகாயத்தையும், சரீரத்து உரோமங்கள் ஒஷதிகளையும், தலை உரோமங்கள் விருக்ஷங்களையும், இரத்தமும் இரேதசும் சலத்தையும் அடையுமாயின், அந்த மனிதன் எதனைப் பற்றுகின்றனன்" என, அதற்கு யாஞ்ஞவற்கியர் "சௌமிய! எனது கையைப் பற்று; நாங்கள் இருவர்மாத்திரமே இதனைப்பற்றி அறியக்கடவேம்; இந்த வினா யாரும் அறிய வாதிக்கப்படுவதன்று" எனக் கூறி, "இருவரும் புறத்தே போய் வாதித்தனர்; வாதித்தது நற்கருமத்தினைப் புண்ணியமும், தீக்கருமத்தினைப் பாவமும் எய்தும் எனக் கர்மத்தையே விதந்து பேசினர்; அதன் பின் ஆர்த்தபாகர் பேசாதிருந்தனர்" எனக் கூறப்பட்டிருக்கின்றது. ஈண்டு ஆர்த்தபாகர் வினவியது அவித்துவத்விஷயமே. ஈண்டுக் கூறப்பட்ட வினாக்களினும் விடைகளினும் ஒன்றேயினும் பிரமவித்தியாவிஷயத்தைப்பற்றியதின்று. வினாவிடைகளோப்பற்றிய விஷயங்கள் கிரஹம் அதிக்கிரஹமாகக் கொள்ளப்படும் இந்திய விஷயங்களின் இயற்கையும், சலம் அக்கினிக்கு உணவாதலும், மரணகாலத்திற் பிராணன்கள் ஆன்மாவைவிட்டுப் பிரியாமையும், செத்தவன் நாமத்தின் அநுவிருத்தியும், புண்ணியபாவங்களுக்கியைவாயுள்ள கதிப் பிராப்தியுமாம். ஆகலின், பிராணன்கள் பிரிவதில்லை என்றதற்குப் போக்கு மீட்சியில்லாத முத்தி எனப் பொருட்படுத்தல் எவ்வாற்றானும் ஒவ்வாவெற்றுரை என்று மறுக்க.

அவித்துவான் அடையும் புராவார்த்தி கொடாத உலகம் பிரமலோகமாம் (சிவலோகமாம்). ஆகவே,

(சூகச) பிரமலோகம்

என்று (சாந். அ. ச. சூ) னும், (பிரு. அ. உ. கஞ) னும்,
( ,, அ. கஞ. க) னும், (முண். சூ. உ. சு) னும்,
(பிரு. சு. சூ. சுசு) னும், (பிர. க. கசு) னும்,
( ,, ஞ. சு. க) னும், ( ,, ஞ. ஞ) னும்,

(சூகஞ) சுவர்க்கலோகம்

என்று (பிரு. சு. ச. அ) னும், (ஐத. ஞ. ச) னும்,
அதர்வசிகையினும், (கேந. சூ.ச) னும்,
(ஐத. ச. சு) னும், (கட. க. கஉ) னும்,

(சூகசு) பிரமதாமம்

என்று (முண். சூ. உ. க) னும், (முண். சூ. உ. ச) னும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த உபநிடதங்களிலே வித்துவானால் அடையப்படும்

பிரமலோகம், சுவர்க்கலோகம் எனக் கூறப்படும் பரமஸ்தானம் சிவலோக மேயாம். இதனையே,

தத்ஷ்ஷ்ட் ஷ்ஸ்ஸ்நாஷ்ஷொகா ஷ்ஸ்ஸ்ஷொக ஷ்ஷொளகிகழ்| வொஷ் ஸ்ஷொஷ்யோ யத்ர கிதூ நிவஸ தீஷ்ஸ்ஸ்| தத்ஷ்ஷ்ட் ஷ்ஸ்ஸ்நாஷ்ஷொகா ஷ்ஸ்ஸ்ஷ்ஸ்ஷ்ஸ்ஷ

(கூஉ) "எவருக்குப் பிருதிவி சரீரமோ," "எவருக்கு ஆன்மா சரீரமோ" என்றற்றொடக்கத்தன துதித சுருதிகள் என்றும், (கூகஅ-ம், கூகக-ம் இலக்க) வாக்கியங்களை ஆதாரமாய்க்கொண்டு எகான்மவாதியார் பாடியஞ் செய்தனர் என்றும், (கூஉ0-ம் இலக்க) வாக்கியங்களை ஆதார மாய்க் கொண்டு விஞ்ஞமதாசாரியர் விசிட்டாத்துவிதபாடியஞ் செய் தனர் என்றும் கூறுவர். (கூகஅ-ம் இலக்கத்தி) சத்து என்னும் சப்தத்தின் பொருள் சத்தியும் சிவமுமாம் என்று (கூஅ-ம் இலக்கத்தில்) பிரமாணங் காட்டப்பட்டிருத்தலின், அச்சச் சத்பதம் அடங்கிய சுருதி நிர்விசேடப் பிரமத்தை உணர்த்தாது சத்தி விசிஷ்ட சிவபெருமானையே உணர்த்திற்று. (கூகக-ம் இலக்கத்தி) ஏகம் என்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம். அதற்குத் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்றே, இரண்டில்லை; என்பதாம்.

இங்ஙனம் ஏகம் என்று சொல்கின்ற நீ அப்பதிப்பொருளின் வேறுபட்ட பசுவாம். பதியுஞ் சேதனமாக, யானுஞ் சேதனமாக என்னைப் பசுவென்ற தென்னையெனின், நீ மலத்தோடு கட்டுண்டுநின்றமையாற் பசு எனப்பட் டாய்; அதை,

(கூஉக) ஏகமேயெனுமிருக்கெனினிருக்கினுட்பொருள்கே
ளேகமேபதிபலவலவெனுமதகாண்டி
யேகமேயெனச்சுட்டுவானெருவனீங்குளனவ்
வேகன்போலலனிருண்மலத்தோடுளனிவனே.

என்னுஞ் செய்யுளான் உணர்க.

(கூஉஉ) பண்ணும் அதனின் வேறன்றுப் எண்ணப்படும் இசையும் போலவும், பழமும் அதனின் வேறன்றுப் எண்ணப்படும் சுவையும் போல வும், யாங்களும் வியாபகமாய முதல்வன்றிருவருள் உயிர்களின் வேற்று மையின்றி நிற்பதாகலான், சுருதிகள் பிரமம் அத்துவிதம் என்று அவ் விடங்களிற் கூறும்; இது

(கூஉங) பண்ணீயு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
நத்துவித மென்றையு மாங்கு.

என்னும் திருவெண்பாவானும்,

(கூஉச) மன்றவேதமத்துவிதமென்றரைத்திடுமரபா
லொன்றுமன்றிபொருளிலையெனினுணர்த்துமிச்சென்றி

யென்றும்வேறன்மையுணர்த்துமிக்ளவியேயிதனி
னின்றவாருயிர்பலவுந்தானுய்ந்நிற்குமிலன்.

என்னுஞ் செய்யுளானும் அறியப்படும்.

(கூஉடு) நஞ் + துவிதம் = அ + துவிதம்
= அத்துவிதம் என்பதின்

நகரத்துக்கு (நஞ்ஞுக்கு) (க) சாதிருசியம், (உ) அபாவம், (ங) பேதம், (ச) அற்பதை, (ஞ) அப்பிராசஸ்தியம், (சு) விரோதம் என ஆறு பொருள் உண்டு; இந்த ஆறு பொருள்களுள்ளே சாதிருசியம் (அன்மை), அபாவம் (இன்மை), விரோதம் (மறுதலை) என்னும் மூன்று பொருள்களே கண்டு எடுத்தாளற்பால. சாதிருசியப்பொருள் சைவசித்தாந்திகளானும், வைதிக பாசுபதயோகிகளானும், வைஷ்ணவரானும், இன்மைப் பொருள் சாங்கியயோகிகளானும் (நிர்க்குணேபாசகர்களானும்), மறுதலைப்பொருள் மத்துவரானும் கொள்ளக்கிடந்தன.

(கூஉசு) அப்பிராமணன் (அவ்ராஹ்மணஃ) என்றது பிராமணனுகாமலும், பிராமணனைப்போல (அபேதமாய்) யஞ்ஞோபவீதந் தரிப்பவனுமாயுள்ள க்ஷத்திரியனையாவது வைசியனையாவது சுட்டுவது போல, சீவான்மாவானது பரமான்ம சிவனுனின்றும் வேறுய் (பேதமாய்), அச்சிவபெருமானைப் போல (அபேதமாய்) சர்வஜ்ஞதாதி குணங்களே எய்தும் என்னும் சாதிருசிய (சாமீயப்) பொருளிலே செல்லும் என்பதுணர்த்த (முண். கூ. க. கூ) ல்

நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்ய முபைதி |

(கூஉஎ) "மலநீங்கினவனய்ப் பரமசாமியத்தை அடைகின்றனன்" என்று கூறப்பட்டது. இந்தச் சாதிருசியப்பொருளே,

(கூஉஅ) | நதிவய ஸத்ய உரு வஹ்ரயஸாயிகரணே தயாஹ்ருதஃ |

என்று வேதஷடங்கங்களுள் ஒன்றுகிய வியாகரணத்திற் கூறப்பட்டது. படவே, சாதிருசியம் என்றது அன்னிய அபேத (அன்மைப்) பொருளிற் போந்தவாறு தெள்ளிது.

(கூஉசு) "அது நீயாகின்றனை" (தத்த்வமஸி), ஏனவும், "அது நானுகின்றேன்" (அகம் பிரம்மாஸ்மி) எனவும், "அது விதுவகின்றது" (அயமாத்மா பிரம்ம) எனவும் மூவிடம்பற்றி நிகழும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பது ஒரு பொருள் நீ என்பது ஒரு பொருளாகலின், ஒரு பொருள் மற்றொருபொருளாமலு

யாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்ததாகலின், அது இதுவாதற் கேதுவாய் அவ்விரண்டற்கும் உளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துதலே அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள். இது,

சொன்னதத்துவமசியெனுஞ்சுருதியின்மொழியு
மன்னுகாரணபதியுநானெனவரும்பசுவு
மென்னவேபொருளிருமைகண்டியைந்து வேறன்மை
தன்னைநாட்டியதல்லதுதனியென்றதின்றே.

என்னுஞ் செய்யுளால் அறியப்படும்.

(சுசுo) வேதமுடனுகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா வெடுத்து ரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபண்ணு ஞான மாகும்

என்றற்றொடக்கத்ததாகத் தாயுமானவர் கூறிய செய்யுளால், "வேதாகம புராணேதிகாசமுதலிய கலைஞானமனைத்தும் மேலாயதாக (முத்திதசை யிலே) அத்துவிதமதற்குரிய துவிதமார்க்கத்தையே விரிவாக எடுத்துக் கூறும், (அத்துவிதமார்க்கத்தையும் துவிதமார்க்கத்தையும் எடுத்துக் கூறும் என்று பொருட்படுத்தல் கூடாதென்பதாம், மீட்டும்) கூறற்கரிய துவிதமார்க்கந்தான் (சிவான்ம பரமான்மாவாம் உபயான்மவாதமார்க்கந் தான்) அத்துவித ஞானத்தை (சுஉஎ-ம் இலக்கத்திற் கூறியவாறு) உண்டு பண்ணுமென்று" உரைக்கப்பட்டதன்றி, ஏகான்மவாதிகள் கூறுமாறு வேதாகமாதிகளிலே ஏகான்மவாதமார்க்கமும் உபயான்மவாத மார்க்கமுமாகிய இரண்டும் கூறப்பட்டவென்று பொருட்படுத்தல் கூடாது; பின் அவையினத்தினும் துவிதமார்க்கமே கூறப்பட்டதென்பது பொருளாம்.

(சுசுஉ) ஏகான்மவாதிகள் "சோகம்" "சிவோகம்" என்று கூற, சைவர்களும் "சோகம்" "சிவோகம்" என்று கூறுமின், இருதிறத்தார்க்கும் மகாவாக்கியங்களிலே கருத்தும் பயனும் ஒன்றுமே எனின், ஆகாமியாட்டயரும் சிறுவர் "அதிரசம்" "இலட்டுகம்" என்னும் இனிய உண்டியை உண்டதாகப் பாவித்து, தனித்தனி "அதிரசம் உண்டேன்" "இலட்டுகம் உண்டேன்" என்று கூறி, உள்ளபடி "அதிரசத்"தையும் "இலட்டுக"த்தையும் உண்டவர்களோடு சமமாய்க் கூறினீரன், மண்ணியலிடைச் சிறுவர் மணலினால் அதிரச இலட்டுகம் செய்தற்கும்,

உள்ளபடி உண்டவங்கள் கூறிய "அதிரச இலட்டுகங்"களுக்கும் பேதம் வெளிப்படையன்றே. அதுபோல, ஏகான்மவாதிகள் "சோகம்," "சிவோகம்" என்றவைகளுக்குக் கடாகாசத்தையும் மகாகாசத்தையும் ஒன்றென்றாற் போல, கூடஸ்தனையும் பிரமத்தையும் ஒன்றென்று நிருபசரிதவைக்கியங்கொள்வர். சைவர்கள் மந்திரியை இராஜா என்றும், ஆன்மாவைக் கருடன் என்றும் பாவிக்குமாறு போல, ஆன்மாவைச் சிவம் என்று உபசரிதவைக்கியங்கொள்வர். ஆகலீன், இருவர்க்கும் மகாவாக்கியங்களிற் கருத்தும் வேறும், பயனும் வேறும் என்றேர்க. இஃதுணர்ந்தே,

ꣳꣳꣳ

என்பனற்றுக்குக் கூறும் உபசரிதவகீயமே பொருத்தமாமென்று கடைப்பிடிக்க.

(கூகச) ஆகவே, பரமோபநிடதங்களில் யாண்டாயினும் நிர்க்குணப் பிரமவிஷயமென ஒன்று கூறப்படவே இல்லை. மாயாவாதச் சுருதிப்பொருள்களிலே நெடுங்காலம் பழக்கவாடையினால் அடிபட்டுவந்தமையாற் கதரது கதநியாயங்கொண்டு சிவபெருமானது ஞானசத்தியினும் சர்வஜ்ஞதாதி குணங்களினும் பற்றின்றிப் பலர் தங்கருத்துக்கியைய வேதாந்தத்திற் பொதிந்துள்ள உண்மைப்பொருள்களைத் திரித்துப் பொருள் செய்து கெடுகின்றனர், பிறரைக் கெடுக்கின்றனர்.

உதரூ்தீய திஜாதீஷ்வு யஜ்வாடூஷவாததாநீ| யஷ்யம விவ்ர யஸ வஸவெ கூராஜ்ரூாவஸதூஷ நவஸ்| ஸிவமெ ஹாஹவாஸ மிதரூ ஸிவாஷு நவராஜூவஸ்| வெஷாமெதெகவிூவா ஸ்ரிவவ்ரிய விநீஷகஸ்| நரகெஷூ உ வஸவெஷூ வதகாதரூஜெஷூஹி காஸ்|

(சங். த. உசூ. உதி, உசு)ம் சுலோகங்களினும், இவற்றின் பொருளையடக்கிய

(கூகஇ) பேசரியமறைகளெலாம்பராபரனீயெனவணங்கிப்பெரிதுபோற்று
மீசனையுமன்பரையுநீற்றெடுகண்டிகையினையுமிகழ்ந்துநீவிர்
காசினியின்மறையவராயெனாளும்பிறக்திறந்துகதிபெறுது
பாசமதனிடைப்பட்டுமறையுரையாதெறியதனிற்படுதிரென்றான்.

என்னும் (கந். அன. கூஎ) ம் செய்யுளினும் கூறப்பட்ட தநிசிசாபமே அதற்குக் காரணம் போலும்!

ஊஷ்ரூ திதரூ வரூணஸ்ரிஜி நாஹரூ ரயொ திவு ஸ்ருவரூவ ணெரூ ஹரூதூநீ| வனகூ வஸ்விவ்ரா வஹாயா வஷ்ருஷ்டிஜி யஷ சாதரிஸ்ரூாந சாஹரூஸ்|

(கூகசு) "பெரியோர் ஏகராயினுரை இந்திரன் என்றும், மித்திரன் என்றும், வருணன் என்றும், அக்கினி என்றும், திவ்ய நல்ல சிறகினையுடைய கருடன் என்றும், யமன் என்றும், மாதரிச்சுவா (வாயு) என்றும் பலநாமங்கொண்டு கூறுவர்" என (இரு. க. கசச. சசு) ற் கூறப்படுகின்றது. நண்டுக் கூறப்பட்ட ஏகர் யார் என ஆராயற்பாற்று;

ஸ வாய வேரொ யஜ்ஞே வாயஜ்ஞேஷு-வாய நஸ்|
யஜ்ஞாஜூராஜிஜி ஹஸ்வி கூரம வனவொ வஷ்ரூவஸ்ரிகஸ்|

(கூகஎ) "பரதருமத்திற்குத் (நியானயோகத்திற்கு) சாதனமாக (அடிக்கருதியெடுக்கமுகாண்டத்திற் கூறப்படும்) அபரதருமம் சாதனமாக

(மதமுதலிய) தருமசாஸ்திரங்களினுள் ஈன்கு உபப்பிருங்கணஞ் செய்யப் பட்டது" என்று (வாயு. பூ. உஅ. அ) கூறலான்,

வ்ரஹ்மாவிதாரம் ஸவை-ஷா ணீயாமவ ஶிணா ரவி।
ரஹாஹம் வ்யயீமஶ்ச விஷ்ணுதே வராஷம் வாழ।
வனத ஶிகை வடஹ்ரீ நீம் ஶிந ஶிநு வ்ரஜாவதிழ।
ஊஉஶிகை வரை வ்ராண ஶவரை ப்ரவ்ரு ஸாஸ்வதிழ।
(மது. கஉ. கஉ, கஉ.)

(ஈஈஅ) (பிரு. நி. அ. கூ. ற் கூறப்பட்டவாறு) சேதனசேதனப் பிரபஞ்சங்களைத் தமது ஆஞ்ஞையினல் ஆளுகின்ற அகஷரப்பிரமமும், (கட. உ. உ. ணும், சுவே. ஈ. உ. ணும், மகா. அ. ஈ) ணும், கைவல்லியத்திலுங் கூறப்பட்டவாறு அணுவுக்கணுவாகிய தாதாவும், (முண். ஊ. க. ஈ. ணும், மைத். சு. கஅ) ணுங் கூறப்பட்டவாறு பொன்வண்ணராகிய ஈசரும், (சாந். சு. அ. க. ணும், அ. ஈ. உ) ணுங் கூறப்பட்டவாறு சொப்பனத்திலே அடையற்பாலதாகிய சத்தும் (தகராகாசமும்), (பிர. நி. நி. ற் கூறப்பட்டவாறு) புருஷரும், (முண். உ. உ. க) ற் பரமமாகக் கூறப்படும் ஏகரைச் சிலர் அக்கினி என்றும், சிலர் பிரஜாபதி என்றும், சிலர் இந்திரன் என்றும், சிலர் பிராணன் என்றும், சிலர் சாசுவதமாகிய பிரமம் என்றுங் கூறுவர். இந்த மதஸ்மிருதியில் எடுத்தாளப்பட்ட அகஷரப்பிரம முதலிய வெல்லாம் சிவபெருமான்மேலவென்று மேலே நிரூபிக்கப்பட்டமையின், (ஈஈசு-ம்இலக்கத்து) ஏகர் என்றது பிரமமாகிய சிவபெருமான் மேற்று.

விஶ்ராணாம் ஶிவ்வதம ஸமஹ்ஃ க்ஷத்ரியாணாஞ்ச ஶாயஸ்ஃ।
ஶ்வெஶ்யாநாஞ்ச ஶவைஶ்ரூ ஸ்ஶூத்ராணாம் முணநாயகஃ।*

(ஈஈகஃ) பிராமணர்களுக்குச் சிவப்பிரானும், க்ஷத்திரியர்களுக்கு விஷ்ணுவும், வைசியர்களுக்குப் பிரமாவும், சூத்திரர்களுக்குக் கணாயகரும் தெய்வம்" என்று மதஸ்மிருதி உபக்கிரமத்திற் கூறினமையின், உபசங்காரத்திற் கூறப்பட்ட பிரமமும் சிவபெருமான் மேற்று. சிவபெருமான் அக்கினி முதலிய பெயர்களாற் கூறப்படுவது இருக்குவேதாதிகளில் மிகப் பிரசித்தம். (வே. சூ. க. ச. உகூ) ஞ் சூத்திரபாடியத்தில் ஸ்மிருதிகளும், இதிகாசங்களும், புராணங்களும் ஒரே பரமான்மாவைக் கூறுது, சில பிரமாவையும், சில விஷ்ணுவையும், சில உருத்திரரையும், சில சத்தியையும், சில அக்கினியையும், சில சூரியனையும், சில வாயுவையும், சில மற்றொன்றையும் பரப்பிரமமென்று கூறுகின்றன என்பதை ஆக்ஷேபித்து நீக்கி, புருஷசூக்தம், சதருத்திரீயம், ஸ்மிருதி, இதிகாசபுராண முதலியவற்றைத்தும், உமை

* இதன் பொருள் தந்தபுராணம், தசிஷ்டபுடம், உபாக்கியாயப்படுகின்றது.

யோடு கூடிய சிவபெருமானையே உணர்த்தின என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுக் காண்க.

வவ-ர்ாமொஉ-ூஉநo யதூ ஹுரதo வொஸூo தீநீவிஹிஃ|
வஸத வெடிஸிரொகிஷ்ாஃ வ்ராஹுஃ வாஸுவதo ஃஎந|
கெவி ஹிரொவ்ரதo வ்ராஹுஃ கெவி டதூர்ஸ்ரஃo விடுஃ|
கெவித்த ஹுரதிதூஸிவுஃ கெவிஹ்ாஹவ வொஸ்வாழ்|

(கூசo) அதர்வசிரசிற் கூறப்பட்டவாறு அக்கினி என்றற்றொடக்கத்த மந்திரங்கொண்டு விபூதி தரித்து, விதிப்படி அநுஷ்டிக்கப்படும் விரதம் பாசுபதவிரதம் எனப்படும்; இந்த விரதம் (முண். கூ. உ. கo) ற் சிரோவிரதம் என்றும், (சுவே. சு. உக) னும், கைவல்லியத்தினும் *அத்தியாசிரமம் என்றும், காலாக்கினிருத்திரத்தில் விரதம் சாம்பவம் என்றும், (தைத். க. கக) ற் பூதி என்றும், (ஈசா. கo. னும், பிரு. எ. கநி. க) னும் பஸ்மம் என்றுங் கூறப்படும்.

கஸ்ரி ரிதூர்திஹி ஜீ-ஹிஜ்ரெ வஷ்ஹுஸ்ரு-ஜெந ஹவ்நா|
வவ-ர்ாமொஉ-ூஉநo கூயு-ர்ாஹிரொவ்ரதவஸோஹவ்யழ்|

(கூசக) "அக்கினி முதலிய மந்திரம் ஆறுங்கொண்டு சுத்தமாகிய விபூதியினும் சிரோவிரதம் எனப்படும் சர்வாங்கோத்தூளனத்தைச் செய்யக் கடவன்" என்ற சௌரசங்கிதையினும்,

கயவ-ஹவ-ஹவ்நிo ஸிரொவ்ரதo ஸிவவ்ரியo வவ-ர்தாராஜ நoஹிஃ| ஹுஜிஜெகு வ்ரதோஷொ ந வியெய உதூ-ஹிஃ தெ ஜெ தீரீயா ஹி வஷாஃநஹி|

(கூசஉ) சிவபெருமான் உமையம்மையாரை விளித்து, "மலையரசன் புதல்வியே! சிவப்பிரியமாகிய இந்தச் சிரோவிரதம் அதர்வசிரசிலுள்ள நியமம்; விபூதி எனப்படும் பாசுபதவிரதத்தை அநுஷ்டித்தலில் உபேக்ஷையாயிருத்தல் கூடாது எனத் தைத்திரீயசாகையினர் ஏஞ்ஞான்றுங் கூறுகின்றனர்" என்று சிவரகசியத்தினும் கூறப்படுகின்றது. மேலும்,

வதூராஹ வ்ரதிதவ்யழ்| யதூ-ர்ாஹ வ்ரதிதவ்யழ்| கூ-ர்யாஹ வ்ரதிதவ்யழ்| ஹுஜிஜெகு ந வ்ரதிதவ்யழ்| வ்ராஹுயாயவ்ரவஹநா ஹுர்o ந வ்ரதிதவ்யழ்|

---

* உத்தரதேசத்தார் பாசுபதவிரதம் என்னும் உண்மைப்பொருளையடைய அத்தியாசிரமம் என்றற்குச் சன்னியாசிக்குப் பொருள்படுமாறு அத்தியாசிரமம் என்ற சில உபநிடதங்களினும் பாராணவகல்பத்தினும் கிரிக்கொடுத்துள்ளனர்.

(கசக) சத்தியத்தினின்று தவறற்க; தருமத்தினின்று தவறற்க; நீதியினின்று தவறற்க; விபூதியை அசட்டை செய்யற்க; (பிரணவம், சதருத்திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என்பவற்றைச் செபித்தலாகிய) சுவாத்தியாயத்தினின்றும் வேதாத்தியயனத்தினின்றும் தவறற்க" என்று (தைத். க. கக) ற் கூறப்பட்டிருக்கின்றது.

வரணவ ஸ்ருதராத்ரீய ஹயா zவவ-ருஸிர ஸ்ரிவா।
வநதெஷாம ஜவம் வாத்ர வ்ராஜ்யாய உதி கீத்ரு-ருதம்।

(கசச) "பிரணவம், சதருத்திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என் பவற்றின் செபமே சுவாத்தியாயம் எனப்படும்" என ஆதித்தியபுராணத்துச் சிவயோக நிரூபணத்தினும்,

வதோ ஜ்ரீஷ்ரு கூராமா ஹ்வ்ரெநா ஜ்ரியநாஷவி।
த்ரிவ்ரூயாரணாஷ்ராவி வ்ராஜ்யாயாஜ்ய நாஷவி।

(கசஞ) "சத்தியத்தினின்றும், தருமத்தினின்றும், நீதியினின்றும், பஸ்மோத்தூளனத்தினின்றும், திரிபுண்டரதாரணத்தினின்றும், பிரணவ முதலிய நான்கையுஞ் செபித்தலாகிய சுவாத்தியாயத்தினின்றும், (கன் மகாண்ட) வேதாத்தியயனத்தினின்றும் (நழுவற்க)" என ஸ்காந்தபுராணத் தினுங் கூறப்பட்டிருத்தலின், தைத்திரீய சிக்ஷாவல்லியிற் கண்ட பூதி என்ற தற்குப் பஸ்மம் என்றும், சுவாத்தியாயம் என்றதற்குப் பிரணவம், சதருத் திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என்றும் பொருட்படுத்தப்பட்டமை காண்க.

சுயதேயாஸ்ரொ ய்ரீஷ்ரு யெ ஹ்ரோஉரித வ்ரயா।
தெஷா தெவ வாம ஜாநம வஂவாரஷ்ரெஷுகாரணழ்।

(கசசு) "எவர்களால் இந்த அத்தியாசிரமவிரதம் (பாசுபதவிரதம்) ஆசரிக்கப்படுகின்றதோ, அவர்களுக்கே சம்சாரத்தை நீக்கும் பரமஞானம் எய்தும்" என்று பிரமோத்தரகாண்டங் கூறுகின்றது.

ஸிரொவ்ரத நிஷம வ்ராதம ஶுந உபநிஷத்ஸு।
வெநிதீ விராஜாதீக்ஷா வ்ராதெயம வாவ நாஸி நீ।
ஜ்ரவஂவாரஷ்ரீக்ஷுதி கயிதெய ஹயாமமே।

(கசஎ) "உபநிடதங்களில் இப்பாசுபதவிரதம் சிரோவிரதம் எனப் படும்; இது பாவத்தைப் போக்கவல்ல வைதிக விராஜாதீக்ஷை எனவும், சிவாகமங்களில் மந்திரமஸ்காரதீக்ஷை எனவுங் கூறப்படுகின்றது" எனக் காளிகாகண்டத்திற் காணப்படுகின்றது.

உடம விரஜாநலஸ்ருஷ்டி.

(சுசஅ) "இந்த விரஜாக்கினியில் எய்திய பஸ்மம்" என்று அலோக மத்திற் பாசுபதவிரதத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. இராமருக்குத் தண்டகாரணியத்தில் அகஸ்தியமகாமுனிவர் செய்த பாசுபததீக்ஷையும், அப்பாசுபத விரதத்துக்கு உள்ள அத்தியாசிரமமுதலிய பெயர்களும் பதுமபுராண சிவகீதையிற் காணப்படுகின்றன.

ரூதம ஸாஸுவதம ஸ்ருஷ்ட யேவர்ஷிஸஹி ஸ்ருதம்।
ரூத மேத ரீகுவீர்த ஸ தம ஸெ ஸெநஷ்டகம் ஷ்ருதம்।
ஸொ உதாஸ்ரமீ ச விஜ்ஞேயோ ஸஹாஸுவத ஸுயா।

(சுசக) "வைதிக பாசுபதவிரதம் அதர்வசிரசிற் கூறப்பட்டது; இவ்விரதத்தை அநுஷ்டிப்பவனுகிய ஸுஷ்டிகன் அத்தியாசிரமி, மகாபாசுபதன் எனப்படுவன் என்று (வாயு. பூ. உக. உ, அக) ஞ் சுலோகங்களிற் கூறப்படுகின்றது.

திநெ ஸஷ்டமே து விஜ்ஞேய தீக்ஷிதோ ஸமம யாவியி।

(சுஙo) "அஷ்டமியில் நான் (கிருஷ்ணர்) விப்பிரரால் (உபமன்னியுவால்) சாஸ்திரோக்தமாகத் தீக்ஷிக்கப்பட்டேன்" என்று (பார. அநு. கச. சுஎச) ஞ் சுலோகத்திற் காணப்படுகின்றது.

ஹதோ ஹி தெவதேவேஷ்டோ ந ஸுவதீர்ணு ரதீக்ஷயஸ।
உத ஸ்ரீவாருரோ தூர்ஷ்ட ஸ கூஷ்ணோ ஸஜ்ஞொயி கிந்ஞுவாஸ।

(சுஙக) "உபமன்னியுமுனிவர் தேவதேவராகிய கிருஷ்ணர்க்குப் பாசுபததீக்ஷை செய்தனர் என்றும், அவ்வுபமன்னியுமகாமுனிவரிடத்திருந்து கிருஷ்ணர் சிவாகமார்த்தங்களை உணர்ந்துகொண்டனர்" என்றும் (சித. உச. சுச) கூறுகின்றது.

சுத ஸுo விரஜாதீக்ஷாo ஸ்ருஷ்டவாஹி ஸே ஸுநிஸத்தமே।

(சுஙஉ) "ஆகலின் முனிசிரேட்டரே, விரஜாதீக்ஷையை எனக்கு அருளுதிர்" என்று இராமர் அகஸ்தியரைப் பிரார்த்தித்து அப்பாசுபத தீக்ஷை பெற்றனர் என்று (சிவகீதை. அத்தி. சு) ற் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்வஸுரதயொ ஸவி யத்தஸ்தகா வவெஸ் வாஸுவதாதீ ஸ்ருதாரீ।

(சுஙச) "பிரமாமுதலாயினோர் பாசுபதவிரதத்தை அநுஷ்டித்துப் பாசுபதராயினர்" என்று (வாயு. பூ. உக. க) ற் கூறப்பட்டிருக்கின்றது;

முதலாயினோர் என்றமையான் விஷ்ணு, மார்க்கண்டேயர், ததீசி, துருவாசர், கவுதமர், ஜாபாலர், ஆதர்வணர், காத்தியாயனர், அகஸ்தியர், ஸ்கந்தர், கண்டீதி, பிருங்கி, இராமர், உபமன்னியு, கிருஷ்ணர் முதலாயினோர் இந்த விரதானுஷ்டானத்தை பெற்றனர் என்று ஸ்கந்தபுராண காளிகாகண்டத்திற் கூறப்படுகின்றது. இவ்விரதத்தை அநுஷ்டிக்கும் முறைமை கைலாசசங்கிதையினும், இலிங்கபுராண கூர்ம புராணங்களினும் கூறப்பட்டிருக்கின்றது. சண்டு அதனை வரையின் விரிபுமென்றஞ்சி விடுத்தனம். ஈசகோகாதி உபநிடதங்களிற் கூறப்பட்ட பரவித்தை அநுஷ்டித்தற்கு இந்த விரதம் அங்கமாய் இன்றியமையாது கொள்ளப்படவேண்டும் என்றன்றே "விபூதியை உபேக்ஷைசெய்யாதொழிக" என்றற்றொடக்கத்தனவாகத் தைத்திரீய, முண்டக, சுவேதாசுவதரோபநிடதங்கள் விதந்து கூறியிருக்கின்றன.

(கூடுசெ) "அதர்வணவேத அத்தியயனஞ் செய்யவேண்டினோர் தீச்சட்டியைத் தலையிலே தரித்தல் வேண்டும் என்பது பற்றியன்றே சிரோவிரதம் என்று முண்டகோபநிடதங் கூறிற்று; அங்ஙனமாகவும், அதர்வசிரசிலுள்ள பாசுபதவிரதம் என்று பொருள்கொண்டமை பொருந்தாதாம் எனின், அது பொருந்தும்; முண்டகோபநிடதம் முதற்கண்ணே அபரவித்தை பரவித்தைகளைக் கூறி, இறுதியில் அபரவித்தையாகிய அதர்வணவேத அத்தியயனமுரியார்க்கே சாதனமாகத் தாங்கவேண்டிய தீச்சட்டியையும், பரவித்தையாகிய பிரமவித்தை அறிய அதிகாரமுடைய யாவர்க்குஞ் சாதனமாக அநுஷ்டிக்கவேண்டிய அதர்வசிரசிற் பாசுபதவிரதத்தையும் உணர்த்தற்குப் பொதுவுறச் சிரோவிரதம் எனக் கூறினமையான். (கூடி—கூகளும் இலக்கவரையிற்) கூறிய நியாயங்களானும், ஈசகோகாதி உபநிடதங்கள் விபூதிமான்மிய பாசுபதவிரதம் உணர்த்துதலினலும் அவை சைவோபநிடதங்களாகி சென்றது.

## மூவிதபாவனை.

---

தீவியாம ஹாவநாம ஹ்ரஹ ஹ்ரோஉயாசாநாம மிலொய ஹெ।
வனகாஷ்ஷியா கதர ஷ்டீயாவ்ருதஸ்ஸ்ருயா।
ஹூயூர் உ ஹாவ நாஹ்ரஹ்ரீ விஜ்ஜேயர வா ழுணர் திஹா।
சூவிஷ ஹதூ கீரே ஹ்ரோய ஹாவநாம ஹாவயெ ஹ்ரூயஃ (கூர். பூ. க)

(கூடுகு) "இந்திரத்தியும்நர் கூர்மரை (நாராயணரை) நோக்கி, சுவாமி! மூன்று பாவனைகளையும் எனக்கு அருளுக என்று வேண்ட, நாராயணர் முதலாவது பாவனையான் விஷயம் (சகுணவிஷயம்), இரண்டாவது பாவனை அநுபவம் (சித்சுகம்) பற்றியது, மூன்றாவது பாவனை மூன்றனுள்ளும்

கடத்த பிராம்மிபாவனை; இம்மூன்று பாவனைகளுள் ஒன்றை அறிஞன் பாவிக்க." (என்றும்),

## முதலாவது பாவனை (சகுணம்).

ஸுஹஸ்ரயை ஏதா தீதயுஷா வைதிகீ ஸ்ருதிஃ(கூர். பூ. க)

"அசக்தன் (சகுணபாவனையாகிய) முதலாவது பாவனையையே ஆசரியக்க என வைதிக சுருதி கூறிற்று" என்றும் கூர்மர் இந்திரத்தியும்னர்க்கு மூவித பாவனைகளைத் தொகுத்துக் கூறி, முதலாவது பாவனை இன்னதென வரைத்தனர்.

சுதீர்வ்யாக்ஹா zய ஹரம விஷ்ணு ப்ரஹ்மாண உச்சரேயுஃ।

(கூதிசு) "அசக்தன் அரனையும் நாராயணனையும் பிரமனையும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து இறுதி அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

## இரண்டாவது பாவனை (நிர்க்குணம்).

வரா தூர்தர ஹகும வரம ப்ரவெஹுவேயுஃ।
நிதீயா நஜ்ஜேயம ஜ்ரேதி ரகுர ஹரிஃ வரஃ॥
வைஷ்ணவ-ஃ ஹவை யஜ்நிதீயம விஜ்ஞாதி ரிதி நீயதே।
காயு-ஃம ஜ்ஞதியாவ்ருத்தம காரணம ஸுஜ்ஞேஷுரஃ॥
சுஹம ஹி லவ-ஃஜ்ஞாதா நா ஸ்தய-ா தீஷ்ணாஃ வரஃ
வ்ரு-ஃவ்ரீதுகை-தீர்-ஃகும்வ்ரவ்ரீ தீ-ஃதி நீயதே।
வ்ரத ஜ்ஞாய ஹாவெந யஷாவ ஏவீயம ஜ்ஜ்ஞ।
தத ஸ்ரும கு-ஃயொநெந ஸாஸ்ரதம வை ஸுச்-ஃயை॥

(கூதிள) "மூலப்பிரகிருதிக்கு (தமசுக்கு) மேலாயும், சேதியாயும், அக்ஷரமாயும், சச்சிதானந்தமாயும், அவ்வியக்தமாயும், பரத்துக்குமேல் அதிபரமாயும், பரதத்துவமுமாயுள்ளது பிரமம்; அதின் ஐசுவரியம் விபூதி எனப்படும்; காரியம் உலகம்; காரணம் சுத்தமும் அசுத்தமுமாகிய அவித்தையும்; சர்வபூதங்களுக்கும் அந்தர்யாமியாகிய பரமேசுவரன் என், றெட்டி நிதி சங்காரம் என்னுடைய சுருத்தியமாம்; (குருவுபதேசத்தி னுலே) இவ்வாய்ப்பைகளை உள்ளவாறு அறிந்து கன்மயோகத்தினால் எல்லா மும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து முதலாம் அத்தியாயத்தில் இரண்

டாவது பாவனையாகிய நிர்க்குணோபாசனை கூறப்பட்டது. இது அகண்ட பாவனை எனவும், நிர்ப்பீஜயோகம் எனவும், அபாவயோகம் எனவும் படும்.

விகல்பரஹிதம் ஸகல வாக் மநோதீதம்।

(சுருதி அ) "விகற்பம் ஒழிந்த தத்துவமே பரம் எனப்படும்" எனச் சிவபுராணத்திலும்,

வஜ்ஜி வெடிவிதாவ ஸ்ஸாகஜ்ஜிண வரகூடிகீ வாழி।
ஹொகதாரு ஜிகூரா வொஜ்ஜ வவ-ட்ட ஸவெஹ்ஜி தழி।
சூதாய வெவமீ ஸ்வ ஜ்ஜ ஸ்ஜ ஸ்ஜி கூ ஸ்வ நாத நீ।
ஹவ்ஜி ஸவ-ட்டாதா ஸ்ஸாகூா ஜ்ஜீநாத்ர ஸ்தீவமீ வாஜீ।

(சுருதி கூ) "போக்தாவும், அகண்டரமும், புத்தமுமாயுள்ள சாட்சியை அறிஞர்கள் பிரகிருதிக்கு மேலானதாகக் கூறுகின்றனர்; இவ்வான்மா தனியாயும், சுவச்சமாயும், சுத்தமாயும், சுக்குமமாயும், சாசாதனமாயும், சர்வாந்தரியாமியாயும், சின்மாத்திரமாயும், மூலப்பிரகிருதிக்கு மேலாயும் உள்ளது" எனக் கூர்மபுராணத்துச் சாங்கியயோகம் உரைத்த அத்தியாயத்திலும்,

ஸவ-ட்டெஹ்ஜெத ஷ்ந வவ்ஜி தவெஹ்ந யஜா வரகாஸவெத சூத்ர தஜாஜ்ஜய்-ட்டீத்ர்ஜ்ஜயுதெ।

(சுசு0) "அகம் என்னும் பதத்தினைக் குறிக்கப்பட்ட ஆன்மா மணி கலின் நூல்போலத் தொடர்ச்சியாய்ச் சர்வசரீரங்களுக்குள்ளிருந்து நியாமகனாய்ப் பிரகாசிக்குங்கால் அந்தரியாமி எனப்படுவன்" என ஏகான்ம வாத சர்வசாரோபநிடதத்திலும்,

சுஹ வெவ ஹி ஸ்ஜா த்ர சுஹவெவ ஹ்யுஹ0 வஜா।
சுஹ வெவ ஹி நித்யா த்ர சுஹ வெவ ஹி கத்தாரீ।
சுஹவெவாஜய்-ட்டீ ச சுஹ வெவ வாஜ்ஜாரீ।
வால ஸ்ஜவ்ரகாரெண ஹாவயிகூா வஜா வ்யழி।

(சுசுக) "நானே சுத்தான்மா, நானே எப்போதும் நான், நான்தான் நித்தியான்மா, நான்தான் தற்பரன், நான்தான் அந்தரியாமி, நானே பரமேசுவரன் என இத்தப்பிரகாரம் (திருபசநிதமாய்) எக்காலமும் பாவிக்க" என நிபுணையினால் கூறப்பட்டதால் இந்த இரண்டாவது பாவனை ஏகான்மவாதி களுக்குரிய நிர்க்குணபாவனை என்பது எளிதானே அறியப்படும்.

## மூன்றாவது பாவனை (ஞானயோகம்).

தத்ரை வைதர்பிஷு வைஹம் நிஷு-ம்ஹெ நிஷ்ஷாரிஹ்ரு ஹம்।
ஸாநுஷ்ஷு ஸவ-ர்கஷ்டி-ர்ணி வாஸ் வெவாஷ்ரு ரோஸ்ரி-தம்।
சூத்ரு-ர்தூந ஸீக்ஷ்ரு வ்ரூ-தூரி-ரு வாவிலை ஜ்ரஸ।
ஸவ்ரூவ்ரு ஹாவ நா ஷ்ஷ்ரூரா வ்ரூ-ஹீ ஷ்ரூவ-ஸிவி-ர்கூழ்।
சுவாவ வாஸ்ரு யொ ஹ்ரு யெவெநை ஸ வரிவ-ர்ரு-தி।

(சுசுஉ) புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்து நிர்த்துவர்த்துவனுய், நிஷ்பரிக்கிரகனுய், சர்வகன்மங்களுமொழித்துமிக்கவைராக்கியமுடையனுய், பரமைசுவரியம் பூண்டவன் (பாசுபதயோகநெறியானே) ஆன்மாவிலே அருட்பராசத்தியோடு பரமான்மாவாகிய சிவபெருமானைக் கண்டு, பின்னர்த் தனக்குப் பரமான்மாவாயுள்ளவிலே உலகம் எல்லாம் இருப்பனவாக நோக்கி, இங்ஙனம் அக்ஷரபாவனை பூருவமாக (நிர்க்குணோபாசனை வாயிலாக) எய்தும் இந்த இறுதியாகிய பிராம்மிபாவனையை அடைதலாம் பரமயோகத்தினுலே ஏகராகிய சிவபெருமானைக் காண்கின்றனன்" எனக் கூர்மபுராணம் மூன்றாவது பாவனையை விதந்து கூறிற்று.

ந கூழ்-ர்ணா ந வ்ரஜயா யநெந ஸ்ரூஹெ நெநெகெ கூஷ்ரு
தகு ஸ்ரூநஸ-ஸ்ரூ।

(சுசுசு) "சிரௌதஸ்மார்த்தக் கிரியையினுலாவது, புதல்வனையுடைமையினுலாவது, பொருளுடைமையினுலாவது, அப்பிரமத்தை யிட்டாது, பின் இம்மூன்றையும் பரித்தியாகஞ் செய்தலினுற் சிவத்துவம் அடைந்தனர் பெரியோர்" என உமையாரோடு கூடிய சிவபெருமானது பாவனை உரைக்கும் அத்தியாசிரம கைவல்லியோபநிடதங் கூறுமாற்ருலும்,

கெநகஜ்ரூவிஜ்ரூ நாம ரௌதகவ்ரூ த்ரூ-ர்ந-வத்ரி-ர்நாழ்।
விரஜ்ரூ நாம வ்ரூவ-ஜ்ரூ நாம வ்ரஹ்மீ-தி ஸெஹ-வ்ரூஸ்।

(சுசுச) "அநேக ஜன்மங்களிலே முற்றிய வைதிக ஸ்மார்த்த கன்மங்களையுடையராய், அதனற் பற்றற்றவராய், அறிவுடையராய் எப்பிறவிக்கே சிவபெருமான் அருள்பாலிக்கின்றனர்" என வாயுசங்கிதை கூறுமாற்ருலும் மூன்றாவது பாவனை வலியுறுத்தப்படும். சகுணபாவனை, அக்ஷரபாவனை, பிராம்மிபாவனை என்னும் மூன்றும் முறையே யௌகிகயோகம், சாங்கியயோகம், அத்தியாசிரமயோகம் என மூவகைப்படும். இவ்வண்மை,

இது ஆனந்தமாகிய சிவனுர் உலகம்; அதுவே எல்லே; அதுவே மேலாகிய முக்திஸ்தானம்" என்று கூர்மபுராணம் கூறினமையின், இது (கூகை-ம் இலக்கத்திற் கூறப்பட்ட) புராவர்த்திகொடாத சிவலோகம் என அறியற் பாற்று.

ஸ்வேத வஜ்ராரோ ஷேந வஜ்ரஹஸ்தோ கஜ வாஹ ஆ| ஸௌராஷ்ட்ரா ஷோபிதாயோ ஜைதீஷவ்ய ஸமன்வித ஆ | ஆபிவாஹஸ்ய ஷேஷிஹோ ஷஷ்டி ரஷ்ரோ ஸ்திரோவ ச | வஜ்ரவாஸஸோ மௌலதஸ்ய தயா வேஷ்டிரா ஷஷ்டிர்| ஸோகண்டஸ்ய முஹாவாஸீ ஸிவஜ்ஞோ வாவரே வ்ருதஃ | ஜடாரோஜீ சாட்டஹாஸோ தாரஜஸோ யாமுனீ தயா| ஷோபாகாலஸ்ய ஸஜ்ஜீ ச ஷண்டோ ஷண்டோ வ வரவ ஆ| வஹ்னிஷ்ண வைஷ்ணவ ஸஜ்ஜோ ச நகுலீஸ்வர வரவ ஆ| சுஷ்டாவிம்ஸதி வம்ஷ்யாதா யோ மாவாயுப்யஹ் கரோது|

(கூஎஉ) "சுவேதர், சுதாரர், மதனர், சுகோத்திரர், கங்கர், லௌகாக்ஷி, மகாமாயர், ஜைகீஷவ்யர், ததிவாகர், இருஷபர், உருத்திரர், அத்திரி, சுபாலகர், கவுதமர், வேதசிரர், கோகர்ணர், குகாவாசி, சிகண்டி, ஜடாமாலி, அட்டகாசர், தாருகர், லாங்கலி, மகாகாலர், சூலி, தண்டிமுண்டி, சதிஷ்ணு, சோமசர்மா, நகுலீசுவரர்" (வாயு. உத். கo. உ—சு) என்போர் இருபத்தெட்டு வைதிக பாசுபதயோகாசாரியர்களாம். இவர்கள் ஒவ்வொருவர்க்கு நான்கு சீடராக நூற்றுப்பன்னிரு சீடர் உளர். இந்த நூற்றுநாற்பது ஆசாரியர்களுட் டலிவராகிய சுவேதாசாரியருடைய சீடர் இந்தச் சைவபாடியம் அருளிய நீலகண்டசிவாசாரியர்.

# பிரமசூத்திர உபக்கிரமணிகை.

(சூஎக) ஈசகோசாதி முக்கிய உபநிடதங்களை ஆதாரமாய்க்கொண்டு கிளர்ந்த பிரமமீமாஞ்சை எனப்படும் உத்தரமீமாஞ்சையாகிய பிரமசூத்திரம் (வேதாந்தசூத்திரம்)

கயாதொ ஹ்ரஷிகேஸா |

(சூஎச) "பின்னர், ஆகலின், பிரமவிசார விருப்பம்" என (க. க. உ) ற் கூறி,

ஜன்மாத்யஸ்ய யதஃ |

(சூஎஞ) "எங்கிருந்து இதின் சிருஷ்டி முதலியன" என (க. க. உ) ற் சிருஷ்டி முதலியன செய்வது பிரமமென்று அப்பிரமத்தின் இலக்ஷணங் கூறிற்று. சிருட்டி முதலிய என்றமையான்,

ஸ்ருஷ்டிஃ ஸ்ரித்வா ஸம்ஹார ஸ்திரோஹாவொஷ்ய நாமரூபே |
வபெஷவ தே ஜகத்ய்ஷ்டிஃ நித்யஸித்ய ஜாஷ்யதெ ||

(சூஎசு) "சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தும் பிரமத்தின் கிருத்தியம்" என்று வித்தியேசுவரசங்கிதை (அ. உ) ற் கூறப்பட்டது. படவே, இக்கிருத்தியம் ஐந்தும் ஏகான்மவாதிகளுடைய கூடஸ்தப் பிரமத்தினின்றா? இன்றேல் வைணவருடைய நாராயணப் பிரமத்தினின்றா? இன்றேற் சிவாத்துவிதிகளுடைய சிவதத்துவப்பிரமத்தினின்றா? உதிக்கின்றவென்றும், இம்மூன்றில் எது வாஸ்தவமாய்ச் சிறந்ததென்றும் முதற்கண் ஆராயற்பாற்று.

(சூஎஸ்) சூதசங்கிதை சூதகிதை (உ. சூ—நி) ல் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், சப்தாதி ஐந்தும், பூதாதி ஐந்தும், வாயுக்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், அவித்தை ஒன்றும், சிவன் ஒன்றுமாகச் சேர்ந்த மூப்பத்தாறு தத்துவங்களுக்குமேற் பரசிவம் (கூடஸ்தப்பிரமம்) அறியப்படுகின்றது. புறக்கருவிப்பாற்பட்ட தசவாயுக்களும் பஞ்சபூதங்களுள் ஒன்றிய வாயுதத்துவத்தில் அடங்க, மற்றைத் தத்துவமெல்லாம் பிரகிநோபநிடதத்திற் (ச. அ) கூறப்பட்ட ஆன்மதத்துவ அதோபாகத்தில் அடங்கிநின்றன. ஆகலின், ஏகான்மவாதிகள் கூறும் உலகசிருட்டி ஆன்மதத்துவத்துக்கு மேற்பட்டிலது.

வுயிவீ கவ்வு வுரீயத கூவஹெ ஜவி மீயஹெ தெஜொ வாயௌ விமீயதெ வாயுஸாகாஸொ விமீயத கூகாஸ ழிழ்யெஷ்ட ஜ்ஞிரூணி தேநூதெஜ்ஷ்ட தேஜோரூணி ஹ்மீதாஜெள விமீயஹெ ஹ்மீதாழி ழ்ஹதி விமீயதெ ழஹா நவ்யெஹ விமீயதெ கவ்யஹ ஷ்ஷொ விமீயதெ கஷ்ஸ்ரo தவிவி விமீயதெ தஷ்ஃ வொ ஜெவ வனகீ ஹவதீ.

என்னும் சுபாலோபநிடத மந்திரத்தை நோக்குங்கால்,

(கூஎஅ) நாராயணரினின்று தமசும், அதினின்று அக்ஷரமும், அதினின்று அவ்வியக்தமும், அதினின்று மகானும், அதினின்று பூதாதிகளும், அதினின்று தன்மாத்திரைகளும், அதினின்று இந்திரியங்களும், அதினின்று ஆகாயமும், அதினின்று வாயுவும், அதினின்று தேயுவும், அதினின்று அப்புவும், அதினின்று பிருதிவியும் உதிப்பனவாகப் பெறப்படுகின்றது. இங்ஙனம் சுபாலோபநிடதத்திற் கூறப்பட்ட நாராயணப் பிரமத்தினின்று எய்தும் சிருட்டிக்கிரமமும் மூலப்பிரகிருதிக்குமேற்போந் திலது. ஆகவே, நாராயண சிருட்டியும் ஆன்மதத்துவ அதோபாகத்தனெப் புலப்படுகின்றது.

(கூஎசு) (சுவே. க. உ. னும், பிரு. சா. ச. கசு) னுங் காணப்படும் மந்திரங்களுக்கு உபப்பிருங்கணமாகக் (கைலா. கூ. உசு—நஎ) ற் காணப்படும் காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருஷன், மாயை என்னும் வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் என்னும் சிவதத்துவம் ஐந்துமாக (ஆன்மதத்துவத்துக்குமேற்) பன்னிரு தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தப் பன்னிரு தத்துவங்களேனும், மூலப்பிரகிருதிக்குமேற்பட்ட சூக்குமப்பிரகிருதி பரப்பிரகிருதி என்னும் இரு பிரகிருதிகளேனும், ஏகான்மவாதிகளுடைய சர்வசார முதலிய உபநிடத பாஷ்யங்களிலேனும், அவர்பிரகரணங்களிலேனும், வைணவருடைய சுபால முதலிய உபநிடதபாடியங்களிலேனும், அவர் விண்டு புராணாதிகளிலேனும் காணப்படாமையானும், அவ்விருதிறத்தாரும் தமது கூடஸ்தப்பிரமத்துக்கேனும், நாராயணப்பிரமத்துக்கேனும் முழுமுதற்றன்மையும் சர்வவியாபகத்துவமும் ஏற்றிச் சாதிக்கப்போதல் எவ்வாற்றானும் இயலாது.

வவ-ஜ்ஞுவாதி விமிஷ்ட ஷ்ஷாஹியா நாயிகாரணo ஸிவதீக்ஷo தி தெவ ஜமந்தாரணo வ்வெதை-ஷ்யுதெ।

(கூ அ0) "சர்வஜ்ஞத்துவாதி குணங்களினால் விசேடிக்கப்பட்டு, பலர் சிவன் முதலிய அஷ்டநாமங்களுக்கு அதிகரணமாயது சிவதத்துவம்; இது ஜகத்காரணமாகிய பிரமம்" என்று நீலகண்டசிவாசாரியர் "ஜன்மாத்தி யதிகரண"த்தில் (க. க. உ) வரைந்திருக்கின்றனர்.

ஸவெஷ்டா ஶிவ ஈசுவரநாம ஸ்மாதிசுவரஸ்ய ப்ரஹ்ம வ்யதிரி
ஸிவஈசுவ ரிதி வ்யாக்ஹ்யம் ஈசுவரநா ஶிவாத்மயரி

(கூ அக) "தத்துவங்களனைத்துக்குந் தலைமையாய் வாய்ந்தமையின் நாயகமாய்க் கொள்ளப்படுவதும், தத்துவங்களுக்கெல்லாம் உறைவிடமா யிருப்பதும் சிவதத்துவமே" என்றது காரணகமமும். ஆகலின், இதினின்று எய்தும் பஞ்சகிருத்தியம் பிரதமமகாசிருஷ்டியாய் முடிய, கீழ் நிலைக்கண்ண தாகிய நாராயணர் முதலியோர் சிருட்டி அவாந்தரசிருட்டியாம் என்று கோடற்பாற்று. இந்த அதிகரணத்திற் பொதுவுறப் பஞ்சகிருத்தியங்கள் கூறப்படினும், (க. ச. உஙூ) ற் சிருட்டிகிருத்தியமும், (க. ஙூ. கூ) ல் திதி கிருத்தியமும், (க. உ. கூ) ற் சங்காரகிருத்தியமும், (ஙூ. உ. ஙூஎ) ல் திரோ பவகிருத்தியமும், (ஙூ. உ. உஙூ, க. க. எ) ல் அநுக்கிரககிருத்தியமுமாகப் பஞ்சகிருத்தியங்களும் சிறப்புறக் கூறப்பட்டன.

ஸவஷ்ஜோ zய ஷித ஸ்ரஷ்டா ஸ்ருஜதுவதி ஹஜ்ஜி ச।
ஸ்வதஜ்ஜ ஸ்தி ஷெஷ்வராஃ வக்ஷாத்ரூயதி ப்ரஹ்மஃ।
தூவெதா யத ஸ்ஷா ஷெவ ஸ்ஸவஷ்டாநுஹ்ரூஹகஃ ஸ்ரூதஃ।

(கூ அஉ) "சம்புவானவர் சர்வஜ்ஞராயிருத்தலின் படைத்து, காத்து, அழிக்கின்றனர் என்றும், சுவதந்திரசத்தியுடையராதலின் பக்குவர்களைப் பாசத்தினின்று நீக்குகின்றனர் என்றும், எஞ்ஞான்றும் வரம்பிலின்பமு டையராதலின் அநுக்கிரகஞ் செய்கின்றனர் என்றும் வாதுளமகோபப்பிரங் கணங் கூறலான், சிருட்டியாதிகிருத்தியம் செய்யும் பிரமம் சர்வஜ்ஞாதி குணங்களையுடையதாயிருக்கின்றதென்று நன்கு பெறப்பட்டது. இந்தச் சிருட்டியாதி கிருத்தியங்களுக்கும் காரணமாய்நின்ற பிரமத்துக்கு

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம (தைத். க. கூ. உ)

(கூ அங) ஆகாயத்தை (பராசத்தியை) சரீரமாகக் கூறலான்,

நிஷிய ஜநஷ்ணு ஷஷ்ணு ஸ்ஷ்ணு நிகூரஸ்வ ஜயிஷ்ணு நீயா
வரஸ்வேஷ்ணு திரஸ்வா வராஸதி ஹிஃ ஷிஷ்வர ஸ்யுதே।

(ஈ அச) "*சமஸ்த ஜகதண்ட ஷண்ட புத்புத சமூக இரத்தினகர பரப்பிரகிருதிரூப பரமசத்தியே சிதம்பரம் எனப்படும்" என்று சைவபாடியத்திற் கூறப்பட்டது.

வஹ்ந ஹ்ரூ வரிவதூ-ஶ்ரீ வ்யூ |

(ஈ அஇ) என்னும் தைத்திரீயமந்திரத்துக்கு உபப்பிருங்கணம் கூறியாங்கு, நிவிர்த்திகலாசக்கரம், பிரதிஷ்டாகலாசக்கரம், வித்தியாகலாசக்கரம், சாந்திகலாசக்கரம், சாந்தியதீதகலாசக்கரம் என்னும் ஐவகைச் சக்கரங்களுள்ளே ஏகான்மவாதிகளுடையவும், வைணவருடையவும் நிலை பிருதிவிமுதற் பிரகிருதியீறுய்க்கிடந்த தத்துவங்களோமாத்திரம் அடக்கிய பிரதிஷ்டாகலாசக்கரத்தின்பாலதாக, சிவாத்துவிதிகளுடைய பரமாகாசமாகிய பரமவியோமம் பிரதிஷ்டை வித்தை சாந்திகலாசக்கரங்களுக்கு மேற்பட்ட சாந்தியதீதகலாசக்கரத்தின்பாலதாம்.

ஸாஹ்யா கடமுவ்ஹ் ஶ்வாஹெ விஸர்ஜி ஸ்ராஹ்யுதீத்யா |
யா ஸாஹஸ் வரம் வெ்ர வரவ்ரகூ்தியொ நகஸ் |

(ஈ அசு) "சாந்திகலைக்கு மேல் அத்துவாவின் முடிவிற் சாந்தியதீதையோடு விசுத்தியானது எய்துகின்றது; பரப்பிரகிருதியோடிசைந்தமையால் அதனைப் பரமாகாயம் என்பர்" என்று (வாயு. பூ. உநி. உஉ) ற் கூறப்பட்டது.

(உ அஎ) ஈசுவரத்தியதிகரணத்தில் (க. க. நி—கஉ) உலகத்துக்குக் காரணம் (சாங்கியர் கூறும்) பிரதானமன்று, (சத்தி சிவப்பொருளாகிய) சத்தென்று (க. க. நி) ம் சூத்திரபாஷ்யத்திலும், (அந்தச் சத்து) (சர்வஜ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமுடைய) ஆன்மா என்று (க. க. சு) லும், (சுகம்-ம் இலக்கத்திலும்), அந்தச் சத்தாகிய பரமான்ம நிஷ்டனுக்கு மோக்ஷம் எய்துவதென்று (க. க. எ) லும், இந்தச் சத்தை அறிந்தால் எல்லாம் அறிந்தாயிற்று என்று (க. க. சு) லும், ஆன்மா நித்திராகாலத்திற் சத்திற் போய் ஒடுங்குகின்றான் என்று (க. க. கo) லும், இந்தச் சத்தே (சாந். அ. கூ. உ) றற் குறிக்கப்பட்ட தகராகாயம் என்னும் உண்மை (க. கூ. கச) ஞ் சூத்திரபாடியத்திலும், இந்த ஆன்மாவாகிய சத்தை ஐங்கலைக்குன் உயர்ந்த சாந்தியதீதகலைப்பாலராகிய (மகா) ருத்திரர் என்று சூத்திரபாடியத்து (க. க. கச) லும் கூறப்படலான், (க. க. க) ம் சூத்திரத்திலே சிருட்டியாதி இல

*"சமஸ்த உலக அண்டங்களின் தொகுதியாகிய குமிழிக் கூட்டங்கள் தோன்றப் பெறும் சமுத்திரமாகிய பரமகாரண பராசத்தியே சிதம்பரம் எனப்படும்" என்பது பொருள்.

கூணத்தினைற் புகழப்பட்ட பிரமம் சத்தென்றும், (பரம) ஆன்மாவென்றும், உருத்திரனென்றும், தகராகாசம் என்றுங் கூறப்படுமென்பது தானே பெறப் பட்டது.

(கூ அஅ) ஆனந்தமயாதிகரணத்தில் (க. க. கஉ—கசு) மநுஷ்யானந்த முதலாக ஆனந்தத்தை ஒன்றுக்கொன்று நூறு மடங்காக உயர்த்திக் கொண்டுபோய் முடித்த (ஆனந்த மிகுதிப்பாட்டினல்) * ஆனந்தமயமாயுள்ளவர் பரப்பிரமசிவபிரான் என்று (க. க. கஉ) னும், இங்கே மயம் என்றது அன்னமயம் பிராணமயம் மநோமயம் வரையில் விகாரசப்தத்தினும் விஞ் ஞானமயம் ஆனந்தமயம் என்பவற்றில் மிகுதிப் பொருளினும் சென்ற தென்று (க. க. கச) னும், தம் அன்பர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின் றார் என்று (க. க. கடு) னும், "சத்திய ஞான அனந்தமாகிய பிரமமே" "உள்ளே உள்ள ஆனந்தமயமாகிய ஆன்மா" என்று தைத்திரீயமந்திரத்திற் கூறப்பட்டதென (க. க. கசு) னும் கூறப்படலான், சிவப்பிரமமாகிய சத்து ஆனந்த மிகுதிக் குணத்தையுடையதென்றும், இந்தச் சிவனுரே சூரியமண் டலத்துள்ள பொன்மயபுருஷராக அந்தர்நிகரணத்தில் (க. க. உக, உஉ) கூறப்பட்டாரென்றும், பிராணுகாசபரப்பிரகிருதிரூப பரமாகாசமே சிவபெரு மான் என்று (க. க. உசு, உச)ற் கூறப்பட்டதென்றும், பரமாகாயம்(கo டு-ம் இலக்கத்திற் கூறியாங்கு) பிரமத்துக்குப் பராசத்தியாய் முடிந்ததென்றும், அதனல் இந்தப் பிரமசூத்திரமுதற்பாதம் முற்றினும் பிரதிபாதிக்கப்பட்ட பிரமம் சகுணப்பிரமமாமன்றி நிர்க்குணப்பிரமம் அன்றுமென்றும் ஓர்க.

(கூ அசு) இந்தச் சகுணப் பிரமத்தை உபாசிப்போர்க்கு எய்தும் பயன் பிரமலோகம் (சிவலோகம்) என்பதுபோதரப் "பிரமலோகத்திருந்து புநராவர்த்தி இல்லே, புநராவர்த்தி இல்லே" என்று (சாந். அ. கடு. க) ற் கூறியே பொருளே பிரமசூத்திரத்திறுதியில் "மீளத்திரும்புதல் இல்லே, மீளத்திரும்புதல் இல்லே" என்று சூத்திரிக்கப்பட்டது.

(கூ கo) பிரமசூத்திரமானது (ஈ. க. க)ற் பிரமத்தைச் சகுணமாக உபக்கிரமத்தினும், அந்தப் பிரமத்தை உபாசிப்போர்க்கு எய்தும் பயன் பிரமலோகம் என்று உபசங்காரத்தினும் (ச. ச. உஉ) கூறுதலாகிய உபக்கிர மோபசங்காரலிங்கத்தினல், பிரமசூத்திரஞ் செய்த வியாசர் தாற்பரியம் சகுணப்பிரமத்தின்பாலதேயாம்.

வவ-ஜ வ்வ-ஸ்ரீ ரீஸ்ரொ ஜமதா ஜநஷ்ரீ ஜயஸாரணரீ தெ்தவ்ய-வ்ய பூயிவாஉகஷ்ம நூரயவ-மிவ-கo பூயிவாரி.தி.

* எல்லாவித சர்வசரோபநிடதத்திற் கூறப்பட்ட ஆனந்தமயம் பெரிதும் ஈண்டுச் செல்லாது.

(கூகூக) "ஜகத்தின் சிருட்டி திதி சங்காரங்களுக்குக் காரணர் சர்வஞ் ஞரும் சர்வசத்திமானுமாகிய ஈசுவரர் என்று நியாயபூருவமாகப் பிரதிபாதிக் கப்பட்டது" என்று ஏகான்மவாதியார் தமது (க. க. கக) ஞ் சூத்திரபாடி யத்திற் கூறலான், அவர் கருத்தும் நம் கருத்துக்கியையச் சகுணப்பிரமத் தின்பாலதாயிற்று.

(கூகூஉ) முதற் பத்துச் சூத்திரபாடியமே நியாயபூருவமாகப் பிரதி பாதிக்கப்பட்டதென்று கூறும் அவர் வாயினூற்றனே, எஞ்சிய சூத்திரங்க ளுள்ளே சிற்சில இரண்டாகப் பிளக்கப்பட்டும், சிற்சில நீக்கப்பட்டும், சிற்சில புதிதாய்ப் படைக்கப்பட்டும், அதிகரணங்கள் அளவுக்கு மேலே நீட்டப்பட்டும், சீவான்மா பொய் என்று திரித்துணர்த்தப்பட்டும், கடா காய மகாகாயங்கள் புகுத்தப்பட்டும், இரச்சு சர்ப்பங்கள் விரிக்கப்பட்டும், உயர்ந்த சகுணப்பிரமம் நிர்க்குணமெனத் தாங்கொள்ளும் பிரமமாகிய (சீவ) ஆன்மாவுக்குக் கீழென்று தாழ்த்தப்பட்டும், தாழ்ந்த (சீவ) ஆன்மாவானது நிர்க்குணப்பிரமம் எனச் சிவபதிக்கு* மேலாக உயர்த்தப்பட்டும், உடன்பாட் டெதிர்மறைக்குணங்களாற் கூறப்படும் ஒரு பிரமமானது இரு பிரமங்களா கப் பிளக்கப்பட்டும், நியாயபூருவமாகாமற் பாடியம் பிழையற்றுப்போகாதி ருக்க இயற்றப்பட்டதெனச் சித்தித்தது.

(கூகூங) வியாசருக்குச் சகுணப்பிரமமொழிந்து நிர்க்குணப்பிரமத்தி லே தாற்பரியமுளதாயின், நிர்க்குணப்பிரமத்தைக் கூறற்கியன்ற நெறியினு லன்றே முதற்சூத்திரஞ் செய்திருத்தல் வேண்டும்; வியாசருக்கு அமுக்கி யம் எனப்பட்ட நிர்க்குணப்பிரமம் ஏகான்மவாதியார்க்கு முக்கியமாயும், அவ்வியாசரால் முக்கியம் எனக் கொள்ளப்பட்ட சகுணப்பிரமம் ஏகான்ம வாதியார்க்கு அமுக்கியமாயும் முடிந்ததே!! அந்தோ! அந்தோ!! அந்தோ!!!

(கூகூச) । யதொ வா இமானி பூதானி ஜாயந்தே யேந ஜா தானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஸந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம ।

என்னும் தைத்திரீயசுருதியே ஏகான்மவாதியார் உதகரித்த பிரகாரம் (க. க. க, உ) ஞ் சூத்திரங்களுக்கு ஆதாரமாய் நின்றது. "ஆகாய (பராசத்தி) சரீரமுடையது பிரமம்" என்றும், "இந்த ஆகாசம் ஆனந்தமாகாவிடின்" என்றும், "ஆனந்தமுடையது பிரமம்" என்றும் பலபிரகாரமாக அந்தப்

*"ஆண்டவன்றன்னை யடிமை யென்றுரைப்பாரடிமையை யாண்டவனென்பார்
மாண்டகுபதியைப் பசுவென்றும் பசுவைப் பதியென்று மதித்தனையிகழ்ந்தே
தாண்டரு நிரயக் கிடங்கினில் வீழுஞ் சழக்கரோடிணங்குறுவரமே
வேண்டினேனருளாய் கலைசைமாகரின் மேவி வாழ்ந்தருள் பசுபதியே"
என்றார் ஸ்ரீசிவஞானசுவாமிகள்.

பிரமம் தைத்திரீயத்திலே சகுணப்பிரமமாய் நிற்ப, ஏகான்மவாதியார்க்கு நிர்க்குணப்பிரமம் என ஒன்று தைத்திரீயத்துள் எங்ஙனம் வாய்த்ததோ? இந்தச் சகுணப்பிரமசுருதியை விடுத்து, இவர் "இரச்சுவிற் சர்ப்பத் தோற்றம் போல, பிரமத்தோடியைந்த அநிர்வசநீயமாயையில் நின்று உலகத்தோற்றம் எய்தும்" என்று விவர்த்தவாதங் கூறுஞ் சர்வசாரமுதலிய உபநிடத ஏகான்மவாதசுருதியை ஈண்டு உதகரிக்க மறந்ததென்னையோ? இங்கே முதற் சூத்திரப் பிரமம் தனக்கு இலக்கணங் கூறிய இரண்டாஞ் சூத்திரத்திலே சகுணப்பாற்பட்டுப்போக, அவர் மீட்டும் உதகரித்தற்கு எடுத்தாளும் மந்திரங்களுக்கு ஆதாரமாய்நின்ற சாந்தோக்கிய முதலிய சுருதிகளெல்லாம் உபநிடத உபக்கிரமணிகையிற் கூறியாங்கு சகுணப்பிரமத்தின்பாற்பட்டமையானும், அவர் ஆன்மா பிரமம் என விசேடணமின்றிக் காணப்படும் சொற்கள் அமைந்தவாக்கியங்களே நிர்க்குணமென நினைந்து எடுத்துவிடுப்பாராக, அவைகளெல்லாம் முன் பின் உள்ள சகுணச் சுருதிகளால் நசுக்குண்டு போதலினாலும், இவர் எவ்வுபநிடதத்து எச்சுருதிகொண்டு நிர்க்குணப்பிரமத்தை ஸ்தாபிக்கவல்லாராவரோ!! சகுணப் பிரமத்தைக் கூறினும் நிர்க்குணப்பிரமத்திலே தாற்பரியம் என்று வெறும் வாயாற் கூறலாமன்றி, பிரமாணசகிதமாய் ஸ்தாபிக்க ஏகான்மவாதிகள் எவரும் வல்லாராகார்!!!

(கூகூரி) ஏகான்மவாதியார்க்குப் பிரம சூத்திரத்து முதற்கண் நின்ற சிருட்டியாதிக்கு நாயகமாகிய பிரமமே அவர் கருத்துப் பிரகாரம் நசுநலும், கற்பிதமாய்ப் போக, முதற்கோணுதலாற் பின் நின்ற சூத்திரமீதத்துஞ் சகுணப்பிரமப்பாற்பட்டு முற்றும் கற்பிதமாய்க் கோணுதலடைய, வியாச சூத்திரமுழுமையும் நிர்க்குணப்பிரமத்தைக் கூறுமையின், அவர்க்கு அவை வியர்த்தமாய்ப் போயின என்றன்றே கொள்ளப்படும்!!!

(கூகசு) சர்வத்திரப்பிரசித்தாதிகரணத்து (க. உ. க) ல் மநோமயம் (ஞானமயம்) என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படுங் குணங்களையுடையவர் சிவபெருமான் என்றும்,

விவகஷிதகுணோபபத்தேஶ்ச।

(கூகஎ) "உரைக்கப்பட்ட குணங்கள் பொருத்தமாதலினாலும்" (க. உ. உ) என்னுஞ் சூத்திரத்தினுற் சத்தியசங்கற்பத்துவம் சர்வகாமத்துவ முதலிய குணங்களும் அச்சிவபெருமானுக்கே வாய்ந்த குணங்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்வவிஶிஷ்டாபிதாநா தேவ ஆ।

(சுகூ) "(அவர்) ஆனந்த குண விசிஷ்டமுடையராகவே கூறப்படலானும்" என்று அந்தாதிகரணத்து (க. உ. கஇ)ம் சூத்திரமே நேரே சிவனைச் சகுணரென்று கூறிற்று. சண்டி,

கூ ஸ்வஹ வ ஸ்வஹ।

"ஆனந்தம் பிரமம், ஆகாயம் பிரமம்," என்று (சாந். உ. கo. இ) உதகரிக்கப்பட்ட மந்திரத்துள்ள (வஹ) ஆகாயமும் (ககஇ-ம் இலக்கத்திற் கண்டவாறு) பராசத்தியின் மேற்குமதலின், ஆகாயமாகிய பராசத்தியினிட்டர் சிவபெருமான் என்றும் பெறப்பட்டது. இந்தச் சூத்திரம் ஆனந்தசத்தி விசிட்டமுடையது பிரமம் என நேரே கூறுமையான்,

கூக வஸவ ஸ ஸ்வஹ।

(சுகூசு) (ஆனந்தகுணவிசிஷ்டமுடையராகக் கூறப்படும்) "அந்த நியாயத்தினல், அவர் பிரமம் என்று (க. உ. கசு) வது அடுத்த சூத்திரம் கூறிற்று. சண்டி (க. உ. கஇ) ல் "ஆனந்த விசிட்டமுடைமையான்" என்று கூறி, அந்த ஆனந்த விசிட்ட குணமுடையது பிரமம் என்று (க. உ. கசு)ற் கூறப்படுமாயின், சூத்திரகாரர் கருத்தும் உபநிடதங்களின் கருத்தும் சகுணப்பிரமத்திலா? நிர்க்குணப்பிரமத்திலா? தாற்பரியம் என்பதை விவேகிகள் எவரும் எளிதில் ஆராயற்பாலர்!

அந்தரியாமியதிகரணத்தில் (க. உ. ககூ—உக)

சுஇயஷ-ரீயிஷெவாதிஷ-ஷ கஜ்ஜி-வ்யவதெஷாஸ் (க. உ. ககூ)

(சஅo) "தேவர்களினும் உலகமுதலியவைகளினும் அந்தரியாமியாய் இருப்பவர் அவரே; அவர் குணங்கள் கூறப்படலான்" என்று சூத்திரம் கூறுதலானும், அங்ஙனம் பாடியத்தினும் அந்தரியாமித்துவாதி குணங்களுடையர் என்றும், அதற்விசிஷ்டர் கூறப்படும் ஐசுவரியாதி மங்கல குணங்களுடைபராதலிற் பகவன் எனப்பட்டனர் என்றுங் கூறப்படலானும், சண்டி அந்தரியாமியதிகரண சூத்திரத்தினும் சகுணப்பிரமமே கூறப்பட்டதாயிற்று. "அந்த அக்ஷரம் (பிரமம்) எதனல் உணரப்படுகின்றதோ, அது பரைஞானம்; எது காணப்படாததாய், பற்றப்படாததாய், கோத்திரமிலாததாய்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறும் (முண். க. உ. இ, சு) டி மந்திரங்களே ஆதாரமாய்க்கொண்டு இளர்ந்த

(சஅக) ஈக்ஷத்யதிகர்மவ்யபதேஸாத் (க. உ. உஉ)

என்னும் சூத்திரம் "பிரத்தியகஷமாகாமை முதலிய குணங்களையுடையவர் (சிவபெருமான்); அவர் குணங்கள் கூறப்பட்டமையின்" என்று கூறி, சிவ

பெருமானர் அம்முண்டகோபநிடதத்திற் கூறப்பட்ட இலக்கணங்களையுடையர் என்று குறிப்பித்தது. இங்கே அருளிலைவிற் சாளக்கிராமர், உலகத்துப் பொருள்போலப் பற்றப்பட்டார் என்பதனாற்றற்கு அதிகுரியர் அக்கிராகியர் என்றும், (கன்மத்தினுற்பமக்கு வாய்ந்த கோத்திரமுதலிய இன்மையின்) அகோத்திரர் என்றற்றொடக்கத்தினராகக் கூறப்பட்டனர் என்றுமோர்க.

"இந்தச் சூத்திரம் சிவபெருமானைக் குணங்களையுடையர் (குணகர்) என்று தெளிவாகக் கூறினாலும், ஈண்டும் சகுணப்பிரமமே கூறப்பட்டதென்பது விளங்கப்படை. அக்ஷரப்பிரமசிவனுக்கு அதிருசியத்துவம் நித்தியத்துவம் வியாபகத்துவமுதலிய குணங்களைக் கூறினதோடமையாத

ய ஸர்வ-ஜ்ஞ ஸர்வ-வித் (முண். க. க. கூ)

(சஅஉ) அவரைச் "சர்வஞ்ஞர் என்றும், சர்வவித்தென்றும்" அம்முண்டகமானது கூறுகின்றது. ஆதலின், (பிரு. இ. அ. எ—கஉ) ற் கூறப்பட்ட அக்ஷரப்பிரமமும், இந்த முண்டகத்தில் (க. க. இ, கூ) ற் கூறப்பட்ட அக்ஷரப்பிரமமும் ஒன்றும் என்றும், இரண்டும் நிர்க்குணப்பிரமமாகாத ஒரே சகுணப்பிரமமாம் என்றும் அறிக.

அக்ஷராதிகரணத்தில் (க. உ. கூ—கக)

அக்ஷராம்பரான்தத்ருதேஃ।

(சஅக) "அக்ஷரம் ஆகாயம் இறுதியாயுள்ள அனைத்தையும் தாங்குதலான்" என்னும் (க. உ. கூ) ம் சூத்திரத்தில், அம்பரம் (ஆகாயம்) பராசத்தி என (கஅச-ம், ககள-ம் இலக்கங்களில்) நிரூபிக்கப்பட்டதன்றே. சமஸ்தபிரபஞ்சத்தையும் தாங்கும் ஆகாயமாகிய பராசத்தியார்க்கு நியமம் அக்ஷரப்பிரமமாகிய சிவபெருமான் என்று பெறப்படலான், இந்தச் சூத்திரமும் சகுணப்பிரமத்தின்பாலதே. ஸ்தூலமன்று அணுவன்று என்றற்றொடக்கத்தனவாக (பிரு. இ. அ. அ) ற் கூறப்பட்டனவெல்லாம் சகுணப்பிரமத்தைச் சாரும் என்பாராய், வியாசர் ஆகாயாந்தமாகிய அனைத்தையும் நியமிப்பவர் சிவபெருமான் என்றும், அக்ஷரப்பிரமம் பராசத்தி விசிஷ்டமுடையது என்றும் கூறுவாராய், "அக்ஷரப்பிரமமானது ஆகாய (பராசத்தி) இறுதியாகிய அனைத்தையும் தாங்குதலான்"

(சஅச) அக்ஷராம்பரான்தத்ருதேஃ (க. உ. கூ)

என்று சூத்திரித்தார். இவ்வாறு கூறுதலிலடமையாது (கஉ—கஅ) ல் "அந்த அக்ஷரத்தினின் பிரசாஸனத்தினால் (ஆஞ்ஞையினால்) (கட்டுப்பாடிலக்கத்திற் கண்டவாறு) எல்லாம் நடைபெறுகின்றன" என்றும், அவ்வாறு நடை

கன்மனேத்தையும் இயக்கும் ஒருவனுயிரை பாசத்தினையுடையது பிரமம் என்னும், அதி சகுணப்பிரமமாமன்றி நிர்க்குணப்பிரமமன்று என்னும் போதரு, அன்னதும் வலியுறுத்துவாராய்ச் சூத்திரஞ் செய்தார்.

தகராதிகரணத்தில் (க. சூ. சகூ—உஉ)

உஹர உதரெஹ்ர் (க. சூ. சகூ)

(சஅநி) "தகரம் சிவபெருமான்; அடுத்துக் கூறப்படும் குணங்களுண்மையான்" என்று சூத்திரம் கூறு. (சாந். அ. க. க) ல் தகராகாயம் கூறப்பட்டு அடுத்த (சாந். அ. க. நி) ல் "அபகதபாப்மத்துவாதி" (சர்வஞ்ஞதாதி) எண்குணங்கள் கூறப்பட்டிருக்கின்றன, இந்தத் தகராகாசமாகிய ஆன்மப் பிரமம் அபகதபாப்மத்துவாதி குணங்களையுடையதென்று சூத்திரமே வெளிப்படையாய்க் கூறுதலான், எல்லாவித்தைகளுள்ளுஞ் சிறந்த தகரவித்தியாகாசப்பிரமம் சகுணப்பிரமம் என்பது தெள்ளிது.

ஸ்ரூதெஸ்ர ஈஹிஈர zஸ்ரூவஹிஹ்ஸ்வூஸ்ரூர் (க. சூ. கநி)

(சஅசு) "இதிலே (தகராகாசத்திலே பிரபஞ்சத்தை) தாங்குதலாகிய அவர் புகழுங் காணப்படலான்"

என்னுஞ் சூத்திரத்தினால் அந்தப் பிரமத்துக்கு மகிமை (புகழ்) என்னும் குணம் கூறப்படுகின்றது. (க. சூ. உஉ) ல் தகராகாயத்துப் பரமான்மாவைப் பரமானந்தவடிவினர் என்று ஸ்மிருதி கூறுவதாகப் பிரமாணம் காட்டப்பட்டிருக்கின்றது. (க. சூ. உசு, உச) பிரமிதாதிகரணத்து (க. சூ. உசு) ல் உபாகதாபொருட்டு அங்குவந்து அளவினராய் நின்றனர் என்றும், இவர் சிவபெருமான் என்றும், பிரமசூத்திரம் செய்த வியாசர் கருத்துச் சிவபெருமான்மீதன்றி நிர்க்குணப்பிரமத்தின்பாலதன்று என்றும் அறிவுறுத்துமாறு அப்பயதீக்ஷிதர்,

(சஅள) நிஈவ்ர்ய்ஸ்ரூ ஸ்ரூஈதர்ஸ்ஸ்ரா நிறுஸிஸ்ரிஸ்ரூவெஸ்ரா zஸ்ரூஸ்ரூஸ்ரூ ஸ்ரூதாஈவி ஸ்ஸ்வெஸ்ர் ஹ்ரூவ் ஸ்ரூவ ஸ்ரிவவாஸ்ரெஸ்ரூ ஸ்ரீர்ஸ்ரூஸ்ரூதர்ஸ்ரி வ்ரூ ஈர்ஸ்ரூவஸ்ரூ யொ zஸ்ரூர்ஸ்ரூவ்ரூஸ்ரீத் ஈநஸ்ரூவெஸ்ரூவ்ர்ஸ்ரூவ்ர்ஸ்ரூய்ஸ்ரூ தஸ்ரூவெஸ்ரர்ஸ்ரா ஸ்ரூஸ்ரூஸ்ரூர் வ்ரூர் ஈர்ஸ்ரூவெஸ்ரீ ஸ்ரூர் உஸ்ரி

பிறவு மாகும் புருடனுக் குட்பட் பிரமிதி தனைவிரும் பாம
லறவனே புனீ சானகற் சருதி யாற்பர மென்றுசிச் சயித்தோன்
செறியுமவே)தாந்தப்பொருளினுக்தெரிக்குஞ் சூத்திரஞ் செய்தவன் ஞான்று
மிறைவனென்)றுணர்ந்தே யருளுவெண்பாரரியவர் வியன்றலைவர்.

ஸ்ரூஸ்ரூஸ்ரூ

அதனையாயின், எல்லாவேதங்களிலும்பொருட்டு அப்பதங்களைக் கொண்டு எழுதிய இத்தாத்பரியசங்கிரகத்திலுள்ளபடியை அறிப்பது எல்லாவல்லியார் (சூத்) நிருவாக்கென்று கூறியிருக்கின்றாரெனின், அது ஒவ்வாது; (உரை—கூடாதம். இலக்கவரையிற் கூறியாங்கு), சகுணம் (பௌராணயோகம்), நிர்க்குணம் (சாங்கியயோகம்), அத்தியாசிரமம் (பாசுபதயோகம்) என யோகங்கள் மூன்றென்று கூர்மபுராணம் வெளிப்படையாய்க் கூறி, அவற்றுள்ளே நிர்க்குணபாவனை (சாங்கியயோகம்) இரண்டாவது பாவனை என உரைத்தவிடத்தும், பிரமதேதையில் ஐந்தாம் அத்தியாயத்து நாற்றிருபத்தெட்டாம் சுலோகத்தில் இந்த நிர்க்குணப்பிரமநிலைக்கு மேலாக மற்றோர் நிலையில்லை யென்று பிரமாவானவர் அக்கினி மகரிஷிக்குச் சத்தியஞ் செய்தார் என்றுகூறி அப்பிரமாவைப்பொய்ச் சத்தியத்துக்கு ஆளாக்கியும், நீலகண்டவொசாரியர் அருளிய சைவபாடியத்துள்ளும், அப்பயதீக்ஷிதர் ஸ்ருதிசிலாச்சுமணிதீபிகையுள்ளும் புகட்டுரைகள் செய்தும், அத்தியாத்ம யோகியார் ஸ்ரீசங்கர இரத்தினத்திரயபரீக்ஷை, ஆனந்தலஹரி, சௌந்தரியலஹரி முதலிய நூற்களில் வேண்டியவாறு நிரித்துத் நிரித்து எழுதியும் வைத்தெதான்மவாதக் குழுவினர்க்கு அச்சித்தாந்தவேசசங்கிரகத்துமுதற்கண் அவ்வனம் இயைத்துவைத்தல் அரிதன்றுமாதலின்.

(க. சூ. சஉ—சச) அத்தாந்தரத்துவாதிவியபதேசாதிகரணத்தில்,

ஆகாஸோ வை-ராஜஸ்ருதி வ்யபதேசாத்।

(ஸ்ரீ ஆ) (க. சூ. சஉ) ல் "ஆகாயம் சிவபெருமான், அவர் பிறவற்றை முதலியவைகளுக்கு வேறாகக் கூறப்படலான்" என்னுஞ் சூத்திரத்தினே பராசத்தியாகிய ஆசாயமாயுள்ளார் சிவபெருமான் என அறியப்படுகின்றது.

நிருத்தாப்பிரசத்தியதிகரணத்தில்

ஸம்பவாத்வை தத ஊர்த்வம் (க. க. சடு)

"அவரிடத்தில் அனைத்தையும் கூடிற்று என்று சுருதியிற்கண்டலான்" என்னும் சூத்திரத்தில் அவருக்குச் சத்தியாவார் பராசத்தி என்று (சுவே. ஆ) உதகரிக்கப்படலான், அவர் பராசத்தியுடையார் என்று அறியப்பட்டது.

சர்வதாமோபலத்தியதிகரணத்தில்

ஸர்வ-ப்ரகாஸகத்வாத் (க. க. சுசு)

(ஸ்ரீ ஈ) "தாவகுணங்களும் அவருக்கு இயைதலாலும்" என்னும் சூத்திரத்தில் (பிரதானம், அணு, காலம், தன்மம், காலமுதலியவற்றையெல்லாம்

மாத) எல்லாச் குணங்களும் மெய்பெருமானுக்கே உரியவெனச் சுத்திரமே கூறாநின்ற, இவ்வர்த் கருத்தினுமுழுதும் சதுஸ்லோகியின்பாலதாம்.

ஒரோவிடங்களிலே திரோஹிதம் எனவும் வருவது வழக்கமே (பி-ம்) யென (கூ. உ. சி) ற்

(சக0) "பரத்தின் (சிவனுர்) சங்கற்பத்தினுல் அது திரோபவிக்கப் பட்டது" என்றற்றொடக்கத்த சூத்திரத்தில் தியானம் என்றது சங்கற்பத் தின் பெயராய்ப் பிரமத்துக்குக் குணமாயிற்று.

(சகக) உபயலிங்காதிகரணத்தில் (கூ. உ. கக—உ0) மெய்பெருமா னுக்கு உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறப்படும் இரு குணங்கள் சுருதியிற் கூறப்பட்டுள்ளன. "சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என் றும், "சர்வஞ்ஞர்" என்றும், "சர்வகதர்" (சர்வவியாபகர்) என்றும், "சத்தியசங்கற்பத்வம் சத்தியகாமத்வம்" என்றும் சுருதிகளிற் கூறப் பட்டனவெல்லாம் உடன்பாடுமுகத்தாற் கூறப்பட்ட குணங்கள்; "அஸ்தூல மனணு, அதீவன்று, நீட்டமன்று, குறுக்கமன்று" என்றற்றொடக்கத்தன வாகவும், "நிர்க்குணம், நிஷ்கிரியம், நிரஞ்சனம்" என்றற்றொடக்கத்தனவாக வும் கூறப்படுவன எதிர்மறைமுகத்தாற் கூறப்பட்ட குணங்கள்; உடன் பாட்டுக் குணங்களேமாத்திரம் கூறாது எதிர்மறைக்குணங்களைக் கூறிய தெற்றுக்கெனின், "சத்தியஞானஞனந்தாதி" உடன்பாட்டுக் குணங்கள் பிறபொருள்களாற்றொடக்குண்ணுங் குற்றம் ஒன்றும் பற்றாது தாயனவாய் நித்தனை என்றிரப்பித்தற்காம். "அவர் பிருதிவியில் நின்றார், அப்புவில் நின்றார், ஆன்மாவில் நின்றார், திக்குகளெல்லாம் பிரவேசித்தவர்" என்றற் றொடக்கத்தனவாகப் பிருகதாரணியம், மத்தியந்தினசாகை, அதர்வசிர முதலியவைகளிற் கூறப்பட்டவிடத்தும், அவர் ஸ்தூலமாய், அணுவாய், நீட்டமாய், குறுக்கமாய் நிற்கும் உலகத்துச் சடப்பொருள்களேயெல்லாம் வியாபித்து நின்றாரேனும், அநாதிமலத்தினையுடைய பசுக்களோடு கலந்து நின்றாரேனும், அச்சடப்பொருள்களின் தூலத்துவமேனும், அணுத்துவ மேனும், நீட்டம் குறுக்க முதலியவேனும், பசுக்களின் அஞ்ஞானமேனும் (மலமேனும்), (சாத்துவிக இராசச தாமச) குணங்களேனும், அப்பசுக்களுக் குரிய தொழில்களேனும் சிறிதும் அவரைத் தொடக்கார்வென்றணர்த் தற்குமாமெனக் கொள்க. ஆன்மாக்களுடைய தூதரான் முதலியவைகளாய் நின்றாரேனும், இந்தப் பிராரப்த கன்மத்தக்குரிய தைகால் முதலிய அங்கங் கள் அவருக்கு இல்லையென்பதாய், "அபாணி அபாதம்" என்றற்றொடக்கத்த னவதாகச் சுருதிகள் புகழ்ந்தன என்றும், அச்சட அசடப்பொருள்களுள்ளே தாம் இயக்குவாரேனும் அச்சடப்பொருளகளாலேனும் பசுக்களா

லேனும் காணப்படாமலும் கேட்கப்படாமலும் நின்று, தானே முன்னை யெல்லாம் தானடல் கேட்டல் செய்வதாதலின், "அதிர்ந்தேதுமிலாத அசருத் சுதோதிர" (ஆரெனினு மருளுர் கருதீர் பெரு சூர) என்ன (பிரு. இ. எ. உக) ம் சருதி கூறிற்றென்றும், பசுக்களுக்குரிய வுணவே னும், ஜரையேனும், மிருத்தியுவேனும், சோகமேனும், பசியேனும், தாக மேனும் அவருக்கு இல்லை என்பனவாய்ச் (சாந். அ. க. இ) வது சருதி முதலிய அவருக்கு அபகதபாப்மத்துவாதி குணங்களை விதந்தெடுத்தோதின என்றும், இங்ஙனம் எவ்வகைத் தோஷங்களும் பற்றுமையால், சர்வஜ்ஞதை சத்திய ஞானனந்த முதலிய கல்யாணகுணங்களுக்கெல்லாம் அவர் ஆஸ்பத மாயினர் என்றும் வலியுறுத்தப்படுகின்றன. ஆகலின், உடன்பாட்டு எதிர் மறைக் குணங்களால் ஒரே சகுணப்பிரமமே வேதாந்த சூத்திரத்தினும், அதற்கு ஆதாரமாய் நின்ற உபநிடதங்களினும் பிரதிபாதிக்கப்பட்டதேயாக, நிர்க்குணப்பிரமம் என் றிரேர் பிரமம் முக்கிய உபநிடதங்களினும், வே தாந்த சூத்திரத்தினும் கூறப்பட்டதெனச் சாதிக்கப்போந்தமை முற்றும் ஸூ முற்றும் வழு !! அங்ஙனம் ஒன்றுள தென்று கூறபவரெல்லாம் சருதிகளுக்கு இதிகாசபுராணங்கொண்டு பொருண்முடிக்காது, அச்சருதி களுக்குத் தாமே தோற்றவாறு பொருள் செய்து அவற்றைக் கொன்ற வரே யாவர் ; ஒரே சகுணப்பிரமம் கூறப்பட்டதென்னும் உண்மையை (கூ. உ. கஉ) ஸ் சூத்திரமுதலியவற்றிற் காண்க. (பிரு. சா. கூ. சு. நும், கூ. உ. சூ. நும், சு. சா. உஉ. நும், சு. இ. கஇ) னுங் காணப்படும் "நேதி நேதி" ஏன்னும் பிரயோகம் பிரமத்துக்குமேல் மற்றோர் வஸ்து இல்லை என்பதற்காம். இவ்வுண்மை (கூ. உ. உக) என்றற்றொடக்கத்த சூத்திரங்களிற் பார்த்துணர்க.

வருகாஸவஷாவிவெயய-ஸ்ரீ (கூ. உ. கஇ)ல்

(சகஉ) பிரகாசம் போன்று அவர் திவ்ய குணங்களுடையர், சிவ பெருமானுக்கு நூற்றுக்கணக்காகிய குணங்கள் இருப்பனவாக, அக்குணங் கள் அவர்க்கு இல்லையென்று சாதிக்கத்துணிதல் அக்குணங்களை விதந்தெ டுத்தோதிய சருதிகளையெல்லாம் வியர்த்தமாக்கிவிட்டதாய் முடியுமென் றும், ஆகலின் அநேக கல்யாண குணங்களுக்கு ஆஸ்பதமாயினர் சிவபெரு மான் என்றும் அறியற்பாற்று.

ஈ-ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ

குறிப்பருளியன்ன அந்தத் தொடர்ச்சி பிரமத்துக்கு அவிகாரமே (சர்வஞ்ஞத்வ) விபக்ஷித்வ என்னும் குணத்தை மறுக்கவில்லை; ஆகலின், சகுண பிரமமே சூத்திரங்களிற் சிற்சிலவிடத்தில் தெளிவாகிக்கப்படுகின்றதென்பதை அது வலியுறுத்தி நின்றது.

சுதோ zநேஷ்ந தயாஹி ஸ்மரந்தி (சூ. உ. உஇ)

(சகச) "அவர் அனந்த குணங்களோடியைந்தவர்; ஆகலின், அவர் இயல்பே" என்னுஞ் சூத்திரத்தினும் கூறப்படும் பிரமம் சகுணத்தின் மேற்று.

சுநந்ந வவ்ஸ்தத்வ ஸாயாஸோலூகாதிஷ்ஷு (சூ. உ. சுக)

(சகத) "அதனால அவருக்குச் சர்வஜ்ஞாபகம்; ஆயாமமாகிய விஸ்தீர்ணமுதலிய சப்தங்களுண்மையின்" என்னுஞ் சூத்திரம் சிவபெருமானுக்குச் சர்வஜ்ஞத்துவம் சர்வவியாபகத்துவம் என்னும் குணத்தைச் சாற்றுகின்றது.

உபஸம்ஹாரொ zபேதாதிஜைமி ஷ்விவ ஹ்யாதிஷு தத்ர ஹ (சூ. சு. இ)

(சகஉ) "அர்த்தத்தில் பேதமின்மையின் (குணங்களோப்பற்றி) உபசங்காரஞ் (செய்யப்படல் வேண்டும்); விதியின் சேஷங்களிற் போலவே (வ்யாக்ஞேயத்தினுஞ்) சமானமுமாம்" என்னுஞ் சூத்திரத்தில் உபநிடதங்களிலே தகாலித்தியாசம்பந்தமாகக் கூறப்பட்ட குணங்கள் தசோபாசனையில் உபசங்கரிக்கப்படல்வேண்டும் என்று கூறுகின்றமையின், உபாசனைகள் அனைத்தினும் பிரமத்தின் குணங்கள் தியானிக்கப்படல்வேண்டும் என்னும் நெறி பெறப்படுகின்றது.

ஸர்வாதாநயஃ வ்யாப்ரியதவ்ய (சூ. சு. கச)

(சகக) என்னுஞ் சூத்திரம் "முக்கியப்பொருளாகிய பிரமத்துக்கு குணாதிகுணங்கள் தியானத்தில் ஒருங்கு கொள்ளப்படல் வேண்டும்" என்று கூறுகின்றது.

வைஷ ஹி வஸ்துதயஃ (சூ. சு. சுச)

(சகஎ) "தேனை ஒன்றே யுபசரிப்பட்டது; ஒத்திய முதலிய குணங்கள் கூறப்பட்டமையின்" என்னுஞ் சூத்திரபாஷ்யத்தில் மாதேவராகிய வைஷ்ணவருக்கு ஒத்தியமுதலிய குணங்கள் உண்மையைக் கொள்ளுகின்றது.

[illegible] (க. உ. கக)

(சகக) "(சத்திய) காமாதி குணங்கள் அவைகளே உபசந்தரிக்கற் பாலன" என்று கூறப்பட்டமையின், (பிரு. அ. க. இ) ல தகரவித்தியா சம்பந்தமாகக் கூறப்பட்ட சத்தியகாம சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் உபசங்கரிக்கற்பாலன என்று கூறப்பட்டிருக்கின்றது.

சூடிஸா டிவொஷ் (க. க. கக)

(சகம) ஏன்னுஞ் சூத்திரத்தில், அவருக்கு உமாசகாயத்துவம், அனுக்ரகசக்தித்துவம், சிருஷ்டிபிங்களத்துவம், விரூபாக்ஷத்துவ முதலிய குணங்களினத்தும் உபாசகன் உபாசிக்குங்கால் உளவாகி, பின் இல்லாதபோகையில், அவை எப்போதும் பரப்பிரமத்தை விட்டு நீங்காதனவாம்என்று கூறப்பட்டதின், வியாசசூத்திரமுழுமையும் சகுணப்பிரமத்தையே பிரதியாதிப்பனவாயின்.

(சகக) சூத்திரகாரரும் நீலகண்டசிவாசாரியரும் பிரமத்திற்கு உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறிய குணங்களின் உண்மை அறியாமாட்டாது, உடன்பாட்டுக் குணங்களாற் கூறப்படுங்காற் சகுணப்பிரமம் என ஒன்றும், எதிர்மறைக் குணங்களோடேனும், வாளா சத்து, பிரமம், ஆன்மா என்று தனிச்சொற்களோடேனும் சுருதி கூறப்படுங்கால் நிர்க்குணப்பிரமம் என மற்றொன்றுமாக இரு பிரமங்கள் உபநிடதங்களினும் வேதாந்த பிரம சூத்திரங்களினும் பிரதிபாதிக்கப்பட்டன என்று ஒரே பிரமத்தை இரண்டாகப் பிளக்கப்போந்தமை எகான்மவாதியார்க்கு அடாது. (க. அ-ம் இலக்கத்திற்) கண்ட (க. உ. கஞ) ஞ் சூத்திரத்திலே "சக்லிசிட்டமுடையராக (ஆனந்தவிசிட்டமுடையராகக்) கூறப்பட்டமையின் அவர் (சிவபெருமான்) பிரமம்"

(சகஉ) கத வனா லை லூஜ (க. உ. கஜ)

என்னும் சூத்திரத்தைத் தமது வேதாந்த பிரமசூத்திரத்தினின்று இல்லாதொழியச்செய்தனர். இச்சூத்திரம் நீலகண்டசிவாசாரியருடைய மதத்துக்கு இசைவாயிருத்தலினாலும், எகான்மவாத நிர்க்குணப்பிரமக்காரர்க்கு வீரோதமுற்றிருத்தலினாலும், அவர் அப்பிரமசூத்திரத்தைச் சூத்திர எல்லையினின்று நீக்கிப் பரதேசத்துக்கனுப்பிவிட்டார். இதனாலேனும் சூத்திரங்கள் ஒருபுறமிருப்ப, ஏகான்மவாதியார் மற்றோர் புறமாகப் பாடியுஞ் செய்த வர்தனவுரைகளுள் அறிஞர்தமக்கு [illegible]

[illegible]

(ಸೂತ್ರ) "ಪ್ರಣವನಾದಸಮ ಸಮಸ್ತಮಂತ್ರೋದ್ಧಾರಕ್ಕೆ ಸಂಸಾರಸಮುದ್ರ ತಾರಕಕ್ಕೆ ಸಕಲಸಿದ್ಧಿಪ್ರದಾಯಕಕ್ಕೆ ಇದಂ ಉಪಕ್ರಮಣಿಕೆಯಂ ಪೇಳ್ವೆಂ" ಎಂದು ಪ್ರತಿಜ್ಞೆಯಂ ಮಾಡಿ ಪೇಳ್ದಪಂ.

(ಸೂತ್ರ) "ಪರಮಸುಖಸಮ ಸಮುದ್ಭವಕ್ಕೆ ಸಮಸ್ತಜಗದುತ್ಪತ್ತಿ ಸ್ಥಿತಿ ಲಯ ಕಾರಣಕ್ಕೆ ಸಮಸ್ತಜೀವಾಂತರ್ಯಾಮಿಗೆ ಸಮಸ್ತಜೀವಾಶ್ರಯಕ್ಕೆ ಸಮಸ್ತಜೀವಾಧಾರಕ್ಕೆ ಸಮಸ್ತಜೀವಾಭಿವ್ಯಕ್ತಿಗೆ ಸಮಸ್ತಜೀವಾಭಿಮಾನಿಗೆ ಸಮಸ್ತಜೀವಾಧಿಷ್ಠಾನಕ್ಕೆ ಸಮಸ್ತಜೀವಾಧಿಪತಿಗೆ ಸಮಸ್ತಜೀವಾಂತರಾತ್ಮಕ್ಕ

(சூஉ) ஸுவுண வஸி ஜூநா ஜீவஹிவகலுதெ வஹு
ஸுதிஸோயாதிஹொவுவுவஸி ஹுவோரா |

என்று பிரமசூத்திரபாஷ்யத்தில் (உ. சூ. சசூ) வரைந்தருளினர்.

(உஉசூ) ந வா தூஹாஹெடிவாதி நீ
ஸுதிகாஜதயொரிவெகதரதியாகெந|

(சசூ0) "நாம் இப்பி வெள்ளி என்பவற்றிற்போல, ஒன்றை (சீவான் மாவை) மித்தை என்று கூறும் அத்தியந்த அபேதவாதிகள் (ஏகான்மவாதி கள்) அன்று" (உ. க. உஉ) என்றற் றொடக்கத்தனவாக மாயாவாதத்தைக் கண்டித்திருக்கின்றனர்.

(சசூக) சிவபெருமான் முக்தரால் அடையற்பாலர் என்பது (க. க. ஏ. ணும், க. சூ. உ) னும், அம்முத்தர் உபாசனை செய்யுமாறு (சு. க. உ) னும், அவர் சிவசாமியமடைதல் (க. சூ. உக) முதலியவற்றினும், சிவபெருமான் அங்ஙனம் உபாசித்துச் சிவசாமியமுறுபவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிப் பவர் என்பது (க. க. கடு) னும், முக்தர் ஆனந்தம் அடைவர் என்பது (சு. சு. கசு. ம், சு. சு. ககூ) னும், அங்ஙனமடைந்த ஆனந்தம் முடிவுகாண் கிலாப் பேரின்பமாகிய பூமா என்பது (க. சூ. ஏ) னும், அவர் எய்தும் உல கம் சிவலோகம் என்பது (சு. சு. உஉ) னும் அறியப்படுகின்றது.

(சசூஉ) இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்திற் பிரதான காரணவாதம், பரமாணுகாரணவாதம், பௌத்தமத நிராகரணம், ஞானஞ் மேயவாதம், விஞ்ஞானமாத்திரவாதம், சர்வசூனியவாதம், சைனமத நிராகர ணம், (பசுபதி அதிகரணத்து) இரணியகருப்பமத நிராகரணம் (உ. உ. சூடு —சூஅ), பாஞ்சராத்திரமத நிராகரணம் (உ. உ. சூக—சஉ), மாயாவாத நிராகரணம் (உ. சூ. சகூ) கூறப்பட்டது.

(சசூசூ) சீவான்மவிஷயம் (உ. சூ. ககூ—டுஉ) னும், (சூ. க. க— உள) னும், (சூ. உ. க—கக0) னுங் கூறப்பட்டிருக்கின்றது.

(சசூச) நீலகண்டசிவாசாரியர் பசுபதியதிகரணத்தில் இரண்ணிய கருப்பமதத்தைக் கண்டிக்க, ஏகான்மவாதியார் நகுலீசபாசுபதத்தையும், வைணவர் காபாலம் காளாமுகம் என்பவற்றையுங் கண்டித்தனர்; அவை நம்மாலும் கண்டிக்கற்பாலனவாதலின், அது நமக்கும் உடன்பாடே. பாஞ் சராத்திர மதத்தை நீலகண்டசிவாசாரியரும் சங்கராசாரியரும் நிராகரணஞ் செய்ய, அதற்கு உடன்படாது பாஞ்சராத்திரமதம் ஸ்தாபிக்கப்பட்டுதன் று வைணவர் கொண்டனர். மாயாவாதத்தை நீலகண்டசிவாசாரியரும்

ஸ்ரீகண்டரும் கண்டிப்பர், அதற்கு உடன்படாது மாயாவாதம் நிறுத்தப்பட்டதென்று ஏகான்மவாதியார் ஸ்தாபிக்கப்பெற்றனர். (நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர், *இராமாநுஜாசாரியர்) மூவரும், (நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர்) இருவரும், (நீலகண்டசிவாசாரியர் இராமாநுஜாசாரியர்) இருவரும் முறையே (சைவசித்தாந்தமல்லாத) அவைதிக பசுபதிமதத்தையும், பாஞ்சராத்திரத்தையும், ஏகான்மவாதத்தையுங் கண்டித்தாராதலின் மிகுதிபற்றிக் கண்டனமே ஒப்புக்கொள்ளற்பாலதன்றி, அப்பாசுபதமதமேனும், பாஞ்சராத்திரமதமேனும், ஏகான்மவாதமேனும் ஸ்தாபிக்கப்பட்டனவாகக் கோடல் ஒர்காலும் ஒவ்வாது. இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதம் மதகண்டனத்துக்கேற்பட்டமையின், பாஞ்சராத்திரங் கண்டிக்கப்பட்டதன்றி அங்ஙப், பாஞ்சராத்திரம் ஸ்தாபிக்கப்படற்குரிய குறியொன்றுஞ் சூத்திரங்களில் இல்லையாம் என்பது வெளிப்படை.

(சகூடு) உடன்பாட்டெதிர்மறைக் குணங்களோற் கூறப்படுஞ் சகுணப் பிரமசொரூபலக்ஷணம் (கூ. உ. கக—சo) ற் கூறப்பட்டிருக்கின்றது. பரப் பிரமவுபாசனகுணங்களின் தொகுப்பு மூன்றும் பாதமுழுதினுங் கூறப்பட்டிருக்கின்றது. மூன்றும் அத்தியாயத்து நான்காம் பாதத்திற் பிரமசரிய நிரகஸ்தவானப்பிரஸ்த சன்னியாச ஆச்சிரமங்களின் இயல்பும், (கூ. ச. சஅ, சகூ) ல் எல்லா ஆச்சிரமத்தார்க்குமுரிய வைதிகபாசுபத விரத அநுட்டானமும் (கூ.சo—கூ.டுசo-ம் இலக்கவரையிற் கண்டவாறு) கூறப்பட்டிருக்கின்றன.

(சகூசு) நான்காம் அத்தியாயம் உபாசனைகளின் பயனைக் கூறலிற் பலாத்தியாயம் எனப்படும். இந்த நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனைப்பிரகாரங் கூறப்பட்டிருக்கின்றது.

(சகூள) சூவீந ஸ்ஹஹாஅ (சு. க. எ) ல் உபாசகர்க்குரிய ஆசன நியமம் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஆசன நியமம் கைவல்லியோபநிடதத்திலன்றி மற்றோர் உபநிடதத்திற் கூறப்படவேயில்லை. நீலகண்டசிவாசாரியர் இவ்வுபநிடதங்களினின்று பிரமாணங் காட்டுங்கால், அந்தப் பிரமாணத்தை நிகர்ப்பப் பிறிதோர் பரோபநிடதத்தினின்று ஏகான்மவாதியரும் வைணவாசாரியரும் பிரமாணம் நிரூபிப்பது வழக்கம். கைவல்லியம், அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்களிலிருந்து பிரமாணம் காட்டாது பிறிதோர் முக்கியோபநிடதத்தினின்று நீலகண்டசிவாசாரியர் நிரூபிப்பின், அதனை மற்றிருவரும் எடுத்து நிரூபிப்பதும் வழக்கம். இவ்வனமாகவும்,

* இராமாநுஜாசாரியரும் மத்துவாசாரியரும் சகுணகாரணவாதியே தாற்பரிய மூலடையாதலின், ஈண்டு மத்துவபாடியத்தை வேருகப் பொருட்படுத்தி யாதுங் கூறினேமில்லேம்.

ஏகான்மவாதியரும் வைணவாசாரியரும் "ஆசனசிஷ்ய" மிதிக்குஞ் சுவல் லிவ சருநியையொப்ப மற்றோர் உயிடத்திற் சருநி தம் பக்கத்துக்கு இடங்கொடுக்காமையின், பிரமாணம் யாதுங் காட்டாது வாளாவிருந்தனர். இதனுலேனும் இவ்விருவரும் சூத்திரத்துக்குப் பொருள் செய்வதெல்லாம் ஒவ்வாவென்று நன்று புலப்படவில்லையா?

(சகூ) நான்காம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்தில் தீவான்மா தேகத்தை விட்டு உற்கிரமணஞ் செய்தலும், மூன்றும் பாதத்தில் சீவான்மா செல்லும் அர்ச்சிராதிமார்க்கமும், நான்காம் பாதத்தில் சீவான்மாவுக்கெய்தும் பரப்பிரமலோக சிலப்பேறும் கூறப்படுகின்றன.

இனி (உகூ—ஙகூ-ம் இலக்கவசையில்) கூறப்பட்ட உற்கிரமண விஷயம் ஆராயப்படுகின்றது.

(சஙூ) (பிருகதாரணியமாகிய) கண்ணுவசாகை (பிரு. கூ. ச. உ) ல் அவித்துவான் உற்கிரமணஞ் செய்யுமாறு கூறத்தொடங்கி, (கூ. ச. சூ) ன் முற்பாதி மந்திரத்தில் "இதுதான் பற்றுடையனுகிய அவித்துவான் விஷயம்" என்று கூறி முடிக்கப்பட்டது; அக்கண்ணுவசாகை (பிரு. கூ. ச. சூ) ன் பிற் பாதி மந்திரத்தில் பற்றற்ற வித்துவான் விஷயம் கூறப்போந்து "அகாமனும், நிஷ்காமனும், ஆப்தகாமனும், ஆன்மகாமனும் இருக்கின்றபோது அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை; பிரமமாகிப் பிரமத்தைப் போயடைகின்றனன்" என்று கூறப்பட்டிருக்கின்றது;

(சசஂ) ரூதிஷ்யாதி ஸெஹ ஸாரீராஸ ஸுஷ்டா ஹெரு கேஷாழ (ச. உ. கஉ)

"(வித்துவானுக்கு உற்கிரமணம் இல்லை, இங்கே பிரமப்பிராப்தி அடைந்துவிடுகின்றன் என) மறுப்பின், (வித்துவானுடைய) ஆன்மாவினிருந்து பிராணேந்திரியங்கள் (பிரிவு) தில்லை (என்பதே பொருளாம்); (அதற்குப் பிரமாணம்) லெர் சாகையிலே ஸ்பஷ்டமாயிருக்கின்றதுஸ்" என்பது (ச. உ. உ) ம் சூத்திரப்பொருள்; வித்துவானுக்குப் பிராணன்கள் சரீரத்தை விட்டு உற்கிரமிப்பதில்லை என்றும், இங்கே பிரமப்பிராப்தி அடைந்துவிடுகின்றன் என்றும் பிரதிஷேதஞ் செய்யின் (மறுப்பின்), பிராணேந்திரியங்கள் அந்த வித்துவானுடைய ஆன்மாவைப் பிரியாதிருப்ப, அவன் தலைநாடிவழியாய்த் தேவயான மார்க்கமாகச் சுவர்க்கலோகம் (பிரமலோகம்) போயடைகின்றன் என்று (பிரு. கூ. ச. எ, ஆ, கூ) ந் கூறப்பட்டிருக்கின்றதன்றே; அங்ஙனமாயின்,

(சசக) ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிரு. கூ. ச. சூ)

"அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்னும் மந்திரத்தில் அவனுக்கு (தஸ்ய) என்று சுருதியிற் காணப்படலான், பிராணன்கள் அவனுக்கு உற்கிரமிப்பதில்லை என்று பொருள் கொள்ளல் வேண்டுமே, இதற்கு யாது சமாதானம்? என ஆக்ஷேபிக்கப்பின், அந்த ஒரே வித்துவான் விஷயத்தை ஒரே பொருள் கொண்ட ஒரே மொழிகளாற் கூறுமிடத்து, மத்தியந்தினசாகையானது பிருகதாரணிய கண்ணுவசாகையிற் காணப்படும் அவனுக்கு (தஸ்ய) என்னும் பதம் நின்றவிடத்து அவனிலிருந்து (தஸ்மாத்) என்னும் ஐந்தாம் வேற்றுமைப் பொருட்பதத்தைஸ்பஷ்டமாகப் பிரயோகித்தமையின், ஈண்டு பிருகதாரணியத்து அவனுக்கு (தஸ்ய) என்ற பதத்துக்கு அங்ஙனமே ஐந்தாம் வேற்றுமைப் பொருள் தோடல் வேண்டும் என்றுணர்த்த வியாசமுனிவர் சிலர் சாகையில் "ஏகேஷாம்" (வகெஷாழ்) "வெளிப்பண்ட" (ஸ்வஷ்ஃ) என்று சூத்திரித்தனர். அஃதாவது, வித்துவானுடைய சரீரத்திலே பிராணேந்திரியங்கள் ஜீவான்மாவைவிட்டு உற்கிரமியாது பிரியாதிருப்ப, ஆன்மாவானது ஊர்த்துவநாடி வாயிலாக உற்கிரமிக்கின்ற தென்பதே பொருளாம். ஆகலின், அவித்துவானும் வித்துவானும் சரீரத்தை விட்டுப் புறப்படுதலிற் சமமாயினும், அவித்துவான் செல்லும் மார்க்கமும் அடையும் உலகமும் வேறு; வித்துவான் செல்லும் மார்க்கமும் அடையும் பிரமலோகமும் (சிவலோகமும்) வேறு என்பதாம்.

இங்ஙனம் அதன் உண்மைப்பொருள் கண்டுரைத்தவர் நீலகண்டசிவாசாரியர்.

(சசஉ) நீலகண்டசிவாசாரியர் காலத்துக்கு நீடிய காலத்துக்குப்பின் இருந்த ஏகான்மவாதியாருக்கு அந்தப் பொருள் உடன்பாடன்று. இவர்க்கு வித்துவான் உற்கிரமணஞ் செய்யாது இங்கே பிரமத்தில் இலயமாதல் வேண்டும் என்பது பேரவா. அதற்காக அவர் (சசஅ-ம் இலக்கத்திற்) கண்ட (சூ.உ. கஉ) ஞ் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்தார். இங்ஙனம் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்துகொள்ளலாம் என்று காட்டற்கு முற்பாதங்களிற் சில சூத்திரங்களைப் பிளந்து பிளந்து காட்டிப் போந்தனர். பிளந்து முதற்கணின்ற

வ்ருத்திஷ்யா திதி ஔஹ ஸாஸ்ரீராஜ (சங். சூ. உ. கஉ)

(சசங) என்னும் முற்பாதிச் சூத்திரத்துக்கு, (பிரமத்தை அறிந்த வித்துவானுக்கு உற்கிரமணமில்லை என்ற சுருதி) மறுக்கின்றதென்ற கூறின், (சுருதியானது பிராணேந்திரியங்கள்) ஆன்மாவிலிருந்து (பிரிவு) தில்லை என்று கூறுகின்றது என (இதனை மறுப்பேம்)" என்று பொருள் செய்துகொண்டு.

நதஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிரு. உ. ச.க)

(சசச) "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்னுஞ் சுருதியைத் தமது கருத்துப் பிரகாரம் ஸ்தாபிக்கவும், வியாசர் கருத்துக் கையைந்து நீலகண்டசிவாசாரியர் சித்தாந்தஞ் செய்ய மத்தியந்தினசாகைப் பிரமாணத்தைப் பூருவபக்ஷஞ் செய்யவும் தொடங்கினர்; (நதஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி) "நதஸ்ய பிராண உற்க்ராமந்தி" "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்னுஞ் சுருதியின் பொருள் ஆன்மாவிலிருந்து பிராணன்கள் பிரிவதில்லை" என்பதேயாம் என்றும், (நதஸ்யாத்க்ராமந்தி) "நதஸ்மாத் பிராண உற்க்ராமந்தி" அவனிலிருந்து பிராணன்கள் பிரிவதில்லை" என்று மத்தியந்தினசாகை கூறுதலினாலேயாம் என்றும், ஆகலின் இறக்கின்றவனுடைய உயிர் பிராணன்களோடு உடலை விட்டுப் பிரிகின்ற தென்றும், நீலகண்டசிவாசாரியர் கூறியவாறு பொருள் கொள்கின்றேம் என்பவர் போன்றுங்காட்டிப் பாடியமையைத்து, பின் இந்த மத்தியந்தினசாகைப் பிரமாணத்தைப் பிற்பாதிச் சூத்திரம் மறுக்கின்ற தென்று எடுத்துக்கொண்டனர்; அப்பாதிச் சூத்திரம் வருமாறு:—

(சசஞ) ஸ்பஷ்டோ ஹ்யே கேஷாம் (சந். சு. உ. கஉ)

"ஏனெனின், ஆன்மா உற்கிரமணஞ் செய்வதில்லை என்பது சிலர் சாகையில் வெளிப்படையாயிருக்கின்றது" என்று சூத்திரத்துக்குப் பொருட்படுத்திக் கொண்டனர்.

சிலர் சாகை என ஏகான்மவாதியார் எடுத்துக்கொண்டது பிருகதாரணிய கண்ணுவசாகையேயாம். இதில் (பிரு. இ. உ. கக) ல்

(சசசு) கஉதஸ்ய வஸ்வே நீயந்தே

பிராணன்கள் இவனிடத்திப் பிரிகின்றனவா? இல்லையா? என்று ஆர்த்தபாகர் வினவ, யாஞ்ஞவற்கியர் "இவனிலேதான் அவை (பிராணன்கள்) குழுமுகின்றன"* என்று கூறினர் என்றும், இதனால் மத்தியந்தினசாகையுடையார் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் மறுக்கப்பட்டதென்றும், (பிரு. சு. ஏ. சு) ல் அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்று கூறிய பொருள் ஆர்த்தபாகர்க்கு இறுத்த உத்தரத்தினால் நிறுத்தப்பட்டதென்

---

*சசஉ-ம் இலக்க மந்திரமும் பொருளும் இவ்வனமேயாகவும், ஏகான்மவாதியார் (சங். சு. உ. கஉ) ற் கண்டவாறு கஉதஸ்ய வஸ்வே நீயந்தே "இவனிலே பிராணன்கள் லயமாகின்றன" என்னு மந்திரத்தைத் திரித்துக்கொண்டனர்.

றும், அதனல் வித்துவானுக்கு உற்கிரமணமில்லை, இக்கேதான் அவன் பிராணன்கள் இலயமாகின்றன என்றும் சாதித்தனர்.

(சசஎ) இந்த ஆர்த்தபாகர்க்கும் யாஞ்ஞவற்கியர்க்கும் இடையே நிகழ்ந்த வாதத்திற் பிரமத்தை அறிந்த வித்துவான் விஷயமாக யாதும் குறிப்பிடப்படவில்லே. ஆகலின்,

(சசஅ) ஸப० உ॒ரு॒ஷஃ (பிரு. ஓ. உ. கக)

என்று அங்கே கூறப்பட்ட புருஷன் எங்ஙனம் வித்துவானேச் சுட்டிற் றே? "அயம்புருஷஃ" என்றது ஏகான்மவாதியாருடைய (பிரு. ஓ. உ. கக) ற் பாடியமே வித்துவான் என்று பாவித்ததென்பாரேல், ஒரே சகுணப் பிரமத்தைச் சகுணம் என்றும், நிர்க்குணம் என்றும் தவறுண்டு இரண்டாகப் பிளந்தவாறே, பிரத்தியக்ஷத்திற் கிடந்த ஒரு முழுச் சூத்திரத்தையும் தம்பக்கம் சாதிக்க இரண்டாகப் பிளந்த வீரர், அங்கே "புருஷன்" என்ற மொழிக்கு அறிந்தவன், ஞானி, வித்துவான் என்று எழுதி வைக்க மறந்துவிடுவார்தாமோ !! "புருஷஃ" என்னும் பதத்தினேச் சுட்டப்பட்டவன் அவித்துவானன்றி வித்துவானன்று, இது மேலே (சுக०—சுகசு-ம் இலக்கவரையிற்) கூறியாயிற்று. இது நிற்க. இவர் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்தமை தவறு. கண்ணுவசாகையிற் கண்ட மந்திரப்பொருளே முற்பாதிச் சூத்திரமாக வரைந்து, அந்த ஒரே கண்ணுவசாகையிற் கண்ட மற்றேர் மந்திரம் முற்பாதிச் சூத்திரத்துக் கண்ணுவசாகைப் பொருளேமறுத்த தேயாமாயின்,

(சசசு) வூவெஷா ஹை கெஷாழி (சங். ச. உ. கசு)

"சிலர் சாகையில் வெளிப்படை" என்று வியாசமுனிவர் மற்றேர் சூத்திரஞ் செய்தனர் என்றமையும் தவறு. கண்ணுவசாகை முதலியவற்றின் மந்திரப்பொருளே ஸ்தாபித்தற்கு மத்தியந்தினசாகை முதலிய பிறி தோர் சாகையின் மந்திரத்தை உதகரிக்கவேண்டியன்றே (ஏகேஷாம்) "சிலர் சாகையில்" என்று வியாசமுனிவர் கூறினர். ஒரே சாகைச் சருதிப் பொருளாற் கண்டித்து நிறுத்தற்குச் சில சாகையினர் என்று கூறும் வழக்கம் சூத்திரகாரர்க்கும் மற்றியார்க்கும் இல்லே. அஃதன்றிச் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்து ஒன்று முன்னும் ஒன்று பின்னுமாக நிறுத்தி எழுதி வைத்தால், ஒரே கண்ணுவசாகையாயிருப்பினும் குற்றமில்லே என்று நினைந்து அங்ஙனம் செய்தனரோ?

(சஇo) ஓர் முற் சூத்திரத்தைப் பூருவபக்ஷஞ் செய்ய மற்றேர் பிற் சூத்திரம் வருமாயின், "ஏனெனின்" (ஹி) என்னும் மொழி ஏய்தமாட்டாது;

ஆகுல் (அ-ா) என்னும் மொழியே பிற் சூத்திரத்திருத்தல்வேண்டும்; (உஇ) என்று வைத்தமையாற் பிற் சூத்திரம் முற் சூத்திரத்தை மறுக்கவில்லை என் றன்றேவாயிற்று. சூத்திரம் ஒரு புறமும் பாஷ்யம் ஒரு புறமுமாகச் செப் பவர்க்கு ஈசம் என் செய்குவம்!!

(சடுக) நீலகண்டசிவாசாரியர் கண்ணுவசாகையில் ஆர்த்தபாகர் விஷயம் கண்டு, அது அவித்துவான் விஷயமென்றன்றே முதற்கண்ணே பொருட்படுத்தாது விட்டனர். வித்துவான் உற்கிரமிப்பதில்லை என்று காட்டுதற்கு, அவ்வேகான்மவாதியார் அவித்துவான் விஷயத்திலிருந்து காட்டிய உதாரணத்தினல் அவித்துவானும் உற்கிரமிப்பதில்லை என்றன்றே வாயிற்று.

(சடுஉ) இவர் இங்ஙனம் (பிரு. சு. ச. சு) கண்ணுவசாகை மந்திரப் பொருளே நிறுத்தவந்த மத்தியந்தினசாகைப் பொருளைப் பூருவபக்ஷஞ் செய் தற்கு (பிரு. நி. உ. கக) ஆம் (கண்ணுவசாகையின்) மற்றோர் மந்திரப் பொருளைக் கொண்டு, அந்தக்கண்ணுவசாகைப் பொருளே நிறுத்துவாரேல், முற் கூறிய கண்ணுவசாகை (பிரு. சு. ச. சு) ம் மந்திரப்பொருளோடு பின்னர்ச் சித்தாந்தம் என இவர் விடுத்த கண்ணுவசாகை (பிரு. நி. உ. கக) ம் மந்திரப்பொருளையும் ஒருங்கு சேர்த்து முன் நிறுத்தி, மத்தியந்தின சாகைப்பொருள் கொண்டு நீலகண்டசிவாசாரியர் பக்கலின்று, "அவனது ஆன்மாவைவிட்டுப் பிராணன்கள் பிரியாதிருக்க, அவன் உற்கிரமணஞ்செய் கின்றன்" என்று ஸ்தாபித்துவிடலாமன்றே, அங்ஙனஞ் செய்யின் அவ் வேகான்மவாதியாரைத் தொடர்ந்து நிற்குமவரெல்லாம் வாய்ப்பிரமாணம் விடுத்து மற்றெப்பிரமாணங்கொண்டு யாது சமாதானஞ் செய்ய வல்லுநர்! பல சுருதிப் பிரமாணங்கொண்டு ஆன்மாவை விட்டுப் பிராணன்கள் உற்கிர மிப்பதில்லை என்று சுமார்த்தவலியுறுத்தப்பட்டிருத்தலின், அந்தச் சுருதிப் பொருள்களே இவர் சத்திய உபப்பிரமாணங்களாகத் தம் பக்ஷத் தற்கு உபிர்ப்பித்துக்கொண்டாலன்றே, சூத்திரத்திற்கும் தமக்கியைந்த வாறு பொருள் நிரித்துச் செய்ய வல்லுநராவர்!!

(சடுஊ) வேதவியாசர் சகுணப்பிரமவிஷயத்தையே முதலாஞ் சூத்திர த்தில் ஆரம்பித்து, சூத்திரங்கடோறும் சகுணப்பிரம விஷயமே கூறி, உபசங் காரத்திலும் சகுணப்பிரமக்காரர் எய்தும் பிரமலோகத்தைக் குறிக்கும்சுரு தியை மூலமாகக்கொண்டே சூத்திரஞ்செய்தார். இத்தப் பிரமலோகமென்னப் படும் சிவலோகத்தையே (ஈகச—ஈகள-ம் இலக்கவரையில்) கண்டவாறு, சுருதிகளெல்லாம் ஒருங்கு கோஷிப்பனவாக, நிர்க்குணோபாசனையொன்று மறந்தும்கூறுத பரோபதேசங்களுள்ளும் பிரமசூத்திரங்களுள்ளும் போக்கு மீட்சியின்றிப் பிராணன்களெல்லாம் இங்கே லயமடைந்துவிடவேண்டு

மென்று நினைந்து கபடத்தோடழுதிவைத்தமை இனி ஒர்கணும் தலையெடுக்காது! பிராணன்கள் கூடுகின்றன, குழுமுகின்றன என்றுணர்த்தும் (பிரு. டி. உ. கக) "சமவரீயன்தே" (ஸவரீயஹே) என்னும் பதத்தையும் (சங். ச. உ. கூ) சமவலீயன்தே (ஸவலீயஹே) என்று திரித்து, சூத்திரங்களையும் திரித்து, சூத்திரப்பொருள்களையும் திரித்து, அதிகரணங்களையும் திரித்து, நீலகண்ட சைவபாடியப்பொருளையும் திரித்து இவர் செய்த பாடியம் கதாநகதநியாயங்கொண்டு அபிமானமாத்திரையினல் இவரைத்தொடர்ந்து நிற்கும் ஏகான்மவாதிகளுக்குத்தான் உவப்பாகும் போலும்!!!

(சடுச) மூன்றும் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனைப் பிரகாரமும், இரண்டாம் பாதத்தில் சீவான்மா தேகத்தை விட்டு உற்கிரமணஞ் செய்வதுமாகக் கூறப்படும் சகுணப்பிரம விஷயத்துக்குள்ளே, நிர்க்குணோபாசனையேனும், ஆன்மா இங்கே இலயமாதலாம் பயனேனும் கூறுத சூத்திரங்களுக்குள்ளே தமக்குப் போக்குமீட்சியில்லா முத்தி ஒன்று சித்தித்ததென்று வரைந்து புகுத்தினமை எவ்வளவு விந்தை!! இங்ஙனம் வலிந்து வலிந்து சூத்திரங்களுக்குப் பொருளைத் திரித்துணர்த்திக்கொண்டு போய் (சு. ச. எ) ஞ் சூத்திரம் இவர்க்குத் திரித்துப் பொருள் கொள்ள இடங்கொடாமையான், முத்தர்களுக்கு எய்துவனவாக இவர் ஒர்காலும் உடன்படாத குணங்கள் உண்டென்பாராய்,

(சருரு) வ-ஹவ-ஹ்யா வ்ய-வ-ரூ்யாவாஹிஹ்யா zவ்ரதஸ்ய ஸ்ரவஸ வைஸ்ரூ்யய்-ஃ ர-ஹவஸ்யா ப்ரகூ்யாவ்ய-நா ஏவிரோயம் ஸ்வா஧ரோயண சூஆயை்-ா ஸ்ரூயதெ |

"உபந்நியாசாதிகளினுற் பெறப்படும் பிரமத்தின் ஐசுவரிய ரூபமாகிய முற் குணம் (ஆன்மாவுக்கு எய்தாதென்று) தவிர்க்கப்படமாட்டாது என்று பாதராயணர் கொள்கின்றார்" என்றனர்; அஃதாவது ஆன்மாவுக்குப் பிரமத்தின் குணங்கள் எய்தும் என்றாராயிற்று. இதில் "வியகாராபேக்ஷ" என்று ஒருபொடி சேர்த்தார். வியகாரம் யாதும் ஒழிந்தவிடத்திற் பேசப்படும் முக்தர் விஷயத்தில் வியகாரம் என்று வாளா எழுதிவிட்ட இவர் வியகாரப்பொடி பறந்துபோய் விட்டது. இதனல் தாம் எடுத்த நிர்க்குணப் பிரம்விஷயத்தை நீடு சாதிக்க இயலாது இந்தச் சூத்திரத்துக்குள்ளும் சிக்குண்டு போயினர்.

ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

# பிரமசூத்திர
# சிவாத்துவிதசைவபாடிய
## அத்தியாயப்பொருள்.

—o—

### முதலாம் அத்தியாயம்

சச்சிதானந்தரூபரும், சர்வஜ்ஞத்துவ சர்வசக்தித்துவாதி சுவரூப லக்ஷணமுடையரும், சகல ஜகத்தையும் பிறப்பிப்பவரும், அனேத்துக்கும் வேருனவரும், அனேத்துக்கும் ஆன்மாவானவரும், விரூபாக்ஷத்துவ திரு ஷ்ண பிங்களத்துவ நீலகண்டத்துவமுதலிய விசிஷ்ட லீலா மங்கள சுவ ரூப சுபாவமுடையரும், பவர் முதலிய முக்கிய அஷ்டநாமங்களின் பொரு ளானவரும், பரமகாருணிகரும், பரப்பிரமமுமாகிய சிவபெருமானிடத்திலே சமஸ்த உபநிடத வாக்கியங்களும், அவற்றின் அநுகுணமாகிய மிருதிகளும் தாற்பரியத்தினும் சமன்வயமாதலே உணர்த்துகின்றது.

### இரண்டாம் அத்தியாயம்

சிவபெருமானிடத்திலே சமன்வயமாய் நிற்கும் உபநிடத முதலியவற் றுக்கு விருத்தமாக ஸ்மிருதி தர்க்காதிகளினல் எய்திய விரோதம் பரிகரி க்கப்படுதலே உணர்த்துகின்றது.

### மூன்றும் அத்தியாயம்

உபாசகன், உபாசியன், உபாசனம் என்பவற்றின் பேதங்களையும், ஆச் சிரமதரும பேதங்களையும் விளக்குகின்றது.

### நான்காம் அத்தியாயம்

உபாசனப்பிரகாரமும், சிவான்மாவின் உற்கிராந்திகதியையும், அர்ச்சி ராதியையும், பிரமமாகிச் சிவத்தை அடைந்த சிவன்முக்தனுடைய நிலையு மாகிய இவற்றை நிரூபிக்கின்றது.

# பாதப்பொருள்.

——o——

முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் பரப்பிரம சிவபெருமானைப் பற்றி வெளிப்படைக் குறிகளையுடைய சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

" " இரண்டாம் பாதத்தில் அதிகம் வெளிப்படையாகாத குறிகளையுடைய சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

" " மூன்றும் பாதத்தில் வெளிப்படையானவும் வெளிப்படையிலாதனவுமாகிய குறிகளையுடைய வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

" " நான்காம் பாதத்தில் வெளிப்படையாகாத சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

இரண்டாம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் சாங்கியாதி தர்க்கவிரோத பரிகாரமும்,

" " இரண்டாம் பாதத்தில் பிரதான காரணவாதங்களுள்ளே தர்க்கவிரோதமும்,

" " மூன்றும் பாதத்தில் பூதசிருட்டியின் அவாக்தரவிரோதத்தைப் பரிகரித்தலும், சிவான்மாவித்தியத்துவாதி குணங்களையுடையதாக உணர்த்தலும்,

" " நான்காம் பாதத்தில் பிராணன் இந்திரியம் என்பவற்றின் சொரூபமும், பிரமத்தினின்றே அவைகளுக்கு உற்பத்தியாதலும்,

மூன்றும் அத்தியாயத்து முதற்பாதத்தில் சிவான்மா போக்குவரவு செய்தலும்,

இரண்டாம் பாதத்தில் சிவான்மாவின் அவஸ்தாரூபணமும், பரப்பிரமசிவனுர் சொரூபலக்ஷணமும், ——

,, ,, மூன்றும் பாதத்தில் வேதத்திலே பலவிடங்களில் உரைக்கப்பட்ட பல்வகைப் பரப்பிரம சிவோபாசனையின் குணோபசங்காரமும்,

,, ,, நான்காம் பாதத்தில் ஆச்சிரமதருமமும்,

நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனைப்பிரகாரமும்,

,, ,, இரண்டாம் பாதத்தில் சிவான்மாவாகிய உபாசகனுடைய உற்கிராந்திதசையும்,

,, ,, மூன்றும் பாதத்தில் அர்ச்சிராதிகதியும்,

,, ,, நான்காம் பாதத்தில் பரப்பிரம சிவபெருமானை அடைந்தவனுடைய நிலையும் நிரூபிக்கப்படுகின்றன.

---

# அதிகரணப்பொருள்.

—o—

## முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ஜிஞ்ஞாசாதிகரணம் (க):—மகாதேசிகரும் சர்வாதிக்கிரகருமாகிய பரப்பிரமசிவனுருடைய அருளாதிக்கியத்தினுல் அதிகாரியாவான் பாசபடலம் நீங்கி, பிரத்தியகூமாக்கப்பட்ட நிரதிசயானந்த சொரூபமாகிய அப்பரப்பிரமசிவனுரது சாமீபகுண கைவல்லிய இலட்சுமியை அடையுமாறு, அப்பரப்பிரமசிவனை ஆராயவேண்டும் என உணர்த்துகின்றது.

(உ) ஜன்மாத்தியதிகரணம் (உ):—உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் செய்பவர் சிவபெருமானென்று அப்பரப்பிரமசிவனுர் இலக்கணங் கூறுகின்றது.

(ஊ) சாஸ்திரயோனித்துவாதிகரணம் (ஊ):—உலகத்துக்குக் காரணர் பரப்பிரமசிவனுர் என்பதற்குப் பிரமாணம் என்ன என, வேதாந்தசாஸ்திரங்களாலென்று கூறி, இந்தச் சாஸ்திரங்களுக்கும் கர்த்தா பரப்பிரமசிவனுர் என நிரூபணஞ் செய்கின்றது.

(எ) சமன்வயாதிகரணம் (எ):—வேதாந்த வாக்கியங்கள் தாற்பரிய லிங்கசம்பந்தத்தினுற் பரப்பிரம சிவபெருமானை உணர்த்துஞ் சாமர்த்திய முடையன என உணர்த்துகின்றது.

(டு) சுசூத்தியதிகரணம் (டு—கஉ):—சமஸ்தப் பிரபஞ்சத்துக்கும் காரணமாய சத்து என்னும் வஸ்து சேதனமாகிய சிவபரப்பிரமமாமன்றிச் சாங்கியர் கூறும் அசேதனமாகிய பிரதானம் அன்றெனக் கூறுகின்றது.

(சு) ஆனந்தமயாதிகரணம் (கங—ககூ):—பிரதானம் பிரபஞ்சத்துக்குக் காரணமாகாதவாறுபோல, சேதனனாகிய சீவான்மாவும் ஆனந்தமயனுகாமையின், அவன் அங்ஙனம் பிரபஞ்சகாரணனுகாதுபோக, சிவபெருமானே ஆனந்தமிகுதியுடைமையின் ஆனந்தமயர் என்றும், அவரே உலக காரணர் என்றும் கூறுகின்றது.

(எ) இதராதிகரணம் (களை—உ0):—பிரபஞ்சத்துக்குப் பிரதானமேனும், சீவான்மாவேனும் காரணமாகாதொழிய, சிவசமஷ்டிரூபராகிய இரண்ணியகருப்பரும் (பிரமாவும்) அங்ஙனமாகாரென்றும், அவர் சிவபெருமானுக்குக் கீழ் உள்ளார் என்றும் நிரூபிக்கின்றது.

(அ) அந்தராதிகரணம் (உக, உஉ):—பொற்சுடியோடும், பொற்கேசத்தோடும், இரு புண்டரீக விகசித நேத்திரமும் (ஒரு முகுளித நேத்திரமுமாகச்) சேர்ந்த முக்கண்களோடும், திருநகந் தொடுத்துத் திருமேனி முழுதும் பொன்வண்ணமாய், ஞாயிறு மத்தியில் சாதகர் சம்சாரநோய்க்கு ஔஷதமாய் எழுந்தருளினவர் சிவபெருமானேயன்றி நாராயணர் அன்றென்றும் உணர்த்துகின்றது.

(கூ) ஆகாசாதிகரணம் (உங)<br>(க0) பிராணுதிகரணம் (உச) :—

சிவபெருமானுக்குக் கூறிய உலகத் தோற்ற நிலை இறுதி இலக்ஷணம் (ஜடப்) பிராணுகாச முதலியவற்றுக்குச் செல்லாதென்றும், ஈண்டுக் கூறப்பட்ட பிராணுகாசம் அச்சிவபெருமானினின்று வேறுறுத பரமாகாய பரப்பிரகிருதி ரூப பராசத்தியாமென்றும் உணர்த்துகின்றது.

(கக) ஜ்யோதிராதிகரணம் (உடி—உஅ):—ஞாயிறு மண்டலமத்தியிலே உபாசிக்கற்பாலர் என நிரூபிக்கப்பட்ட அம்பிகாபதியாகிய சிவபெருமான் விசுவரூபியாகத் தியானிக்கற்பாலரென மற்றோர் உபாசனைப் பிரகாரம் உணர்த்துகின்றது.

(கஉ) இந்திராப்பிராணுதிகரணம் (உக—ஙஉ):—பரமேசுவரசோரூபமாகவும், இந்திரன், கிருஷ்ணன், வாமதேவன் முதலிய போக்தாக்கள் சரீரமாகவும், பிராணன் முதலிய போக்கியசடரூபமாகவும் உபாசிக்கலாம் என்பதுபற்றி உபாசனை மூப்பிரகாரமாகும் என்றும், இவற்றுள் முதற்கட் கூறியது காலவிளம்பமின்றியும், மற்றிரண்டும் காலவிளம்பத்தினும் முத்தி பயக்கும் என்றும் கூறுகின்றது.

## முதலாம் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(க) சர்வத்திரப்பிரசித்தாதிகரணம் (க, உ):—சிவான்மா உபாசியனல்லன்; அவன் உபாசகன் என்றுணர்த்துகின்றது.

(உ) *சாரீராதிகரணம் (ஙூ—அ):—இரண்ணியகருப்பர்க்கு உபாதானராகிய நாராயணர் உபாசகசிரேட்டர் எனவும், சிவபெருமானே உபாசியர் எனவும் கூறுகின்றது.

(ங) அத்திரதிகரணம் (கூ, கo):—சிவபெருமானே சர்வசங்கார கர்த்திருத்துவ இலக்கணமுடையர் என உணர்த்துகின்றது.

(ச) குகாதிகரணம் (ககூ, கஉ):—சிவபெருமான் இதயகுகைக்கண்ணே சிவான்மாக்களோடு எப்பொழுதும் இயைந்திருக்கின்றனர் என உணர்த்துகின்றது.

(ஞ) அந்தராதிகரணம் (கஙூ—கள):—இதயகுகையில் உபாசிக்கற்பாலராகிய சிவபெருமானுக்கு நேத்திரமும் மற்றோர் உபாசனஸ்தானம் எனக் கூறு.

(ஞ) அநவஸ்தித்தியதிகரணம் (கஅ):—உபாசனையின்பொருட்டு அங்குஷ்ட அளவினராகக் கூறப்பட்ட சிவபெருமான் பிராணக்கினிஹோத்திரத்தினல் வழிபடப்படும் பிராணரூபராய் நின்றனர் என உணர்த்துகின்றது.

(ட) அந்தரியாமியதிகரணம் (ககூ—உக):—சிவபெருமான் பிருதிவி முதலிய அணைத்தினும் வியாபித்திருக்கின்றனர் என உணர்த்துகின்றது.

(அ) அதிருசியத்துவாதிகரணம் (உஉ—உச):—சிவபெருமான் பிருதிவிமுதலியவற்றில் வியாபித்திருப்பினும், அவர் அவற்றைப்போலக் காணப்படார் என உணர்த்துகின்றது.

(க) வைசுவாநராதிகரணம் (உஞ—கூங):—சிவபெருமான் ஜாடராக்கினிரூபராகப் பிராணக்கினிஹோத்திரத்தினல் ஆராதிக்கற்பாலர் என உணர்த்துகின்றது.

## முதலாம் அத்தியாயத்து மூன்றும்பாதம்.

(க) தியுப்புவாதிகரணம் (க—சு):—சிவபெருமான் ஆகாயம் பூமிக்கு ஆதாரமாயுளர் என உணர்த்துகின்றது.

(உ) பூமாதிகரணம் (எ, அ):—சிவபெருமானே அடைதலால் எய்தும் பயன் அந்தமிலாவானந்தம் என உணர்த்துகின்றது.

---

* அநுபபத்தியதிகரணம் எனவும்படும்.

(ங) அக்ஷராதிகரணம் (ஆ—ஙக):—சிவபெருமானே அக்ஷரப்பிரமம் என்று கூறுகின்றது.

(ச) ஈக்ஷதிகர்மாதிகரணம்:(கஉ):—சிவபெருமான் பிரதியக்ஷப்பிரமாணத்தாலும், அவர் பரமகாருணிகராதலின் உபாசகர்களுக்குப் புலப்படுகின்றனர் என உணர்த்துகின்றது.

(ஞ) தகராதிகரணம் (கங—உஉ):—அவர் தகரபுண்டரீகத்தில் உள ராதலையும், அவரை உபாசிக்கும் நெறியையும் உணர்த்துகின்றது.

(ட) பிரமிதாதிகரணம் (உங, உச):—சிவபெருமான் மனதாகள உபாசித்தற்குரிய அங்குட்டரூப லிங்கவடிவினராய் இதயமத்தியில் உளர் என்றுணர்த்துகின்றது.

(ண) தேவதாதிகரணம்(உஞ—ஙஉ):—மனிதர்மாத்திரமன்றித் தேவர்களும் சிவோபாசனைக்கதிகாரமுடையர் என உணர்த்துகின்றது.

(த) அபசூத்திராதிகரணம் (ஙங—ஙசு):—பிரமவித்தைக்கு அதிகாரி யாவர் என உணர்த்துகின்றது.

(ந) கம்பாதிகரணம் (ச0):—சிவபெருமானால் யாவும் பிரவர்த்திக்கின்றன எனக் கூறுகின்றது.

(க0) ஜ்யோதிர்தர்சனாதிகரணம் (சக):—முக்தரால் எய்தப்பெறும் பரஞ்சோதிசொரூபர் சிவபெருமான் என உணர்த்துகின்றது.

(கக) அர்த்தாந்தரத்துவாதிவ்யபதேசாதிகரணம்(சஉ—சச):—ஹரிகாயசப்தவாச்சியர் சிவபெருமானன்றிச் சிவான்மா அன்றெனக் கூறுகின்றது.

## முதலாம் அத்தியாயத்து நான்காம்பாதம்.

(க) ஆநுமானிகாதிகரணம் (க—எ):—அவ்வியக்தம் என்றது சாங்கியர் கூறும் பிரதானமன்று எனக் கூறுகின்றது.

(உ) சமசவதாதிகரணம் (அ—க0):—அஜா என்றது (க0ச-ம், கஉங-ம் இலக்கங்களிற் கூறியவாறு) சித்ரூபமாகிய மாயாசக்தியன்றிச் சாங்கியர் கூறும் பிரகிருதி அன்றெனக் கூறுகின்றது.

(ங) சங்கியோபசங்கிரகாதிகரணம் (கக—கடு):—"பஞ்ச பஞ்ச ஜநாஃ" என்றது சாங்கியர் கூறும் இருபத்தைந்து தத்துவங்கள் அன்று எனவும், அவை இந்திரியங்களின்மேலவாம் எனவும் உரைக்கின்றது.

(ச). ஜகத்வாகித்துவாதிகரணம் (கசு—கஅ):—சிவபெருமான் சிவான்மாவுக்கு வேறானவர் எனவும், உலகம் அனைத்தையும் படைத்தவர் அவரே எனவும் உணர்த்துகின்றது.

(ஞ) வாக்கியாக்வயாதிகரணம் (கஙு—உஉ):—(சிவ) ஆன்மாவிலே சிவபெருமான் (பரம) ஆன்மாவாக இருத்தலின், ஆன்ம சப்தத்தினால் சிவபெருமான் கூறப்படுகின்றனர் என உணர்த்துகின்றது.

(ஞ) பிரகிருதியதிகரணம் (உங—உஅ):—சிவபெருமானே உலகத்துக்கு முதற்காரணர் என (க. க. உ)ற் கூறியதை விரித்துணர்த்துகின்றது.

(எ) சர்வவியாக்கியாகாதிகரணம் (உசு):—கன்மகாண்டத்துப் புருஷசூக்தம், சதருத்திரீயம், மந்திரப்பிராம்மணம், ஸ்மிருதி, இதிகாசபுராணமுணர்த்தும் பரப்பிரமசிவபெருமானைப் போதிப்பன என உணர்த்துகின்றது.

முதலாம அதிகரணம் நான்கு பாதங்களினும் அதிகரணம் (கூசு); சூக்கிரம் (கஙஅ).

## இரண்டாம அத்தியாயத்து முதலாம்பாதம்.

(க) ஸ்மிருதியதிகரணம் (க, உ):—சாங்கியஸ்மிருதிப் பிரகாரம் சுருதிப்பொருளைத் திரிவுபடுத்தல் கூடாதென உணர்த்துகின்றது.

(உ) யோகப்பிரத்தியுக்தியதிகரணம் (கூ):—பிரதானத்தைக் காரணமாகக் கூறும் இரண்ணியகருப்பஸ்மிருதிப் பிரகாரம் சுருதிப்பொருள் மாற்றப்படுவதன்றென்கின்றது.

(ஙு) நலிலக்ஷணத்துவாதிகரணம் (ச—எ):—காரியகாரணம் ஒன்றென்பதில் இழுக்கில்லையென்கின்றது.

(ச) அபிதியதிகரணம் (ஆ—கஉ):—பிரதானகாரணவாதந் தவிர்க்கற்பாற்றன்றி, பிரபல சுருதிப் பிரமாணசித்தமாகிய சிவப்பிரமகாரணவாதந் தவிர்க்கப்படுவதன்றென்கின்றது.

(ஞ) சிஷ்டாபரிக்கிரகாதிகரணம் (கஙு):—சாங்கியர் பிரதானகாரணவாதம் போல, கணாதர் அக்ஷபாதர் முதலாயினோர் வாதங்களும் ஒழிக்கற்பாலனவென்கின்றது.

(ஞ) போக்திராபத்திபதிகரணம் (கச):—சமஸ்த சேதனாசேதனப் பிரபஞ்சத்தைச் சரீரமாகவுடையரேனும், சுவதந்திரராய் நிஷ்களங்க மங்கல சரீரியாயுள்ள சிவபெருமானுக்குப் பரதந்திரனாய்ச் சம்சாரசரீரத்தையுடையனாயுள்ள சீவான்மாவுக்கெய்தும் தோஷமில்லை என்றுணர்த்துகின்றது.

(எ) ஆரம்பணதிகரணம் (கடு—உக):—காரணமாகிய பரப்பிரமசிவ. பிரானினின்று அகன்றியமாயுள்ளது காரியமாகிய பிரபஞ்சம் என்றும், அவர் விசுவாதிகர் என்றும் கூறுகின்றது.

(அ) உபசங்காரதர்சனாதிகரணம் (உச, உஇ):—சிவபெருமான் அனந்தசத்தியுடையர் என்று கூறுகின்றது.

(கூ) கிருத்சுனபிரசக்தியதிகரணம்(உசு—ஙக):—சர்வசக்தியினுல் எதனையும் இயற்றும் அவர்க்கு எது கூடும் கூடாதென்றில்லை; எல்லாம் அவரால் இயலும் என உணர்த்துகின்றது.

(கo) லீலாதைவல்லியாதிகரணம்(ஙஉ, ஙஙஉ):—சிவபெருமான் லீலாமாத்திரத்திஞற் சிருட்டியாதி செய்கின்றனர் என உரைக்கின்றது.

(ஙக) வைஷம்பியகார்க்கிருண்ணியாதிகரணம் (ஙச, ஙஇ):—உலகசிருட்டி செய்யும் சிவபெருமானுக்குப் பாரபக்ஷமும் இரக்கமின்மையும் இல்லை என்கின்றது.

(ஙஉ) சர்வதர்மோபபத்தியதிகரணம்(ஙசு):—பிரதானத்துக்கும், பரமாணுவுக்கும், கன்மத்துக்கும், காலமுதலியவற்றுக்கும் இயையாதனவாகிய குணமஹத்துஞ் சிவபெருமானுக்கே இயைவன; ஆகலின், இவரே உலகசிருட்டி முதலியவற்றுக்குக் காரணர் எனக் கூறுகின்றது.

## இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம்பாதம்.

(க) இரசனாநுபபத்தியதிகரணம் (க—சு):—பிரதான காரணவாதம் நிஷ்பிரமாணமூடைத்தென நிரூபிக்கின்றது.

(உ) மகத்தீர்க்காதிகரணம்(கo—கசு):—பரமாணுகாரணவாதவைசேஷிகமதத்தை நிரசனஞ் செய்கின்றது.

(ங) சமுதாயாதிகரணம் (கஎ—உச):—வேதபாகிய பௌத்தமதத்தை நிர்காரிக்கின்றது.

(ச) நிருஷ்டத்துவாதிகரணம்(உஇ, உசு):—ஞானஜேமயவாதத்தை மறுக்கின்றது.

(ஞ) உபலப்தியதிகரணம் (உஎ—உசு):—விஞ்ஞானமாத்திர வாதத்தை நிராகரிக்கின்றது.

(ஃ) சர்வதாநுபபத்தியதிகரணம்(ஙo):—சர்வசூனியவாதத்தை மறுக்கின்றது.

(எ) ஏகஸ்மிந்நசம்பவாதிகரணம்(ஙக—ஙச):—சைனமதத்தை நிராகரிக்கின்றது.

(அ) [illegible]கரணம்(க.கூ—கூ.அ):—நிமித்தகாரணவாதம் கூறும் ஈசுவரதத்துவத்தை நிரசனஞ் செய்கின்றது.

(கூ) பாஞ்சராத்திராதிகரணம்(கூக—சஉ):—பாஞ்சராத்திரமதத்தை நிராகரிக்கின்றது.

## இரண்டாம் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

(க) வியததிகரணம் (க—எ):—ஆகாயத்துக்கு உற்பத்தி உண்டென்கின்றது.

(உ) மாதரிச்சுவாதிகரணம் (அ):—வாயுவுக்கு உற்பத்தி உண்டென்கின்றது.

(கூ) அசம்பவாதிகரணம் (கூ):—பரப்பிரமசிவபிரானுக்குப் பிறப்பில்லை, மற்றெல்லாவற்றுக்கும் அப்பிறப்பு உண்டென்கின்றது.

(ச) தேஜோதிகரணம் (கo—கச):—சிவபிரான் தேயுமுதலிய அனைத்துக்குங் காரணர் என்று கூறுகின்றது.

(ஞ) பாரம்பரியாதிகரணம் (கஞ, கசு):—எல்லாம் சிவதத்துவத்தினின்றுமுற்பத்தியாகின்றமையின், சர்வகாரணர் சிவபெருமான் என்கின்றது.

(சு) சராசரவியபாசிரயாதிகரணம் (கள):—சராசரசரீரங்களோப் பிரவேசித்த சிவபெருமான் அவ்வம் மொழிகளால் உரைக்கப்படுதல் முக்கியம் எனக் கூறுகின்றது.

(எ) ஆன்மசருத்தியதிகரணம் (கஅ):—சீவான்மா சிவபெருமானினின்று உற்பத்தியாகவில்லை என உணர்த்துகின்றது.

(அ) ஞாதிகரணம் (கசு):—சம்சாரத்தில் சீவான்மா ஞஞ்ஞஞ்ஞன்; முத்தியில் அவன் சர்வஞ்ஞன்; ஆகலின், ஆன்மா ஞாதா எனக் கூறுகின்றது.

(கூ) உற்கிராந்தியதிகரணம் (உo—கூஉ):—உற்கிராந்தியிற் போக்கு மீட்சியுண்மையின், சீவான்மாவுக்கு அணுத்தவம் உண்டென்கின்றது.

(கo) கர்த்திரதிகரணம் (கூக—கூக):—சீவான்மாவுக்குச் சுவகாரியத்திற் கர்த்தினுத்துவமுண்டென்றும், அது புத்திக்கேனும் பிரகிருதிக்கேனும் இல்லை என்றும் உணர்த்துகின்றது.

(கக) பரான்மத்தாதிகரணம் (சo, சக):—சீவான்மாவுக்குச் சுவாதினப் பிரவிருத்தியுண்மையின், விஷ்ணு முதலிய வியர்த்தமாகா என்கின்றது.

* பத்தியுபசாமஞ்சஸ்யாதிகரணம் எனவும் பெயர்.

(கஉ) அம்சாதிகரணம் (சஉ—டுஉ):—சிவான்மாவை அம்சம் என்று ரைக்கின்றது.

## இரண்டாம் அத்தியாயத்து நான்காம் பாதம். (ச)

(க) பிராணேற்பத்தியதிகரணம் (க—கூ):—பிராணசப்தம் இந்திரியங்களைக் குறிக்காதென்கின்றது.

(உ) சப்தகத்தியதிகரணம் (ச, ஞ):—இந்திரியங்கள் பதினொன்று என்கின்றது.

(ஊ) பிராணணுத்துவாதிகரணம் (சு):—இந்திரியங்கள் அணுக்கள் என்கின்றது.

(ச) சிரைஷ்டியாதிகரணம் (எ—கக):—பிராணவாயு சிவான்மாவுக்கு உபகாரமாயதென்கின்றது.

(ஞ) பிராணணுத்துவாதிகரணம் (கஉ):—பிராணனை அணு என்கின்றது.

(சு) ஜ்யோதிராதியதிஷ்டாநாதிகரணம் (கஊ, கச):— இந்திரியங்களுக்கு மேலாகிய சூரியாதிகளுடையவும் சிவான்மாவுடையவும் அதிஷ்டானம் சிவபெருமான் வசத்ததென்கின்றது.

(எ) இந்திரியாதிகரணம் (கஞ, கசு):—இந்திரியங்கள் பிராணனிருந்தியினின்று வேறென்கின்றது.

(அ) சம்ஞாமூர்த்திகிலுப்தியதிகரணம் (கஎ—ககூ):—முந்திறப்படத்துஞ் சிவபெருமான், நான்முகப்பிரமாவாகி நாமரூபங்களைச் சிருட்டித்தனர் எனக் கூறுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்து நான்கு பாதங்களிலும் அதிகரணம் (சக); சூத்திரம் (கசசூ).

## மூன்றும் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ததர்தரப்பிரதிபத்தியதிகரணம் (க—எ):—சிவான்மா பிறிதோர் சரீரம் எடுக்குங்காற் சூக்குமசரீரத்தோடு செல்கின்றதென்கின்றது.

(உ) கிருதாத்தியயாதிகரணம் (அ—ஙக):—சிவான்மா சுவர்க்கத்திருந்து கன்மசேடத்தோடு மீளுகின்றன் என உணர்த்துகின்றது.

(ஊ) அதிஷ்டாதிகாரியாதிகரணம் (கஉ—உக):—பாவிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர் என்கின்றது.

(ச) தத்சஸாபாஸ்யாபத்தியதிகரணம் (உஉ):—சீவான்மா சுவர்க்கத் திருத்து மீளுங்கால் ஆகாயமுதலிய போல் வருகின்றான் என்கின்றது.

(டு) சாதிராதிகரணம் (உசு):—சீவான்மா நென்முதலிய தானியத் திலே தாமசமாயும், ஆகாயமுதலியவற்றிலே தாமசமின்றியும் வருகின் றான் எனக் கூறுகின்றது.

(சு) அந்தியாதிஷ்டிதாதிகரணம் (உச—உள):—சீவான்மா ரேதசிற் சம்பந்தமாத்திரமுறுகின்றான் எனக் கூறுகின்றது.

## மூன்றும் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(க) சந்தியாதிகரணம் (க—சு):—சிவபெருமானுலே சொப்பன சிருட்டி எய்துவதென்கின்றது.

(உ) நதபாவாதிகரணம் (எ, அ):—சீவான்மா நாடிவாயிலாகச் சென் று சிவப்பிரமத்திலே தயில்கின்றனென்கின்றது.

(ங) கர்மாநுஸ்மிருத்தியதிகரணம் (சூ):—முதற்கண் நித்திரைக்குப் போந்தவனே மீண்டும் விழிக்கின்றான் என்கின்றது.

(ச) முக்தாதிகரணம் (கo):—மூர்ச்சை சுழுப்திக்கு வேறுபடதென்கின் றது.

(டு) உபபலிங்காதிகரணம் (கக—உo):—சத்தியம் ஞானம் அனந்தம் என உடன்பாட்டானும், நிர்க்குணம், நிஷ்களம், ஸ்தூலமன்று, அணுவன்று என்றற்றொடக்கத்தனவாக எதிர்மறைமுகத்தானுங் கூறப்படும் இரு இலக்ஷ ணகுணமுடையர் சிவபெருமான் என உரைக்கின்றது.

(சு) பிரகிருஷ்டதாவத்துவாதிகரணம் (உக—உசு):—சிவபெருமா னுக்கு விகார அஜ்ஞான முதலிய அபுருஷார்த்தமொன்றுமின்றிச் சர்வஜ் ஞதாதி பரமபுருஷார்த்த குணங்கள் உண்டென்கின்றது.

(எ) பராதிகரணம் (ஙo—ஙச):—சிவபெருமானுக்கு மேலாயினர் யாதுமில்லை என்கின்றது.

(அ) அந்தியப்பிரதிஷேதாதிகரணம்(ஙடு, ஙசு):—சிவபெருமானுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்கின்றது.

(சு) பலாதிகரணம் (ஙஎ—சo):—சகல தேவதாரூபராய், சமஸ்த கன்மங்களினல் வழிபடற்பாலராயுள்ள சிவபெருமானே பலதாதா என் றுரைக்கின்றது.

## மூன்றும் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

(க) சர்வவேதாந்தப்பிரத்தியயாதிகரணம் (க—ச):—(முக்கிய) உபநிடதமனைத்தினும் விதிக்கப்பட்ட உபாசனை ஒன்றென்கின்றது.

(உ) உபசங்காராதிகரணம் (ஞ):—வெவ்வேறு சாகைகளிற் கூறப்பட்ட சிவனுர் குணங்கள் தகராதி உபாசனைகளில் உபசங்கரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(ஙு) அங்கியதாத்துவாதிகரணம் (சு—அ):—சாந்தோக்கிய பிருகதாரணியங்களிற் கூறப்பட்ட உற்கீதவித்தைகள் பெயரினால் ஒற்றுமையுடையவேனும், உபாசனையினற் பேதமுறுகின்றன எனக் கூறுகின்றது.

(ச) வியாப்தியதிகரணம் (கூ):—பிரணவமே உபாசிக்கற்பாற்றென்கின்றது.

(ஞ) சர்வாபேதாதிகரணம் (கo):—பிராணோபாசனையில் ஐசுவரியாதி குணங்கள் உபசங்கரிக்கற்பாலன வென்கின்றது.

(சு) ஆநந்தாதியதிகரணம் (கக):—குணியாகிய சிவப்பிரமம் யாண்டும் அபேதமாகலின், ஆனந்தாதி குணங்கள் உபசங்கரிக்கப்படல்வேண்டும் என உரைக்கின்றது.

(எ) பிரியசிரஸ்துவாதிகரணம் (கஉ, கஙு):—பிரியசிரஸ்துவாதி குணங்கள் சிவோபாசனையில் உபசங்கரிக்கற்பாலன அன்றென்கின்றது.

(அ) ஆத்தியானாதிகரணம் (கச—கஎ):—அன்னமயமுதலிய அதிசந்தானஞ் செயற்பாலன அன்றென்றும், சிவனை யொழிந்த பிறரை உபாசிக்கும் உபாசனைகள் சிவத்துவத்தைக் கொடுக்கமாட்டாவென்றும் கூறுகின்றது.

(கூ) காரியாக்கியாதிகரணம் (கஅ):—பிராணனுக்கு மாசங்கத்துவம் கோடற்பாற்றென்கின்றது.

(கo) சமாகாதிகரணம் (கக):—வசித்துவாதிகுணங்கள் சத்தியசங்கற்பத்துவாதிகுணங்களினின்று பேதமுறுவன அன்றென்கின்றது.

(கக) சம்பந்தாதிகரணம் (கo, உச):—ஆதித்தியன் கண் என்றும் ஸ்தான சம்பந்தமாக உபாசனை பேதமுறுதலின், வித்தைகள் ஒன்றன்றென்கின்றது.

(கஉ) தார்சயதியதிகரணம் (உஉ):—சாந்தோக்கியத்திலும் தைத்

தீயத்தினும் கூறப்பட்ட மண்டலவித்தை ஒன்றுமாதலின், உபாஸ்தித்து வாழ்நாள் குணங்கள் எங்கும் உபசங்ஹரிக்கற்பாலன என்கின்றது.

(கக) சம்பிருதியதிகரணம் (உக):—வைசுவாநராதி உபாசனைகளில் ஆகாயவியர்பகமும் மகாவீரியச்செய்கைகளும் உபசங்கரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(கச) புருஷவித்தியாதிகரணம் (உச):—சாந்தோக்கியத்தினும் தைத்தீயத்தினும் கூறப்பட்ட புருஷவித்தைகள் பல்லத்தினும், அவயவங்களினும் பேதமுறலான் இரண்டும் ஒன்றன்றெனக் கூறுகின்றது.

(கஞ) வேதாத்தியதிகரணம் (உஞ):—"உண்மைபேசவேண்" என் றற்றொடக்கத்த தைத்தீயமந்திரங்கள் வித்தியாங்கங்கள் அன்று எனக் கூறுகின்றது.

(கசு) ஹாநியதிகரணம் (உசு):—வித்துவான் செய்யும் புண்ணிய பாவங்கள் முறையே மித்திரர் சத்துருக்களை அடையுமென்றுரைக்கின்றது.

(கள) சாம்பராயாதிகரணம்(உள—ஊ0):—சமஸ்த கன்மங்களினின்று நீங்கிய யோகிகள் விஷ்ணுபதத்தைக் கடந்து, பரமானந்தமய சிவபதத்தைப் பிரவேசிக்கின்றனர் எனக் கூறுகின்றது.

(கஎ) அதிகாரிகாதிகரணம் (ஊக):—ஞானிகளுக்கும் பிராரப்தகன் மம் அநுபவித்த பின் நசிக்கின்றதென்றும், ஆகலின் அதிகாரிகளும் அதி காரம் நீங்கிப் பின்னர்த்தான் முத்தியடைகின்றனர் என்றும் உணர்த்துகின் றது.

(கஙு) அநியமாதிகரணம் (ஊஉ):—உபகோசலாதி வித்தைகளை உபா சிப்பவர்க்கு அர்ச்சிராதிகதி நியமமாய் உண்டென்கின்றது.

(உ0) அக்ஷரதியதிகரணம் (ஊங, ஊச):—அக்ஷரப்பிரம சம்பந்தமா கக் கூறப்பட்ட அன்னவத்துவமுதலிய குணங்கள் பரவித்தியோபாசனைக ளில் உபசங்ரிக்கற்பாலன என்று கூறுகின்றது.

(உச) அந்தராபூதக்ராமாதிகரணம் (ஊஞ, ஊசு):—உஷஸ்துவித் தைக்கும் சுகோஷவித்தைக்கும் பேதமில்லை என்கின்றது.

(உஞ) சத்தியாதியதிகரணம் (ஊள):—சத்திய முதலிய குணங்கள் ஆதித்தியாதிப் காணப்படுகின்றனவாயின், சத்வித்தையிற் பேதமில்லை என் கின்றது.

(உக) காமாதியதிகரணம் (கூஅ):—சாண்டோக்கியம், பிருகதாரணியம், தைத்திரீயம், கைவல்லியம் என்னும் உபநிடதங்களிற் கூறப்பட்ட நகரவித்தை ஒன்றேயெனக் கூறுகின்றது.

(உச) அலோபாதிகரணம் (கூக):—விசேஷகுணங்கள் சிவப்பிரமத்தினின்று ஓர்காலும் நீங்கா என்கின்றது.

(உஙி) தத்வசஙாதிகரணம் (ச0):—முக்தரால் அடையப்படும் சிவப்பிரமம் சகுணப்பிரமமென்கின்றது.

(உசு) தங்நிர்த்தாரணநியமாதிகரணம் (சக):—யஞ்ஞகன்மங்களில் உபாசனைகள் நியமம் இல்லை என்கின்றது.

(உஎ) பிரதாகாதிகரணம் (சஉ):—சிவபெருமான் ஒருவரேயெனினும், வெவ்வேறு குணங்கள்பற்றி உபாசனை பேதமுறும் என்கின்றது.

(உஅ) லிங்கபலீயஸ்துவாதிகரணம் (சகூ):—வித்தைகள் அனைத்தினும் உமையோடிசைந்த பரவஸ்துவானது உபாசிக்கற்பாற்றெனக் கூறுகின்றது.

(உசூ) பூருவவிகற்பாதிகரணம் (சச—டி0):—அக்கினிரகசியப்பிராம்மணத்திலே, அக்கினிகள் ஞானயஞ்ஞத்துக்கு அங்கமாகின்றன என உரைக்கின்றது.

(கூ0) சரீரேபாவாதிகரணம் (டிக, டிஉ):—சிவபெருமானைத் தியானேத்திராகத் தியானித்தலில் யாதும் விரோதமின்றெனக் கூறுகின்றது.

(கூக) அங்காவபத்தாதிகரணம் (டிகூ, டிச):—உபாசகர் அனைவரானும் விபூதி தரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(கூஉ) கிரதுவச்சியாயஸ்துவாதிகரணம் (டிடி):—வைகவாகாலித்தை அம்சமாகவன்று, சமஸ்தமாகவே உபாசிக்கற்பாற்றென்கின்றது.

(கூகூ) நாநாசப்தாத்தியதிகரணம் (டிசு):—உபாசனை அனைத்தையும் ஒருங்கு அதட்டித்தல் கூடாதென்று கூறுகின்றது.

(கூச) விகற்பாதிகரணம் (டிஎ):—உபாசகனுக்குப் பல உபாசனைகளுள் ஒன்றே அமையும் என்கின்றது.

(கூஙி) யதாசாமாதிகரணம் (டிஅ):—காம்யவலங்களை உத்தேசித்த உபாசனைகளுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் உபாசிக்கலாம் என்றுரைக்கின்றது.

(கூசு) பதாரியபர்வாதிகரணம் (நிக—கச):—உபாசனைகள் யஞ்ஞ கன்மங்களுக்கு வேண்டும் என்னும் நியமமில்லை என்கின்றது.

## மூன்றும் அத்தியாயத்து நான்காம் பாதம்.

(க) புருஷார்த்தாதிகரணம் (க—கஎ):—பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம் என ஆச்சிரமங்கள் மூன்றுளவென்றும், பலத்தை நோக்காத விதிதகன்மங்களே அங்குமாகக்கொண்டது புருஷார்த்தமாகிய ஞானம் என்றும் கூறுகின்றது.

(உ) பராமர்சாதிகரணம் (கஅ—உ0):—ஆச்சிரமதருமமனைத்தும் சித்தித்தவென்று உணர்த்துகின்றது.

(ரு) ஸ்துதிமாத்திராதிகரணம் (உக, உஉ):—உற்கீத முதலியவற்றின் தியானத்துக்கு விதியுண்டென்கின்றது.

(ச) பாரிப்பிலவாதிகரணம் (உரு, உச):—உபநிடதங்களில் கோரும் கதைகள் உபாசனவிதிகளோடிசைந்து, அவைகளைத் துதிக்கும் பொருட்டேயுள்ளன என்கின்றது.

(ஞ) அக்நீந்தனாத்தியதிகரணம் (உஞ):—ஆச்சிரமத்துக்குரிய தருமங்களைச் செய்வதில் அபேக்ஷையுடையது வித்தை என்கின்றது.

(ஃ) சர்வாபேக்ஷாதிகரணம் (உஃ):—ஆச்சிரமிகள் அனைவர்க்கும் அந்தந்த ஆச்சிரமத்துக்குரிய கன்மங்களோடு வித்தை சேர்ந்திருத்தல் வேண்டும் என்கின்றது.

(எ) சமதமாத்தியதிகரணம் (உஎ):—விவேகமுதல் மோக்ஷவிச்சை பரியந்தமுள்ள பரதர்மங்களெல்லாம் வித்தையை விரும்பும் ஆச்சிரமிகள் அனைவராலும் அநுட்டிக்கற்பாலனவென்கின்றது.

(அ) சர்வான்நாநுமத்தியதிகரணம் (உஅ—ஙக):—பிராணனுக்குச் சம்சயம் நேருமிடத்து, வித்துவான் சர்வான்னம் புசிக்க அநுமதியுண்டு என்றும், அஃதொழிந்தகாலத்தில் நிஷித்தாசரணஞ் செய்யில் சிவாஞ்ஞாத்துரோகியாவான் என்றும் கூறுகின்றது.

(க) ஆச்சிரமகர்மாதிகரணம்(ஙஉ—ஙஇ):—வித்தைக்கு இசைவாகிய தன்மாநஷ்டான்கர்மியத்தை உணர்த்துகின்றது.

(க0) அந்தராதிகரணம் (ஙசு—ஙக):—ஆபத்து விஷயங்களில் ஆச்சிரமில்லாதோர்க்கும் செபமுதலியவற்றால் ஞானம் எய்துகின்றதென்கின்றது.

(கக) தத்பூதாதிகரணம் (சஎ—ஈக):—உயர்ந்த ஆச்சிரமங்களினின்று வழுவினோர்க்குப் பிராயச்சித்தாதியினால் சித்தியாதிசயமின்மென்கின்றது.

(கஉ) சுவாமியதிகரணம் (சஉ, சஅ):—இருத்விக்குக்களினாற் செய்யப்பட்ட கன்மபலம் யஜமானனுக்குச் சேர்கின்றதென்கின்றது.

(கங) சககாரியந்தரவித்தியதிகரணம் (சக):—வித்தையுடையானுக்கு மவனவித்தி சேர்கின்றதென்கின்றது.

(கச) இருத்தினபாவாதிகரணம் (சள):—ஆச்சிரமிகளனைவர்க்கும் ஞானம் உண்டென்கின்றது.

(கஞ) பாசுபதவிரதாதிகரணம் (சஎ, சக):—பாசுபதவிரதம் சிவப்பிரசாதத்தைப் பாலிக்கின்றதென்கின்றது.

(கசு) ஐகிகாதிகரணம் (ஞ0):—இப்பிறப்பிலே வீடுபேறு எய்தவேண்டும் என்னும் நியமமில்லை என்கின்றது.

(கள) முக்திபலாநியமாதிகரணம் (ஞக):—யஞ்ஞகன்மங்களிற் பேதம் மூளதாதல் போல, ஞானபலனுக எய்தும் மோகூபலத்திற் பேதமில்லை என்கின்றது.

மூன்றும் அத்தியாயத்து நான்கு பாதங்களினும் அதிகரணம் (சுஅ); சூத்திரம் (கஅஉ).

## நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ஆவிருத்தியதிகரணம் (க, உ):—சிவோபாசனை பலோதயம் வரையும் ஆவிருத்தி செயற்பாற்றென்கின்றது.

(உ) ஆத்துமாதிகரணம் (ங):—சிவோபாசனை உபாசகனுக்கு முக்தி பாலிக்கின்றதெனக் கூறுகின்றது.

(ங) பிரதிகாதிகரணம் (ச):—சிவபெருமான் குறியிற் சாக்ஷாத்தாக உபாசியாகார் என்கின்றது.

(ச) பிரம்மதிருஷ்டியதிகரணம் (ஞ):—விசுவாதியமாகிய சிவதிருஷ்டி பினலே மனமுதலியவற்றுக்கும் உபாசியத்துவம் உண்டென்கின்றது.

(ஞ) ஆதித்தியாதிமத்தியதிகரணம் (ண):—ஒன்றே முதலிய சங்மாணிகங்கள் ஆதித்தியன் முதலியோராக உபாசிக்கற்பாலன என்கின்றது.

(சு) ஆசிராதிகரணம் (எ—க0):—ஒருவன் இருந்தே சிவபிராணைத் தியானித்தல் வேண்டும் என்கின்றது.

(எ) யத்திரைகாக்கிரதாதிகரணம் (கக):—ஏகாக்கிரசித்தத்தைமாத்திரம் சாதகஞ் செய்யும் தியானரூபமாயுள்ள உபாசனைக்குத் திக்தேசகாலநியமமின்றென்கின்றது.

(அ) ஆப்பிராயணாதிகரணம் (கஉ):—சிவபரியந்தஞ் சிவோபாசனை இடையீடின்றி அப்பியசித்தல் வேண்டும் என்றும், அதனை இடையில் விடுதல் கூடாதென்றும் கூறுகின்றது.

(ஙு) தததிகமாதிகரணம் (கங):—உபாசகர் விஷயத்திற் சகல பாவகன்மமும் ஒழிந்துபோம் எனவும், பாவப்பயன் துய்க்கப்படாது தொலியாதென்றது அஞ்ஞானிக்காம் எனவும் கூறுகின்றது.

(க0) இதராசிலேஷாதிகரணம் (கச):—வித்துவானுடைய புண்ணியமும் முத்திக்கு விரோதமாய் விரும்பாத பலத்தையுடைமையான், அவனை அது பற்றாது நாசமுறும் என்கின்றது.

(கக) அகாரப்தகாரியாதிகரணம் (கஞ):—பேற்றைக் கொடுக்கமுயன்ற பிராரப்த புண்ணிய பாவத்துக்கு நாசமின்றெனக் கூறுகின்றது.

(கஉ) அக்கினிஹோத்திராதிகரணம் (கசு—கஅ):—அக்கினிகோத்திரமுதலிய அநுட்டிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(கங) இதரக்ஷபணாதிகரணம் (கசு):—சென்னமரணம் வித்தியாலோபத்துக்கு ஏதுவாயிராதென்கின்றது.

## நான்காம் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(க) வாக்சம்பத்தியதிகரணம் (க, உ):—வாக்காதிகளின் லயம் விருத்திலயம் என்ப்படும் என்கின்றது.

(உ) மனஸ்சம்பத்தியதிகரணம் (சு):—மனசு பிராணனிலே விருத்திலயம் எய்தும் என்கின்றது.

(சு) பிராணசம்பத்தியதிகரணம் (ச—சு):—சீவான்மாவோடு கூடப் பிராண்கள் பூதங்களில் இயைகின்றவென்கின்றது.

(ச) அவிருத்தியுபக்கிரமாதிகரணம் (எ):—அர்ச்சிராதிமார்க்கத் தொடக்கத்துக்குமுன் வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் உற்கிராந்தி சமம் என்கின்றது.

(இ) சதாபீத்தியதிகரணம் (அ—கக):—அர்ச்சிராதி வித்துவானுடைய உற்கிராந்தி செய்யும் ஆன்மாவுக்கு இயைந்ததென்கின்றது.

(ஈ) பரமசம்பத்தியதிகரணம் (கச, கஇ):—சம்பத்திவசனத்தினாற் சிவப்பிரகாசத்திலே பூதங்கள் பிரிக்கப்படாதிருக்கின்றன என்கின்றது.

(எ) தபோகோக்கிராதிகரணம் (கசு):—அவித்துவானுக்கும் வித்துவானுக்குமுள்ள கதி பேதமென்கின்றது.

(அ) இரச்சுமியநுசாரியதிகரணம் (கள—உ0):—எப்பிரகாரத்தானும் வித்துவானுக்குச் சிவப்பிராப்தியிலே இரவு, தக்ஷிணாயனம், கிருஷ்ணபக்ஷம் என்னும் நிஷேதமின்றெனவும், எப்போது தேகம் நீங்குமோ அப்போதே சிவப்பிராப்தி உண்டெனவும் உணர்த்துகின்றது.

## நான்காம் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

(க) அர்ச்சிராதியதிகரணம் (க):—சிவப்பிராப்தி ஒளிமார்க்கத்தினால் எய்தும் என்கின்றது.

(உ) வாயுவதிகரணம் (உ):—வருஷத்துக்குப் பின்னும் ஆதித்தியனுக்கு முன்னும் வாயு வைக்கற்பாலன் என்கின்றது.

(ங) தடிததிகரணம் (ங):—வருணாதியர் அர்ச்சிராதிமார்க்கத்தில் வைத்தற்குரியர் என்கின்றது.

(ச) ஆதிவாகிகாதிகரணம் (ச, ஞ):—வருணன் முதலியோர் அதுக்கிரகம் பண்ணுவது காரணமாகப் பிரமத்தை அடைவிக்கின்றனர் என்கின்றது.

(ஞ) காரியாதிகரணம் (சு—கஞ):—அறிவித்த அத்துவாவையும் கடந்த பதமானது விசுவாதிகராகிய சிவனுர்க்கே பொருத்தம் என்கின்றது.

## நான்காம் அத்தியாயத்து நான்காம் பாதம்.

(க) சம்பத்தியாவிர்ப்பாவாதிகரணம் (க—ங):—அபகதபாப்மத்துவாதி குணங்கள் ஆவிர்ப்பவிக்கப்பெற்ற முத்தன் சிவசாமியகுணசொரூபனுகின்றுன் என்கின்றது.

(உ) அவிபாகேநதிருஷ்டத்துவாதிகரணம் (உ):—முத்தனுக்குச் சிவசாமியம் உண்டென்கின்றது.

(கூ) பிராம்மாதிகரணம்(டு—எ):—சிவசாமியமாதலே முக்தனுடைய சொரூபம் என்கின்றது.

(ச) சங்கற்பாதியதிகரணம் (அ, கூ):—சிவசாமியமுற்ற முக்தனுக்குச் சுவாதந்திரியம் யுக்தம் எனக் கூறுகின்றது.

(டு) அபாவாதிகரணம் (கo—கச):—பரமானந்தத்திற் பிரவேசித்த முக்தர்களுக்குத் தக்கத்தொடர்ச்சி இன்றென்கின்றது.

(சு) பிரதீபவதாவேசாதிகரணம் (கடு, கசு):— முக்தியில் ஞானமுதலிய நிஷேதிக்கப்படுதல் இன்றெனக் கூறுகின்றது.

(எ) ஜகத்வியாபாராதிகரணம் (கள—உஉ):—முக்தனுக்கு ஜகத்சிருட்டியாதி வியாபாரம் இன்றெனக் கூறுகின்றது.

நான்காம் அத்தியாயத்து நான்கு பாதங்களிலும் அதிகரணம் (ருரு); சூத்திரம் (எசு).

நான்கு அத்தியாயத்துப் பதினாறு பாதங்களிலும் அதிகரணம் (கஅக); சூத்திரம் (டுசடு).

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீவேதவியாசமுனிவரருளிய பிரமசூத்திரத்துக்கு

# ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்

இயற்றியருளிய

# சிவாத்துவித சைவபாடியப்

## பிராரம்பம்.

—o—

நமஸ்காரம்*

ஓஹோ zஹம்† வடிஷ்டாய ஸொகா நாம வலிலிஹெ தவெ
வஷ்டி நமஷ்ரு ஷிவாய ஸிவாய வாஸோ தூநெ ॥ க ॥

(இதன் பொருள்) ஓங்காரப்பொருளாயும், சத்திவிசிட்டப்பொருளாயும், (சிவசாகூபாத்காரமுடைய) உலகினர்க்குச் சித்திமுத்திகளைக் கொடுத்தற்குக் காரணப்பொருளாயும், சச்சிதானந்தப்பொருளாயும் உள்ள சிவபெருமானும் பரமான்மாவுக்கு நமஸ்காரம்.

‡ ஸ்ரீவேதவியாசமுனிவர் அருளிய பிரமசூத்திரரூபமாயுள்ள வேதாந்த மீமாஞ்சாசாஸ்திரத்துக்கு, ††உலகினர்பொருட்டுப் பாடியஞ் செய்கின்ற ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் இடையறுச் சிவத்தியானத்திலே தமக்கு இடையூறு சிறிதும் அணுகப்பெறாராயினும், ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டுத் தமது வழிபடுகடவுளாகிய சிவபெருமானைத் துதிப்பாராயினர்.

---

* நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம், ஆசி என மங்கலவாழ்த்து மூவகைப்படும். இவற்றைத் தமிழ்நூலார் முறையே வணக்கம், பொருளியல்புரைத்தல், வாழ்த்து என்பர்; இப்பாடியகாரர் மூவகை மங்கல வாழ்த்தையும் முறையே மூன்று சுலோகங்களினுங் கூறுவாராயினர்.

† ஸஹஸ்ரவடவ்யாஸ்ரு ஹ்ரீ தஸ்ரஜ்ரூ ஸ்ரா வாஸ்ரோஃ

(கைலா. சத. கூஅ)

"அகம் பதத்தின் அர்த்தம் சத்தியோடியைந்த சிவபெருமான்."

‡ சிவார்க்கமணிதீபிகையிலிருந்து எடுத்தாளப்பட்டவையாகிய சில குறிப்புகள்.

†† உயர்ந்தோர்.

மகோபநிடதத்துள்ள தகராவித்தியா சம்பந்தமாகிய "இருதம் சத்தி யம் பரம்பிரமம்" என்னும் மந்திரத்தை மீட்டும்மீட்டும் இச்சைவ பாஷ்யத் தில் எடுத்தாளுகின்றனராதலின், இப்பாஷ்ய கர்த்தாவாகிய சிவாசாரியர் தகராவித்தியா நிஷ்டர். "காமாதியதிகரண" த்தினும் (கூ. கூ. கூ அ) தாமே தகராவித்தையின்மேற் கொண்ட பிரியத்தினுற் பராவித்தைகள் அனைத்தினும் *தகராவித்தையே உத்தரிஷ்டமுடைத்தென்று கூறுகின்றனர்.

பரமான்மா:— தமது சாகையிலே கூறப்பட்ட தகராவித்தையில் உபா சிக்கற்பாலரும், நமஸ்கரிக்கற்பாலருமாய மெய்ப்பொருளைப் பரமான்மா என்னும் விசேஷார்த்த மொழியினல் சண்டு விதந்தருளினர்.

[illegible] (முகா. கக. கூ)

"அந்தச் சைகையின் மத்தியிலே பரமான்மா உளர்" என்று தைத்திரீயத்திற் கூறப்படுகின்றது.

சிவாய:—சிலர் சிவபெருமானுக்கு வேருயுள்ளவர் அந்தப் பரமான்மா என்று கூறிப் பிறரை மயங்கவைக்கின்றனர். அதனற் சாதுக்கள் மயங்கற்க என்றுணர்த்தச் சிவாய என்னும் மொழி பரமான்மாவை விசேடித்து நின் றது. தகராவித்தியோபாசியராகிய பரமான்மாவானவர் சிவபெருமானே என்று சிவாசாரியர் "சாரீராதிகரண" த்தில் (க. உ. கூ—அ) மிகு நிபுண மாய்ச் சாதிக்கின்றனர். அங்ஙனமாயினும், தைத்திரீயத்திற் போற்றப்பட்ட பரமான்மா என்னும் சப்தத்தை விசேடித்துக் கூறும்பொருட்டு, உபக்கிர மத்திலே,

யாதஃ வாஸாஃ நதிஃ ஸ்யந்தந்தே ஸிஸ்ரு (முகா. அ. கூ)

"சிவப்பிரசாதத்தினுலே (சர்வஞ்ஞதை எனப்படும்) மகிமைக்குணத்தை யுடைய ஈசனை" என்றும், உபசங்காரத்திலே

ஸ்வாபிஸோ ரூபெரா ஜ்ஞாநஸி-ஃ (மகா. கம். கூ.)

"ஸ்வாதிகாரியை உருத்திரர் மகா இருடி" என்றும், உபக்கிரமத்திலே

யஃ வாஸ்ஸ ஜ்ஞாஸ்ஸாஃ (மகா. கம். அ)

"எவர் மேலானவரோ, அவர் மகேசுவரர்" என்றும், உபசங்காரத்திலே

உஸ்ஸ-ரெஃ வீர-ஜ்ஞாகூடி (மகா. கம. க)

* இது தகராகாய தெம்பரத்தின் மேற்று.

"ஊர்த்துவரேதோமுகமூர்த்தாய விருபாகூர்" என்றும் (உபக்ரமம் உபசங்காரங்களில்) கூறப்பட்ட ஈசர், உருத்திரர், மகேசுவரர், விருபாகூர் என்னும் நாமங்களுள் ஒன்றை எடுத்தாளுதல் யுக்திமேபாக,

ஸயேயத்தி யஹிதஞ் ஸவ-ர்ஹஸ-ர்ர நர ஈவஜ்ரஹ்ழ்|
ஸிவ ஹிஜ்ஜ்ஞ-ஷ்யாணா தஸ்ரஷ்டிவஸ்ரிவ் வ்ரூதஃ|
(ம. தி. உ0கூ. கஉகூ)

"மனிதர்க்கு இன்பஞ் செய்ய விரும்பி எப்பொருள்களுக்கும் நித்திய மாய் உபக்கிரமமாயுள்ளதை விருத்தி செய்தலினால், அந்த (மகா) தேவர் சிவன் எனப்படுவர்" என்னும் சுலோகம் "மனிதர்க்கு இன்பஞ் செய்ய விரும்பி" எனப் புருஷார்த்தத்துக்கு உபயோகமாய சமஸ்த முயற்சியை யும் விருத்தி செய்து, பிரவிருத்தி செய்தற்குச் சிவபெருமானே காரணர் என்று வியாக்கியானஞ் செய்கின்றமையான், மாணவர்கள் சிவாமசங்கீர்த் தனஞ் செய்து அதன் பொருளை அறிதல் வாயிலாக, ஆரம்பித்த இத்தச் சைவபாஷ்யபாடம் சிவப்பிரசாதத்தினால் இடையூறின்றி இனிது முற்றப் பெற்று, அவர்கள் விரும்பிய சகல புருஷார்த்தமும் சித்தியாகுக என உணர்த்தற்கே சிவசப்தமானது எடுத்தாளப்பட்டது.

"தேவாதிகரண" த்திற் (க. கூ. உடு) கண்ட சூத்திரத்திற் போல

ஸஈ ஹவஜ்ஜி ஜெ ஸவெ-ர் ஏ நவாஹ்ரா ஈராஹ்ரு யெ|
ஸிவொzவ்ரி ஸவ-ர்ஹ-ஸ்தா நாம ஸிவகூம ஏத நெ வ-ரராஃ|

"சுரர்களே! இராஜரிஷிகள் அனைவரும் தேவர் அனைவரும் எனக்குச் சமமே; சமஸ்த சேதனப்பிரபஞ்சங்களுக்கும் சிவத்துவத்தைக் கொடுக்க விரும்பு தலாற் சிவன் எனப்படுகின்றேன்" என்னும் மகாபாரதத்துக் கண்ட சிவ பிரானுர் திருவாக்கினால், மனிதர் மாத்திரமன்றித் தேவர் முதலாயினோருஞ் சிவபிரானே உபாசித்தற்குரியர் என்பது பெறப்படுகின்றது.

இச்சித்தல் எனப் பொருள்படுகின்ற வச என்னும் தாதுவினின்று வர்ணவியத்தியயத்தினாலே சிவ என்னும் சப்தம் சித்திப்பது பாணினியிய காணம் (சு. கூ. கo கூ) ம் சூத்திரத்தினாலாம்.

ஹிவியாதெ ஸ்ஹிஹாஸ்ஹொ வாஹாஹ்ரெள ஸிவஃ வ்ரூதஃ|
வண-ர்வுதுயஷ்ஹ்ரிஹ்ரெள வாஸுஃ ஹாஸுவொ யயா|

"பச்யக" என்பதினால் "சக்ய" என்னும் பதமும், ஹிம்சித்தல் எனப் பொருள்படும் "ஹிஸி" தாதுவினின்று "சிம்ம" சப்தமும் வர்ணவியத்தி

யபத்தினல் எய்தினற்போல, இச்சித்தல் எனப் பொருள்படும் வதாதுவினின்று சிவ சப்தமும் எய்தியதென்ப. எனவே, சிவசப்தத்துக்கு இச்சையுடையர் (அன்புடையர்) என்பது பொருள். இவ்வன்பு எவ்விஷயத்தில் நிகழ்ந்ததாமோவெனின், தேவர் அசுரர் மனிதராயினோர்க்குச் சிவபெருமான் சிவத்துவஞ் செய்ய அன்புறுதலினல் என மேலே கூறிய மகாபாரத இருஷிவசனத்தினல் உணரற்பாற்று.

பின்னரும் சுபம் எனப் பொருள்படுகின்ற சிவ சப்தமானது சுபத்தைச் செய்கின்றனர் என்னும் பொருளினும் "பசாத்தியச்" பிரத்தியயஞ் செய்தலினற் போந்தது. இவ்விரு வியுற்பத்தியினலும் சிவபெருமானுக்குச் சிவ என்னுந் திருநாமம் எய்திற்று. சிவநாமத்தை ஓர் முறை உச்சரித்து விடின் சகல பாவங்களும் ஒழிந்துவிடும். இவ்வுண்மைக்கு,

சுவிவா யஜ்ஜாஉ ஸ்ரிவ உதி வாஅ வதெ தெந ஸஹ வஸ வதெதெந ஸஹஹஸவஸவெ தெந ஸஹ ஹுஂஜீத|*

"சண்டாளனேனுஞ் சிவனெனும் மொழியைச் செப்புவானுயின் அவனெடு பேசுக, அவனெடு வசிக்க, அவனெடுண்க" (முண். கூ. உ. கூ) என்னும் முண்டகோபநிடதசுருதியும்,

யத் உருத்ரஸ்ய நாம கிரெர்தம் நிஜ்ஜாம வக்ஜ்யேஸஂஹார ஏவ ஸஸ்ய ஹதம் |

"இரு அக்ஷரமாகிய (சிவ) நாமத்தை வாக்கினல் ஓர்முறை உச்சரிப்பின், அது விரைந்து மனிதர் பாவங்களையெல்லாம் நாசமாக்கும்" என்னும் புராணவசனமுமே பிரமாணம்.

விஷ்ணவ ஸ்ரேஷ்ட்யவஷ்டா ஸ்ரெஷ்டகாடஸி நீ ஸ்ரெதிள|
தத்ர வஜ்ஞாகூரீ தவ்யஸ ஸிவ உதிகூரஉயழ|

---

* இம்மந்திரத்தின் உபப்பிருக்கணத்தை (எஅ-ம் இலக்கத்தின்) கீழ்க் காண்க.

யஜ்ஞாஉ வாஸ யொ வா ஸிவ உதிகூரஉயழ| வக்ஜ ஜ்வதி யதாவீ ஜெநா சொகூஸ வ விஂஜதி (சங். த. கூ. திஅ)

சிவனெனுக்குணச்சிரெழுத்தினை
நவலுவோர்கதிகொய்திலெய்துவர்
ரவணையெள்ளினுயாரிதாற்றுவர்
ரெவணையுய்குதியிழுதைநீரைநீ.

(கந். உமை. திச)

"பதினெண் வித்தைகளுள்ளும் சுருதி மேலானது; அச்சுருதியுள்ளும் ஸ்ரீருத்திரம் மேலானது; அவ்வுருத்திரத்துள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரம் மேலானது; பஞ்சாக்ஷரத்துள்ளும் சிவ என்னும் ஈரெழுத்து மேலாயிற்று" என்று அபியுக்தர் கூறினர்.

பாவம் அனைத்தையும் தகிக்கும் சிவாகமத்தை முதற்கண்ணே விதந்து கூறினமை மாணவர்களுடைய சிரவணாதிகளில் நிகழும் பாவங்களை அது ஒழித்துவிடும் என்னும் மற்றோர் பயன் நோக்கியாம்.

உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட தகரவித்தியாப் பிரகரணங்களிற் காணப்படும் ஓம் முதலிய நான்கு விசேஷணங்களினும் சிவபெருமான் விசேடியராய்க்கொண்டுரைக்கப்பட்டார்.

ஓமிதி ஏகாக்ஷரம் (தைத். க. அ. க)

"ஓம் என்பது பிரமம்" என்னுஞ் சுருதியினாலும்,

ஹராஸ்யவ-ஸ்யை ஹராணாமஹா ஹ்யேஷ ஹரதீயுதே।
ஹரவா ஸ்ய-ஸ்விஜாநா ஏவநா தொதி ஸ்ம தத்।

"அனைத்தையும் சங்கரிப்பவராதலின் அரன் எனவும், வியாபகராதலின் விஷ்ணு எனவும், சர்வஜ்ஞராதலிற் பகவான் எனவும், காப்பவராதலின் ஓம் எனவும் திருநாமங்கள் சிவபிரானுக்குப் போந்தன" என்னும் கூர்மபுராணப் பிரமாணத்தினாலும் ஓம் என்பது பரப்பிரம சிவவாசகமாம்.

ஸவை ஸஷ்டிரோவாஸ்து।

என்னும் உணதி சூத்திரத்தினாலே, இரகரஞ்சேர்த்தத்திலுள்ள அவ என்னும் தாதுவுக்கு மந் பிரத்தியயஞ் செய்து, அந்தப் பிரத்தியயத்து அந்னும் டிக்கு உலோபஞ் செய்தலால், அது அவ-ம் என நிற்க,

ஜ்ஞாக்ஷரஸ்ரவ: விஷ்வாக்ஷயாயாஸ்து (பா. வி. சு. ச. உ0)

என்னுஞ் சூத்திரத்தினாலே, "அவ" என்னுந் தாதுவிலுள்ள அகரத்துக்கும் வகரத்துக்கும் தனித்தனி ஊகாரஞ் செய்ய, அது (ஊ+ஊ+ம்) என நிற்குங்கால்,

ஸகலஸ்வணை-ஸ் தீவ-ஸ் (பா. வி. சு. க. கoக)

என்னுஞ் சூத்திரத்தினால் அது ஊம் என நின்று,

வாவஃயாதஃதாஇஃயாதஃதகயொஃ (பா. வி. எ. கூ. அசு)

என்னுஞ் சூத்திரத்தினுற் குணமாகிலும் என முடிந்தது. இதனுற் "சிவ" என்பது "சிவாய" என நான்காவது வேற்றுமையில் நிற்க, ஓம் என்னும் பதமும் அங்ஙனம் நான்காம் வேற்றுமையில் இருக்கவேண்டுமே எனின், அது

கூஜெநுஜஹஃ (பா. வி. க. க. கூசு)

என்னுஞ் சூத்திரத்தினால், அவ்வியயம் எனப்பட்டு,

கூவுயாடாவூவஃ (பா. வி. உ. ச. அஉ)

என்னுஞ் சூத்திரத்தினால் நான்காம் வேற்றுமை உலோபம் எய்தப்பெற்றது.

யஃ வஃநரெதஞ்ஞிசாதெதுணெவொதிதெயெத ணெநவாகூ ரெண வாஅவஃவாஃஷஃஹிஜுயாஃத (பிர. டி. நி)

"எவன் மும்மாத்திரையுடைய பிரணவவாயிலாகவே பரமபுருஷரைத்தியானஞ் செய்வானே" என்று பிரசிநோபநிடதத்திலே தகரோபாசனையானது பரப்பிரமவாசகமாகிய மும்மாத்திரையுடைய பிரணவங்கொண்டு அநுசந்தானஞ் செய்தல் வாயிலாக இயற்றப்படவேண்டும் என விதிக்கப்படலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் தொகுத்து அநுசந்தானஞ் செயற்பாற்றென்று சூசிப்பிக்கப்பட்டது.

அகம்பதார்த்தாய:—ஆன்மாவுக்குப் பிரயோகிக்கற்பாலதாகிய அகம்பதமானது ஆன்மாவுக்கு அந்தரியாமியாய் வேறுபடாததாயுள்ள உபாசகனுடைய பரமாஹம்பாவனைக்கேனும் முக்கியார்த்தத்துக்கேனுஞ் செல்வதாம். இதனால்

ய வஷொஹஹஹுஃடிய சூகாஸவுவுஹிஜுெதெ (பிரு. சு. ச. உஉ)

"எவர் அந்தர் இதயத்திலே அமர்கின்றனரோ" எனப் பிருகதாரணியத்திற் கூறப்பட்ட தகரவித்தியாய் பிரகரணத்தோடியைந்து,

அஹமெவெடo வவெஃாவூீதி உநுதெ வொ zவு வாஸோ ஜொஜஃ (பிரு. சு. நூ. உo)

"நானே இஃதெல்லாமாகின்றேன் என்று தியானிக்கின்றானே, அது அவனது பரமலோகம்" என்னும் வாக்கியத்திற் கூறப்பட்ட அகம்பதமானது தியானிக்கின்ற ஆன்மாவினது அந்தராத்மாவினின்றுவேறுறுத அகம்பாவனையிலேனும் சிவபெருமானிலேனும் முற்றுதலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரத்தினால் அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

லோகாநாம் சித்திகேதவே:—என்பது தகோயாசகன் விரும்பிய சமஸ்த உலகப்பிராப்திக்கும் ஹேதுவாயினர் மேற்று.

ய உஹாதாந ஶ்ரவிஶ்ரு வ்ருஜஶ்ரே காமஶ்ச வஸ்ருராந் காஶ்ரம் வ்ருஷ்ரம் வவெ-ஷ்ரு யொகெஷ்ரு காஶ்சாரோ ஸவ திஶ்ரு (சாந். அ. க. சு)

"எவன் பரமான்மாவையும் இந்தச் சத்திய காமாதி குணங்களையும் அடைந்து இங்கிருந்து புறப்படுகின்றானே, அவன் சமஸ்த லோகங்களினும் * காமசாரனாய் ஆகின்றனன்" என்று சாந்தோக்கியத்திலே தகோபாசகன் சமஸ்தலோகத்தையும் அடைதலாகிய பயன் கூறப்படலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரமாய் அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

சச்சிதானந்தரூபாய:—தஶ்மாத் ஶுத்³தாத்மவிஜ்ஞாந ஶேஷ விஶ்ரு விஜ்ஞாநமே ஶ்ரூயதே (கைவ.)

"முதல் நடே இறுதியின்றி ஏகராய், வியாபகராய், சிதானந்தராய், அரூபராய், அற்புதராய்" எனக் கைவல்லியோபநிடதத்திற் சச்சிதானந்தரூபத்தவம் கூறப்படலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரமாக அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

மேலும் ஒம் முதலாகிய நான்கு விசேஷணங்களானும், இந்தச் சாஸ்திரத்திலே கூறப்படுகின்ற நான்கு அத்தியாயங்களிற் பிரதிபாதிக்கப்படும் பொருள்கள்கொண்டு, பரமான்மா விசேடிக்கப்படுகின்றனர்.

ஸவெ-ஷ் வெதா யத்³ஶ்ரதாஶ்ரநதி தவாஶ்ரவி ஸவ-ஷ்ரணி ச யத³ஶ்ரு ஶ்ரதி | யதி³ச்ரதா ப்³ரஹ்மசர்யம்-ஶ் சரந்தி தத்தே வத³ஶ் ஸஶ்ரு ஸமாஸேந ஶ்ரவீம்யோமிதே³தத்ஸ (கட. உ. கரி)

"எல்லா வேதங்களும் எப்பதத்தைச் சொல்கின்றனவோ, தபங்களெல்லாம் எப்பதத்தைக் கூறுகின்றனவோ, பிரமசரியத்தொழுகுவோர் எப்பதத்தை விரும்புகின்றனரோ, அப்பதத்தைச் சங்கிரகமாக ஓம் என உனக்குச் சொல்கின்றேன்" என்று கடவல்லியுபநிடதம் கூறுதலின், ஓம்என்னும் பதப்பிரயோகம் சமஸ்தவேதாந்தங்களும் பரப்பிரமசிவத்திலே அமைவுறுவனவாயின என உணர்த்திற்று.

மேலும் பிரணவத்தின் அகார உகார மகாரம் என்னும் மும்மாத்திரைகளும் இருக்கு யசுர் சாமம் என்னும் முத்திறவேதமென அதர்வணவேதாதி

* இட்டமாய்ச் சஞ்சரிப்பவன்.

களிலே பிரசித்தம். பிரபஞ்சசாரமுதலியவற்றினும் "அக்கினிமீளே" (சுழிமீஎ) என ஆதி இருக்குவேதத்தில் ஆதியக்ஷரமாகிய அகாரமும், *"யோநிஸ் சமுத்திரோ பந்துஃ" (யொநிஸ்ஸ உஉத்ர ஸமய்ஃ) என மத்திய வேதமாகிய யசுர்வேதத்தில் மத்திய வருணமாகிய உகாரமும், சமா நம் வரம்" (ஸமா நo வரஂ) என இறுதி வேதமாகிய சாமத்தில் இறுதி அக்ஷரமாகிய மகாரமும் ஒருங்கியைந்து வேதங்களெல்லாம் ஓம் என்னும் பதத்தின் பொருளென உணர்த்தின. இதனைச் சமஸ்த வேதாந்தங்களும் பரப்பிரமசிவபெருமானிலே சமன்வயமாதல் "நூற்றில் ஐம்பது" †என்னும் நியாயத்தினைப் பெறப்படுகின்றது.

சமஸ்த வேதாந்தங்களினும் சிவபெருமான் பிரதிபாதிக்கப்படுதல் சாக்ஷாத் ஓம் என்னும் பதப்பிரயோகத்தினைப் பெறப்படுகின்றது. அங் ஙனமாயினும், வேதாந்தங்கள் பிரமத்திலே சமன்வயமாதல் வேறு விசேஷ ணத்தினால் விளங்கற்பாலதாயவிடத்தும், பிரதமபாதத்திலுள்ள "ஓம்நமஃ" என்னும் பதங்களோடு நான்காம் பாதத்துள்ள "சிவாய" என்னும் பத மியைந்து, ஆறக்கரமாக முடிந்து, ஸ்ரீசடாக்ஷர மகாமந்திரஸ்மரணமும் மாணக்கர்க்கு எய்துவதாம் என்னும் அபிப்பிராயத்தோடு ஓம் என்னும் பதப்பிரயோகஞ்செய்தமை பிரதமாத்தியாயத்தின் அர்த்தப்பயனைச் சிவா சாரியர் உணர்த்தும்பொருட்டாம்.

சமஸ்தப் பிரபஞ்சாகார சத்திவிசிட்டராகிய சிவபெருமான் அத்துவி தீயமாயிருத்தலின், உள்ளே கணிக்கப்படுவனவாய், துவிதீயாத்தியாயத்திற் கண்டிக்கப்படுவனவாய்க்கிடந்த (சமய) பேதங்களான் வேறுபாடடைவா ரல்லர் என்பதுணர்த்த அகம் என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டது.

மேலும்,

அகம் என்னும் பதம் சமஸ்தப்பிரபஞ்சாகார சத்திவிசிட்ட சிவாத்து வைதவாசகம் என்று சிவாசாரியர் (ச. ச. ககூ) ற் கூறுகின்றனர்.

தங்கள் பரமான்மாவாகிய சிவபெருமானைப் பார்ப்பவர்களாதலின் லோகர்கள் எனப்படுகின்ற சிவசாக்ஷாத்காரமுடையோர்க்குச் சித்தி முத் திகளாகிய பலத்தைக் கொடுத்தற்குக் காரணராதலின், மூன்றுவது விசே ஷணம் புணர்த்தப்பட்டது. அதுபற்றிச் சிரவண மனன உபாசனையின்

---

*இது தைத்திரீய யசுர்வேத இறுதிக்காண்டத்திறுதிக்கண்ணது.

†ஐம்பது வேண்டும் என்ற ஒருவனுக்கு நூறு கொடுத்துவிடும் பழம்பாடம் கொடுத்தது என்பது சித்தித்தது. ஈண்டு ஐம்பது என்பதற்கு உபநிடதங்களும், நூற்றுக்குச் சமஸ்த வேதங்களும் சாமியம். இது வடமொழியில் சதேபஞ்சாசத் நியாயம் எனப்படும்.

பின்னர்ச் சாக்ஷாத்கரிக்கப்பட்ட சிவபிரானே பஞ்சகிருத்திய அதிகாரியாய் முத்திபாலிக்கின்றனர். அதனால் அவர் முத்திக்குச் சாக்ஷாத் சாதனமாக மூன்றும் அத்தியாயங்கொண்டுரைக்கப்பட்டனர் என்பது பொருள்.

சச்சிதானந்தரூபர்:—(என்னும் நான்காம் விசேஷணத்திற்) கண்ட ஆனந்தரூபம் என்றதினால் நிரதிசயானந்த ரூபமாகிய பிரமானுபவமானது முக்தான்மாக்களுக்குப் பலத்தைக் கூறும் பலாத்தியாயத்தினாற் கூறப்பட்டதென்றுணர்த்தப்பட்டது.

## வஸ்துநிர்த்தேசம்.

நிஜாகதி ஹித்தி நிஷ்டித நிஷ்ல ஜகஜ்ஜாலவிதய நிரூபாவஹ: |
ஸ ஜயதி சிவ: பராத்தா ஸகலாகமஹ்ருʼ வாரு ஸவ-ஹ்ஸ்ய॥உ॥

(இ—ள்) தமது பராசத்தியாகிய பித்திசையிலே நிருமிக்கப்பட்ட சமஸ்த (சேதன) சேதனப் பிரபஞ்சஜால சித்திர சமூகத்தையுடையரும், சகல வேதாகமசாரநிதியாயினருமாகிய அந்தப் பரமான்ம சிவபிரானர் சர்வோத்கிருஷ்டராகின்றனர்.

## ஆசி.

ஸவ-ரூ ஸ ஸவ-காம ஸிஜ்ஜை வாஸாத்தா ஸவ-ஶ்ரமஜ்ஜொவெதீ|
ஸிதஸி-நயீ பூவஸ்ஸ ஸ்ரெஷ்டா zஸ்ரெஷ்டாzவி யஜ்ஜெ)ஷ:॥ஈ॥

(இ—ள்) எவர்க்குச் சித்தும் அசித்துமாயுள்ள பிரபஞ்சம் முழுமையும் (சேஷமாய்) அம்சமாயுளதோ, சமஸ்த மங்கல குணங்களினின்று வேறுறுத உமாசமேதரும், உற்கிருஷ்ட இலட்சுமியோடியைந்தவருமாகிய அந்தச் சிவபிரானர் (சைவபாடிய சிரவணஞ் செய்பவர்களாகிய) உங்களுக்குப் (பல) சித்தியைக் கொடுப்பாராக.

ஸ வ-ரூ-ஷ0 கூஷ்ணவிoமழி (மகா. கஉ. க)

"அவர் புருஷரும் கிருஷ்ணபிங்களரும்" எனச் சுருதியிலே பிரசித்தமாதலின், சகல மங்கலமாகிய பராசத்தி எனப்படும் கவரியோடும் சமஸ்த கல்யாண குணங்களோடும் இயைந்த பரமான்மா எனப்படும் சிவபிரானர் சரோதாக்களாகிய மாணவர்களுக்கு அநுக்கிரகித்து, விரும்பிய சம்பூர்ண இஷ்டசித்தி எய்துமாறு செய்வாராக. பரா என்பது உற்கிருஷ்டம் எனவும், மா என்பது இலட்சுமி எனவும் பொருள்படுதலின், உற்கிருஷ்ட இலட்சுமியோடு கூடினவரே பரமான்மா எனப்படுவர். சர்வோத்கிருஷ்ட

இஷ்டசமயுடையார்க்கே விரும்பிய அனைத்தையும் கொடுக்கும் சாமர்த்தியம் உள்ளதாம். (சேதனசேதன) இருவகைப் பிரபஞ்சம் சிவபிரானுக்கு ஆராதனரூபமாய்ப் போந்தது; சேதனப்பிரபஞ்சமெல்லாம் தத்தம் அதிகாரபூருவமாகச் சிவாராதனரூப ஞானத்தையும் கன்மத்தையும் அதிஷ்டித்துநிற்றல்; அசேதனப்பிரபஞ்சமெல்லாம் அந்த ஆராதனத்திற்கு உபகரணமுதலியவாக உபகரித்துநிற்றல்.

## குருஸ்துதி.

நமஸ்தாதியாநாய நாநாமுகியாயிநே।
கைவல்யகலுதாயை கல்யாணமூர்தயே நமோ॥ச॥

(இ—ள்) ஒன்றுக்கொன்று மாறுதல்போலப் பொருள் போதிக்கும் ஆகமவேதங்களே விரோதமுறுவண்ணம் உபதேசிப்பவரும், முத்தியாகிய கைவல்லியத்தை விரும்பினவர்களுக்குப் பிரசாதிக்கும் கற்பகதருவும், இவ்வுலக இன்பத்தை விரும்பினவர்களுக்குப் பிரசாதிப்பவருடைய குருவுமாகிய சுவேதாசாரியர்க்கு நமஸ்காரம்.

## சூத்திரார்த்தம் நின்மலமானமை.

வ்யாவஸ்துதிஷ்டம் நெதரம் விஷ்ணோ ஸ்ரவணபூர்வகம்।
வேதவாக்யைஸ்ச கலுஷிதம் ஸ்ரீகண்டேந வராத்மனே॥தி॥

(இ—ள்) சிவத்தை அடைந்த வித்துவான்களுக்கு அந்தப் பிரமமாகிய சிவத்தை (மறவாது) தரிசிப்பித்தலிலே இவ்வியாச சூத்திரம் சேத்திரமாகும்; *பூருவாசாரியர்களால் வியாக்கியானங்களில் மலினமாக்கப்பட்டுப்போன வேதாந்த சூத்திரம் ஸ்ரீநீலகண்டசிவாசாரியராலே (நின்மலமாக) முற்றுவிக்கப்பட்டது.

## சைவபாடியச்சிறப்பு.

ஸ்ரீமதாம் வ்யாவஸ்துதாணாம் ஸ்ரீகண்டீயம் வ்ருகாஸ்யதே।
யேஷாம் ஹாஷ்யவஸஷஹோ மஹாவேஷோ நாதிவிஸ்ரமஃ॥சு॥

(இ—ள்) இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களின் பொருளோக்கொண்ட வேதாந்தசூத்திரங்களுக்கு, இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களையும் கண்டத்திலே கொண்ட ஸ்ரீகண்டசைவபாஷ்யகார

* ஸ்ரீசங்கராசாரியர்க்கு முன்னிருந்த ஏகாண்மவாதப் பிரவர்த்தகர்கள்.

ரால் அருளப்பட்டமையின் மகார்த்தமுடைய இத்தப் பாஷ்ய புஸ்தகமானது யுக்தமாகவும் சுருக்கமாகவும் பிரகாசஞ் செய்யப்பட்டது.

"ஜ்யேஷ்டாயை யஜ்ஞமுஷிஷ்வா ஹி ஸ்ரீஸ்ஸ்ரீதா வதாழ்।

(தைத்திரீயப்பிராம்மணம். க. உ. க. உசு)

"ஸ்ரீ என்பது இருக்கு யசுர் சாமம் என்னும்மூன்று வேதங்களின்மேற்று; அந்தஸ்ரீயானது சத்துக்களுக்கு அமிர்தமாயிருப்பதன்றே" என்றது சுருதி. எந்த வேதாந்த சூத்திரத்திலே இந்த மூன்று வேதங்களும் மிகுத்து விகழ்கின்றனவோ, அந்த வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீமத் என்னும் பெயர் உளதாம். மூன்று வேதங்களையும் கண்டத்திற் கொண்டமையால் ஸ்ரீகண்டர் என்னும் திருநாமம் சிவாசாரியர்க்கு எய்திற்று. சமஸ்த வேதங்களையும் அறிந்தவராகிய வியாசபகவானால் அருளப்பட்ட வேதாந்த சூத்திரங்களுக்கு, அங்ஙனம் சமஸ்த வேதங்களையும் உணர்ந்த ஸ்ரீகண்ட சிவாசாரியர் எழுதிய பாஷ்யமே மிகப் பொருத்தம் என்று கடைப்பிடிக்க.

## சைவபாடியப்பயன்.

வவ-ஶ்வெஷாஹஸாரஸ்ய வெளரஹாவ்யாஹ்யாஹொழி நாழ்।
சூயு-ஸ்ணாம ஶிவநிஷ்டா நாம ஹாஷ்யஸ்ய தத்ஹாநியிஃ॥எ॥

(இ—ள்) சர்வவேதாந்தசாரமாகிய சுகந்தத்தின் இனிமையினாலே ஆனந்தமடைந்த ஆரியராகிய சிவநிஷ்டர்க்கு இப்பாஷ்யம் மகாநிதியாம்.

நிரதிசயரசரூபமாகிய பரப்பிரமத்தின் தாற்பரியமே ஈண்டுச் சௌரபம் எனப்பட்டது. ஓரிடத்திலேயுள்ள புஷ்பசுகந்தம் அநேக இடத்திலே வியாபகமாயிருக்குமாறு போல, பரப்பிரமசிவபெருமானிலே முற்றுகின்ற வேதாந்ததாற்பரியமாகிய சுகந்தம் குருசிஷ்ய பரம்பராக்கிரமத்தினால் யாண்டும் வியாபித்துள்ளதென்பதாம். ஆகவே, வேதாந்தசாஸ்திரத்தைப் பாரிஜாத விருக்ஷத்துள்ள பூங்கொத்துக்குச் சமானமாகக் கூறுவது உசிதமாம். பாரிஜாதபுஷ்பம் போல வேதாந்த சாஸ்திரமும் தனது பத்தர்களுக்கு மோக்ஷத்தைப் பாலித்தல் மாத்திரமன்றி,

ஸ யதி வித்வாꣳஸொகாமோ ஹவதி ஸமஸ்தாந்வொவாஸ்ய வித ரஸ்ஸோ திஷ்டதி (சாந். அ. உ. க)

"பிதிர்லோகத்தை அடைய விரும்புகின்றவனுடைய சங்கற்பமாத்திரையினாலே அவன் பிதிரர் அவனை எதிர்கொள்கின்றனர்" என்னும் சுருதிப் பிரகாரம் சமஸ்த போகங்களையும் அவனுக்குக் கொடுக்கின்றது. அங்ஙனமே வேதாந்தமிருந்தசார சுகந்த சுவாது மகரந்தத்தை விரும்புவோர்

களாய், சுபாவசித்த வேதாந்த சாஸ்திரத்திலே சிரத்தா தாற்பரியம் செய்பவர்களாய், சிவநிஷ்டர்களாய், சிவபெருமானைச் சதாகாலமும் தியானஞ் செய்யும் ஆரியர்களாய், பூச்சியர்களாயுள்ள உத்தமபுருஷர்களுக்கு இந்தப் பாஷ்யம் மகாநிதியாம். மகாநிதியானது தரித்திரனுக்குப் புலப்பட்டமாத்திரத்தில் மகானந்தத்தை விளைத்துக் கைக்குக் கிட்டியபோது அவனுடைய எண்ணமெல்லாம் மூற்றுவிக்குமாறு போல, இந்தப் பாஷ்யமும் மேலே கூறிய சிவநிஷ்டர்க்குத் தரிசனமாத்திரத்தில் அதிக ஆனந்தத்தை விளைத்து, வேதாந்தார்த்த நிர்ணயஞ் செய்யுமிடத்து நிரந்தர சிவத்தியானத்துக்கு உபயோகமாகிய அவரது (சிவபிராஞரது) சமஸ்த கல்யாணகுண சொரூபாதிகளின் உண்மையை உணர்த்துவதாயிற்று.

உ3172
(6317)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# பிரமசூத்திர

# சிவாத்துவித சைவபாடியம்.

## முதலாம் அத்தியாயம்.

## முதலாம் பாதம்.

---

### (க) ஜிஞ்ஞாசாதிகரணம்.

ஈண்டு உபநிடதமீமாஞ்சை ஆரம்பிக்கப்படுகின்றது. இப்பொழுது இந்த ஆரம்பம் எப்புருஷார்த்தம் பற்றியது? அப்புருஷார்த்தமானது இடையறு விருப்புக்கு ஆஸ்பதமாகிய இன்பத்தை அடைதலாம், இன்றேல் இடையறு வெறுப்புக்கு ஸ்தானமாகிய துன்பத்தை முழுதும் ஒழித்துவிடுதலாம் என்க.

(இவ்வுபநிடத மீமாஞ்சைக்கு) அதிகாரி யாவன்? இதனை அறியவேண்டும் என்பனவாதியாய ஆசையுடையவனே அதிகாரி.

இதன் விஷயம் என்னை? வெளிப்படையாயும் அதிகம் வெளிப்படையாகாமலும் சம்பந்தமென்னும் ஊஞ்சல் பற்றி நிகழ்வதே விஷயம்.

எதற்குப் பின்னர் இது ஆரம்பிக்கற்பாற்று? எது எக்காலமும் உபயோகமாய் முற்பட்டு நிகழ்கின்றதோ, (அதற்குப் பின்னர் இது ஆரம்பிக்கற்பாற்று).

இங்ஙனஞ் சிரவணஞ் செய்வோருடைய மனசிலே நிகழ்ந்த சங்கை எனப்படும் மூளையை நிர்மூலஞ்செய்யுமாறு சர்வஜ்ஞசிகாமணியாகிய ஸ்ரீ பகவானால் அருளிச்செய்யப்பட்டது இந்தச்

## சூத்திரம்.

சூயாதெதா ஏரவஜிஜ்ஞாஸா (க. க. க)

(க) பின்னர், ஆகலின், *பிரமத்தை அறிய †ஆசை.

இச்சூத்திரம் ஓர் அதிகரணம். ஈண்டு விஷயம், சம்சயம், பூருவபக்ஷம், சித்தாந்தநிர்ணயம், சங்கதி என்பவற்றுக்கு நிலைக்களமாயது அதிகரணம்.

இங்கே அத (சூய) சப்தம் (இன்ன விஷயத்துக்குப் பின்னர் இன்னது ஆரம்பிக்கற்பாற்று) என்னும் அனந்தர அர்த்தத்திற் போந்ததன்றி,

சூய யொ ஹா நுஷ்டாவ நுஷ்டி।

"இப்பொழுது யோகத்தைப்பற்றிய விவரணம் (ஆரம்பிக்கற்பாற்று)" என்னும் யோகசூத்திரமுதலியவைகளிற் கண்ட அத என்பது போல, அதிகாரப் பொருண்மேற் போந்ததன்று. அதிகாரம் என்பது ஆரம்பம்.

பிரமத்தை அறியவேண்டும் என்னும் ஆசையானது செயற்பாலதாதலின், அது ஆரம்பிக்கப்படுவதின்றன்றே; அது விஷயத்தின் மேற்கொண்ட ஆசையினல் மாத்திரம் உதிக்கற்பாலது.

ஓகார ஶ்சாய ஶப்தஶ்ச ஏவமெதௌ ப்ரவ்ருணீ வஸ்ய।
கண்ட ஸிக்யா விதியூ-ஹாதௌ தவ்ஹ ந்ஹாஸ்மஹிகாவ-ஹௌ।

"ஓங்காரம் அத என்னும் இரு மொழிகளும் முன்னரே பிரமாவுடைய கண்டத்தைப் பிளந்து வெளிப்பட்டமையின், அவ்விரு மொழிகளும் மங்கல மொழிகள்" என்னும் ஸ்மிருதிபற்றி, இந்த அத சப்தம் மங்கலப் பொருளிற் கூறப்படுவதன்று; (பிரமத்தை) அறியவிருப்பம் என்பதுபற்றிப் பொருள் பொருந்துமாறின்மையின். சிஷ்டாசாரம் பாதுகாக்கும்பொருட்

---

*ஏரவெதி ஶிவஶப்தெநோக்தஸ்ய வஸ்துந ஏவ ஸித்திரஸ்து।
(கைலா. கக. ச0)

"சிவனாதும் சத்தியாதும் சர்வான்மகத்துவமே பிரமம் என்பது வெளிப்படை" என்று கூறப்படலாற் பிரமம் என்பது சத்தியோடியைந்த சிவபெருமான் மேற்று.

†மொய்ப்பானரம்புகயிறுகமூலையென்புதோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்கில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னரமுதேயோ
வப்பாகாணவாளசப்பட்டேன்கண்டாயம்மானே.
(திருவாசகம், ஆசைப்பத்து, உ.)

டுச் சாஸ்திராரம்பத்தில் மங்கலாசரணம் செயற்பாலதெனின், அதுவும் அத என்று (வாயினல்) அக்ஷரத்தைத் தோனித்தல் மாத்திரையானே சித்திக்கின்றது.

இந்த அத சப்தமானது (ஓர் விஷயஞ் சொல்லி மற்றோர் விஷயஞ் சொல்வதாகிய) பக்ஷாந்தரத்திற் கொள்ளும் பொருளுமுடைத்தன்று; முன்னர் யாதும் கூறப்படாதாக, அதன் பிரசங்கமின்மையின்.

அத என்னும் மொழி போசனமேனும் போதலேனும் செய்தல் என்னுமை போல, நியமமில்லாததாய் முன் நிகழ்வதொன்றைக் குறித்ததும் அன்று; இம்மொழி நியமமாய் உள்ளதொன்றைக் குறித்து ஈண்டுக் கூறப்படலான். எவனுக்குச் சம்பத்தியானது அதிகாரிவிசேஷத்தினுற் பிரமவிசாரத்துக்குச் சாதனமாகின்றதோ, அந்தச் சாதனம் முன் உளதாவதாக அறியப்படுகின்றது.

பின்னர் எட்டு வயசுமுதலியவற்றையுடைய பிராமணர் முதலியோரால் உபயோகிக்கப்பட்ட உபநயனசம்ஸ்காரத்தை முற்கொண்டதாயும்,

வாஜ்யாயை zஜ்ய-கவ்ய: (தைத்திரீய ஆரணியகம். உ. கஞ)

"சுவாத்தியாயம் அத்தியயனஞ் செயற்பாற்று" என்று தனக்கு விதிக்கப்பட்ட பிரகாரம் தினந்தோறும் எய்தப்பெற்றதாயும், நியமமாக வழிபடப்படும் ஆசாரியர் வாயிலாக எய்தும் அக்ஷரக்கிரஹணவடிவமாயும், அர்த்த ஞானப்பயனையுடையதாயுமுள்ள வேதாத்தியயனமே பிரமவிசாரத்துக்கு முன் உளதாக உரைப்பது யுக்தம்; தருமம்போலப் பிரமமும் வேதவாயிலாகச்சித்தித்தலின், வேதாத்தியயனஞ் செய்யாதவனுக்குப் பிரமவிசாரங் கூடாதாகலின்.

கேவலம் வேதாத்தியயனத்துக்குப் பின்னர்ப் பிரமவிசாரம் செயற்பாலதோ எனின், அப்பெற்றித்தாய அத்தியயனம் (ஆகுக); அதன் பின்னர்த் தருமவிசாரம் (ஆகுக); அவ்வேதாத்தியயனமின்றித் தருமவிசாரஞ் சித்திக்காமையின். அங்ஙனம் ஆசாரியராலே (சைமினிமுனிவராலே)

கூயாதோ யஜ்ஞ-ஜிஜ்ஞாஸா (பூருவமீமாஞ்சை. க. க. க)

"பின்னர், ஆகலின், தருமவிசாரவிருப்பம்" எனப் பிரதிபாதிக்கப்பட்டது. முதற்கண்ணே உபாத்தியாயரிடத்து அத்தியயனஞ் செய்த பின்னர்த் தருமவிசாரஞ் செயற்பாற்று; ஆகலின், எதற்குப் பின்னர் இது (பிரமவிசாரம்) ஆரம்பிக்கற்பாற்று? தருமவிசாரத்தின் பின்னர். எங்ஙனம்? நாம் தரும

விசாரம் பிரமவிசாரஞ் செய்யும் (பூருவமீமாஞ்சா உத்தரமீமாஞ்சா) சாஸ்திரங்கட்கு மிகுதியும் பேதஞ் சாற்றவேமல்லேம்; ஆயின் (அவை) ஒரே (சாஸ்திரம் என்னும்) அபிப்பிராயமுடையேம். தருமவிசாரத்தையும் பிரமவிசாரத்தையும் ஆராதன ஆராத்தியங்களாகப் பிரதிபாதிக்கும் (இரு சாஸ்திரங்களும் முறையே) "பின்னர், ஆகலின், தருமவிசாரவிருப்பம்" (பூ. க. க. க) என்று தொடங்கி, "மீளத் திரும்புதல் இல்லை; சுருதியுண்மையின்" (வே. சூ. ச. ச. உஉ) என முடியும்வரையும் ஒரே சாஸ்திரம். (உத்தர மீமாஞ்சையில்) "பின்னர், ஆகலின், பிரமவிசார ஆசை" என்னும் ஆரம்பமானது பூருவமீமாஞ்சையில்

கூயாத ஸ்ரூஷவகூஷணழி (பூ. கூ. க. க)

"பின்னர், ஆகலின், சேஷலக்ஷணம்" என்றற்றொடக்கத்தவற்றிற்போல, அவாந்தரபரிச்சேதப் பொருண்மேற் போந்தது.

இன்றேல் தருமவிசாரமானது பிரமஞானத்துக்குக் காரணமாதலின், அதனை விசாரித்தற்கு உபயோகமுடையனவாய சுருதிலிங்கமுதலியவும், பிரமாணங்களாகப் பிரதிபாதிக்கப்படும் வேதவிதியும், அர்த்தவாதமும், ஸ்மிருதிமுதலியவும் பிரமவிசாரத்துக்கு உபயோகமாதலின், தருமவிசாரத்துக்குப்பின் பிரமவிசாரஞ் செயற்பாற்று; சாதனமின்றிச் சாத்தியம் பெறப்படாமையின்.

பிரமஞானத்தையுற்றுத் தருமம் சாதனமாங்கால்,

கதெதo வெஷாநுவசெநந ஸ்ராஹுணா விவிதிஷந்தி யஜ்ஞந ஷாநந தவஸா நாஸகேந (பிரு. சு. ச. உஉ; அ. உ. கசு)

"இதனைப் பிராமணர் வேதாத்தியயனத்தினலும், யஞ்ஞத்தினலும், தானத்தினலும், தபசினலும், விரதத்தினலும் அறிய விரும்புகின்றனர்" என்னும் பகவதி சுருதியே பிரமாணம்.

கருமமானது பிரமஞானத்துக்குச் சாதனமாயின், தருமமே விசாரிக்கற்பாலதும் அநுட்டிக்கற்பாலதுமாக, இந்தப் பிரமத்தைப்பற்றியவேதாந்த வாக்கியங்களை விசாரஞ் செய்தலாம் பிரமத்தினறி போதரும் பயன் என்னை? என்று கூறற்பாற்றன்று, பலத்தை விரும்பாத அதிகாரிக்கு (அந்தக் கருமமானது) பாவமாகிய மலத்தை நீக்கும் சம்ஸ்காரவாயிலாகச் சித்த சுத்தியைப் பிறப்பித்தற்குவாயிலாய்ப் (பிரம) ஞானத்துக்கு ஏதுவாகலின். அங்ஙனம்,

யவெவுெத வகூாரிலஊதூலூஹாஃ (கவ. த. அ. உ. உடு)

"எவனுக்கு இந்த *நாற்பது சம்ஸ்காரங்களும்(உண்டு)" என்று தொடங்கி,

ஸ ஏவுண வ்ஹாயஜ்ஞ்ஞ வாலொகஞ்ஹ ழுஹுதி
(கவ. த. அ. உச. உடு)

"அவன் பிரமத்தின் சாயுச்சியத்தையும் சாலோக்கியத்தையும் அடைகின்றனன்" என்பதிறுதியாக, கர்ப்பாதான முதலிய சகல கருமங்களும் பாவமலங்களை ஒழிக்கும் சம்ஸ்காரஹேதுவுடையன என அபியுக்தஸ்மிருதி பிரகாசிப்பிக்கின்றது.

(ஆக்ஷேபம்) (யஞ்ஞத்தின்பொருட்டுச்) சாலியின்மீது (ஜலங்கொண்டு) புரோக்ஷித்தலாம் சம்ஸ்காரம் போல, சமஸ்தகருமங்களுக்கும் சம்ஸ்காரம் எய்துமாயின்,

ஸவ-ஃ வனெ வுணஞ்ஞொகா ஸவதி (சாந். உ. உசு. க)

"இவரெல்லாம் புண்ணியலோகத்தினர் ஆகின்றார்" என்று சுருதியிற் கூறப்பட்ட ஆச்சிரமபலங்களுக்குச் சுவாதந்திரியம் இன்றாய் விடுமாலோ எனின்,

(உத்தரம்) அன்று; (சுவர்க்கமுதலிய) புண்ணியலோகரூபமாகிய பலத்தை அவாவிச் செய்யப்படும் கர்மங்கள் சுவாதந்திரியங்களாயினும், பலத்தை அவாவாது அக்கர்மங்களை அநுட்டித்த புருஷனுக்கு அக்கருமங்கள் சித்தசுத்திமுதலியவற்றைப் பிறப்பித்தற்குக் காரணமாயிருத்தலின்; அங்ஙனமே, அந்தப் புருஷனுக்கு எது ஞானபலமாயுள்ளதோ, அது கருமபலமுமாம்; வீரீகிப்புரோக்ஷணமானது அதிர்ஷ்டபலத்தைப் பிறப்பிக்

---

*நாற்பது சம்ஸ்காரங்களாவன:—(க) கர்ப்பாதானம், (உ) பும்சவனம், (ஙு) சீமந்தோந்நயனம், (ச) ஜாதகருமம், (ஞ) நாமகரணம், (சு) அன்னப்பிராசனம், (எ) சௌளம், (அ) உபநயனம், நான்கு (கூ, கo, கக, கஉ) வேதவிரதங்கள், (கூடு) சமாவர்த்தனம், (கச) விவாகம், பஞ்சமகாயஞ்ஞம் (கஞ) தேவயஞ்ஞம், (கசு) பிதிர்யஞ்ஞம், (கஎ) மனிதயஞ்ஞம், (கஅ) பூதயஞ்ஞம், (கக) பிரமயஞ்ஞம், ஏழு பாகயஞ்ஞம் (உo) அஷ்டகை, (உக) பார்வணம், (உஉ) சிராத்தம், (உசு) சிராவணி, (உச) ஆக்ரகாயணி, (உஞ) சைத்ரி, (உசு) சுவயுஜி, ஏழு ஹவிர்யஞ்ஞம் (உஎ) அக்னியாதேயம், (உஅ) அக்னிஹோத்ரம், (உக) தர்சபூர்ணமாசம், (ஙo) ஆக்ரயணம், (ஙக) சாதுர்மாஸ்யம், (ஙஉ) நிரூடபசுபந்தம், (ஙசு) சௌத்ராமணி, ஏழு சோமயஞ்ஞம் (ஙச) அக்னிஷ்டோமம், (ஙஞ) அத்யக்னிஷ்டோமம், (ஙசு) புக்தி, (ஙஎ) சோடசி, (ஙஅ) வாஜபேயம், (ஙக) அதிராத்ரி, (சo) அப்தோர்யாமம் என்பனவாம்.

கத் தர்சபூர்ணமாசயஞ்ஞத்துக்கு அங்கமாய், சுவர்க்கமடைதற்கு முடிவாய் நிலையுறல் போல, கர்மங்கள் ஞானத்துக்கு உபயோகமாய் முத்தி அடைதற்கு முடிவாய் ஒருங்கு நிலையுற்றன. குணகர்மங்களாயிருத்தலின், அக் கர்மங்கள் அங்கங்களாம்.

(ஆக்ஷேபம்) நித்தியம் செயற்பாலனவாய் விதிக்கப்பட்ட ஜ்யோதிஷ்டோமமுதலாயின மற்றோர் முக்கிய பேற்றைக் கொடுப்பதில் விரோதமுறுதலின், அவை சம்ஸ்காரங்களாய் எய்தமாட்டாவோ எனின்,

(உத்தரம்) அன்று; சுவதந்திரவிதிகொண்டு முக்கிய காரணங்களாக விதிக்கப்பட்ட சௌத்திராமணி பிருகஸ்பதிமுதலியன முறையே அக்கினி சயனம் வாஜபேயமுதலிய யஞ்ஞங்களுக்கு அங்கமாயிருத்தல்போல, (ஓர் கர்மத்துக்கு) இரு விதியின் பலத்தினுல் ஈரியல்பு சித்தித்தலின். ஆகலின், ஞாநோற்பத்திவரையும் கர்மங்கள் அநுட்டிக்கற்பாலன.

(ஆக்ஷேபம்) விவிதிஷ ஹி (பிரு. சு. ச. உஉ)

"அறிதற்கு விரும்புகின்றனர்" என்பதினுல் ஞானத்தின்மேல் இச்சை பிறக்கும் வரையும் கர்மம் அநுஷ்டிக்கற்பாற்றே எனின்,

(உத்தரம்) இது சாரமின்று; வாளா இச்சையானது புருஷார்த்தமாகாமையின். ஆகலின் பிரமஞானத்துக்குச் சாதனமாகிய கர்மவிசாரஞ் செய்தபின்னரே, பிரமஞானத்தைப் பிறப்பிக்கும் சாஸ்திராரம்பஞ் செய்தல் மிகவும் உசிதம்.

(ஆக்ஷேபம்) கன்மப் பிரமவிசாரம் என்பவற்றுக்குக் கிரம நியமம் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? (இரண்டுக்கும்) கர்த்தா ஒருவனேயாமாதலின் எனின், அன்று. ஆகார அங்கத்துக்கும் தர்சபூரணமாச அங்கிக்கும் கர்த்தா ஒருவனேயாயிருத்தல் போல, தர்மவிசார அங்கத்துக்கும் பிரமவிசார அங்கிக்கும் கர்த்தா ஒருவனேயாயிருப்பதா? ஒரு அங்கியாகிய ஆக்கிநேய யஞ்ஞத்தின்பொருட்டுள்ள அநேகாங்கங்களாகிய பஞ்சப்பிரயாஜங்களுக்குக் கர்த்தா ஒருவனேயாயிருப்பதுபோல, மூன்றுவதாகிய அங்கிக்குத் தர்மப்பிரமவிசாரங்களே அங்கமாகக் கொண்டு இவற்றுக்கு ஒருவனே கர்த்தாவாயிருப்பதா? சமசத்திலே ஜலம் புரோக்ஷணம் செய்பவனே யஜமானுடைய பசுகாமனியின் பொருட்டுக் கோதோகனத்திலே ஜலம் புரோக்ஷணம் செய்தற்கு அதிகாரியாயிருத்தல் போல, தர்மவிசாரத்துக்குக் கர்த்தாவாயிருப்பவனே பிரமவிசாரத்துக்கும் கர்த்தாவாயிருப்பதா? ஆக்கிநேயமுதலிய ஆறு யஞ்ஞங்களும் ஒரே சுவர்க்கபலத்தைக்

கொடுப்பனவேயாக, இவற்றுக்கு ஒருவனே கர்த்தாவாயிருத்தல் போல, தருமவிசாரம் பிரமவிசாரம் என்னும் இரண்டும் ஒரே பலத்தைக் கொடுப்பனவேயாக, இவற்றுக்குக் கர்த்தா ஒருவனேயாயிருப்பதா? தருமவிசாரம் பிரமவிசாரம் என்பவற்றுக்கு அங்ஙனம் ஓர் இயைபிருப்பதாகச் சுருதி முதலிய பிரமாணம் பெறப்படவில்லை. ஆகலின், கர்மப் பிரமவிசாரத்துக்குக் கிரமநியமம் பொருந்தாதெனின்,

(உத்தரம்) சுருதிமுதலிய பிரமாணம் இன்றேல், அப்போது அங்ஙனம் (கிரமநியமமின்றி) இருக்கும்.

வித்யா ஞாவித்யாஞ யஸ்து தெதொபயம் ஸஹ (ஈசா. கக)

"எவன் வித்தை (ஞானம்), அவித்தை (கர்மம்) என்னும் இரண்டையும் அறிகின்றவன்" எனவும்,

தெதெநதி ஹ்ரஹ்மவித்பூணுகூத (பிரு. சு. ச. கூ)

"இந்தக் காரணத்தினாலே பிரமத்தை அறிபவனும் புண்ணியத்தைச் செய்பவனும் (மேலே) போகின்றான்" எனவும்,

ஸதெதந ஹ்ருஷ்டவஹா ஹெருஷ கூத்ஸ வைதீஜாதெந ஹ்ரஹ்மயெஹ்ண நித்யே (முண். கூ. க. சு)

"சத்தியத்தினாலும், தபசினாலும், கல்ல ஞானத்தினாலும், பிரமசரியத்தினாலும் நித்தமும் இந்தப் பரமான்மா அடையப்படுகின்றனர்" எனவும் பிறவுமாக ஞானத்தையும் கர்மத்தையுஞ் சேர்த்து விதிப்பனவாகிய சுருதிகள் காணப்படுகின்றன. கர்மத்துக்கும் ஞானத்துக்கும் மோக்ஷபயன் ஒன்றேயுண்மையின், அந்தக் கர்மப்பிரமவிசாரங்களுக்குக் கிரமநியமம் யுக்தம்.

இங்ஙனமாயினும், அத்தியயனவிதி அக்ஷரத்தைப் படித்தல் மாத்திரத்தில் முற்றுவதாயினும், அது (தர்மப்பிரம) விசாரத்துக்குப் பிரதிருத்தியில்தாய் ஒழியாது; ஷடங்கத்தோடு வேதாத்தியயனஞ் செய்தலினாலே முதற் பார்வையினல் உடனே வாக்கியார்த்தமாத்திரம் எய்துவதாகுமாதலின். பின்னர்ப் பிரமத்தின் ஸ்தூலோபாசனையாயுள்ள சோதிஷ்டோமாதிகளை விதிக்கும் வசனங்களுக்கும், சூக்குமோபாசனையாகிய *தகரவித்தையை விதிக்கும் வாக்கியங்களுக்கும் ஒன்றுக்கொன்று விரோதாபாசவண்மை நோக்கி, புருஷார்த்தத்தை விரும்பும் புருஷன் கர்மப்பிரமவிசாரத்திற் சுவயமாகப் பிரவர்த்திக்கின்றான். ஆகலின், (கர்மப்பிரம) விசாரத்துக்கு நியமமில்லாமல் இல்லை.

* திருச்சிற்றம்பலம்.

(ஆக்ஷேபம்) "சிரவணஞ் செயற்பாற்று" ஸ்ரோதவ்யஃ (பிரு. ஆ. ச. நி) என்னும் வாக்கியத்தினால் வேதாந்த சிரவணம் நேரே விதிக்கப்படுகின்றதே எனின்,

(உத்தரம்) அன்று; விதியைப் பிரயோகிக்கும் சம்பத்தியின்மையின். அங்ஙனமாயின், வேதாந்த சிரவணம் அபூருவவிதிப்பாற்பட்டதன்று; பிராப்தமாதலின். பிராப்தமும் வேதாந்தசிரவணம்; இது வேதத்தின் பொருளை அறிதற்குச் சாதனமாயுள்ளது, சாஸ்திரசிரவணமாயிருத்தலின், வைத்தியசாஸ்திரசிரவணமுதலிய போல். இது நியமவிதிப்பாலதுமன்று, அவகாதி முதலிய போல (யஞ்ஞத்தின் சாலியுமியைப் போக்கவல்ல பல்வகை உபாயங்களுள் ஒன்றினைப் போக்கவேண்டும் என விதியுளதாதல் போல), (வேதாந்த விசாரமொழிந்து) அநுபவத்திற் கண்ட ஓர் பயனை விளக்கக்கூடிய பிறிதோர் உபாயம் பிரத்தியக்ஷத்திற் பெறப்படாமையின். பரிசங்கியாவிதிப்பாற்பட்டதும் அன்று; இங்ஙனம் (அவ்விதியினால்) வேதாந்தசிரவணமாத்திரம் எய்துவதாமன்றி, வேதாத்தியயனம் பெறப்படமாட்டாது முடிந்துவிடுமாதலின். அங்ஙனமாகும்போது, வேதாத்தியயனஞ் செய்யாதவர்க்கு வேதாந்தவிசாரம் எய்தமாட்டாதாய், அதனாற் புருஷார்த்தம் எய்தமாட்டாது. வேதாந்தசிரவணமானது பரிசங்கியாவிதிப்பாற்பட்டதாய்க் கர்மகாண்டசிரவணஞ் செய்யவொண்ணுதெனக் கொளின், (கர்ம) விசாரஞ் செய்யாது கர்மாநுஷ்டானம் எய்தாமலும், கர்மாநுஷ்டானம் இல்லாது சித்தசுத்தி எய்தாமலும், சித்தசுத்தியில்லாது ஞானம் உற்பத்தி ஆகாமலும் போம். ஆகலின், (கர்மவிசாரஞ், செய்த பின்னர்ப் பிரமவிசாரஞ் செய்யவேண்டும் என) மேலே யூரைத்தமையே சால்புடைத்து.

சமஸ்த சேதன அசேதனப் பிரபஞ்சாகாரமாகிய பராசத்திவிசிஷ்டாத்துவிதிய வைபவமாய், சகல வேதசாரரகசிய களஞ்சியமாய், பவர், சிவன், சர்வர், பசுபதி, பரமேசுவரர், மகாதேவர், உருத்திரர், சம்பு முதலிய பரியாயவாசகசப்தங்களின் சாரத்தினைப் பிரகாசிக்கின்ற உற்கிருஷ்ட மகிமாவிலாசத்தையுடையதாய், தனது சேஷ அம்சரூபமாகிய சமஸ்த சேதன (ஆன்மாக்களுடைய) உபாசனைகளுக்கு அநுகுணமாகக் கூறப்பட்ட தனது அருட்பிரசாதத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புருஷார்த்தங்களையுடைபதிமாகிய பரப்பிரமத்தைப் பிரதிபாதனஞ் செய்யும் உபநிடதசாஸ்திரமாமானது விசாரஞ் செயற்பாற்று. தனக்குப் பிரேரகமாயுள்ள சோதனலக்ஷணமாகிய யாகரூபமாயும், தன்னை ஆராதித்தலான் எய்தும் விசேஷ சாதனரூபமாயும், அந்தந்த அர்த்தவாதத்தினுலே பிரகடனஞ் செய்யப்உற்கிருஷ்டவிலாசமாயும், சுருதியாதிகளினுலே பெறப்பட்ட சமஸ்த

அங்கங்களோடு இசைந்ததாயும், தனக்குப் பிரமாணதுகூலமாகிய ஸ்மிருதி, இதிகாசபுராணத்தின்பாலதாம் அபியுக்தருக்திப் பிரமாணத்தினுல் இசைந்த உபப்பிருங்கணத்தையுடையதாயும், விதி, நிஷேதம், விகற்பம், சமுச்சயம், உற்சர்க்கம், அபவாதம், வாதம், அப்பியுச்சய முதலியவைகளோடியைந்ததாயும், சமஸ்த புருஷார்த்த இரத்நாகரமாயும், பரமஞானத்துக்குச் சாதனமாயுமுள்ள சிரேஷ்டமாகிய (பூர்வமீமாஞ்சையாகிய) தர்மவிசாரஞ் செய்த பின்னர் என அது சப்தத்துக்கு அர்த்தநிர்ணயஞ் செய்யப்பட்டது.

அதஃ (கூஅ) "ஆகலின்" என்பது நிகழ்ந்துபோனமையின் ஏதுப் பொருண்மேற்று; எதுபற்றி வேதாத்தியயனஞ் செய்தமையால் தர்மவிசாரஞ் செய்பற்பாற்றே, அதுபற்றி அக்கர்மாநுஷ்டானஞ் செய்தல் வாயிலாகப் பிறந்த சித்தசுத்தியினுல் வாய்ந்தவனும், அச்சித்தசுத்தி எய்திய காலத்திலே உதித்த விவேகாதி குணத்தோடியைந்த பரமபக்தியுடையனுமாய அவனுலே நிரதிசய மங்களகர்மாகிய பிரமமும் விசாரஞ் செயற்பாற்று.

(பிரம்ம ஜிஞ்ஞாஸா) என்பது "பிரமத்தின் அறியவிருப்பம்" (அஃதாவது, பிரமத்தை அறிய ஆசை) என ஆறும் வேற்றுமைகாரகப்பொருட்கண் வந்தது.

வரீக்ஷ்ய லொகான்கர்மசிதான்ப்ராஹ்மணோ நிர்வேதமாயான்னாஸ்த்யகிருதஃ க்ருதேன தத்விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்ஸமித்பாணிஃ ஸ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் (முண். க. உ. கஉ)

"எந்தப் பிராமணன் கர்மங்களாலாய உலகங்களைப் பரீக்ஷித்துப் பற்றற்றவனுப், நித்தியப்பொருளானது அநித்திய கர்மத்தினுல் அடையப்படாதென்னும் சிந்தையுடையவனுகின்றுனே, அந்தப் பிராமணன் அம்மெய்ப்பொருளை *அறியும்பொருட்டு வேதாந்தமறிந்தவனுயும் பிரமநிஷ்டையுடையவனுமாயிருக்கிற குருவையே சமித்தைக் கையிற்கொண்டு அடைவானுக" என்றற்றொடக்கத்த விஷயமே ஈண்டு ஆராயற்பாற்று.

பிரமம் விசாரிக்கயோக்கியமுடையதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமம் விசாரயோக்கியமுடைத்தன்று; அதிற் சந்தேகமின்மையின். சந்தேகமிலாமை எங்ஙனம்?

---

*மெய்யன்வெண்பொடிபூசும்விகிர்தன்வேதமுதல்வன்
கையின்மான்மழுவேந்திக்காலன்காலமுதான்
பைகொள்பாம்பரையார்த்தபடிறன்பனங்காட்டூர்
ஐயனேயுன்னையல்லாலாரிவேன்னே.
(தேவாரம், திருவன்பார்த்தான்பனங்காட்டூர், கங், ஏ)

ஸ்ரீ ஆத்ம வாதம் (மாண்க்கியம். உ; பிரு. உ. இ. கூ)

"இந்த ஆன்மா பிரமம்" என்னுஞ் சுருதியான்று "அயம்" என்னும் பிரத்தியயத்திற்பிரத்தியக்ஷ சித்தமாயுள்ள ஆன்மாவைப் பிரமம் என்று கூறுகின்றது; ஆகலின் இதிற் சந்தேக களங்கப் பிரசங்கம் எற்றுக்கு? இன்னும் விசாரத்தின் பயன் அந்த விஷயஞானமே. ஞானமும் ஜேயத்தின் பரிச்சேதமாம். வேதாந்தவிசாரம் வாயிலாகப் பிறந்த ஞ்ானம் பிரமத்தைப் பரிச்சேதஞ் செய்கின்றதா? அன்று? பிரமத்துக்குப் பரிச்சேதம் கூறின், அது பரிச்சேதங் கடந்திருக்கின்றதென்பதைப் பங்கஞ் செய்யும்; பரிச்சேதம் கூறுதொழியின், பிரமம் உள்ளவாறு விளங்காது. "இதுதான் கடம்" என்று பரிச்சேதம் கூறுங்கால், அது அறியப்பட்டதாகின்றது; ஆகலின், பிரமவிஷயத்தைப்பற்றிய ஞானமும் எய்தாது; மேலும், (விசாரத்தினுல் எய்தும்) பயன் சிறிதும் காண்கிலேம்; முத்திப்பயனும் இல்லை; அநாதி சித்தமாயுள்ள சம்சாரம் நீக்கக்கூடாமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். எவ்வாற்றானும் (வேதாந்த) சாஸ்திரம் நன்கு ஆரம்பிக்கற்பாற்று; பிரமம் சந்தேகத்துக்கிடமாய் ஆராயற்பாலதாகிய விஷயமாயிருத்தலினுலும், அதனை நிர்ணயித்தல் பிரயோசனத்தை விளைத்தலானுமாம். "இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் அகங்காரத்தினுற் கட்டுண்ட இந்தச் சம்சாரியைப் பிரமம் என்று சொல்கின்றன; இதனுற்றான் சந்தேகம்.

சமஸ்த கிலேச களங்கமில்லாத நிரதிசய ஞானனந்தாதி சத்திமகிமாதி சயத்தையுடையதே பிரமத்துவம்.

அநாதியாயுள்ள அஞ்ஞானவாசனையினுற் பற்றப்பட்டு வெளிப்பட்ட சஞ்சலித அநேக சரீரங்களிற் பிரவேசித்தலும் நீங்குதலுமாகிய வியாபாரத்தினுல் வசப்பட்டு எல்லையில்லாத துக்கத்தைச் சகித்தலே சீவத்துவம்.

ஒன்றுக்கொன்று விலக்ஷணமாயுள்ள (பரமான்மா சீவான்மா என்னும்) இரண்டுக்கும் சுருதிகள் எங்ஙனம் ஒரியல்பு கூறும்? அங்ஙனமாயின், என்னுள் சந்தேகம் இவ்வாறாகும்? இன்னும் இங்ஙனஞ் சந்தேகம் நிகழ்கின்றது;

ஸ: ஸர்வ: ஸ்வயம் ஸர்வ: ஸர்வ: ஸர்வ: விஜாநந் ஸர்வ: (தைத். கூ. உ, கூ, ச, இ); ஸூதிஜோ ஸ்வயம் (சாந். கூ. கக. க); நாராயணோ ஸ்வயம்.

"ஆன்மம் பிரமம்," "பிராணன் பிரமம்," "மனம் பிரமம்," "விஞ்ஞானம் பிரமம்," "ஆதித்தியன் பிரமம்," "நாராயணன் பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் வெவ்வேறு பொருளைப் பிரமமென்று கூறுகின்றன. இவை

களில் எது பிரமம்? ஆகலின் அகேயபிரகாரமாய்ச் சந்தேகமுண்டானென்ற மையின், பிரமம் விசாரஞ் செய்தற்கு அருகமாகின்றது.

கேட்டல், சிந்தித்தன் முதலியவற்றால் நிச்சயிக்கப்பட்டவரும், பக்தி யினாலும், ஞானத்தினாலும் விசேஷமாக எதிர்முகமாக்கப்படுபவரும், பரமகாருணிகரும், மகாதேசிகரும், சர்வாதுக்கிரகருமாகிய பரப்பிரம சிவனுரின் அருளாதிக்கியத்தினாலே. இந்த அதிகாரிக்குப் பாசபாடலம் நீங்கி, பிரத்தியகூபமாக்கப்பட்ட நிரதிசயானந்த சொரூபமாகிய அத்தச் சிவப்பிரமத் தின் *சாமியுருணசாரூபமாயுள்ள கைவல்லிய இலட்சுமியை (அடைதலே) பிரயோசனமாம்.

இதனால் வேதாந்த சிரவணமானது (ஆராயற்பாலதாகிய) விஷயத் தோடும் பயனோடும் இயைந்துள்ளது. ஞானமானது ஞேயத்தின் பரிச்சேத மாயிருத்தலின், பரிச்சின்னங்கடந்த பிரமம் விஷயமாகாதேயென ஆக்ஷே பமாகக் கூறினமை ஆராய்வில்லாத விலாசத்தினாலேயாம்; பிரமம் இவ்வி யல்பிற்று, இது என்று பரிச்சேதம் கூறல் கூடாதாயினும், இலக்ஷணவாயி லாகப் பிறவற்றினின்று வேறுபடுத்தல் மாத்திரத்தினாலே பரிச்சேதம் எய்துமாகலின், யாண்டும் இலட்சியவிஷயத்தை இலக்ஷணவாயிலாகப் பிற வற்றினின்று பிரித்துக் கூறும் ஞானமே பரிச்சேதம் எனப்படும்.

உத்தேசிக்கப்பட்ட பிரமத்துக்கு இலக்ஷணங் கூறி வேதாந்தவாக்கியங் களினாலே நிரூபித்துப் பரீக்ஷிக்குங்கால், சஜாதீய விஜாதீயங்களாய், (பிரம) இலக்ஷணங்கள் இல்லாதனவாயுள்ள மற்றைச் சகல பதார்த்தங்களினின்று பிரிக்கப்பட்டதாய் எதனுண்டோ அதுவே பிரமம் என அறியற்பாற்று.

ஆகலின் பிரமவிஷயமாயுள்ள இந்தச் சாஸ்திராரம்பம் சமீசினம், சந்தேகத்துக்கிடனாகாததும், பிரயோசனம் விளக்காததுமாயுள்ள ஒன்று அறிஞர்க்கு விசாரவிஷயமாகாது. வேதாந்த சாஸ்திர விசாரமானது பிரமாணம், யுக்தி, ஆபாசம், பிரதிபாசம் என்பவற்றுக்குட்பட்டமையின், சந்தேகத்துக்கிடமாய்ப் பிரமம் விசாரத்துக்குரிய விஷயமாகின்றது.

வ்ரஹ்மவிதாப்நோதி பரம். (தைத். உ. க. க)

"பிரமோபாசகன் நிரதிசய†பிரமானந்தத்தை அடைகின்றனன்" எனவும்,

---

*அப்பார்சடையப்பனனந்தவார்கழலே
யோப்பாகவோப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலுக்கப்பாலப்பாடுதுங்காணம்மானாய்.
(திருவாசகம், திருவம்மானை, கே)

†தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலுமதெவாளிவெளி
கள்ளத்தேன்கடியேனுக்கவிலக்குதல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறவினேனதே.
(சுவ., தனித்திருச்சுழிற்றொகை, க)

ஸ்ஜாகூா ஸிவ0 ஸாஜ்ஜி உதுஜ ஜெதி (சுவே. ச. கச)

"சிவபெருமானே அறிந்து அத்தியந்த அநர்த்த துக்கநிவிர்த்தியை அடைகின்றனன்" எனவும்,

0ரஸஹ0 ஜாகூாஷ்ட்டா ஹவஜ்ஜி (சுவே. கூ. எ)

"சிவபெருமானே அறிந்து புநராவர்த்திகொடாத பிரமானந்தாநுபவ நிலையுடையராகின்றனர்" எனவும்,

ஃ கதிர்ஜ்ஜ0 வஸ்ருதி வீகஸொகோ யாத்ஃ வ்ருஷ்டாநுஹி ரோந ஸீஸ்ரு (சுவே. கூ. உ0)

"விராகமும் (அப்பிராகிருத) மகிமையுமுடைய சிவபெருமானே ஜகத்துக்குத் தாரகமாகிய அவரது பிரசாதத்தினாற் சோகம் நீங்கினவனைக் காண்கின்றனன்" எனவும்,

ஃ சூத்ர ஸரணி0 க்ருகூா வ்ரணவஹ்ரா தூராரணிர்ஜ்ஜ்ரு ஜ்ரா நஹிஜ்ஜ்ரு ஸாஷெவ வாஸ0 உஹ்ரதி வஜ்ஜிகஃ (கைவ. கக)

"(இதயகுகையின்கண்ணே) ஆன்மாவையும், பிரணவத்தையும் முறையே கீழ் அரணியாகவும், மேல் அரணியாகவுங்கொண்டு தியானித்தலாம் *கடைதலினாலே பாசத்தைத் தகிக்கின்றனன் அறிஞன்" எனவும்,

---

ஃ *திலெஷ்ட்ட ஜெதலo உயிநீவ வஷி-ர்ராவஹ்ரோதஃ வ்ரூராணீஷ்ட்ட ஸாழ்ஜீ| வாவ ரோதூதூதி ஸ்ரஹ்ரூஜெத zவெளள வஜெதூஜெந நவ கிவஸா யொ zந்ட்டவஸ்ரூதி (சுவே. க. கஜ்ரி)

"எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய்போன்றும். (வறந்த) நதியில் ஜலம் போன்றும், அரணியில் அக்கினி போன்றும் (யாண்டும் வியாபித்துள்ள) இத்தப் பரமான்மா ஆன்மாவில் அறியப்படுகின்றார்; சத்தியமும் (உறவும்), தபசும் (ஞானமும்) கொண்டு இவன் அவரைக் காண்பானாயின்."

திலெஷ்ட்ட வா யயா ஜெதலo உஜ்ஜி வா வஷி-ர்ரவ்வி-ர்கழ்ஜ்ஜ்ரு|
யயாவ ஹ்ரோகவி வ்ருவ்வா யயாரணோ ஹட்ட்டாஸ நதீ|
வாவவெவ ஸஹாதூ நதீதூ நோதூ திலெகூணழ்ஜ்ரு|
(வாயு. பூ. ச. எச, எஜ்ரி)

"நிலத்தில் எண்ணெய் போன்றும், தயிரில் அமைந்த நெய் போன்றும் (வறந்த) நதியில் வியாபித்த ஜலம் போன்றும், அரணியில் அக்கினி போன்றும், (பிரபஞ்சம எங்கும் பரமான்மா வியாபித்துள்ளார்); இங்ஙனம் ஆன்மாவிலே ஆன்மாவுக்குவேறுகிய பரமான்மாவை (ஒருவன்) சத்தியமும் தபசுங்கொண்டு எப்போதும் இயைந்து கின்று காண்கின்றனன்."

விதகித்தீயினன்பாலிற்படுநெய்போன்
மறையின்றலன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினன்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.
(நா., தனித்திருக்குறுந்தொகை, கo)

ஜகூவ தெவ0 ஶுஆயுதெ வஷ-ஷாஹொஃ (சுவே. சு. கூ; க. அ)

"சிவபெருமானே அறிந்து சமஸ்த (மல மாயா கர்ம) *பாசங்களினின்று வீறேகின்றனன்" எனவும் (போந்த) சுருதிகள் அநுசாரமாக, அப்பிரமோபாசனையிலே இந்த அதிகாரிக்குப் பாசத்தை நீக்குதலாகிய முத்திப் பிரயோசனமும் உண்டென இம்முதல் அதிகரணத்திற் பிரதிபாதிக்கப்பட்டது. (க)

## (உ) ஜந்மாத்தியதிகரணம்.

---

ஈண்டு நிர்ணயஞ் செய்யப்பட்ட பிரமத்தை நிச்சயஞ் செய்யும் அந்த இலக்ஷணம் என்னே? என விசாரிக்குங்கால், அப்பிரமத்தின் இலக்ஷணத்தை விளக்குவதாகிய இரண்டாவது அதிகரணசூத்திரம் ஆரம்பிக்கின்றனர் பகவான் சூத்திரகாரர்.

ஜந்மாத்யஸ்ய யதஃ (க. சூ. உ)

## (உ) எங்கிருந்து இதன் †சிருஷ்டி முதலியன.

இலட்சியம் அறியப்பட்டவிடத்து, அதன் இலக்ஷணம் (வேண்டப்படாது) வியர்த்தமாய் முடிதலினாலும், அவ்விலட்சியம் அறியப்படாதொழிவின் அதனை (இலக்ஷணத்தை) ஆராய்தல் பொருந்தாமையாலும், ஈண்டு பிரமத்துக்கு இலக்ஷணம் எங்ஙனம் உரைப்பதாகும் என ஆக்ஷேபிக்கற்பாற்றன்று; வேதாத்தியயனவாயிலாக முதற்கண்ணே அறியப்பட்ட பிரமத்துக்கு அது (இலக்ஷணங் கூறல்) யுக்தமாதலின்.

---

*விளையாததொர் பரிசில்வருபசுபாசவேதனையோன்
டனையாயினநவிரவ்வருள்தலைவன்னதுசார்வாய்
களையார்தருகதிராயிரமுடையவ்வனலெடும்
முளைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே.
(தேவாரம், திருமுதுகுன்றம், ஞான., கூ)

செம்மைநலமறியாதசிதடொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்ரு
னம்மையுமோர்பொருளாக்கிநாய்விசையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாரூர்பெறுவாச்சோவே.
(திருவாசகம், அச்சோப்பதிகம், க)

†"விண்முதல்பூதலமொன்றியவிருசுடரும்பார்கள்
பிறவும்படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினே"
(தேவாரம், ஞாந., திருவெழுகூற்றிருக்கை)

"அரியாதிக்காப்பானையுய்ப்படைப்பா
னரனுயழிப்பவனுந்தானே."
(பதினொராந்திருமுறை, திருக்கைலாசஞானவுலா)

[redacted] சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பிருத்தியம் இந்தச் சம்மேளன சம்பந்தமாய் சேதனசேதனரூப பிரபஞ்சவிஸ்தாரத்துக்கு எங்கிருந்து உளதாகின்றதோ, அதுவே பிரமம்.†

யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேந ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம (தைத். பூ. க. க)

"எங்கிருந்து இவ்வுலகங்கள் பிறக்கின்றனவோ, எதினால் பிறந்தவை நிலையுறுகின்றனவோ, ஒழியுங்கால் அவை எங்கே பிரவேசிக்கின்றனவோ, அதினை அறிய முயலுதி; அது பிரமம்"

யஆதாநகேஸ்ரீ ஜ்ஞவிஷ்ணுஸ்ருத்ராதிதேவ்ய ஹிதோ (சுவே. சூ. கசு)

"பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்), க்ஷேத்திரஜ்ஞனுக்கும் (சீவான்மாவாகிய பிரமத்துக்கும்) பதியாயுள்ளார் சர்வஜ்ஞாதி குணங்களையுடைய ஈசர்; அவர் சம்சாரத்தின் மோக்ஷஸ்திதி பந்தத்துக்குக் காரணர்"

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்।
ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோஸ்ருஜத (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது; எகமே அத்துவிதியமாயுள்ளது"

ஜ்ஞம் ஸத்யம் புராணம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம்।
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாய வை நமோ। (மகா. கஉ. க)

"இருதமும், சத்தியமும், பரப்பிரமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவரேதியரும், விரூபாக்ஷரும், விசுவரூபருமாயுள்ளாருக்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்ததே வியூயம்.

---

* இதற்குப் பிரமாணம் (உஎக-ஆம் இலக்கத்திற்) காட்டப்பட்டது.

† ஈண்டு சிருஷ்டி, திதி, சங்காரம் என முத்தொழில் உற்பத்தொழில் என்றது மேலோர் பிற எனின், ஆகாது; திரோபவம் நிறையிலும், ஈறில சம்சாரத்திலும் அடங்கிநின்றலின்.

கண்டு பிரபஞ்சசிருஷ்டி முதலாயின பிரமத்தக்கு இலக்ஷணமாக எய்தமோ? எய்தாவோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எய்தா; சம்பந்தமின்மையின். மேலும்,

சூநஅஷொ வுரவெஹி வுஜா நாஷ (தைத். கூ. சு)

"ஆனந்தம் பிரமம் என அறிந்தான்" என்று கூறியவிடத்து, ஆனந்தம் பிரபஞ்சோற்பத்தி இலக்ஷணமுடையதாக முற்றுகின்றது. மற்றோரிடத்து,

ஸவெவ ஷௌம்யெத அக்ர ஆஸீத் (சாந். கூ. உ. க)

"சௌமிய! சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியினும் "சத்து" ஜகத்காரணமாக அறியப்படுகின்றது.

ஸத்யꣳ ஜ்ஞாந மநந்தꣳ ப்ரஹ்ம (தைத். உ. க. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என்னுஞ் சுருதியினுல் முடிவிறந்த ஞானமே பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகிய பிரமம் எனப் பிறிதோரிடத்துப் பெறப்படுகின்றது. மற்றோரிடத்து,

யதா சோஷுஸ்ய திவா ந ராத்ரி ந ச ஸ ஆஸ்ஸத்ஸிவ ஏவ கேவலஃ (சுவே. சு. கஅ)

"இருள் உளதாய், பின்னும் இரவும் இலவாய், சத்தும் அசத்தும் இலவாய் இருந்தபோது, கேவலம் *சிவபெருமான் ஒருவர் மாத்திரம் உளராயினர்" என்னுஞ் சுருதியிலுள்ள சிவசப்தத்தினல் உணர்த்தப்படும் வஸ்துவே காரணமாய், அனைத்துக்கும் முன் உளதாம் பிரமமென உணரப்படுகின்றது. சண்டி ஆனந்தமுதலியன பிரமம் என்னுமிடத்து, இவையெல்லாம் தனித்தனி பிரமமாதலாம் விகற்பத்தின் பாலனவா? இன்றேல் இவையனைத்தும்

---

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுநினியெழுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்ந்தருபரமனே.
(தேவாரம், திருமறைக்காடு, ஞான. ஆ)

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போ
யிருங்கடன்மூடியிறக்குமிறான்களேப்பரும்
கருங்கடல்வண்ணன்கனேபரும்கொண்டெங்காளரரய்
வருங்கடன்மீளின்றெம்மிறைகல்லீனவாசிக்குமே.
(தேவாரம், பொது, நாவு., தனித்திருவிருத்தம், ஏ)

ஒருங்கியைதலாம் சமுச்சயத்தின்பாலனவர்? விகற்பமாயின் மேலே காட்டிய சுருதிகளுக்கு ஹானியாதிதோஷப்பிரசங்கமும் (சிவபெருமான் எப்பெற்றியரென இலக்ஷணங் கூறற்கொண்ணுத) அவ்வியவஸ்தையும் நேரும். (ஆனந்த முதலியன) தனித்தனி சிவபெருமானைப் முடியின், சிவப்பிரமத்துக்கு அநேகத்துவப் பிரசங்கம் எய்தும். (ஆனந்தமுதலியவணைத்தும்) ஒருங்கியைந்து (சிவபெருமானும் எனின்), அவை குணங்களானமையின் பிரபஞ்சசமனைத்தையும் நிருமித்தற்கியன்ற ஞானத்தையுடைய சிவபெருமானுகா என்க. மேலும்,

ரோயாஜ்ஞ ப்ரக்ருதிம் வித்யாத் (சுவே. உ. க0)

"மாயையைக் காரணம் (பிரகிருதி) என உணர்க" என்னுஞ் சுருதி அசேதனமாகிய மாயையைப் பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகக் கூறுகின்றது; அதுவே அமைவுடைத்து; ஞானரூபமுடைய சிவபெருமானைப் பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகக் கூறின், அச்சிவபெருமான் விகாரமுறுவாராய்,

நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் (சுவே. சு. கசு)

"நிஷ்களரும், நிஷ்கிரியரும், சாந்தரும்" என்றற்றொடக்கத்த சுருதிகட்குப் பங்கம் நேருமாகலின். ஆகலின், எவ்வாற்றானும் சிவபெருமானுக்குப் பிரபஞ்சோற்பத்தியிலக்கணமுரைத்தல் அமைவுடைத்தன்றெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சுருட்டியாதி தொழில்கள் பிரபஞ்சத்திருத்தலின், அவை சிவபெருமானுக்குச் சம்பந்தமுறு எனக்கொள்ளினும், (அவை) தடஸ்தத்திறற் (அச்சிவபெருமானுக்கு) இலக்ஷணமாகப் பொருத்தமுறுகின்றன. சர்வஜ்ஞத்துவாதி குணங்களுடையதும், அஷ்டகாமங்களுக்கு அதிகரணமாயுள்ளதுமாய * சிவதத்துவமே பிரபஞ்சத்துக்குக் காரணமாகிய

* ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் பிரகிரோபநிடதம் ச. அ. னும், வித்தியாதத்துவம் ஏழும் சுவேதாசுவதரம் க. உ. னும், சிவதத்துவம் ஐந்தும் பிருகச்சாபர்லம் ச. கக. னும், இவற்றின் உபப்பிருங்கணங்களாகிய கைலாயசங்ஹிதை அத்தி. கூ. னும், வாயுசங்ஹிதையினும், அக்னிபுராணத்தினும், தேவீபாகவதத்தினும், பிரமாண்டபுராணத்தினும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றின் விரிவு வருமாறு:—

(க) பிருதிவி, (உ) அப்பு, (கூ) தேயு, (ச) வாயு, (ஙி) ஆகாசம், (ஃ) வாக்கு, (எ) பாதம், (அ) பாணி, (கூ) பாயுரு, (க0) உபஸ்தம், (கக) சுரோத்திரம், (கஉ) த்வக்கு, (ககூ) சட்சு, (கச) சிஹ்வை, (கஞி) கூக்ராணம், (கக) சப்தம், (கஎ) பரிசம், (கஅ) ரூபம், (கக) இரசம், (உ0) கந்தம், (உக) மனம், (உஉ) சித்தம், (உகூ) அகங்காரம், (உச) புத்தி, (பிரகிருதி), (உஙி) புருஷன், (உக) இராகம், (உஎ) வித்தை, (உஅ) நியதி, (உக) காலம், (கூ0) கலை, (கூக) அசுத்தமாயை, (கூஉ) சுத்தவித்தை, (கூகூ) ஈசுவரம், (கூச) சாதாக்கியதத்துவம், (கூஙி) சத்திதத்துவம், (கூக) சிவதத்துவம். இவற்றுட் சிவதத்துவமே முப்பத்தாறு தத்துவங்களுள்ளும் தலையாய்ச் சிறந்து நின்றது.

சிவபெருமான் எனக் கூறப்படுகின்றது. ஆனந்தாதி குணங்கள் சென்றே முடிவுறுகின்றன. சர்வஜ்ஞத்துவம் (முற்றறிவு), நித்தியதிருப்தத்துவம் (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களினின்குதல்), சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை), அலுப்தசத்தித்துவம் (பேராருடைமை), அனந்தசத்தித்துவம் (முடிவிலாற்றலுடைமை) என்பவைகளே சர்வஜ்ஞதாதி குணங்கள் என்க.

ஸவ-ஜ்ஞ தா த்ருப்தி நாதிஸ்வாயீ ஸ்வதந்த்ர தா நித்யமலுப்தஶக்தி:।
அநந்தஶக்தி விஹ்வி-த்யுக்தா ஷாட்ஹுர்மஹாந் ஶிவஸ்ய குணாஹ்ய:॥
(சூர். உத். அ; வி. கக. கஎ)

"சர்வஜ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுப்த சத்தி, அனந்தசத்தி என்பவற்றைச் சர்வவியாபியாகிய சிவபெருமானுக்கு * ஆறு அங்கங்கள் என்று (வேதாகம) விதியுணர்ந்தோர் கூறுவர்" என்று புராணமுங் கூறுகின்றது.

(க) சர்வஜ்ஞதை:—புறக்கரணமின்றி நிஷ்களங்க அதீபவவிஷய மாய்ச் சமஸ்த வஸ்துக்களையும் எப்போதும் பிரத்தியக்ஷமாய் அறிதலே சர்வஜ்ஞத்துவம்;

யஸ்ஸவ-ஜ்ஞஸ்ஸவ-லிதஸ்ஸ ஜ்ஞாநமயஸ்தபஸ்:।
(முண். க. உ. சு; உ. உ. எ; ஸ்வேத். ஈசூ. ஏ)

"எவர் சர்வஜ்ஞராய், எவற்றையும் அறிபவராய் (இருக்கின்றாரோ), எவர்க்குத் தபசு ஞானமயமாயுள்ளதோ" என்றற்றொடக்கத்த ருதிகளான், இது சிவபெருமானுக்குரியதாகச் சித்திக்கின்றது. இதனைச் சமஸ்த சேதனத்தின் (ஆன்மாக்களின்) வெகுவித கர்மபலபோகத்துக்கு உபயோகமாகிய அவ்வச்சரீரங்களை ஆக்கும் உபாயமானவைகளைப்பற்றிய விசேஷ ஞானமுடைய சிவபெருமானே (பிரபஞ்சத்துக்குக்) காரணராகின்றனர்.

(உ) நித்தியதிருப்தத்துவம்:—விபத்துக்கள் எனப்படும் எனக்கமெனத் தொழிக்கதிசயானந்தபரிபூர்ணத்வமே சர்வநித்தியதிருப்தத்துவம் எனப்படுகின்றது.

---

* சர்வஜ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுப்தசத்தி, அனந்தசத்தி என்பவை சிவபெருமானுக்கு ஆறு அங்கங்களென்று (மைவ. உ. ஏ) உபதேசிக்கப்படுகின்றன. சேஷமின்மையும், நித்தியமாயிருத்தலும், சர்வ நிருபாதிகமாயிருத்தலும், சகல சுவதந்திரத்துவத்தையும், கலசம் சுவதந்திரத்துவத்தையும், நேத்திரம் அனைத்தையும் அறிவிக்கும் சக்தியையும் கொண்டு முறையே ஆறு அங்கங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. (ச).

சூநoஒா வ்ரவு (தைத். கூ. சு

"ஆனந்தம் பிரமம்" என்று சுருதி கூறுகின்றது.

ஒ்ரவுஜ ஜூதூர் நoஉயீ (தைத். கூ. டி. க)

"வெளியாய அதரமாயுள்ள ஆனமா *ஆனந்தமயம்" என்று தோற்றி வாய் செய்து,

வொவ்வா நoஉவ்வ ஜீசோவா ஜூஜி (தைத். உ. அ. க)

"இந் ஆனந்தத்தின் மீமாஞ்சை" என ஆரம்பித்து, அப்பியாசத்தினால் பிரதிபாதனத்தைத் தலைப்பானதாகக் கொண்டு

ஸ வஷொ வ்ரவுண சூநoஷீ (தைத். உ. அ)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என நிரூபிக்கப்பட்டது. பரப்பிரமத்தக்குக் குணமாகலின் அதுவே,

சூநoஒா வ்ரவு (தைத். கூ. சு)

"ஆனந்தம் பிரமம்" எனப் பிரமம் (ஆனந்த) மிருதியுடைமையின், அங்ஙனம் கூறப்படுகின்றது. அப்பெற்றித்தாகிய ஆனந்தபோகாசத்தையுடையது பிரமமாகலின், அது நித்தியதிருப்தத்துவமுடைத்தெனக் கூறப்படுகின்றது. பிரமத்துக்கு †மனசினாலே (ஞானசத்தியினாலே) மகானந்தாநுபவம், நிச்சயன்யாயில்க அன்று; இதுபற்றியன்றே,

ஆகாசஸரீரo வ்ரவு (தைத். க. சு. உ)
ஸத்யகாம வாணாஸாழி (தைத். க. சு. உ)
ஆந சூநoஷி (தைத். க. சு. உ)
ஸாஜிவஸ்ரூஜீவ்ரூதி (தைத். க. சு. உ)

"ஆகாச சரீரம் பிரமம்" எனவும், "சத்தியாண்ம பிராணாராமம்" எனவும், "மன ஆனந்தம்" எனவும், "சாந்திசமிர்த்தமமிர்தம்" எனவுஞ் சுருதிகள் கூறின. சாந்புர்த்தம் பிரகாசித்தலின் ‡ஆகாயம் சிதம்பரம் எனப்படும்; பூதாகாசம் அன்று, விசேடமில்லையின். சமஸ்த உலக ஆனந்தங்களின்

---

*ஸ்ரீவிலாவானந்தவாரிபோற்றி (திருவாசகம், போற்றித்திருவகவல், கூடு)

†பிரமம் தன் ஆனந்தத்தை அனுபவிக்கும் எனச் சுருதி கூறியது வெபெரு மானுடைய தட்டித மூர்த்தத்தன்மையாய தொகாச் சக்தியைத் தியான அதிகாரத் தோடுற்ற சிவஞான வெளியுற்புலமாதலின், அவ்வளவ் பொருள்கொண்டமைபற்றி விரிவையின் அ, வெளுமோன்றைத் வெளுனபோகவியலிலே "பராபரை பரமு குக்கும், அவள் வெண்பரஞான்றி னியலனுபவிப்ப ஞர்த்தே" எனற (கூடதை) சிவ

‡இவ்வன்மை (கo.அoஇ, சஞ, உஉ, உஎ, ஊஅ) ஆகாயாதிலிங்கங்களிற்றொனப்பிடை

தொகுதியாகிய சூக்ஷ்மசரீரத்தின் தோன்றப்பெறும் இரண்டாவதுமான பரப்ரஹ்மஸ்வரூபமான பரமாத்மாவே சரீரியாயிருப்பதால் இந்தப் பிரகாரமான ரூபத்தையுடைய பிரமம் ஆகாசசரீரம் (என்று கூறப்படுகின்றது). சரீராத்மபாவம் பரமாத்மாவுக்கு,

வைஶ்வாநர ஸ்ஸாத்⁴ய ஸ்ரீராத்ரீர ஆகாஶாதே³வ ஸம்ப்⁴ரு
தஸ்ய ஆகாஶ ஏவ ஶரீரம் ப்ருʼதி²வீ ஸ ப்ரணி (சாந். க. கூ. க)

"இன்ன சேதநர்கள் அனைவரும் ஆகாயத்திலிருந்து உண்டாகின்றனவோ ஆகாயத்திலே நடக்கின்றனவோ" (தை. ஆ. ஸ. க)

ஆகாஶோ ஹவை நாம நாமரூபயோர்நிர்வஹிதா|

(சாந். அ. ஸ. க)

"நாமரூபங்களாய அனைத்தையும் தோற்றுவிப்பது ஆகாயம்" என்னும் சுருதிகளினும் சித்திக்கின்றது.

"சத்தியான்மா" என்றது சத்தாரூபரின் மேற்று; "பிராணாராமம்" எந்த ஜீவன் பிராணன் அனைத்திற்கும் ஆதாரமாயுள்ள சிதம்பரசக்தியின் மேற்று சொரூபமாயுள்ள அந்தப் பிராணனிலே எதற்கு (பிரமத்திற்கு) இன்பமுளதோ, அது பிராணாராமம் எனப்படும். புறக்கரணமின்றி மனசில் (ஞானசக்தியில்) ஆனந்தம் எந்தப் பிரமத்திற்கு உளதோ, அது மனஆனந்தம் எனப்படும். ஸன்மம் ஆனந்தம் என்றது காரணமாயிருப்பதின் மேற்று. இது பற்றி,

யதி³ஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்கோ ஹ்யேவான்யாத்கஃ ப்ராண்யாத்

(தைத். உ. எ. க)

"இந்த ஆகாயம் ஆனந்தமாகாவிடின், யார் உயிர்ப்பார்? யார் பிழைப்பார்?" எனச் சுருதி கூறுகின்றது.

---

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வம்திகழ்தோய்செல்வமுயர்ந்தின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்எழுவேத்தஞ்செல்வஞ்செல்வமே.

(தேவாரம், கோயில், ஞான. x இ)

†தானந்தமில்வான்றனையடைந்தாயேனை
யானந்தவெள்ளத்தழுந்துவித்தாள்தாணீடு
யானந்தியென்றதழுத்தவிருந்திருவடிகள்
வானுந்தேவர்கட்கோர்வான்பொருள்தான்சாழலோ.

(திருவாசகம், திருச்சாழல், 40)

பரமாகாசத்தினின்று நேரடியாகவோ தாமே ஆனந்தத்தோடிருந்த முத்தர்களைத் தமது ஆனந்தத்தில் அழுந்தியிருக்கும்படி செய்வதற்கு சரீர அவயவங்களை

"சாந்தமிகுத்தமிர்தம்" என்றது சிவாநுபவத்தை யுடையவரின் மேற்றாய்; அறிதும் என்றது அநாதிமுத்தம்மலப்பிணிக் கண்டு சிகிச்சைசெய்த பரமாதிபரமுமையாடைய சிவபெருமான் சொரூபசாக்ஷாத்காரத்தைப் பற்றி அத்தகரணம் வேண்டாது ஞானசத்தியினலே அநுபவிக்கின்றனர் என்பது "மன அகரணம்" என்றதினற் சித்திக்கது. இதனே சிவபாவனை அடைந்த முத்தான்மாக்கள் புறக்கரணம் வேண்டாது நிரதிசய சொரூபானந்தானுபவத்தை அடைதற்குச் சாதனமாயிய அந்தக்கரணத்தையுடையரென்பதையும் ஈண்டுவிலக்கிற்றாயிற்று. ஆகலின், புறக்கரணமின்றிச் சத்தஞானமொத சத்திரூபமனனிலே (சிதம்பரசத்தியினலே) முடிவிறந்த சொரூபானந்த மெய்தலது அநுபவசித்தமாதலின், சிவபெருமான் நித்தியதிருப்தியுடையர் எனப் பெறப்பட்டது. சிவபெருமானுக்கு எக்காலத்தும் பாசிய சம்சார சக்கரலேசமேனும் இல்லை என்பது பொருள்.

ரு. அநாதிபோதம்:—இயல்பாகிய நிரதிசயஞானமே அநாதிபோதம். சொரூபானந்தானுபவ சாதனமாய அந்தக்கரணஞானம் அநாதிசித்தமே; ஆகலின், அநாதிபோதமுடையர் சிவபெருமான்; சம்சாரத்தினின்று நீக்கும்பொருட்டே அனாதியேயுண்டாயினமையின். எக்காலத்தும் சஞ்சார தோஷத்தை யுறுதல் நிற்றலின் "சாந்தமிகுத்தமிர்தம்" என்றது சருதி.

ரூ. சுவை ஊதியநிராதவம்:— பிறரால் எவ்வகையும் இழிவின்மையினுக்கு வேண்டியவை வேண்டியவண்ணம் தன்னிடத்தே யமைந்து நிற்றலே சுவதந்திரத்துவம்.

ஜ்ஜோ ஜோவஜாவீஸா நீஸௌ (சுவே. க. க).

"பிறவாதவராகிய ஒருவனும் அஞ்ஞனமாம் இருவரும் (முறையே) உருவும், அரூபனுமாம்"

ஹோஜா ஹோதா வெளிதாரஜ ஹோ (சுவே. க. கூ)

"போக்தா (பசு), போக்கியம் (பாசம்), பிரேரிதாரர் (பதி) என்பவற்றை அறிந்து"

விஶ்வாவிஶ்வே ஸ்ருணுத இம ஆபோ (சுவே. ஹ. க)

---

பற்றிமேற்பாய்புலியைப்போற்பற்றி
நிற்றலையன்றிலைமேற்றிரிவெரு
நித்தலையாடியுண்டல்லதை
(சி. சிவஞானபோடமனைவை)

"பிறவாத (பசு), அவித்தை (பாசம்) என்னும் இரண்டையும் ஒழிப்பவர் மற்றொருவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கண்ட பிரதிஷேதம், இயல் (அசேதனம்பொபாசம்), அஜட்டம் (சேதனமாகிய பசு) என்னும் இருவகைப் பிரபஞ்சத்தையுஞ் செலுத்துவதனால், சிவபெருமானுக்குச் சுயதந்திரத்தையுஞ் சித்திக்கின்றது. சமஸ்தகல்யாணகுணத்தினுஞ் சுயதந்திரமாயிருத்தலிற் சிவபெருமானுக்குச் சர்வஜ்ஞத்துவஞ் சித்திக்கின்றது.

இ. [அறுப்தசத்தி:—சுவாபாவிகமாகிய சத்தியையுடைமையே அறுப்தசத்தித்துவம். இது பற்றி,

பராஸ்ய ஶக்திர்-விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியாச்ச (சுவே. கூ. அ)

"அவரது பராசத்தியானது சுவாபாவிகமாய், ஞானசத்தி, பலசத்தி, கிரியாசத்தி எனப் பலவாறுகக் கேட்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்தனவே சுருதிப் பிரமாணம். சேதனாசேதனப் பிரபஞ்சரூப சத்திவிசிட்டத்துவம் சிவபெருமானுக்குச் சுவாபாவிகமே; இதனால் நிர்காரணஞ் சிவபெருமான் *நிர்விசேடர் அல்லர் என்பது சித்திக்கின்றது.

சு, அனந்தசத்தி:—மூடிவிறந்த விசேஷசத்திபுடைமையே அனந்த சத்தித்துவம். இம் முடிவிறந்த சத்திகளினுலே சிவப்பிரமமானது பிரபஞ் சத்தை ஆக்கவும் ஆளவும் இயைந்தது. இது பற்றியே,

வஸோ ஹி ஈஶ்வரோ ந த்விதீயாய தஸ்஥ுஷ்ய-ஃ ஈஶாநீபிராஜ ஈஶத ஈஶநீபிஃ (சுவே. கூ. உ)

"உருத்திரர் ஒருவர் உளர்; (அவர்கள்) இரண்டாவதொன்றைக் கொள்வாரல்லர்; இந்த உலகம் அனைத்தையும் படைப்பனவும் காப்பனவுமாகிய சத்திகளினுலே ஆளுகின்றனர்"

யஸ்மாந்ந ஊர்தம் நோ ந தஸ்஥ுரிதி ஜ்ஞாநபலக்ரியாஸ்வரூபிணீ (அதர்வசிர)

"ஆளுவனவும், படைப்பனவுமாகிய தமது பரமசத்திகளினுலே இவ்வுலகம் அனைத்தையும் ஆளுகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் (எழுந்தன). அனந்தசத்திபுடைமையாற் சிவபெருமானுக்கு முடிவிறந்த பிரபஞ்சம் வாயிகாரணத்துவஞ் சித்திக்கின்றது.

*இதனால் உபநிடதப் பிரசித்திதமாகிய பிரமம் சகுணப்பிரமமன்றி நிர்குணப்பிரமம் அன்றெனப் பெறப்படுகின்றது.

அஷ்டாமூர்திகளாகும் பவர், சர்வர், ருத்ரர், பசுபதி, உக்ரர், மஹாதேவர் என்னும் அஷ்டாமங்களுக்கும் அதிதாணமாயுள்ள (சிருஷ்டித்தல்) மூர்த்தியர் பரப்பிரம சிவபெருமான். இந்தப் பரப்பிரம சிவபெருமான் தமஸ்த சப்தங்களால் உரைக்கப்படுவதோடும், பரத்தியல்பாய் முன்னியமாய் உணர்த்துதலிலும் பவாதி சப்தங்களாற் கூறப்படுகின்றார். (இந்த அஷ்டாமங்கள் ஒழிந்த) மற்றைய ஆகமங்களிலே அச் சிவபெருமான் கூறப்படாதிருத்தலும் இல்லை.

க. பவர் :—எக்காலத்தும் எவ்விடத்தும் உண்மையினும் பவர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்குப் போந்தது; பூ (ஹூ) தாதுவுக்குச் சத்தி (உள்ளது) என்னும் பொருளுண்மையின், யாண்டும் வஸ்துவினைத் தையும் ஊடுருவி நிற்குஞ் சத்தின் வடிவம் பிரமமென அறியப்படுகின்றது. இது பற்றி,

வஷெவ வெஷஷ்ஷ்ஷ்ர சூவீஷெகூவோஷ்ஷீயஷ்ர

(சர்ம். உ. க, தைத். உ. க. கூ)

"சௌம்யா! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; (அது) ஏகமாம் அத்துவிதியம்"

வஷ்ஷ்ர ஜ்ஞ ஷ்ரஜ்ஞ வ்ரஹ்ம (தைத். உ. க. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்

வஷ்ர்ஷ்ர ஷ்ரவ்ராணாராமஷ்ர (தைத். க. கூ. உ)

"சத்தியானம பிராணாராமம்

ஷ்ர ஆநம்ஷ்ர (தைத். க. கூ. உ)

"மன ஆனந்தம்"

வஷ்ர ஹ்ரீஷ் (மஹா. கூக. உ)

"சன்மஹ" என்றற்றொடக்கத்த சுருதிகள் போந்தன. "சக்கடம்" "சற்படம்" எனச் சமஸ்த வஸ்துக்களினும் ஊடுருவி நிற்றலால், சத்ரூபமாகிய சிவபெருமானே அனைத்துக்கும் உபாதானமாதல் சித்திக்கின்றது; மண்ணோடு கூடிய கட முதலியன மண்ணையே உபாதானமாகக் கொள்கின்றன. ஆகவின், சத்ரூபமாகிய சிவபெருமான் பவசப்தவாச்சியராகின்றனர்.

உ. சர்வர்:—இம்சித்தல் எனப்படும் "சிரு" (ஸ்ரு) என்னுந் தாதுவினின்று பிறத்தலின், அது அனைத்தையுஞ் சங்கரிக்குங் கர்த்தா சிவபெருமானை-எனப் பிரதிபாதிக்கின்றது.

தவஷ்ர ஷ்ரவ்ஷ்ரஹமெதர்ஷ் ஷ்ரஹா ஹ்ராவாய வெ நஷீ

(அதர்வசிர)

"விசாசங்காரஞ் செய்பவராய், மகாகவளீகரணஞ் செய்பவராயினுக்கு நமஸ்காரம்"

யஸ்ய) ஸ்வஸ்ய க்ருத்ரஸ்ய உலூகவத ஓஷதய (கட. உ. உஇ)

"எவர்க்கு (சிவபெருமானுக்கு) பிராமணரும் க்ஷத்திரியருமாகிய இருவரும் உணவாகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சர்வசங்காரஞ் செய்பவர் சிவபெருமான் எனக் கூறப்படுகின்றனர்.

கூ. ஈசானர்:—உபாதியிலாத பரமைசுவரிய விசிஷ்டருணமுடைமை நோக்கலின் ஈசானர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று

ய ஈசாநீ ஜொகாநீஸத ஈஸாநீஹிஃ (அதர்வசிரச)

"எவர் இவ்வுலகம் அனைத்தையும் ஆஞ்ஞாசத்திகளினாலே (சுசசத்திகளினாலே) ஆளுகின்றனரோ" எனச் சுருதி கூறுதலின்.

ச. பசுபதி:—ஈசுவராயுள்ளார் எவற்றையும் ஆளவேண்டியதன்மையின், பசுபதி என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்கெய்திற்று. இதுபற்றியே,

* வஷாஸீஸ ப்ரஸவதீ வஸ்ய நாஸ்த ஷுடா ஸுத்ய
ஷ்டிஃ (தைத். சங். கூ. க. ச. கூ)

"நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களுக்குப்பதியாயுள்ளார் ஆளுகின்றனர்" என்றற்றொடக்கத்தனவாகச் சுருதி கூறுகின்றது. பாச சம்பந்தத்தினாற் பசு என்னும் வியவகாரமுண்மையின், பசு என்னுமிடத்துப் பசு பாசம் என்னும் இரண்டுங் கொள்ளக்கிடந்தன. இதுகொண்டு சேதனத்துக்கும் அசேதனத்துக்கும் நாயகர் சிவபெருமான் என அறியப்படுகின்றது.

ஞ. உருத்திரர்:—சம்சாரரோகத்தைத் திராவகஞ் செய்தலின் உருத்திரர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று;

தரதி ஸொகமாதவிஸ (சாந். எ. க. கூ)

"பரமான்மாவை அறிந்தவன் சோகத்தைத் தாண்டுகின்றனன்" எனக் கேட்கப்படலான்.

ஞ. (ஈ) உக்கிரர்:—(குரிய சிந்திரர் முதலிய) பேரொளிகளின் அடக்கப்பட்டாணமின், உக்கிரர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று;

(தத ஆதித்ய ஏதெஸ்மாத் ஆஜீயோ நமந்தி தஸ்மாதுக்ர [illegible])

"அவ்விடத்திற் சூரியனும் பிரகாசிக்கவில்லை, சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கவில்லை" எனச் சுருதி கூறலின்.

எ. பீமர்:—சேதனம் அனைத்துக்கும் பயத்தை விளைக்குங் காரணராயும், அவைகட்கு நியாமகராயுமிருத்தலிற் பீமர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்கெய்திற்று;

மீஷாஸ்மாத்வாதஃ பவதெ (தைத். உ அ)

"இவர்க்குப் பயந்தே வாயு வீசுகின்றது" என்றற்றொடக்கத்த சுருதியுண்மையின்.

அ. மகாதேவர்:—மகத்துவமாய்ப் பிரகாசித்தலினால் மகாதேவர் எனச் சிவபெருமான் கூறப்படுகின்றனர். இதுகொண்டே,

யஶ் கஶ்மாத்ருதெ ஶ்ரேஷ்டெஃ யஸ்மாத்நாஸ்தி கிஞ்சநபொதெஸ்மாத்வை ஶிவஃ ஸ்மிருதஃ ஶிவாத்ருதெ நஸ்மாத்பரதரம் நான்யத் (அதர்வஶிரஸ்)

"பின்னர் மகாதேவர் என்று எதுபற்றிக் கூறப்படுகின்றனர்? எவ்வியல்பு களையும் விடுத்து மகத்தாகிய பரமான்மஞானமயாகையாலிவ்வியல்பினாற் பூசிக்கப்படுகின்றமையின் மகாதேவர் எனப்படுவர்" என அதர்வசிரசு கூறுகின்றது. சமஸ்த சம்சாரதோஷமெலாம் அறுத்துச் சமஸ்த மங்கல குணங்களுக்கு ஆதாரமாகச் சிவதத்துவம் என அறியப்படுவதொன்றுண்டோ, அது (ஈண்டு) கூறப்பட்ட இயற்கையினையுடையதாய்ச் சமஸ்தப் பிரபஞ்சத்தையும் படைத்தலாதி கிருத்தியஞ் செய்தற்குக் காரணமாயிருக்கின்றது; அவ்வியல்பினதாய மெய்ஞ்ஞானமயாய்த சிவதத்துவத்திலே பிரபஞ்சத்தின் உபாதானகாரணத்துவமும் சேர்தலின். அவ்வியல்பினதாய மகத்துவமுமாயிற் பிரமம் என்று கூறப்படும். அத்தப்பிரமமே சிவபிரான் என்று கூறியபட்டி ஆனந்தாதி குணமனைத்துக்கும் ஆசிரயமாய்ச் சித்திக்கின்றது. ஆகவின், ஆனந்தாதிகளைத் தனித்தனியே சிவபெருமான் என விகற்பமுறத் தொடல் வியர்த்தம்.

ஶாயாஜ்ஞ வுக்ய்தி0 விஜ்ஞாஜ (சுவே. ச. க0)

"மாயையைப் பிரகிருதி என அறிக" என மாயையானது காரணமாகின்றமை அது சிவனையே (வே. சூ. க. ச. க0. ற் கண்டவாறு) வேறுபடாதிருத்தலினாலேயாம்.

ஶாயி நஜ்ஞ ஶெஷஸ்ஸாழி (சுவே. ச. க0)

"மாயையுடையானாகிய மகேசுவரரை" என்னுஞ் (சுருதி) வாக்கிய சேஷ முணைமையின். ஆக்குமிடத்திலிருந்து பிரமம் காரணமும், ஏதுவினதித் விஷ்ட பிரமமாகிய அதுவே காரியமுமாகின்றது. ஆகவின், பிரபஞ் சோற்பத்தியாதி நிலைமைகளுக்கும் பிரமம் என்னும் சித்தாந்தம். (உ)

## (ரூ) சாத்திரயோநித்துவாதிகரணம்.

பதார்த்தஞானமானது இலக்ஷணத்தையும் பிரமாணத்தையும் பற்றியுள்ளது. பிரபஞ்சகாரணர் பரப்பிரம சிவபெருமான் என்பதற்குப் பிரமாணம் என்னே? என,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஶாஸ்த்ரயோநித்வாத் (க. க. ரூ)

(ரூ) *சாஸ்திரம் பிரமாணமாயிருத்தலின்.

சாஸ்திரம் பிரமாணமாயிருத்தலிற் பிரபஞ்சோற்பத்தி முதலிய இலக்கணமுடையவர் பரப்பிரமசிவபெருமான்.

பிரபஞ்சோற்பத்திக்குக் காரணராகிய சிவபெருமான் சாஸ்திரவாயிலாகமாத்திரம் எய்தற்பாலரா? இன்றேல் வேறு பிரமாணங்களாற் பெறற்பாலரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவயவத்தோடிசைந்த இப்பிரபஞ்சம் காரியமே. காரியமும் விசித்திரமாயடங்கியிருத்தலின், அது தனக்கு வாய்ந்ததோர் கர்த்தாவையுடைத்தாதல் வேண்டும். கர்த்தா ஒருவர் சர்வஜ்ஞதையுடையராக அநுமிக்கற்பாலர். இந்தக் கர்த்தா சாஸ்திரத்தினன் மாத்திரம் பெறப்படார்; இவ்விஷயத்திற் சாத்திரம் பிரமாணம் இல்லை; சாஸ்திரம் வேறு பிரமாணங்களாற் பெறவியலாத விஷயத்தைக் கூறலின். பிரபஞ்சகாரணஞ் சாஸ்திரவாயிலாகப் பெறப்படுவதன்றும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிரபஞ்சகாரணராகிய பரப்பிரம சிவபெருமான் வேதாந்தசாஸ்திரமொன்றினாற் பெறற்பாலர்,

நாவெஷ்வி ந்ருநூதெ கம் வ்ரூஹதஶ்ச
(தைத்திரீயப்பிராம்மணம். ரூ. கரூ. ரூ)

"வேதம் அறியாதவன் அப்பெரும் பொருளை நினைக்க இயலான்" என்றற் றொடக்கத்த சுருதிகளில் வேதாந்தசாஸ்திரமொழிந்து, பரப்பிரமசிவனுரை

---

தொகுத்தவனதுமறையங்கமாகமம்
வகுத்தவன்வள்ளற்பொழிற்கூகமேவினன்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே
(தேவாரம், திருவிற்கோலம், ஞான. ஆ)

அறிதல் கூடாதெனக் கேட்கப்படலான். அவயவமுடைமையின் (பிரபஞ் சம்) காரியமாய் முற்ற, அதனல் அது தனக்கு வாய்ந்ததோர் கர்த்தாவை யுடைத்தாக அநுமிக்கற்பாற்றென மேலே உரைத்தமை உசிதமன்று; விசித்திரமாகிய தொழில்கள் பூண்ட கோபுரம் பிராசாதமுதலியன அநேக கர்த்தாக்களையுடையனவாகக் காணப்படலான். இதுகொண்டு பிரபஞ்சம் ஒரே முதல்வனமாத்திரமுடைத்தென அநுமானிக்க இயலாது. அநுமா னத்தினல் எய்திய அந்தக் கர்த்தாவும் கர்மமுதலியவற்றிற்றொடக்குண்டவ னுக அறியப்படுவன்.

ஏதுவின்பக்ஷதர்மாநுமானவாயிலாகப் பிரபஞ்சத்துக்கு விலக்ஷண மாகக் கர்த்தா ஒருவன் உளனுகச் சித்திப்பானேனும், நிமித்தோபாதான சத்தியோடியைந்த ஒரே கர்த்தா உளன் எனச் சாதித்தல் கூடாது. ஆக லின் வேதாந்தசாஸ்திரமொன்றினுற் பெறப்படுபவரும், அந்த வேதாந்தப் பிரமாணமொன்றினலே தாபிக்கற்பாலரும் பரப்பிரம சிவபெருமான் எனச் சித்தமாயிற்று.

இன்னும் மேலே அதிகரணத்திற் பிரதிபாதிக்கப்பட்ட பிரபஞ்சோற்பத் திக்கு இன்றியமையாதுள்ள சிவபெருமானுடைய சர்வஜ்ஞதையானது வேதசாத்திரங்கட்குங் காரணமாகச் சித்திப்பதெனப் பிரதிபாதிக்கப்பட் டதாமென்பர் சிலர்.

ஈண்டுச் சிலேஷார்த்தமுடைய காவியம் போல, இரண்டர்த்தம் கூறு தலிலச் சூசிப்பிக்கும் (இந்தச்) சூத்திரத்துக்கு வாக்கியபேதமுதலிய தோஷ பின்மையின், பின்னரும் மற்றோர் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஈவ்ரு ஔஹெதா வூ்தவ்ரு நிஃவ்ஹிதஔதஔ்ரு்ஹெவ்ஹொ யஜு வெ-ஃஹ்வாஔவெஃஃ (பிரு. சு. சு. க0)

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன இந்தப் பரம் பொரு ளின் சுவாசம்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படும் விஷயமே ஈண்டு ஆராயற்பாற்று.

சிவபெருமானே வேதத்துக்குக் கர்த்தா எனல் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது ஒவ்வாதென்பது;

தவெஷ நூ்நவஹிஷ்வெ வாஹாவிஈ்வநூதயா।

(தைத். சங். உ. சு. கக. உ)

"பல்வகை வடிவங்கொள்ளும் (அக்கினியே), கித்தியமாயவாக்கினலே இந் திரனே வணங்குதற்கு உருத்துகின்றனன்" என வாக்குக்கு நித்தியத்துவஞ்

சாதிக்குஞ் சுருதிக்கு ஸ்ரோதமுறுதலினாலும், வேதங்கள் சிவபெருமானின் காரியமாயின் (அவை) பௌருஷேயமாய் அப்பிராமாண்ணியப் பிரசங்க முறுதலினாலுமாம். ஆகலின், வேதத்துக்குச் சிவபெருமானைக் கர்த்தாவாகக்கோடல் எங்ஙனமோ எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வேதத்துக்குச் சிவபெருமானைக் கர்த்தாவாகக் கோடல் யுக்தமே;

ஈஹவ ஈஹதொ ஹூஸ்தவ நிஃஸ்வஸிதமேதத்3யத்3ஹ்ருக்3வேதோ யஜுர்வேத3 ஸ்ஸாமவேத3꞉ (பிரு. ச. ச. ஈ0)

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன இந்தப் பரம் பொருளின் சுவாசம்" என்றற்றொடக்கத்த சுருதியினுஞ் சுவாசம் போல, பரப்பிரம சிவபெருமானிலிருந்து பிரயத்தின மொன்றுமின்றி வேதத்தொகுதி உதித்தன எனப் பெறப்படலானும்,

। ஈஷாஉஸ்மாந்நா ஜேதாஸ்மாத் விஶ்வாந்நாத் ஸ்ரீஹவத்3ந்நாத்3।
ஸூதிகுத்3ரா *ஸ்ரீவஸ்மாக்ஷாஉஸ்ரீஹவாணிரிதி ஸ்ருதி꞉।

(வாயு. பூ. க. உச)

"பல்வகை மார்க்கமுடைய இந்தப் †பதினெண் வித்தைகளுக்குஞ் சாக்ஷாத்தாக முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என்றமையின், வித்தைகள் அனைத்துக்கும் சிவபெருமானே கர்த்தாவாகக் கேட்கப்படலானுமாம். சிருட்டிக்கு முன்னே தம்மிடத்தொடுங்கின வேதங்களைப் பண்டு போலாக, முன் முன் வர்ணங்களைக் கிரமமாக ஒத்தபிரகாரம் இசைத்தருளினமையின், பின் (அவற்றுக்குக்) கர்த்தா சர்வஞ்ஞராகிய சிவபெருமான். இதுபற்றி வேதங்கள் அபௌருஷேயமாயும், சிவபெருமானுடைய காரியமாயும் ஆகின்றன. எவர் விருப்பு வெறுப்புடையரோ, அவர் வசனம் பிரமாணமன்று. சமஸ்த தோஷ களங்கமில்லாதவரும், தடையிறந்த நிரதிசய ஞானப்பிரதிஷ்டையுஷ்த்தினாலே முக்காலத்துள்ள பொருள்களையும் நேரே அறியும் விலாசமுடையவரும், சுவதப்பிரமாணமாயுள்ளவரும், பரமேசுவரரும், பரமாப்தரும்,

---

*"ஸ்ரீ" பாடாந்தரம்.

†இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், சிக்ஷை கற்பம் வியாகரணம் நிருத்தம் சோதிடம் சந்தோவிசிதி என்னும் ஆறு அங்கங்களும், புராணம் நியாயம் (கன்மகாண்ட பிரமகாண்டங்களாகிய பூருவ உத்தர) மீமாஞ்சை தருமசாஸ்திரம் என்னும் நான்கு உபாங்கங்களும், ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தருவவேதம் அர்த்தவேதம் என்னும் நான்கு உபவேதங்களுமாகிய பதினெண்வித்தைகளுள்ளே பிரமகாண்டத்தினுலேலும் உபப்பிருங்கண புராணசம்பத்தினுலேலும் சிவாகமம் சங்கிரகிக்கப்படும்.

விரும்பிய அனேத்தமுடையருமாம் சிவபெருமானுடைய பிரமத்தின் வசனம் பிரமாணமே.

ரஸஸர்ந வ்ஹவ-ஃ வீஜ்ரா நாழ் (மகா. கள. தி)

"சமஸ்தவித்தைகளுக்கும் ஈசானர்"

வஜெநா ஜெவஸ்ஸுலயா வ்ஜ்ரா வஸய்நஸ்ஸு (மகா. கo. ங)

"அந்தச் சிவபெருமான் நம்மைச் *சிவஞானத்தினுலே சேர்ப்பாராக" என்னுஞ் சுருதிகளினுற் சிவபெருமானே சமஸ்த வித்தைகளுக்குப் பிரவர்த்தகராதலும் அருண்ஞானத்துக்குக் காரணராதலுங் கேட்கப்படுகின்றது. இது கொண்டு சமஸ்த வஸ்துக்களையும் பிரகாசிப்பிக்கும் வேதங்களுக்குச் சிவபெருமானே கர்த்தாவாதலின், அவருக்குச் சர்வஞ்ஞதை உண்டென நிச்சயிக்கப்படுகின்றது; அறியாததொன்றைக் கூறல் கூடாமையின். சர்வவியாபகராகிய சிவபெருமான் பொருள்களனேத்தினும் இயைந்துநிற்றலான், அவர்க்குச் சர்வஞ்ஞத்துவஞ் சித்திக்கின்றது. அங்ஙனமாயினும், சர்வவஸ்துக்களையும் விளக்கும் வேதங்களுக்கு அவர் கர்த்தாவாதலும் ஓர் விசேடத்தைக் காட்டுகின்றது. தீபமானது தன்னொளியோடு சம்பந்தமுற்ற இரசமுதலியவற்றை விளக்காது ரூபத்தையே விளக்குமாறு போல, சிவபெருமான் அங்ஙனஞ் செய்வாரல்லர்; பின் அவர் சத்தியோடிசைந்த அனேத்தையும் பிரகாசிப்பிக்கின்றனர்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுடைய சர்வஞ்ஞதையானது வேதத்திலே கூறப்பட்ட பொருள்கள் அனேத்தையும் அறிதலே. அங்ஙனமாயின், வேதார்த்தங்களே உணர்ந்த மகா இருஷிகளுக்குஞ் சர்வஞ்ஞத்துவஞ் சித்தமாகின்றது. பின் வேற்றுமை என்னே எனின்,

(உத்தரம்) அன்று; வேதங்களுக்குக் கர்த்தாவாகிய சிவபெருமான் அதிகஞானமுடையர். வியாகரணமுதலியவைகளிலே மிகுந்த அர்த்தங்களே அறிந்த பாணினிமுதலாயினோர் அவ்வியாகரணமுதலியவற்றிற்கு ஆக்கியோர்களாதல் காணப்படுகின்றது. வேதமானது சர்வார்த்தங்களையும் விளக்குமேனும், அனேத்தையும் முக்கியமாய் விளக்கவில்லே; அது சிலவற்றை இலக்ஷணையாகவும், சிலவற்றைச் சாமானியமாகவும், சிலவற்றை

*இப்பொருள்படவே "அவனருளாலேயவன்றருண் வணங்கி" (திருவாசகம், சிவபுராணம், கஅ) எனவும், "அப்படியுமன்றிறமுமவ்வண்ணமுமவனருளே கண்ணுகக் காணினல்லால்" (பொது, நாவு., திருவிருத்தாண்டகம், கo) எனவும், "நின்னருட்கண்ணுலேக்காதார்ல்லாதாரே" (திருவாரூர், திருத்தாண்டகம், க) எனவும் கூறப்பட்டிருக்கின்றது. *சமே-அம் இலக்கம் பார்க்க.

விசேஷமாகவும் (உணர்த்துகின்றது). சிவபெருமானே சர்வசாக்ஷியாய் அனைத்தையும் அறிகின்றனர். வேதத்துக்கும் சிவபெருமானுக்கும் இத்தனைதான் வேற்றுமை கொள்ளப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) சிவபெருமான் மாத்திரம் வேதத்துக்குக் கர்த்தாவாதல் நியமமில்லை;

ஷஷ்ட்யோதா ஜெவ ஊஷுவா வ்ருஜாவதிரிஷ்ட ஸவ்ஜஜ்ஞ ஜெவா யஜுஷ்மஷி வாசோநி (தைத். பிரா. உ. கூ. உ. கூ)

"ஷட்ஹோத்திரியாகிப் பிரஜாபதி இருக்கு யசுர் சாமங்களாகிய இவை அனைத்தையும் (படைத்தனர்)" என்றற்றொடக்கத்த சுருதிகள் கேட்கப் படலான், இரணியகருப்பர் முதலாயினேரும் வேதங்களுக்குக் கர்த்தாவாகப் பெறப்படுகின்றனரே எனின்,

(சித்தாந்தம்) அன்று; இரணியகருப்போற்பத்திக்கு முன் வேதங்கள் இருந்தமையின்.

யோ ப்ரஹ்மாணம் விதயாதி வாவ்ஷ்ம் யோ ஜெவ வெதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஜெவை (சுவே. சூ. கஅ)

"பிரமாவை முதற்கண்ணே படைத்து, அவருக்கு வேதங்களை அருளினர்" எனச் சுருதி கூறுகின்றது. எவர் தேவர் அனைவர்க்கும் தலைவராய் இரணியகருப்பர்க்குக் கர்த்தாவாய், இவருக்குச் சமஸ்த வேதங்களையும் உபதேசித்தாரோ, அவரே சர்வாதிகரும், வேதகர்த்தாவும், பரமதேசிகருமாம். இதுபற்றியே,

யோ தெவாநாம் ப்ரயமம் வாமஜாயிதாக்ர ஸாஜெந ஸஹ ஷிஷ்ட ஹிரண்யகர்ப்பம் வ்ருதக ஜாயமாநம் ஸ நெந தெவ்ஸாஷயா வ்ருத்யா ஸம்யாநக்ஷாம் (சுவே. ச. கஉ)

"தேவர்கள் எல்லோருக்கும் முன் உளராய், இரணியகருப்பர் பிறக்க எந்த விசுவாதிகரான்ய உருத்திர மகா இருஷி முதற்கண்ணே கண்டனரோ, அவர் நம்மை அருண்ஞானத்தினைற் சேர்ப்பாராக" எனச் சுருதி தெளிவுறக் கூறுகின்றது.

"எவர் மகா இருஷியாயும், வேதகர்த்தாவாயும், சர்வஞ்ஞத்துவமுதலியவற்றைச் சித்தம் அசித்துமாம் பிரபஞ்சத்திற்கு அதிகாரியும், பரப்பிரமமாகிய உருத்திரருமாகி, சர்வதேவர்களுக்கும் இந்திரர்களுக்கும் ஆதியா

யும், தமது சங்கற்பத்தினுலே காரணமாகிய தம்மிலிருந்து தோன்றுபவரு மாயுள்ள இரண்டியகருப்பராகிய பிரமாவைச் சிருட்டிகாலத்திலே சர்வ ஞானோபாய சகல வேதோபதேசரூபமாகிய அநுக்கிரகதிருஷ்டியினுல் திரு நோக்கஞ் செய்தாரோ, அந்தப் பரமதேசிகரே சகல சம்சார பாசமாகிய பெரிய அஞர்த்தத்தை நிவாரணஞ் செய்தற்குக் காரணமாயும், பரமாபிர்த இலக்குபியை அடையச் செய்வதாய பரமானந்தத்தை விளைப்பதாயும், அத னுற் பரம மங்கல ரூபமாய் வேதாந்தசாரசமரசஞ் சித்திக்கப்பெறுவதாயு முள்ள ஸ்மிருதி எனப்படுங் தம்மைப்பற்றிய ஞானகலேயோடு கம்மையுஞ் சேர்ப்பாராக" என்பதே (மேலே கூறிய) சுருதியின் தாற்பரியம். ஆக லின், சமஸ்த வேதங்களுக்குங் கர்த்தாவாதல் சிவபெருமானுக்குச் சித்தித் தவாருயிற்று. "வாக்கு நித்தியம்" என்னும் சுருதியானது விரோத முறுது; முன்னரே சத்தாரூபமாயிருந்த வேதங்கள் சிவபெருமானல் ஆக் கப்பட்டமையின். இங்ஙனம் வேதங்கள் சிவபெருமானுல் அருளப்பட்ட வென்பதும், அவை நித்தியமென்பதும் விரோதமுறுவன அன்றே. (கூ)

## (சு) சமந்வயாதிகரணம்.

முதலாம் அதிகரணத்தில் ஆராயற்பாலதாம் விருப்பத்தினுலே பிரதி பாதிக்கப்பட்ட பரப்பிரம சிவபெருமானே அறியும் பொருட்டுப் பிரமலக்ஷ ணம் வேண்டப்பட்டவிடத்து, இரண்டாம் அதிகரணத்தினுலே பிரபஞ் சோற்பத்திரூபமாகிய இலக்ஷணம் கூறப்பட்டது. இதற்குப் பிரமாணம் என்னே என்று வினவ, மூன்றும் அதிகரணத்தினுல் வேதாந்தசாஸ்திரம் அந் தப் பரப்பிரம சிவனே அறிதற்குப் பிரமாணமாதலும், அந்தச் சிவபெருமான் வேதாந்தசாஸ்திரத்துக்கு மூலமாதலும் நிரூபிக்கப்பட்டன. எதனுல் எந் தப் பொருள் மாறுபடாது சித்திக்கின்றதோ, அதுவே அந்தப் பொருட் குப் பிரமாணமாகக் கூறப்படுகின்றது. வேதாந்தவாக்கியங்கள் எங்ஙனஞ் சிவபெருமானேச் சாதிப்பவென ஆக்ஷேபிக்க, (அதற்கு உத்தரமாக) நான் காம் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

தத்து ஸமந்வயாத் (க. க. சு)

### (சு) அதனையே *(வேதாந்தம்) ஓரே சம்பந்தமுற இசைக்கின்றமையின்.

தத் (அதனை) என்னும் மொழியானது (ஈண்டு) ஆரம்பித்துக் (கூறிய) பிரமத்தின் மேற்று. "து" என்னும் மொழியினுல் வேத வாக்கியம் அனைத்

*"வேதத்தின்பொருளானை" (திருவன்பார்த்தான்பனங்காட்டேச, சுக்., ஆ) எனவும், "மருவினிய மறைப்பொருளே மறைக்காட்டானை" (திருமாற்பேறு, திருத் தாண்டகம், க) எனவும் கூறப்பட்டமையும் ஓர்க.

துங் தொகுக்கப்படுகின்றன. சமன்வய சப்தஸ்தாற்பரியத்தினுலே சம்பந்தங் கூறப்படுகின்றது.

படவே, "பிரமத்தை வேதாந்த வாக்கியங்கள் தாற்பரிய லிங்க சம்பந்தத்தினுல் உணர்த்துகின்றன"

என்பது சூத்திரார்த்தம். இவ்வதிகரணத்துக்குச் சமஸ்த வேதாந்த வாக்கியங்களும் விஷயம்.

வேதாந்த வாக்கியங்கள் பிரமத்தை உணர்த்துவது யுக்தமா? அன்ரு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சப்தத்தின் பொருளை உணர்த்துவது யாண்டும் (அவ்வி ரண்டுக்குமுள்ள) சம்பந்தக்கிரகணத்தை அபேக்ஷித்துள்ளது; சப்தம் அர்த் தம் என்னும் இரண்டின் சம்பந்த ஞானமின்றிப் புருஷனுக்குச் சப்தார்த்த ஞானம் எய்தமாட்டாது. சம்பந்த ஞானமும் விருத்தவியவகாரம் பற்றியது. வியவகாரமும் காரியமொன்றை விஷயமாய்க் கொண்டது. எங்ஙனமெனின், "பசுவைக் கொணர்க," "பசுவைப் பிணிக்க" என்று ஏவுகின்ற விருத்த னுடைய வாக்கியத்தைக் கேட்ட பின்னர், அதனைச் செய்யமுயன்றவனும் ஏவப்பட்டவனுமாகிய விருத்தனை அறிந்து பக்கத்தில் நின்றவன் இம்மொழி களின் பொருள் என்னை என இங்ஙனம் யோசிக்கின்றன்; எப்பிரகாரத் தினுலும் இம்மனுஷன் (தான் இன்ன) காரியஞ் செய்யவேண்டும் என்று அறிந்தபின்னர், (அது) செய்யப் பிரவர்த்திக்கின்றனன்; அந்தக் காரிய ஞானமும் (பசுவைக் கொணர்க என்றற்றொடக்கத்த) இவ்வாக்கியத்தினுல் உற்பத்தியாயிற்று; அங்ஙனமின்றேல், இந்த (ஆஞஞா) வாக்கியங் கேட் டபின்னர், இவனுக்குப் பிரவர்த்தி எங்ஙனம் பிறக்கும்! பின்னர்ப் பசு வைக் கொணர்ந்து பிணித்தலைக் கண்டபோது இன்னகாரியம் நடந்ததென நிச்சயிக்கின்றன். சப்தத்தின் பொருள் காரியமாயிருத்தலின், (முன்னுளதா மெனச்) சித்தித்த பிரம விஷயத்திலே சப்தத்துக்குப் பிரமாணமில்லை.

மேலும், காரியவிசேஷமாயுள்ள பிரபஞ்சத்துக்குப் பிரமமாகிய விசே டகர்த்தா அனுமானத்தினுற் சித்திக்கின்றமையின், இவ்விஷயத்தில் அப் பிராப்த விஷயங்களையுணர்த்தும் வேதாந்தவாக்கியங்கள் எங்ஙனம் பிர மாணமாகும்! இன்றேல் வேதாந்தவாக்கியம் அனைத்தும் விதிகளைக் காட்டு வனவன்றி, பிரமத்தை உணர்த்தா. இந்த இரண்டையும் உணர்த்துமாயின், வர்க்கியபேதம் எய்தும். ஆகலின், வேதாந்தவாக்கியங்கள் பிரமத்தை உணர்த்துதல் யுக்தமன்ரும் எனின்,

(சித்தாந்தம்) அது யுக்தம்; வேதாந்தவாக்கியங்கள் தாற்பரியலிங்கசம் பந்தத்தினுற் பிரமத்தை உணர்த்துஞ் சாமர்த்தியமுண்மையின்.

வியற்பத்தியான தி சாரியத்தினின்ம பெறப்படுதலாற் சித்தித்தபிமவிஷயத்திற் சுருதியானது பிரமாணமில்லை என்றமை பொருந்தாது; "உனக்குப் புத்திரன் பிறந்தான்" என்றற்றொடக்கத்த சித்தித்த அர்த்த வாக்கியங்களினுஞ் (சப்தார்த்த) சம்பந்த ஞானம் பெறப்படுகின்றமையின். விருத்தவியவகாரத்தினும் அறிபவனனவன் (வியுற்பித்சுவானவன்) தான் முயறற்குக் காரணமாய காரியஞானமானது பதார்த்தஞானத்துக்குப் பின் உளதாகப் பெறப்படலான், ஏவப்பட்ட விருத்தனுடைய பிரேரகவாக்கியம் பதார்த்தஞானத்தைப் பிறப்பிக்கின்றதென நிச்சயிக்கின்றனன். ஆகலின். சித்தித்த பொருள்களினுஞ் சப்தத்துக்கு அபிதானநிச்சயமுண்டு.

இன்றேல், ஈண்டு விருத்தவியவகாரத்தைமாத்திரம் பற்றவேண்டிய தென்? வியுற்பத்தி வேறு பிரகாரமாயுஞ் சித்தித்தலின். மாதா முதலாயினோர் பாலர்களுக்குக் கைவிரன் முதலியகொண்டு சந்திரன் பசு முதலியவை காட்டி, அந்தந்தச் சப்தங்கள் அந்தந்தப் பொருள்களிலே பிரயோகிக்கப்படுதலை மிகுதியும் படிப்பிக்க, அப்பாலர்கள் அந்தந்தப் பொருள்கள் இவை இவை என்று அறிந்துகொள்கின்றார்கள். காவிய நாடகங்களே அறியாதவர்கள் அவற்றை அறிந்த புருஷனை அடைந்து பதச்சேதம் செய்து, இன்ன சப்தத்துக்கு இன்னபொருள் என்று கூற, சப்தம் அனைத்தின் பொருள்களையும் அறிந்துகொள்கின்றார்கள். இங்ஙனஞ் சித்தமாயுள்ள வஸ்துவினும் ஞானமுண்மையான், அங்கே சப்தத்துக்குப் பிரமாணமுண்டு; ஆகலின், வேதாந்தவாக்கியங்களும் பிரமத்தைக் குறித்துப் பிரமாணமே.

பிரபஞ்சம் காரியவிசேடமாயிருத்தலின், விசேஷகர்த்தாவாகிய பிரமமும் அணுமானத்தினுற் சித்திக்கின்றதென்றமை பொருந்தாது; விசித்திரமாகச் செய்யப்பெற்ற இரதம், கோபுரம், பிராசாதமுதலியன (தனித்தனியே) பல கர்த்தாக்களையுடையனவாய்க் காணப்படுதல் கொண்டு அணுமானத்தினுல் இந்த உலகம் ஒரே கர்த்தாவையுடையதென்று சாதிக்கக் கூடாமையின். கர்மமுதலியவற்றின் வயத்தனுயிருக்கின்றன் கர்த்தா என்பது அணுமானத்தினுல் மேலே கூறப்பட்டமையின், பிரமம் அணுமானத்தினுற் பெறற்பாலதொன்றன்று. மேலும், சுருதியோடியைந்து நிற்றலின் அணுமானமும் பிரமத்தையுற்றுப் பிரமாணம் ஆகுக. எந்த இடத்திலே வாக்கியங்களுக்குத் தாற்பரியமுளதோ, அந்த இடத்திலே அவைகள் பிரமாண்ம்; பிரத்தியகூதி விஷயங்களுக்குப் போல, எல்லாப் பொருள்களுக்குமன்று.

வேதாந்தவாக்கியங்கொண்டு பிரமத்தைத் தாற்பரியத்தினுல் நிர்ணயஞ் செய்தற்பொன்ற இலிங்கங்கள் எவை எனின், அவை உபக்கிரம உபசங்

காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி என ஏழாம் என்று கூறுகின்றனர்.

ஆகமன், சண்டு உபக்கிரமமுதலிய இலிங்கங்களினால் வேதாந்தவாக்கியங்கள் பிரமத்திலே தாற்பரியமுடையவென நிச்சயஞ் செய்யப்படுகின்றது. எது உபக்கிரமோபசங்காரங்களிலே தாற்பரியநிர்ணயஞ் செய்யப்படுகின்றதோ, அதுவே வேதாந்தவாக்கியங்களின் சிரவணம் என்று கூறப்படுகின்றது.

ஜ்ஞானவ்ருலவ உஷ்வ ஜ்ஞானஜ்ஞ நிவ்ருத்திர்க்ஷ்ர வாக்ய வெதாஜ்ஞவாக்ய நாம ஸ்ரவணம் தத்ப்ரதிபாதிக்ஷ்ர ஸ்ரவணம் நாம வாக்யார்த நாம வெஷிகா நாம வாஸ்தவிக உபக்ரமோபஸிஹி ஷ்டிலெமஸ்ரி வெ தாத்பர்யநிர்ணயஃ॥

"அஞ்ஞானத்தினலாவது துக்கம், அந்த அஞ்ஞானத்தை ஒழிப்பது ஞானம், அந்த ஞானத்தை உதிப்பிப்பது சர்வவேதாந்தவாக்கிய சிரவணம், வேதாந்தவாக்கியசிரவணமானது உபக்கிரமாதிலிங்கங்களினுலே பரத்துக்குமேற் பராகிய சிவபெருமானிலே தாற்பரியநிர்ணயஞ் செய்கின்றது" என்பது.

வேதாந்தவாக்கியங்களுக்குத் தாற்பரியநிர்ணயம் பிரமமாகிய சிவபெருமானிலேயாமென உணர்த்தும் உபக்கிரமோபசங்காரம் ஒரு இலிங்கம். சண்டு தாற்பரியம் என்பது அந்தச் சிவப் பிரமசொரூபோபாசனை விஷயம் (பற்றியது). பின் வரும் சுருதிகள் முறையே உபக்கிரமோபசங்காரத்தை உணர்த்துவனவாயின:—

ஸஜ்ஜெவ ஸெளம்யெதமக்ர ஆஸீத் (சாந். உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்பது உபக்கிரமம்.

தத்வமஸி (சாந். உ. க. ஈ)

"அது நீயாகின்றனை" என்பது உபசங்காரம்.

யாதாத்ம்யஜ்ஞானநிஷ்டஸ்ய நிஷ்ரேயஸ (மகா. அ. ஊ)

"சிவப்பிரசாதத்தினுலே அவரது நிரதிசயானந்தரூபத்தை அறிபவனின்றனன்" என்பது உபக்கிரமம்.

ஸ ஏவ வரிவஸ்யெவமாத்மா (மகா. வே. அ)

"எவர் பரோ அவர் மகேசுவரர்" என்பது உபசங்காரம். இவ்வண்ணம் (உபக்கிரமோபசங்காரங்களால்) பிறவிடங்களினுங் காண்க.

தத்வமஸி

வவெ-ர் வெ ரூஜ்ர் (மகா. கூ. உ)

"எல்லாம் உருத்திரரே"

கூவிகூவதய உரவதயெ (மகா. கூ. ச)

"அம்பிகாபதியார்க்கு உமாபதியார்க்கு" (நமஸ்காரம்)

யொ வெவ ரூஜ்ரவுமுவா நூ ஹ-்வவ்வஃ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரும் பகவானுமாயினரோ, அவர் பூமி அந்தர சுவர்க்கம்" என்பன அப்பியாசலிங்கம். வேத மொழிந்த மற்றெப்பிரமாணத்தினும் (பிரமம்) அறியப்படாதென்பது அபூர்வதை. பிரமஞானம் பலம். பிரபஞ்சத்தின் பிறப்பிருப்பிறப்பு முதலியன அர்த்தவாதம். உபபத்தியாவது (சுகூத்தியதிகரணமுதலியவற்றிற் போல உதாகரணத்தினுற் சர்வவேதாந்த வாக்கியங்கள் வியாபகமுடைமையின் எப்பிரமாணத்தையும்) விரோதிக்காவெனல்; இன்றேல் (சென்மாத்தியதிகரணத்திற் கூறியது போல ஜகத்காரணத்துக்கு வேண்டிய) சர்வஞ்ஞதாதி குணங்கள் அமைந்திருத்தல். இந்த இலிங்கங்கள் கொண்டே வேதாந்தவாக்கியங்களுக்குப் பிரமத்திலே தாற்பரியஞ் செயற்பாற்று. வேதாந்தங்கள் கேவலம் பிரமபரமாக இன்று; பின் அவை,

சூ தா வா கரெ ரூ வஷ்வஃ (பிரு. ச. ச. கி)

*"ஆன்மாவே காணற்பாற்று" என்றற்றொடக்கத்த சுருதிகள் (பிரம) தியானவிதிபரமாயும் இருப்பனவாக அறியப்படுகின்றன. இந்த இருதிறத்தனவாகவும் வேதாந்தவாக்கியங்கள் பேதமுறுவனவாம் என்று கூறினமை பொருந்தாது; ரூபத்தை விளக்கும் கண்ணினுலே திரவியம் அறியப்படுமாறு போல, விதிபரமாகிய வேதாந்தவாக்கியங்களினுலும் பிரமம் அறியப்படுதலின். வேதாந்தவாக்கியங்கள் உபயபரத்துவமாதல்பற்றி விரோதமில்லை.

(ஆக்ஷேபம்) சாப்தமே பிரமஞானம்; இந்தப் பிரமஞானம் பிரமத்தை உணர்த்துஞ் சுருதிகளினுற் பெறப்படுகின்றது. அங்ஙனமாயின், அந்த விதியினுற் பிரயோசனம் என்னை எனின்,

(உத்தரம்) பிராப்தமாயிருந்தாலும் (அஃதாவது பிரமஞானம் விதிக்கப்பட்டிருந்தாலும்) மந்திராதிகளிலே போல் விதித்தல்பற்றி விரோதமின்று; திரவியங்களையும் தேவதைகளையும் அறிவிக்கும் மந்திரங்களை உரைக்குங்கால், திரவியமுதலியவற்றின் ஞானம் எய்துமேனும், பின்னர் அனுஷ்டானகாலத்திலே,

* 50க-ஆம் இலக்கம் பார்க்க.

ஶ்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:

"மந்திரங்கொண்டு (திரவியங்களோடும் தேவதைகளோடும்) நினைக்கத்தக்கது" என்னும் பிரயோகவிதியானது மற்றோர் ஞானத்தை அனுஷ்டிக்க வுற்றி நின்றது; அங்ஙனம் ஈண்டுமாம். உற்பத்திவிதி, வினியோகவிதி, அதிகாரவிதி என்பன இன்மையின், பிரயோகவிதியும் இல்லை எனச் சங்கிக்கத்தக்கதன்று. பிரகரணவசத்தால் உற்பத்திவிதியானது அத்தியாகாரத்தினைத் தெரிக்கும்போது, சமமுதலியவற்றைக் கற்பித்து ஆன்மாவைக் காண்க" என வினியோகவிதி எய்துகின்றது. பின்னும் இராத்திரிசத்திரநியாயங்கொண்டு,

ஜ்ஞாதவ்யோ விவ0 ஶ்ரோதவ்ய: மவ0 (சுவே. உ. கஅ)

"சிவபிரானை அறிந்து பாசங்களனைத்தினின்றும் விடுபடுகின்றான்" என்ற தற்றொடக்கத்த அர்த்தவாதத்தினைற் பெறப்பட்ட முக்திகாம அதிகாரி கற்பிக்கற்பாலனாகின்றான். ஆகலின், முக்திகாமன் அடக்கமுதலியவுடையனாய்ப் பிரமஞானத்தைப் பெறுக என்பது பிரயோகவிதி.

(ஆக்ஷேபம்) பிரமஞானமானது விதியின்பாலதொன்றன்று.

ஸ்ருதா வா அரே த்ரஷ்டவ்ய: (பிரு. ச. ச. இ; கூ. இ. சு)

"ஆன்மா காணற்பாற்று" என்றற்றொடக்கத்தவற்றிலே நித்தியமும், வியாபகமும், நிர்விகாரமும், விசுத்தமாயுமுள்ள பிரமமாகிய ஆன்மாவை விதிசம்பவமாகிய கர்மகாரகமாகக் (காணற்பாலதாம் ஓர் வஸ்துவாகக்) கொள்ளல்கூடாது; பிரமத்துக்கு உற்பத்தியேனும், பிராப்தியேனும், விகாரமேனும் எய்தாமையின். சுவதந்திரபலத்தின் பொருட்டுச் சத்துவியாயன் கொண்டு கர்மகாரகமாகிய இரண்டாம்வேற்றுமையைத் தவிர்த்துக் கருவிப் பொருளாகிய மூன்றும் வேற்றுமையாகத் திரித்து,

ஸ்ருதாநு0 வாரிவஸ்யேத் (பிரு. அ. ச. சு)

"ஆன்மாவினாலே காண்க" என்று விதித்தலும் கூடாது; பேதமுறுதலான். (அக்கினியில் எறிந்தமையால்) சத்துக்களின் பஸ்மீகரூபமாகிய வேறுபாடு நேர்வதால், அவைகளிற் சப்தத்தினைற் கரணத்துவம் இருப்பினும், பொருளினைற் கர்மத்துவம் உண்டு; இது ஆன்மாவில் எய்தாது. ஆதலின் வேதாந்தம் பிரமஞானவிதிபரம் அன்றும் எனின்,

(உத்தரம்) அன்று; கர்மத்துக்குரிய பிறப்புமுதலாயின பரமான்மாவுக்கு இன்றேனும், கர்த்தாவிலிருந்து பெறப்படும் மோக்ஷத்தின்பொருட்டு விதித்தல் யுக்தமாமாதலின்.

(ஆக்ஷேபம்) பிராப்தமாயுள்ளதற்கு விதி என்பதொன்று எற்றுக்கெனின்,

(உத்தரம்) பிராப்தமாயுள்ள கர்மம் இடைவிடாச் செய்வதாயேனும், விடாமற்றிச் செய்வதாயேனும் இருக்கின்றது. இவ்விரு பிரகாரமாகவும் நியமவிதி நேர்கின்றது.

(ஆக்ஷேபம்) அவ்வாறிருக்குங்கால், வேதாந்தங்கள் விதிபரமாயிருக்கும்போது பிரமபரமாயிருத்தல் ஒவ்வாது. ரூபத்தை அறியும் கண்ணி னுலே நிகழியும் (காணப்பட்டதற்) போல, விதிபரமாயுள்ள வேதாந்தங்களாற் பிரமத்தை இத்திப்பதென (முற்) கூறினமை யுக்தமன்று. சம்யக்த முஷ்கரன் ஒல்வோர் வஸ்துவையும் நிரபேக்ஷமாய்க் குறிப்பதில் கண்ணினது பிரமாணம்; சப்தம் (சுருதி) அவ்வாறின்று. ஆயின் யாண்டுத் தாற் பரியமூளதோ, ஆண்டுப் பிரமாணம். ஆகலின் வேதாந்த வாக்கியங்களுக்கும் பிரம்மத்தை உணர்த்துதலும் பிரமஞானத்தை விதிப்பதுமாகிய இரண்டும் எய்தாவாம் எனின்,

(உத்தரம்) அன்று;

வரீயொ யஜ்ஞ (தைத். சங். க. சு. க)

"சமித்துக்களை ஓமிக்கின்றன" என்றற்றொடக்கத்த வாக்கியங்கள் பஞ்சப் பிரயாஜத்தை விதித்தலும் அதின் அனுஷ்டானக்கிரமத்தை விதித்தலுமாகிய உபயப்பரம்மாக இருக்கக் காண்டலின். வேதாந்தவாக்கியங்களும் பிரமோபாஸனத்தையும் மோக்ஷோபகாரகமாகிய பிரமஞானத்தையும் விதித்தல் யுக்தமே.

(ஆக்ஷேபம்) பிரமம் வேதவாக்கியத்திலுலேதான் அறியப்படுகையால், அத்தப் பிரமஞானவிதி பிரயோசனமுடைத்தன்று; அந்த ஞானம் பூர்வ ஞானத்தினும் சம்பவித்தலான் எனின்,

(உத்தரம்) அன்று; வாக்கியம் வாயிலாகப் பிரமம் பரோக்ஷமாக அறியப்படினும், பிரமசாக்ஷாத்காரத்தின் பொருட்டு ஞானவிதி பெற்றுத்தமாதலின். பேதம் என்னை எனின், சப்தத்தினுலாய ஞானம் சாக்ஷாத்காரஞானத்துக்கு ஹேதுவாகாது; பின் அது உபாசனரூபஞானமே. இங்ஙனம்,

யுக்தோ ஹ்யபி த்⁻யானஸ்ய ஸாமான்யாத்ஸ்ம்ருதிவத் தத்வம் பூர்வவாத் (கைவ. எ)

"பூதயோனியும், சமஸ்தசராசரியுமாயுள்ளானைத் தியானித்து முனியானவன் இருளுக்கு மேலே போகின்றன"

---

"அண்டமாரிருநீருடைத்தும்ப
ருண்டுபோலுமோரோண்சுடராச்சுடர்
கண்டிலர்காரிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே"

(தித்தந்தொகை, திருக்குறுந்தொகை, உ)

என்று ஸ்ரீவாசகர் இச்சருதியொருள் கொண்டருளினர்.

ஸ்யாநமிஷ்டாதிவ வாஸ்ய ஏவமதி ஏஷீஃ (கைவ. கக)

"பண்டிதன் தியானங்கொண்டே கடைதலான் மாத்திரம் பரிசத்தைத் தின்கின்றனன்" என்றற்றொடக்கத்த சுருதிகளினும்,

ஜாகூா தெவம் நிஷ்டெத வஸ்வாபொஃ (சுவே. கஅ)

"சிவபெருமானே அறிந்து சமஸ்தபாசங்களினின்றும் வீடுறுகின்றனன்"

ஏஸஸ்ய கம ஜாகூா கூஷ்டா ஹவஷி (சுவே. கூ. எ)

"அவ்வீசுவரரை அறிந்து சிவசாம்பராகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினும்,

ரொாதவ்ய ஸ்ரோதிவாகெஹெஹ்யோ மதவ்யஸ்சாவபத்திஹி:
மதா ச வஸ்தவ ஏயுய வனெத ஸுஸ்நஹெதவ:॥ ///

"சுருதி வாக்கியங்களினுலே * சிரவணஞ் செய்யத்தக்கது; பொருந்துமாறு மனனஞ் செய்யத்தக்கது; சிந்தித்த பிற்பாடு இடையிடின்றித் தியானஞ் செய்யத்தக்கது; இவை (பிரம) தரிசனத்துக்கு ஏதுக்கள்" என்று ஸ்மிருதியினுஞ் சிரவணமனனத்தினுல் எய்திய பேற்றைப் பிரியாதுள்ள நிதித்தியாசனமானது பிரமசாக்ஷாத்காரத்துக்கு நிமித்தம் எனக் கொள்ளப்படுகின்றது; இதுகொண்டு உபாசனரூபமாகிய ஞானமே மோக்ஷபலம் என விதிக்கப்படுகின்றது.

ஆதெநுவாதாநம் வஸ்ரூஷ (பிரு. சு. ச. உரு)

"ஆன்மாவிலே (சத்தியோடு கூடப் பரம) ஆன்மாவைக் காண்க (உபாசிக்க)"

ஸஹ்ராகாஸஜ்யெஜ்யாயீ (அதர்வசிகை)

"ஆகாயமத்தியிலே சம்புவானர் தியானிக்கற்பாலர்"

தஜ்ஜாதி ஸாதி உவாவஸீத (சாந். கூ. கச. க)

"இந்த உலகமானது அவரிலே தோன்றி நின்று ஒழிதலைக் கண்டு, ஒவ்வொருவரும் சாந்தமாக அவரை உபாசிக்க"

வராஹநயொஹ்யாவாஹ்வ (தைத். க. சு. உ)

"பிராசீனபோக்கியனே வருகி" என்றற்றொடக்கத்த சுருதிகளினும், அங்ஙனமே

ஹரஹ்விதாவொதி வாஸ்ரு (தைத். உ. க)

---

* "கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்த்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே"
(திருப்பிரமபுரம், ஞான. உ)

† இது திருச்சித்திரம்பலத்தின் மேற்று.

"பிரமத்தை அறிபவன் நிராதிசயபிராமானந்தத்தை அடைகின்றன்" என்றற் றொடக்கத்த சுருதிகளினும் பிரம்சொரூபமும், (அதன்) உபாசனையும், பயன் முதலாயினவும் உபதேசிக்கப்படுகின்றன. அங்ஙனமின்றேற் சத்திய முத லிய குணங்களுடையதாக விசேடிக்கப்பட்ட பிரமத்தோடு கூடச் சகல காமப் பேறும், அப்படிப்பட்ட பிரமசாக்ஷாத்காரபலமும் எங்ஙனம் சித்திக்கும்! ஆகலின்,

வதை0 ஜ்ஞ நநதை0 வ்ரஹ (தைத். உ. க. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

சூநை0ஷ0 வ்ரஹ (தைத். ஈ. கூ. உஅ)

"அனந்தம் பிரமம்"

சூகாஸஸரீரை0 வ்ரஹ (தைத். க. சு. உ)

"ஆகாசசரீரம் பிரமம்"

வதை்யாத்ம வ்ராணாராம0 ம நை சூநை0ழ்ஏ (தைத். க. சு. உ)

"சத்தியான்ம பிராணராமம்; மன ஆனந்தம்"

ஸாஜி வஷ்ரை ஹ்ரீதஏ (தைத். க. சு. உ)

"சாந்தி சமிர்த்தம் அமிர்தம்"

ஓதை0 வதை்0 வரை0 வ்ரஹ வாராஷ0 கூவ்ஹவீ0ஹஹ்ஷ்ஹ்ஷ்வ்ஹ்ஷ்ரெதை0 விரஷ்வாகூழ (மகா. கஉ. க)

"இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், திருஷ்ணபிங்களமும், ஊர்த்துவ வீரியமும், விரூபாக்ஷமும்" என்றற்றொடக்கத்த (சுருதிகள்) சத்திய ஞானு னந்தரூபமும், சுவான்மாராமமும், சமஸ்த களங்கமில்லாமையும், சகல மங்களமுடைமையும், பராசத்தியை நீங்காதிருக்கும் சபள ரூபமுடைமை யாற் திருஷ்ணபிங்களமும், விரூபாக்ஷமும், திரிலோசனமுமுடையது பரப் பிரமம் என உபக்கிரமாதி தாற்பரியலிங்கங்களினாலே நிர்ணயிக்கப்படுகின் றன.

யொ வெதி கிவிதை0 ஹாஹாயாழ (தைத். உ. க. க)

"குகைக்கண்ணே அமர்ந்தவரை அறிபவன்"

வ்ரஹீநயொஹ்ரஹாவ்ல (தைத். க. சு. உ)

"பிரானை யோக்கியனே, உபாசி"

விரூபாக்ஷை வெ நமை (மகா. கூ. க)

"சிவனருபராயுள்ளார்க்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே ஞானத்தினின்று வேறாருத அவருடைய பிரமோபாசனை விதிக்கப்படுகின்றது.

வொ zஸ்ரு-ஒத வவ-ர்ர ஸ்ரூஸோ நீ (தைத். உ. க)

"சமஸ்த போகங்களையும் அடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சகல போகப்பேறுகளும் பிரமானந்தத்தோடே உபாசகர்களுக்கு எய்துகின்றன எனக் கூறப்படுகின்றது. இங்ஙனம் நிஷ்காமமாகத் தான் (செய்யும்) தருமங்களையுடையவனும், நிஷித்த காமிய கர்மங்கள் இல்லாதவனும், சுருதி ஸ்மிருதிகளிலே கூறப்பட்ட கர்மானுஷ்டான சம்பன்னனும், அதனாற் சித்தசுத்தியுடையனும், சமமுதலியவற்றோடு அணுக்கிரகிக்கப்பட்ட பரமசிவபக்தியுடையனுமுள்ள முமுட்சுவானவன் சுருதிசாரவாயிலாகப் பரப்பிரமம் எனப்படுஞ் சிவபெருமானை அறிந்து அவரைத் தியானிக்க என்னும் ஞானோபாசனை விதி பொருத்தமே. ஈண்டுச் சிவபதத்தை விசேஷணமாகப் பிரயோகித்தமை அது விரூபாக்ஷமுடைய பரமப்பிரமத்தினது பரமசிவத்திற்கும் மங்கலத்துக்கும் களஞ்சியமாயிருத்தலின் முமுட்சுக்களுடைய உபாசனையின் முக்கிய விஷயத்தை விளக்கும் பொருட்டாம். அங்ஙனம்,

ஸிவ வநொ ஜெய ஸ்ரீவ0ரூவவ-ர்நூ தூ ஸி-நூஜ்ரு|
(அதர்வசிகை)

"அனைத்தையும் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என அதர்வசிகையிலே சிவசப்தப்பொருளாம் வஸ்துவே தியானிக்கற்பாலது எனக் கூறப்படுகின்றது. இன்றேற் சம்சாரநிவிர்த்தி எங்ஙனம் எய்தும்! சமஸ்ததோஷகளங்கமின்றி நிரதிசயமங்களத்துக்கு ஆதாரமாயுள்ளதே சிவத்துவம். சிவஞானத்திலே மோக்ஷரூபபலம் கூறப்படுகின்றது.

யதா ஆ-ர்வ ஏகாஸ0 வெஷ்டயிஷ்யந்தி ரா நவாஃ|
ததா ஸிவ மவிஜ்ஞாய து-ஃவஸ்யாந்தொ ஐவிஷ்யதி|
(சுவே. சு. உ0)

*"எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உடுக்கின்றனரோ, அப்போதுதான் சிவபெருமானை அறியாது துக்கத்தின் முடிவு எய்துவதாகும்"

ஸிவ வநொ ஜெய ஸ்ரீவ0ரூவவ-ர்நூ தூ ஸி-நூஜ்ரு|
(அதர்வசிகை)

---

* பரியுஞ்சாக்கியின்றிப்பல்லுயிர்த்தோலையுமென்றும்
விரியுதயர்க்கிறெய்தினீடுபேறுண்டுமென்ற
திருமொழியையும்பிற்றேர்வுபுரிந்தறுப்பதற்கொப்பென்றே
பெருமைதியையும்பிற்றெள்ளிப்பின்னுமோர்சான்றுமுண்டே
(சங். உபதேசபஞ்சம், உ0)

"ஒத்த ரூபமாக அநேக பிரஜைகளைப் பிறப்பிப்பது" எனக் கேட்கப்பட்டான், சாங்கியப்பிரகிருதிக்கு ஜகத்காரணங்கூறல் அசங்கதம். (க. சூ. அ)ஆம் சூத்திரத்திற் சிவபிரானைக் காரணமாகக்கொண்ட பிரகிருதியே அநேக பிரஜைகளைப் பிறப்பிக்கும் என நிரூபிப்பேம். இராசச சாத்துவிக ரூபமாகிய கிரியாசத்தி ஞானசத்தியின் சம்பந்தம் பிரதானத்துக்கென்று கூறினமை அயுக்தம்; முக்குணமுடைய பிரகிருதியானது தாமசகுணத்தைத் தவிர்த்து இராசச சாத்துவிகங்களோடிசைதல் கூடாமையின். தாமசகுணமானது குறைந்துவிட, இராசச சாத்துவிக குணங்கள் மேற்படுமிடத்து, ஞானக்கிரியாசம்பந்தம் பிரதானத்துக்குளதெனக் கூறற்பாற்றன்று; சாத்துவிக இராசச தாமசகுணங்களின் சாமியாவஸ்தையுடையது பிரகிருதி என அங்கிகரிக்கப்படுதலின். சேதனராகிய சிவபெருமான் ஜகதாகாரமாகப் பரிணமற்று விகாரமுறுவர் என்றமை அஜ்ஞானவிலாசம்; நாமரூபவிபாகத்துக்கு அருகமல்லாத சூக்கும சிதசித்சத்தி விசிட்டராகிய சிவபெருமான் காரணர் என்றும், நாமரூபவிபாகத்துக்கு அருகமாகிய ஸ்தூல சிதசித்சத்திவிசிட்டராயிருக்கும்போது அவர் காரியமாதலும் உளவென்று கூறும் எமக்கு அப்பிரசங்க பயம் இல்லையாதலின்.

(ஆக்ஷேபம்) ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்।
ஏகமேவாத்விதீயம் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; ஏகமேவாத்துவிதீயம்" என்றற்றொடக்கத்தவற்றுற் சத்ரூபமாகிய வஸ்து நிர்விசேஷம் என உறுதியாய்ப் பெறப்படுகின்றது; காரண அவஸ்தையுடைய இந்தச் (சத்து) சூக்குமப்பிரபஞ்சவிசிட்டமுடையதாய் எங்ஙனங் கூறப்படுமெனின்,

(உத்தரம்) சத்தே என உறுதியாய் நிச்சயிக்கப்பட்ட இது விசேஷகுணங்களை நிஷேதிக்கவில்லை; பின் அது அசத்துக் காரணம் அன்றென்பதை நிஷேதித்தது;

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்।
ததைக்ஷத பஹ்வ்யாம் ப்ரஜாயேய (தைத். உ. எ. க)

"அசத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது; அசத்திலிருந்தே சத்துப் பிறந்தது" என்ற சுருதியைக் கேட்டு அசத்தைக் காரணம் எனல் அஜ்ஞானமுதிர்ச்சியாதலின். மேலும்,

ஸௌம்யேதமக்ர ஆஸீத்।
ஏகமேவாத்விதீயம் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; ஏகமே அத்துவிதீயம்" என்றவிடத்துப் பிரம்மத்துக்கு நிர்விசேஷணம் இல்லை என்பதனாலும்,

இச்சுருதியில் "ஆசீத்" (இருந்தது) என்பது கிரியாவிசேஷம். "அக்ரே" (முதற்கண்) என்பது காலவிசேஷம். "ஏகமேவ" (ஒன்றே) என்னும் நிச்சயம் வேறு அநிஷ்டாதா இல்லை என்பதின்மேற்று. அத்துவிதீயம் என்ற மையான் ஜகதுபாதானம் கூறப்படுகின்றது. அதனைச் சர்வஜ்ஞதையும் அனந்தசத்தியும் (பிரமத்துக்கு) உண்டு; சர்வஜ்ஞத்துவமும் சர்வசத்தித்துவமுமின்றிப் பிரமத்துக்கு ஜகத்தின் உபயகாரணம் எவ்வாறும்! இன்றேல், பிரகிருதிப்பிரத்தியயமாகிய சத்பதமானது ஒரே வஸ்துவின் மேலதாகக் கோடல் யுக்தம் அன்று; சத்பதமானது பிரகிருதியினும் பிரத்தியயத்தினும் இரு வஸ்துவைப் பிரதிபாதித்தலின். அங்ஙனம்,

ஸதீஸ்ரீவ ஸஹஸ்ரவ்ருத்தி வ்ரதயொதிதெள।
தெள வ்ரஹ்மரவ்ரமவ்ருத ஸவ்ஜ்ஜநஶாதிதெள॥

"சத்தியும் சிவனும் சத்து என்னும் பதத்தின் பிரகிருதியும் பிரத்தியயமுமாகக் கூறப்பட்டனர்; அவ்விருவரும் பிரமம்; (அவ்விருவரும்) சாரசத்தினற் சமஸ்த உலகங்களுமாயினர்" என்றது அபியுக்தசுக்தி. ஸ்தூல சூக்ஷும சிதசித் பிரபஞ்சரூபசத்திவிசிட்டராகிய சிவபெருமானே காரியகாரணரூபராய்ச் சத்து என்னும் பதப்பொருளாயுள்ளார் என்பது நிர்ணயம். (நு).

பின்னருஞ் சூத்திரகாரர் ஆக்ஷேபித்துப் பரிகரிக்கின்றனர்.

தெளணஸ்ரீ ஸ்ரீதாத்ஸ்ரீஸ்ரீ (க. க. சு)

## (சு) கவுணமெனின், அன்று; ஆன்மசப்தவுண்மையிற்.

(ஆக்ஷேபம்) சேதனத்தின் தருமமாகிய சங்கற்பமானது அசேதனமாகிய பிரதானத்துக்கு இல்லாமையின், சேதனராகிய சிவபெருமானே சத்தெனப்பட்டுக் காரணம் என்று பிரதிபாதிக்கப்பட்டார்; இது அசங்கதமே;

தி தத்ஜ வெளகூத (சாந். சு. உ. உ)
தா சூவ வெளகூஜ (சாந். சு. உ. ச)

"அந்த அக்கினி சங்கற்பித்தது; அந்த அப்புக்கள் சங்கற்பித்தன" என்றற்றொடக்கத்தவற்றில் அசேதனத்தினும் சங்கற்பம் கவுணமாகக் கேட்கப்படுமாறு போல, பிரதானத்தினும் கவுணமாகச் செல்லுமாலோவெனின்;

(உத்தரம்) அன்று: ஆன்மசப்தம் சேதனத்தை உணர்த்துதலானும், "சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்று தொடங்கி,

ஸ சூதா தீகூவஸ்ரீ (சாந். சு. அ. எ)

"அது ஆன்மா; அது நீயாகின்றனை" என்று உபசங்காரத்திற் கேட்கப்பட்டானும், தேயு முதலியவற்றினும் சங்கற்பம் கவுணமாகக் கேட்கப்

படாது, அவற்றுக்கு ஆன்மாவாயுள்ள மெய்ப்பொருளான சேதனம் அசேதனமாகிய பிரதானத்துக்கு ஆன்மாவாக ஊடுருவித் தொடர்ந்திருத்தலாலுமாம். (ஆ)

(ஆக்ஷேபம்) சங்கற்பத்தைக் காரணமாகக்கொண்டாலும், அசேதனமாகிய பிரதானத்தைச் சத்ரூபம் என்றும், ஜகத்துக்குக் காரணம் என்றும் கூறல் அடாது; சேதனத்தை உணர்த்தும் அது (சத்து) ஆன்மசப்தங் கொண்டு நிரூபிக்கப்பட்டது. ஆன்மசப்தம் அசேதனமாகிய பிரதானத்தை உணர்த்தவேண்டாம்; பின் சேதனனாகிய ஆன்மாவை ஆன்மசப்தத்தினால் முக்கியமாய்க் கூறலாமே. ஆகலின், சேதனனாகிய ஆன்மாவே ஜகத்காரணமும் சத்துமாம் எனின்.

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

காமிஷ்வ்ய சோக்ஷாவதொஷாத் (க. க. எ)

(எ) (சத்து ஆன்மா அன்று), *சத்தைப் பற்றினோற்கு மோக்ஷம் கூறப்படலான்.

சத்பதப்பொருளைப்பற்றிய தத்துவநிஷ்டனுக்கு மோக்ஷம் கூறப்படுகின்றது;

---

*(க. க. இ) ஆஞ் சூத்திரக் குறிப்பிலே சாந்தோக்கியத்துச் சந்தானது சிவன் நிருவடி என்று பொருட்படுத்தப்பட்டமையின், சத்தாகிய இறைவர் திருவடியே பிறப்பறுப்பதும், தொண்டர் துயர்வெயிற்கு நிழலாவதும், முத்திக்கரை நண்ணுதற்கு வாய்ந்த நல்ல புணையாவதும், பிற பற்றுக்களெல்லாம் அறுப்பதுமாயுள்ளதெனத் திராவிட சுருதிமுதலியன முன்வருமாறு உணர்த்துவனவாயின:—

நாளார்மயானத்துகம்பான்றனடிநினைந்து
மாளாருஞ்சிற்றையர்பால்வந்தராமறுபிறப்பே.
(திருநாளார்த்திருமயானம், ஞாக, ச)

சுழலார்துயர்வெயிற்கட்டிடும்பூதடித்தொண்டர்தன்னு
நிழலாவனவென்றுநீங்காப்பிறவிநிலைகெடுத்துக்
கழலாவினைகள்கழற்றுவகாலவனங்கடந்த
வழலாரொளியனகாண்கலையாறனடித்தலமே.
(திருவையாறு, நாவு, கக)

செல்லடியேதெருக்கித்திறம்பாதுசேர்ந்தவர்க்கேஇத்திழத்திசெய்வானே.
(திருவலிவலம், சுக, உ)

பொழிகின்றதண்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேதினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொராக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே.
(அடைக்கலப்பத்து, ச)

முடிமன்ன சாகின்ரு வுலகமு தாள்வ
ரடிமன்ன சின்பத் தலவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்ந்தின்ற தேவர்களீசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுள்ள ருரே.
(திருவாசி, திருவுந்தி, உ)

கூவூ காவுஎவ ஜிரம யாவஜ விசோகூஉ zயவாவஎஜ்வூ!
(சாந். க. கச. உ)

"அவன் (புண்ணியபாவத்தினின்று) விடுபடாதவரையின், அவனுக்கு அங்கே தாமசமே; பின்னர் அவன் (பரம) சம்பன்னனுவான்" என்றது சுருதி. ஆகலின், பிரதானமும் ஆன்மாவும் சத்பதத்தினுற் சுட்டப்படவில்லை. பிரதானகாரணவாதிகளுக்கும் அப்பிரதானநிஷ்டனுக்கு மோக்ஷம் உண்டெனல் உடன்பாடன்று; அந்தப் பிரதானம் தவிர்க்கப்படவேண்டிய தொன்றுகலின். ஆன்மநிஷ்டனுக்கு (மோக்ஷம்) இல்லை,

ஸிவ வனகூ ஜெய ஸ்ரீவ0கூர வூவ-ஆ_நு-தூரி-தூஜ்ஜ!

---

அறிவிலொழுக்கமும் பிறிதுபடுபொய்யும்
கடும்பிணித்தொகையு மிடும்பையீட்டமு
மினையபலசரக் கேற்றிலினெயெனுந்
தொன்மீகாம னுய்ப்பவந்நிலைக்
கருவெனுநெடுங கொருதுறைநீத்தத்துப்
புலனெனுங்கோண்மீ னலமந்துதொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந்தலைக்குந்
துயர்த்திரையுவட்டிற் பெயர்ப்பிடமயர்த்துக்
குடும்பமென்னு நெடுங்கல்வீழ்த்து
நிறையெனுங்கூம்பு முரிந்துகுறையா
வுணர்வெனுநெடுஞ்பாய் கிறிப்புணரு
மாயப்பெயர்ப்படு காயச்சிறைக்கலங்
கலங்குபுகவிழா முன்னமலங்கன்
மதியுடனணிந்த பொதியவிழ்சடிலத்துப்
பையரவணிந்த தெய்வநாயக
தொல்லையிலுடுத்த தில்லைகாவல
வம்பலர்தும்பை யம்பலவாணனின்
னருளெனு நலத்தார்பூட்டித்
திருவடிநெடுங்கரை சேர்த்துமரசெய்யே.
(கோயினன்மணிமாலை, கக)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.
(உத்தரவேதம். கo)

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க வவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ் சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
யெப்பற் றினையு மறவெறிவா ரெல்லை தெரிய வொண்ணுதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையா ரெம்பி ரானர் விறன்மிண்டர்.
(விறன்மிண்டநாயனர்புராணம், உ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய வைதிக சைவசமயஸ்தாபனாசாரியர் முத லாயினோர் (க. க. எ-ஆம் பிரஸூத்திரங் கூறியவாறு) சத்தாகிய இறைவன்றிரு வடியையே மோக்ஷத்துக்கு வாய்ந்த நன்பெறி எனப் பற்றினர் என்று பெறப்படு கின்றது. இச்சத்தாகிய திருவடியையே தேவாரமுதலிய பன்னிரு திருமுறை களும் மற்றைய வைதிக சைவசாஸ்திரங்களும் மூன்றும் உபநிஷதமும் பொதுளாயவண் தெண்டு புகழ்ந்து திகழ்கின்றனவே.

"பிற அணைத்தையும் விடித்து இன்பஞ் செய்வோராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என்னுஞ் சுருதிகொண்டு அது நிஷேதிக்கப் படலான். (எ)

பின்னருஞ் சூத்திரகாரர் பிரதானத்தை நிராகரிக்கும்பொருட்டு மிகு ஸ்பஷ்டமாகக் காரணங் கூறுவாராயினர்.

ஹெயகூா வஹநாஹ (க. க. அ)

(அ) (சத்தானது பிரதானம் அன்று); சத்துத் தவிர்க் கப்படல்வேண்டும் என வசன மின்மையா னும்.

பிரதானமே ஆண்டுக் கூறப்பட்டதாயின், சத்துக்கு ஹேயத்துவமே கூறப்பட்டிருக்கும்; தத்துவமசி என்றதினால் மோக்ஷகாரணமாகத் தியே யத்துவம் கூறப்படுகின்றது. ஆகலின், பிரதானம் அன்றெனல் யுக்தம். (அ)

மேலும் பிரதானபக்ஷத்தில் விரோதம் என்று சூத்திரகாரர் கூறுவா ராயினர்.

வதிஜ்ஞா விரொயாஹ (க. க. கூ)

(கூ) பிரதிஞ்ஞைக்கு விரோதமுறலான்.

மேலுஞ் சத்பதப்பொருள் பிரதானம் அன்று; ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்படும் என்னும் பிரதிஞ்ஞைக்கு விரோதமுறலான். சத் பதப்பொருளாகிய தத்துவஞானத்தினால் இந்தச் சத்தின் காரியமாகிய சமஸ்தசேதன அசேதனப்பொருளின் ஞானமெய்துகின்றது.

யெநாஸ்ருதo ஸ்ருதo ஹவதி (சாந். சு. க. க)

"கேட்கப்படாதது எதினாற் கேட்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்தவற் றுற் பிரதிஞ்ஞை செய்யப்படுகின்றது. பிரதான காரணவாதத்தில் இது விரோதம்; சேதனத்துக்குப் பிரதானம் காரணமாதல் ஏலாமையின். (கூ)

(ஆக்ஷேபம்) பிரதானம் காரணமாக அறியப்படுங்கால், சடமாயும் விகாரமுறுதற்கு ஸ்தானமாயுமுள்ள இதன் காரியமெல்லாம் அறியப்படு கின்றன; மண்ணைனது அறியப்படலான் காரியமாகிய கடமுதலியன அறியப்படுவது போல்.

ஆகலின், இங்கே யாது விரோதமென ஆக்ஷேபித்து, சூத்திரகாரர் உத்தரமிறுப்பாராயினர்.

வாவஸ்யாஹ (க. க. கo)

(கo) (ஆன்மா சத்திற்போய்) ஒடுங்குதலான்.

மேலும், பிரதானஞ் சத்பதப்பொருள் அன்று;

வுவாஜ்ஞ0 ஔ வொரீ விஜாநீஹி யஏதே₃தத்₃ப்₃ரஹ்ம் வுவிதி நாஔ ஸுதா வொரீ தஹா வஂவஹ்ரோ ஹவதி வுவீதா ஹவதி தவ்வாதெ₃ந0 வுவிதீதீ₃ாஅக்ஷதெ (சாந். சு. அ. க)

"செர்ப்பனத்தியல்பை என்னிடத்து அறிந்துகொள்; சௌமிய! ஓர் புருஷன் நித்திரை செய்யுங்கால் அவன் சத்தோடியைந்தவனகின்றான்; அவன் தன் (பரம) ஆன்மாவை அடைகின்றான்; ஆகலின் அவன் நித்திரைசெய்கின்றான் என்பர்" எனச் சேதனனகிய ஆன்மா சத்தோடியைந்து ஒடுங்குகின்றனன் என்று சுருதி யுண்மையின். ஒடுங்குவது என்பதின் பொருள் இலயம். அசேதனமாகிய பிரதானத்திற் சேதனன் இலயமுறுதல் பொருத்தமின்று. ஆகலின், பிரதானம் சத்தன்று. (கo)

சத்பதத்தினுற் சிவபெருமானே பிரதிபாதிக்கப்படுகின்றனர், பிரதானம் அன்றெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஈதி வாசோ₂ நூ₃ாஜ (க. க. ககி)

(ககி) கதி சமானமாதலின்.

இவ்வுபநிடதத்திற் சத்பதமானது சிவபெருமானுக்குச் செல்லுமாறு போல,

வை₂ரூ₂வ்ஷோ வை ரா₂ஜா₃ *ஸ்₂ருஹ்ரோ ந₃ரோ ந₃ர: |

(தைத்திரீய ஆரணியகம். கo. உசு. சஉ)

"புருஷராவார் மகாஜகிய சத்தெனப்படும் உருத்திரரே; நமஸ்காரம்! நமஸ்காரம்!" எனப் பிற சுருதியினும் (சத்தென்பது சிவபெருமானுக்குச்) சமமாய்ச் (செல்கின்றது). ஆகலின், சத்தென்னும் பதத்தினுற் சுட்டப்பட்டவர் சிவபெருமான் என்பது வெளிப்படை. (ககி)

இந்தச் (சாந்தோக்கிய) உபநிடதத்திலே வெளிப்படையாகச் சத்பத வாச்சியமாகிய (பரம) ஆன்மாவிலிருந்து எல்லாம் உற்பத்தியாகின்றனவெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸ்₂ருதக்₃வாத்₃ (க. க. கஉ)

(கஉ) சுருதியிற் கூறப்படலானும்.

மண்டூம்,

ஆத்₃மந: ப்₃ராண ஆத்₃மந ஆகாஸ: (சாந். எ. உசு. க)

*"(பரம) ஆன்மாவிலிருந்து பிராணன்; (பரம) ஆன்மாவிலிருந்து ஆகாயம்" என்று தொடங்கி,

* கடை-ஆம் இலக்கத்திற் பார்க்க.

/சூ୪க வனெவ0 வவ-டி (சாந். எ. உசூ. க)

*"(பரம) ஆன்மாவிலிருந்தே இஃதெல்லாம் (உண்டாகின்றன)" என்று கேட்கப்படுகின்றது. ஆகலின், ஜகத்காரணமாய சத்பதப்பொருளாயுள்ளது பிரமமே, பிரதானம் அன்றெனச் சித்தித்தது. (கஉ)

## (சூ) ஆனந்தமயாதிகரணம்.

ஈண்டுச் சிவபெருமானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்டுச் சாஸ்திரமொன்றினால் அறியற்பாலதாகிய ஜகத்காரணம் (சாங்கிய) தார்க்கிகர் பிதானத்தினுஞ் செல்லுமே என்னும் அதிவியாப்தியை ஆசங்கித்து, சேதனத்தினை முதலியன காரணமாதல்பற்றிப் பிரதானத்தில் அதிவியாப்தியாய்ச் செல்லாதவாறு நிரூபிக்கப்பட்டது. அசேதனமாகிய பிரதானத்திற் போலச் சேதனமாகிய ஆன்மாவினும் அதிவியாப்தியில்லையென்று கூறும் பொருட்டு, மற்றோர் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

சூ ந0ஒ8யொzஹ்ரீவ்ஸ (கு. க. கஙூ)

(கஙூ) (சிவபெருமான்) †ஆனந்தமயர்; அப்பியாசத்தினால்.

---

* சத்பதவாச்சியார்ய்ப் பரமான்மாவாகிய சிவபெருமான் சிருட்டியாதி திருத்தியங்களுக்குக் காரணர் என்பது,

படைப்புந்நிலையிறுதிப்பயன்முருமையொடுசேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிரிபுரமடையாணூர்
குடைப்பாளையின்கமுகின்னெடுமலர்நாற்றம்
விடைத்தேலருதென்றன்மிகுவேணுபுரமதுவே.
(திருவேணுபுரம், ஞாந, உ)

என்னுந் திராவிடசுருதியினாலும் கூறப்பட்டுள்ளது.

†ஆனந்தமிகுதிபுடையர் சிவபெருமான் என்று தைத்திரீயத்திற் (உ: க) கூறப்பட்டவாறு, திராவிடசுருதியில்

"ஈறிலாப்பதங்களியாவையுங் கடந்த வின்பமே யென்னுடையன்பே"
(கோயிற்றிருப்பதிகம், க)

எனவும்,

"கருணைக்கடலுக்கே சென்றாய் கோத்தும்பீ"
(திருக்கோத்தும்பீ, க)

எனவும்,

"போற்றின்கருணைவெள்ளப்புதுமைத்தப்புவனரீர்தி"
(திருச்சதகம், கூந)

எனவும் சிவபெருமான் போற்றப்பட்டார்.

மாயாவாத சர்வசாரோபநிடதத்தில் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களும் கூறி, அவை தனித்தனி இன்னது இன்னதென இலக்ஷணமுமுரைத்து, இவ்வைங்கோசங்களுக்குமேல் ஆன்மா (நிர்க்குணப்பிரமம்) உள்ளதென்று உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஐங்கோசாதீதத்திற் கூறப்பட்ட ஆன்மா "வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த சுத்தவப்பட்வினவிடை" யினும் இக்கப் பரமாத்ம உபநிடமனிலையினும் நிரூபிக்கப்பட்டவாறு மூலப்பிரதிநிதிப்பாற்பட்ட சொன்முனைப் பரப்பிரதிநிதிபாற்பட்ட பரப்பிரமமேயன்றும் என்றும், இதன் சிறப்புக்குறிப்புள்ள பெரியானே தைத்திரீயத்தி-

தஸ்மாத்வா ஏதஸ்மாத்ஆத்மந: ஸர்வே காமாஸ்ஸம்ப்ரதூதா: (தைத்-உ-க) (ப்ரம) ஆன்மாவிலிருந்தே நிச்சயமாக ஆகாயம்பிறந்தது" என்று தொடங்கி, தஸ்மாத்வா ஏதஸ்மாத்ஆத்மந ஆகாஶ: ஸம்பூத: (தைத்-உ-ரு) "விஞ்ஞானமயத்துக்குவேறுபட்ட அந்தரான்மாவான வர் ஆனந்தமயர்" என்றுகூறும் பிரும்மானந்தவல்லியில் அன்மயாதி தேகாத்மாவின் மறைந்த ஆனந்தமயாத்மிய (பரம) ஆன்மாவானவர் காயமுதலிய சகலபூதங்களுக்கும் காரணர் என்று கூறப்படுகின்றது. ஈண்டு ஆனந்தமய ஆன்மாவா? தியபெருமானா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம்). ஆன்மாவென்பது பூர்வபக்ஷம்; ஆன்மாவுக்குரிய குணமுணர்த்தும் ஒன்று காணப்படுதலின்; ஸர்வாணிஹவாஇமானி - வ்யதிரிக்தா ஏதஸ்மாத: ஏதஸ்மிந்நாத்மந: ஸம்பூதா: " (தைத்-உ-க): — பிருதிவியிலிருந்து ஔஷதிகளும் ஔஷதியிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து புருஷனும்" என்றற்றொடக்கத்தவற்றுள், ஐந்து அவயவமுடைய சரீரமுதலிய நிருபிக்கப்படுகின்றன. ஈண்டு அன்னமயம் என்றதுசரீரம் பிராணமயம் என்றது சரீரத்துள்ளதும் பிராணன், மனோமயம் என்றது அதனுள்ளதும் மனம்; விஞ்ஞானமயம் என்றது புத்தி; ஆனந்தமயம் என்றது குணமயமான ஆத்மாவாகிய ஆன்மாவே. அன்றி, தைத்திரீயத்தில் தொடங்கி ஆறு வாக்கியங்களில் பரமாத்மாவே பரதத்துவம். அன்றி, தைத்திரீயமே மாகவும் பாஷ்யகாரர்களின், ஸர்வவ்யவஸ்தைகளிலும் கொள்ளத்தக்கது. படைத்தற்கு முற்பட்ட + து: சிலர் சாரீரகர் என்பர்கள். ஸ்ரீபாஷ்யத்திலும் ஆன்மா, ஸ்வரூபம் ஆனந்தமயமும் என்று கூறப்பட்டதும்

---

தும்(உ-அ), வேதாந்த சூத்திரத்திலும்(க-க-கூ), சைவபாஷ்யத்திலும் கோத்தப்பட்ட அவரவர்க்கு வேறு ஆனந்தமுடைமையை கொண்டு பிரியப்பாற்று. இதனில், ஐந்தாகாசங்கள் மாயாவாதி சிவ சாரம், திருப்பாவாத வைத்தாரியம் என்றும் விருத்தாத்து உபநிடதங்களிலும் கூறப்படுதலின்றும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சிவபூமினாலையாற்றும், ஸ்யாதச் (க-க-கூ) ற்கு கூறியாங்கு, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம்- (அதிலுமிருந்தே யுதித்தான் என்றும், "ஆனந்தமயர்"- (ஆனந்தமுள்ளவர்) யென்னுமோன் என்றும் பெறப்படுவான் ஈண்டு ஸ்ரீகோன்மலாதியர் சர்வதாரோபரி ஸ்ரீயும் கூறும் வைத்தாரியபரிபூரண பொருளை இணக்கிவைத்து ஆனந்த மயத்திலுமியலும், சிவபிராதல் ஆனந்தமும் என்றற்பாலதும் தெரிந்து தன்மயில் முடிவுக்கு ஏற்றவாறு முற்றுவதும். அஃதன்றிவேறுபிரமம் ஆனந்தமயமாக விளக்கத்தக்கது. ரஹஸ்யம், ஸ்ரீகோன்மலாதாசாரியர் அருளிச்செய்த ஆனந்தநிலையில் என்று இவ்வாறு அதிகரணத்தை முடித்து, சூத்திரம் ஈறுபாடும் ஒரு பாஷ்யமொருபடியாக ஒன்றுபட்டுமே கோக்கப்பட்டுள்ளது.

(பூருவபக்ஷியின் உத்தரம்) அன்று; ஈண்டு ஆனந்தசப்தம் பரப்பிரம சிவபெருமான் மேற்று;

ஸநo தொ வரஹ (தைத். ஈ. சு. க)

"ஆனந்த(குண)முடையது பிரம்" என்று கூறப்படலான். மயசப்தம் விகார ரூபொருளே உணர்த்துதலின், சிவபெருமானுடைய காரியமாகிய சிவனே ஆனந்தமயம் என்று கூறப்படுகின்றது. நித்தியசிவத்துவத்தையுடைய சிவபெருமானே ஆனந்தமயமாக அங்கிகரிப்பின்,

ஸஜீயே வராணீயே ஜ்ரீநாயே விஜ்ஞாநீயே ஸநந்தீயே தி ஸுஜ்ஞாதார்ஜ்ரி (தைத். ஆரணியகம். கo. சுசு. அசு)

(பூருவபக்ஷியின் ஆக்ஷேபம்) "எனது அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் சுத்தியாகுக" என்னுஞ் சுத்திப் பிரார்த்தனை வியர்த்தமாகும். ஆகலின், இவ்வானந்தமய ஆன்மா சிவான்மாவே; சிவபெருமான் அன்றெனின்,

[redacted] ஆனந்தமயமாகிய ஆன்மா சிவபெருமானே; [redacted] னந்தம் [redacted] டையதாக அப்பிய சுத்திலுல் (மீட் [redacted] ன். [redacted] ப்பியசிக்கப்படுகின்றது?

[redacted] ஸஹ (தைத். உ. அ)

[redacted] தொடங்கி, விசேடமனிதருடைய [redacted] அவ்வவ்வர் [redacted] க்கு மேன்

[redacted] ஸநoஜீ (தைத். உ. அ)

[redacted] பகிறுதியாகப் பிரமானந்தம் நிரதி [redacted] பியசிக்கப்படுகின்றது. இந்த நிரதி [redacted] ம்சார்த்தகெய்தாது.

[redacted] தியசுத்தராகிய சிவபெருமான் ஆனந்த [redacted] ரப் பிரார்த்தித்தல் என்னையெனின்

[redacted] உதிருஷ்ட பிரகாசமுடைய சந்திரனை மறை [redacted] தாய்தாய் விளங்குதல் போல, நித்திய [redacted] ாது மறைக்கும் திரோதானமலம் [redacted] மயீ சிவபெருமானே. (கூ)

[redacted] எடுத்துக் கூறப்பிடுகின்றது; அதனை [redacted] என்னும் பிரதியயத்திற்கு விகாரார்த்த

மூண்மையின். சிவபெருமான் ஆனந்தமயராயின், பிரமத்திருந்து அவ்வீசுவரர் வேறுவர் எனக் கொள்ளப்படுவர். அங்ஙனஞ் சிவபெருமான் விகாரரூபராயின், அவரும் அநித்தியராவர் என்னுஞ் ஆசங்கைக்கு,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

விகாரஸஞ்ஜாஹேநி ஜெஹு வ்ராஜயு-ாசு (க. க. கசு)

(கசு) விகாரசப்தமுண்மையின் ஆனந்தமயம் பிரமம் அன்றும் எனின், அன்று; அது *மிகுதிப்பொருட்டாகலின்.

(ஆக்ஷேபம்) அன்னமயமுதலியன அன்னமுதலியவற்றின் விகாரமாதல் போல, ஆனந்தமயமும் ஆனந்தத்தின் விகாரமாம்; விகாரமாயுள்ள கடமுதலியன மண்மயமாதல் போல. ஆகலின், சிவபெருமானுக்கு விகாரமின்மையின் ஆனந்தமயம் ஆன்மாவேயாம் எனின்,

(உத்தரம்) அன்று; ஈண்டு "மய" சப்தம் மிகுதிப்பொருண் மேற்றுமாகலின். அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்பவற்றிற்றான் மய சப்தம் விகாரப்பொருளின்மேற்று; விஞ்ஞானமயம் என்றது விஞ்ஞான மிகுதியையுடைய ஆன்மாவின் மேற்று; ஆனந்தமயம் என்றது ஆனந்தமிகுதியையுடைய சிவபெருமான் மேற்று. (கசு)

(ஆக்ஷேபம்) எப்பிரகாரத்தினுலேனும் மயசப்தம் விகாரப்பிரகரணத்திற் படிக்கப்படுதலின், விகாரார்த்தம் கோடலே உசிதம் என ஆசங்கிப்ப,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

தஜ்ஜ-ா வ்ருஜ்ஜொாஜ்ஜ (க. க. கரு)

(கரு) (அவர்) அதற்கு ஏதுவாகக் கூறப்படலானும்.

வாஷ ஹ்ரூவ, சூநமயாதி (தைத். உ. எ)

"இவர் நிச்சயமாக †ஆனந்தத்தை விளைவிக்கின்றனர்" என உபநிஷதம் ஆனந்தத்துக்குக் காரணராதலின் ஆனந்தமயர் என்று கூறப்படுகின்றார். தாம் மிக ஆனந்தமுடைமையினன்றோ, அவர் பிறர்க்கு ஆனந்தத்தை விளைக்கின்றனர். ஆகலின், சிவபெருமானே ஆனந்தமயர். (கரு)

---

* மய சப்தம் (ஆனந்த) மிகுதிப்பொருளிலே சென்றதென்று வியாசர் சூத்திரம் செய்தருளியிடத்தும், அதனைப் பொருட்படுத்தாது சங்கரமதாசிரியர் அன்னமயாதிகளிற் போல் (ஆனந்த) மயமும் விகாரப்பொருளிற் சென்றதென்றுரைத்து சூத்திரார்த்தம் வழுவுறச்செய்தனர்.

† தாம் ஆனந்தக்கடலாதலின் முக்தர்க்கு ஆனந்தம் விளைக்கின்றனர் என்பது,

சேரல்மாகரியுரித்தவரவொடுமேனக்கொம்பிளவாமை
சாலப்பூண்டுத்தம்மிய திருடியசங்கரர்ஞர்தம்மைப்

(ஆக்ஷேபம்) ஆனந்தமிருதியுடைய சிவபெருமான் ஆனந்தமயர் எனக் கூறப்படினும், இவர் பிரமத்தினின்று வேறானவர் எனப் பெறப்படுகின்றது;

ரஸஹ்யே ஹ்யேவாயம் லப்த்வா (தைத். உ. கி)

"ஆதாரமாகிய பிரமம் புச்சம்" என்னுஞ் சுருதியினும் சிவபெருமான் தமக்குப் பிரமத்தை ஆதாரமாகக் கொண்டனர் எனப் பெறப்படலான். சிவபெருமானினின்று பிரமத்தை வேறாகக்கொள்ளின், சுவாதந்திரியமின்மையான் பிரமத்துக்கு ஜகத்காரணமாதன்முதலியன அசம்பவமாகும். ஆகலின், ஈண்டு ஆன்மா என்று கோடலே சமீசீனமெனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

சாஸ்த்ர யோனித்வாத் (க. க. கசு)

(கசு) மந்திரத்திற் குறிக்கப்பட்ட (பிரமம் ஆனந்தமய மாகக்) கூறப்படலான்.

ஸ தஸ்ய ஜாத உதஹ ரஸஹ (தைத். உ. க)

---

போலத்தம்மடியார்க்தமின்படிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினேனில்லாவே.
(திருச்சிரபுரம், ஞான, உ)

எரிநிறைந்தனையசெல்வன்கண்டாயின்னடியார்க்கின்பம்மிளைப்பான்கண்டாய்
(திருமறைக்காடு, திருத்தாண்டகம், நாவு, கி)

தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கழதரும்பி
யின்னல்களேவனவின்னம்பரான்றனிவேயடியே.
(திருவின்னம்பர், நாவு, க)

கல்லேப்பிசைந்தகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனே.
(திருவம்மானே, கி)

அண்டமுதலாயினனைத்தமிலாவானந்தம்
பண்டைப்பரிசேபழவடியார்க்கீந்தருளு
மண்டம்மியப்புறுமாபாடுதுங்காணம்மானுய்.
(திருவம்மானே, க)

தானந்தமில்லான்றனையடைந்தாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடி
யானந்தவெள்ளத்தழுத்துவித்தவிருவடிகள்
வானந்தேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ.
(திருச்சாழல், கஅ)

பேச்சற்ற வின்பத்துப் போனந் தத்திலே
மாச்சற்ற வென்னைச் வெமாச்சி மான்லித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றும் கைக்கொண்டு
வாச்ச புகழ்மான்த் தாட்டாதி மன்னனே.
(திருவாசகம், திருச்சதகம், கஅ)

என்னுஞ் சிவாவிட சருதினாரணம்

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என்னும் மந்திரத்திற் கூறப்பட்ட அந்தப் பிரமமே,

சுநெ்யாஹ்ரு சூத்ர நம்ஷியோ் (தைத். உ. இ)

"மற்றோர் அந்தரான்மாவானவர் ஆனந்தமயர்" எனச் சுருதியில் ஆனந்தம் மிருத்திருத்தலின் ஆனந்தமயம் என்று கூறப்படுகின்றது.

ஸ்ரஷ்வுஹ்ம வ்ரதிஷ்டா (தைத். உ. இ)

"ஆதாரமாகிய பிரமம் புச்சம்" என்னுஞ் சுருதியிலுள்ள பிரமம் என்னும் மொழி பிரணவத்தின் மேற்று. அப்பிரணவம் சிவபிரானது வாசகமாதலின், (அது) அவர்க்கு ஆதாரம்.* (கசு)

## (எ) இதராநுபபத்தியதிகரணம்.

பிரமமாகிய சிவபெருமானுக்குச் சமவ்வயசித்தியில் வாய்ந்த ஜகத் காரணத்துவ முதலிய இலக்ஷணம் பிரதானம் ஆன்மா என்பவைகளுக்கு அதிவியாப்தியினுற் செல்லாதென்று தாபிக்கப்பட்டது. இதன்பின் சிவ சமஷ்டிரூபராகிய இரண்ணியகருப்பருக்கு ஜகத்காரணத்துவ முதலிய கேட்கப்படுகின்றதே என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

நேதரோ நுவபத்தோ் (க. க. கள)

## (கள) பிறரும் அன்று; பொருத்தமின்மையின்.

யதோ் வ்ரஹ்ம தா ஜநதோ் வ்ரஹ்மதிதோ யெந ஜீவாந்ரஹ்ஜ ஹ்ருதோ்ழ் யதொஷயீஹோ் வ்ரஹ்ஷாந்ரஹ்ஸ விவெஸ ஹ்ருதாதி ஸ்ரா ஸ்ரா்ணி (தைத். ஆரணி. கo. க. க)

"பிரபஞ்சோற்பத்தி எங்கிருந்து உளதாயிற்றோ, அதுவே நீரினுற் பூமியிலே (உயிர்களுக்கு) சரீரத்தைத் தோற்றுவித்தது; அதுவே ஒஷதிகள் வாயிலாகப் புருஷர்களையும், மிருகங்களையும் சராசரப்பொருள்கள் அனைத்தையும் பிரவேசித்தது" என்னும் மகோபநிடதசுருதியே விஷயம்.

இகம் அனைத்தையுந் தோற்றுவித்தற்குக் காரணராகக் கேட்கப்படும் புருஷர் சிவபெருமானோ? பிறரா? என்பது தர்க்கம்.

---

* இதற்கும் பின்னால் போந்த வடமொழிச்சில்லெல் பாஷ்யகாரர் சமஸ்கிருத முத்தம் சிரோதமுலில்லாதவை ஒன்றையென்ற மொழிபெயர்க்கப்பட்டன. [illegible] அப்பாஷ்யகாரரையும் [illegible] அவர்க்கே சாலவும் [illegible]

(பூருவபக்ஷம்) இரண்ணியகருப்பர் என்பது பூருவபக்ஷமாகுமென்ன? அவருக்கு (சண்டிக்கு உரப்படும்) குறிகளுண்மையின்.

வசகாண-வெ ஆதா ஏதெரொக்கே வ்வே நாராயணா ஆகூ।
ஹொமிபாயுர்மதஸ்ஸெதெ ஏதெரொகூ ஸ்ரவஷ்ஷுரஹிதூ॥

"மூவுலகமும் ஒரே சமுத்திரமாய்விட, பிரமாவானவர் நாராயணரூபராய் மூவுலகங்களையும் உண்டு சர்ப்பசயனத்திற் சயனித்கின்றனர்" என்னும் புராண வசனத்தினைப் பிரமாவுக்குச் சமுத்திர சயனம் பெறப்படுகின்றது.

யதேவஷ்ஷுஷ்டெ கவயொ வயஜ்ஞே (தைத். ஆரணி. க0. க. க)

"எவரைப் பெரியோர் சமுத்திரத்தில் (உளராகத்) தியானிக்கின்றனரோ" என்னுஞ் சுருதியினால், அவர் இலக்கணம் அறியப்படுகின்றது.

வராவதிஸ்ஸுதி முஹ் zஹூ: (தைத். ஆரணி. க0. க. க)

"பிரஜாபதி உள்ளே உள்ள கர்ப்பத்திற் சரிக்கின்றனர்" என (உபகிடத அநுவாகத்தின்) உபக்கிரமத்திலே, அவர் அனேத்தையும் பிரவேசித்தார் எனக் கூறப்படுகின்றது,

வஷ்டியுர்வா அதேவெள யாதா யயாவ-ஷ்டிகூயகு।
ஏவஷ்வேயிவீஷ (தைத். ஆரணி. க0. க. கச)

"இரண்ணியகருப்பர் முன்போலச் சூரியனையும் சந்திரனையும் ஆகாயத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்" என உபசங்காரத்திற் கூறிய சுருதியும் அவரைக் காரணர் என்று கூறுகின்றது. கூறவே, உபக்கிரமோபசங்காரங் கொண்டு முடித்த இரண்ணியகருப்பருக்கே (அவ்வுபக்கிரமோப்சங்காரத்துக்கு) இடையே போந்த சுருதிகள் கூறும் குணங்களுஞ் செல்லாநின்றன. மேலும், இரண்ணியகருப்பரைப் பிரதிபாதிக்கும் பிற இடங்களினும் உபசங்காரஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

கூஷ்வஷ்ஷுஹ-ஷ்டெதா ஹிரண்யமஹ் ஜாயவெள।
(தைத். ஆரணி. க0. க. கூ)

"நீரிலிருந்து இரண்ணியகருப்பர் பிறந்தார் என்பதறுதியாயுள்ள எட்டு மந்திரங்களினும்" பிரஜாபதியே பிரதிபாதிக்கற்பாலர்;

வராவதி ஸ்ரூதி முஹ் zஹராஜாயதொ வஹ-யா வ்ஜாயதெ।
(தைத். ஆரணி. கூ. கூ. ச0)

"உள்ளேயுள்ள கர்ப்பத்திலே பிரஜாபதி சரிக்கின்றனர்; பிறவாதவர் அநேகரூபமாய்ப் பிறந்திருக்கின்றார்" என்று காணப்படுவதனால்,

ஹிரண்யமஹ் ஷவே-ஷ்டெ தாரெஹ்।
(தைத். சம். க. க. அ. கூ)

"இரண்ணியகருப்பர் முதற்கண் இருந்தார்" என்னும் இடத்திலும்,

प्रजापतिर्वै हिरण्यगर्भः।

(தைத். சங். இ. இ. க. உ)

"பிரஜாபதியே இரண்ணியகருப்பர்" எனக் கேட்கப்படலானுமாம். ஆகலின், இரண்ணியகருப்பரே பிரபஞ்சோற்பத்திக்குக் காரண முதலியனவாகப் பிரதிபாதிக்கப்படுகின்றனர் எனின்,

(உத்தரம்) கூறுதும். சண்டிச் சிவபெருமானுக்கு வேறாக மற்றோர் இரண்ணியகருப்பர் கூறப்பட்டனரல்லர்; பிரபஞ்சகாரணமாதன் முதலிய சிவபெருமானர் குணங்கள் இரண்ணியகருப்பர்க்குச் செல்லாமையின்.

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह (தைத். ஆரணி. கo. க. க)

"எதினின்று பிரபஞ்சோற்பத்தி உளதாயிற்று" என்று தொடங்கி, பிரபஞ்சகாரணராகிய சிவபெருமான்

अणोरणीयान् महतो महीयान् आत्मा गुहायां निहितोऽस्य जन्तोः।
तमक्रतुं पश्यति वीतशोको धातुः प्रसादान्महिमानमीशम्॥

(தைத். ஆரணி. கo. க. க)

"மகத்துக்கு மகத்தாயும், பரத்துக்குப் பரமாயும், அணுவுக் கணுவாயும், ஒன்றுயும், வெளிப்படாததாயும், அனந்தரூபமாயும், விசுவமாயும், புராணமாயும், தமசுக்கு மேலாயுமுள்ளது" என்றற்றொடக்கத்தனவாகப் போந்தவற்றில், அவர் சர்வோற்கிருஷ்டராகவும், பிரகிருதிக்கு மேலானவராகவும் அறியப்படுகின்றனர்.. ஆகலின், இந்த இலக்ஷணம் அண்டகடாட்டிருக்கும் இரண்ணியகருப்பருக்கு (பிரமாவுக்குச்) செல்லாது. மேலும்,

य एनं विदुरमृतास्ते भवन्ति।

(தைத். ஆரணி. கo. க. உ)

"எவர்கள் இவரை அறிகின்றார்களோ, அவர்கள் *அமிர்தராகின்றார்கள்" என்னுஞ் சுருதி அவரது ஞானத்தினல் எய்தும் சிவத்துவம் முத்தியாம் என்றி கூறுகின்றது. இது இரண்ணியகருப்பர்க்கெய்தாது; சிவபெருமானுக்கு முத்திஹேதுத்துவமே அசாதாரணலிங்கம்;

यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः।
तदा शिवमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति॥

(சுவே. சு. ஏ.)

"எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உடுக்கின்றார்களோ, அப்போது தான் சிவபெருமானை அறியாது (அவர்) துக்கத்திற்கு முடிவு எய்

*உபநிடதப்பிரசித்தமான சுருதியின் இலக்கம் பார்க்க.

தும்" என்னும் சுருதி கேட்கப்படலான். உபக்கிரமோபசங்காரத்தினுல் (இரண்ணியகருப்பர்) சித்தித்தார் என்று கூறுவதிற் பயனில்லை. அவர்க்குப் பொருந்துமாறின்மையின், பிரஜாபதி தாதா என்னும் மொழிகள் இரண்ணியகருப்பரை விடுத்து, பிரஜைகளாகிய பசுக்களுக்குப் பதியும், உலகத்தைத் தாங்குபவருமாகிய சிவபெருமானையே பிரதிபாதிக்கின்றன. (தைத். சங். சு. க. அ. சு; தைத். ஆரணி. கூ. கஙூ. சு0) என்னும் சரிடத்தும் சிவபெருமானே பிரதிபாதிக்கற்பாலர்; எங்ஙனமெனின்,

ய ஏஏஸை கவஸ்ய ஷ்வஷ்ட்ரு-ஸ்ஸுஷ்ட்ரீ (தைத். சங்கி. சு. க. அ. சு)

"இருகாலும் நாற்காலுமாயுள்ளவற்றை எவர் ஆளுகின்றாரோ" எனவும்,

சுஷ்டி-கீர்வண-ம0 கரவஸ்ரீ வாஸ்ரீஸ்ர।
(தைத். ஆரணி. கூ. கஙூ. சு0)

"தமசுக்குமேலே ஆதித்தியவர்ணராயுள்ளார்" எனவும் சுருதிகள் அவருக்கு (முறையே) விசுவேசுவரத்துவத்தையும் விசுவாதீதத்தையும் இசிங்கமாகக் கூறலான். ஜகத்காரணமுதலியவற்றுற் பிரஜாபதிசப்தவாச்சியர் சிவபெருமானன்றி இரண்ணியகருப்பர் அன்று. (கள)

சிவபெருமானுக்கும் இரண்ணியகருப்பர்க்கும் பேதமின்மையின், பிரபஞ்சகாரணம் இரண்ணியகருப்பர்க்கு ஆகலாம் என, அதனை ஆசங்கித்து

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஹேஷ்வ்யவதெஸாத்ஸ (க. க. கஅ)

## (கஅ) பேதங் கூறப்படலானும்.

யொதெவா நா0 வ்யஸ0 வ்ரஸ்ரஷ்ட்ரீஸ்ரயிதொ ரூதெரா ஸஹ வஷி-ர் ஹி-ர்ணயுஹ-ம0 வஸ்ரு-தஜாயஸ்ரோ நிழ।
(தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"விசுவாதீதரும் மகர்ஷியுமாகிய உருத்திரர் தேவர்களுள்ளே முற்பட்டவராகிய இரண்ணியகருப்பர் முதற்கட் பிறக்கக் கண்டனர்" என்னும் இம்மகோபநிடதத்திலே, சிவபெருமானுக்கும் இரண்ணியகருப்பர்க்கும் (முறையே) காரணகாரியத்தினைப் பேதமாம் முறைமை கூறப்படுகின்றது. ஆகலின், இரண்ணியகருப்பர்முதலிய பிரபஞ்சம் அனைத்துக்கும் காரணர் சிவபெருமான் என்று சித்தமாயிற்று. (கஅ)

பின்னரும் சூத்திரகாரர் ஆசங்கித்துக் கூறுகின்றனர்.

காமோ நா நுபோதாவெஷா (க. க. கக)

(கக) சங்கற்பமுண்மையானும் அனுமானுபேக்ஷையில்லை.

ப்ரஜாவதி ரகாமயத ப்ரஜாஸ்ஸ்ருஜேய।

(தைத். சங். கை. க. க. க)

"யான் பிரஜைகளைச் சிருஷ்டிசெய்வேனாக எனப் பிரஜாபதி காமுற்றனர்" என யாண்டும் சுருதிகளிலே உலகசிருஷ்டிவிஷயத்தில் இரண்ணியகருப்பருடைய சங்கற்பம் கூறப்படுகின்றது. அங்ஙனமாயினும், அவர் உலகத்துக்குக் காரணமாதலியற்று அனுமானுபேக்ஷையுக்தியபேக்ஷை இல்லை; அவரது காமம் (சங்கற்பம்) அவாந்தர சிருட்டி விஷயம் பற்றினமையின். வேதாந்த சூத்திரத்து (உ. ச. கள) லே இந்த இரண்ணியகருப்பரது அவாந்தரசிருஷ்டியும் சிவபெருமானுக்கே உரித்தென்று (சூத்திரகாரர்) கூறுவர். (கக)

கதந ஜீவெநாத்மநாநுப்ரவிஸ்ய நாமரூபெ வ்யாகரவாணி

(சாந். சு. கை. உ)

"இந்தச் சிவனுடைய ஆன்மாவோடு பிரவேசித்து நாமரூபத்தைப் பேதமுறுத்துவேன்" என இரண்ணியகருப்பரூபமாகப் பிரபஞ்சத்துள்ளே பிரவேசித்த சிவபெருமானே நாமரூபங்களுக்குக் கர்த்தாவாம் எனக் கேட்கப்படுகின்றமையின், இவ்விருவர்க்கும் அபேதமே அங்கிகரிக்கற்பாற்றெனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கவிஸேஷாத் ப்ரதிஷேதாத் நாவஸ்தா (க. க. உ)

(உ) ஈண்டு இவருக்கும் அவர் சம்பந்தம் கூறுகின்றது.

ப்ரஹ்மாயிவதி ப்ரஹ்மணோயிவதி।

(தைத். ஆரணி. க. உ. கூ)

"பிரமாவுக்கு அதிபதியாகிய பிரமமே அதிபதி" என்னும் இவ்வுபநிடத தந்திரத்து மந்திரபாகம் சிவபெருமானுக்கு இந்த இரண்ணியகருப்பர் அதிஷ்ராய்ச் சேஷத்துவசம்பந்தமுடையரென்று கூறுகின்றது. ஆகலின், சிவபெருமானே உலககாரணர். இவர்க்கு இரண்ணியகருப்பர் சேஷபூதர் என்று சித்தித்தது. (உ)

## (அ) அந்தரதிகரணம்.

மேலே அதிகரணநியாயங்களினைற் சர்வஞ்ஞரும், நித்தியதிருப்தரும், அநாதிபோதமுடையரும், சுவதந்திரரும், அலுப்தசத்தியினரும், அனந்த சத்தியினரும், சர்வப்பிரபஞ்சோபயகாரணரும், சமஸ்த உபநிடத தந்தி

ரங்களினும் சமன்வயமாகப் பிரதிபாதிக்கப்படுபவரும், சுவப்பிரகாசமாகிய சமஸ்தப் பிரபஞ்ச விசிட்டாத்துவிதிய சுபாவமுடையரும், *சுத்தாநுத்த சொரூபரும், சம்சாரமாகிய பாசத்தைச் சேதிக்கும் காரணரும், சித்து அசித்து என்னும் இரண்டுக்கும் வேறுனவருமாகிய சிவபெருமானே பரப் பிரமம் என்று சித்தித்தது. சாதகர்களுடைய சம்சாரத்துக்கு ஒளஷதமா யும், மனசைச் சமாதானஞ் செய்ய யோக்கியமுடையதாயுமுள்ள அவரு டைய வடிவமொன்றை உணர்த்துமாறெழுந்தது இவ்வதிகரணம்.

கூதஹஜுஜெ-ர வஜெஸ்ஸு (க. க. உக)

(உக) உள்ளேயுள்ளார் (சிவபெருமான்); அவர் குணங் கள் கூறப்படலான்.

ய வஷொஹஸாதிதெ ஹிரண்யஂ வ்ரு-ஷெ ஹ்யஸ்ருதெ ஹிரண்ய ஸ்மஸ்ரு- ஹிரண்யகெஸ ஆப்ரணாத்ஸுவ: வஸ வ்ரு-வண: ஸுவர்யயா கவ்யாஸ வ்ரு-ண்ஜீகெவெ ஸகுஷிணீ (சாந். க. சு. சு, எ)

"பொற்றுடியோடும், பொற்கேசத்தோடும், *நகந் தொடுத்து முழுமையும்

---

*சாந்தோக்கியத்திலே (க. சு. சு) கேசாதி பாதாந்தம் பொன்வண்ணராகக் கூறப் பட்டவர் விஷ்ணுவா? சிவபெருமானு? எனின்,

கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன்.
(முதலாயிரம், நாசியார்திருமொழி. க. சு)

கடல்வண்ணன்கண்ணன்
(திருவாய்மொழி, கூ. சு. க0)

என்றற்றொடக்கத்தனவாக நாலாயிரப்பிரபந்தத்தினும், அங்ஙனம்

பெருங்கடல்வண்ணனும்பிரமனுமோரா
வருமையரடிநிழல்பரவிநின்றேத்துமன்புடையடியவர்க்கணியருமாவர்.
(திருவிடைச்சுரம், ஞான, க0)

கரியவனுன்முகன்காணவொண்ணாத்
தெரியவன்வளநகர்திருவல்லமே.
(திருவல்லம், ஞான, க)

என்றற்றொடக்கத்தனவாகத் திராவிட சுருதிகளினும் கூறப்பட்டவாறு, நாராய ணர் கருமைத் திருமேனியுடையரேயாக, பிரமாவின் முகத்திற் றோன்றிய (தூரிய ருத்திராகாத) ஸ்தாணுருத்திரரைப் புகழ்ந்தவிடத்தும்

பொன்திகழும்மேனிப்புரிசடையம்புண்ணியனும்
(இயற்பா, முதற்றிருவந்தாதி, க. கூ)

எனது நாலாயிரப்பிரபந்தத்தினும்,

செம்பொன்னுற்செய்தழகுவெய்தாற்போலுஞ்செஞ்சடையெம்பெருமானேதெய்வம்.
(திருவதிகைவீரட்டானம், அடையாளத்திருத்தாண்டகம், நாவு, க)

அரும்பித்தீண்டிஞாயிறேய்க்குமடி.
(திருவதிகைவீரட்டானம், திருவடித்திருத்தாண்டகம், நாவு, உ)

பொன்னேர்தருமேனியனேபுரியு
மின்னேரிடையாடையினீக்கியினி

பொன்வண்ணமாயும் (கபி எனப்படும்) சூரியனல் விகசிதமாய இருபுண்ட ரீகம் போலும் கண்களுமுடையர் இந்த ஞாயிறு மத்தியிலுள்ள இரண்ணிய

---

னன்னீர்வயலுகேச்சுரகரின்
மன்னேயெனவல்வினைமாய்க்குறமே.
(திருகாகேச்சுரம், ஞான, க)

பசும்பொன்னிலிறத்தாணேப்பானீற்றுனே.
(திருவாலவாய், திருத்தாண்டகம், காவ, உ)

என்றற்றொடக்கத்தனவாகத் திராவிடசுருதிகளிற் கூறப்படலானும்,

நமோ ஹிரண்யவாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூப வாய வை, நஃ।

"பொற்புயமுடையார்க்கு, பொன்வண்ணருக்கு, பொன்வடிவினர்க்கு நமஸ்காரம்" என்று தைத்திரீய ஆரணியகம் (க. உ. சா) கூறலானும் பொன்வண்ணமுடையார் சிவபெருமானே என்னே சுருதிகளாற் பெறப்படுவதேயாக, கரிய திருமேனியுடைய காராயணர்க் கேற்றுதற்கு இரண்ணியசப்தம் சேரே பொன்னிறமெனப் பொருட்படுத்த இடங்கொடாமையின்,

ஹிரண்ய ஶப்தோ ரூபீய-த்வவாசீ।

"இரண்ணியசப்தம் விரும்பற்பாலதின்மேற்று" என்று இராமாநுஜ வைணவ சூத்திரபாஷ்யத்துக்குப் பிரகாசமாய்ப் போந்த சுருதிப் பிரகாசிகையுடையார் பொருட்படுத்தினமை ஒவ்வாது கவுணர்த்தத்தின் மேலாயிற்று. ஆகலின், சுருதிப்பொருள் பொன்வண்ணராகிய சிவபெருமானுக்கே வாய்ப்புடைத்தாகி கருநிறத்தினராகிய காராயணர்க்கு வாய்ப்பிலதாயிற்று.

†சாந்தோக்கியத்திற் (க. கு. எ) கண்ட புண்டரீகம் சேந்தாமரையின் மேற்றெனப் பொருட்படுத்தினமை பூருவமீமாஞ்சை (கூ. கூ. கூ—அ) ஆஞ்சுத்திர (உ-ஆம்) அதிகரணத்திற் கூறப்பட்ட நியாயங்கொண்டாம். சிவபெருமான்றிருக்கண்கள் செந்தாமரைபோற் செங்கிறமுடைமையானன்றே திராவிட சுருதிகள்

முளாஞாயிறன்னமலர்க்கண்கண்முன்றும்.
(திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், காவ, சு)

என்றும்,

சேல்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
(திருவாரூர், சுந். உ)

என்றும் கூறின.

"செக்கர்வானச்சடையோன்சேவடிக்கீழ்நாளின்
மெய்க்கணிட்டுச்சக்கரம்பெற்றவியாட்டேபோல்"

என்று பழைய திருவாய்மொழிப் பிரதியினும்,

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாற்றோணேக்கமாடாமோ.

என்று திருவாசகத்தினும் கண்டவாறு, நாராயணர் ஜலந்தாசுரன் உடலைப் பிளந்த சக்கரத்தைப் பெறவேண்டிச் சாஞ்சீபுரத்திற் சிவபெருமானே நாடோறும் ஆயிரந் தாமரைகளால் அர்ச்சித்துவந்தபோது, ஓர்நாட் கமலப்புஷ்பம் ஒன்று குறைய, தமது கண்ணே இடந்து பூசித்துச் சிவபெருமானிடத்துச் சக்கரப்படை பெற்று,

லொகஹி ஹிதெ வரம் ஏதஸ்மாத்ஸம் நேத்ர ஸாதநீ।
ஏதேந மம நித்யாநி லோசநாநி மயாசிதா॥

புருஷர்" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதான விஷயம்.

ஞாயிற்றுள்ளே உள்ள இந்தப் பொன்மயபுருஷர் சிவபெருமானு? இன்றேல் வேறு தேவதா விசேஷமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அனைத்துக்கும் ஆதாரராயும், சர்வவியாபகருமாயுள்ள சிவபெருமானுக்குச் சூரியனுக்குள்ளாதலும், இரண்ணியரூபராதலும் இல்லை. அவர் சுவேச்சையாகக்கொண்ட வடிவமேயாயின், அவருக்கு நியதமாய் மூக்கட்டிருமேனி இருக்கவேண்டும். அவ்வடிவம் ஈண்டு இல்லையாயிற்று. "புண்டரீகமேவ மஹிணீ" என்பதினாற் புண்டரீகக் கண்கள் இரண்டே கேட்கப்படுகின்றன. அங்ஙனம் அவர் சுவேச்சையாய் (வடிவங்) கொண்டாலும், தேகமானது சம்சாரிக்குப் போலச் சிவபெருமானுக்குத் துன்பத்தை விளைக்கும். சுவேச்சா சம்பந்தமாய்க்கொள்ளினும், அக்கினிக்குச் சுடுகை சுபாவமன்றே; ஆகலின், சிவபெருமானுக்குச் சரீரசம்பந்தம் (கூறல்) ஒவ்வாது. அதுபற்றி இவர் மற்றோர் தேவதாவிசேஷமே, சிவபெருமான் அன்றும் எனின்,

(சித்தாந்தம்) அவர் சிவபெருமானே; எதனால்? அவர் குணங்கள் கூறப்படலான்.

---

"தமக்குத் தாமரையை நிகர்த்த கண்வேண்டுமென்று வரம் வேண்டி அதனையும் பெற்றுப் பதுமாக்ஷன் (தாமரைக்கண்ணன்) என்று பிரசித்திபெற்றனர்" என்று புராணங் காரணங் கூறலானும், "அரவிந்தலோசனன்," "புண்டரீகங்கள் போலுங் கண்ணன்" என்று திருவாய்மொழியினும் (கூ. எ. கo; கூ. அ. எ) பிறவிடங்களினுங் கூறப்படலானும், சாந்தோக்கிய சுருதியிற் கண்ட தாமரைக் கண்கள் சிவபெருமான் மேலனவாமென்க.

ஷெவஸ்ய ஸவிதுஸ்ஸ்ருஷ்டௌ யோ ஹைஷாம் நோ யியக்ஷதி தஸ்மை
ப்ரஹ்மணா தேஷு வரேண்யம் ஜ்யேஷ்ட்யாயை ப்ரஹ்மபுத்ராய ப்ரஹ்மே।

"தேவ (சிவ) சூரியனுக்கு மத்தியிலேயுள்ள எந்தப் பரிக்கர் எங்கள் அறிவிச்சை நிரையைகளைச் செலுத்துகின்றாரோ, அம்முக்கியப்பொருளாயினரைத் தியானிக்கின்றேம்" என்று யாஞ்ஞவற்கியர் கூறலானும்,

ஹரஸே ஜ்ரஹ்மணோ ஹந்த்ரே।

என்று வடவெழுதிகண்டு கூறலானும்,

யதேஷ ரூத்ரோ ஹிரண்யவர்ணோ ப்ரஹ்மவாதிநோ।

"இந்த உருத்திரர் பரிக்கர் எனப்படுவர் எனப் பிரமவாதிகள் கூறுவர்" என்று மைத்திராயணோபநிடதம் (கூ. எ) கூறலானும்,

விரிந்தபல்கதிருடையதோர் வெய்யவனவேட்
பொருந்திவையகண்ணுதற்பரமனேபோன்றான்.
(கச், அவைபுகுபடலம், கூ)

மாதிலாவதுக்குருப்பன்வையெபுரமனேபோ
லாதுமாமுகத்துவன்னலலக்குனேப்புரவிமான்றேரினான்.
(கச். சூரபன்மன்வதைப்படலம், சல)

என்று கந்தபுராணங் கூறலானும் சூரியனுக்கு மத்தியிலுள்ளார் சிவபெருமானேயாம்.

வ வாஷ வவெ-ஷ்டாம ஜொகா நா ஹீஸி; வவெ-ஷ்டாம் காமோ நாழி;
தவ்யோதி நாஸி வ வாஷ வவெ-ஷ்யூஸ் வாவ்யஸ்ய உதிஷி;
(சாந். க. சு. எ)

"அவர் உலகம் அனைத்திற்கும் இச்சைகள் அனைத்துக்கும் நாயகர்; அவருக்கு உத் நாமம் (போந்தமை) அவர் பாவம் அனைத்துக்கும் மேலே உதித்தமையின்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சமஸ்த லோகங்களுக்கும் இச்சைகளுக்கும் நாயகத்துவமும், சர்வபாவமிலாமையும், பிறவும் சிவ சம்பந்தமாகிய குணங்களாம் என்று பிரதிபாதிக்கப்பட்டன;

வனொஹி ரூபெஶா ந ஶ்ருதியாய தவ்ஶு யூ-ஜோஷொநோகா நீ
ஶத ஸரஸ்ரஹிஷே (சுவே. சூ. உ)
சுஜ்யூவ வவ-ர்தவெவ விர்ரூஹ்யு |
ஜாவோதெவ ரூசுதெ வவ-ர்வாவொஷே (சுவே. உ. கரு)
வனொ வஹ-ஷ்நா யொ விதயாதி காமோ நீ |
(கட. தை. கசு; சுவே. சு. கசு)

"உருத்திரர் ஒருவரே; அவர்கள் இரண்டாவதின் பொருட்டிருந்திலர்; இவர் தமது ஆளுஞ் சத்திகளிலுலே இவ்வுலகம் அனைத்தையும் ஆளுகின்றனர்"

"பிறவாதவரும், நித்தியரும், தத்துவமனைத்தானுந் தொடக்குண்ணுத தூயருமாகிய சிவபெருமானே அறிந்து சர்வபாசங்களினின்றும் வீடுறுகின்றன்"

"ஒருவர் அநேகருக்கு இச்சைகளே நியதஞ் செய்கின்றனர்"

என்றற்றொடக்கத்தனவாகக் கேட்கப்படலான். சர்வாதாரரும், சர்வவியாபகருமாயினர்க்கு ஞாயிறுள்ளேயாதல் பொருந்தாதென்றமை விரோதமின்று. சர்வாதாரரும் சர்வவியாபகருமாயுள்ள சிவபெருமான் அன்பர்களே அதக்கிரகிக்கும் பொருட்டு ஓர் பொன்வடிவங்கொண்டு ஞாயிறு மண்டலத்துள்ளார். சரீரமுடைமையின், எம்மனோர்க்குப் போலச் சிவபெருமானுக்குச் சம்சாரதோஷந் தொடக்கில்லை. அவருக்குச் சரீரசம்பந்தமுளதாதலையும், சமஸ்தபாவமிலாமையையும் பகவதியாகிய சுருதியே பிரதிபாதிக்கின்றது. யாம் சுருதிப் பிரமாணத்தையே சரணைக் கொண்டேம்; யுக்தியைப் பெரிதும் மதிப்பேமல்லேம். நீயும் தன்னெஞ்சு சம்பந்தமுற்ற அறிவுமுடைப் பொருள்களைத் தவிக்கமாட்டாது. திரிநேத்திரராகிய சிவபெருமான் (கபி எனப்படும்) சூரியனில் விசேதமாய இரு புண்டரீகம்போலும் கண்களை உடையர் எனக் கூறினமை செந்தாமரையை விகசித்த நிறத்தைக் காட்டுவதற்காகவன்றி மூன்றாவது கண் இல்லை என்று காட்

டப்போர்த்ததன்று; முப்புதல்வர்களையுடையராம் பிரமணர் ஒருவரை யுற்று, (அவர்) இரு புதல்வர் அக்கினிதல்லியர் எனின், இரண்டு என்னும் எண்ணைனது மூன்றாவது புதல்வர் இல்லை என்று மறுக்கவில்லை; பின் அது இரு புதல்வரையும் அக்கினிதல்லியர் என்று உணர்த்துதன் மேலாயிற்று; அங்ஙனம் ஈண்டுமாம். நீரைக் கிரணங்களினற் குடிக்கின்றமையிற் சூரியன் (கபி எனப்படும்). இந்தச் சூரியனல் விகசிதமாய செந்தாமரை பிரகாசிக்கு மாறுபோல, சிவபெருமானுடைய இரு கண்களும் பிரகாசிப்பனவாயின்; (அவரது) மூன்றாவது நேத்திரம் முகுளிதசுவபாவமுடையது; மலர்ந்த தாமரையை ஒவ்வாது; முகுளித தாமரையை நிகர்த்துள்ளதென்பது அபிப்பிராயம். (உக)

(ஆக்ஷேபம்)

சுவொள யொ zவஸவ-ஃதி நீஜஸ்ரீவொ லிஜொஹிதஃ|
உடெதந0 தொவா சுஷ்ரஸுஷ்ரஸுஷ்டஹாயுஃ|
உடெதந0 விஸ்வா ஜ்ஞிதாநி வ்ஷ்ரஷ்டா ஶ்யயாதி நஃ|

(தைத். சங். ச. நி. க. சு)

"(சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ்தமனஞ் செய்விக்கும் பொருட்டுச் சிவபிரான்) பிரகிருத்திக்கின்றனர்; இவர் நீலகண்டமும் செந்நிறமுமுடையர்; (*ஆதித்தியரூபராகிய) இவரைக் கோபாலரும், உதகம் எடுக்கும் பட்டரும் கண்டார்கள்; அவரைக் (கோமகிஷாதி) செந்துக்களும் பார்க்கின்றன; அவ்வியல்பினராகிய அவர் (அகக் கண்ணுக்குப்) புலப்படின், அவர் எந்த ஞுக்கு ஆனந்தத்தை விளைவிப்பாராக" என்னுஞ் சுருதியினல், நீலகண்டராகிய சிவபெருமான் சமஸ்த செந்துக்களுக்கும் பிரத்தியகூமாயிருக்கின்றனர் என அறியப்படுகின்றராக,

வ்யுஷ்டாஹித ஶ்யுஅவ்ஹிநெதா ரவிஃ|

"தன் ஒளியினல் வியாபித்த மண்டலத்தையுடைய முக்கட் சூரியன்" என்ற்றொடக்கத்த அபிப்புத்தவ்சனத்தினல், சூரியன் மூன்று கண்களையுடைய தாக அறியப்படலாணும், ஆதித்தியனே பிரபாமண்டலத்துள்ள முக்கண்ணுடைய சிவபெருமான்; இன்றேல் நீலகண்டமும் முக்கண்களும் சூரியனுக்கு எங்ஙனம் கூறப்படும்.

சுவொவ்ருதிதெதா வ்யுஷ்ட (சார். சு., சக. க)

---

அருக்கன்பாதம்வணங்குவர்இயி
னருக்கனெவ்வாளாலுநவல்லனே
விருக்குநான்மறையீசனேயேதொழுஃ
கருத்திலோர்கினேயார்கண்ணவனே.

(ஆதிபுராணத்திருக்குறுந்தொகை, கால. 4)

"இந்தச் சூரியன் பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே (சூரியன்) பிரமமாகவும் கூறப்படுகின்றது. ஆகலின், சூரியனுக்குள்ளிருப்பவராகச் சுருதியிற் கூறப்பட்டு மண்டலத்துள்ளிருக்கும் ஆதித்தியமூர்த்தியே இரண்டாபுருஷர் எனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஹிவ்யவதோஷாத்வாநரோ: (க. க. உ உ)

(உ உ) பேதம் கூறப்படலானும் அவர் வேறு.

ய ஆதித்யே திஷ்டந்நாதித்யாதரோ யமாதித்யோ நவேத யஸ்யாதித்ய: ஸரீரம் ய ஆதித்யமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: (பிரு. தி. எ. கா)

"எவர் சூரியனுக்கு வேறாய், சூரியனுக்குள்ளே உள்ளார்; இவரை ஞாயிறு அறிந்திலதோ, எவருக்கு ஞாயிறு சரீரமோ, எவர் ஞாயிற்றுள்ளேயிருந்து அதனைச் செலுத்துகின்றனரோ, அவரே உனது ஆன்மாவும், அந்தர்யாமியும், அமிர்தருமாம் (சிவனுமாம்)" என்னுஞ் சுருதியில் (அவ்விருவர்க்கும்) பேதங் கூறப்படலான், பொன்வண்ணராகிய சிவபெருமான் சூரியமண்டலத்தபிமானியாகிய இந்தச் சேதனரூப ஆதித்தியமூர்த்தியினும் வேறுவர். சண்டு அமிர்தசப்தம் சிவபெருமான் மேற்று;

வாகாநி ஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி (ஜாபா. கூ)

"இவைகளே அமிர்தத்தின் பெயர்கள்" எனச் சதருத்திரீயத்தைப் புகழுங்கால் (அங்ஙனம்) ஜாபாலோபநிடதம் கூறலின். சூரியனுல் அவர் அறியப்படாமை முதலிய குணங்களுண்மையின், ஆதித்தியனுக்கு வேறுயினர் சிவபெருமான் என்றே கூறப்படுகின்றார். ஆகலின், சேதனனுகிய ஆதித்தியனினும் *பொன்வண்ணராகிய சிவபெருமான் வேறு.

நீலக்ரீவ: விலோஹித: (தைத். சங்கி. ச. தி. க. கூ)

"நீலகண்டரும் செந்நிறமுடையரு" மாகக் கூறப்பட்ட காளகண்ட சிவபெருமானே ஆதித்தியனுக்குள்ளிருப்பவராகப் பிரதிபாதிக்கப்படுகின்றனர்; சூரியனுக்குள்ளிருக்கும் உயிராதலின், அவர் அந்தச் சூரியசப்தத்தினுற் கூறப்படுகின்றார்.

---

* பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமேனி பொலிந்திலங்கு
பின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்வீழ்சடை வெள்ளிக்குன்றத்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னேக்கண்ட
வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசனுக்கே.

என்னுஞ் சேரமான்பெருமாணயனர் திருவாக்கும் சிவபெருமான்றிருமேனியைப் பொன்வண்ணமென்று கூறிற்று.

(ஆக்ஷேபம்) சூரியனுக்குள்ளிருக்கும் நீலகண்டர் சிவபெருமான் அன்று; பின் அவர் நாராயணரே. அங்ஙனம்,

ஜ்யாயஸ்தா வஸித்ரூஷ்ணுரூபயுவதிர்ப் நாராயணஸ்ராவஸிஜாஸ்ந வஸிவிஷ்டி |

"சூரியமண்டலமத்தியினராகிய நாராயணர் கமலாசனத்திருப்பவராக எக்காலமும் தியானிக்கற்பாலர்" என உலகினர் யாண்டும் படிக்கின்றனர். அவர்க்கே புண்டரீகாக்ஷித்துவயசம்பந்தம் (கூறுவது) யுக்தம்; அவர் புண்டரீகாக்ஷர் எனப் பிரசித்தமுண்மையின். வேறுபிரகாரமாகப் பிரதிபாதனஞ் செய்தலாம் பிரயாசை எற்றுக்கென ஆக்ஷேபிப்பின்,

(உத்தரம்) அன்று; இரண்மயபுருஷரிற் சம்பந்தமுடையனவாகக் கூறப்படுஞ் சிவபெருமானுடைய விசேஷலிங்கங்கள் நாராயணரிற்பொருந்தாமின்மையின். சூத்திரவிஷயமாய்ச் சந்தேகத்துக்கிடமாகிய இந்த வாக்கியம் சந்தேகத்துக்கு இடனாகாத வேறு வாக்கியங்கொண்டு நிர்ணயித்தல் யுக்தம்.

சூழிதைர்ா வா வஸஷ வஸ நஷ்ணுஷஸவஜி |
(தைத். ஆரணி. க0. கச. கூக)

"இந்த ஆதித்தியனே இந்த மண்டலத்தைத் தகிக்கின்றான்" என்றற்றொடக்கத்தனவாக மகோபநிடதத்திற் கூறப்படுகின்றது.

ய வஸ கவிர்ஷ்ணுஷெஷ்ஹீர்வ்யதெ |
(தைத். ஆரணி. க0. கச. கூக)

"இவன் இந்த மண்டலத்திலே ஒளியைக் காலுகின்றான்" எனச் சூரியமண்டலப்பிரகாசத்தை உரைத்தும்,

ய வஸஷ வஸ கவிர்ஷ்ணுஷெ ஷஹீர்வி ப்ராஷி|
(தைத். ஆரணி. க0. கச. கூக)

"இந்தச் சூரியமண்டலத்திற் புருஷர் இவர்" என மண்டலாபிமானியாகிய ஆதித்தியமூர்த்தியை உரைத்தும்,

யவஷொஷஹராதிதெர் ஹிரண்மயீ ப்ராஷி|
(சாந். க. சு. சு)

"இவர் ஆதித்தியனுக்கு அந்தரியாமியாயுள்ள இரண்மயபுருஷர்" என ஆதித்தியாந்தரியாமியாய் (ஆதித்தியமூர்த்திமானுயுள்ள) இரண்மயபுருஷரைக் கூறியும்,

சூர்மிதைர் மிவ மிதை ஒமிஜா வ்யஓ யர்ர்|
(தைத். ஆரணி. க0. கடி. கூ)

"ஆதித்தியன்முன் தேஜசும், உருமும், பலமும், கீர்த்தியும்" என்றற்றொடக்கத்த சுருதியினல், அந்த ஆதித்தியரூபமுடையாரது (சிவபெருமானது) விபூதியைக் கூறியும்,

ஸஷ வ ஸ்ரஷ ஸஷ ஹ ஏதா நாயிவதீ।

(தைத். ஆரணி. க0. கூ. கூ)

"இவர் புருஷர்; இவர் பூதங்களுக்கு அதிபதி" என்பதினல் அவரைப் பூதபதியாக நிர்த்தேசஞ் செய்து, பின்னரும் (இவர்) எவ்வியல்பினராகிய புருஷர் என்று வினவ,

ஸவெஷ வெ ஸ்ரஷ்ரீ।

(தைத். ஆரணி. க0. உ. சஉ)

"எல்லாம் உருத்திரரே" என்று தொடங்கி,

நமோ ஹிரண்யவாஹவெ ஹிரண்யவதயெ ஏலிகாவதய உமாவதயெ (தைத். ஆரணி. க0. உஉ। ச0)

"இரண்ணிய பாகுவினர்க்கு, இரண்ணியபதியாயினர்க்கு, அம்பிகாபதியார்க்கு, உமாபதியார்க்கு (நமஸ்காரம்)" என உபசங்கரிக்கப்பட்டது. இச்சுருதியில் (அவரது) பாகுவைப் பொன்னிறமாகக் கொள்ளவே, உபலக்ஷணையினல் (சிவபெருமான்) பொற்றிருமேனியுடையர் என்பது தாற் பரியமாயிற்று. ஆகலின், பொன்போலும் மேனியையுடைய உமாபதியார் ஆதித்தியனுக்கு மத்தியிலிருப்பவராகச் சித்திக்கின்றார்; ஈண்டு நீலகண்டத்துவம் உமாபதித்துவமுதலிய விசேஷலிங்கம் சிவபெருமானுக்கன்றி மற்றையோர்க்குப் பொருந்தாமையின். புண்டரீகத்தை ஒத்த கண்ணுடைமை சாதாரணலிங்கம்; நாராயணர் ஒழிந்த மற்றைப் பொருட்கும் (இயைவதாகக்) காணப்படலான். கமலலோசனே நாரி எனவும், கமலலோசனன் புருஷன் எனவும் வழங்கப்படுகின்றது. (இரு லிங்கங்கள் ஒருங்கு கூறப்படுங்கால்) விசேடலிங்கத்தினுற் சாமானியலிங்கம் பாதிக்கப்படும். "சூரியனுள் இருக்கும் தெய்வமாக நாராயணர் எப்பொழுதுந் தியானிக்கற்பாலர்" என்னும் இலௌகிகவசனம் கவுணமே. ஆகலின், இரண்ணியதல்லீரூபரும், திரிலோசனரும், நீலகண்டரும், உமாபதியும், சமஸ்த லோக சாமேசுவரரும், சர்வபாபத்தொடக்கிலாதவரும், பகவானுமாகிய சிவபெருமானே ஆதித்தியனுக்குள்ளே இருப்பாரும், சாவித்திரியினும் பிரதிபாதிக்கப்படுபவரும், மூமூட்சுக்கள் அனைவர்க்கும் தியேயப்பொருளாயுமுள்ளார் என்று சித்திக்கின்றது. (உ0)

## (கூ) ஆகாசாதிகரணம்.
## (கo) பிராணாதிகரணம்.

சர்வஜ்ஞதாதி குணங்களையுடைய பரப்பிரமசிவனுடைய பரமமங்கலத் தன்மைக்கு ஆஸ்பதமாய் உபாசிக்கற்பாலதாம் வடிவத்தை உரைத்து, அந்த இலக்ஷணத்துக்கு சாமரூடிவசத்தினற் பிறிதோரிடத்தில் அதிவியாப்திபற்றி ஆசங்கை உண்டாக, அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஸுகாஸஸ்ஜீoஸ (க. உ. உகூ)
ஸுதி வாவ வ்ராணஃ (க. க. உச)

(உகூ) ஆகாயம் (பிரமம்), அதின் இலிங்கமுண்மையின்.
(உச) அந்த நியாயத்தினற் பிராணன் (பிரமம்).

ஸவ-ஸ்ணி ஹவா ஊரோணி ஸுஸ்தாநி ஸுகாஸாதெவ வஸ்ஸ்தூநு ஜெ ஸுகாஸo வ்யதிஷ்ஹo யந்தி (சாந். க. கூ. க)

"இப்பூதமனைத்தும்* ஆகாயத்திருந்தே உற்புத்தியாகின்றன, ஆகாயத்துக்கு மீள்வனவாயின" எனவும்,

ஸவ-ஸ்ணி ஹவா ஊரோணி ஸுஸ்தாநி வ்ராண ஜெவ zஜிவo விஸந்தி வ்ராணமப்யுஜ்ஜிஹதெ (சாந். க. கக. இ)

"இப்பூதமனைத்தும்* பிராணனிலே ஒடுங்குகின்றன; பிராணனிலிருந்தே அவை உதித்தன" எனவும் போந்த சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயக்கிடந்த விஷயம்.

ஈண்டுச் சமஸ்த பூதங்களுக்கும் உற்பத்தி பிரளயங்களைப் பிரதிபாதிப்பனவாய "பிராணன்" "ஆகாயம்" என்னும் மொழிகள் சிவபெருமானைப் பிரதிபாதிப்பனவா? இன்றேற் பூதாகாயம் பிராணவாயு என்பன்வற்றைப் பிரதிபாதிப்பனவா? என்பது சந்தேகம்.

வ்ராணாஜெவ வஸ்ரோணி ஸுஸ்தாநி ஜாயந்தெ வ்ராணெந ஜாதாநி ஜீவந்தி வ்ராண0 வ்ரயந்தி (தைத். கூ. கூ)

"இப்பூதமனைத்தும் பிராணனிலிருந்தே பிறந்தன; பிராணனற் பிறந்தன நிலைபுறுகின்றன; பிராணனே நோக்கிச் செல்வனவாயின" என்றற்றொடக்கத்த சுருதி யுண்மையானும்,

* ஆன்மதத்துவம் இருபத்துநான்குமடங்கிய மலினப்பிரபஞ்சமும், வித்தியாதத்துவம் ஏழும் அடங்கிய மிசிரப்பிரபஞ்சமும், சிவத்துவம் ஐந்தமடங்கிய சுத்தப்பிரபஞ்சமும் அனைத்தும் என்றதினற் றழுவப்படுதல்.

ஆகாஸாத்வாயோ: (தைத். உ. க)

"ஆகாயத்தினின்று வாயு" என்றற்றொடக்கத்த சுருதி யுண்மையானும், பிராணனுக்கும் ஆகாயத்துக்கும் சகல பூதகாரணத்துவம் கூறப்படுதலின், அவ்விரண்டுமே ஈண்டு பிரதிபாதிக்கற்பாலன எனின்,

(உத்தரம்) கூறுதும். பிராணுகாயசப்தவாச்சியர் சிவபெருமானே; சர்வகாரணத்துவமுதலியன அவர்க்கு லிங்கமாதலின். பிராணன் ஆகாயம் என்னும் இரண்டுக்கும் சர்வகாரணத்துவ முதலிய எய்தமாட்டா. "(இப்பூதமனைத்தும்) பிராணனிலிருந்தே (பிறந்தன)" என்றற்றொடக்கத்த சுருதிக்கு ஆனந்தரூபமுடைய பரப்பிரமமே காரணம் என்பது தாற்பரியம். பிராணன் காரணமன்று; பின் அது அதுவாதமாத்திரம். பூதங்களுள்ளே ஒன்று ஆகாயமாதலின், (அது பூத)மனைத்தும் என்பதனுள் அடங்கிவிடும்.

ஸ ஏஷ ஸர்வாஸ்ய ஈஶே (தைத். உ. க)

"ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்னுஞ் சுருதியினும் சர்வபூ தோற்பத்தியும் சிவபெருமானிலிருந்தே ஆகும். ஆகலின், சர்வபூதகாரணத்துவம் பூதாகாசம் பிராணன் என்பவைகளுக்குச் செல்லாதென்பது சித்தாந்தம்.

(வினா) பூதாகாயம் என்றதிலே போந்த பூத என்னும் உபபதவிசேடத்தினும் பயன் யாதெனின்,

(உத்தரம்) (பூதாகாயத்தினின்று வேறாக) பரப்பிரகிருதிரூப பரமாகாயம் ஏன (முற்றொன்று) சர்வபூதகாரணமாதலிருத்தலை உணர்த்துவதே பயனும்.

(வினா) அங்ஙனமாயின் (ஆகாயத்தைச்) சிவபெருமான் என்று நிர்ணயிப்பதெங்ஙனம்?

(உத்தரம்) (சிவபெருமானுக்கும்* பரமாகாயத்துக்கும்) பேதமில்லாமையான். (உ)

## (ஈக) ஜ்யோதிரதிகரணம்.

சமஸ்த புவனநாயகரும், சமஸ்த தோஷவாசகாகளங்கமில்லாதவரும், நிரதிசயமங்கல-இரத்நாகரருமாகிய உமாபதியாம் பரப்பிரமத்திக்கு ஆதித்தியமண்டலம் ஆஸ்பதமாயினமை மேலே நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுச் சூத்திரகாரர் அந்தச் சிவபெருமானுக்கு மற்றோர் ஸ்தானம் உரைப்பாராயினர்.

---

*இது திருச்சிற்றம்பலத்தின் மேற்கு; உபசிரமணிகை ஈ0-ஆம் இலக்கம் பார்க்க.

ஜ்யோதிரூபாணாமிபாநாஸ (க. க. உ)

(உ) (பிரமம்) சோதி;* சரணம் கூறப்பட்டான்.

கூய யதஃ வரோ திவொ ஜ்யோதி தீர்வ்யதெ விஶ்வதஃ
ப்ருஷ்ஷ்ட வவ்ருதஃ ப்ருஷ்ஷ்வ நுத்தமேஷ்ட மொகெஷ்விஷ்ட வர்
வ்ருத்ரஹ்ருத்விஷ்ணுஸஹஃ வரோஷெ ஜ்யோதிஃ (சாந். கூ. கஙூ. ன்)

"இதற்குமேற் பிறிதோர் உலகம் இல்லை எனற்பாலதாம் உயர்வாகிய உலகத்திலே ஒவ்வொன்றுக்கும் மேலாய், அனைத்துக்கும் மேலாய், இந்த ஆகாயத்துக்கு மேலாய்ப் பிரகாசிக்கின்ற அந்தச் சோதியே புருஷனுக்குள்ளேயுள்ள சோதி" என்னும் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாகிய விஷயம்.

சமஸ்த லோகத்தையும் வியாபித்து ஆகாயத்துளதாகக் கூறப்பட்ட பரஞ்சோதியானது சிவபெருமானு? மற்றோர் தேவதையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) "தியு" என்னும் மொழி ஆகாயம் என்ப்பொருட்பட, "பரோதிவஃ" (ஆகாயத்துக்கு மேலாய்) என்றமையின், ஆகாயத்துள்ள ஆதித்தியனே சோதி என ஈண்டுப் பிரதிபாதிக்கப்படுகின்றது; இன்றேல், புருஷனுக்குள்ளேயுள்ள சோதி என்றமையின், அது புருஷனுக்குள்ளேயுள்ள ஜாடராக்கினியாம் எனின்,

(சித்தாந்தம்)

(முண்டக உபநிடதம், சுவேதாசுவதரோபநிடதம்)

"பிரியாத நண்பினையுடைய இரு பகுதிகளே ஒரே மரத்தையுறைந்திருக்கின்றன; அவற்றில் ஒன்று இனிமையாகிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது", என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரசித்தராய், தமது விபூதியாயுள்ள ஆன்மாக்களோடு ஏப்போதும் இயைந்திருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துதற்கு மற்றோர் அதிகரணமும் தாம் பிக்கப்படுகின்றது.

(சூ) குகைக்கண்ணே பிரவேசித்தன இரு ஆன்மாக்களே; அங்ஙனம் காணப்படலான்.

(யொ ய உ தூணாஹிகேதாஃ (கட. உ. க)

"புண்ணிய ஸ்தானமாகிய மேலாய் (பிரம்மலோக சீர) குகையிலே பிரவேசித்தனவாய், கன்ம பலத்தைத் துய்ப்பனவாயுள்ள இரு வஸ்துக்கள் சாயையும் ஒளியும் போல் வேறாய் உள்ளன என்று பிரகஸ்தர்களாயும் திருஷிகேதர்களாயுமுள்ள பிரம்ம ஞானிகள் கூறுகின்றனர்", என்னும் சுருதியே ஆராயப்படும் விஷயம்.

---

என்னிலாருமெனக்கினியாரிலை
யென்னிலும்மினியானெருவன்னுள
னென்னுளேயுயிர்ப்பாயப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரனே,
(திருவிண்ணம்பர், நாவு, க)

கோலங் கொண்ட வாறண ராதே
ஞாலங்காய்ல னிரவெனைக்கிலவீலிய்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நீடி நாடா
வென்னுட் கரந்தென் பின்னுந் தருளி
யென்னையுந் தன்னையு மறிவின் றியந்து
மென்னதி யானெனு மகங்கை யுங்கண்
டியாவரி யாவையு மியாங்குணஞ் சென்று
மிக்க போகம் விதியால் வினைத்திங்
கெற்பணி யாளா வெனைப் பிரியாதே
(திருவாசகம், திருப்பொன்னூசல், க)

[illegible]ண்டி யுண்டியல்தான்மாயை உயர்ந்த பிரம்மனுதிசரீரத்தின் இரண்டு குகையிலே பிரவேசித்தவராய், கன்மபலன்களைத் துய்ப்பனவாய், சாயை யும் ஒளியும் போலவேறுபாடுடையனவாயுள்ள எவையோ இரு வஸ்துக்கள் சொல்லப்படுகின்றன. அந்த இரண்டும் புத்தியும் ஆன்மாவுமா? இன்றேல் ஆன்மாவும் சிவபெருமானுமா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) இந்த இரண்டும் புத்தியும் ஆன்மாவுமாம்; எங்ஙனம்?

ஓதம் விவேகினா (கட. உ. க)

"கர்மபலன்களை இரண்டும் துய்ப்பன" எனப் பெறப்படுகின்றமையின். சிவபெருமான் போக்தா அல்லர்;

ஈசநா ஜுஷ்டந்ய ஹ்யமிருதத்வ மேதி (சுவே. உ. மு. கூ. க. க)

"ஜந்துவுடையோ துபோர்த்துக்கொண்டிருக்கின்றது" எனச் சுருதி காணப் படலான். புத்திக்கும் ஆன்மாவுக்கும் புசிப்புளதாதல் பிரசித்தமே. மேலும், அறிவுரூபமாயுள்ள ஆன்மாவுக்கும் சிவபெருமானுக்கும் சாயையும் ஒளியும் போல வேறுபாடில்லை. புத்தி அசேதனமாகலின் புத்திக்கும் ஆன்மாவுக் கும்பேதமுண்டு. இங்ஙனம் கூறப்பட்டவை புத்தியும் ஆன்மாவுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். குகையை அடைந்தவர் ஆன்மாவும் சிவ பெருமானுமே;

குஹாம் ப்ரவிஷ்டாவி மிவாதபே நௌ சாயாதபா விவ ப்ரஹ்மவிதோ வதந்தி பஞ்சாக்னயோ யே ச த்ரிணாசிகேதா (கட. உ. கஉ)

"காண்டற்கரியரும், மறைவினரும், கூடப் பிரவேசித்தவரும், குகைக்குள் மறைந்தவரும், குகைக்கணமர்ந்தவரும், பழையரும்" என்னுஞ் சுருதியி னால் அன்னிருவரும் குகையிற் பிரவேசித்தமை காணப்படலான். சிவபெரு மானுக்குப் புசிப்பில்லை என்று கூறப்பட்டது யுக்தமன்று.

தமக்ரதும் விசித்ரார்த்தம் ஸ்ருணோதி ச ஸ்ருணோதி ச (தைத். கூ. உ)

"மனவாக்குக்கெட்டியதே அவர்க்கு விருப்பம்; மனசில் (ஞானசத்தியில்) அவர் ஆனந்தம்" என ஆன்மவிருப்பமுடைய பிரமத்திற்கும் ஞானமாத்திரவிஷ யமாகிய சோறுபானந்துபோகம் உளதாகக் காணப்படலான். அங்ஙனமே,

[illegible]

"தமது சத்தியாகிய அமிர்தத்தை இரசித்தலினால் உண்டாகிய மகிழ்ச்சியில் [illegible] பிரமனின் தன்மைத்தாகிய [illegible] மதி [illegible] ஆன்மா

வுக்குத் தன் கருமமலப் புலிப்புன்நாதல் பிரித்தம். இவ்வாறு அன்றிரு வரும் போக்தாக்கள் போலச் சாதாரணமாகக் கூறப்படினும் பேதம் கொள் ளப்படும்; போக்தாக்கள் விஷயத்திற் பேதம் உண்மையின். "அசனனும் வேலைக்காரனும் அன்னம் அயில்கின்றனர்" என்று கூறமிடத்து, அவர் கள் தத்தம் நிலைக்கேசைந்த அன்னம் அயில்கின்றனர் என்று கோடல் போ லாம். அவர்களுக்குப் பேதமில்லை என்றமை அங்கிகரிக்கப்படாது.

கிகூயா நிகயா நாம வெகநெஹ்ரு நா நாழி

(கட. இ. கூட; சுவே. சு. கூட)

"நித்திய பதார்த்தங்களுள்ளே நித்தியரும், சேதனருள்ளே சேதனரும்" என் னும் சுருதி வாயிலாக, நித்தியத்துவ சேதனத்துவ முதலியன பற்றி ஆன்மா வுக்கும் சிவபெருமானுக்கும் சாமியம் உளதாயினும், அநாதிமல சம்பந்தத் தின் உண்மை இன்மைகளால் (இருவர்க்கும்) வேற்றமை உண்டாகின்றது.

ஜாஜ்ஞ ஜாவஜாவீஸா நீஸெள (சுவே. க. கூ)

"பிறவாதவராகிய அறிஞனும் அறிவிலனுமாகிய இருவரும் (மூதையே) நு ரும் ஈசனல்லாதவனும்" என்றற்றொடக்கத்த சுருதியினால் ஞானம் அஞ்ஞா னம், சுவாதந்திரியம் அசுவாதந்திரியம் என்பனவாதி குணங்களானும் பேதமுளதாதல் பெறப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) இவ்விருவர்க்கும் சரீரசம்பந்தம் ஒன்றுபவிடத்தும், ஒரு வற்கு அஞ்ஞானமுதலியவற்றுற் துன்பமும், மற்றவர்க்கு அஃதின்மையும் எங்ஙனமெனின்,

(உத்தரம்) அது பொருந்தாது; ஒரே சரீரத்தைப் பொருந்தியிருத் தல் சுகத்திக்கேனும் துக்கத்திக்கேனும் காரணமின்று. பின் (சிவபெருமா னுடைய) சுவாதந்திரியமும், (ஆன்மாவுடைய) அசுவாதந்திரியமுமே (மூன்ற யே) சுகத்துக்கும் துக்கத்திக்கும் காரணம்.

ஸமாநெ வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ ஸநீஸயா சோசதி முஹ்யமாந: ஜுஷ்டம்யதா பஸ்யத்ய்ந்யமீஸ மஸ்யமஹிமாநமிதி வீதஸோக: (முண். கூ. க. உ)

"புருஷன் ஒரே (சரீர) மரத்தில் ஈசனல்லாமையின், மோகமுற்று அமிழ்ந் தித் துக்கிக்கின்றனன்; ஆயின், அவன் தனக்கு வேறுபட்ட மகிமையுடைய சிவபிரானைக் கண்டு அப்போது அவருடைய நிரதிசயானந்த மகிமைக் குணத்தை அடைந்து துன்பம் நீங்குகின்றனன்" என்னும் இச்சுருதியின் சம்பிரதாய அர்த்தம் வருமாறு:—

இந்த ஆன்மா அநாதியாய சரீரத்தினிருந்து விடுபட்டு, அதனுள் அந்தந்தக் கர்ம பலபோகத்திற்கு ஏற்ற குணவடிவமாயுமைய அதிக

சரீரத்தில் பிரவேசித்து, நமக்காகிய தன்பத்தை அனுபவித்து சகல்லா மையால் சுவாதினமற்றிருத்தல்பற்றி அத்தக்கத்தை நீக்குதற்குச் சர்வ சக்தியினுலே மோகமூற்றுச் சோகிக்கின்றன்; மகாமோகத்தினால் எப் போது தக்காசாரத்தமிழ்ந்திக் கிடக்கின்றன்; தன்னுள்ளேயிருந்து செலுத் தலையும், மெய்ச்சியுடையரும், சர்வாணுக்கிரகரும், சருமும், உமாசகாய ருமாயுள்ளாரை எப்போது அவர் அருளினால் அபரோக்ஷமாய் அறிகின் றனே, அப்போதே சோகநீங்கி அவரது நிரதிசய (ஆனந்த) மகிமைக் குணத்தை அடைகின்றன்.

ஆகலின், சுவாதந்திரியரும் அநாதிமுத்தருமாயுள்ள சிவபெருமானுக் குச் சரீரசம்பந்தமுளதாயினும், ஆன்மாவுக்குப் போலத் தோஷம் அவ னைப் பற்றாது. ஆகலின், குகையை அடைந்தவர்கள் ஆன்மாவும் சிவபெரு மானுமாம். (கக)

சூத்திரகாரர் பின்னரும் பொருத்தமாமாறு உரைப்பாராயினர்.

விசேஷணாச்ச (க. உ. கஉ)

(சூசு) விசேஷகுணமுண்மையானும்.

இப்பிரகரணத்திலே ஆன்மாவும் சிவபெருமானும் விசேஷித்து உரைக் கப்படுகின்றனர்.

நஜாயதெ ம்ரியதெ வா விபஶ்சித் (கட. உ. கஅ)

"அறிஞன் பிறப்பதும் இல்லை இறப்பதும் இல்லை" என்றற்றொடக்கத்த வற்றால் ஆன்மா கூறப்பட்டான்.

சுவெர்ஸ்ணீயா ஸுஹமெதாஉஹீயாநீ (கட. உ. உ0)

"அணுவுக்கணு, மகத்துக்கு மகத்து" என்னுஞ் சுருதியினுற் சிவபெரு மான் கூறப்பட்டனர். இந்த விசேஷணம் ஆன்மபுத்தி விஷயத்தில் எங்ங னம்எய்தும்? ஆகலின் ஆன்மாவும் சிவபெருமானுமே குகையை அடைந்து, முறையே பிரேரியமும் பிரேரகமும், சரீரமும் சரீரியுமாய் அமர்ந்தனர் என நிர்ணயிக்கத்பாற்று. (கஉ)

## (ஞ) அந்தராதிகரணம்.

இருசாராருக்குள்ளே உபாசிக்கப்படுமாறு அமர்ந்தருளிய சிவபெரு மானுக்கு எனை மற்றோர் உபாசனஸ்தானம் கூறப்படுகின்றது.

அந்ர ஹவை தே(க. உ. கங)

(அனி) (கண்) உள்ளே (இருப்பவர்) சிவபெருமான், (அவர்க்குக் குணங்கள்) பொருத்தமாதலின்.

ய ஏவஷோ ஃக்ஷிணி அந்த ஷிஷ்ய ஏஷ ஏஷ ஸர்வேஷு பூதேஷு குஹாயாமேகோ வாபைத்ஷ்ய தத்ஹ்ருதயமேதத்வ்ருஷ (சாந். உ. கஅ. க)

"இவர் கண்ணுள்ளே புருஷராகக் காணப்படுகின்றனர். இவர் (பரம) அன்மாவாகிய இவர் அழியாதவர், புயுமில்லாதவர், இவர் பிரமம்" என்னும் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாம் விஷயம்.

கண்ணுள்ளே அமிர்தத்துவாதி இலக்ஷணத்தோடு கூறப்பட்ட புருஷன் சிவபெருமானே? மற்றொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுக்கு அன்னியன் என்று கூறுவம்.

ஹ்ருஸ்ம விவாஷ்டி। வஷ்டிகோஸ்வ்ருதீகாஸ்டி।

(தைத். ஆரணி. கஉ. கஉ-ஆ)

"சூக்குமமாயும், பாவமில்லாததாயும்," "பதுமகோசத்தைப்போன்றதாயும்" என்றற்றொடக்கத்த மகோபநிடதச் சுருதிகளிலே, சிவபெருமான் இதயகமலத்தில் இருப்பவராகக் கூறப்படுகின்றனர். ஆன்மா மனசின் சம்பந்தத்தினால் ரூபங்களைக் கிரகிக்கும் கண்ணிந்திரியத்தில் மனச் சம்பந்தத்தினாற் பிரவேசித்திருக்கின்றனன்; அவனே கண்ணிற் புருஷன். இன்றேல், சாயாபுருஷனும் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கின்றேம். கண்ணிற் புருஷன் சிவபெருமான்; நிருவாதிகமாகிய அமிர்தத்துவம் அபயத்துவமுதலிய குணங்கள், இவர்க்கே பொருத்தமாதலின். (கஉ)

(ஆக்ஷேபம்) கண்ணுள்ளே இருப்பவராகச் சிவபெருமான் யாண்டும் கேட்கப்படவில்லையே எனின்,

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸ்தா நாதி வ்யபதேஸாத் (க. உ. கச)

(சூசு) (அவர்க்கு) இடமுதலியன சொல்லப்படலான்.

(கக) யஸ்சக்ஷுஷி திஷ்டன் சக்ஷுஷோந்தரோ யஸ்சக்ஷுஷி திஷ்டன் சக்ஷுஷோ யமயதி ஸ ஆத்மாமுதஸ்ய ஆத்மனோ யதி வஷ்ட சூதாஸ்ய யுக்தாஸ்யுர்யுக்தா: (பிரு. உ. எ. கஅ)

---

(இருவேமியன்செல்வமேதேனேனோன்செழுங்கடோசெலுஞ்சுடர்ச்சோதிமிக்க
வருவேயென்னுருவேயென்னாவியினுளனமேபுளத்தினுளானென்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்கருமணியேயென்னுடனாயுயிர்க்கு
யருவாயவல்வினைநேர்படையாவண்ணமாவடுதண்டுறையுறையுமமரரேறே.
(திருவாவடுதுறை, நாவு, ச)

"எவர் கண்ணினும், கண்ணினுள்ளும் இருக்கின்றனர்; அவரைக் கண் கண்டிலது, அவர்க்குக் கண் சரீரம், அவர் உள்ளே இருந்து கண்ணை ஆளுகின்றனர், அவர் உன் ஆன்மா, அந்தரியாமி, (அமிர்தர்) சிவன்" என்னும் சுருதியிலுற் கண்ணுள்ளே இருப்பவராகவும் ஆளுபவராகவும் சிவபெருமான் கூறப்படுகின்றனர். ஆகலின், இவர் சிவபெருமானே. (கச)

பின்னர்ச் சாயாபுருஷனைச் சொல்வது பொருந்தாதெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

வஊவவிஸிஷ்டாஹியாநாதெவஅ (க. உ. கஞ)

(சஎ) அவர் ஆனந்த குண விசிஷ்டமுடையராகவே கூறப்படலானும்.

கo ஐஹஷ வo ஐஹஷ (சாந். ச. கo. ஞ)

"ஆனந்தம் பிரமம்; ஆகாயம் பிரமம்" என்னும் வாக்கியத்திலே பிரமம் ஆனந்தமுடையதாக மேலே கூறப்படுதலின், இந்தப் பிரமம் சிவபெருமானே. ஆனந்தம் சாயாபுருஷனிடத்து இல்லையன்றே. (கஞ)

கண்ணினுள்ளான் ஆன்மா என்றுரைக்கப்பட்டமைபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கூகிவஎவ ஸ ஐஹஷ (க. உ. கசு)

(சஅ) *(ஆனந்தகுண விசிஷ்டமுடையராகக் கூறப்படும்) அந்த நியாயத்தினுல், அவர் பிரமம்.

பிறவிக்கஞ்சிப் பிரமத்தை அறிய விரும்பிய உபகோசலற்கு

கo ஐஹஷ வoஐஹஷ (சாந். ச. கo. ஞ)

"ஆனந்தம் பிரமம், ஆகாயம் பிரமம்" என்று தொடங்கி,

யஉவகo கதெவவo யதெவ வoகதெவகஷ |

(சாந். ச. கo. ஞ)

"எது ஆனந்தமோ அது ஆகாயம்; எது ஆகாயமோ அது ஆனந்தம்" எனச் சுருதி உபதேசிக்கின்றமையின், (வழி) "கம்" என்று கூறப்பட்ட ஆகாயம் பரப்பிரமமே. ஆன்மாவுக்கு இவ்வியல்பினதாகிய பொருத்தம் உளதா? ஆன்மாவில் நிரதிசயானந்தம் இல்லை; ஆகலின், பரமானந்தமுடை

*மானமழிற்றேரமிமற்றேரமைகாலீரீர்
வானதொழுதென்னன்வர்கழுவினேற்றடியோ
மானந்தமுடித்துளருள்பெறினுமவ்வண்மே
யானந்தமாகின்றுடர்மோதோணேக்கம். (திருத்தோணேக்கம், அ)

யதாக முதற்கண்ணே கூறி, பின்னர்க் கண்ணினுள்ளே ஆதாரமாய் இருப்பதாகக் கூறப்பட்ட அந்தப் பிரமமே கண்ணினுள்ள புருஷராக உரைக்கப் பட்ட சிவபெருமான். (கசு)

பூருவபக்ஷத்தில் இன்னும் பொருத்தமில்லாமையுற்றுச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸ்ரூதோவநிஷத்தமுதஸ்யாநாஜ (க. உ. கள)

(சுகூ) உபநிஷத்தை அறிந்தோர்க்குரிய மார்க்கம் கூறப் படலானும்.

சுஷிஷ்டேவாஹிஸ்மவஹ்யுஷ்டேஷோzஹாஸ்ஸ்மி।
(சாந். உ. கடி. டி; தி. கo. க)

"அவர்கள் ஒளிக்குப் போய், ஒளியிலிருந்து பகலுக்குப் போய்" என்று தொடங்கி,

தகுவஸ்ரஷோzஸாநவஸ்ஸ வாதாஸ்ரவருணமேதுஷ மெவ யோ வருவய வமேத நவ திவஸ்ஸாநா ஹோ ஸாநவஸாவதஸ்ஸா வதஸ்ஸே (சாந். உ. கடி. டி, சு)

"அவ்விடத்து அமானவ புருஷன் ஒருவன் உளன்; அவன் அவர்களைப் பிரமத்துக்கு நடாத்துகின்றனன்; இது பிரமத்துக்குப் போகும் தேவயானம்; இவ்வழிச் செல்வோர் இம்மனித வாழ்வுக்கு மீள்வாரல்லர், மீள்வார்கள்" என்பது இறுதியாக, பிரமசொரூபத்தை அறிந்தவர்களாற் படிக்கப்படும் ஒளிமார்க்கம் கண்ணுட் புருஷரை அறிந்தவன் விஷயத்தினும் கூறப்படலான், இவர் (கண்ணுட் புருஷர்) ஆன்மாவுமன்று, சாயாபுருஷனுமன்று, பின் சிவபெருமானே. (கள)

## (சு) அநவஸ்தித்யதிகரணம்.

அநவஸ்திதேராஸம்஭வாச்ச நேதராஃ (க. உ. கஅ)

(நிo) அநவஸ்தையினாலும் அசம்பவத்தினாலும் *பிறர்ன்று.

ஸம்ஸாரதர்ஃ வராவஷோzம்ருத்வஸ்ய வஸாஸ்ரிதஃ।
ஏஸ்ப்ரஷ்டவ்யவ்யஜமதஃ வரஸ்ஸ வீர்ணா திவிஷ்டவக்॥
(தைத். ஆரணி. கo. எஉ. கூஉ)

---

*காயமேகோயிலாக்கடிமனம்மடிமையாக
வாய்மையேதூய்மையுரகமணமணியிவிளக்காக
நேயமேநெய்யும்பாலாநிலையுநீரமையவாட்டிப்
பூசனைசெனர்த்தப்போற்றவிக்காட்டினேமே.
(பொது. தனித்திருநேரிசை. சு)

"அங்குஷ்ட அளவினராகிய புருஷர் அங்குஷ்டத்தையும் ஆசரயித்தனர்; ஈசரும், உலகம் அனைத்துக்கும் பிரபுவும், விசுவத்தைக் கவளீகரிப்பவரு மாகிய இவர் பிரீதியுறுகின்றனர்" என்றற்றொடக்கத்த மகோபநிடதத்திலே கூறப்படும் சுருதியே விஷயம்.

ஈண்டு அங்குஷ்ட அளவினராகக் கூறப்பட்டவர் சிவபெருமானு? பிற ரொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிராணக்கினிகோத்திரப் பிரகரணத்தில் இவ்வாக்கி யம் காணப்படலானும், அங்குஷ்ட அளவினராக உரைக்கப்பட்ட புருஷர் சிற்றுருவினராகக் கூறப்படலானும், அந்தப் புருஷன் ஐந்து ஆகுதிகளைப் புசிக்கும் பிராணவாயு என்றே கோடற்பாற்று. பிராணன் புசிப்பவனுகான் என்று உறுத்திக் கூறல் கூடாது;

ஸுவ'ஸ்ருவ்யமிவ ஆஹுதீரஸ்ய வஹ்நிரா ஸ்ருஜதி।

"பிருதிவியும் அப்புவும் அன்னம்; உண்போர் அக்கினியும் வாயுவும்" என்றற்றொடக்கத்த வாக்கியங்களில் வாயுவும் புசிப்பவனும் என்னும் உண் மை பிரசித்தமாதலின்; எப்பிரகாரத்தானும் அவ்வாக்கியம் பிராணவாயு வைக் குறித்ததென ஆக்ஷேபிக்கின்,

(சித்தாந்தம்) (அங்குஷ்டமாத்திரராகக் கூறப்பட்டவர்) சிவபெரு மானே; உலகம் அனைத்துக்கும் ஈசுவரராதல், உலகத்தைக் கவளீகரித்தல் முதலிய குணங்களே மற்றென்றுக்கு (பிராணவாயுவுக்கு எப்பிரகாரமாயே னும்) பிரயோகிப்பின், அக்குணங்களுக்கு (அவ்வியல்பினவாய பிறபொருள் கட்கும் பிரயோகிக்க நேர்தலாகிய முடிவின்மை என்னும்) அநவஸ்தாதோ ஷமும், அசம்பவமும் நேருமாகலின். ஆகலின், அவ்வியற்கையர் சிவபெ ருமானே.

ஸ்ராணஸ்ய ஸ்ருஷ்டிரஸ்ரோத்ரஸ்ய விஜ்ஞானே।

(தைத். ஆரணி. க0. எச. கஅ)

"நீவிரே பிராணனுக்கெல்லாம் கிரந்தி, (துக்கத்தை ஒழிக்கும்) உருத்திரர் நீவிரே; நீவிரே என்னுட் பிரவேசித்துள்ளீர்" என்னும் சுருதியில், (அனர்) பிராணனுக்கு ஆதாரமாயினரெனக் கேட்கப்படுதலின், பிராணதாரமாயும் வழிபட்டற்பாலர் எனக் கூறப்படுகின்றனர். உபாசனையின்பொருட்டு அவ்வா அங்குஷ்ட அளவினராகக் கூறினமை விரோதமின்று. பிராணவாயு (பல விடங்களில்) போக்தாவாகக் கூறப்படினும், அதனை அனைத்தையும் கவளீ கரிக்கும் விசுவபோக்தா எனல் அசம்பாவிதம். ஆகலின், இத்தச் சிவபெ ருமான் பிராணக்கினிகோத்திரத்தினுல் வழிபடற்பாலராதலின், அவர் பிராணரூபராய்ப் பிரதிபாதிக்கப்படுகின்றார் என்றமை சித்தித்தது. (கஅ)

## (எ) அந்தரியாமியதிகரணம்.

பரப்பிரமசிவனுர் சர்வஜ்ஞரும், சர்வசக்தியினரும், சர்வானுக்கிரகரும், சர்வவியாபகருமாமாயினும், அவர் சூரியமண்டலம், புருஷ இருதய புண்டரீகமுதலிய இடங்களில் உபாசனையின் பொருட்டு உளராதல் (இது காறும்) நிரூபிக்கப்பட்டது. (அவர்) யாண்டும் வியாபித்தலே உணர்த்தமாறெழுந்தது இவ்வதிகரணம்.

ஈதையு-ரூபியிதெவாதிஷ-ுதஜ்ஜ-வ்ரூபதொாஸு |

(க. உ. ஏக)

(நிக) *தேவர்களினும் (உலக) முதலியவைகளினும் அந்தரியாமியாய் இருப்பவர் (அவரே), அவர் குணங்கள் கூறப்படலான்.

யஃ வ்ரூயிவ்ரா திஷ்மீ வ்ரூயிவ்ரா ஈதரொ யஃவ்ரூயிவீ ந வெத யஸ்ய வ்ரூயிவீஶரீரம் யஃ வ்ரூயிவீமதரொ யமயதி ஷ தெ ஆத்மா ஈதயு-ரூபியிதெ: (பிரு. டி. எ. ஈ)

"பூமியினும் பூமிக்குள்ளும் இருக்கும் அவரைப் பூமி அறிந்திலது, பூமியைச் சரீரமாகவுடையராய், அதனை உள்ளே நின்று செலுத்துபவர் உன் ஆன்மாவும், அந்தரியாமியும், (அமிர்தரும்) சிவபெருமானுமாம்" என்னும் அந்தரியாமிப் பிராம்மணசுருதியே ஆராயற்பாலதாகிய விஷயம்.

பிருதிவிமுதல் அவ்வியக்த ஆன்மா வரையும் உள்ள எப்பொருள்களுக்கும் அந்தரியாமியாகக் கூறப்பட்டவர் சிவபெருமானு? ஆன்மாவா? விராட் புருஷனு? பிரதானமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தான் தேடிக்கொண்ட விசித்திரமாகிய பல்வகைப் பயன்களைத் துய்க்கும் பொருட்டு, ஆன்மா சகல பூதேந்திரியங்களுள்ளும் பிரவேசித்தானெனல் பொருந்துகின்றது; (இன்றேல்) சகல சேதனப் பொருள்களுக்கும் உபாதானமாயிருத்தலின் விராட்புருஷன் சகல பூதங்களுட் பிரவேசித்தானெனல் பொருத்தம்; இன்றேல், மகத்தத்துவ முதலாகப் பரிணமித்தலின் பிரதானமே சர்வவியாபகமாயதெனல் உசிதம்.

வ்ரூயிகொ ரூபஂ: (சுவே. ஈ. ச; ச. கஉ)

---

*மாலாகிநான்முகனுய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மழுவமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகத்தானேயாகிப்
பூலோகபுலோகலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
யேலாதனவெல்லாமேல்விப்பானெழுஞ்சடராயெம்மடிகணின்றவாறே.
(பொது, நின்றதிருத்தாண்டகம், சால, 10)

"விசுவாதிகர் உருத்திரர்" என்னுஞ் சுருதி கூறியவாறு, உலகம் அனைத்தையும் கடந்து, சமஸ்த விகாரமெலாம் ஒழிந்துள்ள சிவபெருமான் விகாரரூபமாகிய பிரபஞ்சத்துட் பிரவேசித்தாரெனல் ஒவ்வாது. ஆகலின், சிவபெருமான் ஒழிந்து ஆன்மா, விராட்புருஷன், பிரதானம் என்னும் மூன்றனுள் ஒன்றே அந்தரியாமி எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிருதிவி முதலியவற்றுள் அந்தரியாமியாயுள்ளார் சிவபெருமானே; எல்லாவற்றுள்ளும் (அவர்) உண்மைக்குணம் (பிருகதாரணியத்திற்) கூறப்படுதலின்,

ஸொzஹராடஹரo வ்ராவிஶஸ (அதர்வசிரசு.க)

"அந்தரத்தின் அந்தரத்தைப் பிரவேசித்தனர்" என்று அதர்வசிரசினும் எப்பொருள்களுக்கும் ஆன்மாவாகச் சிவபெருமான் பிரவேசித்தனர் எனக் காணப்படுதலின்.

வஷடகரூதாஹயு-ர்ஸ்ரீதஃ (பிரு. இ. எ. கூ)

"அவர் உன் ஆன்மா, அந்தரியாமி, அமிர்தர்" என்னுஞ் சுருதியிற் சிவபெருமானே அநாதிமுத்தராகிய அமிர்தர் எனக் கூறப்படுகின்றனர்;

வஸதாமி ஹவா கூஸ்ரீதஸ்ய நாஶயெயாமி|

"இவை அமிர்தத்தின் பெயர்கள்" என்று சிவபெருமானைக் குறித்து ஜரபாலோபநிடதத்திற் கேட்கப்படலான்.

விஸ்வாயிகொ ரூத்ரஃ (சுவே. கூ. ச; ச. கஉ)

"விசுவாதிகர் உருத்திரர்" என்னுஞ் சுருதி சிவபெருமானே விசுவாதிகர் என்று கூறியவாறு போல,

ஸவை-ர வை ரூத்ரஃ (தைத். ஆரணி. க0. உச. சஉ)

"எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளும் அவரை விசுவரூபர் என்று கூறுகின்றன. விகாரமுடைய எப்பொருள்களுட் (கலந்து) பிரவேசிப்பினும், அவர்க்கு அவ்விகாரத்தின் லேசமும் பற்றாது என உணர்த்துதற்கே (இந்த அதிகரண ஆரம்பத்திற் கூறப்பட்ட வாக்கியத்தைத் தொடர்ந்து, பிருகதாரணியத்துள்ள) ஒவ்வொரு மந்திரத்தும் அமிர்தசப்தம் பரியாயமாகப் பிரயோகிக்கப்பட்டது.

யொ வை ரூத்ரஸ்ய ஹதவா நூலுர்-வஃ ஸ்ய-ர்ஸ்ய ஸ்ரஷ்டா தவை வை நஶொ நஃ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரோ, அவர் பகவான், அவர் பூ, புவ, சுவ, அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவற்றாற் பிரமா, விஷ்ணு, உருத்திரர், உமை, இலக்குமி, சரசுவதி, கணேசர், ஸ்கந்தர்,

இந்திராதி லோகபாலர், பூமி முதலிய சப்தலோகங்கள், பிருதிவியாதி பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், கிரகம், நக்ஷத்திரம், காலமுதலிய ரூபமுடையராய்ச் சிவபெருமான் தனித்தனி அப்பியர்சலிங்கத்தினுல் அதர்வசிரசினும் நிரூபிக்கப்படுகின்றனர். சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சத்தை வியாபித்து நின்றமையின், அபுருஷார்த்த சம்பந்தம் எய்தாமோ என்னுஞ் சங்கை அறுத்தற்கு, ஐசுவரிய முதலிய மங்கல குணம் அவர்க்கு உளதாதலே உணர்த்துமாறு பகவத் சப்தம் பரியாயமாக ஓவ்வோரிடத்தும் அதர்வசிரசிற் பிரயோகிக்கப்பட்டது. ஆகலின், சர்வாதிகரும் சர்வான்மாவாயு முள்ளார் சிவபெருமான் எனல் யுக்தம். (கக)

பிரதான முதலியவற்றை அந்தரியாமியாகக் கூறல் உசிதமா என்னும் ஆக்ஷேபத்தைச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

ந அ ஸ்ம்ருத்யுதி⁴கரணாதி³தி சேந்நாத்மாஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்⁴ய꞉ (க. உ. உ0)

(நுஉ) ஸ்மிருதி கூறும் அதுவும் அன்று; அதன் குணங்கள் யாதுங் கூறப்படாமையின்; சரீரியும் அன்று.

(சாங்கிய) ஸ்மிருதியிற் கூறப்பட்ட பிரதானத்தைச் சுருதி சொல்லிய அந்தரியாமி எனல் கூடாது, விகாரமுறும் ஜடத்தன்மை முதலிய குணங்கள் அவர்க்குக் கூறப்படாமையின்; சாரீரனுகிய விராட்புருஷனுமன்று, அவனுக்கு அனேத்தையுஞ் செலுத்துமியல்பு முதலியன கூடாமையின். (உ0)

சூத்திரகாரர் ஆன்மாவுமாகான் என்கின்றனர்.

உ⁴யவ்யாபி³ஹி ப்ரகரணாத் (க. உ. உக)

(நுங) இரண்டும் உறுதியாய் அவரைப் *பேதமென்றே கூறுகின்றன.

யோ விஜ்ஞானே திஷ்ட²ன் (கண்ணுவசாகை=பிரு. நி. எ. உஉ)
ய ஆத்மனி திஷ்ட²ன் (மத்தியந்தினசாகை)

"எவர் விஞ்ஞானத்தில் (ஆன்மாவில்) இருக்கின்றனரோ;" "எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ" என்றற்றொடக்கத்தனவாக முறையே கூறும் கண்ணுவசாகை மத்தியந்தினசாகையுமாம் இரண்டினும் ஆன்மாவினின்று

---

*என்னனேன்னுள்ளத்தொண்டாய்க்காலத்தைக்கழித்துப்போக்கித்
தென்னியேனுகின்றதேடினேனுடிக்கண்டே
னுன்குவாநுன்கிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று
வென்றினேன்வென்றிகாணுவிஞாலமுய்யவெரிந்திட்டேனே.
(பெரி, தனித்திருநேரிசை, காவு, கூ)

இரப்பரெமையாள்வரென்னுணிக்காரிடைமருதமேவியிடங்கொண்டாரே.
(திருவிடைமருதூர், காவு, ஓ)

அந்தரியாமியானவர் வேறெனக் கூறப்படுகின்றனர். ஆகலின் சிவபெருமானே அனைத்துக்கும் அந்தரியாமி; பிரதானமாவது, விராட்புருஷனுவது, ஹிரண்மாவாவது அன்று என்பது சித்தமாயிற்று. (உஅ)

## (அ) அதிருசியத்துவாதிகரணம்.

ஈண்டுப் பிரத்தியகூமாகிய பிருதிவியாதி ரூபமாகப் பிரதிபாதிக்கப் பட்ட சிவபெருமான் அவற்றைப் போலக் காண்டலுறார் என உணர்த்துதற்கு எழுந்தது இவ்வதிகரணம்.

அதிருசியமக்ராஹ்யமகோத்ரமவர்ணமசக்ஷுஷ்ரோத்ரமபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் தத்பூதயோநிம் பரிபஶ்யந்தி தீராஃ (முண். க. க. சு)

(நிசு) *கண்கூடாகாமை முதலிய குணங்களுடையர் (சிவபெருமான், அவர்) குணங்கள் கூறப்பட்டமையின்.

"அந்த அக்ஷரம் எதனால் உரைக்கப்படுகின்றதோ, அது பரைஞானம்; எது காணப்படாததாய், பற்றப்படாததாய், கோத்திரமிலாததாய், வர்ணமிலாததாய், கண் காது இலாததாய், கைகால் இலாததாய், நித்தியமாய், வியாபகமாய், யாண்டும் பிரவேசித்ததாய், அதிசூக்குமமாய், அழியாததாய், சமஸ்தப் பிராணிகளுக்கும் காரணமாய் உள்ள அதனை (அக்ஷரத்தைப்)

---

*கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னேக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே.
(திருவாசகம், சிவபுராணம்)

அடிசார்ந்தவர்க்கு முடியாவின்ப
நிறையத்தொடுப்பினுங் குறையாச்செல்வ
மூலமுகவெ முடிவுமிகந்து
காலமூன்றையுங் கடந்தகடவு
ளுளக்கணுக்கல்லா தூன்கணுக்கொளித்துத்
துளக்கறநிமிர்ந்த சோதித்தனிச்சுட
ரெறுப்புத்தலையி னிருகெவிக்கேட்டா
றுறுப்பினின்றெழுதரு முள்ளத்தோசை
வைத்தாவின் வழிமறுத்தகத்தே
தித்தித்தூறுந் தெய்வத்தேற
றண்டத்தலையிற் பண்டைவழியன்றி
யறிவினுங் கரியாகாற்ற
மேனையதன்மையு மெய்தா தெவற்றையுந்
தானேயாகி நின்றதற்பர.
(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, உஅ)

பெரியோர் காண்கின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதியே இவ்வதிகரண விஷயம்.

ஈண்டு அக்ஷரம் என்றது பிரதானமா? ஆன்மாவா? சிவபெருமானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஈண்டு அக்ஷரம் பிரதானம்; மகத்து முதலியவாய்ப் பரிணமிக்கும் பிரதானம் எப்பொருட்கும் காரணமாதலின்; இன்றேல் (அக்ஷரம்) ஆன்மா.

கூஈo வ்யா நஇஇ்ரு தாகூஈழி (சுவே. க. கo)

"க்ஷரம் பிரதானம், அக்ஷரம் அமிர்தம்" என்னுஞ் சுருதிகொண்டு ஆன்மாவை அக்ஷரம் எனக் கூறுவது உசிதம், ஆன்மா தன் கர்மவசத்தினால் மகாபூதங்களுக்குக் காரணமாதலும் உண்மையான். ஆகலின், இத்தப் பிரதானம் ஆன்மா இரண்டனுள் ஒன்றை அக்ஷரம் குறிப்பதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே அக்ஷரம்;

யஸவ-ஜ்ஞ ஸவ-ஶிதி்ய ஸ்ய ஜ்ஞ நமேஷவ ஃ (முண். க. க. கூ)

"எவர் சர்வஜ்ஞரோ, அனைத்தையும் அறிபவரோ, எவர்க்குத் தபசு ஞான மயமோ" என்றற்றொடக்கத்த சுருதியில், அவர் குணங்கள் கூறப்படலான்; சிவபெருமானெழிந்து பிறிதொன்றுக்கும் முறறுணர்வு முதலிய குணங்கள் எய்தா. எப்பொருள்களுக்கும் காரணமாதல், பிரதானத்துக்கேனும் ஆன்மாவுக்கேனும் நேருமெனல் யுக்தமன்று. அசேதனமாகிய பிரதானத்திக்கும், அசர்வஜ்ஞனாகிய ஆன்மாவுக்கும் அந்தச் சாமர்த்தியம் எய்தாமையான். (உஉ)

ஈண்டுப் பின்னரும் ஆன்மாவையும் பிரதானத்தையும் அக்ஷரமெனல் பொருந்தாதெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஷிஷெஷணஷெஷவ்வஷெஷாஹ்யாஹ்ய நேதாரள (க. உ. உசு)

(திரி) விசேஷணமும் பேதமும் கூறப்படலான், இத்த இரண்டும் அன்று.

கவ்ஷிஹ்ரு ஹமவொ விஜ்ஞாதெ ஸவ-ஶிதி்o விஜ்ஞாதo ஹவதி (முண். க. க. கூ)

"பகவானே, எது அறியப்படின், ஈதெல்லாம் அறியப்பட்டதாகின்றவோ" என்னுஞ் சுருதியினுள் ஒன்றை (சிவஞானத்தை) அறிதலின் எல்லாம் அறியப்படுகின்றனவாகும் என உணரப்படுகின்றது. இஃதன்றி இவ்வியல்பினவாய வேறு விசேஷணங்களும் உண்டு; அக்குணங்கள் கூறப்படலானும், அக்ஷரம் பிரதானமாகாது.

அக்ஷராத்பரதஃ பராஃ (முண். உ. க. உ)

"அக்ஷரத்தினும், (பரமாயசிவான்மாவினும்) பரன்" என்னுஞ் சுருதி ஆன்மாவினின்று (அக்ஷரம்) வேறு எனக் கூறுதலின், (அக்ஷரம்) ஆன்மாவும் அன்று. (உக)

ரூபோபன்யாஸாத் (க. உ. உச)

(நிசு) (அவரது) வடிவத்தின் உபந்நியாசம் உண்மையானும்.

அக்நிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ திசஃ ச்ரோத்ரே வாக்விவ்ருதாஶ்ச வேதாஃ| வாயுஃ ப்ராணோ ஹ்ருதயம் விஶ்வமஸ்ய பத்ப்யாம் பூமிர்ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா॥

(முண். உ. க. ச)

"அக்கினி அவர் தலை, சூரியனுஞ் சந்திரனும் அவர் கண்கள், திக்குகள் அவர் காதுகள், புலப்படுத்தப்பட்ட வேதம் அவர் வாக்கு, பிராணன் அவர் சுவாசம், பிரபஞ்சம் அவர் இருதயம், பூமி அவர் அடிகளினின்று பிறந்தது, பிராணிகள் அனைத்துக்கும் அவரே அந்தரியாமி" என்னுஞ் சுருதியினால், அக்ஷரம் மூவுலகவடிவமாதல் கூறப்படுகின்றது. ஆகலின் அனைத்துக்கும் ஆன்மாவாகிய சிவபெருமானே அக்ஷரமொழியினற் கருதப் பட்டவர். (உச)

## (கூ) வைசுவாநராதிகரணம்.

மேலே உரைத்த அதிகரணமொன்றிற் பிராணதாரராக உபாசிக்கற் பாலர் என்று கூறப்பட்ட சிவபெருமான் பின்னர் ஜாடராக்கினி ரூபமாக உபாசிக்கற்பாலரெனக் கூறுகின்றது இவ்வதிகரணம்.

வைஶ்வாநர: ஸாதாரணஶப்தவிஶேஷாத் (க. உ. உடு)

(நிஎ) *வைசுவாநர †ஒளி (சிவபெருமான்), சாதாரண சப்தத்தினின்று பேதம் உண்மையின்.

யஏஷோঽக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே ஏஷ ஆத்மேதி ஹோவாச ஏதத³ம்ருதமபயமேதத்³ப்³ரஹ்மேதி தஸ்யோ ஹ நாம தத்ஸத்யமித்யுபாஸ்தே (சாந். நி. கஅ. க)

*காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்கடிக்கமலத்திருந்தயனுங்காணவண்ணஞ் சீரொளியதழற்பிழம்பாய்நின்றதொல்லைத்திகழொளியைச்சிந்தைதனேமயக்கந்தீர்க்கு மேரொளியையிருகிலனும்லிசம்பும்விண்ணுமேழுலகுங்கடந்தண்டத்தப்பாலின்ற பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானேப்பேசாதாரெல்லாம்பிறவாரே. (கோயில், பெரியதிருத்தாண்டகம், சுர்வ; ஆ)

†அக்கினி.

"இடவரைப்புட்பட்ட வைசுவாநரரை ஆன்மாவாக எவன் உபாசிக்கின்றானோ, அவன் சர்வலோகங்களிலும், சர்வபூதங்களிலும், சர்வான்மாக்களிலும் போகம் (அன்னம்) துய்க்கின்றான்" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே இவ்வதிகரணவிஷயம்.

உபாசிக்கற்பாலராகக் கூறப்பட்ட வைசுவாநரர் சிவபெருமானா? பிறர் ஒருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வைசுவாநரமொழியினால் ஜாடராக்கினியே கூறப்படுகின்றது;

ஈயதீந்நிவைஶ்வாநரோ யே஽ந்ரஹ்மந் வயுதே யதிதமத்யதே தவைஷ வொஹோஷ்வக்நி ர்யத்தத்ஷ்ணாவஹிர்யாய ஸ்ருணோதி ஸ ய தொத்ரீஷ்யத்யுவக்நி ர்யேநந வொஷ்ய ஸ்ருணோதி।

(பிரு. எ. கூ. க)

"உண்ணப்பட்ட அன்னத்தை ஜீர்ணமாக்கற்பாலதாய (மனிதனுள்ளேயுள்ள) இந்த அக்கினி வைசுவாநரன், ஒருவன் தன் காதுகளைப் பொத்துங்கால், அவன் கேட்பது அதன் ஒலியே; அவன் இவ்வாழ்வைவிட்டு நீங்குங்கால், அவன் அவ்வொலியைக் கேட்பானல்லன்" என்னுஞ் சுருதியில் ஜாடராக்கினிபற்றிப் பிரயோகங் காணப்படலான்.

இன்றேல் (அவ்வைசுவாநரர்) பிருதிவியாதி பஞ்சபூதங்களுள் மூன்றுவதாகிய அக்கினியாகலாம்;

வைஷ வா கூஹ்யிவைஶ்வாநரஃ (தைத். சங். கூ. கூ. அ. ச)

"இந்த அக்கினியே வைசுவாநரன்" என்றற்றொடக்கத்த சுருதிகளில் வைசுவாநரசப்தம் பிரசித்தமாயிருத்தலின்.

இன்றேல், வைசுவாநரன் அக்கினி தேவதையாயிருக்கலாம்;

வைஶ்வாநரம் ஊஷுஷகவாமம் நிவ்வைஷ வ்ருதோ ஜாதே।

(தைத். சங். உ. உ. இ. கூ)

"புதல்வன் பிறந்தபோது பன்னிரு கபாலங்களில் வைசுவாநரார்க்குப் பலி கள் கொடுக்கப்படும்" என்றற்றொடக்கத்த சுருதிகளில், (அவ்வக்கினி) இஷ்டி தேவதையாய்ப் பலம் கொடுத்தல் கூறப்படுதலின். சிவபெருமான் அன்று; பிறதேசமாத்திரம் என எல்லை வரையறுப்புக் குறிக்கப்படுதலினாலின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே வைசுவாநரர்; எங்ஙனம்? வைசுவாநரசப்தம் சாதாரணமாக வழங்கப்படினும், இவ்வதிகரணத்திலே

தொ நு சூத்ரே கூ° வ்ருத்ர (சாங். இ. கக. ச)

சூத்ர நமஸ்தே வைஶ்வாநர ஸம்ப்ரதீஹ்யஸ்மி தமேவ நோ ப்ரூஹி (சாந். டி. கக. சு)

"நமது ஆன்மா யாவர்? பிரமம் என்ன? வைசுவாநர ஆன்மாவை நீவிர் இப்பொழுது அறிகின்றீர்; அதனை நமக்குக் கூறும்?" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சிவபெருமான் அசாதாரண பிரமசப்தாதிகளினால் (இந்தச் சாந்தோக்கியோபநிடதப் பிரகரணத்தில்) விசேஷிக்கப்படுதலின். அந்த விசேஷணம் ஜாடராக்கினி முதலியவைகளுக்குச் செல்லுமாறின்று. ஆகலின், சிவபெருமானே வைசுவாநரர். (உடு)

சிவபெருமான் பாலதாக மற்றோர் பிரமாணஞ் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

த்யுர்மூர்தா பூர்யஸ்ய சக்ஷுர்வாயுராத்மா விஶ்வரூபோ நபஸ்வாந் (க. உ. உசு)

(நிஅ) (ஈண்டுக்) கூறப்படுவது அணுமானக் குறியாய் ஆகுக என்பது.

கஸ்மிந்நு கல்வாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்சேதி (முண். உ. க. ச)

"அக்கினி அவர் தலை, சூரியனுஞ் சந்திரனும் அவர் கண்கள்" என்றற் றொடக்கத்த சுருதிகளிலே ஆகாயலோகமுதற் பிருதிவியீறாகிய வடிவம் சிவபெருமானுக்குக் கூறப்பட்டது.

தஸ்ய ஹவா ஏதஸ்யாத்மநோ வைஶ்வாநரஸ்ய மூர்தைவ ஸுதேஜாஶ்சக்ஷுர்விஶ்வரூபஃ ப்ராணஃ ப்ருதக்வர்த்மாத்மா ஸம்தேஹோ பஹுலோ பஸ்திரேவ ரயிஃ ப்ருதிவ்யேவ பாதௌ (சாந். டி. கஅ. உ)

"அந்த வைசுவாநர ஆன்மாவுக்குத் தலையே சுதேஜஸ் (நல்லொளி), கண் விசுவரூபம், பிராணன் பிருதக் வர்த்தமானம் (வேறாய வழி), தேகம் பகுளம் (நிறைவு), ஜலாசயமே செல்வம், அடிகளே பூமி" என்னுஞ் சுருதிகளிற் கூறப்பட்ட வடிவம் சிவபெருமானதென (அனுமானித்தற்கு) இலிங்கமாகின்றது. (உசு)

ஸப்தாக்ஷிர்ஹ்யஜிஹ்வோ ப்ரதிஷ்டா நாப்ய ஏஷ ஸமாப்ரஷ்டாரம் வைஶ்வாநரம் ஸாத்வாநரூஷபி மெநமேயேத (க. உ. உள)

(நிசு) சப்தமுதலியவைகளாலும், உள்ளே பிரதிஷ்டை பண்ணப்படலாலும், வைசுவாநரர் ஜாடராக்கினியொழிந்த மற்றொன்றன்றெனின், அன்று; அங்ஙனந் தியானத்தின்

பொருட்டு உபதேசிக்கப்படலானும் ஓவ்வாமையானும்; இவரை (வைசுவாநரரை) புருஷரென்றும் படிக்கின்றனர்.

(ஆக்ஷேபம்) இந்த வைசுவாநராக்கினி,

ஹ்ருதயம் ராஹபத்யோ மநோ ஜாபசாஹார்யம் வாஸ்யம் ஸபர்யா ஸ்ருசஸ்தே (சாந். நி. கஅ. உ)

தஸ்ய ஹைதஸ்யாக்நேர்ஹ்ருதமேவ கார்ஹபத்யோ யன்மநோ வாஸ்யம் (சாந். நி. ககூ. க)

"இருதயம் கார்கபத்தியாக்கினி, மனம் அன்வாகாரியாக்கினி, வாய் ஆகவநீயாக்கினி, ஆகலின் மனிதன் எதனை முதற்கண் புசித்தானோ அது ஹோமஸ்தானத்தின் பாற்று, அவன் முதல் ஆகுதியை ஓமிக்க" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கூறப்பட்டு, அக்கினி சப்தத்தினால் மூன்றாகக் கற்பித்த அக்கினிகளாய், பிராணன்களுக்குக் கொடுக்கும் ஆகுதிகளுக்கு ஆதாரமாயிருத்தலானும்,

ய ஏஷோ(அ)க்நிர்வைஶ்வாநரோ யத்புருஷஃ (சத. பி. கo. கூ. க. ககு)

"புருஷரூபமாயும், புருஷனுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டதாயும் இங்ஙனம் இந்த வைசுவாநராக்கினியை எவன் அறிகின்றானோ" என்னுஞ் சுருதியிற் புருஷனுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்ட குறியினாலும், (அந்த வைசுவாநராக்கினி) ஜாடராக்கினியன்றிச் சிவபெருமான் அன்றெனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று; ஜாடராக்கினிரூபராகச் சிவபெருமான் உபாசிக்கற்பாலர் என உபதேசிக்கப்படலானும், கேவலம் ஜாடராக்கினி மூவுலக சரீராதியாயிருத்தல் கூடாமையானுமாம். மேலும்,

ய ஏவமேஷ ஏதந்நிவைஶ்வாநரம் யதுபுருஷஃ।

(சத. பி. கo. கூ. க. ககு)

"புருஷனைக் அறியப்பட்டவன் இந்த வைசுவாநராக்கினி" என்னுஞ் சுருதியில் வாஜசநேயினர் வைசுவாநரரைப் புருஷர் எனவும் கூறுகின்றனர். உபாதியில்லாத புருஷசப்தத்தினாற் கூறப்படுகின்றவர் சிவபெருமானே; அந்தப் புருஷனால் இம்மெல்லாம் நிறைந்தது என்று கேட்கப்படலான். ஆகலின் சிவபெருமானே (அந்தப் புருஷர் என்று) கோடல் யுக்தம். (உஎ)

தூதி வாவ நடிவதா லுமிதஸ (க. உ. உஅ)

(கூo) ஆதலினாலே தேவதையுமன்று, பூதமுமன்று.

இந்த வைசுவாநரர் திரிலோகத்தைச் சரீரமாகவும், புருஷசப்தத்தினால் அறியப்படுபவராகவும் இருத்தலினால், (அவர்) தேவதாக்கினியாயா

வது, (பிருதிவியாதி பிஞ்சபூதங்களுள்) மூன்றும் பூத அக்கினியாயிலது கொள்ளப்படுவாரல்லர். (உஎ)

ஈண்டுச் சிவபெருமான் ஜாடராக்கினிரூபமாய் உபாசிக்கற்பாலர்ரீ அக்கினிசப்தத்தினுற் குறிக்கப்பட்டனரென நிரூபித்து, சூத்திரகாரர் மற்றைய ஆசாரியர்கள் அவ்வக்கினியை எங்ஙனம் பலதிறப்பட யோஜித்தனர் என்னக் காட்டுவாராயினர்.

வாகூஷஷ்ஷ்ரீயாயம ஜைமிநிஃ (க. உ. உகூ)

(சூக) நேரே (பதப்பிரயோகஞ் செய்யினும்) விரோதமின்றென்பர் ஜைமினி.

அவர் ஆவசியகம் அக்கினிரூபராக உபாசிக்கற்பாலர் என்னும் நியாயத்தினுன் மாத்திரமன்றி, முற்பட (அன்பர்களை) நடாத்துதலாற் சிவபெருமானே அக்கினிசப்தத்துக்கு நேரே பொருளாயினர் என்னும் நியாயத்தானும் விரோதமின்றென்பர் சைமினி. (உகூ)

கூஹிவ்ருகெ ஸிதுர்யாஸ்ரயஃ (க. உ. கூ0)

(சூஉ) அபிவியக்தியின் பொருட்டென்பர் ஆசுமரத்தியர்.

யஷ்டவ்யவை வ்ராஹ்மணாதயஃ (சாந். நி. கஅ. க)

"இடவரையுட்பட்டவர்" என்றற்றொடக்கத்த சுருதிப்பிரகாரம், எல்லையுட்படாதவரை ஆகாயமுதற் பிருதிவி ஈறுயுள்ள பிரதேசங்களில் அடங்கினவராக எல்லைப்படுத்தினமை, உபாசகர்களுக்குப் பிரசன்னமாக்கும்பொருட்டென்பர் ஆசுமரத்தியமுனிவர். (கூ0)

கூநாஷ்ரயேஷு ஜ்யோதிராதிவாதிஃ (க. உ. கூக)

(சூஙு) ஞாபகத்தின்பொருட்டு என்பர் பாதரி.

ஆகாயமுதற் பிருதிவி அந்தமாயுள்ளவைகளிற் சிரசும், பாதமும், மற்றை அவயவங்களும் கற்பித்தமை மறவாதிருக்கும் பொருட்டே, (அஃதாவது) பிரமத்தை அடையும்பொருட்டென்பர் பாதரிமுனிவர். (கூக)

ஸம்வத்திஸித்தி ஜைமிநிஷ்ஷாஹி ஏஷாம்யதி (க. உ. கூஉ)

(சூச) உயர்வின்பொருட்டென்பர் ஜைமினி, அங்ஙனமே சுருதி கூறுகின்றது.

உ வஸவ வெத்மெ-ஸாமி வஹி-ஷ்ஹ-ஷ்யம மாஹ-ஷ்வதெ-ய ஏநாஸ்மாஹாயே-ஷ்வஸந சூஷ்ய சாஹவநீயஃ (சாந். நி. கஅ. உ)

"நெஞ்சே வேதிகை, உரோமங்களே தர்ப்பை, இருதயம் கார்கபத்தியாக்கினி, மனசு அன்வாகாரியாக்கினி, வாய் ஆகவநீயாக்கினி" என்னுஞ்

சருதியில் உபாசகனுடையஉ முதலியவைகளை [illegible] முதலியனவாகக் கற்பித்தமை ஞானங்கமாயுள்ள பிராணகுதியை அக்னிஹோத்திரமென உயர்த்திச் சிந்தையிற் கொள்ளுமாறென்பர் ஜைமினி.

ய வனவ்விஹாநஜ்ஹொதி ஜுஹொதி|

(தைத். சங். க. சு. கூ. சு)

"வித்துவான் அக்கினிகோத்திரத்தை ஒமிக்கின்றனன்" எனச் சுருதி விளக்குகின்றது. (கூஉ)

கூநஜ்ஹி ஜ்ஹெநவெஷ்டிம் (க. உ. நகூ)

(சுருதி) இவரை அதற்குள்ளே உளராகவும் கூறுகின்றனர்.

ஸிவொ ஸ வியாவ்ருஹாய (தைத். ஆரணி. க0. சுகூ. கூ0)

"(ஓ பலியே), எரிவருதிருக்குமாறு சிவபெருமானுக என்னுள்ளே பிரவேசி" எனவும்,

வ்ரஹ்மீ வ்ரணாதி விஷ்ணுக்ரீ|

(தைத். ஆரணி. க0. எக. கூஉ)

"விசுவபோக்தாவாயுள்ள பிரபு பிரீதியுறுகின்றனர்" எனவும் போந்த சுருதிகளிற் சிவபெருமான் பிராணகுதிசெய்யுங்காலத்திற் *போக்தாவாக உபாசகர் உள்ளத்தில் உளர் எனத் தைத்திரீயகர் கூறுகின்றனர். ஆகலின், ஆசாரியர் அனவர் கோட்பாட்டினும், எவ்வித நியாயத்தினும் ஜாடராக்கினிரூபாகச் சிவபெருமானே பிராணக்கினிகோத்திரத்தினல் ஆராதிக்கற்பாலர் எனல் சமீசீனம். (நகூ)

---

*ஸிவொ ஜாதா ஸிவொ ஹொதூ|

அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ
ரண்டமாஞ்சிறுமைகொண்டடியே
னுண்டவுணுனக்காம்வகையெனதுள்ள
முன்கலந்தெழுபரஞ்சோதி.

(திருவிசைப்பா, கங்கைகொண்டசோளேச்சரம், சு)

என்று வேதத்துக்கிசைந்து சிவாகமமும் திருவிசைப்பாவுங் கூறிய.

# முதலாம் அத்தியாயத்து
# மூன்றும் பாதத்து

—o—

## (க) துயுப்வாத்தியதிகரணம்.

இந்தப் பாதத்திலே வெளிப்படையானவும் வெளிப்படையிலாதனவு மாகிய பிரமலிங்கங்களையுடைய வேதாந்த வாக்கியங்களின் விசாரஞ் செய்யப்படுகின்றது. இதற்கிடையில் (இந்நூல் படித்தற்குரிய) அதிகாரி என்றும் நிரூபணஞ் செய்யப்படுகின்றது.

ஏ-ஹூஏ-ஏ-ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் (க. கூ. க)

(சூசு) * ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு உறைவிடம் (சிவபெருமான்), சுவ (என்னும் ஆன்ம) சப்தவுண்மையான்.

யஸ்மிந் த்யௌஃ ப்ருதிவீ சாந்தரிக்ஷ மோதம் மநஸ்ஸஹ ப்ராணைஸ்ச ஸர்வைஃ। தமேவைகம் ஜாநத ஆத்மாநமந்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேதுஃ (முண். உ. ட். இ)

"எவரிலே ஆகாயமும், பூமியும், அந்தரிக்ஷமும் குறுக்கும் மறுக்குமாயினவோ, பிராணன்கள் அனைத்தினோடு மனசும் (உளவோ), அந்த ஏகராகிய (பரம) ஆன்மாவையே அறிக, பிற வார்த்தைகளை விடுக, அவர் அமிர்தத்துக்குச் சேது" என்னும் சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாகிய விஷயம்.

இந்தச் சுருதியில் ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு உறைவிடமாகக் கூறப்பட்டவர் சிவபெருமானே? மற்றொன்றே? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுக்கு அன்னியமாயுள்ள வாயுவே பூமி ஆகாயத்துக்கு ஆதாரம் எனப் பெறப்படுகின்றது.

வாய-ஈநா வை கௌதம ஸ-ஸூத்ரேணாயமேவைகோ வாயு ரேவ ஸூவ-ஈணி ச ஊஹிதாநி ஸஜ்ஜ்ஜாநி ஜவந்தி।

(பிரு. இ. எ. உ)

"கௌதமனே! நூலினைப் போல வாயுவினுலே இவ்வுலகமும், பிறவுலகமும், மற்றெல்லாச் சென்றக்களும் கோக்கப்பட்டுள்ளன" என்னுஞ் சுருதியில்

---

* நீள்வானமுடனாகி நின்றமாலையானே
(திருவாசகம், நாவு, அ)

† பொன்றையவன்சான்பூமியேற்நாங்கியோன்குபுண்ணியன்காண்
(திருவேகம்பம், நாவு, க)

என்னும் திருவாசக சுருதிகளால் ஆகாயம் பூமிகளுக்குச் சிவபிரான் ஆதாரமாக அறியப்படுகின்றார்

தாயுமே எனத்தகும். ஆதலினைப் பிரித்தமைத்தலினால் எனின்,

சிவபேருமானே ஆகாயம் பூமி முதலியவற்

தெவ்வொரு ஜாநய் சூத்ரநி (முண். உ. உ. நி)

வொருவராகிய (பரம) ஆன்மாவையே அறிக" என்னுஞ் சுருதியிற் (பசு) ஆன்மா என்னும் சப்தம் உளதாதலின். (க)

(ஆக்ஷேபம்) ஆன்மசப்தத்தைச் சூத்திரான்மாவாகிய வாயுவுக்குப் பிரயோகித்தலான் எய்தும் இழுக்கென்னை எனை,

(உத்தரம்) சூத்திரகாரர் இங்ஙனம் இறுப்பாராயினர்.

ஈஷதேர்வ்யவ்யவதெஶாஅ (க. ங. உ)

(கூஎ) *முத்தரால் எய்தப் பெறுகின்றார் எனக் கூறப்ப டலானும்.

யதா வாயுர் வாயுதை ரூக்வண்ம் கத்ருராஸீரம் வரூஷம் ஸ்வயொநிம் கதா விஷ்ணுர்வாவை வியகிய நிரயஜநர் வரம் ஸாஸ்ய ஈஷ்வெதி (முண். ங. க. ங)

"எப்போது பார்ப்பவன் பொன்னிறத்தினரும், கர்த்தாவும், ஈசரும், புருஷரும், பிரமாவுக்குக் காரணமுமாயினரைப் பார்க்கின்றானே, அப்போது அவன் வித்துவானாய், புண்ணியபாவத்தை ஒழிந்து நிரஞ்சனனாய்ப் பரம சாமியத்தை அடைகின்றான்" எனவும்,

யதா நத்ய ஸ்யந்மாநா ஸமுத்ரெ ஸ்தம் கச்சதி நாமரூபெ விஹாய ததா வித்வாந் நாமரூபாத்பரராத்புருஷம் உபைதி திவ்யம் (முண். ங. உ. அ)

"ஆங்ஙனம் ஓடுவனவாகிய †நதிகள் சமுத்திரத்திற் பாய்ந்து பெயரும் வடி

*சொற்பாவும்பொருடெரிந்துதூய்மைநோக்கித்தாங்காதார்மனத்திருளே வாங்குதானே
(திருக்கேழ்வேளூர், காவு, உ)

வ்வாறுமுறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொண்டர்மனத்தகத்தேயனவரதமன்னி நின்றதிறலானே.
(திருமுதுகுன்றம், காவு, அ)

என எதிர்மறைமுகத்தானும் உடன்பாட்டானும சிவபிரான் முத்தர்களாகிய அடியாரால் அடையப்படுவதொரு திராவிட சுருதிகளால் விளக்கப்பட்டது.

நதீநாம் ஸ்யமாநா ஸமுத்ரெ நாமரூபெ விஹாய |
ததா வித்வாந் நாமரூபாதிமுக்தஃ பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ||

வும் ஒழிந்த மறைகளனைவோ, அங்ஙனம் வித்துவானும் பெயர்வடிவினின்று விடுபட்டுப் பரத்துக்குப் புருஷனாயிருக்கும் திவ்ய புருஷரை அடைகின்றன்" எனவும் போந்த சுருதிகளான், புண்ணிய பாவங்களினால் எய்தும் நாமரூபங்களினின்று விடுபடுகின்றவர்களாகிய முத்தர்களால் அடையற்பாலராகக் கூறப்படலானும், (இவர்) சிவபெருமானே.

இது எங்ஙனம் வாயுவுக்குப் பொருந்தும்? சிவான்மகமாகவேயிருத்தலின் வாயு சூத்திரான்மா; சிவபெருமானுடைய அட்டமூர்த்தங்களுள்ளே ஒன்றுதலின். ஆகலின், வாயு அன்றென்று நிர்ணயிக்கப்பட்டது. (உ)

நாநுமாநதஅஹாஅ வ்யாணஹ்யுஅ (க. கூ. கூ)

(சூஅ) அணுமானம் அன்று; அதைச் சுட்டும் சப்தம் இன்மையான்; ஆன்மாவும் (அன்று).

அணுமானத்தினாற் பெறப்படும் ஆகாயம் பூமிகளுக்கு ஆதாரம் அது; அனைத்துக்கும் உபாதானகாரணமாயிருத்தலினால் எனின், அது பொருந்தாது; பிரதானத்தைச் சுட்டும் சப்தம் இன்மையான். (பரம) ஆன்மசப்தம் உண்மையான், பிராணனைத் தாங்கும் ஆன்மா எனலும் பொருந்தாது. (கூ)

ஹஉவ்யவதிஸாஅ (க. கூ. ச)

(சூகூ) பேதம் கூறப்படலான்.

ஈண்டுச் சிவபெருமான் ஆன்மாவினின்று வேறெனக் கூறப்படுகின்றது;

ஸோ(அ)ந வ்யக்ஷ வரூஷோ நிஷ்ஷ்ரஷ்டோ ஜாயதே ஸ ஏஷ புருஷோ ஹ்யேஷ ஜாஷ்டோ யதா வயூ கூ நூஷீஸவ்ய ஸஹிஷோ நதீ வீதி ஷ்ருதேஃ (முண். கூ. க. உ; சுவே. ச. எ)

"அவன் (ஆன்மா) மரமொன்றில் (சரீரத்தில்) இறைவற்றன்மையின்மையான் மயங்கி, அமிழ்ந்தி, சோகித்துக்கொண்டிருக்கின்றான்; (ஆயின்) எப்

---

ஜலமஸாஸ்ரீ ரோஸ்ரோத்ரு நதீஷ்வஷ்டாஸ்வபி ஸர்வாஸு சாஹிநீ।
கூடாரூ தாயஷுபோயா திவ்ரஹாவாப்தி ஹேதவே॥
வனஸ்பதெஷ்வஹி நாநா தாரூபவதோயமஷ்டதா॥

"சமுத்திரத்தை அடைய நதிகளுக்கு நாமரூபம் நீங்குகின்றது; (நதிக்கும் சமுத்திரத்துக்கும்) ஒன்றுக்கொன்றுள்ள விசேஷத்தை (எவர்களும்) அறிகின்றிலர்; ஆயின் (இரு) ஜலத்துக்கும் வேறுக விசேஷம் தோன்றவில்லை; தூயசலத்தைக்கொண்டு செல்லும் நதியானது சமுத்திர ஜலத்தை அடைந்து உப்பு நீரியல்புச் சமுத்திரத்தின் பிரபாவத்தினாலன்றே அடைகின்றது. இங்ஙனம் தேகத்திலே வேறுபட்ட ஆன்மாவானது சிவத்தை அடைகின்றது" என்று விவரமும் பிரதானம் கூறுதலான், நதியானது தனது நாமரூபத்தையொழித்தாலும் சமுத்திரஉவர்த்தன்மையை யடையுமாறுபோல, ஆன்மாவானது தனது நாமரூபத்தையொழித்தாலும் வேறுபடாது நின்று, வேறுர் ஆனந்தசத்தை அடைகின்றதென முண்டகோபநிஷத் சுருதிப்பொருள் வலியுறுத்தப்படுகின்றது.

போது இவன் மகிழ்வுடையனும், (தனக்கு) வேறாகிய சிவபிரானை மகிழ்வினோடு காண்கின்றானே, (அப்போது) அவர் *புகழை (சர்வஜ்ஞதாதி குணங்களைச்) சோகம் நீங்க அடைவானுகின்றனன்" என்று கூறுதலின். ஆகலின் சிவபெருமான் தாமாகவே ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு ஆதாரராகின்றனர். (ச)

வ்ருகூணாஸ (சு. சூ. நி)

(எ0) பிரகரணத்தினால்.

கூயு வாரா யயா கதஷ்ரு யிஹ்ருதெ (முண். க. க. நி)

"அந்த அக்ஷரம் எந்தப் †பரைஞானத்தினால் அறியப்படுகின்றதோ" என்னும் இந்தச் சுருதிப் பிரகரணம் பரவஸ்துவை அன்றே கூறிற்று. அதனாலும் (ஈண்டு) சிவபெருமான் (என்றே கோடற்பாற்று). (நி)

வ்ருத்ஷ்ய நாஸ்ரயாத் (க. சூ. சு)

(எக) இருத்தலானும் உண்ணலானும்.

ஹாவஷ்வணர்ா வயஜ்ஜா வஹ்வாயா வஸ்ா நப வ்ருக்ஷ0 வரிஷ்வஜ்ஜாதெ| தயொ ரந்ய: விவ்ஷ்வஸ்ாத்ு நஸ்ன நந்ரந்ய zஜிஹாகஶீதி|

(முண். சூ. க. க)

"பிரியா நட்புடைய அழகுடைப் பட்சிகள் இரண்டு ஒரே மரத்தில் இசைந்துள்ளன; அவற்றுள் ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்னும் சுருதியானது ஆன்மா கன்மபலத்தைத் துய்ப்பதாகக் கூறி, (மற்றவர்) துய்க்காது பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார் என்று கூறலானும், ஆன்மாவுக்கு வேறுபட்ட சிவபெருமானே ஆகாயம் பூமிக்கு ஆதாரர் என நிர்ணயிக்கப்பட்டது. (சு)

(உ) பூமாதிகரணம்.

---

முத்தான்மாக்களால் அடையற்பாலராக ஈண்டுப் பிரதிபாதிக்கப்பட்ட சிவபெருமானே அடைதலான் எய்தும் பிரயோசனமாகிய நிரதிசயானந்தத்தைச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஹ்ருத வாக்ய வாதாத்ம்ய்ா வதெமாஸ (க. சூ. எ)

---

*இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.
(திருக்குறள். நி)

†பரஞானத்தால் பிரதிதைத் தரிசிப்போர் பரமே பார்த்திருப்பர்.
(வெளுப்பிரதியார். க. உ)

(எஉ) (முடிவிலா இன்பமாகிய) * பூமா (சிவபெருமான்); சம்பிரசாதத்துக்கு முன்னர்க் கூறப்படலான்.

ஹூ ஸ்ரெவ வூஷ்ழ (சாந். எ. உகூ. க)

சாந்தோக்கியத்தில் "பூமாவே இன்பம்" என்று கூறப்பட்டபின்னர்

யத்ர நான்யத்பஶ்யதி நான்யச்ருணோதி நான்யத்விஜானாதி ஸ ஹூமா (சாந். எ. உசு. க)

†"அங்கு மற்றொன்றும் காண்கிலனாய், மற்றொன்றும் கேட்கிலனாய், மற்றொன்றும் அறிகிலனாயாகின்றானே, அது பூமா எனப்படும்" என்னும் பூமா வைப்பற்றிய சுருதியே விஷயம்.

பூமா என்னும் மொழியினைக் கூறப்பட்டவர் சிவபெருமானா? மற்றொன்றா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) பூமா என்றது சிவபெருமானுக்கு அன்னியமாகிய பிராணனே. (இச் சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட) விஷயத்துக்கு முற்பட்டுக் கூறப்பட்ட நாமமுதலியவற்றைக் குறித்து,

ஸவை ஹரவை நாஸ்ந ஹூயஸ் (சாந். எ. க. நு)

"நாமத்தினுஞ் சிறந்ததாகப் பிறிதொன்றுளதோ?" என்று நாரதர் கேட்ப, சனற்குமாரர்

---

* அனவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
வினவொன்றுமறியாதேவெறுவியஞ்ஞ்சிடப்பேறுக்
கனவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே
(கண்டபத்து. அ)

ஆனந்தக்கூத்தனருள்பெறினுமவ்வணமே
யானந்தமாகிலின்றுடாமோதாணைக்கம்.
(திருத்தோணைக்கம். அ)

† நஶ்ருணோதி நவ்யஜானாதி நாஸ்யுகி நவ்யாத்மா (

(மூலத்துள்ளதொன்றும்), "கேட்கின்றிலன், மணக்கின்றிலன், இரசிக்கின்றிலன், காண்கின்றிலன்" என்றது வாதுளாகமம்.

எனைநானென்பதறியேன்பகலிரவாவதுமறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனுக்கிச்
சினமால்விடையுடையான்மன்னுதிருப்பெருந்துறையுறையும்
பனவனனேச்செய்தபடிறறியேன்பராஞ்சுடரே.
(உயிருண்ணிப்பத்து, கூ)

கோற்றேனெங்கள்கோகுரைகடல்வாயமுதெங்கோ
வாற்றேனெங்குனாணேயருமருந்தேயென்தாதே
சேற்றாவயல்புடைசூழ்தருதிருப்பெருந்துறையுறையு
நீற்றாதருதிருமேனியின்மலனேயுனையானே.
(உயிருண்ணிப்பத்து, அ)

வாதுவ ஹுதே தூயஸே (சாந். ஏ. ஏ. க)

"நாமத்தினுஞ் சொல்லது வாக்கு" என்றற்றொடக்கத்தன்னோ வாக்கு முத லியவைகளே நிச்சேதஞ் செய்ய, (பின்)பிராணனுக்குமேலே சுருதியானது கடாவிடைகளின்றிப் பூமாவையுற்றுக் கூறப்போந்தது, ஈண்டுச் சிவதம் பந்தமாகிய விஷயம் யாதும் இன்று; ஆகலின், பூமாவே பிராணன் எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். ஈண்டுச் சிவபெருமானே பூமாசப்தத்தினுல் குறிக்கப்பட்டவர்; சம்பிரசாதத்துக்கு முன் வருதலான். சம்பிரசாதம் எஜ் ஞ ஆன்மா;

ஈய வஷவஸ வூஸாஃஃ (சாந். அ. ஈ. சி)

"இவன் சம்பிரசாதன்" என்னுஞ் சுருதியுண்மையான். ஈண்டு அவன் பிராணசப்தத்தினுலும் கூறப்படுகின்றன்.

வஷ தூவா கூதிவஷ்தி யஃ ஸ்தெ நாதிவஷ்தி (சாந். எ. கசு. க)

"பரஸ்துவைச் சத்தியம் என்று சொல்பவன் உண்மையாய் மேலாய தொன்றைக் கூறுபவனே" என்றற்றொடக்கத்த சுருதியினல், அவனுக்கு முன்னர்ப் பூமாவானது ஆன்மாவின் வேறென்று கூறப்படுகின்றது. ஈண்டு முன்னர்

ஸ வா வஷ வஸவ வாயுநவ ஊநா வஸவ விஜாநந்தி வாஃ ஹவதி (சாந். எ. கடு. சு)

"இங்ஙனம் பார்ப்பவனும், இங்ஙனம் அறிகின்றவனும், இங்ஙனம் உணர் கின்றவனுமாகிய இவன் மேலாயதொன்றைக் கூறுகின்றன்" என்னுஞ் சுருதியானது பிராணனைச் சொல்பவன் மேலானதைச் சொல்பவன் என்று கூறி, அதன்பின்னர்

வஷ தூவா (சாந். எ. கசு. க)

என்பதிற் போந்த (ஆயின் எனப்படும்) து (தூ) என்னும் எதிர்மறை மொழிகொண்டு மேலே உரைத்த பிராணதிவாதியினும் சத்தியாதிவாதிக்கு மேன்மை காட்டப்பட்டமையின், பூருவ அதிவாதியின் விஷயமாகிய சத்தி யத்தினுற் கூறப்படுகின்றவருக்கு ஆதிக்கியம்முற்றுப்பெறுகின்றது. அவரே முன்னர் முடிவிலாவின்பகுணவிசிட்டமுடையராக (பூமாவாக) வர்ணிக் கப்படுகின்றனர். "ஆகலின், பின்னர்ப் (பரம) ஆன்மாவின் ஆதேசம்" என் றற்றொடக்கத்தனவாகக் கூறும் சுருதியிற் போதரும் (பரம)ஆன்மசப்தத்தி னுலே அவர் வர்ணிக்கப்படுகின்றனர். அதுபற்றிப் பிராணசப்தத்தினுற் குறிக்கப்பட்ட ஆன்மாவினுஞ் சிறந்த (பரம) ஆன்மாவாகிய பூமாவாயுள்ள வர் சிவபெருமானே. (எ)

ஸ்ரேஷ்வேதரஸ்ரு (க. உ. அ)

(எங) குணங்கள் பொருத்தமுறலானும்.

ஊர்வம் கவ்யூதீ வ்ரகிஷ்டித உதி ஷ்வேஹிதி।

(சாந். எ. உசு. க)

ஸ்ரேஷ்வேதரஸ்ரு வஷ-ஃபி (சாந். எ. உறு. உ)

ஆத்மஸ் வாண ஸாத்ம ஸுமா (சாந். எ. உசு. க)

"பகவானே, அவர் எங்கே நிலையுற்றிருக்கின்றார் எனின், தம்மகிமையிலே; இஃதெல்லாம் (பரம)ஆன்மா; (பரம)ஆன்மாவினின்று பிராணன், (பரம) ஆன்மாவினின்று ஆசை" என்றற்றொடக்கத்த சுருதிகளான், அவர் மகிமை யிலே (புகழிலே) நிலையுறுகின்றார், அவர் அனைத்துக்கும் ஆன்மா, அவர் அனைத்துக்கும் காரணர் என்றற்றொடக்கத்தனவாகக் குணங்கள் உபதே சிக்கப்படுகின்றன. சிவபெருமானுக்கே அக்குணங்கள் பொருத்தமுறுவன் வன்றி, பிராணசப்தத்தினும் கூறப்படும் ஆன்மாவுக்கன்று. ஆகலின், சிவ பெருமானே பூமாவன்றிப் பிறரன்றென்பது சித்தித்தது.

(ஆக்ஷேபம்) மேல் அதிகரணத்தில்,

நிரஞ்ஜநஸ் வரஷ வராஸ்ய ஸ்ரவைதி (முண். கூ. க. கூ)

"அவன் நிரஞ்சனனாய்ப் பரமசாமியத்தை அடைகின்றான்" என முக்தான் மாக்கள் பிரமசாதிருசியம் அடைபவராகக் கூறப்பட்டது. ஆகலின், பிர மத்தினது சாமியத்தை அடைந்த முக்தான்மாக்கள் சிவபெருமானுக்கே வேறுபுளர் என்பது சித்தித்தது.

யத்ர நாந்யத்பஸ்யதி நாந்யச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா (சாந். எ. உசு. க)

எங்கே மற்றென்றும் காண்கிலனே, மற்றென்றும் கேட்கிலனே, மற் றென்றும் அறிகிலனே, அது பூமா" என்னுஞ் சுருதியில் உள்ள பூமா வன்னும் மொழியினாற் குறிக்கப்பட்ட பிரமம் காணப்படுமாயின், அப்பி பிரமத்துக்கு மாறுபட பிரபஞ்சம் விஷயமாகாதே; இதற்குப் பொருத்தம் என்னே எனின்,

(உத்தரம்) பூமா பிரத்தியகூமாகுங்கால் "மற்றென்றும் காண்கிலன்" என்றற்றொடக்கத்தனவற்றின் அபிப்பிராயம் இது:—நிரதிசய சுபாவமுள்ள வரும் சாகூாத்தரிக்கப்பட்டவருமாகிய எவரிலே அமிழ்ந்திய புருஷன் மற் றோர் இன்பத்தை விரும்பி ரூபாதி விஷயங்களைக் காண்டலாதிகளிற் பிர வர்த்திப்பனென்றே, அவர் பூமா; அவர் பிரமம்; பல்வகை விஷயங்க மெல்லாம் பிரமானந்தத்தின் தன்னிய பரமாணுக்களே.

வாகவெவ்வாநo டவ்யாரூயாதி ஹேதுகாதி சோதராஸ்வஜீவஜி
(பிரு. சூ. கூ. கூ)

"மற்றெல்லாச் செந்தக்களும் இந்தப் பிரமானந்தத்தின் சிறுபாகத்தில் உயிர்க்கின்றன" என்று சுருதி கூறுகின்றது. ஆகலின், பிரமத்தையுற்றுத் துவிதநிஷேதம் இல்லை. பிரபஞ்சம் சத்தியமாயிருப்பின், முக்தான்மாக்கள் புருஷார்த்தமல்லாத அந்தப் பிரபஞ்சத்தோற்றத்தை எங்ஙனந் தவிர்க்க வல்லார்? என்று விசாரிக்கற்பாலதன்று; எதனாலெனின், முக்தான்மாக்களுக்குப் பிராகிருத பிரபஞ்சம் காட்சிவிஷயமாகாது; பின் நிருவியாணந்த சொரூபமான பிரமமே பிரபஞ்சாகாரம்மாகக் காட்சிப்படுமென்க. இதுபற்றியே,

வாகத்தெதா லவதி | சூகாஸஸரீரo வுவஹு | வஸ்யாத்மா ப்ராணாராமோ | மநசூஷ்யே (தைத். க. சு. உ)

"பின்னர் அவன் அதுவாகின்றான், ஆகாயத்தைச் சரீரமாகவுடைய பிரமம்; (அவர் இயல்பு) சத்தியான்ம பிராணாராமம்; மனசில் (ஞானசத்தியில்) ஆனந்தம்" என்று சுருதி கூறுகின்றது,

சூவெதி வ்யாராஜ்ய சாவெதி மநஸ்யுதிஷ்டி |
(தைத். க. சூ. உ)

கண்டு "சுவராச்சியத்தை அடைகின்றான், மனசுக்கு மேலாயதை அடைகின்றான்" என்றற்றொடக்கத்தனவாக முக்தான்மா பிரஸ்தாபிக்கப்படுகின்றான்; "வாக்குக்குப் பதி" என்றற்றொடக்கத்த சுருதியினால், அவன் சுவசாதீனமல்லாதனவாய், அப்பிராகிருதத்தனவாய், விசுத்தமுடையனவாயுள்ள வாக்கிந்திரியமுதலியவைகளையுடையனவாகக் கூறப்படுகின்றது. பின்னர் அவ்வியல்பினவாய அவஸ்தையை அடைந்த பின்னர் அவனுக்குப் புலப்படும் பிராகிருதபிரபஞ்சக் கூட்டமானது ஆகாய சரீரமாய் (எனவே), சிதம்பரப்பிரகாச சரீரத்தையுடைய பிரமமாகவேயாகின்றதென்பது தாற்பரிய இரகசியார்த்தம். ஆகலின், முக்தான்மாக்கள் பிரமத்தின் சாமியத்தை அடைதலாவது அந்தப் பிரமத்தோடு பிரபஞ்சத்தையும் சமரசமாக (சமானந்தமாகக்) காண்டலாம் எனக் (கோடலே) முழுமையும் யுக்தம். (அ)

## (கூ) அக்ஷராதிகரணம்.

ககூரூoவ்யாஹ்ருதேஃ (க. கூ. க)

(எச) அக்ஷரம் (சிவபெருமான்), ஆகாயம் இவையாயுள்ள அனைத்தையும் தாங்குதலின்.

வாக் ஏவைது தத்க்ஷரம் மாமி-ந் ஸ்ருஷ்டாவா ஸ்ருஷ்டிஸ்தி க்ஷுல்லம்
நாண்டு ஹ்ரஸ்வத்வ-ந்தொஹித தீர்கஹ தீப்லுத ஏகாயந்தி (பிரு. நி. அ. அ)

"கார்க்கியே, பிராமணர் இதனை அக்ஷரம் என்று கூறுகின்றார்; இது ஸ்தூலமன்று, அணுவன்று, குறுக்கமன்று, நெடுமையன்று, சிவப்பன்று, நிழல் அன்று" என்றற்றொடக்கத்த பிருகதாரணிய சுருதியே இவ் விதிசரண விஷயம்.

சண்டு அக்ஷரம் என்றது பிரணவமா? ஆன்மாவா? சிவபெருமானா? என மூன்று பிரகாரமாக உண்டாகின்றது சந்தேகம்.

பிரணவம் ஆன்மா என்னும் இரண்டில் ஒன்றே அக்ஷரம். எதனலெனின், அக்ஷரசப்தத்துக்கு வர்ணசப்தம் பரியாயமாதலின், பிரணவம் என்று கூறுவது உசிதம்.

வ்ருஷ்வைஷ ரக்ஷர ஈக்ஷ்யதே |

"புருஷன் அக்ஷரம் எனப்படுகின்றான்" என்னும் வாக்கியத்தினைப் புருஷனும் (ஆன்மாவும்) அக்ஷரசப்தத்தினைக் குறிக்கப்படுகின்றன். ஆகலின், அவ்விரண்டுமே அக்ஷரசப்தத்தினைக் குறிக்கப்பட்டன எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். அக்ஷரசப்தப்பொருள் பரப்பிரமமே. எதனால் எனின், †ஆகாயபரியாயுள்ள அனைத்தையும் தாங்குதலான். (யாஞ்ஞவல்கியர்),

யத்-அஸ்ம-ந் மாமி-ந் தீவொ யஷ்வ-ராத்ர வ்யோவ்வா யத்தார்
ஆஹுர் வ்யயீவீ ஹ்ரஸ்வ யத்ர்ம்தரம ஸ்வத்ர ஸ்வஷ்ருஷ்ரெயுர்ஆகாஷ
ஸுகாம் வாவ தத்தொதஸ்ர வ்ரொதஸ்ர (பிரு. நி. அ. எ)

‡"கார்க்கியே, வானத்துக்கு மேலும் பூமிக்குக்கீழுமாக, வானம், பூமி இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்றவற்றை அட்க்கிக் குறுக்கும் மறுக்குமாய் அமைந்ததெதுவோ அது ஆகாயத்தில் (அமைந்தது)" என்று அனைத்துக்கும். ஆதாரமாகக் கூறிய ஆகாயம் (பின்) எதிலே குறுக்கும் மறுக்குமாய் உள்ளதென்று கார்க்கி (அவரை) வினவ, (யாஞ்ஞவல்கியர்)

---

*மண்ணல்லே விண்ணல்லே வலேயமல்லே மலேயல்லே கடலல்லே வாயுவல்லே
பெண்ணல்லே யெழுத்தல்லே பெரியமல்லே யிரவல்லே பகல்லே யாவுமல்லே
பெண்ணல்லே யாணல்லே பேடுமல்லே பிறிதல்லே யாவும்பெரியாய் நீயே
புண்ணல்லே கல்லநீர்க்குத் தீயையல்லே புணர்வரிய வொற்றியூருடையகோவே.
(திருவொற்றியூர். காவு. க)

வித்தூலமன்று அணுவன்று என்றற்றொடக்கத்த விஷயம் : உபதிரமணிகை (எண்-ஆம் இலக்கர் தொடித்து ஏகை-ஆம்) இலக்கம் வரையும் விளக்கப்பட்டுள்ளது.

†திருச்சிற்றம்பலம்.

‡உபதிரமணிகை உரை-ஆம் இலக்கம் பார்க்க.

வாகெலெ கிஷ்ணா மாமி-ர் வ்ரவுணா ஷலிவ்ஷி.
(பிரு. இ. அ. ஈ)

"கார்க்கியே, இதனையே பிராமணர்கள் அக்ஷரம் என்று கூறுகின்றனர்" என்று தொடங்கி,

வாகிஷ்நுவலுக்ஷரெ மாமி-ர் கூகாஸ ஓகஸ்ய வெ்ராகஸ்ய
(பிரு. இ. அ. கக)

"இந்த அக்ஷரத்தினன்றே, கார்க்கியே! ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் உள்ளது" என்பது இறுதியாகக் கூறிய வசனத்தினால், ஆகாயமிறுதியாயுள்ள பிரபஞ்சத்தைத் தாங்குவது நிர்ணயிக்கப்பட்ட அக்ஷரம் எனப் பெறப்படுகின்றது. இது எங்ஙனம் சிவபெருமானே ஒழிந்து மற்றொன்றுக்குச் செல்லும்? ஆகலின், சிவபெருமானே அக்ஷராசப்தத்தினைக் கூறப்பட்டவர். (கூ)

வாஅ வ்ருஸாஸநாஸு (க. கூ. கo)

## (எஅ) அதுவும் *ஆஞ்ஞையினால்.

வாகவெவ்வாக்ஷரவ்ய வ்ருஸாஸவெந மாமி-ர் வ்யெ்யு-ர் ஷுஷ்வெள வியெ்கெள கிஷ்கி (பிரு. இ. அ. கூ)

"கார்க்கியே, இந்த அக்ஷரத்தினுடைய ஆஞ்ஞையினாலே சூரியனும் சந்திரனும் தாங்கப்படுகின்றன" என்றற்றொடக்கத்த சுருதியினால், அந்தத் தாங்குதல் (திருதி) உற்கிருஷ்ட ஆஞ்ஞையின்பாலதாக அறியப்படுகின்றது. அந்த உலகத்தை ஆஞ்ஞை செய்தலும் ஆன்மாவுக்கு எய்தமாட்டாது;

வாக வாவ ரூவெ்ரா நஷ்டீயாய கவ்ஷ்ஷ (சுவே. கூ. உ)

"ஒருவரே உருத்திரர், அவர்கள் இரண்டாவதற்காக இருந்திலர்" என உலகத்தின் மேலதாம் ஆஞ்ஞை சிவபெருமானுக்காய், இரண்டாவதாக ஒருவர்க்கு (அது) இன்றெனக் கேட்கப்படலான். ஆகலின், சிவபெருமானே அக்ஷரமொழியினைக் குறிக்கப்பட்டவர். (கo)

கூரூவாவ்ருவ்ரவ்ரெ்தஸ்ய (க. கூ. கக)

## (எக) அன்னியபாவம் நீங்குதலானும்.

அன்னியபாவம் என்பது மற்றொன்றுக்கு உளதாதல்.

தஸ்ய வாகிஷ்கூரவ மாமி-ர் அவ்ரஷ்டவ்யவ்ய ஸ்ரோ்தவ்ய மெந்ர தவ்யஸ்ய ஜ்ஞாநினோ விஜ்ஞாதவ்ய (பிரு. இ. அ. கக)

"கார்க்கியே, இந்த அக்ஷரம் *காணப்படாததாய்க் காண்கின்றது, கேட்கப் படாததாய்க் கேட்கின்றது, கருதப்படாததாய்க் கருதுகின்றது, அறியப் படாததாய் அறிகின்றது" என்னுஞ் சுருதிவாக்கிய சேஷமானது அக்ஷரம் சிவபெருமானே ஒழிந்து மற்றொன்றுக்கு உளதாதலைத் தவிர்க்கின்றது; பிரணவத்துக்கேனும், ஆன்மாவுக்கேனும் காணப்படாமையாம் தன்மை யோடு காண்டலாதியாம் இயற்கைகளும் (ஒரேகாலத்தில்) எய்தாமையான். ஆகலின், சிவபெருமானே அக்ஷரம் என்று நிர்ணயிக்கப்பட்டது. (கக)

## (சு) ஈகூந்திகர்மாதிகரணம்.

பிரத்தியகூஸாதி பிரமாணதீதராயினும் சிவபெருமான் பரமகாருண் ணிய வசத்தினால் உபாசகர்களுக்குப் பிரத்தியகூஷமாதலை உணர்த்துமா றெழுந்தது இவ்வதிகரணம்.

ooமகூஷதி கூஜ்வுவஜ்ஷாஜ்ஸ் (க. கூ. கஉ)

(எஎ) அவர் காட்சிப்பொருளாகின்றார், (அவர் குணங் கள்) கூறப்படலான்,

யo வாநரெத ஜ்ரீரோதெரணெவொ தீதெயுதெதெநெ வாகூஷ ரெணவரo வாரஷ ஃஹிஜ்யாயீத வ தெஜஹி வஷயெஜ் வo வஹெராயரா வாதொடிரவ்ஷ்வா விதிஃஷ்ஜ்யுத வஜவo ஹவெ வஷ வாவ்ஜ்நாவிதிஜ்ஷ்ஜ்த வ்ஷவராஃஹி ராஷ்நீயதெத ஜ்வஜுஜொகo வ வஜ தவரா ஜீவவநாவ்தராஜ்ஸ்ரo வாரிஸயo வாரஷீகூஷதெத|

(பிர. நி. கு)

"எவன் மூன்று மாத்திரையையுடைய இந்த ஓம் என்னும் அக்ஷரவாயி லாகவே பரமபுருஷரைத் தியானிக்கிறானே, அவன் ஒளியையும் சூரியனை யும் அடைந்தவனாகின்றான்; சர்ப்பம் தன் தோலிலிருந்து விடுபட்டாற் போல, அவன் பாவத்தினின்று விடுபடுகின்றான்; அவன் சாம (கானங்களி னாலே) பிரமலோகத்துக்கு வழிகாட்டப்படுகின்றான்; இந்தச் சீவகனத்தி லின்று பரத்துக்குப் பரமாயினராய் (தேகமாம்) புரியிற் கிடக்கும் புருஷரைக் காண்கின்றான்" என்னும் பிரதிஷோபநிடத சுருதியே அதிகரண விஷயம்.

ஈண்டுக் காட்சிப் பொருள் விஷயமாய்க் கேட்கப்பட்டவர் சிவபெரு மானே? பிறரொருவரா? என்பது சந்தேகம்.

---

*ததவ்ஷஹமவா தீஸ்ரீ வாரோதா ஸிவரீ வ்யஜ்|
நாநுதொவ்ஷி ஃஹதெவா ஜீஷ்ஷா ஸ்ரொதா வரா தரே||

ஆகலின், அத்தப்பிரானுடைய ஈசர் புரமான்மாவாகிய பெரும்மானே; பார்ப்பவரும், கேட்பவரும், பாராற்பாரும் பெருமானொழிந்த பிறர்யாருமில்லை" என்றது சங்கரசன்னிதை.

(பூருவபக்ஷம்) அவர் சிவபெருமானல்லர்;

ஸ ஸாகிரஸ்ரீயதெ வ்ரவ்ஜொகழ் (பிர. நி. நி)

"அவன் சாம(கான)ங்களினுற் பிரமலோகத்துக்கு வழிகாட்டப்படுகின்றான்" என அவர் உலகத்தை அடைதல் கேட்கப்படலானும், பர சப்தம் சிவான்மாக்களுள்ளே மேலானவர்க்குச் சேறலானுமாம்; இன்றேல், நாராயணர் (ஆகலாம்), அவர் புருஷர் என்னும் மொழியினுற் கூறப்படலானும், அவருக்கே பிரணவசப்தம் செல்வது பிரசித்தமாதலினுலும்,

தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஷ்யந்தி ஸூரயஃ

(இரு. வே. க. உஉ. உ)

"அந்த விஷ்ணுவின் பரமபதத்தைச் சூரிகள் எப்போதும் பார்க்கின்றனர்" என்னும் சுருதியில், அந்தப் பரமபதமே வித்துவான்களால் அந்தவவிஷயமாகக் கேட்கப்படலானும்,

த்ரிஷ்ரைதம் யஜுஷி-ரூதஸிக்தம் ஸமாகிதிய-ந்தத்ரவயொ வெதயதெ (பிர. நி. எ)

"இருக்குக்களினுலே இந்த உலகத்தையும், யசுரினுலே ஆகாயத்தையும், சாமங்களினுலே கவிகள் அறியும் அதனையும் (அடைகின்றான்)" என்னும் (ஐந்தாவது பிரசிநோபநிடத இறுதியில்), அது (பரமபதம்) குறிக்கப்படலானுமாமாதலின் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈண்டு காட்சிப்பொருளாயுள்ளார் சிவபெருமான்; (ஐந்தாவது பிரசிநோபநிஷதவிறுதியில்)

தஸொகாரெணைவாயதெ நாநெதி விஷ்ணுர்தூஷாதஜரஸ் ஸ்ரேஷ்ட ஸ்ரயொ வாரஸ (பிர. நி. எ)

"அவன் ஓங்காரவாயிலாக இதனை (பிரமலோகத்தை) அடைகின்றான், வித்தியான் சாந்தரும், ஜரை இல்லாதவரும், அழியாதவரும், பயமில்லாதவரும், பரமமாகிய அவரை (சிவபெருமானை) அடைகின்றான்" என அவரது அசாதாரணமாகிய சாந்தத்துவ முதலிய குணங்கள் கூறப்படலான். சிவபெருமானுடைய (சிருஷ்ட) காரியராகிய இரண்ணியகருப்பர்க்குச் சாந்தத்துவாதி குணங்கள் இல்லையன்றே. பிரமலோகம் என்றது அடையற்பாலதாயுள்ள பரப்பிரம சிவனுருடைய உலகமாம் என்க. சீவகனம் என்றது சிவசமஷ்டி ரூபராயுள்ள இரணியகருப்பர் (மேற்று); இவருக்கு மேலாகிய சிவபெருமானே தியேயப்பொருளாகக் கேட்கப்படுகின்றனர். ஆகலின், இரண்ணியகர்ப்பரைச் சொல்வது யுக்தமன்று.

நாரயணரைப் பரம் என்றது ஆரியற்பாற்று

ருத்ர ஏவ வரஇ (பிர. இ. எ).

"அமிர்தரும், பயமிலாதவரும், பரமுமாயவர்" என்னுஞ் சுருதியிற் (மரண டவாறு நித்தியமுக்தத்துவமும், அபயகாரணமும், விசுவாதிகத்தினைப் பரத் துவமும் எங்ஙனம் அவருக்கு (நாராயணர்க்குச்) செல்லும்?

விஷ்ணுரேவொஹி (சுவே. க. சு)

இவர் "விசுவரூபரன்றே" (என்னுஞ் சுருதியுண்மையான்), *சீவகனமாகிய இரண்ணியகர்ப்பரினும் (பிரமாவினும்) பரராய் உற்கிருஷ்டராயுள்ள நாரா யணரினும் பரம உற்கிருஷ்டமாய்ப் புரியின்கண்ணே (சரீரத்தின்கண்ணே) அந்தரியாமியாய்ச் சயனித்தலிற் புருஷரும் பரப்பிரமமுமாயுள்ளாரை உபாச கர் சாக்ஷாத்காரஞ் செய்வதாக வர்ணிக்கப்பட்டமை எங்ஙனம் நராயணர்க் குப் பொருந்தும்?

நாராயணவரம ஏவஹி (தைத். ஆரணி. க0. கசு. உசு)
தீதம ஸத்யꣳ வரம ஏவஹ வாவ்ருஷꣳ க்ருஷ்ணபிங்கலஹ।
ஊர்த்வரேதவꣳ விரூபாக்ஷꣳ (தைத். ஆரணி. க0. உசு. சக)

"நாராயணர்க்கு மேலாய பிரமம்" (எனவும்); இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவரேதரும், விரூ பாக்ஷரும் எனச் சுருதியிற் கூறப்படுகின்றதன்றே. ஆகலின், (சிவபெரு மான்) புரியாய தகரபுண்டரீகத்திருத்தலாற் புருஷர் எனப்பட்டனர்;

தஸ்ய வரகஸ்திமே நஸ்ய யஃ வாவஸ்ஸஹோவரஹ।
(தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"(அகாரமாகிய) பகுதியில் ஒடுங்கப்பெறும் (அந்தப் பிரணவத்துக்கு) சவ ரத்துக்கு எவர் மேலானவரோ, அவர் சிவபெருமான்" என்றற்றொடக்கத்த சுருதியினல் அவர் பிரணவம் எனவும்,

நாராயணவரம ஏவஹி (தைத். ஆரணி. க0. கசு. உசு)

"நாராயணரினும் பரமாகிய பிரமம்" என்னுஞ் சுருதியினல் விசுவரூபரா கிய நாராயணரினும் அதிகர் (மேலோர்) எனவும், வாக்கினும் மனத்தினும் நின்று பேதமுறுமையின் முறையே இருதம் சத்தியம் எனவும், முக்கண்க ளுண்மையான் விரூபாக்ஷர் எனவும், †பிரணவத்தின் வர்ணவியத்தியயத்தி

---

*வெள்ளேயேறேறும்விகிர்தாபோற்றிமேலோர்க்குமேலோர்க்குமேலாய்போற்றி. (திருவாரூர், காவு, அ)

விண்மேலுமேலுமிரிர்தாய்போற்றி மேலோர்கள் மேலோர்கள் மேலாய் போற்றி. (ஸ்ரீகைலாயத்திருமுலை. காவு, எ)

†இலிங்கபுராணத்திலே விஷ்ணுமாலால் உமையம்மையார்க்கு அருளிச்செய் யப்பட்டவிடத்தில்,

(சித்தாந்தம்) முத்தர்களால் அடையப்படும் பரஞ்சோதி ஈண்டுச் சிவபெருமான் எனப் பெயர்கொண்ட பரப்பிரமம்; இவரை அடைந்தவர்க்குப் புநராவர்த்தியில்லையாகக் காணப்படலான், பரப்பிரமத்துக்கு வேறாக ஒருவரை அடைபவர்க்கு ஆவிருத்தியில்லை என்பது எங்ஙனம் உசிதமாகும்? புருஷோத்தமசப்தம் நாராயணர்க்கு ரூடியினற் செல்வதேனும், அதனிற் புருஷர்களுக்கெல்லாம் (ஆன்மாக்களுக்கெல்லாம்) அதிகமாதலின் (மேல்தர்த்தலின்) பிரமத்துக்கே செல்லும்; பிரமமேத சங்கற்பத்தில்

வெஷ்ட்ட-ஸ் வ்ர்ர-ஷொ ஷ்ட்டி?ழ்।

"புருஷோத்தமரை அடைய" என்பதிற் புருஷோத்தமசப்தம் அடையற்பாலதாகிய பரப்பிரமத்துக்குப் பரியாயமாகப் பிரயோகிக்கப்படுதலின். ஆகலின், பரப்பிரமமே பரஞ்சோதி. (சக)

## (கக) அர்த்தாந்தரத்துவாதிவியபதேசாதிகரணம்.

ஞகாரொ zஸ்-ர்ஹஸ்ஸுஷ்டி?வ்வஷொஸ (க. கூ. சஉ)

---

*பண்டாலிளமுலானைப்பரத்தேசேதியை
விண்டார்கடம்புரமூன்றுமடுவேவேவச்
சண்டானைக்கடிகமழ்சோழம்பன்கோயிலாக்
கொண்டானைக்கூடுமிடைமருதனேரே.
(திருக்கோழம்பம், ஞான, உ)

(கoஎ) *ஆகாயம் (சிவபெருமான்), (அவர்) பிறவஸ்து முதலியவற்றுக்கு வேறாகக் கூறப்படலான்.

ஆகாஸோஹ வை நாம நாமரூபயோர்நிர்வஹிதா தை யத்தத்பிரஹ்ம தத்ஸத்யம் ஸ ஆத்மா (சாந். அ. கச. க)

"ஆகாயம் எனப்பட்டவர் நாமரூபம் படைப்பவர், இவையனைத்தும் அடங்கியிருக்கப்பெற்றது பிரமம், அது அமிர்தம் (சிவம்), அது (பரம) ஆன்மா" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே சண்டு ஆராயக்கிடந்த விஷயம்.

நாமரூபத்தைப் படைப்பதாகக் கேட்கப்பட்ட ஆகாசம் சிவபெருமானோ (பூத) ஆகாயமா? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சர்வபூதங்களுக்கும் வான் இடங்கொடுத்தலின் நாமரூபத்தைப் படைத்தல் வானத்துக்கு நேர்தலின், பூதாகாயமே சண்டு ஆகாசம். இன்றேல் ஆன்மா;

அநேந ஜீவேநாத்மநா நாமரூபே வ்யாகரவாணி।
(சாந். சு. கூ. உ)

"கான் இந்தச் சீவான்மாவோடு கூடப் பிரவேசித்து நாமரூபத்தை வெளிப்படச் செய்வேன்" என்னுஞ் சுருதியினால் அச்சீவான்மாவுக்கு நாமரூபம் வெளிப்படற்குரிய சம்பந்தம் காணப்படலான் என்று இங்ஙனம் கூறின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே சண்டு ஆகாயசப்தத்தினால் நாமரூபத்துக்குக் கர்த்தாவாகக் கேட்கப்படுகின்றனர்; அமிர்தத்துவ முதலிய* அவர் குணங்கள் கூறப்படலான். ஆகாசத்துக்கேனும் ஆன்மாவுக்கேனும் அமிர்தத்துவாதி குணம் எய்தாது. ஆகலின், சிவபெருமானே ஆகாயசப்தப்பொருள். (சஉ)

(ஆக்ஷேபம்) ஈகூவேவி (சாந். சு. அ. எ)

"அது நீயாகின்றனை" என்னும் வாக்கியத்தில் ஐக்கியம் கூறப்படுதலின், சிவபெருமான் பிரத்தியக்காண்மானினின்று வேறல்லர் என ஆக்ஷேபிப்பின்

(சமாதானம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வைஷ்வாநர: ஸாதாரணஶப்தவிஶேஷாத் (க. கூ. சகூ)

(கoஅ) சுழுப்தியினும் உற்கிராந்தியினும் (அவர்) வேறெனக் (கூறப்படலான்).

வ்யாக்ருதேஷ்வாத்மாऽவசநாச்சேதரே நிரூபணவத் (பிரு. சு. கூ. உக)

---

*திருச்சிற்றம்பலம்.

வ்ராஜ்ஞாத்ருஸ்ராவ்ய உத்ஜ்ஞ்ஞாதி (பிரு. சு. ரு. கூ)

"பிராஞ்ஞுனிய (பரம) ஆன்மாவினுலே தழுவப்பட்டு ஆன்மா அகத்தும் புறத்துமுள்ள யாதும் அறியாது" எனவும், "பிராஞ்ஞுனிய (பரம) ஆன்மாவினுல் இவரப்பெற்று ஆன்மா (தேகத்தை) விட்டுப் போகின்றது" எனவும் முறையே சுழுத்தியினும் உற்கிராந்தியினும் ஆன்மா பாசியாந்தர விய ஞானசூன்னியமாய் இருக்கும் காலத்திலேயே சிவபெருமான் அறிவு மரீதிரையாய் ஆன்மாவுக்கு வேருயிருக்கின்றனர் எனக் கூறப்பட்டான், சிவபெருமான் அவ்வான்மாவுக்கு வேருயுள்ளார். ஈண்டு அவர் ஆகாயசப்த வாச்சியர். (சகூ)

வதயாதி ஸுஷுப்தௌ (க. கூ. சச)

(கoகூ) பதிமுதலிய பதங்களுண்மையின்.

வஷ-ட்வ வஸீ வஷ-ட்வெஷ்டாந வஷ-ட்வஷ்டாயிவதீம் வ நவாய-ூநா கூ-ட்ணா வியாஹோ வனவா வாய-ூநா கநீயாநெஷ வெவ-ட்ஷ்டா வஷ வியாயிவதி ரெஷ வியாகவாமஃ

(பிரு. சு. ச. உஉ)

"அவர் எவற்றையும் வசீகரிப்பவர், அனைத்துக்கும் ஈசானர், அனைத்துக்கும் அதிபதி, அவர் நற்கன்மங்களால் உயர்வதும் இல்லை, தீக்கன்மங்களாலே தாழ்வதுமில்லை, இவர் சர்வேசுவரர், இவர் பூதாதிபர், இவர் பூதபாலர்" என்னும் சுருதியில் ஆன்மாவைத் தழுவியிருக்கும் பிராஞ்ஞருக்குக் கூறப்படும் பதிமுதலிய சப்தங்களினுல் இந்தச் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேருயுளர் என்பது பெறப்படுகின்றது.

வரூதாரo வதயெ வ்ருக்ஷாணாo வதயெ (யசுர். ச. நி. உ)

"பசுக்களுக்குப் பதி, விருக்ஷங்களுக்குப் பதி" என்றற்றொடக்கத்தவற்றும் சிவபெருமான் உலகங்களுக்கு அதிபதியாயுள்ளார் என்பது யாண்டும் பிரசித்தம். ஆன்மா உலகத்துக்குப் பதியாக யாண்டும் கேட்கப்படவில்லை. ஆகலின், ஆன்மாவுக்கு அன்னியராயுள்ள இந்தச் சிவபெருமானே ஆகாய சப்த வாச்சியர். (சச)

## முதலாம் அத்தியாயத்து
## நான்காம் பாதம்.
### (க) ஆநுமானிகாதிகரணம்.

முந்திய பாதத்திலே ஸ்பஷ்டாபஷ்டபிரமலிங்க வாகியங்கள் ஆராயப்பட்டன. இந்நான்காம் பாதத்திற் சில அஸ்பஷ்டலிங்க வாக்கியங்கள் விசாரிக்கப்படுவனவாயின.

ஆநுமானிகமப்யேகேஷாமிதி சேந்ந ஶரீரரூபகவிந்யஸ்தகீ ஹ்யேவமதீயதே ச (க. ச. க)

(ககo) சிலர்க்கு அனுமானமே கருத்தாகக் கொள்ளப்பட்டது எனக் கொளின், அன்று; சரீராகிருதியில் அடங்கியதற்கு அனுமானமுண்மையின். அங்ஙனம் சுருதியும் கூறுகின்றது.

இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்ய: பரம் மந:।
மநஸஸ்து பரா புத்திர்புத்தேராத்மா மஹாந் பர:॥
மஹதோ பரமவ்யக்தமவ்யக்தாத்புருஷ: பர:।
புருஷாந்ந பரம் கிஞ்சித்ஸா காஷ்டா, ஸா பரா கதி:॥

(கட. கo, ஏஅ)

"இந்திரியங்களுக்கு மேல் (விஷயப்) பொருள்கள்; பொருள்களுக்கு மேல் மனசு; மனசுக்கு மேல் புத்தி; புத்திக்கு மேல் ஆன்மாவாகிய மகான் (மகத்து); மகத்துக்கு மேல் அவ்வியக்தம்; அவ்வியக்தத்துக்கு மேற் புருஷன்; புருஷனுக்கு மேல் யாதும் இல்லை: அது எல்லை; அது பரமாகிய கதி" எனக் கடசாகையிற் கூறப்பட்ட சுருதியே விஷயம்.

ஈண்டு மகத்துக்கு மேலே உளதாகக் கூறப்பட்ட அவ்வியக்தம் கபில முனிவர் கூறும் பிரதானமா? இன்றேற் சரீரமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது பிரதானம்; எங்ஙனம்? மகத்து, அவ்வியக்தம், புருஷன் என்பன சாங்கியதந்திரத்திலேதான் பிரசித்தமாகலின். இவைகள் ஈண்டுச் சுருதியிற் குறிக்கப்படுதலின், சரீரத்தையுற்றுக் கூறச் சிறிதும் அவகாசமின்று. ஆகலின், ஈண்டு உணர்க்கப்பட்டது சாங்கியர் கூறுவதானமே, சரீரமன்று எனின்,

(சித்தாந்தம்) சரீரம் எனல் யுக்தம்; மேலில்,

ஶப்தாதய: ப்ரதாந்ந லிங்கி ஶரீரவதேதத்।
வைஶ்வாநரவிது விதி ஶப்தேப்ய இதி சேந்ந ப்ராணபருத்வாத்॥

ஜ்ரியாணி ஹயா நாஹுவி-ஷ்யாஎஷ்ஷ-ரொ வரா நீ॥

(கட. கூ. கூ, ச)

"ஆன்மாவை இரதத்துளுகவும், சரீரத்தை இரதமாகவும், புத்தியைச் சாரதியாகவும், மனசைக் கடிவாளமாகவும் அறிதி; இந்திரியங்களைக் குதிரைகளாகவும், விஷயப்பொருள்களை அவை செல்லும் மார்க்கமாகவும் கூறுப" என (இந்திரியங்களை) வசிகரிக்கும் பொருட்டுச் சரீரத்தை இரதமாகவும் ஆன்மாவை இரதத்துளுகவும் உருவகஞ் செய்யப்பட்ட உபாசனு உபாயங்களுள்ளே, (கவனிக்கப்படாது) எஞ்சியதாய் உருவகஞ் செய்யப்பட்ட சரீரமே அவ்வியக்தசப்தத்தினுற் கொள்ளக்கிடக்கின்றமையின். "இந்திரியங்களுக்கு மேலே உள்ளன விஷயார்த்தங்கள்" என்று தொடங்கி, "அது எல்லை; அது பரமாகிய கதி" என்பதிறுதியாக வசிகாரம் பண்ணும் பொருட்டன்றே ஒன்றன்மேல் ஒன்றுக மேல் என்று சொல்லிப் போந்தன.

யஹ்வாங்மநஸீ ப்ராஜ்ஞஸ்தத்யஹ்சேஜ்ஜ்ஞாந ஆத்மநி।
ஜ்ஞாநாத்மநி மஹதி நியச்சேத்தத்யஹ்சேச் சாந்த ஆத்மநி॥

(கட. கூ. கக)

"அறிஞன் வாக்கையும் மனசையும் அடக்கல் வேண்டும்; அவற்றை அறிவாம் ஆன்மாவிலே ஒடுக்கவேண்டும்; அறிவாகிய ஆன்மாவை மகத்தாகிய ஆன்மாவிலே ஒடுக்கவேண்டும்; அவன் அந்த மகத்தைச் சாந்தமாகிய ஆன்மாவில் ஒடுக்கவேண்டும்" என்றற்றொடக்கத்தவற்றுற் சருதியே பின்னரும் உணர்த்துகின்றது. ஆகலின், அவ்வியக்தம் என்றதனாண்டுச் சரீரத்தைக் குறிக்கின்றது. (க)

(ஆக்ஷேபம்) அவ்வியக்தத்தைப் பிரதானம் எனலே பிரசித்தம். இஃதென்னனம் சரீரமாம்? என்று ஆசங்கிப்ப, சூத்திரகாரர் உத்தரம் இறுப்பாராயினர்.

ஸூக்ஷ்மது தத்ரூபாவாத் (க. சூ. உ)

(ககக) சூக்குமமாயுள்ளதே சரீரம்; அதற்குத் தகுதி உண்மையின்.

சூக்குமம் என்பது அவ்வியக்தம். அவ்வியக்தமே சரீராலம்பத்தைகொண்டு காரியத்துக்குத் தகுதிபாதல்பற்றி அது அவ்வியக்தத்தினுற் குறிக்கப்படுவதெனல் புத்தம். (உ)

சூத்திரகாரர் மற்றோர் புத்தி கூறுகின்றனர்.

தத்ப்ரதாநத்வாத் (க. சூ. ஊ)

(ககஉ) அவர்க்கு ஆதனமாகலின் (ஒவ்வொன்றும்) பய னுடைத்து.

ஆன்மா சரீரமுதலியன சிவபெருமான் வயத்தனவாகி உபாசனையை முற்றுவித்தலின் பொருட்டுப் பயனுடையனவாயின. சிவபெருமான் அந்தரியாமியாய் ஆன்மாவோடிணைந்தையும் பிரேரித்து, உபாசனைக்குத் தகுந்தாகி, வசீகரிக்கற்பாலனவாகிய பொருள்கட்கெல்லாம் முடிந்த எல்லையாகி (இறுதியாய்ப்) பெறற்பாலராகலின், "அவர் பரமாகிய கதி" எனப்படுகின்றனர். ஆகலின், அவ்வியக்தம் என்பது ஈண்டுச் சரீரமே. (ஈ)

ஜ்யகூவஜநாஜு (க. சு. ச)

(ககஈ) அறியற்பாலதாகக் கூறுமையானும்.

ஈண்டுச் சாங்கியர் பிரதானமே அவ்வியக்தமாயின், அது ஓர் ஞேயப் பொருளாகக் கூறப்பட்டிருக்கும். அங்ஙனம் ஒன்றும் (கூறப்பட) வில்லை. ஆகலின், அது கபிலர் அவ்வியக்தம் அன்று. (ச)

பிரதானம் ஓர் ஞேயப்பொருளாகக் கூறப்பட்டதென்னும் ஆசங்கையைச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

வடிதீதி வெஹு வுாஜ்ஜா ஹி வுகுணாகு (க. சு. டு)

(ககச) (அப்படிப்பட்டதொன்றைச் சுருதி) கூறுகின்றதெனின், அன்று; எதனாலெனின், (அது) அறிஞனன்றே; பிரகரணத்தினுல்.

(ஆகேஷபம்)

கஸ்ஸு ஷ்லுஸ்ஸ ஸ்ரீஷ்ஷ வ்யக்தஸ்ய ஸ்ரவணாதி³ஶ்ரவணாத்³யர்த²ம்

கதா²நு நஸ்ய ஷ்ஷதஸ் வாக்யஸ்ய கஸ் ஜ்ஞாநஸ்ய வாசீ ஶப்³தே³ (கட. கூ. கடு)

"சப்தமிலதாயும், பரிசமிலதாயும், ரூபமிலதாயும், அவ்வியமாயும், இரசமிலதாயும், நித்தியமாயும், மணமிலதாயும், அநாதியனந்தமாயும், மகத்துக்கு மேலாயும், வேறுபடாததாயும் இருப்பதொன்றை அறிந்து மரணவாயினின்று விடுபடுகின்றனன்" என அடுத்துவந்த சுருதியினுற் பிரதானம் அறியற்பாலதொன்றாகக் கூறப்பட்டதெனின்,

(உத்தரம்) அதுயுக்தம் அன்று;

॥ யச்செதாத்நவீ வுாஜ்ஜே (கட. கூ. கடு)

"அறிஞன் வாக்கையும் மனசையும் அடக்கல்வேண்டும்" என அறிஞனைப் பற்றியே பிரகிருதியையிருத்தலின். ஆகலின் அவ்வியக்தம் சரீரமே.(ஓ)

பிரதானத்தின் பிரசங்கமே இல்லை என்று கூறுகின்றனர்.

தயாணாவேவெஹெஷ்வதயாலஸ் வுாஜ்ஜு (க. சு. சு)

(கஎஇ) மூன்றுக்குமே இங்ஙனம் உபந்நியாசமும் பிரதி ஷேமும்.

இப்பாகரணத்தில் உபாயம், உபாசனம், உபாசகன் என்னும் மூன்றும் அறியற்பாலன என உபந்நியாசமும் பிரதிஷேமும் போந்தன; பிரதானிக்கன்று. எங்ஙனமெனின்,

கo ஏஷ்டவ்o முஷ்ணந்யவிஷ்o முஹாஹிகo முஹுரெஷ்டo வாராணஸீ। கூஜ்யாதயொ ராயிமதிநஷ்டவo ஶுகா யிரொ ஹவிஷ்மொகௌ ஜஹாதி॥ (கட. உ. கஉ)

"அறிஞனைவன் அத்தியன்மயோகவாயிலாகக் காண்டற்கரியரும், மறைவினரும், கூடப்பிரவேசித்தவரும், குகைக்குள் மறைந்தவரும், குகைக் கணமர்ந்தவரும், பழையருமாகிய (மகா) தேவரை அறிந்து இன்ப துன்பத்தினின்று வீடுறுகின்றனன்" என்றற்றொடக்கத்தனவே இந்த அதிகரணத்திலுள்ள உபந்நியாசம்.

யெய0 ப்ரேத விசிகித்ஸா மநுஷ்ய ஏஷீதீத்யேகே நாயமஸ்தீதி சைகே। ஏதத்வித்யாமநுஶிஷ்டஸ்யாஹo வராணாமேஷ வரஸ்த்ருதீயஃ (கட. க. உ0)

"மனிதன் இறந்தபோது அவன் இருக்கின்றனன் எனச் சிலரும், அவன் இலன் என்று வேறு சிலரும் கூறுதலின், சந்தேகம் உண்டாகின்றது; இதனை நீவிர் உணர்த்த, யான் அறிய விரும்புகின்றேன்; நான் கேட்கும் வரங்களுள்ளே இது மூன்றுவது வரம்" என்றும்,

கூர்த்ர யூயம்ரூத்ரா யூயம்ரூத்ராஸ்தூதா கூதாஶ।
கூர்த்ர ஸுதாஅ ஸவ்யாஅ யதத்த்ருஷிதஉத॥

(கட. உ. கச)

"தர்மத்துக்கு வேறுபட்டதும், அதர்மத்துக்கு வேறுபட்டதும், காரண காரியமிலாததும், இறப்பெதிர்விலாததுமாயுள்ள எதை நீர் பார்க்கின்றீரோ, அதை எனக்குச் சொல்க" என்னுஞ் சுருதிகளிற் பிரதிஷேம் அடங்கிற்று. ஆகலின் பிரகரணசம்பந்தமின்மையானும் சரீரமே அவ்வியக்தம், பிரதானம் அன்று.

(சு)

இன்னும் மற்றோர் இலிங்கமும் உளதென்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸூக்ஷ்மது (க. கூ. எ)

ஸூக்ஷ்மத்வாத்தத்அவிஜ்ஞேயத்வம்।

ஸூக்ஷ்மத்வாதஸ்தத்அவிஜ்ஞேயத்வம் (கட. க. உ0)

புருஷனுக்குமேல் ஒன்பானையே மதந்து" என்னுஞ் சுருதியில் மதந்து என்றது சாங்கியர்க்குச் செல்லாதவாறு போல, அவ்வியக்தமும் பிரதானம் அன்றென நிர்ணயிக்கப்பட்டது. (எ)

## (உ) சமசவதிகரணம்

(ஆக்ஷேபம்) இந்தப் பிரகரணசம்பந்தமாகப் பிரதானத்தையுற்றுப் பேசுதற்கு அவகாசமின்றேல் ஆகுக; பிறிதோரிடத்திற் பிரதானமே காரணமாகக் கேட்கப்படுகின்றதென்பதை ஆக்ஷேபித்து இந்த அதிகரணம் ஆரம்பிக்கற்பாலதாயிற்று.

அஜாமேகாம் லோஹிதசுக்லகிருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஸ்ருஜமாநாம் ஸரூபாம்। அஜோஹ்யேகோ ஜுஷமாணோ(அ)நுசேதே ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோ(அ)ந்ய: (சுவே. ச. நி)

"செந்நிறமுடையதாய், வெண்ணிறமுடையதாய், கருநிறமுடையதாய், ஏக ரூபமாய் அநேக பிரஜைகளைப் பிறப்பிப்பதாயுள்ள பிறவாப் (பெண்) வஸ்து ஒன்றுளது; அதனை விரும்பி அதனோடு கிடக்கும் பிறவாத மற்றோர் (ஆண்) வஸ்து ஒன்றுள்ளது; இன்பம் அனைத்தையும் அனுபவித்து அதனை விடுத்துள்ள மற்றோர் பிறவாத வஸ்து ஒன்றுள்ளது" என்னும் சுவேதாசுவதரசுருதியே விஷயம்.

சண்டிச் சமஸ்தப் பிரபஞ்சகாரணமாகிப் பிறப்பிலதாதலின் அஜா என்று கூறப்படுவது சாங்கியர் பிரகிருதியா? இன்றேற் பராசத்தியா? என்பதி சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) சாங்கியர் கூறும் பிரகிருதி எனலே யுக்தம்; அஜா என்பதி பிறப்பிலாததொன்றை உணர்த்தலானும், சமஸ்தப் பிரஜைகளுக்கும் காரணமாயிருத்தலானும், செம்மை, வெண்மை, கருமை என்னும் மூத்குணங்களை அறிவிப்பதாலானும். இவ்வியற்கை மற்றொன்றற்கு கோடல் யுக்தம் அன்றாம் என ஆக்ஷேபிக்க,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. (சாங்கிய) தந்திரத்திற் கூறப்பட்ட பிரகிருதியைக் காரணமாக்கி கூறல கூடாது, பிறப்பிலாமைமாத்திரத்தால் அதனைப் பிரகிருதி எனக் கோடல் யுக்தமன்று;

"கீழ்ப்புறத்துவாரமுள்ள சமசபாத்திரம் என்ற விடத்து விசேஷ (ஹேதி) லிதாய்

உஷ்ஷ்ஷ்ரீஃ (பிரு. சு. உ. கூ)

"இது அதன் தலை" என்றவிடத்து எங்ஙனம் பேதம் கூறப்படுகின்றதோ, அங்ஙனமே ஓர் காரண மொழியால் ஓர் விசேஷ ஞானம் உதிக்கவேண்டுமாயின், அதற்கு மற்றோர் விசேஷணம் வேண்டப்படுகின்றது. ஆகலின், அது சாங்கியத்துப் பிரகிருதி அன்று. (அ)

சாங்கியர் பிரகிருதிக்கு வேறுய பிரகிருதி எவ்வியல்பிற்றென்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஜ்யோதிரூபக்ரமாத்து தயாஹ்யுபலப்தி வசனே (க. சு. கூ)

(ககஅ) அங்ஙனமே சிலர் ஜ்யோதி என்று தொடங்கிப் படிக்கின்றனர்.

ஜ்யோதி என்றது சிவபெருமான். இந்த அஜாப் பிரகிருதி சிவபெருமானைக் காரணமாகக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. அங்ஙனம் தைத்திரீயர் சிலர் சிவபெருமானைக் காரணமாகக் கொண்டதுதான் பிரகிருதி என அதன் சொரூபத்தைப் படிக்கின்றனர்.

அணோரணீயாந்மஹதோ மஹீயாந் (தைத். ஆரணி. க0. கஉ. உசு)

"அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய்" என்று சிவபெருமானிலே உபக்கிரமித்து,

வஷ்ட வ்ராணாஃ ப்ரஸவந்தி தஸ்மாத் (தைத். ஆரணி. க0. கஉ. உசு)

"பிராணன்கள் ஏழும் இவரிலே நின்று பிறக்கின்றன" என்றற்றொடக்கத்த ஏற்றுற் பிரபஞ்சம் சிவபெருமானினின்று உற்பத்தியாய அவ்வியல்பினயுடையதென்று கூறுமிடத்து, அஜா (பிறவாத) வஸ்து ஒன்றுளது என்று படிக்கின்றனர். அவரை உணர்த்துமாறுபற்றி, இந்த அஜாப் பிரகிருதி சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதென எவ்வாற்றானும் நிச்சயிக்கப்படுகின்றது. ஆகலின், சாங்கியத்திற் சித்திக்க பிரகிருதி என்னல் யுக்தம் அன்று. (க)

(ஆகூடம்) இந்தப்பிரகிருதி சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதுபற்றி, அது அவருக்குக் காரியமாய்க் கூறப்படுகின்றது. (சிவபெருமானைக் காரணமாகக் கொண்ட) அவ்வியல்பினதாகிய இதனைப் (பிரகிருதியை) அஜா என எங்ஙனம் கூறலாம்? என ஆசங்கித்து,

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கல்பனோபதேசாத்து மத்வாதிவதயுக்தம் (க. சு. க0)

(ககக) கற்பனை உபதேசிக்கப்படலானும் விரோதமின்று, மது முதலியவற்றிற் போல.

கற்பனை என்றது சிருட்டி.

ஹஜாoவி யஜாஃ க்ருதவொ வ்ருதாகி ஹுமிதo ஹவ்ய யஜு வெஷா வஷ்கி| கவ்ஷா நாயீ வ்யஜெத விஸ்வமெத்ததவிஸ்ஹாரெ நூர்ய மாயயா வஹிரூஜ்| மாயாஞ்ச ப்ரக்ருதிo வித்யான்நாயிநஞ்ச மஹெஸ்வரம்|| (சுவே. சு. கூ)

"சந்தசுகளும், யஜ்ஞங்களும், கிரதுக்களும், விரதங்களும், இறப்பும், எதிர்வும், வேதஞ் சொல்லிய யாவுமாகிய இவ்வுலகத்தையும் எதன்பானின்று பிறப்பித்தனரோ, அதில் மற்றொருவன் மாயையாற் கட்டுண்டான்; பிரகிருதியை மாயை என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக" என்னும் வாக்கியத்திற் சிருட்டி கூறப்பட்டமையின், பிரகிருதியை அஜா என்றும், சிவபெருமானால் ஆக்கப்பட்ட காரியம் என்றும் கூறலிற் போதரும் விரோதம் யாதுமில்லை. இச்சுருதியின் பொருள் வருமாறு:—

பிரளயகாலத்திலே நாமரூபமொழிந்து நிற்கும் அசித்தாகிய மாயையும் மகேசுவரரிடத்துச் சரீரமாகிச் சூக்குமரூபமாயிருக்கின்றமையின் அஜா எனப்படும்; சிருட்டிகாலத்திலே நாமரூபத்தோடிசைந்திருத்தலாற் சிவபெருமானால் ஆகிய காரியமுமாம். எங்ஙனமெனின், படைப்புக்காலத்திலே வசு முதலிய தேவர்கள் யார்க்கும் ஆதித்தியன் போக்கிய பண்டார சாலையாயிருந்தமையின், அவன் மதுவாயும் காரியமாயுமுளான்;

கஷெள வா சூதிதெ்யா ஜெவஸ்ய (சாந். கூ. க. க)

"சூரியன் தேவர்கட்கு மதுவாயினன்" என்று சுருதி கூறுகின்றமையின்.

நெநவொதெ்தா நாவஸ்தெதெகம வஸவ ஸெஜ்ய ஷ்வா தா|
(சாந். கூ. கக. க)

"அங்கிருந்து அவன் மேலே எழுந்தபோது அவன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை, அவன் ஒருவனே மத்தியில் நிற்கின்றனன்" என்றும் சுருதி கூறலின், பிரளயகாலத்திலே அவ்வாதித்தியன் மதுமொழிபோன்ற மற்ற மொழிகளாற் கூறுறுத அத்தியந்த சூக்குமரூபமாயிருத்தலிற் காரியமாகான். இங்ஙனம் மதுவித்தையிற் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிரகிருதியை அஜா என்றும், (அது) சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதென்றும் கூறலின் எய்தும் விரோதம் யாதும் இல்லை. ஆகலின், அஜா என்றது தாந்திரிக சாங்கியர் கூறும் பிரகிருதி அன்று. (கo)

## (ரு) சங்கியோபசங்கிரகாதிகரணம்.

(ஆக்ஷேபம்) பிறிதோரிடத்துச் சாங்கியர் தந்திரசித்தமாயுள்ள இருபத்தைந்து தொகையினவாம் தத்துவங்கள் சுருதியிற் கூறப்படுகின்றன என்றதை ஆசங்கித்து, அதனைப்பரிகரிக்குமாறு மற்றோர் அதிகரணம் எழுந்தது.

ந ஸ்வவ்ரவஸ்ரஹாஉவி, நா நா ஹாவாத் திரேகாத்|
(க. சு. கக)

(கஉ0) சங்கியை சங்கிரகிக்கப்பட்டமையானும் அன்று, தத்துவங்கள் நானவகையாயுண்மையானும், அதிகம் உண்மையானுமாம்.

யஸ்மிந் வஸு வஸு ஜநா ஆகாஸஸ்து வ்ரதிஷ்டாஃ|
தமேவ ஆத்மாநம் விஜாநதாத்மாநம் ஸ்ரேஷ்டா||
(பிரு. சு. சு. கள)

"ஆகாயமும் ஐவைந்து சனங்களும் எவரிலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனவோ, அவரைப் (பரம) ஆன்மா என நினைக்கின்றேன்; அமிர்தமாயுள்ள பிரமத்தை அறிந்து நான் அமிர்தனாகின்றேன்" என்னும் சுருதியே விஷயம்.

இச்சுருதியிற் கண்ட ஐவைந்து சனம் என்னும் பதார்த்தஞ் சாங்கிய சித்தமாயுள்ள தத்துவங்களா? இன்றேற் சுருதி சித்தமாயுள்ள தத்துவங்களா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாங்கிய சாஸ்திரத்திலே இருபத்தைந்து சங்கியை பிரசித்தமாதலினாலும், அத்தொகை ஈண்டுத் தோற்றுதலாலும் ஐவைந்து சனம் என்றது எப்பிரகாரத்தானும் அவைகளையே குறிக்கத்தக்கன என ஆக்ஷேபிப்பின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈண்டுப் பஞ்சபஞ்ச என்றற்றொடக்கத்த மந்திரத்திலே, இருபத்தைந்து என்னும் தொகை "பஞ்ச பஞ்ச" எனச்சுருக்க முறக் கூறப்படினும், அவை தந்திரசித்தமாயுள்ள தத்துவங்களன்று. "யஸ்மிந்" (பிரு. சு. சு. கள) (எவரிலே) என்றற்றொடக்கத்த மந்திரபாகத்தினுற் குறிக்கப்பட்ட சிவபெருமானிலே அவைகள் (தத்துவங்கள்) ஆதாரமுற்றனவாக அறியப்படுகின்றது; (அவைகள் என்றது உபநிடதத்துக் கூறப்பட்ட தத்துவங்கள்); இவற்றினின்று வேறுற்றமையானும், ஆகாயத்தைத் தனித்துக் கூறினமையின் தத்துவம் அதிகப்படுதல்பற்றியுமாம். தத்துவ அதிரேகம் என்றது தத்துவங்களின் அதிகத்தொகை. ஆகலின்,

ஈண்டு இருபத்தைந்து தத்துவத்தொகை குறிக்கப்பட்டதன்று. மேலும், இருபத்தைந்து என்னுந் தொகையுங் கூறுதல் யுக்தமன்று.

ஙிஷ்ஷ ஙவ்வை வஷஜ்ஞாயாழ் (பா. வி. உ. க. ஙo)

"திக்சங்கியையாயுள்ள சம்ஞையில்" என்னுஞ் சூத்திரவிதிப்படி, இது சம்ஞாவிஷயமாயுள்ள சமாசம். ஆகலின், ஐந்து சனம் என்றது ஐவைந்து சனங்களைச் சுட்டியது; "சப்த சப்த" ருஷிகள் என்றாற் போல.

ஆகலின் சாங்கியதத்துவப் பிரசக்தி இல்லை. (கக)

பின் அவை எவை எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

வ்ராணாஹியொ வாக்யஸேஷாக்ஷ (க. சு. கஉ)

(கஉக) பிராணாதிகள் வாக்கியசேஷத்தினுல்.

வ்ராணஸ்ய வ்ராண ஈ்ரத ஷக்ஷுஷ்ரூக்ஷ ஸ்ரோதஸ்ரோத்ரஸ்ய ஸ்ரோத்ரஅந்நஸ்யாஹ்ஸ ஈநஸொ யெ ஏநொ விதுஃ (பிரு. சு. ச. கஅ)

"பிராணனிற் பிராணனையும், கண்ணிற் கண்ணையும், காதிற் காதையும், அன்னத்தில் அன்னத்தையும், மனத்தில் மனத்தையும் எவர்கள் அறிகின்றனரோ" என்னும் வாக்கியசேஷத்தினுற் பஞ்சசனம் எனப்பட்டவை பிராணாதி ஐந்து இந்திரியங்களாம் என அறியப்படுகின்றது. இதனலுஞ் சாங்கியதத்துவங்கள் ஈண்டுக் கூறப்படவில்லை. (கஉ)

பின்னரும் நியாயம் கூறப்படுகின்றது.

ஜ்யோதிரஷ்டெகஷாஉஷ்ஷத்ருஹ (க. சு. கங)

(கஉஉ) சிலர் கூறுமாறு சோதியினுல், அன்னமில்லாவிடத்து.

சிலர் என்றது காண்ணுவர் மேற்று.

ஈஹஸ்யாஹ்ஸ (பிரு. சு. ச. கஅ)

"அன்னத்தின் அன்னம்" என்னும் சப்தம் இல்லாவிடத்து,

த ஹைவா ஜ்யோதிஷ்ஷ ஜ்யோதிஃ (பிரு. சு. ச. கசு)

"சோதிக்குட் சோதியாயினரைத் தேவர்கள் வழிபடுகின்றார்" என்னும் சுருதிப்பகுதிமத்தின் முதலாவது சோதிசப்தத்தினுற் பஞ்சசனம் என்னும் இந்திரியங்கள் அறியப்படுகின்றன. சோதிக்குட் சோதி என்றும், பிரகாசித்திட் பிரகாசம் என்றும் பிரமத்தைக் கூறிய பின்னர், ஐவைந்து சனம் என்று கூறப்படுதலின், இவை பிரகாசிக்கும் ஐந்து இந்திரியங்கள் என்று அறியப்படுகின்றது. (கங)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

காரணகேந, காகாபாதிஷு, யோவ்யவதிவேஷாகேஷு।

(க. சூ. கச)

(கஉங) ஆகாசமுதலியவற்றுக்குக் காரணமாயிருத்தலானும், குறிக்கப்பட்டபடி கூறப்படலானும்.

கஸ்ஆ ஆதீர்ஸ ஸுஸீகு (தைத். உ. எ. க)

தத்ஐக்ஷத்ஃபஹுஸ்யாகூ தகோஸீகு। (பிரு. கூ. சூ. எ)

"அசத்துத்தானே முதற்கண் இருந்தது; இது மெய்யாய் அவ்வியாகிருத மாயிருந்தது" என்றற்றொடக்கத்த வேதாந்தவாக்கியங்கள் அனைத்தினும் பேதம் புலப்படாமையின்,

சூதாவா ஆதமேக வஸவாஸ்ர ஸுஸீகு (ஐத. க. க)

"(பரம) ஆன்மா ஒன்றுமாத்திரமே முதற்கண் இருந்தது" என்னும் விசேஷவாக்கியத்தினுற் குறிக்கப்பட்டதே கூறப்படலாற் சாங்கியர்களு டைய அவ்வியாகிருதம் கொள்ளப்படமாட்டாது. அங்ஙனமே விசேடித்த வாக்கியங்களிற் காணப்பட்ட இந்திரியங்களே கூறப்பட்டமைபற்றிச் சாங் கியர் தத்துவங் கூறப்பட்டதன்று. (கச)

ஈண்டுச் சாங்கியதத்துவம் எங்ஙனம் பொருந்தாதெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸமாகஷ்யாஃஸ (க. சூ. கஙி)

(கஉச) தொடர்ச்சியுண்மையான்.

வொர்zகூயத வஹுஸ்யாழ் (தைத். உ. சூ)

(எங்ஙனம்) "நான் அநேகமாக ஆவேன் என அவர் விரும்பினர்" என்ற விடத்து, அவர் என்பது தொடர்ச்சிபற்றி முற் கூறப்பட்ட சர்வஜ்ஞரைக் குறிக்கின்றதோ,

கஸ்ஆ ஆதீர்ஸ ஸுஸீகு (தைத். உ. எ. க)

எங்ஙனம் "அசத்துத்தானே முதற்கண் இருந்தது" என்றவிடத்து, தொட ர்ச்சிபற்றி அசத் என்றது முற் கூறப்பட்ட அவ்வியாகிருதத்தைக் குறிக் கின்றதோ,

ஸ வஸஷ ஆஸ வ்ரவிஷ ஸுநவாஸ்ரெஸ்யுஃ (பிரு. கூ. சூ. எ)

எங்ஙனம் "அவர் ஈகத்து நுனிவரையும் ஈண்டுப் பிரவேசித்தார்" என்ற விடத்து, தொடர்ச்சிபற்றி அவர் என்றது அவரையே குறிக்கின்றதோ, அங்ஙனமே ஈண்டுத் தொடர்ச்சிபற்றிப் பஞ்சஜனம் என்றது இந்திரி யத்தைக் குறித்ததாமெனக் கோடலில் விரோதமில்லை. சாங்கியதத்துவ ஆசங்கைப் பிரசங்கம் நீங்கிற்று. (கஙி)

பின்னர்ச் சூத்திரகாரர் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேறுவரெனக் கூறுவாராயினர்.

## (ச) ஜகத்வாசித்துவாதிகரணம்.

ஜஹாவிஷ்யாஸ (க. சா. கசு)

(கஉடு) (அது) ஜகத்தைச் சுட்டுதலின்.

ஸ்ருஷ்டெ ஸ்ருவாணி (கௌஷீ. சா. க)

"பிரமத்தை உனக்குப் போதிப்பேன்" என்று தொடங்கி,

யொ வெ ஸாலாக வனெதிஷா0 வ்ரூஷாணா0 கத்தா யஸ்ய வெ தத்தி ஸ வெ வெதிதவ்ய: (கௌஷீ. சா. கஅ).

"பாலாகி, இந்தப் புருஷர் எல்லார்க்குங் கர்த்தாவாயினரோ, இது எவரது கர்மமாயிற்றே, அவர் அறியற்பாலர்" என்றற்றொடக்கத்த கௌஷீதகிப் பிராம்மணைபகிடத சுருதியே விஷயம்.

ஈண்டு அறியற்பாலராகக் கூறப்பட்டவர் சிவபெருமானு? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ய வனவெஷ ஸுதித்ய வ்ரூஷ்வஜ்ஞேஷாஹ மீவாவெ! ய வனவெஷ அஜ்ரிவ்ரூஷ்! ய வனவெஷ விஜ்ரூதி!

(கௌஷீ. சா. உ, ஊ, ச)

"எந்தப்புருஷர் ஆதித்தியனில் இருக்கின்றரோ, அவரையே வழிபடா நின்றேன்; எவர் சந்திரனிலோ, எவர் மின்னலிலோ" என்பவற்றில் முன் வாக்கியத் தொடர்ச்சியினுற் பிரகிருத ஆதித்தியன் முதலிய அனைத்துக்குங் கர்த்தாவாயிருத்தல் ஆன்மாவுக்கு உளதாதலினுலும், கர்மசப்தம் அபூர்வத்தைக் குறிக்குமாதலானும், கர்மசம்பந்தம் அனைத்தையும் விடுத்து நின்ற சிவபெருமானுக்காகாமையின், அந்த அபூர்வம் ஆன்மாவுக்குப் பொருந்துமாமெனின்,

(சித்தாந்தம்) கர்மம் என்னும் சப்தமும் இது என்னும் மொழியும் சமானாதிகரணத்திருத்தல்பற்றியும், செய்யப்படுகிறதென்னுந் தொழில்பற்றியும் உலகம் குறிக்கப்படுகின்றமையின், உலகத்தைக் காரியமாய்க்கொண்ட சிவபெருமானே ஈண்டுப் பிரதிபாதிக்கப்பட்டனர். (கசு)

சூத்திரகாரர் பின்னர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

ஜீவமுபந்யாஸாத்பூர்வ கெதத்பூர்வத்வாதிதி (க. சா. கள)

(கஉசு) ஆன்மா முக்கியப் பிராணன் என்பவற்றின் லிங்கங்கள் உண்மையாலெனின், அன்று; அது விபாக்கியானஞ் செய்யப்பட்டது.

தடியா ஸ்ருஷ்டீ வைஷ்ணஸ்ததை யயா வா வ்யாக்ருதா ஸ்ருஷ்டிரு ஊஜஸ்வ்யவஸ்தைவைஷ வ்ராஜ கூத்ர வஸ்தாத்ரா தத்ரி ஷ்ணஸ்ததை வஸவஸ்தைவ கூத்ர வத கூத்ர ரு ஊஜஸ்வி

(கௌஷீ. சு. உ)

"எங்ஙனந் தனிகன் இனத்தாரோடு உண்கின்றானே, இனத்தார் தனிகன் உதவிகொண்டு உண்கின்றாரோ, அங்ஙனமே பிராஞ்ஞனாகிய ஆன்மா மற்ற ஆன்மாக்களோடு உண்கின்றனன், மற்ற ஆன்மாக்கள் இவ்வான்மாவைத் தொடர்ந்துள்ளன" எனவும்,

யத்ரா வை தத் ஸ்வப்ந ந கஞ்சந பஸ்யத்யாத்மந்யேவைகதா பவதி (கௌஷீ. சு. உ)

"எப்போது உறங்கினவன் ஒன்றையுங் காண்கின்றிலனே, அப்போது பிராணனில் ஒடுங்கி ஒன்றுகின்றான்" எனவும் ஆன்மாவுக்கும் முக்கிய பிராணனுக்கும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றமையான், குறிக்கப்பட்டவர் சிவபெருமானல்லர் எனல் கூடாது; பிரதர்த்தனவித்தையில் (க. க. ஈஉ) நன்கு விளக்கப்பட்டமையான். ஈண்டும் முன் பின் உள்ள வாக்கியங்களைப் பரியாலோசிக்குங்கால் அவையெல்லாம் பிரமத்தின்பாற்பட்டனவேயாக, மற்றை இலிங்கங்களும் அங்ஙனமே அவற்றிற்கேற்ப விளக்கற்பாலனவாம். எங்ஙனமெனின்,

ப்ரஹ்ம தே ப்ரவாணி (கௌஷீ. சு. க)

உபக்கிரமத்திலே "பிரமத்தை உனக்குச் சொல்வேன்" எனத் தொடுக்கப்பட்டது; மத்தியிலே,

யவ்யோ கதஸ்ரு (கௌஷீ. சு. ககூ)

"அவர் செய்கை ஈது" என்னும் வாக்கியத்தினும் பிரபஞ்சம் அனைத்துக்கும் அவர் கர்த்தாவாதல் உரைக்கப்பட்டது. பின்னரும் உபசங்காரத்திலே,

வஸ்ரோர்வாஹ்வோர்நா ஸ்வஹாகார வஸ்வோஷ்டாஹ ஊஷ்டாநா ஸ்ருஷ்டிரு வ்யாஹாஜ ரோயிவதரு வயோர்தி ய வஸரு வேத்

(கௌஷீ. சு. உ)

"இங்ஙனம் அறிபவன் பாவம் அனைத்தையும் போக்கி, சர்வபூதங்களுக்கும் தலைமையாகி, சுவர்க்கராச்சியத்தையும், ஆதிபத்தியத்தையும் அடைகின்றான்" என்னும் சுருதியினும் சமஸ்த பாவமும் நிவிர்த்தியாதல் வாயி

லாகச் *சவர்க்காராச்சியமாகிய பயன் ஏகாந்தப் பிரமோபாசனையினாலே மாத்திரம் எய்துவதாமென்று கூறப்பட்டது. இங்ஙனம் இந்தப் பிரகரணம் பிரமபரமாம் என நிச்சயிக்குமிடத்து, ஆன்மாவுக்கும் முக்கியப் பிராணனுக்கும் உரிய லிங்கங்கள் அவர் பரத்தனவாகச் செலுத்தற்பாலன. (கள)

மற்றோர் பக்ஷம் கூறப்படுகின்றது.

கூநூஷுஜூ ஜெஜிஜிஃ வுஸுவூவுவூ நாஷூஸுவிஜிஷ்ஷெ ஃகெ (க. ச. கஅ)

(கூஎ) சைமினி கொள்ளுமாறு போல விஞ்விடையில் மற்றொருவர் பொருட்டு உள்ளது; மேலுஞ் சிலர் அங்ஙனமே கூறுவர்.

தெள ஹ வுஷ்வ0 வுஸுஷ ஸாஜாதஷ்ஹ0 ஹாஜாதஸத்ரு ராஜ்ஞயாஜகெ வுஹுதாண்ணுவாஹஃ ஹொஃராஜஜிதி வஹுதஷ் வீகேவ ஸிஸ்ரெ கதுஹ வந நo யஷ்டுா வுாஜிக்ஷுவ வுதத வஷவ வஃஷ்துவ்ளுள (கௌஷீ. ச. கஅ)

"அவ்விருவருங் கூடி நித்திரையாயிருந்தவனிடம் வந்தார்கள்; அஜாதசத்துரு என்பவன் வெண்டுகில் புகுந்த சோமராசப் பெரியோனே, என்று விளிப்ப, அவன் யாதும் பேசாது நித்திரைசெய்தான்; அவன் பின்னர்த் தண்டினாலே அவனைத் தட்டும் போது உடனே எழுந்தான்" என்னும் வாக்கியத்திலே, விளித்தபோது கேளாமையானும் பின் தடிகொண்டு தட்டிய போது எழுந்தமையானும், பிராணிகளுக்கு வேறுக ஆன்மா உளதென்றமை இதற்கு வேறுய்ச் சிவபெருமான் உளர் என்பதை உணர்த்தும் பொருட்டாம்.

வைஷ வதவூாஷகெ வுஸுஷொzஸயிஷ் கூவா வதக ஏஷ்ஹ்துஷ்க வதகூாஸ (கௌஷீ. ச. கஅ)

"பாலாகி, இந்தப் புருஷன் எங்கே துயின்றான்? எங்கிருந்தான்? பின் எங்கிருந்து வந்தான்? என்னும் வினவினும்,

வதா வெளுஷ்ரு தகூா வஂவஹோ ஹவதி (சாந். சு. அ. க)

"புதல்வனே, அப்போது சத்தோடு கூடச் சம்பன்னனாகின்றான்" என்னும் வாக்கியத்தோடோர் பொருள் இயைந்த

யகூா வுஷ்வஃ வுவ0 நகஷ்ஹ வஸுதுயாவிஜ்ரூண வனவெ கூயா ஹவதி (கௌஷீ. ச. உ0)

*சிவலோகம்.

"உறங்குங்கால், அவன் கனவொன்றுங் காணாதிருக்குமிடத்துப் பிராண னோடு ஐக்கியமாகின்றான்" என்னும் விடையினும் அப்பொருள் நன்கு புலப்படுகின்றது.

பாலாகிக்கும் அஜாதசத்துருவுக்கும் நிகழ்ந்த சம்வாதப்பொருளே, வாசசநேயர் சிலர்

யத்தெஷ வநதஹ்ஸ்ய்ஷ்யன்னிதி வஷ விஜ்ஞாநேந வ்ருஷ்டிம் கெவ்ஷ தஹாஸீத்தத வநதஹாபூத (பிரு. சு. க. ஙசு)

"இம்மனுஷன் எங்கு உறங்கினன்? விஞ்ஞானமய புருஷன் எங்கிருந்தான்? அவன் எங்கிருந்து மீண்டு வந்தான்?" என்னும் வினாவாகவும்,

யத்தெஷ வநதஹ்ஸ்ய்ஷ்யன்னிதி வஷ விஜ்ஞாநேந வ்ருஷ்டிம் (பிரு. சு. க. கள)

ய வஷோஷ்ணஹ்ருதய ஆகாஸஸ்தஸ்மிந் ஸ்ஹ்ஸேதி

(பிரு. சு. சு. உஉ)

"இம்மனுஷன் இங்ஙனம் நித்திரை செய்தபோது இந்த விஞ்ஞானமய புருஷனவன் இருதயத்துள்ள ஆகாசத்திலே நித்திரை செய்கின்றான்" என்னும் விடையாகவும் படிக்கின்றனர். ஆகலின், உலகம் அனைத்துக்கும் கர்த்தா சிவபெருமானேயாம். (கஅ)

## (சு) வாக்கியாந்வயாதிகரணம்.

மைத்திரேயப்பிராம்மணமெங்கும் ஆன்மாவும் சிவபெருமானும் ஒன்றுகக் கூறப்பட்டவிடத்தும், அவர்கள் இருவரும் ஒரிடத்தில் வசித்தல் எங்ஙனம் பொருந்தும் என்பதைக் காட்டும்பொருட்டு இவ்வதிகரணம் எழுந்தது.

வாக்யாந்வயாத் (க. சு. ஙகூ)

## (கஉஅ) வாக்கியாந்வயத்தான்.

ந வா அரே பத்யுஃ காமாய பதிஃ ப்ரியோ பவதி ஆத்மந ஸ்து காமாய பதிஃ ப்ரியோ பவதி (பிரு. சு. நி. சு)

"மெய்யாய் நாயகனுடைய அனுபவத்தின் பொருட்டு நாயகன் விரும்பற் பாலனாகின்றானில்லை; ஆன்மாவின் அனுபவத்தின் பொருட்டே நாயகன் விரும்பற்பாலனாகின்றான்" என்று தொடங்கி,

ஆத்மாவரேத்ரஷ்டவ்யஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ (பிரு. சு. நி. சு)

*"(பரம) ஆன்மாவானது மெய்யாய்க் காணற்பாற்று, கேட்கற்பாற்று, சிந்திக்கற்பாற்று, தெளியற்பாற்று" என்னும் விஷயம் பிருகதாரணியத்திற் கேட்கப்படுகின்றது. ஈண்டு,

(பூருவபக்ஷம்)

ஸுஜீநஷ்ட கூரோய (பிரு. சு. நி. சு)

"ஆன்மாவின் அனுபவத்தின் பொருட்டு" என்றற்றொடக்கத்த வாக்கியங்களால் அனுபவத்தை விரும்புகின்றமைபற்றிச் சம்சாரியாதலின், இவன் ஆன்மாவாம் எனில்,

(சித்தாந்தம்) ஈண்டுக் கூறப்பட்டவர் சிவபெருமான். எதனலெனின்,

கூஜ்ஜகூவஷ்டத ஸாஸாவஜி விஜ்தந (பிரு. சு. நி. சு)

ஸுஜீநி வஷ்வரே ஜுவெஜ்ரஷ்டெ ஐதெ விஜ்ஞாத ஊ0 வஷ-ள0 விதிதே (பிரு. சு. நி. சு)

ஊ0 வஷ-ள0 யதியோஜீர (பிரு. சு. நி. எ)

"செல்வத்தினலே சிவத்துவமடைதற்கு நம்பிக்கையில்லை; (பரம) ஆன்மாவைக் கண்டு கேட்டுச் சிந்தித்துத் தெளியும் போது, இஃதெல்லாம் அறியப்படும்; (பரம) ஆன்மாவே இஃதெல்லாம்" என்று தொடங்கி,

யெநஷ0 வஷ-ள0 விஜாநாதி ஷ0 கெந விஜாநீயாத்

(பிரு. சு. ச. கஉ)

"எவரால் ஈதெல்லாம் அறிகின்றனே, அவரை எதனல் அறியலாம்?" என்பதிறுதியாய்ப்போந்த வாக்கியமனைத்தும் சிவபெருமானிலே அன்னுவயிக்கின்றமையின், போகப்பிரீதியுடைய ஆன்மா அநுவாதத்தினற் சிவபெருமானைப் பிரதிபாதித்தலினல் விரோதமில்லை. (கூக)

இந்த இடமெல்லாம் ஆன்மாவைக்குறிக்குஞ் சொல்லினற் சிவபெருமான் கூறப்படுதல் யாங்ஙனமென மதாந்தரத்தினற் சூத்திரகாரர் வெளிப்படுத்துவாராயினர்.

வ்ரதிஜ்ஞாவிஹெதி-ள0ஸ்ஸாஸ்ஸாயுஃ (க. சு. உ0)

(கூக) பிரதிஞ்ஞை சித்திப்பதற்காக லிங்கம்; ஆசுமரத்தியர் உரைக்குமாறு போல.

ஸுஜீநி வஷ்வரே ஜுவெஜ் (பிரு. சு. நி. சு)

---

*கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமாசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே.
(திருவிடைமருதூர், நாவு. கo)

"ஆன்மா காண்பப்பட்டவிடத்து" என்று தொடங்கிய சுருதியினால், ஒன்றை அறியுமிடத்து யாவும் அறியப்படும் என்னும் பிரதிஜ்ஞை சித்திப்பதில் ஆன்மா அவனுடைய *காரியமாகலின், இதினின்று வேற்றுமையை உணர்த்துதற்கு ஆன்ம சப்தத்தினாற் சிவபெருமான் கூறப்படுகின்றனர் என்பது ஆசுமரத்தியர் கொள்கை. (உ0)

உதீரிஷ்யத வஸ்வ0 ஹாவாதிதெஸ்ருஷ்டயுபலப்தேஃ (க. சூ. உக)

(கஙo) ஔடுலோமி உரைக்குமாறு, உற்கிரமணஞ் செய்பவனும் அவ்வாருகலின்.

தேகத்தை விட்டு நீங்கும் முத்தனுக்குச் சிவபெருமானுடைய ரூப முண்மையின், சிவபெருமான் ஆன்மசப்தத்தினாற் (சுருதியிற்) கூறப்படுகின்றனர் என ஔடுலோமி கொள்கின்றனர். (உக)

சுவஸ்யேத சிதி சாஸ்த்ர்யஹ்ஃ (க. சூ. உட)

(கஙக) அவர் வசிக்கின்றமையான் எனக் காசகிருத்சினர் கூறுகின்றனர்.

சூத்ரம் திஷ்டி।

"எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ" என்னுஞ் சுருதிப் பொருளுற, ஆன்மாவிலே ஆன்மாவாகச் சிவபெருமான் இருத்தலினால், ஆன்மாவைக் குறிக்கும் மொழிகொண்டு அவர் கூறப்படுகின்றனர் எனக் காசகிருத்சினர் கொள்கின்றார்.

மற்றிருவர் மதத்தையும் உபந்நியசித்து, அவற்றுக்கு மாறுக இது கூறப்படுதலானும் அதற்குமேல் மற்றொன்றைக் கூறுமையானும், இதுதான் சூத்திரகாரர் மதம் என நிச்சயிக்கப்படுகின்றது.

மேலும், அநேக சுருதிகளுக்கு இணக்கமுறுகின்றது; எங்ஙனமெனின் அதர்வசிரசிலே சேதனசேதனப் பிரபஞ்சம் அனைத்தையும் பிரவேசித்து நின்றமைபற்றிச் சிவபெருமான் எல்லா நாமங்களினாலும் உரைக்கப்பட்டான்.

தெவா ஹவெ வ்ருத்0 ஸொகமீம்0ஸ்ரெ தெவா ரூபூர் வ்ரஹ்மெதாஹவாகிதி। ஸொzஸ்மாவீதஸர்வெகஃ ப்ரபோவம0 வத்தாதி ய ஸவிஷ்யாதி ய நாரூஃ கஸ்மிந்தெதா வுதிரிரந் உதி ஸொ zஹ ராடஹரம0 ப்ராவிஸத்விஸ்வாஹரம0 ஸம0ப்ராவிஸத்। ஸொஹம நிகூர நிகெர வ்ருஹ்மாஹம0 வ்ருஹ்மாஹம0 வ்ராஹ்மீ வ்ருதுஹ்மொஹம0 ஏகி

---

*காரியம் என்னுமுண்மை சசஉ-ஆம் பக்கத்து உ-ஆம் வரிமுதலியவற்றினும், உதி-ஆம் பக்கத்து எடி-ஆம் வரிமுதலியவற்றினும் காண்க.

ணாஸ்ய உத்தரேஹாம் கபோலாஸ்ய திஸ்ரோ விதிஸ்ரோஹாம் வாசோ ஹாவுர்தா ஹாம் வாவித்ருஹாம் தாயத்ருஹாம் க்ரீஷ்மஸ்யோத்ருஹாம் வர்ஷா ஹாம் ஹேமந்தாஹாம் தாஹாம்வதேர்யாஹாம் உக்ஷணாஸ்தி ஸாஹவநீயோஹாம் வதேர்யாஹாம் மௌளாஹாம் மௌளயாம்ஹாம் ஜ்யேஷ்டா ஹாம் ச்ரேஷ்டாஹாம் வரிஷ்டாஹாமாவொஹாம் தேஜோஹாம்ஸ்ருஜ்யா வர்சோயவாம்ஹிரண்யமஹாம் கூஷ்டாஹாம் கூஷ்டாஹாம் ம்ருத்யுர்ஹாம் மௌவ்ருஹாம் கர்ணயோர்ஹாம் வாஷ்டாஹாம் வவித்ர ஹாம் சுத்ர்ய ஹ்ருதய வஹிர்ப வாஸ்ருஜ்யோதிரிதி ருஹாஸ்மை ஸ்வர்க ய லோகாய ஸாம் யொவெஷ வஸ்வர்காய (அதர்வசிரஸ)

"தேவர்கள் சுவர்க்கலோகத்தை (சிவலோகத்தை) அடைந்து, உருத்திரரை நோக்கி நீவிர் யார்? என வினவினர்; (அதற்கு) நான்மாத்திரம் முதற்கண் இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன், எனக்கு வேறுக எதுவுமில்லை; அந்தரத்தையும் (உள்ளீயும்) அந்தராந்தரத்தையும் (உள்ளினுள்ளீயும்) பிரவேசித்தார், திக்குகளீயும் திக்கினிடைகளீயும் பிரவேசித்தார்; (அவ்வியல்பினராய) அவர் நான், நான் நித்தியனும் அநித்தியனுமாகி இருக்கின்றேன், (என்று தொடங்கி) நான் பிரமா, நான் பிரமம், நான் கிழக்கு மேற்குமாயினேன், நான் தெற்காயினேன், வடக்காயினேன், நான் மேலுளேன், கீழுளேன், நான் பெருந்திசை நான்குஞ் சிறுதிசை நான்குமாகின்றேன்; நான் ஆண், நான் பெண், நான் காயத்திரி, நான் சாவித்திரி, நான் திருஷ்டுப்பு ஜகதியும் அனுஷ்டுப்புமாகின்றேன், சந்தசு நான், கார்கபத்தியம் நான், தக்ஷிணக்கினி நான், ஆகவனீயம் நான், சத்தியம் நான், பசு நான், கௌரி நான், ஜ்யேஷ்டன் நான், சிரேஷ்டன் நான், வரிஷ்டன் நான், சலம் நான், தேயு நான், இருக்கு யசுர் சாமம் அதர்வம் ஆங்கிரசு நான், கூரம் நான், அகூரம் நான், குகியம் நான், கோரப்பியம் நான், வனம் நான், புஷ்கரம் நான், பவித்திரம் நான், ஆதிமத்தியம் நான், புறம் நான், முன் நான், சோதி நான், என்னே *எல்லாமாக அறிபவன் எல்லாம் அறிகின்றான் என்றார்" என்பதிறுதியாக முதலாவது கண்டத்தினும், அவர் யாண்டும் பிரவேசித்தனர் என்பது நோக்கி,

---

*மாலாகிநான்முகனுய்மாபூதமாய்மருக்கமாய்ருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகத்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
வேலாதனவெலாமேல்விப்பாலுயெழுஞ்சுடராயெம்மடிகளின்றவமே.

மண்ணகிவிண்ணகிமலையுமாகிவையிரமுமாமாணிக்கத்தானேயாகிக்
கண்ணகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலையாகிக்கலைஞானத்தானேயாகிப்
பெண்ணகிப்பெண்ணுக்கோர்ப்ராணுமாகிப்பிரளயத்துக்கப்பாலோர்கண்டமாகி
யெண்ணகியெண்ணுக்கோரெழுத்துமாகியெழுஞ்சுடராயெம்மடிகளின்றவமே.

யொ. வெ்வ் ரஷ்ரூஸ்ரவா ரூ்ஷ் வுஸ்ரா தவிவ்ஸ் வெை நஸோ் நஃ் (அதர்வசிரஸ)

"உருத்திரர் எனப்படும் பகவானுக்கு, பிரமா எனப்படும் அவருக்குஞான் நமஸ்காரஞ் செய்கின்றேன்" என்று தொடங்கி, பிரமா, விஷ்ணு, மகேசுவரன், உமை, விநாயகர் முதலிய சமஸ்தப் பிரபஞ்சசப்தப்பொருளுமாயிருத்தல் இரண்டாவது கண்டத்திலும் பிரதிபாதிக்கப்பட்டுப்போந்தது. அங்ஙனஞ் சமஸ்த சுருதிகளை இணக்கி ஆராயுங்கால், சேதனுசேதனப் பிரபஞ்சத்தையும் அந்தரியாமியாய்ப் பிரவேசித்து, அனைத்தையும் சரீரமாகவும், எல்லாப் பெயருமுடையராகவும் இருந்தனர் சிவபெருமான் என்றறியப்படுதலின், காசகிருத்சினமதந்தான் சுருதிருத்திர மகாபியுக்தசம்மதமாம் எனக்கோடல் உசிதமாயிற்று. (உஉ)

## (சூ) பிரகிருத்தியதிகரணம்.

முதலாம் அத்தியாயத்து முதற்பாதத்து இரண்டாம் அதிகரணத்திலே "எவரினின்று இப்பூதங்களெல்லாந் தோற்றியவோ" என ஐந்தாம் வேற்றுமை கேட்கப்படுதலின், (ஆண்டுச்) சிவபெருமானுடைய பிரபஞ்சோபாதானம் சாமான்னியமாக நிரூபிக்கப்பட்டது. இவ்வதிகரணம் அதனை முற்றுந் தாபித்தற்கெழுந்தது.

வகூ்கிஷ் வுதீஜா ஏ்ஷாஹர்ந்ஷவொயாஷ (க. ச. உங)

(கஉஉ) அவர் பருதியுமாம்; பிரதிஞ்ஞை திருட்டாந்தங்களுக்கியைதலான்.

தஸ்மாஉ வஎதஸ்மா ஆத்மந ஆகாஸஸ்ஸம்பூதஃ (தைத். உ. க)

"(பரம) ஆன்மாவாகிய அவரினின்று ஆகாயம் பிறந்தது"

த்யாவா ஹ்ருதீ ஜநயந்தீவ வநகஃ (தைத். ஆரணி. கo. க. ங)

"பூமியையும் ஆகாயத்தையும் படைத்து ஒருவராகிய தேவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளே சண்டு ஆராயற்பாலனவாகிய விஷயம்.

இவைகளிலே பிரசித்தமாயுள்ள உபயகாரணத்துவம் உரைப்பதியுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

---

அங்கமாயாதியாய்வேதமாகியருமறையோடைம்பூதத்தானேயாகிப்
பங்கமாய்ப்பலசொல்லுத்தானேயாகிப்பான்மதியோடாதியாய்ப்பான்மையாகிச்
சங்கையாய்க்காவிரியாய்க்கன்னியாகிக்கடலாகிமலையாகிக்கழியுமாகி
யெங்குமாயேறார்தசெல்வனுகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

என்றற்றொடக்கத்த இன்ற திருத்தாண்டகமுதலியவற்றினும் அதர்வசிரசப்பொருள் தொனித்தின்றுகாண்.

நிமித்தகாரணராகிய குலாலாதியோர் உபாதான மிருத்பிண்டாதிகளாக ஆகாமையினும், உபாதானமாகிய மிருத்பிண்டாதிகள் நிமித்தகாரணராகிய குலாலாதியரச்சு ஆகாமையினுமே சந்தேகமுண்டாயிற்று. பிரபஞ்ச காரியத்தையும்று அவர் நிமித்தகாரணமும், உபாதானகாரணமுமாம் இரண்டுமாதல் யாங்ஙனம்?

(பூருவபக்ஷம்) அவர் உலகிருட்டிக்கு நிமித்தகாரணர்தான்; உபாதானகாரணரல்லர்; எதனால்? கூடாமையின். கடத்தை நிருமாணஞ்செய்யும் குலாலன் தானே மட்பிண்டமுமாகிக் கடத்தைச் செய்வானல்லன்; படம் நெய்யும் குவிந்தனும் அங்ஙனஞ்செய்வானல்லன். அல்லது மட்பிண்டம் குலாலனுகிக் கடத்தை வனைய முயலினும் அது கூடாதாமே. நிமித்தகாரணமாகிய பிரமத்துக்கு உபாதானத்துவம் எய்தாது. நிமித்தத்துக்கு உபாதான கற்பனை நிஷ்பிரயோசனம்; அவ்வியல்பிற்றுகிய கற்பனையின்றியும் காரியம் தோற்றுவதால். குலாலன் மிருத் பிண்டத்தினின்று வேறுயினும், கடம் ஆக்கப்பட்டதாகக் காணப்படுகின்றமைபற்றிக் (குலாலன் கடமாதலும், கடம் குலாலனதலுமாகிய) அந்தக் கற்பனையின்றியே காரியம் காணப்படலான். நிமித்தத்துக்கு உபாதானத்தை ஏற்படுத்துவது பயனற்றது. ஆகலின் பிரமம் நிமித்தகாரணமே; உபாதானமுமன்று எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. உலகத்துக்கு நிமித்தமும் உபாதானமும் பிரமமே;

வஷ்ஷாzவஷ்ஷ தரோஷ்ஷ ஷ்வாக்ஷ்வா யெநாஸ்ஷ தம் ஸ்ஷ தம் லவ தஷ்ஷி தம் ஷி தஷிஜ்ஞ தம் விஜ்ஞ தம் (சாந். சு. க. க)

"நீயும் அகந்தை கொண்டனை; எதனைக் கேட்கப்படாதது கேட்கப்படுகின்றதோ, நினைக்கப்படாதது நினைக்கப்படுகின்றதோ, அறியப்படாதது அறியப்படுகின்றதோ, அந்த ஆஞ்ஞையை நீ எஞ்ஞான்றுயினுங் கேட்டனையா?" என்று சுருதி கூறுமாறு, நிமித்தகாரணராகிய ஆஞ்ஞையுடையார் அறியப்படுமிடத்துச் சேதனாசேதனப்பிரபஞ்சமனைத்தும் அறியப்பட்டதாகும் என்றவாறு, ஆஞ்ஞையுடையார் அறியப்பட்டபோது யாவும் அறியப்படுமென்னும் பிரதிஞ்ஞையினையும்,

யஷ்யெகேந ஷ்ருஷ்ணேந விஜ்ஞதேந ஸர்வம் ஷ்ருணயம் விஜ்ஞாதம் ஸ்யாத (சாந். சு. க. க)

"ஒரு மட்பிண்டம் அறியப்பட்டால் மண்மயமாக அனைத்தும் அறியப்பட்டதாகும்" என்னுஞ் சுருதியினால் அதனை விளக்கும் மட்பிண்ட திருஷ்டாந்தத்தின் ஒற்றுமையினுமாம், பிரமம் நிமித்தமாய் மாத்திரமிருத்தலின் அதனை அறிதல்பற்றிச் சமஸ்தப் பிரபஞ்சஞானமும் எய்தமாட்டாது. எங்

ஞனமெனின், உபாதானமாகிய மட்பிண்ட ஞானத்தை அறிவதானன்றிக் குலாலனை அறிதலாற் காரியமாகிய குடம் அறியப்படமாட்டாது. ஆகலின், நிமித்தகாரணமாகிய பிரமம் உபாதானகாரணமாயுமிருக்குமிடத்து இது பொருந்தும் எனக் கொள்ள, பிரமமே உபாதானமாம். (உக)

(சார். சு. க. ங) சுருதியிற் கண்ட இந்த ஆதேச சப்தத்தினால் ஆஞ்ஞை செய்யும் பிரமம் கூறப்பட்டது. உபாதானம் என்றது அவரினின்று வேறின்றெனக் காட்டச் சூத்திரகாரர் மற்றோர் நியாயங் கூறுகின்றார்.

சுஹிஜ்ஞாவதொஷாத் (க. சு. உச)

(கஙங) (அவர்) சங்கற்பங் கூறப்படலானும்.

தமைக்ஷத வஹுஸ்யாம் ப்ரஜாயெய (சார். சு. உ. ங)

"நான் அநேகமாவேனாக என்று அவர் சங்கற்பித்தார்" என்னுஞ் சுருதியில் நிமித்தகாரணமாகிச் சங்கற்பித்த முற்றறிவுடைய பிரமத்தினது விசித்திர ஜகதாகாரத்தினால் அநேகமாயாதலாகிய சங்கற்பம் உபதேசிக்கப்படுகின்றது. ஆகலின், உபாதானம் நிமித்தகாரணத்துக்கு வேறின்று. (உச)

(ஆக்ஷேபம்)

விஜ்ஞாயிகோ ரூபெ ஹ்யாஹுஷி-ர் ஹி-ர்ரண்யமஹ-ம் வ்ருத ஜாய மாநஂ (தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"விசுவாதிகரும் மகாவிருடியுமாகிய ருத்திரர் இரண்ணியகருப்பர் பிறக்கக் கண்டனர்" என்னுஞ் சுருதியினால் விசுவாதிகராகிய சிவபெருமான் நிமித்தகாரணராகித் தமக்கு வேறாயுள்ள பிரகிருதியில் (உபாதானத்தில்) தமது சங்கற்பத்தினால் உண்டாக்குஞ் சமஸ்த தேவர்கட்கும் தலைவராகிய இரண்ணியகருப்பரைச் சிருட்டிக்க அனுக்கிரகத்தோடு பார்க்கின்றனர் என்று அறியப்படுகின்றது. அவர் பிரகிருதியாய் உலகாகாரமாவது எங்ஙனம்?

சாயாஜ்ஞ வ்ருக்ஷாதி0 விஷ்ணுஸ (சுவே. சூ. க0)

"மாயையைப் பிரகிருதி என்று அறியவேண்டும்" என்றுரைக்குஞ் சுருதியில், மாயை என்பது பிரகிருதியாம்.

தஸ்மாத்வா ஏதத் விராஜோ அதிஜாயத புருஷ:।

(இரு. வே. க0. கo. இ)

"அவரினின்று விராட்புருடன் பிறந்தான்; விராட்டுக்குமேலே புருஷன்" என்னுஞ் சுருதிகளாற் புருஷன் பிரகிருதி என்று அறியப்படுகின்றது. அவ்விரண்டுமே பிரகிருதியாய் உலகாகாரமாயிற்றென்று கூறுவது உசிதமின்று கூற,

(உத்தரம்) சூத்திரகாரர் இயம்பாராயினர்.

ஸாகூஷாத்ஸூயாதீ நாஸ் (க. சி. உஞ்)

(கூசு) அவர் நேரே இரண்டாகவுங் கூறப்படலான்.

வேதாந்த பாகங்களிலே சிவபெருமான் உபாதானகாரணராகிப் பிரபஞ்சாகாரமாயும், நிமித்தகாரணராகிப் பிரபஞ்சோற்பத்தி செய்பவராயும் பிரத்தியகூஷமாகக் கேட்கப்படுகின்றனர். எங்ஙனமெனின்? "விசுவாதிகர் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளான். எங்ஙனம் விசுவாதிகத்துவங் கேட்கப்படுகின்றதோ, அங்ஙனமே

ஸவை-ர வை ரூ-ஸ்ரீ: (தைத். ஆரணி. க0. உசு. சஉ)

"எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்தவற்றுல் உபாதானகாரணமாதல் பற்றி விசுவரூபியாதலுங் கேட்கப்படுகின்றது. சதருத்திரீயத்தில்,

நஸோ ஹிரண்யவாஹவே|

"இரண்ணிய பாகுவுடையார்க்கு நமஸ்காரம்" என்று தொடங்கி,

கூ-யு-ஹ்ரா நா0 வதயே|

"கள்ளர் தலைவர்க்கு நமஸ்காரம்" என்பதிறுதியாக அவரது விசுவாதிகத்துவங் கூறப்படுகின்றது.

நஸ்ஸ் வண்ய-ர்ய உ வண-ர்ரஸ்ய உ|

"இலையினின்று தோன்றியவர்க்கும், இலைச் சமூகத்திற்றோன்றியவர்க்கும் நமஸ்காரம்" என்பதிறுதியாகச் சிவபெருமான் உலகாகாரமாயிருத்தல் கேட்கப்படுகின்றது. பிறிதோரிடத்தில்,

ஸ்ரவந்வ நo ஸ்ரவஸவ்யக்ஷ சூஸீஸ்ரவஸ்ரஷ்டு திஷ்டூ-வ நாதி யர்ரு யதீ (தைத். பிராம். உ. அ. கூ. எசு, எஎ)

"பிரமம் வனமாயிற்று; பிரமம் அந்த விருக்ஷமாயிற்று; தத்தம் இடங்களிலே நிறுவி உலகத்தைப் பிரமம் பரிபாலிக்கின்றது" என அவர்க்கு ஈரியல்பு சாற்றப்படுகின்றது. அதர்வசிரசின் முதலாம் இரண்டாம் பாகங்களினும் சிவபெருமான் உலகாகாரமாதலும், அதன்மேல் உலக ஈசுரத்துவமாதலுங் கூறப்படுகின்றன. ஆகலின், "பிரத்தியகூஷமாய் இரண்டாகக் கூறப்படலான்" ஜகத்தும் ஜகதீசுரனும் பிரகிருதி நிமித்தமாகிய பரப்பிரம சிவபெருமானும். (உஇ)

மேலும் மற்றோர் பிரமாணம் உண்டென்று சூத்திரகாரர் கூறுகின்றார்.

சூத்ரத்வாத் (க. சி. உசு)

(கூஎ) தம்பிலிருந்து சிருட்டித்தலான்.

தஸ்மாத் நo ஸ்ரவஸ்ரஷ்டா (தைத். உ. எ)

"அப்போது அவர் தாமே தாமாகச் செய்தனர்" என்னுஞ் சுருதியினும் சிவபெருமான் தாமே உலகாகாரமாதலோடு கர்த்தாவாதலும் பெறப்படுகின்றது. ஆகலின், அவர்தாம் உபாதானமும் நிமித்தமுமாம். (உசு)

(ஆக்ஷேபம்) சமஸ்த தோஷகளங்கலேசமுமிலராய், அளவுகடந்த மங்கலகுணரத்நைகராராய், தடைகடந்த நித்திய வைபவமுடையராய், பிரபஞ்சாதீதராய் நின்ற சிவபெருமான் அஞ்ஞான விகாராஸ்பதமாகிய இழிந்த பிரபஞ்சரூபப் பிருகிருதியாதல் யாங்ஙனம்? என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

வரிணாகாஷ (க. சு. உள)

(கங்சு) பரிணமத்திஞல்.

நித்தியசுத்தானந்தரும் நிரதிசயமங்கல சுவாபாவிகருமாமாயினும், நிமித்தகாரணராகிய சிவபெருமான் உபாதான காரணமாகி உலகாகாரமாதலும் யுக்தமே; (சிவபெருமான்) சேதனசேதனகாரியமாய்ப் பரிணமிப்பதலான்.

(ஆக்ஷேபம்) அந்தோ! காரணவிகாரரூபமாய்த்திரிதலன்றே பரிணமம்; முன் ரூபத்தை விடுத்துப் பின்னோர் ரூபமாய் மாறுதலே பரிணமமாகும். சிவபெருமான் அநர்த்தத்தன்மையிலிருந்து எவ்வாறு தொடக்குறுவாரல்லர்?

(உத்தரம்) சத்தியம்; நீ வினவியது. எங்ஙனம் நிமித்தகாரணம் உபாதானமாயவிடத்தும் விகாரமுதலிய பரிசமில்லையோ, அங்ஙனம் பரிணமமும் எய்துகின்றது. அபூர்வமாகிய பரிணமம் எது? அதனைக் கேட்டற்குக் குதூகலமுடையேம். அதனை விளக்க வேண்டிற்றும் எனின்,

(உத்தரம்) கேட்குதி; விளக்குவாம்.

யதா தரேஷு ஏவா ந ராத்ரிரஸ்ரஸ ஆஸ்ஸீவ வஸவ தெவ ஆஃ | தஷ்ஷரா தத்ஸவிதுர்வ்ருணீ வ்ருஜாஅ தஸ்ஸாத்ஸ்ரஸ்தா வாணீ (சுவே. சு. கஅ)

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்; அவர் அக்ஷரமாயும், சவிதாவுடைய வணங்கற்பாலதாம் முக்கியப் பொருளாயும் இருந்தார், அவரினின்று புராணியாகிய பிரஞ்ஞை (பராசத்தி) வெளிப்பட்டது" என்பது சுருதி.

சந்திரசூரியர் ஒளியெல்லாம் ஒழிந்து, பகல் இது இரவிது எனப் பகுத்தலில்லாத சூனியமாய், நாமரூப விசேஷமின்றி ஸ்தாலருக்குமு

சேதனசேதனமாகிய சத்து அசத்தின் வியக்தி நிலையற்று, ஈதெல்லாம் இருண்மயமாய் இருந்த அந்தக்காலத்திலே, அந்தச் சிவபிரானுர் அத்துவி தீயராய், கேவலராய், சுவப்பிரகாசராய், தம்மினின்று பருக்கப்படாவியல் படைந்த சேதனசேதனச் சத்தியோடுளராயினர். அவரே அசுத்தமாயும், சுத்த ரகிதமாயும், நாசரகிதமாயுமுள்ள பரவஸ்துவாயிருந்தனர்; அந்தச் சவிதா வாகிய சூரியனுக்கு முதற்கண்ணே ஒளியைக் கொடுத்தமையின் வரேண் ணியராயும், அவனுக்கு மத்தியிலிலுள்ள ஒளியாயுமிருந்தார். அப்பெற் றியராகிய தம்மினின்று வேறுபடாச் சேதனசேதனப் பிரபஞ்சம் முழுமையும் மறைந்து கிடத்தல்பற்றி அத்துவிதீயமாய் அக்காலத்திருளெல்லாம் ஒட் டும் பெருந் தோற்றமாகிய உருவத்தையுடைய நித்தியசித்த புராணியாம் பரமப்பிரஞ்ஞையாகிய ஞானசத்தியார் தோற்றினர். பின்னர்,

வொ கூயெத வுஹாவ்யாழி (தைத். உ. சு)

"நான் அனேகமாய் ஆவேனுக என அவர் விரும்பினர்" என்றவாறு, பின் னர் நாமரூபாதி பருப்பில்லாத சூக்குமசேதனசேதன வஸ்து சரீரியாயும் காரணராயும் நின்ற சிவபெருமான் நாமரூபப் பருப்புளதாகும் (ஸ்தூல) சேதனசேதனப் பிரபஞ்சமாக ஆவேன் என்று சங்கற்பித்தனர். ஆகலின்,

ஐஏ வவ-ழிவ்யாஜத யதிஏகிஐ (தைத். உ. சு)

"எதெது இருந்ததோ அததையெல்லாம் அவர் சிருட்டித்தனர்" என்னுஞ் சுருதிப்பிரகாரம் அவர் தமது சரீரமாகவேயிருந்த சூக்கும சேதனசேதன வஸ்துவைத் தம்மினின்று வேறு பிரித்து, பின்னர்

தத்யாவ்ஷா ததெவாந்ர வ்யாவிஶத (தைத். உ. சு)

"அதனைச் சிருட்டித்து அதனுள்ளே பிரவேசித்து" என்னுஞ் சுருதிப்பிர காரம் தம்மினின்று பிரிக்கப்பட்ட சேதனசேதனத்துள்ளே (பரம) ஆன்ம ரூபமாகத் தாம் பிரவேசித்து, பின் அவர்

ஸச்ச த்யச்சாபவத்* (தைத். உ. சு)

"சத்தும் (பசுவும்), தியத்தும் (பாசமும்) ஆயினர்" என்றற்றொடக்கத்த

---

*பரிணமம் என்னும் மொழி உபநிடதங்களில் இல்லை. அங்ஙனமாயினுஞ்சுத் திரகாரரால் க. சு. உ. ல் அப்பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. இப்பரிண மத்துக்காகப் பாடியகாரரால் உதகரிக்கப்பட்ட (தைத். உ. சு) சுருதியிற் கண்ட அப் வந் என்பதற்கு "ஆயினர்" "ஆனர்" என்பது பொருள். "ஊனுயுயிரானுயுட லானுயுலகானுய்" எனவும், "இருநிலனுய்த் தீயாகி" எனவும் போந்த திருவாக்கு களிற் காணப்படும் "ஆனுய்" "ஆகி" என்றவைகளுக்கு எந்தப்பொருள் வைத் தித்தாந்திகள் கொள்கின்றார்களோ, அந்தப் பொருள்தான் பரிணமத்துக்கும் பொரு ளாகக் கோடற்பாற்று. இப்பரிணமத்தினுற் சிவபெருமானுக்கெய்தும் களங்க லேசமுமில்லையாம் என்று உணர்த்தற்கு அபூருவபரிணமம் என்றி பாடியகாரர் வரைந்தருளினர்.

சுருதிப்பிரகாரம் ஈனுவகைத்தாய சேதனசேதனப் பிரபஞ்சரூபமாக மிகுதியும் (ஆயினர்) பரிணமித்தார்.

இங்ஙனம் மனிதனுக்குப் பாலத்துவமும் யௌவனமும் உள்ளவாறும் போல, உலகமே வடிவாயுள்ள பிரமத்துக்குக் காரணமும் காரியமும் உள்ளவாயின.

மாயாஞ் ப்ரக்ருதிம் வித்யான்மாயினந்து மஹேஶ்வரம்।
தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்॥

(சுவே. உ. கஅ)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; அவரது அவயவமாகிய அதனுலே இவ்வுலகமனைத்தும் வியாபிக்கப் பட்டது" என்று சுருதி கூறுகின்றது. அற்றாகலின், அனைத்துக்கும் மாயை தான் பிரகிருதி என்றும், அதனையுடையவர் மகேசுவரர் என்றும், அவரது அவயவமாயும் அம்சமாயுமுள்ள சிற்சத்தியே போக்தாவாயிருக்குந் தசையிலே புருஷன் எனப் பெயர் கொண்டு சகல உலகத்தை வியாபித்துக்கொண்டிருக்கிறதெனப் பெறப்படுகின்றது. எங்ஙனம் சரீரமாத்திரத்திலிருந்தேனும் ஆன்மாமாத்திரத்திலிருந்தேனும் உரோமம் நகமுதலியன உண்டாகாவோ, அங்ஙனம் கேவலம் மாயையிலிருந்தேனும் கேவலம் மகேசுரரிலிருந்தேனும் உலகம் உண்டாகாது. பின் சரீரமுடைய (புருஷனி)னின்று கேசம் நகமுதலியன தோற்றுமாறு போல, மாயையுடையாராகிய சிவபெருமானினின்று சேதனசேதனத்துக்கு உபாதானகாரணமாகிய புருஷன் வெளிப்படுகின்றான். அவ்வுருவடைந்த ஈசனிலிருந்தே அவ்வியக்த சதுர்முகப் பிரமாமுதலாயினோர்க்குற்பத்தியாயிற்று.

வாஸுதேவோ வை நாராயணோ (தைத். ஆரணி. க0. உச. சஉ)

"புருஷர்தான் உருத்திரர்" என்னுஞ் சுருதி ஈசுவரர்க்குப் புருஷரூபத்துவத்தைக் கூறுகின்றது. ஆகலின், அந்தந்த அவஸ்தாவிசேஷத்தினுற் சேதனசேதன விசிட்ட சிவபெருமான் காரணமும் காரியமுமாம் என்று கூறுதல் மிக உசிதம். (உஎ)

யோனிஞ்ச ஹி தீயதே (க. உ. உஅ)

(கஙஅ) அவர் பிரகிருதியுமாம் என்று பாடப்படுகின்றனர்.

சிவபெருமான் சகல பூதங்களுக்கும் யோனி என்று கூறப்படுகின்றார்.

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்ட
ம்ப்ரஶாந்தம் ஸர்வாங்கோமிமத்வதி யோனிம் (கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தரும், எல்லாப் பூதங்களுக்கும் (யோனியும்) பிரகிருதியும்,

சமஸ்த காட்சியுமாயுள்ளார் என்றறிந்து முனியானவன் தமசுக்கு மேலே போகின்றான்" என்னுஞ் சுருதியினுற் சமஸ்தசாட்சியும், சர்வஜ்ஞரும், இருளுக்குமேற் போந்தவரும், பிரபஞ்சத்தைக் கடந்தவரும், சமஸ்த பூதங்களுக்கு யோனியும் (பிரகிருதியு) மாயுள்ளார் பராசத்தி உமையோடி சைந்த சிவபெருமானேயாம். ஆகலின், பரப்பிரமமே *உபாதானகாரண மும் நிமித்தகாரணமுமாம். (உஅ)

## (எ) சர்வஷியாக்கியாநாதிகரணம்.

ஸைதந ஸவை வ்யாவ்ருதா வ்யாவ்ருதாஃ (க. சு. உகூ)

**(கூஅ) இதனால் எல்லாம் வியாக்கியானஞ் செய்யப் பட்டன; வியாக்கியானஞ் செய்யப்பட்டன.**

(முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதத்து) இரண்டாஞ் சூத்திர முதல் இதுவரையும் வியாக்கியானஞ் செய்யப்பட்ட வேதாந்தவாக்கியங் களின் வியாக்கியானத்தினாலே, பிரமலிங்கங்களைக் கூறும் வேதாந்தரூபங் களாகிய கன்மகாண்டத்திடைக்கட் போந்த புருஷசூக்தம் சதருத்திரீய முதலிய மந்திரப்பிராம்மண பாகங்களும், ஸ்மிருதி இதிகாசபுராண ஆகம அபியுக்தசூக்திவிசேஷங்களுமாகிய எல்லாம் வியாக்கியானஞ் செய்யப்பட் டனவாம் என்பதே விஷயம்.

"வியாக்கியாதாஃ" எனச் (சூத்திரத்தில்) இருதரங் கூறியது அத்தியா யம் முடிந்தது என்ற கருத்தினாலாம்.

ஈண்டுக் கன்மகாண்டத்திற் போதரும் சதருத்திரீயம் புருஷசூக்தம் என்பனவும், ஸ்மிருதி இதிகாசபுராணங்களும் தாற்பரியலிங்க சமன்வயத் தினாற் பிரமத்தைத்தான் உணர்த்துகின்றனவா? இன்றா? என்பது சந்தேகம்; பிரகரணபேத முதலியவே சந்தேகத்துக் காரணம்.

(பூருவபக்ஷம்) கன்மகாண்டத்திலே தோற்றும் புருஷசூக்த முதலி யன் கன்மத்தை அனுஷ்டிப்போனுகிய ஆன்மபரத்தனவாம் எனக் கூறு வதுங்கூடுமாம்; அவை நித்தியமுக்த பிரம விஷயபரத்தன அன்று; பயனின் மையான். ஸ்மிருதி புராண முதலியவும் ஒரே ஆன்மாவைக் கூறிற்றில; சதனுலெனின்? அவற்றுட் சில பிரமாவையும், சில விஷ்ணுவையும், சில உருத்திரரையும், சில இந்திரனையும், சில சத்தியையும், சில அக்கினியையும்,

*உபநிடத உபக்கிரமணிகை உ0-ஆம் இலக்கத்திற் கண்டவாறு உபநிடதங்க ளும் இவற்றை ஆதாரமாய்க்கொண்டு எளர்ந்த பிரமசூத்திரமும் தியானயோகபரி யந்தமே கூறி முற்றி நிற்பனவேயாக, இச்சூத்திரயோகத் தெரியத்திலே பரித் திரசத்தியாகிய சூக்குமாயைக்கும் பராசத்திக்கும் இடம் ஒன்றுயிருந்தமையான், யோகவிதானத்து உபநிடதங்கள் அக்கிலேக்குத் தக அவை கூறியவொக்குமாமெனி னும், அதுபற்றி சிருமிமுக்குயாதுமின்றும் என்றும் கடைப்பிடிக்க.

சில சூரியனையும், சில வாயுவையும், சில பிறவற்றையும் பரப்பிரமமாகக் கூறும். ஆகலின், இது (நிலைபின்மை என்னும்) அநவஸ்தாதோஷம். அது பற்றி, இவைகள் பிரமத்தைக் கூறியவாகக் கொள்ளப்பட்டமாட்டா என ஆக்ஷேபிக்க,

(சித்தாந்தம்) கூறுகின்றேம். புருஷசூக்தமுதலியவும் பிரமத்தையே போதிப்பனவாம்; பிரமலிங்கங்கள் உண்மையான்.

சஹஸ்ரா க்ஷாஜாயத (புருஷசூக்தம்)
சூஷி கூவணஃஜஹவஸ்ஷ வாரே (புருஷசூக்தம்)
தஜேவா விஜா நஜ்ஜ ஜஹ ஜவதி (தைத். ஆரணி. கூ. கஷ. ச0)

"அவரினின்று விராட்டுப் பிறந்தான்; தமசுக்கு மேலுள்ள ஆதித்தியவர்ணர்; அவரையே அறிந்து ஈண்டு அமிர்தனுகின்றான்" என்னுஞ் சுருதிகளான், அவர் அனைத்துக்கும் காரணராதலும், இருளுக்கு மேலாதலும் சிவத்துவத்துக்குக் காரணமாதலுமாகிய பிரமலிங்கங்களோடுடைய சம்பந்தம் காணப்படுகின்றது. ஆகலின், ஈண்டுக் கூறப்பட்ட சிவபெருமானே புருஷசப்தத்தினுற் கூறப்படுகின்றார்; சதருத்திரீயத்தினும் சிவபெருமான் உலகத்துக்குப் பதியாதலும், அவர் உலகுக்கு ஆன்மாவாதலும், நீலகண்ட முதலிய இலக்ஷணமுடையராதலும் நேரே கேட்கப்படுகின்றன. ஆகலின், சிவபெருமானே அப்பிரகரணத்திற் கூறப்பட்டனர் என்பது யுக்தம்.

(ஆக்ஷேபம்) மங்கலகுணங்களுக்கு நிதியாயுள்ள சிவபெருமான் சதருத்திரீயத்திற் பிரதிபாதிக்கப்படுதல் அயுக்தம்.

நமஸ்தே ரூத்ர மன்யவே (யசுர். வே. சை. நி. க)

"உருத்திரரே உமது கோபத்துக்கு நமஸ்காரம்" என்றமையாற் சூழ்ந்த குணமாகிய மன்யு (கோப) சப்தம் முதற்கண்ணே எய்திற்றே எனின்,

(உத்தரம்) அங்ஙனம் விசாரிக்கற்பாலதன்று; மன்யு என்னும் மொழி ஞானத்தின் மேற்று. இன்றேற் குரோத சப்தத்தின் பரியாயம் எனினும் இழுக்காது; துஷ்டநிக்கிரகத்தின்பொருட்டுச் சுவேச்சையினுற் கொள்ளப்பட்ட பிரகிருதிகுணமாயிருத்தல்பற்றி அதற்குச் சிவபெருமானிடத்திற் சம்பந்தமில்லை. புராணேதிகளின் தாற்பரியலிங்கங்களெல்லாம் பிரம விஷ்ணு வாதி நாமங்களின் பொருளாயுள்ளாரும், சர்வான்மகரும், சர்வஜ்ஞரும், சர்வசத்தியுடையாரும், சர்வாதிபரும், அசாமானியவைபவரும், பிரமசப்தப்பொருள் ஒய்தற்கு இடமாயினரும், சமஸ்த வேதாந்த வாக்கியங்களையும் இயைத்துச் சமன்வயஞ் செய்தல் வாயிலாக எப்பும் முடிந்த பொருளாயும், உமாசகாயராயும், பரமேசுவரருமாகிய சிவபிரானையுற்று அறிவிப்பனவாம் என்று உரைப்பது யுக்தமே. இவை கன்மகாண்டத்தில் நிகழ்வின்

ரனவே என ஆக்ஷேபிக்கின் அன்று ; லிங்கத்தைக்கொண்டு பிரகரணத்தை அறியவேண்டுமென்பது நியாயம். இந்த நியாயங்கொண்டு வேதாதி பிரமாணவசனங்களிற் சேதனமேனும் அசேதனமேனும் உலகுக்குக் காரணமாகக் கூறப்படுமிடமெல்லாம் அது அவ்வவ் வான்மாவாய் நிற்கும் *சிவபெருமான்மேற்றெனப் பொருள் கொள்க. எங்கெங்கே புருஷார்த்தமில்லாத விகாரம் அறியாமை முதலிய குணம் நிகழ்கின்றனவோ, அங்கங்கே பரப்பிரமசிவனுருடைய சிதசித்வஸ்து சரீரமென்றறியற்பாற்று, காணற்பாற்று என நன்கு நிரூபிக்கப்பட வேண்டுமெனல் முழுமையும் உசிதம். (உசு)

---

*யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனுர்தாம்வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனேப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யு
மாதலானிலையிலாதானறிந்தருள்செய்வனன்றே.
(சித்தியார். உ. உ)

## இரண்டாம் அத்தியாயத்து
## முதலாம் பாதம்.
### (க) ஸ்மிருத்யதிகரணம்.

ஸ்ம்ருத்யனவகாஶ தோஷப்ரஸங்க இதி சேன்ன்ய ஸ்ம்ருத்யனவ காஶ தோஷ ப்ரஸாஶாத் (உ. க. க)

(கூகூ) ஸ்மிருதிக்கு இடங்கொடாத் தோஷம் நேரு மெனின் அன்று; அன்னிய ஸ்மிருதிகளுக்கு இடங்கொ டாத் தோஷம் நேர்தலின்.

மூன்றிய அத்தியாயத்திலே சச்சிதானந்தரூபரும், சர்வஜ்ஞத்துவ சர்வ சத்தித்துவாதி சுவரூபலக்ஷணமுடையரும், சகல ஜகத்தைப் பிறப்பிப்ப வரும், அனேத்துக்கும் வேறுனவரும், அனேத்துக்கும் ஆன்மாவானவரும், விரூபாக்ஷத்துவ கிருஷ்ணபிங்களத்துவ நீலகண்டத்துவ முதலிய விசிஷ்ட லீலாமங்கள சுவரூப சுவபாவமுடையரும், பவர் சிவன் சர்வர் மகாதேவர் பரமேசுவரர் முதலிய முக்கிய நாமங்களின் பொருளானவரும், பரம காருணிகரும், பரப்பிரமமுமாகிய சிவபெருமானிடத்திலே சமஸ்த வேதா ந்தவாக்கியங்களும், அவற்றின் அனுகுணமாகிய ஸ்மிருதிகளும் தாற்பரி யத்தினுற் சமன்வயமாதல் கூறப்பட்டது. இந்தச் சமன்வயம் வேதாந்த விருத்தமாகிய ஸ்மிருதி தர்க்காதிகளினுல் விரோதமுறுதலின், அது இந்த அத்தியாயத்திற் பரிகரிக்கப்படுகின்றது.

முதற்கண்ணே சாங்கியஸ்மிருதி விரோதம் பரிகரிக்கப்படுகின்றது. மூன்றிய அத்தியாயத்திலே யாண்டும் கூறப்பட்டவற்றைச் சமன்வயஞ் செய் தலே இந்த அத்தியாய் விஷயம்.

இங்ஙனங் கூறப்பட்ட வைதிகசமன்வயம் சாங்கிய ஸ்மிருதிப்பிரகாரம் ஸ்தாபிக்கப்படல் வேண்டுமா? அன்று? எனச் சந்தேகம் எழுகின்றது.

எங்ஙனம்? உலகத்துக்குக் காரணம் பிரமம் என்று வேதங் கூற, கபில ஸ்மிருதியானது உலகத்துக்குக் காரணம் பிரதானம் என்று கூறு கின்றது. கபிலரோ மகாதபசுடையராதலின், அவர் வசனமும் பிரமா ணமே. சிரேஷ்டமாகிய வேதமோ அனேத்துக்கும் முக்கியப்பிரமாணம்; இது அப்பிரமாணகந்தத்தையும் பொறுக்காது. இவ்விரண்டனுள்ளே எது எதனுற் வாதிக்கப்படும் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாங்கியஸ்மிருதி ஒரே விஷயம் கூறுவதாய் (மற்றொன் றற்கு) அவகாசமுடையதன்றுய்ப் பிரபலமுடையதாக, வேதத்துக்குத் தரு

மத்தில் அவகாசமுடையதற்றித் தர்ப்பலமுடைமையின், அவ்வேதமானது (அவகாசம்பற்றி) ஸ்மிருதிக்கிணங்கச் *சங்கோசஞ் செய்யப்பட்டல் யுக்தமாம் எனின்,

(சித்தாந்தம்) நாம் அங்ஙனம் இல்லை என்போம்; எதனால்? வேத விரோதமில்லாத மனுஸ்மிருதிகளுக்கும் அவகாசதோஷம் நேருமாகலின்.

ஹிரண்யமுஹூ ஔ வஸ்ய க ஜாயாந்ய (தைத். ஆரணி. க0. க உ. உ அ)

"இரண்மியகருப்பர் பிறக்கக் கண்டனர்" என்று பிரத்தியக்ஷமாகப் பிரமத்தையே காரணமாகக் கூறும் சுருதிக்கிணங்க,

ஸவ (வனஸ் ஸ்வயஜாஔள தாஷ்ட வீயஸ்ஸ்ரீவாஷ்ட்ரஜன்ய

(மனு. க. அ)

"ஜலங்களைத்தான் ஆதியிலே சிருஷ்டித்து, வீரியத்தை அதில் எறிந்தார்" என்றற்றொடக்கத்தனவாக (மனு) ஸ்மிருதி கூறலின், இந்த ஸ்மிருதி அநுமேயசுருதிமூலமாகிய சாங்கிய ஸ்மிருதியினும் சிரேஷ்டமுடையதாகப் பிரமாணிகர் கொள்வர். (க)

ஊத்ஸெஷாஸ்ரா நாவமெஸ்ஸீ (உ. க. உ)

(கசு0) பிறத்து ஸ்மிருதிகளில் அது காணப்படாமையின்.

சர்வஜ்ஞர்களாகிய மனுமுதலியோருடைய ஸ்மிருதிகளிலே கபிலர் கொண்ட பிரதானகாரணவாதம் அங்கீகரிக்கப்படாமையின், பிரதானத்தைக் (காரண) மாகக் கூறும் ஸ்மிருதியானது வேதத்தை முதலாகக் கொண்டதன்றெனக் கூறுவது யுக்தம். ஆகலின், சாங்கியஸ்மிருதிப்பிரகாரம் வேதம் கூறிய முடிபைத் திரிவுபடுத்தல் கூடாது. (உ)

## (உ) யோகப்பிரத்தியுக்தியதிகரணம்.

---

வதெந யொஸ்ஸ் வதந்ரஸ்ஸ் (உ. க. ங)

(க்சுக) அதுகொண்டு யோகம் உத்தரமிறுக்கப்பட்டது.

யோகாங்கத்தைப் பிரதிபாதிக்கும் இரண்ணியகருப்பரது ஸ்மிருதியும் பிரதானத்தையே காரணம் என உரைக்கின்றது. பிரதானத்தைக் காரணமாய்க் கூறும் சாங்கிய ஸ்மிருதி விரோதமுறுங்கால், இதற்கிசைய வேதம் திரிவுபடுத்தப்படல் வேண்டாம் எனின், ஆகுக.

அங்ஙனம் எண்டு இரண்மியகருப்பஸ்மிருதிப் பிரகாரம் சுருதி திரிவுபடுத்தப்படல் வேண்டுமா? அன்று? என்பது சந்தேகம்.

---

*திரித்தல்.

(பூருவபக்ஷம்) கூறுதும். எங்ஙனமெனின்? சுவேதாசுவதரோபநிட தத்திற் பிரமசாக்ஷாத்காரத்துக்குக் காரணமாக யோகவித்தை விரிவாக எங்ஙனங் கூறப்பட்டிருக்கின்றதோ, அங்ஙனமே சாங்கியஸ்மிருதியானது அதமேயசுருதி மூலமாயிருப்பினும், பிரத்தியக்ஷசுருதியை மூலமாகக் கொண்டதும், பிரதானத்தைக் காரணமாய்க் கூறுவதுமாகிய இரண்ணிய கருப்ப ஸ்மிருதிப்பிரகாரம் பிரமத்தைக் காரணமாகக்கொண்ட சுருதிபாகம் மாற்றப்படவேண்டியது யுக்தமே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். யோகஸ்மிருதிக்கியையச் சுருதியை மாற்று தல் கூடாது.

॥ யொகஶ்சித்தவ்ருத்தி நிரொதஃ (பாதஞ்சலயோகம். க. உ)

"யோகமாவது சித்தநிவிர்த்தி நிரோதம்" என்று தொடங்கி, வைதி காஷ்டாங்கயோகத்தைப் பிரதிபாதித்தன் மாத்திரத்திற்ருன் அதற்குத் தாற்பரியமாமன்றி, பிரதானத்தைக் காரணமாகக் கூறும் அவைதிகத்தி லன்று. இதிலே (பிரதானத்திலே) தாற்பரியமுளதாயின், சாங்கியஸ்மிருதி போல இதனையும் திரஸ்கரித்தலே நியாயம். ஆகலின், பிரதானத்தைக் காரணமாய்க் கொள்ளும் இரண்ணியகருப்பஸ்மிருதிக்கியையப் பிரமத்தைக் காரணமாகக் கூறுஞ் சுருதி மாற்றப்படமாட்டாதென்பது யுக்தமே. (கூ)

## (கூ) நவிலக்ஷணத்துவாதிகரணம்.

பின்னரும் சாங்கியதர்க்கப்பிரகாரஞ் சுருதி திரிவுபடுத்தப்படமாட் டாதென்பதுபற்றி ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

ந விலக்ஷணத்வாத்ஸ்ய தயாத்வம் ஶப்தாத் (உ. க. ச)

(கசஉ) (பிரமம் பிரபஞ்சத்துக்குக் காரணம்) அன்று; அதற்கு விலக்ஷணமாய் இருத்தலின்; அது அப்படியிருத் தலும் (பிரமத்துக்கு வேருயிருத்தலும்) வேதத்தினுல் அறி யப்படுகின்றது.

சாங்கியஸ்மிருதிப்பிரகாரம் சுருதி எங்ஙனந் திரிவுபடுத்தப்படாதிருக் கின்றதோ, அங்ஙனஞ் சாங்கிய தர்க்கப்பிரகாரம் அது (வேதம்) திரிவு படுத்தற்பாற்ரு? அன்ரு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எப்பிரகாரத்தினுலும் பிரமகாரணவாதம் தர்க்கப் பிர காரந் திரிவுபடுத்தப்படுவதாகும்; எங்ஙனமெனின்? பிரமமானது இத்தப் பிரபஞ்சத்தினின்று முழுதும் வேருனமையின். அது பிரமத்தின் காரிய மாகாது; எங்ஙனம்? வேறுபாடென்பதேல், அது சுருதியினலேயாம்.

ஸ்ருதேஶ்ச (தைத். உ. சு)

"விஞ்ஞானமும் அவிஞ்ஞானமும்" என்றற்றொடக்கத்த சுருதியானது பிரபஞ்சம் விகாராஸ்பதமாய் அவிஞ்ஞான முதலிய புருஷார்த்தரூபமில்லாத தாயுள்ளதெனக் கூறுகின்றது. ஆகலின், சத்தியஞானனந்தரூபமுடைய பிரமத்தினின்று இது வேறுயிருக்கின்றது; அவ்விரண்டும் கோவும் மிஷமும் போலிருப்ப, அவை காரணமும் காரியமுமாக எங்ஙனம் கூறப்படும்? (சு)

"கூஹிரோநி வுவடிஷஸ்ஷு விஷ்ஷாநுதிஜ்யாழ் (உ. க. நி)

(சுசாரு) ஆனல் விசேஷத்தினலும் சேர்க்கையினலும், அது அபிமானியையுற்றுக் கூறுகின்றது.

(பூருவபக்ஷத்துக்கு விரோதமாய ஆக்ஷேபம்) பிரபஞ்சமானது அசேதனமாதல்பற்றி அது சேதனப் பிரமத்தினின்று வேறுமாயின்,

ச0 வ்யுதிவ்ருவீஸ (தைத். சங். நி. நி. உ)

"அவருக்குப் பிருதிவி சொல்லிற்று,"

சுவொ வா சுகாயேத (தைத். பிராம. கூ. க. நி. சநி)

"ஜலங்கள் மெய்யாய் விரும்பிய,"

ஸ்ருணோது ஹாவாணோ விஷ்ஷ் (தைத். சங். க. கூ. சுகூ)

"பூத்தியுள்ள கற்களே! கேளுங்கள்" என்றற்றொடக்கத்தனவாகப் போந்த வாக்கியங்களிலே (ஜடப்பொருள்கள்) சேதனமாகக் கூறப்படுதல் எங்ஙனம்? ஆகலின், இவ்வுலகமனைத்துஞ் சேதனம். அதுகொண்டு பிரமமும் பிரபஞ்சமும் சேதனசேதனரூபத்தில் வேறு பாடின்றும் ஏனச் சங்கித்தல் கூடாதாம் எனின்,

(பூருவபக்ஷியின் உத்தரம்) அங்ஙனங் கூறல் யுக்தமன்று. யாண்டுஞ் சேதனகாரியம் கூறப்படுவது அதின் அபிமானிதேவதா விஷயம் என்றே பரியப்படுகின்றது;

ஹந்தாஹமிமாஸ்ரீவ்ஸ்ரோ தேவதாஸ் (சாந். சு. கூ. உ)

"ஆ! நான் மூன்று தேவதைகளையும்" என்றதிலே தேவதாசப்தவிசேஷ்யனிர்தேசமும்,

வாகுதாஜுஹ்வதஸ்ய ஸ்ரவ ஆவிரஸ்து (ஐத. உ. சி)

"அக்கினியானது வாக்காகி முகத்திற் பிரவேசித்தது" என்றற்றொடக்கத்தவற்றுள், அசேதனம் பொருளோடு அபிமானிதேவதையும் உடன் நிகழ்வதாதலாலும்; ஆகலின், அசேதனத்துவமுதலியவற்றினலே உலகுக்கு பிரமத்தைக் விலக்கணம். இங்ஙனம் உலகத்தைக் காரியமாதலும் பிரமத்தைக் காரணமாதலும் யுக்தியுற்புத்தி ஒழிக்கற்பாற்றே. (கி)

ஹ்ஸ்ஸுதெ தா (உ. க. ஈ)

(கசசு) ஆனல் அது காணப்படுகின்றது.

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிரமமும் பிரபஞ்சமும் விலக்ஷண மாயினும் அவற்றுக்குக் காரியகாரணவியல்பு எய்துகின்றது. அசேதன மாகிய கோமயத்தினின்று சேதனமாகிய விருச்சிகம் பிறக்கக் காண்டலா னும், சேதனனுகிய புருஷனிலிருந்து அசேதனமாகிய உரோம முதலியன வளரக் காண்டலானுமாம். ஆகலின், சுருதிசமன்வயமானது சுஷ்கதர்க்கத் தினேற் பாதிக்கப்படமாட்டாதென்பது துணிபு. (ஊ)

பின்னரும் ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றூர்.

கூஸழிதி வெஹ வ்யதிஷெயதோ நகூவாஸ (உ. க. எ)

(கசஎ) (காரியம்) அசத்து எனின் அன்று; மறுத்தல் மாத்திரமுண்மையின்.

(ஆக்ஷேபம்) இங்ஙனம் காரியகாரணம் இரண்டும் ஒன்றுக்கொன்று வேருதலின், காரணத்திற் காரியம் இல்லீயே; அங்ஙனம் சுருதியும்

கூஸஹா ஊஉமு கூவஸீஸ (தைத். உ. எ)

"அசத்துத்தானே முதற்கண் இருந்தது" என்று கூறுகின்றதெனின்,

(உத்தரம்) அங்ஙனங் கூறுவது அடாது; காரணமும் காரியமும் ஒரே இலக்ஷணமுடையவாகவே இருக்கவேண்டுமென்பதை மறுத்து அச் சுருதி கூறினமையின்; அதுகொண்டு காரியமும் காரணமுமாகிய பிர பஞ்சமும் பிரமமும் ஒரே வஸ்து என்பதினின்றிழுக்காதே. (ஏ)

(ச) அபீதியதிகரணம்.

---

கூவீதெள கதஉபூ்யவஸ்தாஹீவஸ்தோஜவஸ்து (உ. க. அ)

(கசஅ) பிரளயத்தில் அங்ஙனமிருத்தல் (பிரமம் ஜகத் தைப் போலிருத்தல்) நேர்தலின், பொருத்தம் அன்று.

சற்காரியவாதத்தினலே காரிய காரணமாகிய உலகமும் பிரமமும் ஒரே வஸ்துவாமாயின், வேதசமன்வயம் தர்க்கவாயிலாக ஒழிக்கப்படுவதா? அன்ரு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது தவிர்க்கப்படல் வேண்டும்; எங்ஙனம்? உலகு மும் பிரமமும் ஒரே வஸ்து என்று கூறப்பட்டதலால். அங்ஙனமாயின், பிரபஞ்சத்தைப்போல, பிரமமும் விகார அஜ்ஞானமுதலிய தோஷங்களுக் கிலக்காதாய் முற்றுகின்றது. ஆகலின், வேதாந்த வாக்கியங்களெல்லாவும்

பொருந்தாதாகின்றன. அதுபற்றி இந்த வேதாந்த வாக்கியப்பொருள் நியாயநெறியினல் வாதிக்கப்படுவதாம். (அ)

ந தூ ஏஷாஜுஹுவாஸ (உ. க. கூ)

(தசள) ஆனல் அன்று; (சமான) திருஷ்டாந்தமுண்மையான்.

"அன்று" (ந) என்றது பூருவபக்ஷம் ஒழிக்கப்படல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

யஷ்யா தூ ஸரீரம் (மத்தியந்தினசாகை)
யஷ்யாவ்யக்தம் ஸரீரம் |

"எவர்க்கு ஆன்மாச் சரீரம்; எவர்க்கு அவ்வியக்தம் சரீரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளானும்,

விஜ்ஞம் தெவதெவஸ்ய விஜ்ஞே தஜ்ஜாயதே |
வாகேஷ்டம் ந ஜாநஞ்சி வஜ்ஜம் வாஜநெளஜுவாக||

(வாயு. உத். சு: க)

"சரமும் அசரமுமாகிய இந்த உலகம் தேவாதிதேவரது சரீரம்; பாசமிகுதியினற் பசுக்கள் இப்பொருளை அறியா" என்றற்றொடக்கத்த புராணவாக்கியத்தினலும், சித்தும் அசித்துமாகிய சேதனத்தையும் அசேதனத்தையும் சரீரமாகவுடைய பரப்பிரமசிவனுர் காரியமாயும் காரணமாயும் நிலையுறினும், குணதோஷங்களைப் பருக்குமிடத்துத் திருஷ்டாந்தமுண்மையின் வேதாந்த வாக்கியமனைத்துஞ் சாமரசியமாகப் பொருத்தமுறுவனவாயின. எங்ஙனமெனின்? சரீரத்தோடு கூடிய மனிதர் முதலாயினோரது ஆன்மாவுக்குப் பாலிய, யௌவன, விருத்தாவஸ்தைகள் நிகழினும், பாலத்துவ முதலியன சரீரத்துக்குமாத்திரமே; இன்பமுதலியன ஆன்மாவுக்கே; அங்ஙனம் ஈண்டும் சரீரமாகிய சேதனசேதனப் பொருள்களிலே நிகழும் அஞ்ஞானம் விகார முதலிய தீமைகள் சரீரமாய் அமைந்த சேதனசேதனங்களுக்கே உரியவாம். அவயவமின்மை, அவிகாரித்துவம், சர்வஜ்ஞத்துவம், சத்தியசங்கற்பத்துவம் என்னுங் குணங்கள் ஆன்மாவாயுள்ள சிவபெருமானுக்கேயாம். இங்ஙனம் திருஷ்டாந்தவுண்மையாற் பிரமத்தையுற்றுக் கூறிய சுருதியிற் பொருத்தமின்மை இன்றே. (அ)

வ்யபதேஶாச்ச (உ. க. கo)

(கசஅ) தன்து பதேசத்தின் தோஷத்தினலும்.

ஆன்மாவை மாத்திரம் அவலம்பிப்பின் தன்பக்கத்திற் பிரதானவாதினலே நிர்விகாரபுருஷம் சங்கிதிப்புறப்படுத்தப் பிரகிருதி பிரவர்த்திக்கும்

கால், அன்னியோன்னிய தரும அத்தியாசம் கூறலியலாது; ஒன்றில் மற்றொன்றின் தர்மத்தை நிஷேப்பதாகிய அத்தியாசம் நிர்விகாரபுருஷனுக்கு எய்தாது. அசேதனமாகிய பிரகிருதிக்கும் நிஷேத்தலாகிய அத்தியாசம் எய்தாதே. ஆகலின், பிரதானகாரணவாதமே தர்க்கத்தினற் றவிர்க்கப் படுவதாம். (கo)

கசுஸ்ரா வ்ரதிஷ்டாநாஸ (உ. க. கக)

(கசசூ) தர்க்கம் ஸ்தாபிக்கப்படாமையின்.

தர்க்கம் ஸ்தாபிக்கப்படாமையானும், பிரதானகாரணவாதம் அதனைப் பிரமாணமாகக் கொண்டமையானும், ஆண்டுப் பிரதிதர்க்கம் நேர்தலானும் பிரதானவாதம் வாதிக்கப்படுவதன்றிப் பிரமகாரணவாதம் வாதிக்கப்படுவதன்று. (கக)

கூந்யாந்யேதி செதெவவேந்நிசேஷாகூ வ்ரஸஂஹ:।

(உ. க. கஉ)

(கஅo) வேறு பிரகாரமாய் அனுமானிக்கலாம் எனின், பின்னரும் மீட்சியின்மை நேர்கின்றது.

பிரதிதர்க்கத்தினற் றவிர்க்கப்படுவது கோவண்ணம் வேறு பிரகாரமாய்ப் பிரதானத்தை அனுமானிக்கலாம் என்னும் வாதமும் யுக்தமன்று; ஆண்டுப் பிரதிதர்க்கத்தின் கலகம் நேர்தல்பற்றி, நிலையின்மை என்னும் குற்றத்தினின்று நீங்காமையே நேர்கின்றது. அதுபற்றிச் சுஷ்கதர்க்கத்தை மூலமாய்க்கொண்ட பிரதானகாரணவாதம் ஒழிக்கப்படுமேயன்றிப் பிரபல சுருதிப்பிரமாணத்தினற் சித்தித்த பிரமகாரணவாதம் ஒழிக்கப்படுவதன்றென்பது யுக்தம். (கஉ)

(நி) சிஷ்டாபரிக்ரஹாதிகரணம்.

---

வதெந ஸிஷ்டாவரிக்ருஹா சுவிவ்ருவ்ருதாः (உ. க. கஊ)

(கஅக) இதனல் (சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்படாத) ஏனை மதக்கோட்பாடுகளும் (தவிர்க்கப்பட்டன என்று) விளக்கப்பட்டன.

தர்க்கத்தை மூலமாய்க்கொண்ட சாங்கிய தரிசனம் நிலையின்மை முதலிய பற்றி எவ்வனம் ஒழிக்கப்பட்டதோ, அவ்வனம் அதேகாரணத்தினற் கணாதர், அக்ஷபாதர் முதலாயினோர் பிரபஞ்சங்களும் ஒழிக்கற்பாலனவென்னக் கோட்பற்று. அஃதாவது கணாதர் முதலியோர் மதத்திற் சித்தித்த பரமாணுகாரணவாதமும் பரிசோதிக்கப்பட்டதென்பது (நின்)

## (சு) போக்திராபத்தியதிகரணம்.

ஹொஜ்ரூவதெஜ்ரூவிஹாமுஹெஜ்ஜூவொகவஜ (உ. க. கச)

(கநிஉ) அவர் போக்தா ஆகவேண்டுதலின் வேற்றுமை இல்லையாலோ எனின், உலகத்திலே போல (வேற்றுமை) ஆகுக.

முன்னரே சிதசித்பிரபஞ்ச விசிஷ்டான்மாவாகிய சிவபெருமான் தாமே அத்துவிதியராய்க் காரணமும் காரியமும் ஆவர் என்று விசிஷ்டசிவாத்துவைதங் கூறப்பட்டது. அந்த வேத சமன்வயசித்தமாகிய யுக்தி தவிர்க்கப்படுவதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிதசித்பிரபஞ்சத்தைச் சிவபெருமான் சரீரமாகவுடையர் என்று அங்கீகரிப்பின், அப்போது சரீரமுடையர் என்பது இவர்க்குச் சித்தித்தது. அங்ஙனமே, ஆன்மாப்போல அவர் சரீரமுடைமையாற் சரீரசம்பந்தமாகிய சுகதுக்கமுடையராவர்; ஆகலின், சம்சாரியாகிய ஆன்மாவுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடின்று. இவன் ஆன்மா இவர் சிவன் என்று பிரித்துக் கூற இயலாது. சிவபெருமான் சுகதுக்கிஷ்டாபிராப்தியின்மை என்னும் வாதத்திலே அவர் தோஷமின்மையும் நிலைபெறுகின்றது என்று கூறுவது அடாதென்று பூருவபக்ஷி கொள்கின்றான் என,

(சித்தாந்தம்) ஆண்டு விரோதமில்லை. உலகத்திலே சரீரமுடையரேனும் அரசகுலவன் பிறன் ஒருவனுக்கு வசப்படாதவனாய், தனது ஆணைக்கு அடங்காமை காரணமாக நேரும் அநிஷ்டத்துக்கு ஆளாகாமை பற்றி அவனது போக்திருத்துவம் பிறரது போன்றிராமை போல, சிவபெருமான் நிஷ்களங்க சமஸ்த மங்கலகராராயிருத்தலின் அவர் ஆன்மாவினின்று வேறுபடுவர். பராதீனராயிருந்தாலன்றிச் சரீரவுண்மைபற்றித் தோஷத்துக்காளாகார்.

ஜூஜ்ஜூள ஹாவஜாவீஸாநீஸொள (சுவே. க. கூ)

"அறிஞனும் அறிவிலனுமாம் இருவரும் பிறவாத ஈசனும் அநீசனும்" என, சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்கும் சுவாதந்திரியமும் அசுவாதந்திரியமும் கூறுவது தாமே சித்தித்ததே. ஆகலின், சுவதந்திராகிய சிவபெருமானும் அசுவாதந்திரனுகிய ஆன்மாவும் சமமாகச் சரீரமுடையரேனும் வேற்றுமையொன்றில்லை. ஆகலின், விசிஷ்டாத்துவைதத்துக்கு ஹானி இல்லை. (கச)

## (எ) ஆரம்பணதிகரணம்.

சுவாதந்திரியம் அசுவாதந்திரிய முதலிய விருத்த குணங்கள் இருத்தற்பற்றி ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் வேற்றுமையிருப்பினும், கனி

காரணராகிய அவ்விருவர்க்கும் அநந்தியத்துவமும் வேறுபாடின்மையும் சித்திக்கின்றனவேயென்று (சூத்திரகாரர்) கூறுகின்றார்.

தத நநுகூபாரஅணஸஹாதிஹ்ஃ (உ. க. கரி)

(கரிரு) அவ்விருவரும் அனன்னியர், ஆரம்பணமுதலிய சப்தத்தினால்.

ஈண்டுச் சுருதிகள் ஒரேபிரகாரமாகக் கூறும் காரிய காரணமாகிய பிரபஞ்சமும் பிரமமும் வேறில்லை எனக் கோடல் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

சேதனத்துவ அசேதனத்துவரூப விருத்தகுணமுடைமைபற்றி ஒன்றுக்கொன்று விலக்ஷணமாதலினாற்றான் இச்சந்தேகம் உளதாயிற்று.

(பூருவபக்ஷம்) அவ்விரண்டும் அநந்தியமாதல் எங்ஙனம் கூறற்பாற்று? சிவபெருமான் சர்வஜ்ஞதாதி குணமுடைமையானும் ஆன்மா அஜ்ஞான முடைய போக்தாவாயிருத்தலானும், அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் வேற்றுமையுடையர் என மேலதிகரணத்திற் காட்டப்பட்டது. சித்தும் அசித்துமாகிய வஸ்துக்கள் இரண்டுக்கும் மிருதியும் வேறுபாடிருத்தலின், அவ்விரண்டும் அனன்னியத்துவம் என்னும் கதைதூரத்தில் ஒளிக்கற்பாற்றே. காரியகாரணமாயிருத்தல் வேற்றுமையின்மைக்குச் சாதகமாகாது; கோமயம் விருச்சிக முதலிய காரணகாரியமாயிருப்பினும் வேறுகக் காணப்படலான். கடம் மட்பிண்டமுதலியவைகளினும் அர்த்தம் கிரியை முதலிய வியவகாரங்களில் வேற்றுமைபற்றி அபேதமில்லை. இன்றேல், காரியமும் காரணமும் அத்தியந்த அபேதமாகுமிடத்துப் பிரபஞ்சமும் பிரமமும் ஒன்றுதலின், யாண்டும் கர்த்தா கர்மம் கிரியை முதலிய வியவகாரம் இல்லையாகும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். காரியமாகிய பிரபஞ்சம் காரணமாகிய பிரமத்தினின்று வேறின்றே; அது எங்ஙனம் அறியப்படுகின்றது? எனின்,

வாசாரஅணம் விகாரோ நாமதெயம் ம்ருத்திகெதிவ ஸத்யம் ।
(சாந். சு. க. க)

"வாசாரம்பணமானது விகார நாமதேயம்; மிருத்திகை என்பதுதான் உண்மை"

ஸதெவ ஸொம்யெதமக்ர ஆஸீதெகமெவாத்விதீயம் (சாந். சு. உ. க)

"சத்துத்தானே, முதல்வனே, முதற்கண் இருந்தது, இது ஏகமாயே இரண்டாவதற்றதாய் இருந்தது"

ததெக்ஷத ஆஹ்ரஸ்யாம் ப்ரஜாயெய (சாந். சு. உ. ங)

"அது தான் அநேகமாய் ஆவேன் என்று சங்கற்பித்தது"

வெததா தூஷிo வவ-ஹுதஹூயo வ சூதா தகூவீவி|

(சாந். சு. அ. எ)

"இவையெல்லாம் அவரையே ஆன்மாவாகக் கொண்டன; அது சத்தியம்; அது (பரம) ஆன்மா; சுவேதகேதுவே, அது நீயாகின்றனை"

விஷ்வo ஹீதo ஹுவ நo ஜித்யoவைஹுயா ஜாதo ஜாயோநஹு யதஹவெ-ரிஹைஷாஹூo (தைத். ஆரணி. கo. உச. சஉ)

"அநேகமாக ஆனவும் ஆகப்போகின்றனவுமாகிய எல்லா உலகமும், விசித்திர புவனமுமாம் இவை யெல்லாம் உருத்திரர்" என்னுஞ் சுருதிகளினுற் பெறப்படுகின்றது. (கஞ்)

காரியம் காரணமாயிருத்தல் வேறுபாடின்மைக்குச் சாதகமாகா தெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஹாவே வொவஷ்டோ (உ. க. ககூ)

(கஞ்சு) (காரியம்) இருக்குமிடத்தும் (காரணம்) புலப் படுதலான்.

கடமுதலிய காரியமாக இருக்குமிடத்தும், அதே மட்பொருள் கட மென்றறியப்படுகின்றது. ஆகலின், காரணத்தினின்றும் காரியம் அநன்னியமே.

வாசாரoஹணo விகாரோ நாமதெயய ஸ்ருத்திகெதுவ ஸதூழ்|

(சாந். சு. க. க)

"வாசாரம்பணம் விகாரமும் நாமதேயமுமாம்; மிருத்திகையென்பதுதான் சத்தியம்" என்னுஞ் சுருதியினுலுங் கூறப்படுகின்றது. அஃதாவது, விகாரமும் நாமதேயமும் ஒருபொருளையுற்றுப் பேசவும், அதன் கிரியாரூபவியவகாரஞ் செய்யவும் வாய்ந்தனவாகின்றன. மண் திரவியமே; கடமுதலிய ரூபமாகிக் கடமுதலிய பெயரைப் பெறும்போது, அது ஓர் காரியத்துக்கு உதவவும், அவ்வருவத்தையுற்றுப் பேசவும் உதவுகின்றது. வாஸ்தவத்திற் கடமுதலியன மண் என்பதே பிராமாணிக சத்தியம்; மண் ஒழிந்து கடம் காணப்படாமையின். இன்றேல் வாசாரம்பணம் விகாரம்; விகாரமாகிய கடம். வாசாரம்பணம். இது கடமென்பது வாசாரம்பவிஷயமாத்திரமாயுள்ளது. மண் திரவியந்தான்; வியவகாரசித்தியின் பொருட்டுப் பிறக்கும் மற்றோர் அவஸ்தை. ஆலை மண்ணைத்தவிரவேறுபொருளில்லை. (கடத்திலே) மண் என்று கூறப்படும் நாமதேயமே சத்தியம். கடமுதலியவற்றை மண் ணெனக்கொண்டதான், ஆண்டும் அனைத்தும் மட்குடமுதலிய பெயரை

புடைத்தாதல் சத்தியம். (மண்) உண்மையான பொருளாயிருத்தலிற்சத்தியம்; ஆயின் வேறொரு பொருளெனக்கொண்டன்று, ஏனெனில் தூம் மண் எனவே கூறத்தகும். அதுபற்றிக் காரியம் காரணத்தினின்று வேற்றுமையிலது. மண்ணும் கடமும் ஒரேபொருளாயினும் தாரியாதி வியவகாரபேதம் அவஸ்தாபேதத்தினால் நேர்கின்றதே. ஆகலின், மண்ணும் கடமும் போலப் *பிரமமும் பிரபஞ்சமும் வியாபகவியாப்பியபாவத்தினால் அநன்னியம் என்க.

ஸத்ஜ்ஞாதி ச வ்யபிவ்ருத்தம் ஸிவதத்வஸ்ஸ்ஹ்ரூவ்ர்
தெதெநகெந கு கதுர்வ்ருத்தம் ஸ்ரீடா கு்ஹரிகு யயர்॥

(வாயு. பூ. வி. கூ)

"சத்திமுதற் சிருதிவியந்தம் சிவதத்துவத்தினின்றும் உற்பத்தியாயிற்றும்பமுதலிய மண்ணினால் வியாபிக்கப்பட்டாற் போல, அவர் ஒருவரால் (சிவபெருமானால்) அது வியாபிக்கப்பட்டது" எனப் புராணமும் கூறுகின்றது.

(ஆக்ஷேபம்) இக்கக் கடம் மண் என்றவிடத்து, மண்ணின்வியாத்தி கடத்திலே புலப்படுமாறு போல, இந்தப் பிரபஞ்சம் பிரமமென்றவிடத்துப் பிரமத்தின் வியாத்திகாணப்படவில்லையே எனின்,

(உத்தரம்) "இருக்கும் கடம்; இருக்கும் படம்" என யாண்டும் சத்ரூபமாகிய பிரமத்தின் வியாபகங்காணப்படுகின்றது, உலகமானது சத்சித்ரூபமான சிவபெருமானால் வியாபிக்கப்படாதவிடத்து, இருத்தல் அறிதல்கள் அற்று, இருக்கிறதென்பதும் தோற்றுகிறதென்பதும் எங்ஙனம் காணப்படும்? வஸ்துவின்மையே நேரும்; ஆகலின் மட்கடமுதலியபோலக் காரணமாகிய சிவபிரானுற் காரியமாகிய பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டு அவரோடு வேறிலதாயிருக்கின்றதெனச் சித்தித்தது. (கூ)

வஹ்வாஹ்வாவாஹ்ய (உ. க. கள)

(கநிநி) பின்னுள்ளது (முன்) உளதாதலினாலும்.

காரியம் காரணத்தில் உளதாதலின், காரியம் காரணத்தினின்று அநன்னியம். கட சராவமுதலிய முன்னரோதானே மண்ணியிருப்பதுமின், கடமுதலியன மண் என அறியப்படுகின்றதன்றே. (தள)

வஸஉவ்வெஹாஜெதி வெஹ யுஸ்ஹாதெரெண வாகுஸ்ரொஷ்ர
டுஸ்ஜெஸ்ஸ்ஹாஹ்ரவாஹ (உ. க. கஅ)

(தநிசு) அசத்தெனக் கூறப்படலாலெனின், அன்று; வாக்கிய சேடத்தினாலும், யுக்தியினாலும் வேறு வாக்கியங்க

*வாவாவிஹாமெநஸ்ஹிஜ வஸ்திஷ்ட விஹாமஹி

(சர்வஞ்ஞாநிருத்தம்)

விஞ்ஞாங் காட்டப்பட்டவாறு, அது மற்றோர் தருமத்தோடுற் றமையாலாம்.

(ஆக்ஷேபம்)

உடிo வா கூறை ஜென்வ கிஞ்நாஸீத்

(தைத். பிரா. உ. உ. கூ. ஓo)

"ஈதொன்றும் முதற்கண்ணே இருந்திலது" என்னுஞ் சுருதி காரியம் காரணத்தில் முதற்கண் இருந்திலது என்று கூறலின், காரியம் காரணத்தில் இன்றுமெனின்,

(உத்தரம்) அன்று; பிரபஞ்சமானது ஸ்தூலத்துக்கு மாறுகிய சூக்கும ரூப தருமத்தோடிசைந்தமையினால், "அசத்" என்று கூறப்பட்டதன்றி, இல்லை என்றமையான் அன்று. எதனால்?

தடிவஷெவ வஸ்நை நாzகூறை தவ்யாழி (தைத். பிரா. உ. உ. கூ. ஓo)

"அசத்தாயிருந்தபோதே நான் ஆகுக என்று சங்கற்பித்தது" என்னும் வாக்கியசேஷத்தினால், சங்கற்பமும் சத்பொருளுக்கேதான் ஆகும். அவ்வனமே அவஸ்தாரூபமாக இருந்தமைபற்றி அசதெனப்பட்டதென்று கொள்ளும் யுக்தியும் பெறப்படுகின்றது. ஒன்றுக்கொன்று மாறுபடும் இயல்புடைய பிண்டத்துவ, கடத்துவ, கபாலத்துவரூபமாயிருக்கும் தர்மங்களுடன் முன்னர்க் கடம் இருந்திலது, இப்போதுள்ளது, பிற்போதிராது என்றவிடத்து, எக்காலத்துமுள்ள மண் திரவியத்தை அசத்துமுதலியவாகக் கூறுமிடத்து, அதற்கு வேறுக மற்றோர் அபாவம் இல்லை என்பதாம்; அஃதாவது, அசத்தென்னும் நாமம் பற்றிய மற்றோர் அவஸ்தை (தருமம்) கற்பிக்கற்பாற்றென்பது; இதுபற்றியே,

கஹெஷo கஹூ்வூாகூ்கூாவஸீத்தஹாzஷ்ஷவிர்யூாயிஷ்ஷ வூாஜிஷ்யமெக (பிரு. கூ. ச. எ)

"இது அப்போது பிரிவற்றிருந்தது; பின்னர் நாமரூபமாக விரிவுறப்படுகின்றது" என்றற்றொடக்கத்தனவாக அபிப்பிராயம்பற்றிய பிற சுருதிகளும் உள்ளன. முன்னர்த் தமக்கு அபின்னமாய நாமரூபவிபாகத்துக்கு அர்ஹமாகிய சூக்கும சிதசித்ரூப பராசத்தியை அடக்கிய சிவபிராணி தனியே இருந்தனர். பின்னர் முந்திய நிலைமைக்கு மாறுக ஸ்தூலமாகிய நாமரூபவிபாகத்துக்கு அர்ஹமாய்ச் சிதசித்ரூபமாகிய அப்பெற்றியதாகிய சூக்குமத்தியைப் புறத்தே விரிக்கின்றனர். அப்பொழுது சத்தியையுடைய சிவபிராணரது சங்கோச அவஸ்தை பிரளயம்; விகாச அவஸ்தை சிருட்டி. இதுபற்றியே,

ஹிதாவெதவ ஹி வெவொதேஸ்ஷிதிஸ்ஸாவஸ்தாஸ்ஸ்ருஷ்டி

யொநீவ நிரஷவாஷா நதேஷ-ஜாகம் வுகாமுயெஷ॥

"உபாதானமொன்றுமின்றி யோகி போலச் சிதான்மாவாகிய தேவர் இச் சாவசத்திலுலே தமது அகத்துள்ளதைப் புறத்து வெளிப்படுத்துகின்றனர்" என்று கூறும் ஆப்தவசனமும் உளது. அஃதாவது, தமக்கு வேறுக ஓர் உபாதானம் வேண்டாது தாமே உபாதானமாகின்றனர் என்பதாம். ஆகலின், பரமகாரணராகிய பரப்பிரமசிவபிரானினின்று வேறாகிய உலகம் காரியமே. (கஅ)

மற்றோர் நிதர்சனங் கூறப்படுகின்றது.

வடவஷ (உ. க. ககூ)

(கநிஎ) *படம் போலவும்.

சருக்கும் போது சுக்குமரூபமாயிருந்த படமானது விரிக்கும் போது அவ்வாறு மகாபடமாய்க் குடிசைரூபமாகிய காரியமாய் ஆகின்றவாறு போல, பிரமம் சங்குசிதாவஸ்தையிற் காரணமாய், பிரசாரிதாவஸ்தையிற் காரியமுமாகின்றது. (ககூ)

யயா ஷ வுராணாதீ: (உ. க. உ0)

(கநிஅ) பிராணாதி போலவும்.

வாயு ஒன்றே கிரியாபேதத்தினும் பிராணன் முதலிய பல பேதம் அடைதல் போல, பிரமம் ஒன்றே சத்தி வியாபாரபேதத்தினும் †சதாசிவ முதலிய ரூபபேதத்தையும் அடைகின்றது. ஆகலின், காரணமாகிய பிரமத்தினின்றும் அனன்னியமாயுள்ளது காரியமாகிய உலகம் எனல் யுக்தம். (உ0)

மேலே கூறப்பட்ட அர்த்தத்தைச் சூத்திரகாரர் ஆக்ஷேபித்துச் சமாதானங் கூறுகின்றனர்.

உதாவுவடெஸாஜீதாகாஸணாதி தொஷ வுஸஜீ: (உ. க. உக)

(கநிக) மற்றொன்றோடு இருப்பதாகக் கூறப்பட்டான், இதத்தைச் செய்யாமை முதலிய தோஷம் எய்துகின்றது.

(ஆக்ஷேபம்)

கதவேலி (சாந். கூ. அ. எ)

"அது யோகின்றனை"

---

*இப்பிரமசூத்திர நீலகண்டபாஷ்யத்திலுள்ள 'படம்' குடிலம் உவமையை எடுத்த ஸ்ரீஅருணகிரிவெசாரியர் செய்யார் க. உ-ல் "புகழ்மிகும் விருத்தியாகும் படம் குடிலாரூற் போல" என்றார்.

†இச்சதாசிவர் சாதாக்கிய தத்துவத்தினராமன்றி, வேதத்துவத்தின்பாற் பட்ட பரப்பிரமசிவசக்தியை மகாதேசுசிவன்றென்க.

ஈயரோ தா ஸ்வஹ் (பிரு. ச. இ. கஈ)

"இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்தவற்றிற் காரியமாகிய ஆன்மா காரணமாகிய பிரமமென்று கூறப்படலான், அவ்விரண்டும் வேறில்லை எனக் கூறப்பட்டது. இங்ஙனமாகுங்கால், சர்வஞ்ஞரும் வியாபகருமாகிய சிவபெருமான் உலகத்தைப் படையாமை அவர்க்கு ஈன்மையாகவும், அதனைப் படைத்தல் அவர்க்குத் தீங்காகவுமன்றே நேர்கின்றது. ஆகலின், சர்வஞ்ஞரும் சத்தியசங்கற்பருமாகிய சிவபெருமான் தம்மினின்று வேறுபடாத ஆன்மாவினது தாபத்தைத் தம்முடையதென்று அறிந்தும் சம்சாரநிமித்தமாயுந் தீதாயுமுள்ள சிருட்டியை எங்ஙனம் முயன்று இதமாகிய சிருட்டியாமையை விடுத்தனர்? அதுகொண்டு ஆன்மா அநன்னியமாயிருக்கும்போது, தமக்கு இதமாயுள்ளதைச் செய்யாமையானும் அகிதமாயதைச் செய்வதானும். அறிவு சூன்னியாதன் முதலிய தோஷஞ் சிவபெருமானுக்கு எய்துகின்றன; அதுபற்றி, காரியகாரணராம் ஆன்மாவும் சிவபெருமானும் அநன்னியமாதல் அயுக்தமே எனின், (உக)

(உத்தரம்) யுக்தம் எனக் கூறப்படுகின்றது.

ஈயிகூஹை லெஹிஜெஹ்ரஸ (உ. க. உஉ)

(ககூ0) ஆயின் (காரணம்) சிரேட்டம்; பேதங் கூறப்படலான்.

காரியமும் காரணமும் அநன்னியமாயினும்,

விஸ்ஷயிகொ ரூஷ்ஜெரா ஊஹஷிஸ்ஃ (தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"உலகங்களுக்கெல்லாஞ் சிரேட்டர் மகர்ஷியாகிய உருத்திரர்" என்று சுருதி கூறுதலான், ஈண்டுக் காரியமாகிய சிதசித்பிரபஞ்சத்தினின்று காரணஞ் சிரேட்டமென்று அறியப்படுகின்றது. அங்ஙனம் பின்னர்ப் போதருஞ் சுருதிகளினுலே, பேதநிர்த்தேசம் என்று சூத்திரம் கூறினமையின், ஆன்மாவும் சிவபெருமானும் வேறென்று காட்டப்படுகின்றனர்.

விஜ்ஞா ஸவிஜ்ஞை ரஸஸ்ய யஷ்ட ஹொஷ்ஸ்ரஸ்ஃ (சுவே. இ. க)

(க) "வித்தையையும் (ஆன்மாவையும்) அவித்தையையும் (அசேதனத்தையும்) ஆளும் ஈசுரர் வேறு"

கூரோ தா நா வீஸதெ தெவ வஸகஃ (சுவே. க. க0)

(உ) "(பிரதானமாகிய) கூரத்தையும் ஆன்மாவையும் தேவர் ஒருவர் ஆளுகின்றனர்"

வ்யூரோ தா நர. வெஸ்ரிதாரஸ்ய ஈகூர (சுவே. க. கூ)

(ங) "ஆன்மாவையுஞ் சேலுத்துபவரையும் வேறு என் னினைத்து

। ஓஷு॰உணா॰ஹ ஸ்யு॰ஜா ஸஹாயா (சுவே. ச. சு)

(ச) "பிரியா நண்பினேடு இரு அழகிய பக்ஷிகள் (ஆன்மா பரமான் மாக்கள்)"

ஸ்வெஷ்ணீ ஸெதி தஸ்யை வாஹாவராஹ (மைத். சு. உஉ)

(டி) "பரமும் (பரமான்மாவும்) அபரமும் (ஆன்மாவுமாகிய) இரு பிரமங்களும் அறியற்பாலன"

ஜா zஜ்ஞ ஸாவஜாவீஸா நீஸ்ஸ (சுவே. க. சு)

(சு) "பிறவாதவராகிய அறிஞனும் அஞ்ஞனுமாம் இருவரும் (முறை யே) ஈசரும் (சிவபிரானும்) அநீசனுமாம் (ஆன்மாவுமாம்)"

ஹிகஸ்ய ஹிதஸ்ய நா ஸ்ஹ்ஹ தஸ்ஹ்ஹ நா நாஸ்தி (கட. தி. கஉ)

(எ) "அவர் நித்தியப்பொருள்களுள்ளே நித்தியரும், சேதனப்பொருள் களுள்ளே சேதனரும்"

கஹஸ் வ்விஷ்ஸ்ரஸ்தா ஜநா நாஸ்தி (தைத். ஆரணி. கூ. கக. உக)

(அ) "அவர் (பரமான்மா) ஜனங்களுள்ளே (ஆன்மாக்களுள்ளே) பிரவேசித்து, அவைகளை ஆளுபவராயினர்"

ஸோயஹ்ஹ வ்ரகூஜ்ஞ விஜ்ஞ்ரஸ்யாயி நஹ்ஹ ஸ்ஹைஸ்ஸ்ரஸ்தி।

(சுவே. ச. கo)

ஹவா நாஸ்மி வ்யஜித விஸ்ஸ்ரஸ்தஸ்ஸ்ஸ்ரஷ்டாரமபி மாயயா வந்திர॰ஷ்ஸ்।

(சுவே. ச. சு)

(கூ) "மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசர் என்றும் அறிக;" "இதினின்று மாயியானவர் இந்த விசுவத்தைச் சிருட்டிக் கின்றனர்; அதிலே மற்றது (ஆன்மா) மாயையாற் கட்டுண்டது"

ஜ॰ஷ்ஷ o யஷ்ஷ வஸ்ஸ்ரு-ஸ்ரு நஸ்ஸீஸ்ஸ்ரு (சுவே. ச. எ)

(கo) "அன்னியமாகிய இன்பமுடைய ஈசரை ஆன்மா காணுங்கால்"

வ்ரயாணாந் க்ஷேத்ரஜ்ஞவதிர॰॰ணைஸ்ஸ் (சுவே. சு. கசு).

(கக)" "பிரதானம் ஆன்மா என்னும் இரண்டிக்கும் பதியாகிய குணங் களையுடைய ஈசர்"

யெஷ்ஷாஸீஸ் வஸ்ஸ்ரவ்ஸீ வஸ்ஸ்ரீ நாஸ்தி (தைத். சங். கூ. க. ச. கூ)

(கஉ) *"இந்தப் பசுக்களைப் பசுக்களுக்கு (ஆன்மாக்களுக்கு) பதி யாயினர் ஆளுகின்றார்" என்றற்றொடக்கத்த அனந்த சுருதிகளாற் சிவபெரு

* இவ்வனம் உதகரிக்கப்பட்ட பன்னிரு சுருதிகளும் இவைபோன்ற வேறு அனேக சுருதிகளும் ஆன்மாவும் (பசுவும்) பரமான்மாவும் (பதியும்) வெவேறென்

மான் என்று மற்றோர் காமம் பூண்ட பிரமமே விசுவத்திற்கு (பகுபாசங் களுக்கு) அதிகம் (சிரேட்டம்).

(ஆக்ஷேபம்) "சதகன்னியத்துவம்" என்னும் (உ. க. கஇ-ஆம்) சூத்திரங் கொண்டு அபேதம் பிரதிபாதிக்கப்படாலானும், "அதிகம்" என்னும் (உ. க. உ உ-ஆம்) சூத்திரத்தினாலே பேதம் பிரதிபாதிக்கப்படாலானும், (சேதன அசேதனப்) பிரபஞ்சம் பிரமம் என்பவற்றுக்குப் பேதாபேதம் சாதிக்கப்படுகின்றதாலோ எனின்,

(உத்தரம்) அங்ஙனஞ் சாதிக்காது விசிட்டாத்துவிதத்தைச் சாதிப் பேம்.

கடமும் படமும் போலப் பிரமமும் பிரபஞ்சமும் அத்தியந்த *பேதம் என்றும் கூறேம்; அது அகன்னியம் என்னும் பரசுருதிக்கு விரோதமுறு தலின்.

நரம் இப்பி வெள்ளி என்பவற்றிற் போல, ஒன்றை மித்தை என்று கூறும் அத்தியந்த அபேதவாதிகள் அன்று; பிரபஞ்சத்துக்கும் பிரமத்தின் சுவரூபாதிகருணத்துக்கும் பேதங் கூறுஞ் சுருதிகளுக்கு விரோதமுறுத லான்,

---

றும் நித்தியவஸ்துக்கள் என்றும் இதிகாசபுராண வாசகமங்களுக்கு மாறுபடாவண் ணம் உதகரிக்கப்பட்டவிடத்தும், இவற்றை ஆதாரமாய்க்கொண்டு வளர்ந்த க. உ. கஇ-ஆம், க. உ. கஈ-ஆம், க. உ. உக-ஆம், க. ங. உ, ச, சு-ஆம்; உ. க. உ உ-ஆம் பிரம சூத்திரங்களும் பிறவும் உபயான்மவாதபரத்தனவுஞ் ஏகான்மவாதியார் ஏகான் மவாதத்துக்கிணக்கமுறுமையின், (உபக்கிரமணிகை உ-ஆம் இலக்கத்திற்கண்ட) முக்கியோபநிடதங்களில் இல்லாதனவாய், (வைதிக சுத்தாத்துவித ஸ்ரீவைஷ்ணச் தத்துவப்படவிளவிடையின் ககக-ஆம் இலக்க விஞக்களிற் கண்ட) சர்வசாரமுதலிய மாயாவாதோபநிடதங்களிற் காணப்படுவனவாய்நிடந்த கடாகாய மகாகாயத் தூ லிலித்தையுந் தொணர்ந்து புதட்டிக் காட்டிஜட்டி, ஜன்மாலைப் பெரிய ஏனு கெடுத்தல் வாயிலாக, உபயான்மவாதசுத்திரங்களுக்கும் சுருதிகளுக்கும் பொருட்டி ணிவுபடித் திவிட்டமை இவர்க்கு நியாய்மாகுமா? நீதியாகுமா? அன்பர்காள்! இவற்றை யோசித்து, ஏகான்மவாதியாரோ? நீலகண்டசிவாசாரியரோ? சூத்திரங்களுக்கு உண் மைப்பொருள் பொதிந்து வைத்தார் என்பதை உணர்ந்து கூறுதிர்? உபயாண்மவாதச் சுருதிகளுக்கு மாறுபடாது பதி பாச பசுக்களை உணர்த்திப் போதிக்கும் விஞான போதத்துக்கு லக்ஷ்மியாரணியர் பாடியம் ஒன்று ஏழுதிவைத்துள்ளார் என்று ஏகான் மவாதிகள் சிலர் புகன்று அது இருக்குமிடம் எங்கேயாம் என்று ஆராய்வாராயினர், தாபமான்வர் "வேதமூடனகமம்" என்ற செய்யுளிற் கூறியாங்கு, உபயவாதிகளா லிய எங்கள் உபயான்மவாதக் விஞானபோதத்துக்கு அவ்லீத்தியாரணியர் எழுதி வைத்தார் எனக் கொள்ளப்படும் பாஷ்யமும் அவர் ஆசாரியராகிய ஏகான்மவாதியார் இச்சூத்திரங்களுக்கும் இச்சூத்திரங்களுக்குமூலமாய் நின்ற சுருதிகளுக்கும் கடாகாச மகாகாசவித்தை கொண்டு பொருள்செய்கின்றமென்று யாதும் உணர்த்தகொள்வாரதை,

* ஈண்டு நீலகண்டசிவாசாரியரால் மறுக்கப்பட்ட துவிதம் (பேதம்), ஏகான்ம வாதம் (அபேதம்), துவிதாத்துவிதம் (பேதா பேதம்), என்னும் மத்துவம், மாய் வாதம், வைஷ்ணவமதாகிய ரும்முதத்தையும் ஸ்ரீ உடையவரியார் சிவப்பிரகாசத்தில் "புறச்சமயத்தவர்க்கிருளாய்" எனும் திருச்செய்யுளிற் "போற்பணிபோல் பேதப் பிறப்பிலதா நிநள் வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள் போற் பேதா பேதமுமின்றி" என்றருளினர்.

பேதாபேதவாதிகளும் அன்று; வஸ்துவிரோதவுண்மையான்.

ஆயின் நாம் சரீரசரீரி போன்றும் குணகுணி போன்றுங் கூறும் விசிட்டாத்துவிதிகளே. பிரபஞ்சத்துக்கும் பிரமத்துக்கும் அனன்னியத்துவமாய் மண்ணும் கடமும் போலவும், குணமும் குணியும் போலவும் (மூன்றே) காரண காரியத்தினாலும், விசேஷண விசேடியத்தினாலும் வேறபடாதிருத்தலேயாம். மண்ணைவிட்டுக் கடம் காணப்படாதவாறு போன்றும், நீலிமத்தை விட்டு நீலோற்பலமில்லாதவாறு போன்றும் பிரமத்தை விட்டுப் பிரபஞ்ச சத்தி இல்லை; சத்திக்கு வேறுபட் பிரமம் ஒர்போதும் இல்லை; உஷ்ணத்தைவிட்டு அக்கினி இல்லாமை போல. எதை விட்டு எதைக் கண்டில்லையோ, அது அதனோடு விசிட்டந்தான். அது (குணம்) அதாவதும் (குணியாவதும்) இயற்கையே; (சூடு தீயாவதும் இயற்கைதான்). ஆகலின், எப்பிரகாரத்தானும் பிரமம் பிரபஞ்சத்தினின்று வேறுறுது. அதுபற்றி அனன்னியம் என்று கூறப்படுகின்றது. அவ்விரண்டுக்கும் வேற்றுமை இயற்கை. ஆகலின், பிரபஞ்சத்தினும் பரப்பிரமம் (அதிகம்) சிரேட்டமே. காரணமாயும் காரியமாயுமிருத்தல் (உ. க. கூ) ல் நிரூபிக்கப்பட்டது. ஆகலின், பேதாபேத சுருதிகளுக்கு இன்றெறி விரோதமற்றதே. (உஉ)

ஸாதிலவ்ய தஉந்வடீ (உ. க. உகூ)

(ககூக) கல் முதலியவற்றிற் போல, அது பொருந்தாது.

(ஆக்ஷேபம்) எப்பிரகாரத்தானும் அபேதசுருதிகளால் ஆன்மாவும் சிவபெருமானும் அபேதர் எனின்,

(உத்தரம்) அங்ஙனம் இன்று; பொருந்தாமையின். அசேதனமாயிய் கல்லு, கட்டை, மண், புல் முதலிய போல ஆன்மாவுக்கும் அறியாமையுண்மையின் முற்றறிவு முதலிய குணங்களையுடைய சிவபெருமானினின்று அவன் அத்தியந்த விஜாதீயமாம் எனக் கேட்கப்படலான், அவ்விருவரும் ஒருவராமெனல் பொருந்தாது. ஆகலின், ஆன்மாவிலிருந்து சிவபெருமான் மற்றோர்பொருளே. இங்ஙனம் ஆன்மா சேதனமாயினும், சிவபெருமான் சிரேட்டகுணமுடையராம் பேதத்தினால், ஆன்மா சிவபெருமானோடு ஒப்பாகான். மூற்றும் வேறுபட்ட அசேதனப்பொருள் சிவபெருமானுக்கு ஒப்பாகாதென்று கூறவும் வேண்டுமா!! எவ்வாற்றானுஞ் சுருதி ஸ்மிருதி நியாயங்களினும் காரியமாதல்பற்றித் தம்மினின்று வேறுறுத சேதன சேதனப் பிரபஞ்சம் அனைத்தற்கும் சர்வஜ்ஞரும் சர்வசக்தியினருமாகிய சிவபெருமான் சிரோ ரோ (விசுவாதிகரே) (உக)

## (அ) உபசங்காரதர்சநாதிகரணம்.

உவஸம்ஹாரதர்ஶநாந்நேதி சேந்ந க்ஷீரவத் (உ. க. உச)

(கசூஉ) (உபகரணக்) கூட்டம்காணப்படலான் ரானின், அன்று; மெய்யாய்ப் பாலிலே போல.

வகஷேவாஜீதீயழ (சாந். சு. உ. க)

"ஏகந்தானே அத்துவிதீயம்"

ஏவா வ்யபிவீ ஜநயதெவ வநகம் (தைத். ஆரணி. கo. க. ஈ)

"விண்ணையும் மண்ணையுஞ் சிருட்டித்து ஏகராகிய தேவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சிவபெருமான் ஒருவரே உலகத்துக்குக் காரணரா மென அறியப்படுகின்றூர் (என்பது விஷயம்)

இந்த ஒருவரே உலகத்துக்குக் காரணராயிருத்தல்யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) யுக்தம் அன்றென்பேம்; அது பொருந்தாமையின், ஆகாய வாயு அக்கினி சலவடிவுடைய காரியம் பல்வகைத்து. இது விசித்திரகாரணமின்றி எங்ஙனம் உண்டாம்? இரத முதலிய காரியங்களே அநேகர் கூடிச் செய்தல் காணப்படுகின்றது. ஆகலின், ஒரே காரணமாயிருத்தல் எய்தாதாம் எனின்,

(சித்தாந்தம்) இது யுக்தம் அன்று. எங்ஙனம் க்ஷீரம் ஒன்று தயிராகின்றதோ, அங்ஙனம் காரணமொன்று காரியரூபமாகப் பரிணமிக்கநேரும். ஆகலின், உலகமானது பிரமமாகிய ஒரே காரணத்தின் காரியமாம். காரியம் விசித்திரமாதலின், காரணமும் விசித்திரமாதல் வேண்டும் எனல் பொருந்தாது. உரோமம் நகமுதலிய பல்வகைக் காரியம் ஒரே சேதனப் பொருளிலிருந்து தோன்றக் காண்டலின். இதுபற்றி விசித்திரமாகிய உலகத்தை உண்டாக்குதற்குச் சிவபெருமான் மற்றோர் காரணத்தை அபேக்ஷிப்பதில்லை. (உச)

சத்தியுடையார்க்கு யாவும் ஆகும் என்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸெவாதிவஉவி மொகெ (உ. க. உடு)

(கசூஈ) உலகத்திலே தேவாதிகள் போன்றும்.

சாஸ்திரங்களிலே சத்தியுடையராகக் கூறப்படும் தேவாதிகளுக்கு எல்லாஞ் சார்ந்தாம் வேண்டிய வடிவங்கள் கொள்ளுதற்கு வன்மையிருக்கின்றதோ; அங்ஙனஞ் சாஸ்திரங்களிற் கூறப்பட்டவாறு சத்தியுடைய சிவபெருமானுக்கும் எல்லாம் ஆகும்.

(அதாவிசச)

"எவர் இவ்வுலகம் முழுதினையும் பிறப்பிக்கவும் ஆளவும் வல்ல பிரமசத்தி தோயுடையராகின்றனரோ" என்னுஞ் சுருதியினுந் திவபெருமான் அந்த சத்தியுடையர் எனக் கேட்கப்படுகின்றது. அவர்க்கு எது அசாத்தியம்!! (உடு)

## (கூ) கிருத்சுநபிரசக்தியதிகரணம்.

---

க்ருத்ஸ்நப்ரஸக்திர்நிரவயவத்வஶப்தகோபோ வா (உ. க. உசு)

(ககூச) முழுமையும் (காரியமாதற்கு) இயைகின்றிலது; இன்றேல் நிரவயவசுருதிக்கு மாறுபடுகின்றது.

ஈண்டுப் பிரமம் ஜகதாகாரமாகப் பரிணமிக்கும் என் முன் உரைத் தனில் பொருத்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) எங்ஙனம் பொருந்தும்? ஒன்றுதானே ஜக்தாகரீர் மாகப் பரிணமிக்கும் என்க் கூறப்பட்டது. பால் தயிரானது போல அவர் உலகமாய்ப் பரிணமிப்பாரேல், பிரமமானது முழுமையுங் காரியமாய் ஆகி அது சேஷிக்கமாட்டாது. இன்றேல், அவர் ஓர் அம்சத்தினுற் பரிண மித்தாரெனின், பிரமம் நிரவயவம் என்னுஞ் சுருதியோடு விரோதமுறும். ஆகலின், பிரமம் பரிணமமாதல் யுக்தம் அன்றும் எனின், (உசு)

(சித்தாந்தம்) கூறுதும்.

ஶ்ருதித்வாச்ச ப்ராணவ்ருதவத் (உ. க. உஎ)

(ககூஞ) ஆயின் சுருதியும் (அங்ஙனமே), சுருதி மூல மாயிருத்தலின்.

பிரமம் உலகமாகப் பரிணமித்தல் யுக்தமே; சுருதி அங்ஙனம் கூறு தலின். இவ்விஷயத்திற் சுருதியே பிரமாணம், வேறு பிரமாணம் இல்லை; சுருதி மூலமாயிருத்தலினாலேதான், பிற பிரமாணங்களினாலும் அறி யப்படும் வஸ்துக்களுக்கெல்லாம் அவர் விஜாதீயமாய் அபூருவமாகிய சத்தி யோடு கூடினமையின் விரோதம் இன்று. ஆகலின், பரிபூரணராகிய அவ ருக்கே காரியத்துவமும் காரணத்துவமும் எய்துகின்றன. தார்க்கிகர்க்கு அத்தியந்தம் பேதமுண்டைய ண்ட முண்டகாய அளவில்லாத வஸ்துக்கள் ஒவ்வொன்றினும் சாதியான ஒன்றுவ் இருக்கின்றது. ஈண்டு வேறுவகை திருஷ்டாந்தங்கொண்டு ஆசங்கை செய்ய இடம் பெறாது. ஆகலின், பிர சொரூபத்தை நிரூபித்தலிற் சுருதியே மூலமாயிருத்தலின் யாதும் விரோ தம் இல்லை. (உஎ)

ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத: இதி (உ. க. உஅ)

(கசுசு) அங்ஙனமே ஆன்மாவிலும் அவை பல பிர காரமன்றே.

ஆன்மா விஜாதீயமாயிருத்தலினல் அசித்தருமங்களுக்கு விரோதமா கிய சித்தருமங்களோடியைந்திருக்கின்றது. தீ நீர் முதலிய அசேதனப் பொருள்கள் ஒவ்வொன்றும் அன்னியோன்னியமாகிய வெவ்வேறு சத்தி களையுடையனவாய் விசித்திரமாய் இருக்கின்றனவே. ஆகலின் சுருதிப்பிர மாணத்தினல் எய்திய பிரமமும் விசித்திரமாகிய அனந்த சத்தியையுடைத் தாதலின், முழுமையும் விரோதமின்று. (உ அ)

வுவகூஹொஷாஷ (உ. க. உசு)

(கசுள) சுவபக்ஷத்திலே தோஷம் உண்மையினலும்.

(காரண முழுமையும்) காரியமாதன் முதலிய தோஷம் நிரவயவமும் ஜட சஜாதீயமாயுமுள்ள பிரதானமுதலியவற்றிலன்றிச் சாஸ்திரத்தைப் பிர மாணமாகவுடைய பிரமத்திற் செல்லாது. (உசு)

சர்வசத்தியுடைமையின் பிரமத்துக்கு எதுவும் பொருந்தும் என்ச சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸவெஸாவெதா ஷ தஷ்ஸஸ்நாஸ (உ. க. ங்ஏ)

(கசுஅ) (அவரது சத்தி) அனைத்தையுங் கூடிற்று, சுருதியிற் காண்டலானும்.

வாராஷ்ஷ) ஸாதி வி-ஸ்வியெவ ஸ்ரூ-யெதெ ஷ்வாஷாவிகீ ஜ்ஞாநவல கிரியா ஷ) சாயாஜ்ஞ பரூக்ஷ்ய திஏ விஷ்ணாநாயிநஜ்ஞ ஶஹெஷ்வராழ்) தவ்ய வயவஹ-ஶ்தெநவ்யாவ்ஷ வவஸ்திதஏ ஜநஸ (சுவே. சு. அ; ச. கஏ)

"அவரது பராசத்தி சுவாபாவிகமாய் ஞானசத்தியும், பலசத்தியும், கிரியா சத்தியும் எனப் பலதிறப்படும்; மாயையைப் பிரகிருதி என்றும், மாய யுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; அவர் அவயவத்தினல் இவ்வுல கம். அனைத்தும் வியாபிக்கப்பட்டது" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சத்தியனைத்தும் பிரமத்தை ஆசிரயித்தனவாக அறியப்படுகின்றது. அது பற்றிச் சர்வசத்தியுடைய அவர்க்கு எதுதான் ஆகாது !! (ஙஏ)

வீகரணகூஹெதி செதஷ்ஷாழ் (உ. க. ங்க)

(கசுக) கரணம் இன்மையால் (அவர் காரணமாதல்) இல்லையேல், அது இறுக்கப்பட்டதாயிற்று.

(ஆக்ஷேபம்)

நி. தவ்ய) கார்ய-ஏ காரணஜ்ஞ விஷ்யெத (சுவே. சூ. அ)

"அவருக்குச் சரீரமும் இல்லை; கரணமும் இல்லை" எனப் பிரமத்துக்குக் கரணமின்மை கூறப்படுகின்றது. ஆகலின், அவர் காரணமாகாரோ வெனின்,

(உத்தரம்) அன்று. அதற்குச் "சுருதி மூலமாயிருத்தலான்" என (உ. க. உஎ) ல் முன்னரே உத்தரம் இறுத்தாயிற்றே.

ந்யாஹ வ்ருக்ஷ விஜ்ஞாயிநஹ ஸ்மார்யதே।

(சுவே. ச. க0)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக" எனவும்,

தஸ்யாவயவஹ ஸ்ருஷ்ட வ்யாப்த வஸ்-ஜிதி0 ஜகத்।

(சுவே. ச. க0)

"அவருடைய அவயவத்தினால் (சத்தியினால்) இவ்வுலகம் அனைத்தும் வியாபிக்கப்பட்டது" எனவும் சிரேட்ட வேதப் பிரமாணமுண்மையானும்,

விஶ்வாதிரோதாந விதிர்ஜ ஸ்தாராயஸ்ய யஸ்யைகுமாதி ராகஶ்ச லகுவஸ்வோஃ। சுவா நஶ்வுவ திஶ்வஹோ வஜ்ஞி தஸ்ய நஶ்வகுவ ஶொகவியகுஷாய (வாயு. பூ. எ: உசு)

"பிரபஞ்சத்துக்கு மேன்மேலாகக் கிளருகின்ற விசித்திர மநோரதமுடைய எவர் சத்தியின் ஓர் பாகத்தில் யாவும் முற்றுப்பெறுகின்றனவோ, எவரை (ஆறு) அத்துவாவாகவும் அத்துவபதியாகவும் அத்துவாவை அறிந்தவர்கள் கூறுகின்றார்களோ, உலகமனைத்துக்கும் வேறுயிருக்கும் அவ்வியல்பினர்க்கு நமஸ்காரம்" என அவ்விஷயம்பற்றி உளதாம் புராணவசனத்தினாலும் விசித்திரமாகிய அனந்தசத்தியையுடைய பல்வகை மாயையாம் பரமசத்தி யோடியைந்தவராய்ச் சிவபெருமான் தமது சத்திபாகத்தினால் உலகாகார மாகியும், தாமே பிரபஞ்சத்துக்கு அதிதராயுமுள்ளார். இங்ஙனம் சமஸ்த தோஷகளங்கமில்லாத சுருதிப்பிரமாணத்தினாற் சித்தமாயினவரும் சர்வ சத்திசம்பத்விலாசருமாகிய பரமேசுவர பரப்பிரம சிவனுர்க்கு ஒன்று கூடும் கூடாதென்று விசாரித்தற்குச் சிறிதும் இடமின்றே. (கூக)

## (க0) லீலாகைவல்லியாதிகரணம்.

---

சூத்திரகாரர் வேறுபிரகாரமாக ஆக்ஷேபித்துப் பின்னரும் உத்தரம் இறுக்கின்றார்.

ந வ்ருயொஜநவத்த்வாத் (உ. க. சூஉ)

(கஎ0) இல்லை; (ஒவ்வொரு செயலும்) பயனுடைமையின்.

சாஸ்திரன் கூறுமாறு சர்வசத்தியுடைய சிவபிரானுர்க்குச் சமஸ்த காரியங்களினும் காரணமாயிருக்கும் சாமர்த்தியம் உளதென் நிர்ணயிக்கப்

பட்டது. அங்ஙனமாயினும், எந்தப் பிரவிருத்தியும் பயனுடைமையின், சகல காமமும் அடையப்பெற்ற சிவபெருமானுக்கு உலகசிருட்டி முதலிய வியாபாரங்களிற் பிரவிருத்தி பொருந்துமா? பொருந்தாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எங்ஙனம் பொருந்தும்?

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். உ. சூ. க)

விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்மவிஜ்ஞாநமாநந்தம்ப்ரஹ்மாயஸ்ய (கைவ)

"ஆனந்தம் பிரமம்; வியாபகரும், சிதானந்தரும், அரூபரும், அற்புதரும், உமாசகாயரும்" என்றற்றொடக்கத்த சுருதிகளால் நிரதிசயானந்த சொரூபரும், நித்தியதிருப்தருமாவார் சிவபெருமான் என்றே கேட்கப்படுகின்றது. இவர் பின் சிருட்டியாதி வியாபாரங்களில் எங்ஙனம் அபேக்ஷையின்றிப் பிரவிருத்திப்பார்? அவரது பிரவிருத்தி பிரயோசனத்தை நோக்கியிருக்குமேல், (அவரது) நித்தியதிருப்திக்கு ஹாநியாகும்; இன்றேல் அறிவில்லாச் செந்துப் போல உசிதமல்லாத காரியத்தைச் செய்தோராவர் என்று கூறின், (கூஉ)

(சித்தாந்தம்) கூறுதும்.

யதோவாசோ நிவர்தந்தே (உ. க. கூக)

(களக) ஆயினும், உலகத்திற் போல *லீலாமாத்திரம்.

நித்தியதிருப்தியுடைய சிவபெருமானுக்குப் பிரயோசனமின்மையின் அப்பிரயோசனமாகிய உலகசிருட்டியாதி பிரவிருத்தி பொருத்தமுறுதெனின், அங்ஙனமன்று; பொருந்துமே. கேவலம் லீலாமாத்திரத்தினற் சிவபெருமானுக்கு நிஷ்பிரயோசனமாகிய பிரவிருத்தியும் நேரும். உலகத்திலே பிரயோசனமின்றேனும் கேவலம் லீலையினலே பந்தடித்தல் முதலியவைகளிற் பிரவிருத்தி உளதாமாறு போல, சிவபெருமானும் சமஸ்த காமமூற்றவரேனும் லீலையினற் சிருட்டியாதி பிரவிருத்தி செய்தல்பற்றி விரோதமில்லை. (கூகூ)

(ககக) வைஷம்மியநைர்க்கிருண்ணியாதிகரணம்.

---

வைஷம்யநைர்க்ருண்யே நவ ஸாபேக்ஷத்வாத்ததா ஹி தர்சயதி (உ. க. கூச)

---

* சுத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்பணைத்தங்கரந்தும்விளையாடி
(திருவெம்பாவை. கஉ)

(கஎஉ) *விஷமமும் இல்லை; இரக்கமின்மையும் இல்லை; (கன்ம) சாபேக்ஷமுண்மையின். மெய்யாய் அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது.

பிரயோசனமின்றேனும் லீலையினுற் சிவபெருமானுக்கு உலகசிருட்டியாதிகளிற் பிரவிருத்தி உளதாதல் நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுப் பின்னரும் இது கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பரிபூரணராயிருத்தலில் லீலையினும் சிவபெருமானுக்குச் சிருட்டி பொருந்தாது; இராகத் துவேஷமுதலிய அற்று எல்லோர்க்குஞ் சமமாகி மத்தியஸ்தராயிருப்பவர் அச்சிவபெருமானே. இவர் சிலர்க்கு இன்பமயமாகிய தேவாதி சரீரத்தையும், சிலர்க்குத் துக்கமயமாகிய மனுஷ்யாதி சரீரத்தையும் படைத்தலான், அவர் வைஷம்மியமுடையரென்பதைத் தவிர்த்தல் கூடாது. பின்னருஞ் சிருட்டியானது சங்காரத்துக்கு முன் இருந்தமையின், அனைத்தையும் ஒரே முறையிற் சங்கரிக்கும் சிவபெருமானுக்கு இரக்கமின்மையும் எய்துகின்றது. ஆகலின், புருஷார்த்தமின்மையைக் கொணரும் உலகத்தைச் சிருட்டித்தலிற் சிவபெருமானுக்கு யாது பயனும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். எப்பிரகாரத்தினுலும் உலகசிருட்டி செய்யுஞ் சிவபெருமானுக்கு வைஷம்மியமும் (பாரபக்ஷமும்), இரக்கமின்மையும் எய்தா; சிருட்டிபேதத்துக்குக் கன்மசாபேக்ஷமுண்மையின்.

ரூணீயஅரணா ரூணீயாo யொநிரோவஜ்ஜெ | கூவ-ூயஅரணாஃ கூவ-ூயாழ் (சாந். நி. கo. எ)

"நன்மை செய்தவர் நற் சனனத்தையும், தீமை செய்தவர் தீச் சனனத்தையும் அடைகின்றார்" என்று சுருதியும் கூறுகின்றது. (கூச)

ந கோவிஹாஹாதி ஜெஹா நாதிக்ஷாஉவவஜ்ஜெ ஹாவ்-ூவமஜ்ஜெ ஹ (உ. க. சூநி)

(கஎக) கன்மம் பகுப்பின்மையால் இல்லை எனின், அன்று; அநாதிக்கண்ணதாதலின் அது முற்றும் பொருந்தும்; அனுபவத்தினும் அறியப்படுகின்றது.

---

* வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.
(திருக்குறன், ச)
தன்பமொடின்பமதெல்லாந்தடந்தவர்
(திருக்கற்குடி; ஞான, எ)

ஆ. (ஆக்ஷேபம்) சிருட்டிக்கு முன்னர்க் கன்மம் இல்லை; கேஷத்திரஞ்ஞர் (ஆன்மாக்கள்) இல்லாமையின்,

வஸ்தெவ வொளசெ்ருஷ்டி ஆவஸீஸ் (சாந். சு. உ. க)

"சௌமிய, சத்துத்தான் முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியில் ஏவ (தான்) என்பது பிறிதொன்றை மறுக்கின்றமைபற்றி, ஆன்மாக்கள் இல்லை எனின்,

(உத்தரம்) அன்று.

ஜாஜ்ஞெள ஈவஜாவீஸா நீஸெள (சுவே. க. கூ)

"பிறவாத இருவர் அறிஞரும் அஞ்ஞனுமாய ஈசரும் அநீசனும்" என்று சுருதி கூறும் பிரகாரம் ஆன்மாக்கள் அநாதிக்கண்ணராக, கன்மமும் 'அநாதிக்கண்ணதாகப் பெறப்படுகின்றது. ஆகலின், சம்சாரம் கன்மப்பிரவாகத்திருந்து விளைந்ததாகின்றது. சிவபெருமானே முற்றறிவினராதலின் ஆன்மாக்களுடைய விசித்திர கன்மத்தையும் அறிந்து, தமது சத்தியினால் அவர் அவர்களுக்கு வாய்த்த குணமாகவே போக சரீரமாகிய தேவாதி சரீரத்தைச் சிருட்டிக்கின்றனர். இங்ஙனம் சிருட்டிபேதத்துக்குக் கன்மமே மூலம். சங்கரரும் சம்சாரத்தில் உழன்று இளைத்த ஆன்மாக்களுக்குச் சுழற்சி போல விசிராந்திக்குக் காரணமாயிருத்தலின், சிவபெருமானுக்கு வன்கண்மை இல்லை.

(ஆக்ஷேபம்) ஆன்மாக்களுடைய இன்ப துன்ப முதலியவற்றுக்குக் கன்மமே பிரயோசகமாயின், அப்பிரயோசகராகிய சிவபெருமானால் யாது பயன்? எனின்,

(உத்தரம்) அன்று; கன்மமும் அவர் ஆதீனமாதலின், அவர் சுவாதந்திரியத்துக்கு ஹானி இல்லை. பின்னரும் கட்டழுடிப்பிரபாதசியாயத்தினும் கன்மத்துக்குச் சுவாதந்திரியமில்லாவிடின் சிவபெருமானுக்கு வைஷம்பியமுதலிய தோஷம் எய்துகின்றதெனின், அங்ஙனம் கூறலாகாது; மாயையிலே உள்ள அளவிறந்தகன்ம சத்திகளைச் சிவபெருமான் வருக்கின்றனர். கன்மமே தனது சத்திவசத்தினும் பல்வகைச் சிருட்டிக்குக் காரணமாதலின், அதனை ஆன்மாக்களுக்கு வகுப்பவராகிய அவர் பாரபக்ஷமுறார்.

(ஆக்ஷேபம்) சடமாகிய கன்மமானது சேதனப்பொருளினால் அதிட்டிக்கப்படாமல் ஆன்மாக்களுடைய சரீரத்தை ஆக்க இயலாமையாற் சேதனராகிய சிவபெருமானே பிரயோஜகர் (ஏவுற்றுபவர்) என்று கூறற்பாற்று. சிவபெருமான் பரமகாருணிகராயிருந்தும் சிருட்டிக்கு முன்னர்ப் போகசாதனம் ஒடுக்கப்பட்டிருந்தமையாற் சம்சாரகிலேசம் நீங்கிச் சுத்தராயிருந்த ஆன்மாக்களை மீட்டும் சம்சாரத்துக்குச் சரணமாகிய சரீரத்தோடு எற்றுக்கு இசைத்திருந்தனெனின்,

(உத்தரம்) கூறுதும். சர்வாணுக்கிரகராகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கன்மபரிபாகமின்றி ஞானோதயமாகாமையானும், ஞானமில்லாது நிரதிசயானந்த மோக்ஷமின்மையானும், கன்மபரிபாகமும் போகமின்றி எய்தாமையானும், அந்தக் கன்மபலபோகத்தின் பொருட்டுப்பின்னரும் அவைகட்குச் சரீராதிகளைக் கற்பிக்கின்றனர். இந்தப் பிரகாரம் அவரவர் கன்மமானது போகத்தினற் படிப்படியே பக்குவமடைந்த காலத்திலேசுத்தாந்தக் கரணமுடைய ஆன்மாக்களுக்குத் தம் விஷயமாகிய ஞானத்தை உண்டாக்கி, நிரதிசயானந்தரூபமாகிய *மோக்ஷலட்சுமியைப் பிரகாசிப்பிக்கின்றனர். இங்ஙனம் சர்வசத்திமானும் பரமகாருணிகருமாகிய சிவபெருமான் எதனால் ஒரே முறையிலே சமஸ்த ஆன்மாக்களுடைய கன்மத்தையும் பாகப்படுத்தி அனைவர்க்கும் சமமாகவே மோக்ஷாநுக்ரஹத்தைப் பிரகாசிப்பிக்கவில்லை? எனின்,

(உத்தரம்) சத்தியம். சிவபெருமானால் யாவர்க்குஞ் சமமாகவநுக்கிரகஞ் செய்யப்படினும், எவர் பக்குவமலமுடையரோ, அவர் வீடுபெறின்றார்; அபக்குவமலமுடையராயினர் காலக்கிரமத்திலேதான் முத்தியடைவர். சூரியகிரணசமூகம் சமமாய் நிரந்தரமாயிருப்பினும் †பக்குவமுள்ள தாமரைகளே அலர்கின்றன; அபக்குவமலர்கள் அன்று. சிவபெருமான் பூரணரேயாயினும் பிறர் நயத்தின்பொருட்டே யாவுஞ் செய்கின்றனர். அவர் சர்வாநுக்கிரகர் என்பதைப் பிரதிபாதித்தல்வாயிலாக (மேலே கூறிய) அர்த்தம் அனைத்தையும் புராண சுலோகங்கள் தெளிவாகப் பின்வருமாறு விளக்குகின்றன.

ஸுஜிதே நு யதா ஹீநம் ததோ ஹ்யதிதிம் ஜநம்।
ஸிவெநாவி விநா தத்தோ ஹ்யதிதிம்ஜநம்।
ஏவெஷ்யம் விநா நிராநந்தாம் க்ஷ்ரயெத ரொதிணொ யதா।
ஸிவம் விநா நிராநந்தம் க்ஷ்ரயெத ஹி ஜநத்யா।
வ்யாயீநாம் ஹெஷிஜம் யதீவ்ரதிவக்ஷம் வ்ஹாவதம்।
ஸிவவ்ஹாரு தொஷாணாம் வ்ரதிவக்ஷம் வ்ஹாவதம்।
யதா நாதிவ்ரவ்ருதோ ஜம் ஹொரவ்ஹாரவ்ஹுஷ்।

---

*இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
தீமல மறுத்துப் பின்டைச் சிற்றறி வொழிர்து ஞானம்
பேருமொ வன்றன் பாதம் பெறுவதுட்டித்த மாமே.
(சித்தியார். சு. அ)

†பகலவர்த்துக் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்
(சிவஞானபோதம். சூ. கூ)

தயா நாதி ஶ்ரவ்ய தெ தாzயா ஶிவஸ்ஸவாஸ்ரயோ அஸ்து॥

(வாயு. உத். கஉ: கடி, கக, கச, கஈ)

"ஆதித்தியன் இல்லையேல் இவ்வுலகம் அனைத்தும் இருளாய்ப்போமாறு போல, சிவபிரானர் இல்லையேல் இவ்வுலகம் முழுமையும் இருளாய்விடும்; வைத்தியர் இல்லையேல் இன்பமில்லாது உரோகிகள் வருந்துமாறு போல, சிவபெருமான் இல்லையேல் உலகம் இன்பமிலதாகித் துன்புறும். இயற்கையால் மருந்து வியாதிக்கு மாற்றுவதுபோல, *சம்சாரதோஷத்துக்குச் சிவபெருமான் சுவபாவமாக மாற்றுகின்றார். இந்தக் கோரமாகிய சம்சார மண்டலம் அநாதிக்கண்ணது போல, சம்சாரமோசகராகிய சிவபெருமானும் அநாதியே உள்ளார்" ஆகலின், சர்வாநுக்கிரகப் பிரபிருத்தியுடைய சிவபெருமானுக்கு உலகசிருட்டியாதி வியாபாரம் நிகழ்கின்றதே. (ஈடு)

## (கஉ) சர்வதர்மோபபத்தியதிகரணம்.

ஸவ-யுபபோ-வவபெ-தூ (உ. க. ஈசு)*

### (களச) சர்வகுணங்களும் இயைதலானும்.

அதிகஞ் சொல்லி என்! பிரதானத்துக்கும், பரமாணுவுக்கும், கன்மத்துக்கும், காலமுதலியவைகளுக்கும் இயையாதனவாகிய எல்லாக்குணங்களும் சிவபெருமானுக்கே இயைவன. ஆகலின், அனைத்துக்கும் மேலாய சிவபெருமானே உலகசிருட்டி முதலியவற்றுக்குக் காரணமாயினரென்பது சாமஞ்சசம். (ஈசு)

*அருளிஞ ரூரைத்த நூலின் வழிவாரா தகன்மஞ் செய்யி
னிருளுலா நிரயத் தன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்க டீர்க்கு மருந்திவை வகுத்திய நாதன்.
(சிவஞானசித்தியார், உ. ஈஈ)

## இரண்டாம் அத்தியாயத்து

# இரண்டாம் பாதம்.

(இப்பாதம் சாங்கியமுதற் பாஞ்சராத்திரமிறுதியாகிய பரபக்ஷநிராகரணத்தின்மேற்று)

### (க) இருபத்நாலுபபத்தியதிகரணம்.

(சாங்கியமதநிராகரணம்)

ரசநாநுபபத்தேஸ் நாநுமாநம் வ்யவதிதத்வாத் (உ. உ. க)

(களடு) அநுமானம் (பிரதானம், காரணம்) ஆகாது, சிருட்டி பொருந்தாமையாலும், (அறிவுடைத்தலிவனெதிரே) பிரவிருத்தித்தலினாலும்.

மூந்திய பாதத்திற் சாங்கியமுதலிய தர்க்கங்கொண்டு ஆக்ஷேபிக்கப்பட்டவைகளுக்குச் சமாதானங் கூறி, (சிவாத்துவித) சுவபக்ஷசாதனஞ் செய்யப்பட்டது. பின்னர் ஈண்டுத் தர்க்கவாயிலாகச் சாங்கியமுதலிய பரபக்ஷந் தூஷிக்கப்படுகின்றது.

முதற்கண்ணே சாங்கியருடைய பிரதானகாரணவாதம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

சந்தேகத்துக்குக் காரணம் யாண்டும் பிரசித்தமேயென யூகிக்கற் பாற்று.

(பூருவபக்ஷம்) பிரதானத்தைக் காரணமாய்க் கூறுவதே யுக்தமெனப் புலப்படுகின்றது. பிரதானமானது இராசச சாத்துவிக தாமசரூபமாயுள்ளது. இதுவே உலகாரணமாதற்கு இயைகின்றது; யாண்டும் அதன் காரியமாகிய இன்ப துன்ப மோகம் என்பவை காணப்படலான். பெறப்பட்டவிடத்து வஸ்திரமுதலியவைகள் சரீரங்களைப் போர்த்தல் முதலியவைகளுக்கு உபயோகப்படுதல் வாயிலாக இன்பம் விளைவிப்பனவாயும், பிறரால் அவை அபகரிக்கப்பட்டவிடத்துத் துன்பத்தை விளைவிப்பனவாகவுமாகின்றன; எதற்கும் உபயோகமில்லை என உபேக்ஷிக்கப்பட்டவிடத்து அவை மோகத்துக்கு ஏதுவாகின்றன:—இங்ஙனம் இன்பமுதலியவற்றின் தொடர்ச்சியுண்மையின் முக்குணங்களாய பிரதானமே உலகாரணமாகுமெனின்,

(மறுப்பு) கூறப்படுகின்றது. பிரதானம் உலகாரணமன்று; அசேதனமாகலின். எங்ஙனமெனின்? அறிவுடைப்பிரானொருவன் இயக்காது அசே

தனமாகிய கட்டைமுதலியன இரதம் பிராசாதமுதலியவற்றை ஆக்கமாட்டா; அவை அறிவுடை ஒருவனைப் பிரவிருத்தியும் எய்துகின்றன. ஆகலின், சேதனத்தினல் அதிட்டிக்கப்படாது பிரதானம் ஜகத்காரணமாதற்கு அருகமாகாது. இன்பமுதலியவற்றின் தொடர்ச்சியினலாவதென்பதும் பொருந்தாது; சுகமுதலியன (சரீரத்து) உள்விஷயமாக, படமுதலியன புறவிஷ்யமாதலின். ஆகலின், பிரதானத்தைக் காரணமாகக் கூறல் பொருத்தமின்று. (க)

பின்னரும் ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றனர்.

வயொஷவதுதராவி (உ. உ. உ)

(களசு) (அது) பாலும் நீரும் போலக் காரணமாமெனின், ஆண்டும் (இன்று).

(ஆக்ஷேபம்) ஓர் அறிவுடை அதிட்டானமில்லாது பாலும் நீரும் (முறையே) தயிர்முதலியவாகவும் ஆலங்கட்டிமுதலியவாகவும் ஆதல் போல, பிரதானமும் பிரபஞ்சமாகுமே எனின்,

(உத்தரம்) அன்று; ஆண்டுங் கூறப்பட்டதே காரணம்; பாலும் நீரும் அசேதனப் பொருளாகக் கொள்ளப்பட, அவை அனுமானத் தொகுப்பின் பாலனவாதலின். (உ)

மேலும்,

வுகிரெகாநவஸ்டிதஸ்வாநிவெகூகூவாஸ (உ. உ. ங)

(களள) அபேக்ஷையின்மையின் வேருன நிலைமை எய்தமாட்டாமையாலும்.

அசேதனப்பொருளானது ஓர் அறிவுடைப் பொருளின் அபேக்ஷையிற்றிப் பிரவிருத்தி செய்யுமாயின், எக்காலமுஞ் சிருட்டியுளதாய் அதற்கு மாருகிய பிரளயம் இலதாகும். ஆகலின், அசேதனப்பொருள் ஜகத்காரணமன்று. (ங)

கூநுதராஹவாஷுநதுணாதிவஸ (உ. உ. ச)

(களஅ) (பசுவினல் உண்ணப்படும்) புல் முதலிய போலவும் இன்று; பிறிதோரிடத்தின்மையின்.

பாலாதற்பாலதாகிய பசுவுண்ட புன்முதலிய போல, அசேதனமாயினும் பிரதான்மான்து காரணமாம் என்னக் கூறல் யுக்தம் அன்று. எருது முதலியவற்றால் உண்ணப்படினும், மற்றொன்றால் உண்ணப்படாதிருந்தும் புன் முதலிய பாலாக மாறுணக் காணப்பட்டமையின், அவையும் ஓர் அறிவுடைப் பொருளினல் அதிட்டிக்கப்பட்டனவே. (ச)

வாரூஷாபாவதிதி சென்யாவி (உ. உ. இ)

(களக) மணித்தனும் காந்தமும் போலாமெனின் (அன்று

(ஆக்ஷேபம்) சூருடனே முடவன் செலுத்துமாறு போன்றும், அயத்தைக் காந்தமணி செலுத்துமாறு போன்றும், அசேதனமாயிருப்பினும், பிரதானமானது புருஷசன்னிதானத்தினற் பிரவர்த்திக்கின்றது. ஆகலின், அறிவுடைப்பொருள் வேண்டியதின்றும் எனின்,

(உத்தரம்) அங்ஙனமாயினும், பிரதானத்துக்குப் பிரவிருத்தி இல்லை; புருஷன் அதிகாரனுயிருத்தலின். முடவனும் காந்தமணியும் முறையே மார்க்கோபதேசஞ் செய்தலானும் இரும்பின் சமீபத்திறைதலானும் விகாரம் எய்த நேர்ந்தன. ஆகலின், அதிகாரமில்லாத புருஷசன்னியானது பிரதானத்தைப் பிரவிருத்தி செய்தற்குக் காரணமாகாது. (இ)

கூ0மிகூாநாவவதித்ரு (உ. உ. சு)

(கஅ0) (அங்க) அங்கித்துவம் பொருத்தமின்மையாலும்.

குணங்களின் உற்கர்ஷ அபகர்ஷபாவம் அங்காங்கிபாவம் என்றும், இக்குணங்களிலிருந்து உலகம் உண்டாகின்றதென்றுஞ் சாங்கியர் கூறுகின்றனர். சங்காரகாலத்திற் சாமியாவஸ்தை அடைந்திருக்கும் குணங்கள் வைஷம்மியம் ஒன்றும் அடையாமையின், அவற்றாலாகும் அங்காங்கிபாவம் பொருத்தமாறின்று. ஆகலின், பிரதானகாரணவாதப் பிரகாரம் உலக சிருட்டி சொல்லுதல் பொருத்தமின்று. (சு)

அநுயாநாதிகெள அ ஜுஸ்திவியொகாஸ் (உ. உ. எ)

(கஅக) வேறு பிரகாரமாக அனுமானிக்கும்போதும், அறிவின் சத்தியில்லாமையின்.

கூறப்பட்ட பிரகாரம் ஒழிந்து, வேறுபிரகாரமாகப் பிரதானஞ் செய்வதாக அனுமித்தாலும், அறியுஞ் சத்தியின்மையிற் சிருட்டி செய்யும் என்பது ஆக்ஷேபத்தக்கிடமே. (எ)

கஹுவமதேவுஷாஹாவாஸ் (உ. உ. அ)

(கஅஉ) அங்கோரித்துக்கொண்டவிடத்தும், பயனின்மையின்.

பிரதானத்தைக் காரணமாக அங்கோரித்தலிற் பிரயோசனமுளதாயின், ஒருவாறு அங்கோரிப்போம். அங்கோரித்தலில் யாதும் பயனில்லை; புருஷனும் நிர்விகாரியாயிருத்தலிற் பிரதானத்தைக் காண்டல் முதலிய விகாரம் அவனுக்கெய்தாதாதலின், அதிபற்றிய பிரவிருத்தியும் [illegible]

கன் அவனுக்கேற்றதலான் எய்தும் போகமும் அதனைப் பருத்தநிலையில் எய்தும் கைவல்லியமும் அவனுக்கெய்தாவாம். ஆகலின், பிரயோசனமின்மையின் பிரதானத்தை அங்கிகரிக்கவேண்டியதின்று. (அ)

விப்ரதிஷெயாத்ஹாஸோஜலுஇ (உ. உ. சு)

(அதாது) விரோதமுண்மையின், அது யுக்தம் அன்று.

அறிபவனும், போக்தாவும், நிர்விகாரியுமாம் எனப் புருஷன் அநேக ஆரிவிருத்த தருமங்களையுடையனாகக் காணப்படுகின்றன். ஆகலின், காபிலமதம் யுக்தம் அன்று. (சு)

## (உ) மகத்தீர்க்காதிகரணம்.

(கணதமதநிராகரணம்)

இப்பிரகாரம் பிரதானகாரணவாதம் நிஷ்பிரமாணம் என நிரூபிக்கப் பட்டது. இதன்மேற் பரமாணுக்கள் (உலக) காரணமாம் எனக்கொள்ளும் மதத்தை நிரசனஞ் செய்யும் பொருட்டெழுந்தது இந்த இரண்டாம் அதிகரணம்.

ஷஹதீர்க்வதா ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம் (உ. உ. க0)

(காரணம்) இருஸ்வ பரிமண்டலங்களிலிருந்து மகத்தீர்க்கம் உண்டாவது போல.

ஈண்டு வைசேடிகமத சித்தமாகிய பரமாணுகாரணவாதம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானே உலக அதிஷ்டாதாவாகப் பிரதான மதம் அங்கிகரியாமையின், பிரதானத்தை உலகாரணமாகக் கோடல் விருத்தமென்று தவிர்க்கப்பட்டவிடத்தும், பரமாணுகாரணவாதம் யுக்தம். அங்ஙனமாயின் உலகம் ஒடுங்கிப்போக, சிவபெருமான் சிருட்டிக்க விரும்பும்போது, பிராணிகளுடைய கன்மவசத்தினால் நிச்சலமாகிய பரமாணுக்களிலே மூதற்சிருழில் நிகழ்கின்றது. இத்தொழினிகழ்ச்சியின் ஓர் பரமாணு மற்றோர் பரமாணு வோடியைகின்றது. இதின் சேர்க்கையிலிருந்து தவிய ணுகம் ஒன்று உய்துகின்றது. மூன்று தவியணுகள் சேர்ந்து திரிய ணுவையாகுகின்றது. இந்தக் கிரமமாக உலகம் முழுமையும் சிருட்டிக் கப்பட்டது. ஆகலின், பரமாணுவைக் காரணமாகக் கோடல் விரோதம் அன்றும் எனின்,

(சித்தாந்தம்) வருமாறு. கணதமதப்பிரகாரம் இருஸ்வத்திலிருந் தும் பரிமண்டலத்திலிருந்தும் மகத்தீர்க்கத்துவம் பொருந்திய திரிய

துகளும் அணுத்தலவிருஸ்வத்தலம் பொருந்திய துவியணுகமுழ் முறையே தோற்றுகின்றன. இஃதெங்ஙனம் பொருந்தும்? அஃதாமாறு:— பரமர ணுக்கள் பரிமாண்டல்லிய பரிமாணமுடையனவேயன்றி அணுப்பரிமாண முடையனவன்று. அணுப்பரிமாணமற்ற இரு பரமாணுக்களிலிருந்து அணுப்பரிமாணமாயுள்ள துவியணுகம் உண்டாகின்றது என்றும் அறியப் படுகின்றது. அங்ஙன்மே இருஸ்வ பரிமாணமுடையதாய்த் தீர்க்கப் பரிமா ணமற்றதாய துவியணுகம் மூன்று கூடி, தீர்க்க பரிமாணமுடையதும் அணுப்பரிமாணமற்றதுமாகிய திரியணுகத்தை உண்டாக்குகிறதென்றும் அறியப்படுகின்றது. இவையெல்லாந் தவறே; அவர்கள் அங்கீகரிக்கும் காரணத்தின் குணம் காரியத்திலே தோற்றவேண்டும் என்னும் பிரக்கிரியை (தொடர்ச்சி) விரோதமுறுதலின். அவயவங்கள் தம் ஆறு பக்கங்களுடன் இயைந்து பெரிய அவயவியை உண்டாக்குகின்றன. பரமாணுக்களுக்குப் பக்கமின்மையின் அவையெல்லாம் ஓர் பெரும் பொருளே ஆக்க இயையா. ஆகலின், பரமாணுகாரணவாதம் யுக்தம் அன்று. (கo)

சூத்திரகாரர் மற்றோர் பொருத்தமின்மை காட்டுகின்றனர்.

உபபத்யதஏவ சோ–பபத்திஸம்ஜ்ஞாப்யாம் (உ. உ. கக)

(கஅநு) ஈரிடத்தும் கருமமில்லை; ஆகலின் அஃதின்று.

அணுக்களிடத்து முதற்கண் கன்மமின்மையின், அக்கன்மத்தால் இயலும் இசைவும் இல்லையே. ஆன்மாக்களுடைய அதிஷ்டகன்மம் பக்கு வப்படவேண்டாதாயின், அணுக்களிடத்திற் சேர்ந்த கன்மம் முன்னரே உற்பத்தியாகலாமே. அது (பக்குவம்) வேண்டுவதாயின், அதனைச் சில வேளைகளிலே தோற்றற்பாலனவாகிய அணுக்களிடத்திற் கன்மம் நிக ழாது. விபாகம் என்பது கன்மத்தின் ஓர் தர்மமன்று. ஆனல் எந்தக் கன்மானது எக்காலத்தில் விதிப்படி எவ்விதபலனைக் கொடுக்கவேண்டு மோ, அந்தக் கன்மத்துக்கு அக்காலம் வாய்ப்பதே விபாகம்; காலவிசே ஷம் நியமிக்கப்படாத கன்மங்களுக்குப் பிரபலமாகிய மற்றோர் கன்மம் இடையூறுகாததும் விபாகம். அதிட்டங்கள் என்பன அவ்வக்கன்மத்திற் கேற்ற தகுதியாய பயனைக் கொடுக்கும் இயற்கையுள்ளவைகள். ஆகலின், வெவ்வேறு காலத்தின் பயனைக் கொடுக்கூடியவாய் அனந்த ஆன்மாக் களிட்டித்த கன்மங்களுக்கு ஒரே காலத்தில் ஒரேவிதமான விபாகம் பொருந்தாது. ஆகையாற் பரமாணுகாரணவாதம் யுக்தமன்றே. (கஅ)

இன்னும் பொருந்தாமையைச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸமவாயாப்யுபகமாச்ச ஸ்யாதி–நவஸ்துதஃ (உ. உ. கஉ)

(கஅசு) சமவாயம் என்பது அங்கீகரிக்கப்படலாலும்,

**(சமவாயத்திற்கும் ஒருசம்பந்தம் வேண்டுமென்னும்) சாமியத்தினால் அநவஸ்தை நேர்கின்றமையாலும்.**

சமவாயம் என்னும் சம்பந்தமானது அங்கீகரிக்கப்படுகின்றது. ஆகலின், இது பொருத்தமின்று. அஃதெங்ஙனம்? சாதிகுணமுதலியவற்றுக்குப் போலப் (பதார்த்தங்களுக்குச்) சமவாயசம்பந்தம் உள்ளதாக, மேன்மேல் முடிவின்றி வேறுகிய ஓர் சம்பந்தம்கோடல்வேண்டுமாதலின், அந்தக் கணமதம் யுக்தமன்று. (கஉ)

நித்யமேவ (உ. உ. சூசு)

**(சூத்திரம்) (அங்கங்களும்) நித்தியமே; (சமவாயம்) உளதாகலின்.**

சமவாயம் நித்தியமாம் என அங்கீகரிக்கப்படுதலின், சம்பந்தப்படும் பொருள் நித்தியமிலாதிருப்பச் சமவாயம் நித்தியமாதல் கூடாது; இதனால் அவயவ அவயவிகளும் நித்தியமாக நேரும்; ஆகலின் இது யுக்தமன்று. (சங)

ரூபாதிமத்த்வாச்ச விபர்யயோ தர்சநாத் (உ. உ. சச)

**(சூத்திரம்) ரூபமுதலியன உண்மையானும், (அனுபவத்தில் அவற்றின்) வேறுபாடு காணப்படலான்.**

பரமாணுக்கள் ரூபமுதலியவுடைய என்பது அங்கீகரிக்கப்படுகின்றது. அதனால் (நாம் காணும் கடாதிகள் போல) அவை நித்தியமாகா; எதனால்? (ரூபமுதலியவற்றையுடைய) கடாதிகளிற் காணப்படலான். அது அசாமஞ்சசம். (சஎ)

உபயதாச்ச தோஷாத் (உ. உ. சஅ)

**(சூத்திரம்) இருதிறத்தானும் தோஷமுண்மையின்.**

அநித்தியத்துவ தோஷத்தை நீக்குமாறு பரமாணுக்களுக்கு ரூபமுதலியன இல்லை என்று கொள்ளின், (காரியமானது) காரணகுணத்தை முன் உடைத்தாதல் வேண்டுமென்னுங் கொள்கை பொருந்தாது. காரியமானது காரணகுணத்தை முன்னுடைத்தாதலென்னுங் கொள்கை சித்திப்பதற்கு மீண்டும் ரூபமுதலியவற்றை அங்கீகரிப்பின், அநித்தியத்துவ முதலிய அநர்த்தம் விளைகின்றது. ஆகலின், இருதிறத்தானும் குற்றம் நேர்தல்பற்றிக் கணமதம் அசாமஞ்சசம். (கஅ)

அபரிக்ரஹாச்ச நைவம் (உ. உ. சக)

**(சூத்திரம்) அங்கீகரிக்கப்படாமையானும் அது முற்றும் வேறும்.**

சாங்கியமும் சருத்திக்கும் நியாயத்துக்கும் விரோதமுமாம். (தொற்றத்துக்கு முன்னும் காரணத்திற் காரியம் உளது என்னும்) சற்காரியவாத முதலிய சில அம்சத்திற் சாங்கியம் வைதிகரால் அங்கீகரிக்கப்படுகின்றது. கணிதமதம் எந்த அம்சம் பற்றியும் அங்கீகரிக்கப்படாமையான், மூலட் சுக்களால் இது முற்றும் பரமுகஞ் செய்யற்பாற்று. (கசு)

## (கூ) சமுதாயாதிகரணம்.

(பௌத்தரிற் சமுதாயகாரணவாத நிராகரணம்)

ஸமுதாய உபபத்தேஶ்சலமி கதவ்யாஸ்ஸ (உ. உ. கள)

(ககூக) இரு காரணத்துக்குரிய தொகுதியினும், அது (தொகுதி) நிகழ்கின்றது.

ஏகதேசவைதிகர் மதம் நிராகரிக்கப்பட்டது. இப்போது வேதபாயருடைய மதம் கண்டிக்கப்படுகின்றது.

முதற்கண் பௌத்தமத சித்தாந்தங்களிலே கூறப்படும் சமுதாயகாரணவாதம் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம். பின் வருமாறு இங்ஙனம் கூறுகின்றனர்; புறமும் அகமும் எனச் சமுதாயம் இருதிறப்படும். புறச்சமுதாயம் பிருதிவி முதலியவாம். அகச்சமுதாயம் சித்தசைதன்னியம். சமஸ்தப்பிரபஞ்சமும் இரு சமுதாயத்துள் அடங்கும். எங்ஙனமெனின், புறச்சமுதாயத்துக்குப் பரமாணுக்கள் காரணம். அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு என நால் வகைப்படும். இவைகளிலிருந்து ஒரேமுறையிற்றோற்றி இசைந்தே புறச்சமுதாயம் உண்டாகின்றது. அகச்சமுதாயத்திக்கு ஐந்து ஸ்கந்தம் காரணம். அவை ரூபம், வேதனை, விஞ்ஞானம், சம்ஞானம், சம்ஸ்காரம் என்பவைகளே. மனசினல் அறியற்பாலனவாய சத்தப்பரிச ரூபமுதலியவைகளே ரூப ஸ்கந்தம். அதின் வெளிப்படுகை விஞ்ஞானஸ்கந்தம். இதினுலுண்டாகியதுக்கம்வேதனாஸ்கந்தம். தேவதத்தன்முதலிய பெயர்கள் சம்ஞாஸ்கந்தம். இவற்றுள் வாசனை சம்ஸ்காரகந்தம். இவைகள் ஒன்றுக இசைந்து நிற்க அகச்சமுதாயம் உண்டாகின்றது. இங்ஙனம் இரு சமுதாயகாரணவாதம் விரோதமுமாம் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கப்படுகின்றது. இரு சமுதாயகாரணவாதமும் பொருத்தம் இன்று. அவர்கள் (புத்தர்கள்) க்ஷணிகவாதிகள்; காரணம் க்ஷணிகமாதல்பற்றி அப்பொழுதே நட்ட முற அது காரியத்தை ஆக்க மாட்டாமையான், அவைகளுக்கு (க்ஷணிகங்களுக்கு) சமுதாயம் எங்ஙனமாம்?

உதரொதர வுகுயகூஉவவஜிசி வெஜ வஸவுரிஜாவா திஜிதஜாஜ (உ. உ. கஅ)

(ஈஞஉ) (அவித்தையும் இராகாதிகளும்) ஒன்றுக கொன்று காரணமாதலின் அது கூடுமாமெனின், அன்று; (அவித்தை) சமுதாயத்தை ஆக்கமாட்டாமையின்.

(புத்தன்) நிலையில்லாததை நிலையெனக்கொள்ளும் அவித்தையும் இராகாதிகளும் ஒன்றுக்கொன்று காரணமாயிருத்தலின், இந்தச் சமுதாயம் கூடுமாம் எனின்,

(சித்தாந்தம்) அன்று; அவித்தை சமுதாயத்தை ஆக்காமையின். அவித்தை காரணமாக இப்பியானது வெள்ளியாகத் திரித்துணரப்படுங்கால், அவ்விப்பி முதலியன வாஸ்தவத்தில் வெள்ளிமுதலியவற்றின் காரியத்தை ஆக்கா; அறிவுடையானுக்கு அப்பொழுதே அத்திரிவுணர்ச்சி நீர்தலின். அவித்தை காரணமாக இராகாதிகளும் எய்தமாட்டா. ஆகலிற் சமுதாய காரணவாதம் அயுக்தம். (கஅ)

(சூத்திரகாரர்) மற்றோர் யுக்தி கூறுகின்றனர்.

உதரொதாதெ உவலிவஜிரொயாஜ (உ. உ. கஞ)

(கஞஈ) முந்தியது நட்டமாகுங்கால், பிந்தியது உற்பத்தியாதலின்.

பிற் கடம் உற்பத்தியாகுங்கால், முற்கடம் நஷ்டமாகின்றது. அப்பாவமே காரணமாக யாண்டும் உளதாதலின், எக்காலமும் எங்கும் உற்பத்தியாகலாம். (கஞ)

ஹஸதி வுகிஜொவரொயொ யெஸவஜ்ஜிஜ்யா।

(உ. உ. உ0)

(கஞச) சத்து இல்லையானுற் பிரதிஞ்ஞாவிரோதம்; இன்றேல் ஒரேமுறையில் நிகழ்வது.

காரணமில்லாமலே காரியம் உற்பத்தியாவதேல், (இந்திரியம் பிரகாசமுதலாயினவே) ஞானத்துக்குக் காரணம் என்னும் கோட்பாடு விரோதமாகும். *(காரியமாகும் வரையிற் பூருவகட அபாவகாரணம்) உளதென்று கொள்ளின், இரு குடங்கள் ஒரே முறையில் இருப்பக் காணலாம்; (காரியமாகும் வரையிற் காரணம்) இல்லையேல், (பொருளுக்கும் இந்திரியத்துக்கும்) இசைவாகிய அறிவுக்கும் ஏககாலநிகழ்ச்சி எய்தும். (உ)

* இந்திரியத்துக்கும் பொருளுக்கும் சம்பந்தமாய்ப் பின்னர்த் தோற்றத்தால் தான் அறிவு ஏகசித்தனதாம் என்னும் தோஷம் நிகழும் என்பது தாற்பரியம்.

ஸ்தூலஸ்வ ஸ்தூலஸ்வ நிரோயா ஸ்வாஸ்தி ஸ்ரீஹரிஹர.
(உ. உ. உச)

(ஸ்தூல) நாசமும், (சூக்கும) நாசமும் எய்தா; (சந்தான திரவியம்) உண்மையான்.

நிரோதம் என்பது மீதமின்றி ஒழிவது. அந்தவிநாசம் ஸ்தூலவிநாச மாகவாவது சூக்குமவிநாசமாகவாவது இராது; கபாலாதி ரூபத்தையடைந் தவிடத்தும் கடம் நாசமுற்றதெனச் சொல்வதினாலும்; சத்தாகிய திரவியம் அழியாமையினாலுமாம். அதுகொண்டு க்ஷணிகத்துவ வாதஞ் சித்தி யாது. (உக)

உபயரூப ஹெஷாஸ (உ. உ. உஉ)

(ககூசு) இருதிறத்தும் தோஷமுண்மையான்.

தோற்றப்பட்டது இன்மையாவதும், இன்மையிலிருந்து உற்பத்தியா வதும் பொருந்தா; இன்மையிலிருந்து உற்பத்தியாதல் கூடாமையானும், இன்மையாகுங் காரியமே உற்பத்தியாகுமென்னும் தோஷமுண்மையானு மாம். ஆகலின், இந்தக் கோட்பாடு ஒவ்வாது. (உஉ)

ஆகாஸ நாஸ்தித்வாஸ (உ. உ. உங)

(ககஎ) ஆகாயத்திலும் வேறுபாடின்மையான்.

ஆகாயத்தையும் சூனியம் என்று கோடற்பாற்றன்று; பருந்து முத லிய பட்சிகள் பறத்தற்கியன்ற பூதமாக அதனுண்மை தவிர்க்கப்படாது அனுபவஞ் சித்தித்தலான். (உங)

க்ஷணஸ்தித்வாஸ (உ. உ. உச)

(ககூஅ) நினைப்பூட்டுகையானும்.

நினைப்பூட்டுதல்பற்றியும் க்ஷணிகவாதம் நிலைக்காது. "அதுவே இது" என்னுமிடத்துச் சாமாநாதிகரணியத்திலும், சென்றகாலத்துக்கும் நிகழ்கா லத்துக்குமுரிய வஸ்து ஒன்றென்று அறியப்படுகின்றது. முன் அனுபவத்தி லுண்டாகிய சம்ஸ்காரமுடைய புருஷனது இந்திரியசம்யோகமே அதற் குக் காரணமாகின்றது. ஆகலின், க்ஷணிகத்துவமுதலாகிய பொருந்தாத அர்த்தத்தைச் சொல்வதிற் சமுதாயகாரணவாதமானது முற்றும் தவ றும். (உச)

## (ச) திருஷ்டத்துவாதிகரணம்.

(பௌத்தரில் ஞானநமேயத்துவவாதநிராகரணம்)

பாஹ்யார்த்த க்ஷணிகவாதிகளுள்ளே, பசு கடமுதலாகிய பிரத்தியு

கூத்தினல் அறியப்படுவனவாம் என்னும் பௌத்தர் கோட்பாடு நிரசிக்கப் பட்டது. (பாகியார்த்தங்களின் ஆஸ்திகம்) அறிவினல் அனுமானிக்கப்படும் என்னும் வாதிகள் நிரசிக்கப்படுகின்றனர்.

நாஸதோ zஉ்ஷுகூஸ (உ. உ. உடு)

(ககூக) அசத்திலிருந்து (தர்மம்) இல்லே; காணப்படா மையான்.

(பாகியார்த்தங்களின் இருப்பு) அறிவினல் அனுமானிக்கப்படல்வேண் டும் என்னும் ஓர் சார் பௌத்தர்களின் கொள்கை யுக்தமா? அன்று? என் பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஒருபொருள் தான் நாசமுறுங்கால் தன் உருவை அறிவிற் புகட்டி அழிகின்றது. அறிபவன் அப்பொருளே அறிவின் வைசித் திரியத்தைக் கொண்டு அநுமானிக்கின்றன். ஞானவைசித்திரியத்தினல் அர்த்தவைசித்திரியம் அனுமானிக்கப்படுகின்றதெனின்,

(சித்தாந்தம்) இது இசையாது; அர்த்தம் க்ஷணிகமாதலினலும், இல் லாதொழிந்துபோய தர்மியின் தருமம் மற்றொன்றுக்குச் செல்லக் காணப் படாமையானுமாம். (உடு)

உஉஸீநா நாஸிஷி வெஷவ வஸிஸ: (உ. உ. உசு)

(உ00) இங்ஙனமாயின் உதாசீனருக்கும் சித்தி எய்தும்.

க்ஷணிகத்துவத்தை அங்கீகரிப்பின் ஒருவன் ஒன்று செய்ய மற்றவன் பலத்தை அடைபவனுவன். ஆகலின், பிரயத்தனம் எதுவும்செய்யாதவர்க் கும் சர்வார்த்தசித்தியும் எய்துவதாம். இங்ஙனம் இவர் கோட்பாட்டை விளக்குதல் கஷ்டம். (உசு)

## (நு) உபலப்தியதிகரணம்.

---

(பௌத்தர்விஞ்ஞானமாத்திரவாதநிராகரணம்)

நாஹாவ உவஷவஸ்ஷ: (உ. உ. உஎ)

(உ0க) (பாகியப்பொருள்) அபாவமாகாது, அறியப் பட்டலான்.

ஈண்டுப் பௌத்தருடைய கேவல விஞ்ஞானவாதம் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம், வடிவத்தோடு கூடிய விஞ்ஞானமே அகத்தத்துவம்; புறப்பொருள்கள் தத்துவமன்று; சொப்பனத்திலே புறப்

பொருள் வேண்டாது கேவலம் புத்தியினலே வியவகாரம் நிகழக்காணப் பீடலான். இங்ஙனம் சாக்கிரவியவகாரத்துக்கும் வியவஸ்தை பொருத்த மாகும். ஆகலின், விஞ்ஞானமாத்திரம் தத்துவமாம் எனின்,

(சித்தாந்தம்) கடத்தை அறிகின்றேன் என்னுமிடத்து அறிபவனுக் குச் செயப்படுபொருளாய பொருள் தோன்றுதலால், அதை இல்லை என்று மறுத்தல் கூடாது. விசேஷ பொருளே வியவரிக்குமாறு புருஷனுக்குத் தக்கவாறு தோற்றுவிப்பதே ஞானத்தின் ஆகாரம். (உஎ)

சொப்பனதிருஷ்டாந்தவாயிலாகச் சாக்கிரவியவகாரமும் சூனியமாம் என்றதற்குச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வெயசூ)ஷாஜ ந வுவாழிவஜ (உ. உ. உஅ)

(உ0உ) பேதமுண்மையினலும் சொப்பனதிபோலன்று.

இந்திரியதோஷத்தின் வாதை இல்லை என்னும் வேறுபாட்டாற் சாக் கிரவஸ்தை சொப்பனம்போல் மித்தையாகாது. ஆகலின், விஞ்ஞானமாத் திரம் தத்துவமன்று. (உஅ)

ந ஹாவொzநூவுமஜூஜீ (உ. உ. உகூ)

(உ0கூ) அறிவில்லாவிடத்துப் பொருளில்லை.

பொருள் சூனியமாமிடத்து ஞானம் எய்தாது; அந்த ஞானம் யாண் டும் அனுபவத்திற் காணப்படாமையான். சொப்பன ஞானத்துக்கும் பொருள் இருக்கின்றது. ஆகலின், விஞ்ஞானமாத்திரவாதம் பொருந் தாது. (உகூ)

## (கூ) சர்வதாநுபபத்தியதிகரணம்.

(சர்வசூன்னியவாதநிராகரணம்)

வஷூயாzநூவவஜெதூஷ (உ. உ. கூ0)

(உ0ச) எப்பிரகாரத்திலுலும் அது பொருத்தமின்மை யாலும்.

ஈண்டுச் சர்வசூன்னியவாதம் யுக்தமா? அன்ரு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம். எங்ஙனமெனின், உலகமுமுமையும் சத்தன்று, பாதிக்கப்படலான். அசத்துமன்று, அறியக்கிடத்தலின். இரண்டும் அன்று, விரோதமுறுதலான். இரண்டும் அன்றெனலும் கூடாது, அசம்பவமாதலின். ஆனல் இந்த நான்கினும் அடங்காத எல்லாம் சூன்னி யமே. பிரத்தியக்ஷக்காட்சியோ எனின், அது மாயை மூலமாய்ப் போந் தது. ஆகலின், சூன்னியவாதந்தான் நன்றும் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. எல்லாம் சூன்னியம் என்பது கூடாது. எதனால்? பிரபஞ்சத்தைச் சத்து என்றுவது, அசத்தென்றுவது, மற்றொன் றென்றுவது கூறுமிடமெல்லாம் சூன்னியத்துவம் எய்தாது; சத்து அசத்து என்னும் மொழிகளும் அவற்றின் கருத்துக்களும் வஸ்துவைப்பற்றி ஒன் றுக்கொன்று வேறுபாடாகிய உளது இலதென்னும் அவஸ்தாவிசேஷங்க ளைப் பற்றியவாமாதலின். பிரத்தியக்ஷக்காட்சி அவித்தையினாலாம் எனின், அது பரிகாசத்துக்கிடனும். எல்லாஞ் சூன்னியமாயின் அவித்தைக்கு ஆசிரயமாயுள்ளது யாது? எதற்கு இத்தோற்றம் நேர்ந்தது? ஆகலின், சர்வசூன்னியவாதம் முழுமையும் விரோதமே. (ஈ0)

பௌத்தமதம் தீர்ந்தது. சைனமதம் கண்டிக்கப்படுகின்றது.

## (எ) ஏகஸ்மிந்நசம்பவாதிகரணம்.

---

மெய்ஞ்ஞானிஞலாலுலாவுகை (உ. உ. ஈக)

### (உ0நி) பொருந்தாமைபற்றி ஒன்றிற் (பல) இல்லை.

(சைனமதவாதநிராகரணம்)

சப்தபங்கிந்யாயத்தினாற் சைனர்கள் ஒரே பொருளினும் பலதிறத்த வஸ்துதைகளை விளக்குகின்றனர். இவர்கள் மதம் யுக்தமா? அன்று? என் பது விசாரம்.

அவர்கள் மதம் வருமாறு:— ஆன்மா அநான்மா எனப் பதார்த்தங் கள் இரண்டு உள. ஆன்மா சேதனன்; சரீரபரிமாணமுடையன்; அவயவ முடையன். அநான்மா அறிவிலாதம். (அவற்றுள்) ஒன்று வனம் மலை முத லிய; எஞ்சிய ஐந்தும் ஆசிரவம், சம்வரம், நிர்ஜரம், பந்தம், மோக்ஷம் என் பன. ஆசிரவம் என்பது இந்திரியத்தொகுதி. இவை வாயிலாக ஆன்மா புற விஷயங்களிற் பற்றுகின்றது. சம்வரம் என்றது அவிவேகம். இத னால் விவேகம் மறைக்கப்படுகின்றது. நிர்ஜரம் என்பது தவம்; அது மயிர் பறித்தல், சுடுகல்லேறல் முதலியவாம்; காமக்குரோத முதலியவெல் லாம் இதனால் ஒழிந்துபோகின்றன. பந்தம் என்பது எண்வகைக் கருமங் களினால் எய்தும் ஜன்மபரம்பரை;(அவையாவன):— இம்சை செய்யும் நால் வகைப் பாவச்செயல்களும், இம்சை செய்யா நால்வகைப் புண்ணியங்களு மாம். மோக்ஷம் என்பது இக்கருமங்களினின்று வீடுறும் ஆன்மா இடை விடாது மேற்கதி அடைதலாம். இந்தச் சப்த பதார்த்தங்கள் சப்தபங்கி நியாயத்தினால் ஸ்தாபிக்கப்பாலன. அவை இவை:— உண்டாம் உண்டு; உண்டாம் இல்லை; உண்டாம் உண்டுமாம் இல்லையுமாம்; உண்டாம் சொல் லொணாததாம்; உண்டாம் உண்டுமாம் சொல்லொணாததுமாம்; உண்டாம்

இல்லையுமாம் சொல்லொணாததுமாம்; உண்டாம் உண்டுமாம் இல்லையுமாம் சொல்லொணாததுமாம் என்பன சப்தபங்கிநியாயம். உண்டாம் என்பது சிறிது என்பதின் மேற்று.

ஆகலின் சப்தபங்கிநியாயத்தினுற் சப்த பதார்த்தம் சித்திக்கின்றதெனல் அயுக்தம். எதனால்? உளதாதலும் இலதாதலும் நித்தியமாதலும் அநித்தியமாதலும் பேதமாதலும் அபேதமாதலும் ஒரே பொருளில் இருத்தல் கூடாமையின். ஒன்றன்பின் ஒன்றுகத் தோன்றிய மட்பிண்டம் கடம் கபாலம் என்பவைகள் உளவாதலும் இலவாதலுமாம் ஒன்றுக் கொன்று மாறுகிய அவஸ்தைகள் ஒரே பதார்த்தத்தில் ஒரே காலத்தில் ஒருங்கிரா. ஆகலின், சைனமதம் விருத்தம். (கூக)

வஸவஇரா ஆzகாஸ்ரீ்நி்ழ (உ. உ. கூஉ)

(உ0சு) இங்ஙனமும் ஆன்மாவுக்குப் பூரணமின்மை.

இங்ஙனம் ஆன்மாவுக்குப் பூரணமின்மை பொருந்தாது. ஆன்மா சரீர பரிமாணமுடையதேற் பெருஞ் சரீரத்திருந்து சிறு சரீரத்துக்குப் பிரவேசிக்குங்காற் குறைவு நேரிடுமே. ஆகலின், ஆன்மாவைச் சரீர பரிமாணமுடையதெனல் அயுக்தமே. (கூஉ)

ந ஈ வயு-ர்யாடீஉ்விரொயொ விகாராதிஹ்ஃ (உ. உ. கூஊ)

(உ0எ) (மாறி மாறி) வேறுபடுதல்பற்றியும் அவிரோதமில்லை, விகாரமுதலியவுண்மையான்.

ஆன்மா அவ்வவ் வடிவத்துக்கியைந்த உருப்பெறுமெனினும், முன் உரைத்த பொருத்தமின்மை நீராது; ஆன்மா கடாதிபோல விகாரமடைகின்றதென்னும் தோஷமுறலான். (கூஊ)

கஇ்யாவஹ்ரிதஸ்ரொஅயதி்யுஷாடிவிஸெஷிஃ (உ. உ. கூச)

(உ0அ) இறுதி நீலை காரணமாக இரண்டும் நித்தியமாதலிற் பேதம் இன்று.

இறுதி முத்திதசையிலே பரிமாணம் ஏகரூபமாயிருத்தலின், இயற்கையாய் ஆன்மாவும் அதன் பரிமாணமுமாகிய இரண்டும் நித்தியமாயிருப்ப, முக்திய தசையிலும் பேதமிலதாகும். பல்வகைப் பரிமாணமுடையதென்பதிற் குறைவே நேரும். ஆகலின், ஒன்றில் உளது இலதென்னும் வாதத்தினலும், ஆன்மா தேகபரிமாணமுடையதென்னும் வாதத்தினலும் சைனமதமும் தவறும். (கூச)

(எ) பாசுபதாதிகரணம்.

(பூருவாசாரியர் கொள்கைப் பிரகாரம்
அவைதிக நகுலீச பாசுபதமத நிராகரணம்)

வகை²ரவாம்ஜவ்யாக (உ. உ. கூடு)

(உ0க) பதி (நிமித்தகாரணமாதல் இன்று), பொருத்தமின்மையின்.

(மாயாதத்துவத்து வைரும் ஒர்) ருத்திரர் அருளிய (அவைதிக பாசுபத) ஆகமஸிஷ்டராய் அதன் மதப்பொருள் அறியாதவராயுள்ள ஏகதேச தாந்திரிகர் *(அவைதிகபாசுபதர்) பதியாகிய சிவபெருமான் சுருதிமுடிவின்

---

* (பூருவாசாரியர் கொள்கைப்பிரகாரம்) ஸ்ரீநீலகண்டசிவாசாரியராலும், சங்கராசாரியராலும், இராமானுஜாசாரியராலும், மத்துவாசாரியராலும், இந்தப் "பாசுபதாதியதிகரண" த்தினும், நீலகண்டசிவாசாரியராலும் சங்கராசாரியராலும் "பாஞ்சராத்திராதிகரண" த்தினும் நிராகரணஞ் செய்யப்பட்ட மதங்கள் முறையே அவைதிகபாசுபதமும் பாஞ்சராத்திரமுமாம்.

வ²ரா டார²வதெந வ²ணை² ம²நயொ ஹ்ருஹயெயிநம்|
ஸ்ரஸ்ஷ்வராராய நாமோ²ய கவயெஸ்ரு²ர² ஸ்ஹஹஸ்ரு²ம்|
கதம் கூடாஜிநஹதீ காலயொமெந ஜ²ஸ்ரு²ம்|
கூநாவ்ருஷி ரதீவொ ஹ்ராஹ்யாவீஜ்ஜ²கவி நாஸி நீ|
வஸைது வவெ²ம ம²நயொ மெளகமே கவஸ்ர² நியிழ்|
கூயாஜ²த கூ²ரவிஷ்டா கூஹாரஸ வ்ராணயாரணிழ்|
வ மெதஜூம் வ்ரடிடாவஜ்ஜ² ம்ருஷ்ட² வஜ்ஹ²தாரஸ ம²ஷ்டா|

"முன்னோர்கால் நிரகல்தாச்சிரமிகளாகிய முனிவர் ஆயிரக்கணக்காயினோர் நிய மாகிய தாருவனத்திலே சிவாராதனையின் பொருட்டுத் தபஞ்செய்துவந்தார்; கால பேதத்தினுல் ஒர் காற் பெரிதாயதும், கடத்தற்கரியதும், அதிக உக்கிரமுடையதும், உயிர்களே வதைக்கற்பாலதுமாய ஓர் துர்ப்பிக்ஷம் உண்டாயிற்று; அப்போது தபசுக்கு நிதியாயுள்ள கௌதமரை அம்முனிவரெல்லாம் அடைந்து பகியினுல் வரும் இப் பிராணதாரமாகிய ஆகாரம் வேண்டுமென அவரை யாசித்தார்கள். அம்முனிவர் அவர்கட்கு பிருதியாகப் பாகஞ்செய்யப்பெற்ற அன்னமளித்தார்;" பின்னர் அவர்கள் அச்சம் யாதுமின்றி அவரது ஆச்சிரமத்தில் இருந்து பன்னிரு வருஷம் உண்டு வருவாராக, துர்ப்பிக்ஷம் நீங்கிற்று; மழைபெய்து நாடு செழித்தமையால் அவர்கள் அவ்வாச்சிரமம் விடுத்துத் தம்முறைவிடம் போதற்கு முயன்று முனிவரிடம் வந்து அநுமதிகேட்க, அவர் பின்னும் சிலகாலம் தமது ஆச்சிரமத்திருந்து சுகமே உண்டு வாழுமாறு கூறி, அவர்களைப் போகவண்ணம் தடுத்தார்; அப்போது அம்முனிவர்கள் மாயாரூபமாகிய கரிய பசுவொன்றை (மந்திரத்தினுல்) ஆக்கி, கௌதமர் சமீபத்தில் நிற்குமாறு செய்ய, அம்முனிவர் அப்பசுவைக் கோட்டத்திற் கொணர்ந்து கட்டித் தொட்டமாத்திரத்தில் அது வீழ்ந்திறந்தது; இவ்விஷயத்தை முனிவர் அறியாது கோஹத்தி நிகழ்ந்துபோயிற்றே என்று சோகித்தார்;

ரொவஜ்ஜ்யம ஜ்ஜ்ரொஷ யாவத்வ ஸரீரஹா|
தாவத்தzஹம நலொத்தவ்யம ஹ்ருதாஶ வய ஜெவஹி|

"(அம்முனிவர்கள் கௌதமரை நோக்கி) விப்பிரசிரேஷ்டரே! இது பசுக்கொலை; நமது சரீரம் நீங்கும் வரையும் நமது அன்னம் புசிக்கற்பாலதன்று; நாங்கள் (இவ்விடம்விட்டுப்) போகின்றோம்" என்று கூறிப் போய்த் தமது தாருவனத்தை அடைந்

படி உபயகாரணமுடையராயவிடத்தும், கேவலம் நிமித்தகாரணவாதம் கூறு கின்றார்கள். இது யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

---

தார்கள்; இவர்கள் மாயத்தினுல் நேர்ந்த கோவதையைக் கௌதமமுனிவர் அறிந்து அவர்களைச் சபித்தார்;

ஸவிஷ்ருக்கி தரயீவாஹ்யா ஃஹாவாதகிஹிஸ்வரோ|
ஸஹாஸ்ரவெஷ்தயா ஸ்ராவாஜ்ஜாயரோ நரோ வ்ருநீ வ்ருநீ|
ஸவெஷ் ஸவ்ரூவ்ருதெவெஸ்ரு ஸ்ருகுஸ்ரு விஷ்ணு வேயுயு|

"மகாபாதகிகளே நிகர்த்து வேதபாகியர்களாய் ஆவார்கள் என, அவர்கள் அதேக மாய்ச் சாபத்தினுல் மீட்டும் மீட்டும் பிறந்து, (மாயாதத்துவ) உருத்திரரையும் அவ் வியயராகிய நாராயணரையும் அடைந்து ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; அப்போது உருத்திரர் (அவைதிக) பாசுபத முதலியவற்றையும், நாராயணர் பாஞ்சராத்திர முத லியவற்றையும் அச்சாபமுற்ற முனிவர் ரக்ஷணார்த்தமாக உண்டாக்கினர்கள் என்று உபரிடத உபக்கிரமணிகை கூ-ஆம் இலக்கத்தினுற் பெறப்படுகின்றது. சாப முற்ற முனிவர் இரக்ஷணார்த்தமாக அவைதிக பாசுபதமுதலிய இயற்றப்பட்ட இவ்வுண்மை கூர்மபுராண பூருவபாகத்து கசு-ஆம் அத்தியாயத்தினும், தூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டத்து கூ-ஆம் அத்தியாயத்தினும் காணப்படுகின்றது. ஆக லின், இவ்விரு அதிகரணங்களும் அவைதிகபாசுபத பாஞ்சராத்திரமத நிராகரணங் களின் மேலனவாம்.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியரால் உ. உ. கூ-ஆஞ் சூத்திரபாஷ்யத்தில் அவைதிக பாசுபதத்தை நிராகரணஞ்செய்து, பின் அவர் சித்தாந்தமாக ஸ்தாபித்த பாசுபதம் வைதிக பாசுபதமாம் என்பதும், அவைதிக (அசிரௌத) பாசுபதம் வைதிக (சிரௌத) பாசுபதம் எனப் பாசுபதம் இருவிதப்படும் என்பதும், உபரிடத உபக்கிர மணிகை கூ-ஆம் இலக்கத்தினுல் அறிக. இந்த அவைதிக பாசுபதம் அகப்புறச் சமயத்துள் ஒன்றாக வைத்து ஸ்ரீசிவஞானசுவாமிகளால் திராவிட மகாபாடியத்திற் கணிக்கப்பட்டிருக்கின்றது. அங்ஙனத்துக்காதாரம் விந்து, வித்துக்காதாரம் தூளிர் க்சி, தூளிர்ச்சிக்காதாரம் நிலமாமாறு போல, பிரபஞ்சத்துக்காதாரம் மாயை, மாயைக்காதாரம் சிவசந்நிதி, சிவசத்திக்காதாரம் சிவபிரான்; நிலம் குளிர்ந்தவிடத்து அதன்கட்கிடந்தவித்து முளையைத்தோற்றுவிக்குமாறு போல, சிவசத்தி சங்கற்பித்த போது மாயையினின்று பிரபஞ்சம் தோன்றும் என்று சிவஞானபோதம் கூறுமாற் ருற் பிரபஞ்சம் மாயையுள் அடங்கியதென்றும், மாயை சத்திக்குள் அடங்கியதென் றும், சத்தி சிவனுர்க்குள் அடங்கியதென்றும் சிவதருமோத்தராதி ஆகமங்களினுற் பெறப்படுகின்றது. பிரபஞ்சமுதலியன ஒன்றனுள் ஒன்று வியாபகவியாப்பியத்தி னுல் நீங்காதிருந்தனவாக, ஞானபாதமுற்றுச் சிவபிரானும் மாயையும் சத்தியும் நிமித் தோபாதான துணைக்காரணமாகச் சிறப்புறக் கூறப்பட, உபரிடதங்களும் பிரமஞ்தி ரமும் க. ச. உக-ஆம் சூத்திரபாஷ்யக் குறிப்பிற் கூறியாங்கு, தியானயோகமுற்றுச் சிவபெருமான் நிமித்தோபாதான காரணராகப் பொதுவுறக் கூறப்படுதலாற் போத ரும் ஏதம் யாதுமின்றும். தியானயோகத்துச் சிவதத்துவத்தின் பாற்பட்ட வைதிக பாசுபதமானது ஸ்தூல மூலப்பிரகிருதிப் பாற்பட்ட அவைதிக பாசுபதாகமம், இரண் ணியகர்ப்பாகம முதலியவற்றைக் கண்டிக்க வன்மையுடையனவாமன்றி ஞானபா தத்ததாய், வேதசாரத்ததாய், ஷட்திரிம்சத் தத்துவாதீதமாய் நிற்கும் காமிகாதி வைதிக சித்தாந்த சிவாகமத்தைக் கண்டிக்க வன்மையுடையதுமன்று; கண்டித்த துமன்று. இதுகொண்டே நீலகண்டசிவாசாரியர் "வேதசிவாகமங் கட்குப் பேதம் கண்டிலம்" என்றற்றொடக்கத்தனவாக அருளிச்செய்ய,

வதூ ரவாரிஜஹ்யாதிதெதத்து நிரூபவாரூவதவெவ்வு
நிராகரணவரம நத ரூகிகூதி விஜாதவெவாமவே வெஷாவி
ரூ ஜவ்யு|

"பாசுபத்தியதிகரணத்தில் நிகுடபாசுபதமே நிராகரணஞ் செய்யப்பட்டதன்றி,

(பூருவபக்ஷம்) உபாதானமல்லாத குலாலன் தண்டாதிகளைச் செலுத்
துதலாற் கர்த்தாவாகின்றான். ஆகலின், தடஸ்தராகிய *ஈசுரர் நிமித்தமாத்
திரமே. மாயை உபாதானம். சத்திகள் கரணம். இன்றேல் மண் முதலிய
போல ஈசுரர் உபாதானமாயின், அவர் விகாரமுதலியனவுறுவர். ஆகலின்
ஈசுரர் நிமித்தமாத்திரமெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பதியாகிய ஈசுரரைக் கேவலம்
நிமித்தகாரணமாகக் கூறுவது யுக்தம் அன்று; சுருதி நியாயத்துக்கு விரோ
தமாய்ப் பொருந்தாமையின். (கூடு)

எங்ஙனம் விரோதம் என்று சூத்திரகாரர் காட்டுகின்றனர்.

கயிஷ்யா நா நுவவெத்தூ (உ. உ. கூசு)

(உகo) அதிட்டானம் பொருத்தமின்மையினும்.

சரீரமிலராகிய ஈசுரர் உபாதானமாகிய மாயையை அதிஷ்டிக்கின்றனர்
எனல் கூடாது. உலகத்திலே சரீரமுடைய குலாலன் முதலாயினோர் மட்
பிண்டமுதலிய உபாதானகாரணத்தை அதிட்டிக்கக் காண்கின்றோம். ஆக
லின், குலாலாதி திருட்டாந்தம் பொருந்தாது. மாயையை ஈசுரர் அதிட்
டித்திலர் எனக்கொள்ளின், அவர் பிரயோசனமிலராக, சாங்கியர் கூறும்
மதமே யுக்தமாகும். ஆகலின், ஈசுரர் நிமித்தகாரணமாதல் கூடாதெனப்
பின்னரும் ஆக்ஷேபித்துக் கூறுவாராயினர். (கூசு)

கரணவச்சா ஹொழிஹ்யோ (உ. உ. கூஎ)

(உகக) இந்திரியம் போலெனின், அன்று; போகாதி
களெய்துமாதலின்.

அதிஷ்டானத்துக்கும் சரீரம் வேண்டாம்; எங்ஙனம் சரீரமில்லாத
இந்திரியம் சரீரத்தை அதிஷ்டிக்கின்றதோ, அங்ஙனமே ஈசுரர் பிரதா
னத்தை அதிஷ்டிக்கின்றனர் எனின்,

---

வேதவிருத்தமில்லாத காமிகாதி சித்தாந்த சைவாகமம் அன்று" என்று பஞ்சாக
மவிருத்தியில் ஸ்ரீஉமாபதிசிவாசாரிய சுவாமிகள் வரைந்தருளினர். நூலப்பிரகரு
தீப் பாற்பட்ட நிமித்தகாரணம் கூறும் அவைதிக பாசுபதாகமம், இரண்ணியகர்
ப்பாகமம் முதலியன கண்டிக்கப்படுவனவேயாக, ஞானபாதத்து ஷட்திரிம்சத்
தத்துவாதீத வைதிக சைவசித்தாந்த சைவாகமம் கண்டிக்கப்படாது போதல்,
கன்மகாண்டம்பற்றி ஒருவன் "பெண்களைக் காழறற்க" என்று கண்டிக்கப்படுவோ
னை, ஞானகாண்டம்பற்றி (பதினாயிரம் சோப) ஸ்திரீகளைக் காழற்ற திருஷ்
ணபகவான் கண்டிக்கப் படாதுபோதல்போலாம்.

*இந்த ஈசுர சப்தம் சங்காசாரியர் நீலகண்டவாசாரியர்களுக்கு முற்பட்
டிருந்த பூருவாசாரியர் கொள்கைப் பிரகாரம் சிருடபாசுபதத்து நந்திதர் மேற்றே
னும், சைவபாடியகாரர் கொள்கைப்பிரகாரம் இரண்ணியகர்ப்பர் மேற்றேனும்
செல்லும்.

(சித்தாந்தம்) அன்று; அவர் பிரதானத்துக்குரிய இன்பதுன்பமெல்லாவற்றுக்கும் இயைந்தோராவராதலின். சரீரமில்லாத ஆன்மா சரீரத்தை அதிஷ்டிக்குங்கால் சரீரத்துக்குரிய இன்பதுன்பங்களுக் கெல்லாம் அது ஆளாமாறு போல, பிரதானத்தை அதிஷ்டிக்குங்காற் பிரதானத்துக்குரிய இன்பதுன்பத்துக்கு அவர் ஆளாவார். ஆகலின், ஈசுரர் நிமித்தமாத்திரமல்லர். (கூஎ)

கூஇவகூஷவஎ-ஜூதா வா (உ. உ. கூஅ)

(உகஉ) முடிவுண்மையும் முற்றறிவின்மையும்.

(சூத்திரத்தில்) வா என்பது உம்மைப்பொருட்டு.

(ஆக்ஷேபம்) குலாலன் மட்பிண்டத்தை அதிட்டிப்பது போல, ஈசுரர் சரீரமுடையராய் வேறு நின்று உபாதானத்தை அதிட்டிக்கின்றனர் எனின்,

(உத்தரம்) அன்று; அங்ஙனமாயின் ஈசுரர் ஓர் சம்சாரியைப் போல, முடிவுடைமையும் முற்றறிவின்மையும் உடையராவராய், இன்பதுன்பமாம் போகத்துக்கு ஆளாகின்றமையின், ஈசுரர் பிரதானத்தைச் செலுத்துபவராகார்.

(ஆக்ஷேபம்) பிரதானத்தை அதிஷ்டித்தாலும்,

கூநுஎ ஹெரூ உஷாகுஸீதி (முண். கூ. க. க)

"உண்ணுது மற்றொன்று சாட்சிமாத்திரமாய் இருக்கின்றது" என்னுஞ் சுருதியுண்மையான், ஈசுரர் அந்த இன்பதுன்பமாம் போகத்துக்கு ஆளாகார் எனின்,

(உத்தரம்) அங்ஙனமாயின், தர்க்கபலத்தை விடுத்துச் சுருதிபலமே பற்றத்தக்கதாகும்.

கீஷாதாநப வயீகூரூதே (தைத். உ. எ. க)

"அப்போது அவர் தாமே தாமாகச் செய்தனர்"

வஹவஸ்ரா வ்ருஜாயெய (சாந். சு. உ. கூ)

"நான் அநேகமாயாவேனாக"

வஎவ-ா வெ ரூஷ்ரீ (தைத். ஆரணி. உச. ச்உ)

"மெய்யாய் எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினுலே

---

(1) தேவனும் நிமித்தகாரணம் ஈசுரர்க்குக் கூறியிருப்பாகுபதமாயினும் அவைதிக பாகுபதாகமத்தை நிராகரணஞ்செய்யுமாறு, சூத்திரங்களோறும் உத்தரபக்கத் தொடங்கியது வைதிகபாகுபதமேயாம்.

உபாதானமும் சிவபெருமான் என அங்கீகரிக்கற்பாற்று. சிவபேருமான் உலகத்துக்கு உபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாய் இருப்பினும்,

நிஷ்டூ0 நிவ்யிழ (சுலே. கூ. ககூ)

"நிஷ்களமும் நிஷ்கிரியமுமாய் அவர் உளர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினுலே அவர் நிர்விகாரமுடையராவர்.

ஸத்தீ வ்யஷ்ஷ0ஹ்ஹி தா ஸாஹ்ருதீத வஹ்ரொ தூரா |
தெதா ஸோ தெதாzவ்ருஹ்ஹ0 ஸிவாவத்தீ தஃ வ்ருஹோ|
ஸாஹ்ருதீதவஷ்0 ஜஜ்ஞே தத்ஸ்ராஹ்விவஷ்0 கூஸாகூ||

"சாந்தியாதீதசத்தியே முதற்கண் இருந்தது; அதிலிருந்து மாயை பிறந்தது; அதிலிருந்து அவ்வியக்தம் பிறந்தது; சத்தியோடு கூடிய பிரபுவாகிய சிவபெருமானிடத்திலிருந்து சாந்தியாதீதபதம் பிறந்தது; அதிலிருந்து சாந்திபதம் பிறந்தது" என்றற்றொடக்கத்த வாயுசங்கிதா சுலோகங்களான் மாயாதிபிரபஞ்சத்திலே சத்திமானுகிய சிவபெருமான் உபாதானத்துவத்தை அடைகின்றனர் என அறியப்படுகின்றது. பின்னரும் அவ்வாயுசங்கிதையிலே,

ஸஹ்ருழி ஷ வ்ருயிவ்ருஹ்ஹ0 ஸிவ தீஷ்வஷ்ஹ்ஹ்ஹ்வழ |
தெஸெ நகெநதீ தீஷ்ருவ்ஹ்0 ஸ்ரீஷாகூ0ஹாழிகூ0யயா |
(வாயு. பூர். உதி: கஅ)

"சத்தித்தத்துவம் தொடுத்துப் பிருதிவியந்தமாயுள்ள எல்லாஞ் சிவதத்துவத்திலிருந்து பிறக்கின்றன; குட முதலிய மண்ணினுல் வியாபிக்கப்பட்டாற் போல, அவ்வொருவராலே எல்லாம் வியாபிக்கப்பட்டன" என்னும் மட்கட நியாயத்தினுற் சிவபெருமானே உபாதானமாகிப் பிரபஞ்சத்தை வியாபிக்கின்றனர் என்று பெறப்படுகின்றது.

ஹிஷாஸெதெவ ஹி ஷெவொzஹ்ஸீ ஷ்ஸ்ரீதிஷீஹ்ரவஸாஷ்ஹ்வ ஹிஸீ |
யொதீவ நிரஷ்வாஷா நஷீஷ்ஜாத0 வ்ருகூஸயெகூ||

"ஈசான்மாவாகிய தேவர் தமக்குள்ளிருந்து இச்சாவசத்தினுல் யோனி போல உபாதானமின்றிப் பொருட்டொகுதியைப் புறத்தே பிரகாசிப்பிக்கின்றனர்" என்றற்றொடக்கத்த ஆகமப்பிரமாணத்தினுலும், சிவபெருமானுக்கு உபயகாரணத்துவம் கூறல் குற்றமாகாது.

லொக்மத்தின் ஏகதேசத்திலே சிவனுடைய பரப்பிரமம் கேவல நிமித்தகாரணராகக் கூறப்பட்டிருக்கின்றது. அதனைப் பரிகரிக்கும்பொருட்டே இந்த அதிகரணம் போந்ததென்று பூருவாசாரியர் (இவ்வனம் மேலே கூறியார்கு) வியாக்கியானஞ் செய்தார்.

யாமோ வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம். வேதமும் சிவாகமம் எனப்படும் ஸ்வயகாரம்பூர்த்தம்; சிவனே அவற்றிற்குக் கர்த்தாவாதலின். அதுபற்றி மூவருணத்தார்க்குரியதும் எல்லா வருணத்தார்க்குமுரியதுமெனச் சிவாகமம் இருதிறப்படும்; வேதம் மூவருணத்தார்க்குரியது; மற்றது (சிவாகமம்) எல்லா வருணத்தார்க்குமுரியது; அவற்றுக்குச் சிவபெருமானே கர்த்தாவாதலின்.

ப்ரஸ்மா நஷ்வ-ம்விஷ்ணு-நாழி (தைத். ஆரணி. உக. கூசு)

"சர்வவித்தைகளுக்கும் ஈசானர்" என்றும்,

கூஷ்டி ஹமிதா கூ-ஹிதஷ்டி நிஸ்ரவிதம் |
(பிரு. கூ. நி. கக; சு. சி. கo)

"(வேதம்) பரம்பொருளினற் சுவாசிக்கப்பட்டது" என்றும் போந்த சுருதிகளானும்,

கூஷ்டாஜ்ஸ்ரா நாரo விஷ்ணு-நா ஹிதாவாரo ஸிஜ்வ-த்-ந்ருத் |
கூஷிகு-த்-ர ஸ்வஷ்ணகூரா கூ-ஹிமவ்ராணிரிதி ஸ்ருஷ்டி |
(வாயு. பூர். க: ஒ ச)

"பல மார்க்கமுடைய இந்தப் பதினெண் வித்தைகளுக்கும் நேரே முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என்னும் ஸ்மிருதியினாலும், அவர் வேதத்துக்குக் கர்த்தாவாதல் பெறப்பட்டது. பிறவிடத்தும் சிவபெருமான் இங்ஙனமே கூறப்படுகின்றனர். ஆகலின், கர்த்தா ஒருவராதல்பற்றி வேதமும் ஆகமமும் ஒரே பொருளைப் பிரதிபாதித்தலின் இரண்டும் பிரமாணமே.

இதனை வேறு பிரகாரமாக ஆராயின் *பிரமம், பிரணவம், பஞ்சாக்ஷரம்,

---

*(க) பிரமம்:—என்னும் பெயர் உபநிடதவுபக்கிரமணிகை கoக-ஆம் இலக்கத்திற் கண்டபடி, ஐதரேய முதலிய உபநிடதங்களிற் காணப்படுமாறு போல,

உபக்கிரமணிகை கூசு-ஆம், கூள-ஆம் இலக்கங்களிற் கண்டவாறு பராக்கியை அஜிதம் காமிகம் காரணம் வாதுள முதலிய ஆகமங்களிற் காணப்படலானும்,

(உ) (பஞ்சப்)பிரமம்:—சத்தியோஜாத வாமதேவ அகோர தற்புருஷ ஈசான மென்னும் பஞ்சப்பிரம மந்திரங்கள் தைத்திரீய ஆரணியகத்து கo. கள. கூஅ, கூக, கூள, கூஅ, கூக-ஆம் மந்திரங்களிற் காணப்படுமாறு போல,

ப்ரஸ்மா நo வை-ஷ்டிஷ்ணவ கூவொரo வாஃ ஈ-உ-ஷ்ணெ |
ஸஹ்ரஜாதஷ்ட வஜ்ஞெஷ்ட கூமாஷ்வரo வை-ஷ்ணவ-த்-தம் |

என்று வாதுளாகமத்துப் பிரமபேதத்தினும்,

ஸஹ்ரஜாஃவொரஷ்ட தத்-புரு-ஷெஸ்மா நகௌள ஜ்ஞாஃ

என்ற காரண முதலிய மற்றை ஆகமங்களினும் காணப்படலானும்,

(ங) பிரணவம் ஓம்:—என்பன சார். கூ. இ. நி. இ. னும், சுவே. உநி. கூசு. இ. னும், பிருகதாரணியத்து முதற்கண்ணும் மற்றைய உபநிடதங்களினும் காணப்படுமாறு போல,

**பிராசாதாதி மந்திரம், பசுபதி பாசாதி வஸ்துவியவகாரம், பஸ்மோத்தூளன திரியுண்டூர்தாரணம், லிங்கார்ச்சனம், ருத்திராக்ஷதாரண முதலிய மற்** றைப் பரதருமங்களும் மற்றெல்லாவியவகாரங்களும் இரண்டினும் சமமாகக்

---

ஓதிதெ₃கா கூஷிரெ ஶெஜ்ஞெவ்ஸ்ரிதவ்ஸவ-ர்மதஶ்ரவ₃।

என்று சிவதருமோத்தராகமத்தினும்,

ஓதிதெ₃கா கூஸ்ரா ஸ்ரவஹ வவஸெஜ ஸவ-ர்யொ ஶ்ரிநீ।

வ்ரணவ ஸவ-ர்வணர்-ர்தாரா ஜீவஸ்ரிஜீ-ர்மாஹ்ரதிழ்।

என்று வாதுளாதியாகமங்களினும் காணப்படலானும்,

(ச) பஞ்சாக்ஷரம்:—

நமஶ்ஸிவாய ச।

என்று யசுர்வேதத்து. சு. பி. அ. க. லும்,

ஶிவாயநமஃ।

என்று தைத்திரீய ஆரணியகத்து க0. கஉ. உச. னும் ஸ்தூல சூக்ஷும பஞ்சாக்ஷரக் கள் காணப்படுமாறு போல,

ஸெஸ்ரகூஷ்ரஜ்ஞ வ்ருஷிஜ்ஞுஹ்ரஸ்ர வ்ரஸவ்யாஹ்ருஶ்ரிஸ்ரகுழ்।

ஹ்ரூம்ஓம் வ-ர்ஜிகூஷ்ரஸ்ர ஸ்ரஜ்ஞுஸ்ரைத்ரா ஷ்ரரணகூஶ்ச ஸ்ரூர்ணஸ்ர।

என்று பஞ்சாக்ஷர பேதங்கள் சித்தாந்தபோத முதலிய ஆகமங்களிற் காணப்படலா னும்,

(டி) பிராசாதம்:—

ஹ்ரஜ்வஸ்ரிவ-ர்வ்ரஸ்ரத ஜ்ரதீ।

இருஸ்வ தீர்க்க புலுதப் (பிராசாதம்) அதர்வசிரை முதலியவற்றிற் காணப்படுமாறு போல,

பிராசாத பேதங்கள் முழுமையும் வாதுள சுத்தாக்கியை முதலிய ஆகமங்களிற் காணப்படலானும்,

(சு) பதி:—முண். க. உ. கி. னும், சுவே. சு. எ, கூ. னும், பிறவிடங்களினும், பதியின் பரியாய மொழிகளாகிய ஈசுவர: பிரு. சூ. ச. உஉ. னும், சுவே. சு. எ. னும் ஈசான: கட. ச. கி, கஉ. னும், சிவ: மாண்டூ. எ, கஉ. னும், சத்து: சாந். சு. உ. க. னும், ஞன்: சுவே. க. கூ. னும்,

பசு என்பது அதர்வசிரசினும், இதன் பரியாயமாகிய அஞ்ஞன்: சுவே. க. கூ. னும், ஆன்மா: சுவே. க. சூ. னும், ஜீவான்மா: சாந். சு.கூ. உ. னும், சத்தியம்: பிரு. சு. க. உ0. னும், சம்பிரதாதன்: சாந். அ. கூ. ச. னும,

பசுபதி: தைத். ஆரணி. க0. உஉ. ச0. னும், பாசம்: சுவே. சூ. கசு; க. அ. னுமாகப் பதி பசு பாச வியவகாரம் உபநிடதங்களிற் காணப்படுமாறு போல,

நாஶிஷ்டாஸ்ரிஜொ வெத்தி ந விதிஸ்ரெ உஜெ ஶியஃ।

வ்ரவஜ்ரு ஜீவியொவெத்தா ய ஸ்ரு சூத்தா தியொஃ வ்ரயஜ்ரு।

என்று ரௌரவாகமத்தினும்,

ஜ்ரவஷ்டாய-ர்ஜ்ரஜ்ரு-ர்ஷ்டாஉ ஶஹாஜ்ஞ்ச ஜ்ரஜ்ரதீஃ।

வ்ர-ர்ஜிகூஜ்ரெஜெகெந ஸ0ஜ்ரூஹ்ரூவ்ரொஹ விஷ்ரராஃ வ-ர்நீ॥

என்று சிவாகமப்பிரகரணத்தினும் காணப்படலானும்,

காணப்படலான், வேதம் சிவாகமம் என்னும் இரண்டும் பிரமாணங்களே; †கர்த்தா ஒருவரேயாதலானும் இரண்டும் ஒரே பொருளைத் தருதலானும், அவ்விரண்டும் விரோதமுறுவாகலின்.

இவ்வதிகரணம் ஈசுரரைக் கேவலம் நிமித்த காரணமுதலியவாகக் கூறும் இரண்ணியகருப்பரது யோகஸ்மிருதி விஷயமென்று கூறுகின்றேம். ஆகலின்,

---

(எ) (உத்தானன திரிபுண்டர) பஸ்மம்:—ஈசா. கள. னும், இதன் பரியாயமா யெபூதி. தைத். க. கக. க. னும், சிரோவிரதம். முண். க. உ. க0. னும், அத்தியாசிரமம். சுவே. சு. உக. னும், கைவல்லியத்தினும், விரதம் சாம்பவம் காலாக்கினிருத்திரத்தி னும், பாசுபதவிரதம் அதர்வசிரசினும், விபூதி பதிதம் பஸ்மம் க்ஷாரம் இரக்ஷை என்னும் விபூதியின் நாமங்களும், கற்பம் அனுகற்பம் உபகற்பம் அகற்பம் என்னும் விபூதிபேதங்களும் பிருகச்சாபாலத்தினும், இவற்றைத் தரிக்குந் தானங்களும் மந்தி ரங்களும் காலாக்கினிருத்திர பஸ்மசாபால பிருகச்சாபால உபநிடதங்களினும் காணப்படுமாறு போல, சுயாயம்புவம், சிந்தியவிசுவம், மதங்கம், காரணம், துவிசதி காமோத்தரம், சுப்பிரபேதம், சர்வஜ்ஞோத்தர முதலிய ஆகமங்களினும் காணப் படுகின்றமையானும்,

(அ) உருத்திராக்ஷம்:—உருத்திராக்ஷசாபாலோபநிடதத்திற் காணப்படுமாறு போல, வாதுளம் காலோத்தரமுதலிய ஆகமங்களிற் காணப்படலானும்,

(க) லிங்கார்ச்சனை:—

தவஶ்ரியெ ஶ்ரு॰தெ தா ஜ॰யதா ஶ்ரு॰ உ யதெ ஜநிஶ் சார॰ ஸி தஶ்ரு।

"தேவர்கள் (பொருளும் அருளுமாம்) செல்வத்தை அடையுமாறு, (சிவபிரானைது) விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகாதி பூசை செய்தார்" என்று இரு. வே. கூ. கூ. னும், (இம்மந்திரத்திற் கண்ட) ஜநிம என்னும் மொழி லிங்கத்தை உணர்த்துமென விளக்கி

ரௌஉ॰ ஶி॰ம॰ ஶஹாவிஷ்ண ஹ்ருத்ய॰ஶ்ரு॰ஶ॰ ஶிஙாயெழ।

சார॰ஸி தா॰ ஸஶ்ரூயு॰ உஷ்வா ஸ்ரூஶ॰ வஎழ।

"மகாவிஷ்ணுவானவர் தம்தாயும் சிலாமயமாயும் விசித்திரமாயுமுள்ள மகாலிங்கத் தைப் பக்தியினுல் அர்ச்சித்துப் பரமபதத்தை அடைந்தார்" என்று போந்த உபப் பிருங்கணத்தினும்,

ஶிவஶி॰ம ஜ்ரஸ॰ஜு ஶஹாரஹ ரஹ்ரு॰ஷு॰யெஜ।

"சிவலிங்கத்தைத் திரிசந்தியினும் தினந்தோறும் அர்ச்சிக்க" என்று பஸ்மஜாபா லத்தினும்,

ஶிவஶி॰ஶ்ராய நஶி।

என்று தைத். ஆரணி. க0. கக. கூச. னும் காணப்படுமாறு போல,

அம்சுமான், காலோத்தரம், ரௌரவம், காரணம், காமிக முதலிய ஆகமங் களில் லிங்கலக்ஷணம் லிங்காராதன முதலியன விரித்துக் கூறப்படலானுமே வேத மும் சிவாகமமும் பொருளினுற் சாமியமுறுவன என்று நீலகண்டசிவாசாரியர் வரைந் தருளினர்.

†பிருகஸ்பதி பகவான் (பிரகஸ்பதி) ஸ்மிருதிக்கும் லோகாயதத்துக்கும் தாம் ஒருவரே கர்த்தாவாமாயினும், ஆஸ்திகம் கூறும் அவர் ஸ்மிருதியும் நாஸ்திகம் கூறும் அவர்லோகாயதமும் வேறுயினுற் போல, வெபெருமான் வேதங்களுக்கும் சிவா கமங்களுக்கும் கர்த்தாவாயிருப்பினும், இவ்விரு சாஸ்திரங்களும் கருத்தினுல் வேற படாவென்பாராய்ப் பாஷ்யகாரர் "ஒரே பொருளைப் பிரதிபாதிப்பன" வாமென் றருளினர்.

இவ்வதிகரணம் ‡இரண்ணியகருப்ப ஆகமத்தை நிரசிக்கும் பொருட்டுப் போந்ததாமெனல் யுக்தம். (கூஅ)

## (கூ) பாஞ்சராத்திராதிகரணம்.

---

(பாஞ்சராத்திரமதநிராகரணம்)

உத்பத்த்யஸம்பவாதி (உ. உ. கூகூ)

### (உகஙூ) உற்பத்தி அசம்பவமாதலின்.

பாஞ்சராத்திரமதம் வாசுதேவராற் கூறப்பட்டது. அங்கே ஆன்மாவுக்கு உற்பத்திமுதலியன கூறப்பட்டிருக்கின்றன. அது கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது கூடும். எதனால்? பகவானுகிய வாசுதேவராற் கூறப்பட்டது பிரமாணமாதலின். அவ்விஷயம் வருமாறு:—பகவானுப்ப் பரமான்மாவாயுள்ள வாசுதேவர் ஒருவரே. இவரிலிருந்து சங்கர்ஷணர் என்னும் பெயருடைய ஆன்மா பிறக்கின்றது; ஆன்மாவிலிருந்து பிரத்யும்நர் என்னும் மனசு உதிக்கின்றது; மனசிலிருந்து அநிருத்தர் என்னும் அகங்காரம் உண்டாகின்றது. இந்த நான்கு வியூகமே சர்வான்மாக்களாம். ஆகலின், இரண்ணியகருப்பாதியோர்க்கு வாசுதேவர் பரமாதலின் அவர் கூறியதே பிரமாணம். அதிற் கூறப்பட்டது பொருத்தமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா உற்பத்தியாயிற்று என்று கூறும் இந்தச் சாத்திரம் அப்பிராமாண்ணியம். எதனால்? செய்யப்பட்டதுநாசமுறுதலும், செய்யப்படாத மற்றொன்று தோன்றுதலும் பெறப்படலான், ஆன்மோற்பத்தி கூடாது. ஒருவன் புண்ணியபாவஞ் செய்து பிரளயகாலத்தில் ஒழிந்து போவானுயின், சிருட்டிகாலத்திலே மற்றோர் ஆன்மா தோற்

---

‡இந்தப் பாசுபதாதிகரணத்திற் பூருவாசாரியர் கொள்கைப்பிரகாரம் நிராகரிக்கப்பட்டது அவைதிக பாசுபதமாம் என்றும், தமது கருத்துப்பிரகாரம் நிராகரிக்கப்பட்டது இரண்ணியகர்ப்பாகமம் என்றும் சைவபாடியகாரர் கூறுகின்றனர்.

வாயுசங்கிதை பூருவபாகத்து உஅ-ஆம் அத்தியாயத்து ஙக, கஉ, கஙூ-ஆஞ் சுலோகங்களாய், சிவார்க்கமணிதீபிகையிலே காணப்படும் இந்த அதிகரணத்து உ. உ. கூஅ-ஆஞ் சூத்திரதீபிகையிலெடுத்தாளப்பட்டனவாய், உபரிடதவுபக்கிரமணிகை உக-ஆம் இலக்கத்தில் எடுத்துதகரிக்கப்பட்டனவாயுள்ள "கைவாகமோபி" என் றற்றொடக்கத்த சுலோகங்களுக்கு உண்மைப்பொருள் செய்ய, உபக்கிரமணிகை உஎ-ஆம் இலக்கத்துச் சனற்குமாரசங்கிதா சுலோகங்கள் அத்தீபிகையுடையார் பரிர் வைக்கெட்டாமையாற் காமிகாதி ஆகமங்களே அனைதிகம் என்று வழுவுற உக-ஆம் இலக்கத்திற் கண்டவாறு பொருள் செய்யத் துணிந்தமை தவறென்றுணருமாறு உபரிடதவுபக்கிரமணிகை உக-ஆம் இலக்கத்தின் கீழ் அவ்வாயுசங்கிதா சுலோகங்கட்கு உண்மைப்பொருள் உரைக்கப்பட்டமை கண்டு தெளிந்து, காமிகாதி ஆகமங்கள் வைதிகாகமங்களாம் என்றும், அவை அவைதிகாகமங்கள் அன்றென்றும் உண்மை கடைப்பிடிக்க.

றும். ஆகலின், ஆன்மோற்பத்தி கூறும் சாஸ்திரம் அப்பிராமாண்ணியம். (நகூ)

சூத்திரகாரர் மற்றோர் பொருத்தமின்மை கூறுகின்றனர்.

ந உ கூதூ-ஃ கூணழ (உ. உ. ச0)

(உகசா) கர்த்தாவிலிருந்து கரணமும் (பிறக்க) இல்லை.

சங்கர்ஷணர் எனப் பெயரிய ஆன்மாவினின்று பிரத்தியும்நர் எனப்பெயரிய மனசு பிறந்தது. கர்த்தாவாகிய ஆன்மாவினின்று (அந்தக்) கரணேற்பத்தி தோற்றுது; பிரகிருதிகாரியமாய்த் தோற்றுவதைச் சேதனத்திலிருந்து தோற்றுவதெனல் பொருந்தாமையின். (ச0)

(பாஞ்சராத்திரி செய்யும் ஆசங்கை)

விஜ்ஞாநாதி ஹாவெ வா கரவ்ரதிஷெயஃ (உ. உ. சக)

(உகரு) அல்லது ஆன்மா முதலியவற்றை அதிட்டித்தல்பற்றிப் பிரதிஷேதமில்லை.

விஞ்ஞானம் என்றது ஆன்மா. ஈண்டு ஆன்மா முதலியவற்றுக்கு உற்பத்தி கூறப்படவில்லை; பின்னையோ சங்கர்ஷணர் முதலாயினோர்க்கு ஆன்மாவாதிபாவம் கூறப்பட்டது. ஆன்மாவாதி பாவமென்பது ஆன்மா முதலியவைகளுக்குள்ளிருந்து ஆளுவதாம். ஆகலின், அந்தப் பாஞ்சராத்திரப் பிரமாணம் மறுக்கப்படமாட்டாதாமெனின், (சக)

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

விவ்ரதிஷெயாச்ச (உ. உ. சஉ)

(உகசு) (இது) தவிர்க்கப்படலாலும்.

இங்ஙனம் ஆன்மோற்பத்திக்குச் சமாதானம் கூறப்படினும், பாஞ்சராத்திரமதக் கோட்பாடு அங்கிகரிக்கப்படுவதன்று; சுருதிக்கு விரோதமாக (உலககாரணரல்லாத) ஈசுவரை (வாசுதேவரை,* உலக) காரணராகவும் முத்திக்குக் காரணராகவும் கூறலும், (சரீரத்திலே வேதவிருத்தமாகிய) தப்த முத்திராதிகளைத் தரித்தல் பரதருமம் எனக் கூறலும் பிரதிஷேதிக்கப்படலான் (தவிர்க்கப்படலான்). ஆகலின், பாஞ்சராத்திரமதம் அசமஞ்சசம்.

வாஸுதேவாத்ம உ வைஎஷெ உ கயா கூஉஃ-வெzவி உ| ஸ்ரஷ்டயா தீகூதி தா யதியo ஹவக வ்ரஹ்மணாzயஃ॥

(*சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் நஉ. நகூ)

---

* உ. உ. நகு-ஆஞ் சூத்திரபாடியக் குறிப்பிற் கண்டவாறு கௌதமமுனிவரிடத்துப் பன்னிருவருடம் அன்னமயின்று

எந்தன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்தன்றி கொன்ற மகற்கு.

"பாஞ்சராத்திரத்தினும் பௌத்தத்தினும் காளாமுகத்தினும் சிரத்தையோடு தீக்ஷிக்கப்பட்ட நீங்கள் பிராமண அதமர்களாவீர்கள்" என்றற்றொடக்கத்தவற்றினும் விசேஷமாக நிஷேதிக்கப்படுதல் காணப்படுகின்றது. ஆகலின், பாஞ்சராத்திரமதம் மறுக்கப்படுவதொன்றுயிற்று. (சூ உ)

---

என உத்தரவேதம் கூறியாங்கு, உடனே உண்ட நன்றி கொன்றமுனிவரெல்லாம் வேதபாகியராய்ப் போமாறு அக்கௌதம முனிவராற் சபிக்கப்பட்டவிடத்திற் (சூத சங்கிதையிலே) காணப்படும் இச்சுலோகம் சைவபாஷ்யகாரரால் எண்டு சூத்திரப் பொருட்கியைய எடுத்து உதாரிக்கப்பட்டது.

## இரண்டாம் அத்தியாயத்து
# மூன்றும் பாதம்.

—o—

### (க) விபதந்திகரணம்.

(வேத) விருத்தமாகிய சமஸ்த சமய நியாயங்களும் கண்டிக்கப்பட்டன.

எஞ்சிய அத்தியாயத்தினுலே அவாந்தர விரோதங்களுக்குப் பரிகாரம் கூறப்படுகின்றது.

ந வியதுஶ்ருதேஃ (உ. கூ. க)

**(உகஎ) ஆகாயம் (உற்பத்தி) யாகவில்லை, சுருதிப் (பிரமாணம்) இன்மையான்.**

அவயவமிலாமைபற்றிக் காரியமாகாதென்னும் மயக்கத்தினுல் ஆகாயத்துக்கு உற்பத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆகாயம் உற்பத்தியாகவில்லை என்பது பெறப்பட்டது; எதனுல்? சுருதியிற் கூறப்படாமையான். எங்ஙனமெனின்? சாந்தோக்கியத்திலே,

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்று தொடங்கி,

தத்தேஜோঽஸ்ருஜத (சாந். சு. உ. கூ)

"அது தேயுவை உண்டாக்கிற்று" எனத் தேயு முதலாகிய பூதங்களின் சிருஷ்டி கூறப்படுகின்றது. அங்கே ஆகாயோற்பத்தி கேட்கப்படவில்லை.

தஸ்மாத்³வா ஏதஸ்மாத்³ஆத்மந ஆகாஶஸ்ஸம்ப⁴ூதஃ (தைத். உ. க)

"ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று தைத்திரீயத்திற் கூறப்பட்டது கவுணமாதற் கருகமாகின்றது; ஆகாயத்தோற்றத்துக்குச் சமவாயகாரணமுதலியகிரூபித்தல் கூடாமையான். (க)

ஆகலின் ஆன்மாவைப்போல ஆகாயமும் பிறக்கவில்லை எனின்;

(உத்தரம்) கூறுதும்.

அஸ்தி து (உ. கூ. உ)

**(உகஅ) ஆயின் உண்டு.**

ஆகாயத்துக்கு உற்பத்தி உண்டுதான்;

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶ: ஸம்பூத: (தைத். உ. க)

"இந்த ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று சுருதி கூறலின்.

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் (கட. உ. கஅ)

"அறிஞன் பிறப்பதில்லை, இறப்பதில்லை" என்று மறுக்கப்படலான், ஆன்மாவுக்கோ உற்பத்தி இல்லை. ஆகாய உற்பத்தியை மறுக்குஞ் சுருதி இல்லை. ஆகலின், ஆகாயம் உற்பவிக்கின்றதே. (உ)

(பூருவபக்ஷம்) இந்த உற்பத்தி கவுணமாமோ? எனின்,

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

மௌண்யஸம்ப⁴வாத்து (உ. சூ. சூ)

(உகசூ) (அது) கவுணம், அசம்பவத்தினாலும் சுருதியினாலும்.

தத்தேஜோঽஸ்ருஜத (சாந். சூ. உ. சூ)

"அது தேயுவைப் படைத்தது" எனத் தேயுவுக்கு முன்னர்ச் சிருஷ்டி வசனமுண்மையான்,

ஆகாஶஸம்ப⁴வ: (தைத். உ. க)

"ஆகாயம் பிறந்தது (சம்பூத:) என்னுஞ் சுருதி கவுணம்; அவயவமில்லாத ஆகாயம் பிறத்தல் கூடாமையானும்,

வாய்வாதே³ரஸம்ப⁴வ: (ப்ரஶ்ன. உ. சூ. சூ)

"வாயுவும் ஆகாயமும் அழியாதன" என்னுஞ் சுருதி ஆகாயத்துக்கு நித்தியத்துவம் உரைத்தலானுமாம். (சூ)

ஸ்யாச்சைகஸ்யாமி ஶப்³தவத் (உ. சூ. ச)

(உஉ0) பிரமசப்தம் போல ஓர் மொழி இருவழியினும் வழங்கல் கூடுமாகலின்.

(சுருதியின்) ஒரே பிரகரணத்து இரு வேறு வாக்கியங்களில் ஒரே மொழி ஆளிருத்தியாய் நேருங்கால்,

தஸ்மாத்தே ஸ்ரீஹ நாரீம்ரிவதீஹேது ஜாயதே (முண். க. க. கூ)

"அங்கிருந்து இந்தப் பிரமம் (பிரகிருதி) நாமமும், ரூபமும், அன்னமுமாகப் பிறக்கின்றது" என்னுஞ் சுருதியிலே பிரமம் என்பது பிரகிருதியைப் பற்றிப் பேசும் போது கவுணமாயும்,

தவஸா தீயதே ஹ்ருதே (முண். க. க. அ)

"தியானத்தினாற் பிரமம் ஒங்குகின்றது" என்னும் வாக்கியத்தில் ஆளிருத்தி

பற்றி முக்கியமாயும் வழங்கியவாறு போல, ஈண்டும் பிறந்தது (சம்பூதம்) என்னும் ஓர் மொழி ஆகாய விஷயத்திற் கவுணமாயும், பிறவிடத்தில் முக்கியமாயும் வழங்கல் கூடும். ஆகலின், ஆகாயம் பிறந்ததெனல் பொருந்தாது எனை, (ச)

பின்னார்ச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றார்.

வ்ருதிஜ்ஞாஹாநி ரவ்ருதிரிதராஸ (உ. கூ. நி)

(உஉக) வேறுபடாமையான் பிரதிஞ்ஞைக்கு ஹானி யுரூமை.

ஆகாய முதலியன பிரமத்தினின்று பிறந்து, அப்பிரமத்திலிருந்து வேறுபடாதிருக்கும்போது மாத்திரந்தான்,

யெநாஸ்ருதம் ஸ்ருதம் ஹவதி (சாந். சு. க. க)

(கஸ்மிந்நுஹவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் ஹவதி)

(முண். க. க. கூ)

"கேட்கப்படாதது கேட்கப்படுகின்றது" "(ஒன்றை) அறிந்தால் யாவும் அறியப்பட்டதாகும்" என்னும் பிரதிஞ்ஞை ஹானியுறுது. ஆகலின், பிறந்தது என்னும் சப்தம் கவுணமன்று; பிரதிஞ்ஞைக்கு ஹாநி முதலியவற்றை விளைவிக்குமாகலின். எங்ஙனம் பிரதிஞ்ஞைக்கு ஹாநி வராதிருக்குமோ அங்ஙனம் இணக்கற்பாற்று. (நி)

ஸம்பவாத் (உ. கூ. சு)

(உஉஉ) சுருதிகளுண்மையான்.

தைத்திரீயாஸ்வாஜத (சாந். சு. உ. கூ)

"அது தேயுவைச் சிருட்டித்தது" என்னுமிடத்து, ஆகாயம் கூறப்படாமை பற்றித் தேயுவுக்கு எய்தும் முதன்மை

ஸ்தூந ஸுகாஸவ்ஸ்ஹ்ரிதஃ (தைத். உ. க. க)

"ஆகாயம் (பரம) ஆன்மாவினின்று பிறந்தது" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் கூறப்பட்ட ஆகாயோற்பத்தியைத் தடுக்காது. (ன)

யாவத்விகாரமஸ்ஹ விஹாரோ மரூவத் (உ. கூ. எ)

(உஉங) எப்படியும் உலகப்பேச்சிற் போல, விபாகம் சிருஷ்டி முழுமைக்குமாம்.

வைதத்ஹ்யாத்மிகஃ ஸவ்ஹ்ரி (சாந். சு. கூ. ச)

"ஈதெல்லாம் (பரம) ஆன்மாவாயது" என்பதினால் ஆகாய முதலிய சிருட்டிக்கப்பட்டனவாகப் பெறப்படும். தேயுமுதலாகக் கூறப்பட்ட விபாகவசனம்

சிருஷ்டிமுழுமைக்குமாம் எனப் புலப்படுகின்றது. உலகத்திலே ஒருவன் தனக்குப் பத்துப் புதல்வர் உண்டென்று கூறி, பின்னர் அப்புதல்வர் ஒருவனுடைய பிறப்பைப்பற்றிப் பேசுதல் போல ஈண்டுமாம். ஆகலின், ஆகாயத்துக்கு உற்பத்தி கோடல் யுக்தமே. (ஈ)

## (உ) மாதரிச்சுவாதிகரணம்.

வஈதெந ரோகரிஸ்வா வ்யாவ்யாதஃ (உ. கூ. அ)

**(உஉச) இதனால் வாயு வியாக்கியானஞ் செய்யப்பட்டது.**

(உ. கூ. கo-ஆஞ் சூத்திரத்தில்) சூத்திரகாரர் தேயுவைப்பற்றிக் கூறப் போகின்றனர். அது பற்றி வாயு வேறாக எடுத்தாளற்பாற்று.

ஆகாயத்துக்குப் போல வாயுவுக்கும் உற்பத்தி கூறப்பட்டதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வாயுவுக்கு உற்பத்தி இல்லை; சாந்தோக்கியத்திலே தேயுவை முதன்மை கூறல் வாயிலாக வாயுவுக்குச் சிருட்டி கூறப்படாமையானும், பிருகதாரணியத்தில்

வைஷா ஂநஷ்டிதா யஆய ஃ (பிரு. கூ. நி. உஉ)

"வாயு ஓர்போதும் ஒழியாதது" என அதன் உற்பத்தி மறுக்கப்படலானுமாம். எப்பிரகாரத்தினாலும் வாயுவுக்கு உற்பத்தி இல்லையாலோ எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சாந்தோக்கியத்திலே வாயு உற்பத்தி கேட்கப்படாதொழியினும், குணோபசங்காரநியாயத்தினால்

சூகூரபோ ஆய ஃ (தைத். உ. க. க)

"ஆகாயத்தினின்று வாயு (பிறந்தது)" என்று தைத்திரீயோபநிடதத்திற் கூறப்பட்ட வாயு உற்பத்தி சாந்தோக்கியத்தினுங் கூறப்பட்டதாகக் கொள்ளப்படும்.

வைஷாஂநஷ்டிதாயஷ்டாய ஃ (பிரு. கூ. நி. உஉ)

"இந்த வாயுவானது ஓர்காலும் ஒழியாதது" என்னும் சுருதியானது உபாசனைப்பிரகரணம்பற்றி அர்த்தவாதமாம். ஆகலின், வாயுவும் பிறக்கின்றதே. (அ)

## (கூ) அசம்பவாதிகரணம்.

அஸம்ஹவஷ்ய வதோ ஂநவவதேஃ (உ. கூ. கூ)

**(உஉந) கூடாமையான் சத்துக்கு (உற்பத்தி) பொருந்தாது.**

ஸதெவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். கூ. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியினால் சத்தாகிய பிரமத்தினின்று ஆகாய முதலியன பிறந்தவென்று நிரூபிக்கப்பட்டது.

ஆகலின், ஈண்டுச் சர்வகாரணமாய சத்தாகிய பிரமத்துக்கும் ஓர் காரணத்தினின்று உற்பத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) காரணமாகிய ஆகாயத்துக்கு உற்பத்தி உளதாயினும் போல, பிரமத்துக்கு உற்பத்தி உண்டு; "முதற்கண் இருந்தது" என்று கூறப்படுதலின். சிருஷ்டிப் பொருளுக்கெல்லாம் முதற்கண்ணே உற்பத்தி உளதாயிற்று. அதற்குக் காரணம் என்னை என்று வினவின், அசத் தேயாம்;

அஸதா இதமக்ர ஆஸீத்ததோ வை ஸதஜாயத।

(தைத். உ. எ. க)

"அசத்தாம் இது முதற்கண் இருந்தது, இதினின்று சத்தே பிறந்தது;" எனச் சுருதி கூறலான். ஆகலின், சத்ரூபமாகிய பிரமத்துக்கும் உற்பத்தி உண்டு எனின்,

(சித்தாந்தம்) பிரமம் பிறப்பதில்லை. எதனால்?

ஸதெவ ஸௌம்யேத மக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்।

(சாந். கூ. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது, ஏகமே அத்விதீயம்" எனவும்,

யஸ்மா தஸீமஸ்ய திவா ந ராத்ரிர்ந சாஸச்சாஸச்சிவ ஏவ கேவலஃ।

(சுவே. ச. கஅ)

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றி சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்" எனவும், சிவனுகிய பிரமம் ஒன்றே இருந்ததென வற்புறுத்தல் வாயிலாக நிஷேதிக்கப்படலான், அதற்கு உற்பத்தியில்லை. மற்றெல்லாவற்றுக்கும் உற்பத்தி உண்டு, ஒவ்வாமையான்.

(ஆக்ஷேபம்) எங்ஙனம் பிரமம் அகிலத்துக்கும் காரணமாகக் கூறப்படுகின்றதோ, அங்ஙனம் சுருதியிற் பிரமத்துக்கும் மற்றொன்று காரணமாகக் கூறப்படுகின்றது;

அஸதா இதமக்ர ஆஸீத் (தைத். உ. எ. க)

"அசத்தாம் இது முதற்கண் இருந்தது"

ததோ வை வஷ்டாயத (தைத். உ. எ. க).

"அதினின்று சத்துப் பிறந்தது" என்று கூறப்படுதலின், அசத்தே சத்துக்குக் காரணமாயிற்றெனின்,

(உத்தரம்) இங்ஙனம் கூறல் அடாது;

கயாவை தவஜ்ஜாயெத (சாந். சு. உ. உ.)

"அசத்தினின்று சத்து எங்ஙனம் பிறக்கும்?" என்று சுருதி நிஷேதித்தலான்; சத்தினின்றே சத்துப் பிறந்ததெனல் ஆன்மாசிரயம் என்னும் குற்றம் பற்றுதலான். ஆகலின், சத்தாகிய பிரமத்துக்குப் பிறப்பில்லை; "ஒன்று அறியப்படுங்கால் எல்லாம் அறியப்படும்" என்னும் பிரதிஜ்ஞை பொருந்தாமையின், மற்றெல்லாவற்றிற்கும் உற்பத்தி உண்டு. (கூ)

## (சு) தேஜோதிகரணம்.

தெஜோ2தஸ்யாஹ்யாஹ (உ. சு. கo.)

(உஉசு) அதினின்று தேயு பிறக்கின்றது; அங்ஙனமே அது சொல்கின்றது.

ஈண்டு வாயுமுதலிய காரியம் நேரே பிரமத்தினின்று பிறக்கின்றதா? இன்றேல் அததற்கு நேரே முற்பட்டுள்ள காரணங்களினின்று பிறக்கின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவற்றில் ஒவ்வொன்றும் அததற்கு முற்பட்டதொன்றினின்று பிறக்கின்றது.

ஆகாஶாத்வாயுஃ (தைத். உ. க. க)

"ஆகாயத்திருந்து வாயு பிறக்கின்றது" என்னும் சுருதியினால் வாயு ஆகாயத்திருந்தே பிறக்கின்றது; நேரே பிரமத்திலிருந்து பிறக்கவில்லை. அவ்வாறே தேயுவும் வாயுவினின்றே தோன்றுகின்றது. ஆதலினாலே சுருதியும்,

வாயோரக்நிஃ (தைத். உ. க. க)

"வாயுவினின்று தேயு பிறந்தது" என்று கூறுகின்றது. (கஎ)

ஆபஃ (உ. சு. கக)

(உஉஎ) அப்புக்கள்.

அக்நேராபஃ (தைத். உ. க. க)

"தேயுவினின்று அப்புக்கள்" என்னும் சுருதி அப்புக்களும் தேயுவினின்றே பிறக்கின்றன என்று கூறுகின்றது. (கஅ)

வ்யஷ்டிவீ (உ. கூ. கஉ)

(உஉஅ) பிருதிவி.

கூஹ்ரீ வ்யஷ்டிவீ (தைத். உ. க. க)

"அப்புக்கனினின்று பிருதிவி பிறக்கின்றது" என்னும் சுருதி அப்புவி லின்றே பூமி பிறக்கின்றதெனக் கூறுகின்றது. ஆகலின், பூதங்கள் நேரே பிரமத்தினின்று பிறக்கவில்லை. (கஉ)

கயிகாரரு-ஷவஸ்தாஸ (உ. கூ. கஈ)

(உஉக) அதிகாரத்தினாலும், நிறத்தினாலும், சுருதிக ளினாலும்.

தா கூஹ்ரீவ்ஸ்ரஜஇ (சாந். சு. உ. ச)

"அவைகள் அன்னத்தைச் சிருட்டித்தன" என்னுஞ் சாந்தோக்கிய சுருதி பிற் கண்ட அன்னம் என்னும் மொழி பிருதிவியையே குறிக்கின்றது; சர்வ பூதசிருட்டி அதிகரணத்தில் உண்மையானும்,

யத்ரூஷ ஜஇஹரஷ்ரு (சாந். சு. ச. க)

"கருநிறம் அன்னத்துக்குரியது" என்னுஞ் சுருதியினால் அன்னத்தின் நிற மும் விதிக்கப்படுகின்றமையானும்,

கூஹ்ரீ வ்யஷ்டிவீ (தைத். உ. க. க)

"அப்புவினின்று பிருதிவி" என்னும் சுருதியும் வெளிப்படையாயுள் ளது.ஆகலின், அப்புவினின்று ஆதியிற் பிறக்கின்றது பிருதிவியே யாம். (கஈ)

இதனாற் பிரமம் நேரே அனைத்துக்கும் காரணமாகாது பரம்பரை காரணம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

தஇஷ்ரஷ்ரு நாஇவ்ஷ-ா தஷ்ரீ0ஹ்ரா தீஹ்ரீ (உ. கூ. கச)

(உஈ0) சங்கற்பம் என்னும் அவ்விலிங்கத்தினால் அவர் காரணரே.

நேரே பிரமத்தினின்றே பூதங்களெல்லாம் உற்பத்தியாயின.

தஸ்மாஉ வஎ தஸ்மாத்மந ஆகாஸஸ்ஸம்ஹ-ூத: (தைத். உ. க. க)

"அவ்வாறே இவ்வான்மாவினிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று தொடங்கி வாயுமுதற் பிருதிவி ஈறாக ஒவ்வொன்றும் அதற்கு முற்பட்டதொன்றி னின்று உதித்ததாகக் கூறப்படவில்லை. ஆயின் முன்முற் காரணமாகிய

ஆகாயாதி விசிட்ட பிரமத்திலிருந்து பிற்பின்னைய வாயு முதலிய உற் பத்தியாயின என்று கூறப்படுகின்றது. ஆதலினற் பரமான்மாவாகிய சிவனுரே சர்வபூதங்களையும் உற்பத்தி செய்வர்;

தஷெக்ஷத வஹ ஷ்யாம வ்ருஜாயைய (சாந். சு. உ. ரு)

"யான் அநேகமாவேனாக எனச் சங்கற்பித்தது" என்றதிற் போல,

தத்தேஜ ஸைக்ஷத வஹ ஷ்யாம வ்ருஜாயைய (சாந். சு. உ. ரு)

"யான் அநேகமாவேனாக எனத் தேயு சங்கற்பித்தது" எனவும்,

தா ஆப ஸைக்ஷந்த வஹ்வ் ஷ்யாஸ்வ்ருஜாமஹை।

(சாந். சு. உ. ச)

"அந்த அப்புக்கள் அநேகமாவேமாக எனச் சங்கற்பித்தன" எனவும் போந்தவற்றுற் சங்கற்பமாகிய அவரது லிங்கம் இருக்கின்றமையான்.

ஸடாபிவஸ்ரூபே-த்ரிஃ ஷ்ரு-தே-த்ரி-ஷ்வயோஷ்வ்ரஃ।
ரு-த்ரஸ்தவைஜோராய ஷ்வாகூ-தாஸே-த்ரி-ஷ்ஜ-நாத்-நஃ।
மயஸே-த்ரி-ஷ்ரு-தா-வ-ஷ்சுர உதை-யைக வஹஸே-த்ரி-ஷ்யஃ।

"சப்தமூர்த்தியாகிய சதாசிவர், ஸ்பரிசமூர்த்தியாகிய மகேசுவரர், ரூப மூர்த்தியாகிய உருத்திரர், ரசமூர்த்தியாகிய நாராயணர், கந்தமூர்த்தி யாகிய நான்முகனையினேர் பஞ்சமூர்த்திகள்" என்னும் வாக்கியத்தினுற் சப்தாதிகளுக்கு ஆன்மாவாயிருக்கும் சதாசிவாதிரூப பிரமத்தினின்றே வாயு முதலியவற்றுக்கு உற்பத்தியாம். பஞ்சபூதங்களில் வசிக்கும் ஆன் மாக்களாய் ஐந்து பிரமங்களாய்க் குறிக்கப்படும் இந்தச் சதாசிவர் முத லாயினேர் (மகாசதாசிவ) பரப்பிரமத்தின் சரீரமாகின்றனர். பஞ்சப் பிரமச் சரீரத்தையுடைய பரப்பிரமத்திருந்தே பிரபஞ்சமிருட்டி முதலாயின பிரவர்த்தித்தன. பஞ்சபூதங்களாகின்ற இந்தச் சதாசிவர் முதலாயினேர் பரப்பிரமத்தினின்று பிறக்கின்றனர்.

(ஆக்ஷேபம்)

ஆகாஷாத்வாயுஃ (தைத். உ. க. க)

"ஆகாயம் பிறந்தது" என்றற்றொடக்கத்தவற்றுற் பூதோற்பத்திமாத்திரம் கூறப்பட்டதன்றிச் சதாசிவர் முதலாயினேர்க்குச் சிருட்டி நேரே கூறப் படவில்லையே எனின்,

(உத்தரம்) அதுவும் கூறப்படுகின்றதே. அது பிற சுருதிகளால் அறி யற் பாற்று. எங்ஙனமெனின்,

[illegible]

மெகநஃ காரணஞ்| காரணாநாம் யாதா ஜ்யாதா காரணஞ்ஞ மெய்ய
ஸுவெஃவ்யு)ஃஸம்வஜ்ஞஸுவெஃவ்ரஸ்ரஸம்ஜ்ஞ ராகாரஸ்மெஜ்யு|

(அதர்வசிகை)

"மிகவும் தியானிக்கற்பாலராகிய ஈசானரைத் தியானிக்க; பிரம்ம விஷ்ணு உருத்திர இந்திரரும் மற்றை எல்லா இந்திரியங்களும் பூதங்களோடு உற் பத்தியாகின்றன; காரணங்களுக்கெல்லாம் தாதாவும், கருதினேரும், பரம காரணருமாயினர் (உற்பவித்தல் இல்லை); சர்வைசுவரிய சம்பன்னரும் சர்வேசுவரரும், சம்புவுமாகியவரே ஆகாயமத்தியிற் தியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகையிற் கூறப்பட்டவாறு, பூதங்களோடு கூடப் பிரமாதி யர்க்கும் இந்திரியங்களுக்கும் உற்பத்தி கேட்கப்படுகின்றது. காரணங் களுக்கெல்லாம் காரணராயுள்ளாராக ஆகாயமத்தியிற் சம்புவானவர் தியா னிக்கற்பாலர் எனக் கூறப்படுகின்றது. ஆகலின், அவ்வக்காரணரூபம் கொள்ளும் பிரமத்தினின்று நேரே அவ்வக் காரியோற்பத்தியும் உண்டா கின்றதென நிர்ணயிக்கப்பட்டது. (கச)

## (நி) பாரம்பரியாதிகரணம்.

விவ்யஃயெணக்ஷ கூஷோZக உவவஜ்யெக (உ. சூ. கரு)

(உஙக) ஆனால் அங்கிருந்து (தோற்றும்) வேறு பிர காரமாகிய (சிருட்டிக்) கிரமமும் பொருத்தமாகின்றது.

ஈண்டு மேலே அதிகரணத்திலே நிரூபிக்கப்பட்ட சிருட்டிக்கிரமம் யுக் தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) யுக்தம் அன்றென்பது.

வனதஸ்ஜாயெக வ்யாணை ஃநஸுவெஃஜ்யாணி ய வ: வ்ராய ஜ்யோஃதிராவஃ வ்ருயிவீ விஸ்வஸ்ய யாஜிணி (முண். உ. க. சூ)

"பிராணன், மனசு, இந்திரியங்கள், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, அனைத் தையுந் தாங்கும் பிருதிவியாம் எல்லாம் இதினிருந்து உற்பத்தியாகின்றன" என்னும் முண்டகோபநிடதசுருதியினுற் பிராணன் முதலாயின ஆகாய மூதலியவற்றுக்கு முன்னர்த் தோன்றியவாகக் கூறப்படுகின்றது.

1. வவஃஜ்ஞ: ஸ்ரவஜ விஷ்ண ரூத்ரெந்ர ஜ்யாவ்ஜ வஃவ்ரவஃயெவ
வவஃஜ்ஞாணி வெ ஜ்ரியாணி வஷ்ஷஜ்ஞெதீ: (அதர்வசிகை)

"பூதங்களோடு கூட பிரம, விஷ்ணு, உருத்திரேந்திரர்களும், சமஸ்த இந் திரியங்களும் பிறந்தன" என்று அதர்வசிகையிலே பிரமாதி பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் உற்பத்தி ஒருங்கு கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், ஆகாயாதிகளுக்கு மேலே கூறிய சிருட்டிக் கிரமம் யுக்தம் அன்றும்என்னின்,

(சித்தாந்தம்) மேலே கூறிய சிருட்டிக் கிரமம் யுக்தம்.

சுஹூயே ஹி லொகஸ்ரு சுவொயஃ ப்ராணஸ்தேஜோயீவாகீ।

(சாந். சு. நி. ச)

"பிருதிவிமயம் மனம், அப்புமயம் பிராணன், தேயுமயம் வாக்கு" என்னுஞ் சுருதியினால், பிராணன் முதலாயின பௌதிகமாகக் கேட்கப்படலானும், அவைகள் பூதங்களுள்ளே அந்தர்ப்பாவமாதலினாலும், அதுகொண்டு அவைகளுக்கு வேறுகச் சிருட்டிக்கிரமம் கூறுதல் அநாவசியகம். பிரமாமுதலாயினோர்க்கும் பூதங்களோடு கூட உற்பத்தி கூறப்படுகின்றது; அவர்கள் அவைகளின் ரூபமுடையராய், அவைகளுள் அந்தர்ப்பாவமுடையராதலின். மேலே கூறிய சிருட்டிக் கிரமத்தில் விரோதம் யாதும் இல்லை. (கடி)

சுஹாவிஜாநஸ்நவீ கரணே கல்பஃபேதி தெஹாவிஸேஷாசு।

(உ. சூ. கசு)

(உசுஉ) அவ்விலிங்கமுண்மையாற் கிரமமாக இந்திரியமும் மனசும் அவற்றுக்கிடையே (போதருகின்றனவே) எனின், இன்று; பேதமின்மையின்.

(ஆக்ஷேபம்) ஆகாயம், வாயு, தேயு என்றற்றொடக்கத்த முண்டக சுருதியிற் பிராணனுக்கும் பூதங்களுக்குமிடையே இந்திரியக்கூட்டமும் மனசும் ஒன்றன்பின் ஒன்றுகப் பிறந்தன என்று கூறப்படுகின்றது; பிற சுருதிகளிற் சித்தித்த கிரமத்தை அறிவிக்கும் ரூபத்தையுடைய இலிங்க முண்மையான். ஆகலின், இந்த (முண்டக) சுருதியும் பாரம்பரியமாகிய சிருட்டிக் கிரமத்தையே உணர்த்துகின்றதெனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று;

வஸதஸ்ராஜ்ஜாயதே (முண். உ. க. சு)

"இதிலிருந்து பிறக்கின்றது" என்பது பிராணன்முதற் பிருதிவியந்தமாக அனைத்தினும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அன்வயஞ் செய்யப்படல் வேண்டுமாதலின். ஆகலின், அனைத்துக்கும் சிவபெருமானே காரணர்.

ஸகூயாதி ய வ்யயிவ்யதஃ ஸிவதகுவஸ்ஸ்ரு வ்ருதி।
தெதெநகெநத்ரு தகுயாவ்ஹ ஸ்ரூதாகுஃஸ்ரு ஸ்ரூதிகுஃ யயா।

(வாயு. உத். உநி: கஅ)

"சத்திமுதற் பிருதிவியந்தமாயுள்ள தத்துவமெல்லாம் சிவதத்துவத்தினின்று பிறந்தன; கும்பமுதலிய மண்ணினுள் வியாபிக்கப்பட்டாற்போல, அச்சிவதத்துவமொன்றினுலே அவை அனைத்தும் வியாபிக்கப்பட்டன" என அங்ஙனம் புராணவாக்கியமும் போந்தது; கிரமமிருந்தாலும் அனைத்

தும் சிவதத்துவத்தினின்றே உற்பத்தியாகின்றனவென (அது) கூறுகின்றது. ஆகலின், சர்வகாரணம் பிரமம் என்பது சமீசீனம். (கசு)

## (சு) சராசரவியபாசிரயாதிகரணம்.

---

ஸராஅஸவ்வாபாஸ்ரயஹ்ஸ்ய வ்யாத்ருத்யுபதெஸொ ஹாதுஹ்ருதவ ஹாவிக்ருதஸ் (உ. கூ. கள)

(உகூகூ) சரம் அசரமாம் பொருள்களைக் குறிக்குஞ் சொற்களைக் கொண்டு பிரமத்தைக் குறித்தல் கவுணமன்று; அப்பிரமம் அப்பொருள்களாயாகும் என்னும் எண்ணம் தழுவப்படலான்.

முன்னர்ப் பிரமமானது ஆகாயமுதலிய சப்தங்கொண்டு பிரதிபாதிக்கப்பட்டது. அது இங்கே விசாரிக்கப்படுகின்றது.

சேதனசேதனமாகிய சராசரவஸ்துக்களைக் குறிக்கும் பதங்கள் பிரமத்திலே முக்கியப்பொருளிற் போந்தனவா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது முக்கியப்பொருளிற் போந்ததன்றென்பேம்; ஒரு வஸ்துவைக் குறிக்கும் பதம் மற்றொன்றை முக்கியமாகக் குறிக்கமாட்டாமையின்.

சூழிதீயா யஷிஃ (தைத். பிரா. உ. க. நி. கூநி)
யஜ்ஞோ வ்ருஷ்ணஃ (தைத். பிரா. கூ. கூ. கூ. சுஉ)

"ஆதித்தியன் (யஞ்ஞ) ஸ்தம்பம், யஜமானன் சிலை" என்னும் வாக்கியங்களில் யஞ்ஞ ஸ்தம்ப முதலியவைகள் சூரியன் முதலியவாகக் கூறப்பட்டமை தல்லியரூபமுதலிய குணசம்பந்தத்தினலன்றி முக்கியத்தினலன்று. சண்டு,

தெதேஜ வொகூக்த (சாந். சு. உ. கூ)

"அந்தத் தேயு சங்கற்பித்தது" என்றற்றொடக்கத்தவற்றிலே தேயு முதலிய அசேதனப் பொருள்களுக்குச் சேதனப்பொருள்களுக்குரிய குணமாகிய சங்கற்பம் கூடாமையின், அந்தத் தேயு முதலிய சப்தங்களினல் அத்தேயு முதலியவற்றை ஆசிரயித்திருக்கும் சேதனமாகிய பிரமம் இலட்சியப்பொருளாகின்றது; மஞ்சம் கூப்பிடுகின்றது என்றதிற்போல. ஆகலின், ஆகாயாதி சப்தங்கொண்டு பிரமத்தைக் குறிப்பது தவணமெனின்,

(உத்தரம்) கூறுதும். சராசரப்பொருட் சம்பந்தமாய சொற்களாற் பிரமத்தைச் சுட்டுதல் கவுணமன்று; பின் முக்கியமே;

வெயம் தெவமெகூத ஹதாஹதிரோஹிவ்யா தெவதா கமெந
நி ஜீவெநாத்மநா zந்ம வ்ரவிரு நாமரூபெ வ்யாகரவாணி।
(சாந். கூ. ஈ. உ)

"அந்தோ! நான் இந்த மூன்று தேவதைகளாக இந்தச்சீவான்மாவோடு பிரவேசித்து நாமரூபங்களை வேறு செய்வேமாக என்று அந்த (மகா)தேவர் சங்கற்பித்தனர்" என்னுஞ் சுருதியிலே கண்டவாறு, சர்வவஸ்துக்களோடும் நாமரூபவிபாகத்தின் பொருட்டு அவ்வவர் ஆன்மாவாகப் பிரமம் பிரவேசித்துளதாம் என்னும் கருத்துக் கொள்ளப்படலான். யூப ஸ்தம்ப முதலியவும் ஆதித்தியன் முதலிய சப்தத்தினுற் கூறப்படல் முக்கியமன்று. மஞ்ச முதலிய விஷயத்திலோ எனின், இவற்றிலே புருஷர் இருக்கும் சம்பந்தமாத்திரம்பற்றி அவர்களை மஞ்சம் எனக் கூறல் முக்கியமாகாது. இங்கே பிரபஞ்சத்துள் ஆன்மாவாய்ப் பிரவேசித்தமையின் அந்தப் பிரமத்தை அந்தச் சப்தத்தினுற் கூறுதல் முக்கியமே; பிராமணர் முதலாயினருடைய சரீரத்திற் பிரவேசித்த ஆன்மாவானது பிரம முதலிய மொழியினுற் கூறப்படுதல் முக்கியமாதல் போலாம். அல்லாவிடின்,

கஷ்டவஷ்ம் வ்ராஹ்மண ஈவதீயத।
(கௌதம தருமசூத்திரம். அ. உகூ)

"எட்டு வயசுப் பிராமணனை உபநயனஞ் செய்விக்க" என்னும் உபநயன சம்ஸ்கார முதலாயின சரீரத்துக்குமாத்திரம் இயையும் என்றும், அந்த உபநயனத்தினால் ஆன்மா யாதும் சம்ஸ்காரம் அடையவில்லை என்றும் பெறப்படும். அதுகொண்டு,

யவெவ்யுதெ சக்ஷுர்ஸ்ரோத்ரவ்ராஹ்மணா கஷ்டவார்ஷிகாத்ஹ்ராஹ்மணஸ்ய ஸ
வ்ரஹ்மணஸ்யாஜ்ஜ்ஞே (கௌதம தருமசூத்திரம். அ. உகூ)

"எவன் *நாற்பது சம்ஸ்காரமுமடைந்து எண்குணங்களையுமுடையனின்றானை, அவன் பிரமத்தோடு சாயுச்சியமடைகின்றான்" என்றுரைக்கும் சூத்திரப்பிரகாரம் சம்ஸ்காரவாயிலாக ஆன்மாவுக்கு எய்திய பல சுருதியும் பிரயோசனமில்லையாய் முடியும்; அஃதன்றி,

வ்ராஹ்மணோ யஜேத।

"பிராமணன் யஞ்ஞஞ் செய்வானாக" என்னும் விதிகளும் வியர்த்தமாய் முடியும். ஆகலான் சகல சராசர வஸ்து சரீரங்களைப் பிரவேசித்த பிரமம் அவ்வம் மொழிகளால் உரைக்கப்படுதல் முக்கியமே. (கள்)

---

*இவை சைவபாடியத்து கசகூ ஆம் பக்கத்துக் குறிப்பிலே உள்ளன.

## (எ) ஆத்துமாசுருத்தியதிகரணம்.

நாதா ஸ்ரூதெதிர்தூவாஅ தாஹூம் (உ. கூ. கஅ)

(உகூசு) சுருதிப்பிரகாரம் ஆன்மா பிறக்கவில்லை; அச் சுருதிகளாற் கூறப்பட்டவாறு நித்தியமாயுமிருத்தலின்.

மேலே ஆகாய முதலியன பிரமத்திலிருந்து நேரே உதித்தன என்று கூறப்பட்டது. அந்த நியாயத்தினால் ஆன்மாவும் பிரமத்திலிருந்து பிறக்கின்றதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா பிரமத்தினின்று பிறக்கின்றதென்பது.

யதா தீவ்ரஹ ஜ்வாந ஈத்ருஹர் விஸ்ஃபுலிங்காஹ் ஸஹஸ்ரஷஹ ப்ரபவந்தே ஸரூபாஹ்
(சுவே. உ. கஅ)

"எப்போது இருள் உளதாய், பகலுமின்றி இரவுமின்றி, சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்"

ஏகமேவாத்விதீயம் (சாந். சு. உ. க)

"ஏகமேவாத்துவிதீயம்" என்னுஞ் சுருதிகளாற் சிருட்டிக்கு முன்னே பிரமம் ஒன்றே இருந்தது என்றும், சத்தும் அசத்தும் இல்லை என்றும் வற்புறுத்தப்படுகின்றது. ஆகலின் சிருட்டிகாலத்திலே பிரமத்தினின்று ஆன்மாக்கள் உற்பத்தியே ஆகின்றனர்.

யதாக்நேஃ க்ஷுத்ரா விஸ்ஃபுலிங்காவ்யுச்சரந்தி ஏவமேவைதஸ்மாதாத்மநஹ் ஸர்வே ப்ராணாஹ் ஸர்வே லோகாஹ் ஸர்வே தேவாஹ் ஸர்வாணி பூதாநி வ்யுச்சரந்தி (பிரு. உ. க. உ0)

"தீயிலிருந்து பொறிகள் பிறப்பது போல, பரமான்மாவிலிருந்து எல்லாப் பிராணன்களும், எல்லா உலகமும், எல்லாத் தேவரும், எல்லாப் பூதங்களும், எல்லா ஆன்மாக்களும் கூட்டமாய்ப் பிறக்கின்றன" என்று சுருதி கூறும் பிரகாரம் தீப்பொறித் திருட்டாந்தம் ஆன்மோற்பத்திக்கு இயைய இருக்கின்றது. ஆகலின் தீயிலிருந்து பொறிகள் பிறப்பது போல, ஆன்மாக்களும் பிரமத்தினின்று பிறக்கின்றன எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா பிறப்பதில்லை;

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந் (கட. உ. கஅ)

"அறிஞன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை" எனவும்,

நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் (கட. இ. கசு)

"நித்தியப் பொருள்களுள்ளே நித்தியரும், சேதனப் பொருள்களுள்ளே சேதனரும்" எனவும்

ஜாzஜ்ஞௌ த்வாவஜா வீஶாநீஶௌ (சுவே. க. கூ)

"பிறவாத இருவரும் அறிஞனும் அறிவிலனுமாய ஈசனும் அநீசனும்" எனவும் போந்த சுருதிகளானும் ஆன்மா நித்தியன் எனப் பெறப்படுகின்றமையின். சிருட்டிக்கு முன்னே பிரமமாத்திரம் இருந்ததென்று வற்புறுத்தினமை ஆன்மாக்களும் பாசங்களும் அந்தப் பிரமாகிருதியாகி நாமரூப வியவகாரம் ஒழிந்து நின்றமையாலாம்; ஆன்மாவின் சொரூபம் அசத்தாயிருந்தமையாலன்று. பொறியைப்பற்றிய சுருதியும் இவற்றின் நாமரூபத் தோற்றத்தைக் குறித்ததன்றிப் பிறப்பைக் குறித்ததன்று. இன்றேல், ஒருவர் தாஞ் செய்த கன்மத்துக்குப் பலனடையாதபோதன் முதலிய தோஷப் பிரசங்கம் எய்துமாதலின், பிரமத்தினின்று ஆன்மா பிறக்கவில்லை. (கஅ)

## (அ) ஞாதிகரணம்.

---

ஜ்ஞாzக வனவ (உ. கூ. ஙக)

(உகூரு) ஆகலின் (அவன்) அறிஞனே.

மேலே ஆன்மா நித்தியன் என்று சித்தமாயிற்று. பின்னர் இவனுக்கு இயற்கையறிவு உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா இயற்கையாகவே ஞானமற்றவன்.

ஜ்ஞ zஜ்ஞௌ ஶௌ (சுவே. க. கூ)

"அறிஞனும் அறிவிலனுமாகிய இருவர்" என்னும் சுருதியினால், ஆன்மா அறிவிலன் எனப் பெறப்படுகின்றான். ஆகலின், சைதன்னியமாத்திரரூபமாகிய இவன் அறிவிலனே. ஆயின் மாயாசத்தியினுறு சரீரேந்திரியாதிகளையடைந்து, இது கடம், இது படம், நான் மனிதன், நான் தேவன் எனப் பலதிறப்பட்ட அகங்காரத்திற் கட்டுண்டு போக்குவரவுடையனாயிருத்தலின், சம்சாரதசையில் இவன் அறிவிலனேயாகின்றான். இவனுக்கு இயற்கையாய்ச் சிறிதும் அறிவில்லை. இன்றேல் அவனுக்கு எங்ஙனம் முத்தி உண்டாம்? எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்; ஆன்மா அறிஞனே.

கஶ் யோ வெத்3ஏ4 ஜிஹ்ராணீதி ஸ ஆ3த்மா (சாந். அ. கஉ. ச)

"எவன் இதை நான் மணக்கின்றேன் என்றறிகின்றானே, அவன் ஆன்மா"

ஸ ய ஏஷோ(அ)ணிமைதத3ாத்ம்யமித3ம் ஸர்வம் தத்ஸத்யம் (சாந். அ. கஉ. கி)

ய வஸெ ஸ்வஹஸொகெ (சாந். அ. கஉ. சு)
உநாzஸ்ய ஸெஷவஸ்ஷுஷீ (சாந். அ. கஉ. நி)

வஷ வொசோராஜா தத்வா நாஹுஞ்ஜெவா ஹுச்யஜ்ஜி

(சாந். இ. க0. ச)

"இவன் சோமராஜன்; அவன் தேவர்களுக்கு *அன்னம்; இவனைத் தேவர்கள் †உண்கின்றனர்" என்று சுருதி கூறியவாறு, அவன் சோமராஜனுடைய வியல்பை அடைந்தபோது அவன் தேவர்களால் உண்ணப்படுவதாகக் கூறப்படுகின்றமையான், அந்த அப்பு (என்னும் மொழி) சிவான்மாவைக் குறிக்காதெனின்,

(உத்தரம்) அவன் உண்ணப்படுகின்றான் என்று கூறினமை கவுணமே. அவன் பரமான்மாவை அறியாமையாலே தேவர்களுக்கு அறிவிக்கும் கருவியாகின்றான் என்பதே அபிப்பிராயம். அவ்வாறே,

யதாவஸ்-ஸெவ0 வஜெவா நாழி (பிரு. கூ. ச. க0)

"பசுவிருப்பது போல அவன் தேவர்களுக்காகின்றான்" என்னுஞ் சுருதியானது பரமான்மாவை அறியாதவர்கள் பசுப்போலத் தேவர்களுக்கு உபகரணமாகா நிற்கின்றனர் என்று காட்டுகின்றது. பரமான்மவித்துக்கள் சிவபெருமானுக்கு உபகரணமாகவும், அநான்மவித்துக்கள் தேவர்களுக்கு உபகரணமாகவும் ஆகின்றனர் என்றும் அறியற்பாற்று. ஆகலின், எப்பிரகாரத்தினாலேனும் ஆன்மா மற்றோர் சரீரம் எடுக்குங்காற் சூக்குமசரீரத்தோடே செல்கின்றான் என்பது சித்திக்கது. (எ)

---

* அன்னம் என்றது உபகரணமாய்ப் பிரியமாயுள்ளதின் மேற்று.

† உண்கின்றனர் என்றது தேவர்களுக்கு அவர்கள் பிரீதியாகின்றார் என்பதின் மேற்று.

## (உ) கிருதாத்தியயாதிகரணம்.

---

கரிஷ்யதீயே zந்ரஸ்யவாதீ ஏஷ்டவ்யதிரேகோ யதிஷ்டேநவத்.

(சூ. க. அ)

(உகூறு) கருமம் முடிந்தகாலையில் ஆன்மா கன்மசேஷத்தோடு மீளுகின்றது; அங்ஙனம் அது போனபடியானும் வந்தபடியானும் எனச் சுருதி ஸ்மிருதி கூறுவதினால்.

ஆன்மா பூத சூக்கும தேகமுடையனகவே சுவர்க்கலோக முதலிய உலகங்களிலே போய்த் தேவசரீரமடைந்து சுயகன்மத்துக்குத் தகுதியாய பலங்களைத் துய்க்கின்றான் என மேலைச் சூத்திரத்தில் நிரூபிக்கப்பட்டது.

இப்போது ஆன்மா அங்ஙனம் துய்த்த பின்னர் இவ்வுலகத்துக்கு வருங்கால், அவன் கன்மசேஷத்தோடு வருகின்றானா? இன்றேற் கன்மமுழுமையுந் துய்த்தபின் வருகின்றானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இப்போது ஆன்மா அனுசயம் எனப்படும் கன்ம சேஷமின்றிச் சுவர்க்கத்தினின்று மீளுகின்றான் என்று கூறுவதே யுக்தம். [அநு=(ஆன்மாவோடு) கூட, சேதே=இருத்தல் எனப் பொருள்பட], அநுசயம் என்பது ஆன்மாவோடு கன்மசேஷம் சார்ந்துளதென்பதே பொருள். சுவர்க்கத்திருந்திறங்கினவனுக்குக் கன்மசேஷமில்லை; ஆண்டுக் கன்மபலந் துய்க்கப்பட்டமையின்.

யாவத்ஸம்பாதமுஷித்வா zயேதமேவாத்யயம் வாநமிவதந்தே

(சாந். நி. க0, ஒ)

"கன்மம் துய்த்து முடிவுபெறும் வரையுமிருந்து, அவர்கள் (ஆன்மாக்கள்) வந்த வழியே திரும்புகின்றனர்" என்று சுருதியும் அவ்விஷயம்பற்றிக் கூறுகின்றது. சண்டுச் சம்பாதம் என்பது கன்மசமூகம். கன்மமுழுமையும் ஒழியும் வரையும் அவர்கள் சுவர்க்கத்திலிருக்கின்றனர். ஆகலின், கன்மமுழுமையும் துய்த்தபின்னர் ஆன்மா கன்மம் யாதுமின்றியே சுவர்க்கத்திலிருந்து இறங்குகின்றான் எனின்,

(சித்தாந்தம்) நல்வினை துய்த்து முடிந்து ஆன்மா மீண்டு இவ்வுலகத்துக்கு வருங்காற் சேஷகன்மத்தோடு தொடர்ந்து வருகின்றான். இது எங்ஙனம் கூறப்படுகின்றதெனின்? சுருதி ஸ்மிருதி வாயிலாய்.

த஥஧ ரமணீயசரணா அபயாதஹ ரமணீயாம் யோநிமாபத்யேரன்ப்ராஹ்மணயோநிம் வா க்ஷத்ரியயோநிம் வா வைஶ்யயோநிம் வா அத ய இஹ கபூயசரணா அபயாதஹ யதே கபூயோநிம்

யாம் யொநிஷ்வஜ்ராநீ ஸ்வயொநிம் வா வஸ்ரூயொநிம் வா அண்டஜ யொநிம் வா (சாந். நி. க0. எ)

"நல்லொழுக்கமுடையோர் பிராம்மண க்ஷத்திரிய வைசியர் முதலிய நற் பிறப்பை விரைவில் அடைகின்றார், தீயொழுக்கமுடையோர் நாய் பன்றி சண்டாளன் முதலிய தீயபிறப்பை விரைந்து அடைகின்றனர்" எனச் சுருதி யிற் கூறப்படுகின்றது.

ஜாயதே வ்ரீணுகுஷ்ணா।

"அவன் நற்கன்மத்தினற் பிறக்கின்றான்" என மிருதியினும் கூறப்படுகின் றது. இன்றேல் உடனே பிறந்த சிசுவுக்கும் தர்மா தர்மமில்லாமையான் சுக துக்காநுபவம் இல்லையாய் விடும். ஆகலின், போனவழியேயேனும் வேறு வழியேயேனும் மீளுங்காற் சேஷகன்மத்தோடே ஆன்மாக்கள் வருகின் றார்கள். அஃதாவது அவர்கள் ஆகாயமார்க்கமாக இறங்குங்கால் ஏறின வழியே வாயுவாதிகளையடைந்தும், பிதிருலோக முதலியவற்றையடையாம லும், வேறு பிரகாரமாக மீளுகின்றார் என்பது பொருள். (அ)

பின்னருஞ் சூத்திரகாரர் ஆக்ஷேபித்து மற்றோர் பிரகாரம் மறுக்கின் றனர்.

ஸரணாதி செந தத்வமுக்ஷணாயேதி சாஷ்டாஜிநி।

(சூ. க. கூ)

(உகூசு) சரணம் என்னும் மொழியினலெனின் அன்று; அது உபலக்ஷணப்பொருளென்று கார்ஷ்ணாஜிநி சொல் கின்றனர்.

(நல்லொழுக்கமுடையர்) ரமணீயசரணாஃ (தீயொழுக்கமுடையர்) கபூய சரணாஃ என்பவற்றிற் கண்ட சரண என்னும் மொழியினல் அனுசயம் எனப்படும் கன்மசேஷம் சித்திக்கவில்லை; அது ஸ்மிருதியிற் கண்ட ஒழுக் கத்தையே குறித்ததாம் எனின்,

(உத்தரம்) அன்று; சுருதியிற் கண்ட சரண என்னும் மொழி அனுச யம் எனப்படும் கன்மசேஷத்துக்காகவே உபலக்ஷணப்பொருளாயிருக்கின் றது; அத்தக் கன்மசேஷமே சுகாதிகளைச் சாதிக்கின்றமையின். (கூ)

சூநஸ்ஸேபீதி செந தத்வெக்ஷணாத் (சூ. க. க0)

(உகூஎ) (அந்த ஒழுக்கம்) வீணும் எனின், அன்று; அதனை அபேக்ஷித்திருத்தலான்.

(ஆக்ஷேபம்) அங்ஙனமாயின், ஸ்மிருதியிற் கூறப்பட்ட ஒழுக்கம்உப் யோகமின்றியும் வீணுகவும் போமே எனின்,

(உத்தரம்) அன்று;

ஸ்யாஹீநா zஸ்ஹிநி-க்ருʼ நஹ-க்ஸ்வ-க்ருʼ-க்ஸ்வ-।
யஉ நு-க்ஸ்ஸ்-தெ கூʼ-க் நதவ்ய ஹஇஹா ஹ்ஸ்வெகு।

"(காலை மாலைச்) சந்தியின்றி இருக்கும் எவனும் நித்தமும் அசுத்தன்; சகல கன்மத்துக்கும் யோக்கியனுகான்; அவன் எக்கிரியையைச் செய்யினும் அவன் அதன் பயனை அடையான்" என்று சுருதியிற் கூறப்பட்டாற் போல, நல்வினைகளனைத்தும் அதனை அபேக்ஷித்துண்மையான். இது கார்ஷ்ணஜினியின் கொள்கை. (கo)

ஸ்ஸ்ஸ்ய உஷ்ஷ்ய தெ ஸவெதி தஸ் ஸாஉரிஃ (கூ. க. ககo)

(உகூஅ) ஆயின் நல்வினை தீவினைகளே என்று கூறுவர் பாதரி.

(மேலே உதகரித்த சுருதியிற் கண்ட) சரணம் என்னும் மொழி (முறையே) நல்வினை தீவினைகளைக் குறித்ததென்பர் பாதரி; புண்ணிய கன்மத்தை ஆசரிக்கின்றன் எனப் பிரசித்தமாகலின். சூத்திரகாரர் கருத்தும் இதுவாம். சரணம் என்பது உபலக்ஷணையினுலன்றி நேரே நல்வினை தீவினைகளைக் குறித்ததெனப் பாதரி கூறுகின்றர். கன்மமானது ஸ்மிருதியிற் கூறப்பட்ட நல்லொழுக்கத்தை அபேக்ஷித்து நின்றது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதே.

ஆகலின், ஆன்மா சுவர்க்கத்திருந்து மீளும்போது தான் செய்த நல்வினை தீவினையாகிய கன்மசேஷத்தோடு தொடர்ந்துவருகின்றன் என்பது சித்தித்தது. (கக)

## (கூ) அநிஷ்டாதிகார்யாதிகரணம்.

கூஷ்டாதிகாரிணாஷ்வி அஸ்ய தி (கூ. க. கஉ)

(உகூக) நற்கன்மமுதலிய செய்யாதோர்க்கும் கூறப்பட்டது.

யஞ்ஞாதிகளாகிய பொதுத் தருமங்களைச் செய்பவர் சந்திரனை அடைதல்போல, மற்றையோரும் சந்திரனை அடைகின்றரா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அங்ஙனமாயின் யஞ்ஞாதி பொதுத் தர்மங்களைச் செய்யாதவர்க்கும் சந்திரகமனம் உண்டே;

யெ வைகெ சாஸ்மாத்லோகாத்ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தெஸர்வெ முஷ்ணந்தி (கௌஷீ. க. உ)

"இவ்வுலகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போவார் எவருஞ் சந்திரனையே அடைகின்றனர்" என்னுஞ் சுருதியினால் எல்லோரும் பேதம் யாதுமின்றிச் சந்திரனை அடைகின்றனர் எனக் கேட்கப்படலான். பாவிகளுக்கு அங்கே இன்பம் இடையாவிடினும் மீண்டுவந்து சரீரம் எடுக்கும்பொருட்டும், பஞ்சமாகுதியை அடையும்பொருட்டும் சுவர்க்கத்துக்குப் போதல் அபேக்ஷிக்கப்படுகின்றது. ஆகலின், யஞ்ஞமுதலிய பொதுத் தருமங்களைச் செய்யாதோர்க்கும் சந்திரகமனமுளதாம் எனின்; (கூ)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ஸுயதெ கூநூஹியெதரெஷா ரொஹாவரொஹௌ தூதிஷூநாஷு (சூ. க. கசு)

(சூ00) ஆயின் யமலோகத்திலே அனுபவித்துப் பிறரெல்லாம் போய் மீளுகின்றனர்; சுருதி அக்கதிகளைக் காட்டலான்.

யஞ்ஞாதி பொதுத் தர்மங்களைச் செய்யாதோர்க்குச் சந்திரகமனமில்லை. ஆயின்,

வெவஷ்வதம ஸுமநஸ ஜநாநாழி (இரு. வே. க0. கச. க); (தைத். ஆரணி. சு. க. க)

"சனங்களுக்கெல்லாம் எல்லை யமன்" என்றவாறு, அவர்கள் யமலோகத்திலே கருமபலன்களைத் துய்த்துப் பின்னர்ப் (பூமிக்கு) மீளுகின்றனர். அவர்களுக்குப் போதலும் மீளுதலும் இங்ஙனமே. ஒருவன் சுவர்க்கம் போதல் போகத்தின்பொருட்டன்றே; பஞ்சமாகுதி பெறும்பொருட்டன்று; பெண்ணின் ஆகுதியானது இல்லையாக, * துரோணர் முதலாயினோர் விஷயத்திற் றோஷமேறலான். ஆகலின், பாவிகளுக்கு யமலோகப்பிராப்தி என்பது யுக்தம். (கூ)

ஸுரஸ்ய (சூ. க. கச)

(சூ0க) ஸ்மிருதியும் கூறுகின்றன.

---

*வ்யூஹவ்யூதெ வை்யூஹத்தீதெ தெ்வஷெ் விதி ஹாரணி।
கஸ்ய தெ்ரோணஸ் யஜ்ஞஸேந ஸ்ரஸ்ருஜ ஶயோநிஜ்।

(பார. ஆதிபருவம், கஎ: எ0)

"பரத்துவாஜகுமாரராகிய துரோணர் (ஐந்தாவது ஆகுதியாகிய) பெண்ணிடத்தினின்று மிகுந்த புகழ்படைத்த பிருகஸ்பதியின் அம்சத்தினின்று உற்பவித்தனர்" என்று பாரதம் கூறுகின்றது.

ஸ்ரவெ ரிவெரித வஸ்ரு யாஜி யிவ்யு ஹமவதிஜ

(விஷ்ணுபுராணம். கூ. ச. ரி)

"பகவானே, இவரெல்லாம் யமனுடைக்குட்படுகின்றனர்" என்றற்றொடக்கத்த விஷயம், இந்தப் பொருள்பட, ஸ்மிருதியினும் கூறப்படுன்றது. (கச)

கவிய வஷ (கூ. க. கரி)

(கூ0உ) மேலும் ஏழு (உண்டு)

சப்த இரௌரவாதி நரகங்களையும் பாவிகளுக்கு மகாநரகங்கள் என்று கூறினர். (கரி)

கதராவி ய கஉயாவாராஷவிரோயஃ (கூ. க. கசு)

(கூ0ஊ) அங்கும் அவனது வியாபாரமுண்மையின் விரோதம் இல்லை.

சித்திரகுப்தர் முதலாயினோரால் அதிஷ்டிக்கப்பட்ட நரகங்களினும், அவரையெல்லாம் பிரேரிக்கும் யமன் அவர்களுக்கு அதிஷ்டாதாவாதலின், அவ்வியமன் வசப்பட்டவராயினர் என்பதனால் விரோதமுறுது. (கசு)

விஷ்ணுகஃணொரிதி தூ வரகூ்கவாஸ (கூ. க. கள)

(கூ0ச) வித்தையும் கன்மமுமே பிரகிருதவிஷயமாதலின்.

(ஒருவன்) வித்தை எனப்படும் உபாசனபலமாகிய பிரமத்தையேனும் கன்மபலமாகிய சந்திரனையேனும் அடைகின்றன். எங்ஙனம்?

கதூ உயஂ விஷ்யெஃ செஃஇறணைஸ்ரஜா கவ உகதூ வாஸதெ தெzஷ்டஃஷஃஹிஸஂஹவஞ்ஞி | கூய ய உஇ ஸ்ரா3 உஷ்டாவஷ் தெதஃ உதூதி்கதூவாஸதெ தெ யஷ்ஃஹிஸஂஹவஞ்ஞி|

(சாந். நி. கஂ. க, கூ)

"இதனை அறிந்தவர்களும், வனத்திலே சிரத்தையுடையராகத் தவஞ் செய்வோரும், அர்ச்சிகதியை அடைகின்றனர்; ஆயின் கிராமத்திலே யஞ்ஞாதி தருமங்களைச் செய்பவர் தூமகதி அடைகின்றனர்" என்னுஞ் சுருதியிற் கண்டவாறு பிரமத்தையும் சந்திரனையும் அடைவிப்பன முறையே வித்தையும் கன்மமுமாம் என ஆரம்பிக்கப்பட்டமையின். ஆகலின், பாவிகளுக்கு அக்கதிப் பிரசங்கமின்று. (கள)

நகதூதிய தயொவமவஞ்ஃ (கூ. க. கஅ)

(கூ0எ) மூன்றுவதாயினர் (சுவர்க்கத்துக்குப்) போவாரல்லர்; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றமையின்.

சரீரம் பஞ்சமாகுதி வாயிலாகப் பெறப்படவேண்டுதலான், பாவிகளுக்கும் அதுபற்றிச் சுவர்க்கலோகம் வாய்க்காது;

ஸையெதயோர் வயோ நஃ கதரேண ச நதாநீஸாதி கூஷ்ணாஸ்வ வக்ஷ்ரூஷாவதீஃநி ஹுஃதாநி ஹவஷி ஜாயஸ்வஷ்ரியஸ்வேதி தீய ஷ்ரூநo தெநாஸ்மாஃலோகாந்நயதீதி (சாந். நி. கo. அ)

"இந்த இரண்டு மார்க்கத்தில் எதிலாவது இறந்து பிறக்கும் அற்ப செந்துக்கள் இடைவிடாது மீளுவனவல்ல; அவைகளுக்கு மூன்றுவதாகிய ஸ்தான மொன்றுளது; ஆகலின், அந்த உலகம் நிறைவாதல் இல்லை" என அவர்கள் சுவர்க்கத்துக்குப் போதல் இல்லை என வெளிப்படையாகக் கூறுகின்றமையான். "மூன்றுவது தானம்" என்பது பாவிகள் மேற்று. ஆகலின், பாவிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர். (கஅ)

ஷ்யஃதெதzவிச லொகெ (கூ. க. ககூ)

(கூoகூ) உலகத்திற் கூறப்படலானும்.

இவ்வுலகத்திலே புண்ணியகன்மமுடைய *திரௌபதி முதலாயினோர்க்குச் சரீர ஆக்கத்தின்பொருட்டு ஐந்தாவது ஆகுதி அபேக்ஷிக்கப்படவில்லை எனக் கருதப்படுகின்றது. (ககூ)

ஔஃநாஅ (கூ. க. உo)

(கூoஎ) (சுருதியிற்) காண்டலானும்.

தெஷாo வஷ்வஷாo ஹுஃதாநாo தீரணைவ ஸீஜாநி ஹவஷி ஸ்ணஜ்ஜo ஜீவஜ்ஜீஃஜ்ஜி (சாந். சு. கூ. க)

"எல்லாச் செந்துக்களுள்ளும் அண்டஜம், சீவஜம், உற்பிச்சம் என மூன்று பீஜங்களே உள" எனச் சுருதியிற் காணப்படுகின்றது. ஈண்டுச் சுவேதஜ உற்பிச்சவிஷயத்தில் அது (பஞ்சமாகுதி) அபேக்ஷிக்கப்படாமை காணப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) "சீவஜம் உற்பிச்சம்" என்னுஞ் சுருதியிற் சுவேதஜத்தைப்பற்றிக் கூறப்படவில்லையே எனின், (உo)

---

*கூஷாஸீஆவி வாஹுதாஸீ வெத்ஃஜ்யா ஜ்ஞஃஷ்ட்டிதா.

(பார. ஆதிபருவம், ககூக : ஸ்ச)

(திருஷ்டத்துய்மர் உதித்தபின்னர்) யஞ்ஞவேதியின் மத்தியிலிருந்து பாஞ்சாலி எனப்படும் புத்திரியும் எழுந்தாள்" என்று பாரதல் கூறுகின்றமையால், திருஷ்டத்துய்மரும் திரோபதியும் ஐந்தாவது ஆகுதியாகிய பெண்ணிடத்திருந்து உற்பத்தியாயினரல்லர் என்பது பெறப்படுகின்றது.

(உத்தரம்) சூத்திரகாரர் இறுக்கின்றனர்.

தரீயஸ்ஸூவஸ்ரோய ஸ்ஸஸ்ரோகஜஸ்ய (சூ. க. உக)

(சூ0அ) சுவேதஜமானது மூன்ருவதாகிய (உற்பிச்சத் தில்) அடங்கிற்று.

சுவேதஜமும் மூன்ருவதாகிய உற்பிச்ச மொழியில் அடங்கிற்று. ஆகலின், பாலிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர் என்பது நிர்ணயிக்கப்பட்டது. (உக)

## (ச) தத்சுவாபாவ்யாபத்தியதிகரணம்.

கஷ்ஷாஹவ்யாவதிஸ்வவதிதீ (சூ. க. உஉ)

(சூ0கூ) அவன் ஒத்த இயல்பை அடைகின்ருன்; அது பொருத்தமாதலின்.

சுவர்க்கத்திலே பல போகம் துய்த்தபின்னர்க் கன்மசேஷத்தோடு வருகின்றனன் என மேலே அதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது.

கஸ்மைதேவாஷ்டாந0 வஸ்நகிஷ்வத்ஷ்ஷெ யஸ்மைதீகூஸ ரீ கா ாாஹாய்ா0 வாய்ஸ்ஹஷ்டிகூாய்ஸ்மிோ ஹவதி யஸ்மிோ ஹஸ்மி கூாzஹ்ரு0 ஹவதி கூஹ்ரு0 ஹஸ்மிகூா மெவோ ஹவதிமெவாஹஸ்மிகூா வ்ரவஷ்டி (சாந். நி. க0. நி, சு)

"பின் அவர்கள் வந்த வழியே ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து வாயுவுக்குமாக மீளுகின்றனர்; பின் (யஞ்ஞஞ் செய்வோன்) வாயுவாகிப் புகையாகின்ருன்; புகையாகிப் பனியாகின்ருன்; பனியாகி மேகமாகின்ருன்; மேகமாய் வருஷிக்கின்ருன்" என்னுஞ் சுருதியில், அவன் இறங்குங்கால் ஆகாய முதலியவாதல் கூறப்படுகின்றது.

ஆன்மா ஆகாயமாகின்ருனு? இன்றேல் ஆகாயம் போலாகின்ருனு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆகீ (ஹஸ்மிகூா) என்னும் மொழியினல், ஆன்மா ஆகாசாதியாகவே எய்துகின்ருன் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். இறங்குங்கால் ஆன்மா ஆகாசாதியாக வரவில்லை; ஆனல் ஆகாயாதி போல வருகின்ருன்; அங்கே (அவனுக்கு) சுகதுக்காநுபவயோக்கியமின்மையின். இன்பதுன்பங்களை அடைதற்காகவே ஆன்மா அவ்வச் சரீரங்கள் எடுப்பது; ஒரு பொருளுக்கு மற்ருேர் பொருட்டன்மை ஸ்வதமாட்டாமையின். ஆகலின், இறங்குங்கால் (ஆன்மா) ஆகாயமுதலிய போல் வருகின்ருன் என நிர்ணயிக்கப்பட்டது. (கூ)

## (நி) நாதிசிராதிகரணம்.

நாதிஸிரொண விஸொஷாகு (சூ. க. உசு)

(சுகo) நெடுங்காலமன்று; விசேஷமுண்மையான்.

ஈண்டு இறங்குங்கால் ஆன்மா தாமசமுறுகின்றனனோ? இன்றேல் தாமச முறவில்லையா? இன்றேல் நியமமில்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

த உஹ வீரஹி யவா ஓஷயி வநஷ்பதயஷ்ஸோஷாஇ தி ஜாயதெ|
(சாந். நி. கo. சு)

"நெல்லு, யவை, ஓஷதி, வனம், திலம், உழுந்து என்பனவாயாகின்றன" என்னுஞ் சுருதியானது (ஆன்மா) மழைபெய்தபின்னர்த் தானிய முதலிய இயல்பை அடைகின்றன் எனக் கூறுகின்றது. நெல்லு யவை முதலியவை களாய் அடைதற்குமுன், (ஆன்மா) ஆகாய முதலியவற்றில் விளம்பமாயே னும், விளம்பமில்லாமலேனும் உளதாம்; இதற்கு நியமமில்லை எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். நென் முதலியவாகவாதற்குமுன் ஆன்மா ஆகாயமுதலியவற்றில் நெடுங்காலம் நிற்கிறதில்லை; எங்ஙனம்?

கதொ வெ வஸு ஒஷதிவநஸ்பதரு (சாந். நி. கo. சு)

"அதிலிருந்து தவிர்தல் மிக அரிது" என்னுஞ் சுருதியினால், நென் முதலிய வாயபின் அவ்வியல்பிலிருந்து நீங்குதல் அரிதாம் எனக் கேட்கப்படுகின் றது. ஆகலின், (ஆன்மாக்கள்) நென்முதலியவற்றிற்றமதித்தலான், பிற விடங்களிலே (அவை) விரைந்து செல்கின்றன எனப் பெறப்படுதலின், ஆகாசாதிகளில் ஆன்மா தாமசஞ் செய்யவில்லை. (உக)

## (சு) அந்யாதிஷ்டிதாதிகரணம்.

கந்யாயிஷ்டிதெ வ்ரவ்வதியாவாகு (சூ. க. உசு)

(சுகக) மற்றொன்றால் (ஆன்மாவினால்) அதிஷ்டிக்கப் பட்டவிடத்து முன்போற் கூறப்பட்டமையான்.

ஈண்டு ஆன்மா தானியாதியோடு சம்பந்தமாத்திர முற்றுவருகின் றதா? இன்றேல், தானியமாய்ப் பிறக்கின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை நென்முதலியனவாதற் பிறக்கின்றன எனக் கூறுகின்றமையின், ஆன்மா தானியமாய்ப் பிறக்கின்றதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். மற்றை ஆன்மாக்களால் அதிஷ்டிக்கப்பட்ட தானியமுதலியவற்றில் ஆன்மா சம்பந்தமாத்திரமுறுகின்றது; ஆகாய முதலியவாயிலாக இறங்கும்போது ஆங்கு ஆன்மாவுடைய பிறப்பின் காரணத்தைச் சுருதி கூறுமையின், "பிறக்கின்றன" என்னுஞ் சுருதியின் பொருள் கவுணத்தின் பாலதாம். ஆன்மா பிராம்மணியராய்ப் பிறக்குங்கால், கல்வினையுடையார் தீவினையுடையார் என்னும் மொழிகளால் அவ்வப் பிறப்புக்களின் காரணத்தைச் சுருதி கூறுகின்றது. ஆகலின் அவன் பிராம்மணியராய் மாத்திரம் பிறக்கின்றான் எனச் சுருதி கூறுவதாற் பிற விஷயங்களிலெல்லாம் சம்பந்தமாத்திரம் என்று கோடலே நிர்ணயம். (உச)

ரூபோபதி சௌ ஸூத்ரம் (சூ. க. உடு)

(சூகஉ) அசுத்தமெனின், அன்று; சுருதி கூறுவதால்.

இறங்கும் ஆன்மா தான் முன் இயற்றிய யாகாதிகளில் அக்கினிஷோமீயாதி ஹிம்சை கலந்துளதாகலின், அசுத்த கன்மபலத்தைத் துய்க்கும் பொருட்டுத் தானியாதிரூபமாய்ப் பிறத்தல்வேண்டும் எனின்,

(உத்தரம்) அன்று;

ஹிரண்யஶ்மஶ்ரு ஸுவர்ண-விமோகஜ்ஞாதி
நவா உ வை தந்யவை ரிஷ்யஹி (இரு. வே. க. சசுஉ. உச)

"சுவர்ண சரீரமாய் அது மேலே சுவர்க்கத்துக்குப் போகின்றது;" "வாஸ்தவமாய் நீ சாவாயல்லை, அழிவாயல்லை" என்னுஞ் சுருதியினற் பசு ஹிம்சையானது அஹிம்சையாம். ஆகலின், இறங்கும் ஆன்மா தானியாதியாகப் பிறக்கவில்லை. (உடு)

சூத்திரகாரர் மற்றோர் பிரகாரம் விளக்குகின்றனர்.

ரேதஸ்ஸிக்யோரேவ zய (சூ. க. உசு)

(சூகசு) பின்னர் இரேதஸ் விடுபவனோடு சம்பந்தம்.

யோ யோஹ்யஸ்ய ரேத ஸ்ஸிஞ்சதி தத்பூய வைவ ஹவதி
(சாந். டி. கo. சு)

"எவனெவன் அன்னமயின்று இந்திரியத்தை விடுங்கால் அவன் (பெண்ணிடத்துப்) பின்னும் அவ்வாகிருதியாகவேயாகின்றான்" என்னுஞ் சுருதியில் இந்திரியத்தை விடுப்பவனோடு ஆன்மாவுக்குச் சம்பந்தமாத்திரமுறுதலாகக் கூறப்படுகின்றது. ஆகலின், முன்னரும் நென் முதலியவற்றிலும் சம்பந்த மாத்திரமே (சுருதி கருதிற்று). (உசு)

யோனே ஶ்மஶ்ரு (சூ. க. உஎ)

(சூகச) யோனியிலிருந்து சரீரம்.

அவன் எப்போது யோனியை அடைகின்றானே, அப்போது சரீரமுண்டாகின்றது. ஆகலின், இதற்குமுன்னே சம்பந்த மாத்திரம் என்பது தாற்பரியம். (உஎ)

## மூன்றும் அத்தியாயத்து
## இரண்டாம் பாதம்.

—o—

### (க) சந்தியாதிகரணம்.

ஸoயை₂ வ்₃வஷி ராஹ ஹி (கூ. உ. க)

(கூகநி) சொப்பனத்திலே சிருட்டி (சீவான்மாவினது); அங்ஙனஞ் (சுருதி) கூறுகின்றதன்றே.

மேலே ஆன்மாவுடைய போதல் மீளுதல்கள் நிரூபிக்கப்பட்டன. ஈண்டு அதன் அவஸ்தை விசாரிக்கப்படுகின்றது. சொப்பனத்திலே,

ந ததர ரயா ந ரயயொகா ந வoயாஎநா ஸவஷ்₃யராயா ந்ர யயொகா ஸ்ருஜதெ (பிரு. சு. கூ. கo)

"அங்கே இரதங்கள் இல்லை, குதிரைகள் இல்லை, பாதைகள் இல்லை, ஆயின் தானே இரதங்களையும், குதிரைகளையும், பாதைகளையும் சிருட்டிக்கின்றன்" என்பனமுதலியவற்றுற் சிருட்டி கூறப்படுகின்றது.

இந்தச் சிருட்டி ஆன்மசிருட்டியா? சிவசிருட்டியா? என்பது சந்தேகம். (பூருவபக்ஷம்) ஆன்ம சிருட்டி எனப் பெறப்படுகின்றது.

கூய வெ₃ஹாஂ வ்ரூஷரிண்₃ஸ்₃ரவந்₃ய ஸ்ரஜதெ ஸஹி கூத்₃ரா।

(பிரு. சு. கூ. கo)

"அவன் கேணி, வாவி, நதி என்பவற்றைச் சிருட்டிக்கின்றன்; அவனே கர்த்தா" எனச் சொப்பனம் காணும் ஆன்மாவையே கர்த்தாவாகச் சுருதி கூறுகின்றதன்றே. (க)

நிர்மாதாரமெஇகெ வ்ருத்யாஂ (கூ. உ. உ)

(கூகசு) புத்திரர் முதலாய (இச்சித்த பொருள்களையும்) சிருட்டிப்பவனுகவும் (சொல்வர்) சிலர்.

ய வாஷ வ்ரூவ்ஷ்ஷ ஜாகர்தி காமo காமo வ்ரூருஷொ நிர்மிணாண:।

(கட. நி. அ)

"நித்திரை செய்பவரில் விழிப்பாயிருக்கும் அந்தப் புருஷன் ஒன்றன்பின் ஒன்றாக இனிய காட்சியை உருவப்படுத்துகின்றன்" என்னுஞ் சுருதியினால், இச்சித்த பொருளைச் சொப்பனத்திற் சிருட்டிப்பவன் ஆன்மாவே என்று சில சாகையினர் உரைக்கின்றனர். ஈண்டுக் காமம் என்னும் மொழி புத்திரர் முதலாய விரும்பிய பொருள்களின் மேற்று;

வவ-ர்ா நாகிவாஹ்ஹ தீ வ்ராயு-ர்யவ்ஹ (கட. க. உஞ்)

"நீ விரும்பிய பொருள்களை யெல்லாம் வேண்டியபிரகாரம் கேள்" என முன்னர்க் கூறி,

ஸ்தாய-ஷீ வ-ர்தவெள தீராரூணீவ்ஹ (கட. க. உசூ)

"நூறு வருஷம் சீவிக்கும் புதல்வரையும் பௌத்திரரையும் கேள்" எனச் சுருதி விளக்கினமையின். இந்த நியாயத்தினலும் சொப்பன சிருட்டி ஆன்மாவினதே எனின், (உ).

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ர்யாரீர்தஹ்ஹ கர்ஹ்ஸ்ரு-ர்ந நஹிவ்)கவ்ஹ-ர்வவ்ஹாக்ஷ்

(சூ. உ. சூ)

(சூகள) ஆனல் (அது) மாயாமாத்திரம்; (ஆன்மாவின்) சொரூபம் முற்றும் வெளிப்படாமையான்.

சொப்பனத்திலே சிருட்டிக்கப்பட்ட மாயாமாத்திரமாகிய இரதமுதலிய பொருட்சமூகம் சிவபெருமானற் சிருட்டிக்கப்பட்டதன்றி ஆன்மாவினற் சிருட்டிக்கப்பட்டதன்று. சொப்பனகாலமாத்திரத்தில் முடிவுறுவதாய் நிற்றலான், (இது) சொப்பனங் காண்போனல் அநுபவிக்கப்படுவது; ஆச்சரியமாயிருத்தல்பற்றி மாயாமாத்திரமாயிருக்கின்றதென்று கூறப்பட்டது. ஆன்மாவுக்குச் சத்திய சங்கற்பத்துவாதிகள் மறைக்கப்பட்டிருத்தல்பற்றி, அவ்வான்மாவுக்கு இரதமுதலியவற்றைச் சிருட்டிக்கும் சாமர்த்தியம் இல்லை. ஆகலின்,

வ-ர்ர-ஷொ நிஷி-ர்ரோணீ (கட. நி. அ)

"(இச்சித்த பொருள்களைச்) சிருட்டிப்பவனைக் கூறப்பட்ட புருஷன்" என்னுஞ் சுருதி விஷயம் ஆன்மாவைப் பற்றியதன்று.

தஷ்வ ஸ-ர்ஜ்ர கவ்ரஹ தஷ்வாஷ்ரத ஷ-ர்யுதெ |
தஷ்வ்ரிஸீ ஜொகாஸ்ரீதாவ்லவெ-ர் தஷ-ர்நாதெரூதி கர்ஹ்ஹ்ந||

(கட. நி. அ)

"அதுவே சுக்கிரம், அது பிரமம், அதுதான் சிவம் என்று கூறப்படுகின்றது; அதிலே எவ்வுலகமும் அடங்கின; இதற்குமேல் எவனும் போவதில்லை" என்னும் வாக்கியசேஷத்தினல், (அது) சிவபெருமானைச் சுட்டியது; ஓரே பொருளைக் காட்டலான்.

வ ஹி கதா-ர்ா (பிரு. சு. உ. க0)

"அவன் கர்த்தா" என்பதும் அச்சிவனுர் விஷயமே. ஆகலின், சொப்பன சிருட்டி சிவபெருமானது. (சூ)

சூத்திரகாரர் ஆன்மசொரூபம் வெளிப்படாமைக்குக் காரணம் கூறுவாராயினர்.

வாஹிஜ்யா நாத்ஹ் திரோஹிதம் தெதாஹ்யஸ்ய பேயவிவயுக்தயெள। (சூ. உ. ச)

(சுகஅ) ஆயின் பரத்தினது சங்கற்பத்தினுலே மறைக்கப்பட்டது; ஆதலினுலன்றே அவனுக்குப் பந்தமும் மோக்ஷமும் உளவாம்.

ஆன்மாவுக்குள்ள அநாதி அபசார பிரவாக காரணமாகப் (பரத்தினது) சிவனுடைய சங்கற்பத்தினுல் ஆன்மாவினது சத்திய சங்கற்பத்துவ முதலியன மறைக்கப்பட்டன. அந்த அபசாரத்தினுலேதான் அது வெளிப்பட்டிலது. ஆதலினுற்றன் சிவபெருமானுடைய சங்கற்பத்தினுல் அவனுக்குப் பந்தமும் மோக்ஷமும் உளவாகின்றன. அங்ஙனமே,

யதாஹ்யவெஷ வனதஸ்ஹிஜ்ஹ்யஸ்ய ஸநாதனஸ்ய ஸகிரஸ்ய ஸகியஸ்ய ஜந்துஷ்ஹ விஜ்ஞதி, சுய மொஸுயஸ்ய நிதா ஜவதி யதா ஹ்யவெஷ வனதஸ்ஹிஜ்ஹ்யாஜ்ஹாஸ்ய கர்ஸ்ய தெ, சுய தவ்ய ஜயஸ்ய ஜவதி (தைத். உ. எ. க)

"எவன் காணப்படாததாயும், சரீரமிலதாயும், கூரூணதாயும், நிலயமிலாததாயும் இருப்பதிலே பயமிலனுய்ப் பிரதிஷ்டையை அறிகின்றனே, அவன் பயமொழிந்தவனுகின்றன்; பின் அவன் அதிற் சிறிது வேற்றுமை பண்ணுவானுயின் அவனுக்குப் பயமுண்டு" எனச் சுருதியும் கூறுகின்றது. (ச)

தெஹயொநாஹாவொ ஸவி (சூ. உ. நி)

(சுகக) இன்றேல் அது தேகசம்பந்தத்தினுலுமிருக்கலாம்.

தேவர் மனிதர் முதலாயினேர் தேகாகாரமாகிய ஜடச்செயற்கையினுலே சிருட்டிகாலத்தில் ஆன்மாவுடைய சொரூபம் மறைக்கப்பட்டிருப்பினும்; பிரளயகாலத்திலே நாமரூபமாகப் பிரிக்க வியலாத சூக்குமாகாரமாகிய ஜடசம்பந்தத்தினுல் அதன் சொரூபம் மறைக்கப்பட்டது. இங்ஙனம் சத்திய சங்கற்பத்துவாதிகள் மறைக்கப்பட்ட அதற்குச் சொப்பனத்திலே தாற்காலிக விசித்திரசிருட்டி சாமர்த்தியம் எய்தாது. (நி)

சூத்திரகாரர் பிறிதோர் நியாயம் கூறுகின்றனர்.

வாவிஅதஸ்ஹ ஹி ஸ்ருதெ ராஅஷ்ஹெத அ தத்வஃ (சூ. உ. ஈ)

(சுஉ0) அது (முன்னர் அறிவிக்கும்) சூசகமாயே உள்

னது சுருதி கூறுகின்றமையான்; அதிற் றேர்ந்தவர்களுஞ் சொல்கின்றனர்.

யதா கபிலஸ் கர்தவ்யஷ் ஸ்யாத் ஸுவர்ணஷ் வர்ணதி
ஸ்ரேஷ்டீ தத்ர ஜாநீயாத்ஸுநீ ஸுவ நிதர்ஸநே (சாந். நி. உ. கூ)
கய ஸுவர்ணஃ வர்ணஷ் கூஷ்ணஷ் கூஷ்ணதரஷ் வர்ணதி ஸ வஸ்ந ஹஸ்தி
(ஐதரேயஆரணியகம். கூ. உ. ச. கள)

"எப்போது காமியகருமங்களிலே ஸ்திரியைச் சொப்பனங்களிலே காண்கின்றனை, அவன் ஜாக்கிரத்திலே செல்வம் வருவதாக அறியற்பாலன்;" "பின் கரிய பற்களோடு ஓர் கரிய மனிதனைக் கண்டால் அவன் இவனைக் கொல்கின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளுண்மையின், சுபாசுபத்தைக் காட்டுவதன்றே சொப்பனம். சொப்பனத்தியாயங்களை அறிந்தோர் சொப்பனங்கள் சுபாசுபங்களைச் சூசிப்பன என்று உரைக்கின்றனர். ஆகலின், சொப்பனப் பொருள்கள் ஆன்மசிருஷ்டமன்று; (அவை) ஆன்ம சிருஷ்டமாயிருப்பின், தீமையைச் சூசிப்பிக்கும் அப்பொருள்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கமாட்டாவாதலின். ஆகலின், சொப்பனசிருட்டி சிவபெருமானது செய்கை எனல் யுக்தமே. (கூ)

## (உ) ததபாவாதிகரணம்.

தத்ஹாவை நாடீஷ் தத்ர்ஹித ஸாதஸி ச (கூ. உ. எ)

(கூஉக) சொப்பனமின்மை (சுழுப்தி) நாடிகளினும் பரமான்மாவினுமாம்; அது கூறப்படுதலான்.

சொப்பனமின்மையே சுழுப்தி.

யஹ்ஹைதத்ஸுப்த ஸுஷஸ்ஸம்ப்ரஸந்ஸ் ஸ்வப்நம் ந விஜாநாதி
சூஷ்ம தத்ர நாடீஷ்வஸ்ஹித ஸ்வதி।
(சாந். அ. சு. ங்)

"ஒருவன் நித்திரை செய்து அமைந்தவனாய், முற்றும் ஒய்ந்தவனாய், சொப்பனம் காணாதிருக்கும்போது, அவன் அந்த நாடிகளுள்ளே உறங்குகின்றனன்."

கய யதா ஸுஷ்வை ஸ்வதி யதா நகஸ்சந ந வெதி ஹிதா
நாம நாட்யோ ஹ்ருதயாத்புரீதமபி ஸம்ப்ரதிஷ்ட
தாஸு ஸுப்தஸ்ஸ்வப்நந்ந கஞ்சந பஸ்யதி (பிருஹ. க. கக.)

"அவன் ஆழிய நித்திரை செய்து ஒன்றும் அறியாதிருக்குங்கால், இதயத்திலிருந்து சரீரமெங்கும் பரந்திருக்கும் ஹிதை எனப்படும் எழுபத்தீராயிரம் நாடிகளுக்கூடாக அவன் சலித்துச் சரீரத்திலே உறங்குகின்றான்"

யதெதத்ஸுஷுப்தோ ஸுஷுப்தி நாம ஸதா ஸௌம்ய ததோ ஸம்பந்ந: ஸ்வமபீதோ பவதி (சாந். சு. அ. க)

"ஒருவன் இங்கே நித்திரை செய்யும்போது, சௌம்ய! அவன் சத்தோடே இயைந்திருக்கின்றனன்" என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே ஆன்மா நாடிகளினும் சரீரத்தினும் பிரமத்தினும் நித்திரை செய்கின்றான் என்று பெறப்படுகின்றது.

இவைகளில் ஒவ்வொன்றிலா? இன்றேல் இவைகள் அனைத்தினுமா? (ஆன்மா நித்திரை செய்கின்றனன்) என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா நித்திரை செய்தற்கு நாடிமுதலிய ஸ்தானங்களில் ஒன்று அருகமாயிருக்கின்றது; ஆகவேண்டிய நித்திரை ஒரேநோக்கமுடைமையான்.

ஜுஹோதி யஜதே।

"நெற்கொண்டு யஞ்ஞஞ் செய்வானாக"

யவேன யஜேத।

"அவன் யவைகொண்டு யஞ்ஞஞ் செய்வானாக" என்னும் வேதவிதியிற் செயற்பாலதாகிய புரோடாசப்பிரயோசனம் ஒன்றேயுண்மையின், எங்ஙனம் அவ்விரண்டில் ஒன்றே கொள்ளற்பாற்றோ, அங்ஙனம் நித்திரை என்னும் ஒரே பிரயோசனத்தைப்பற்றினமையின், ஓர்காற் சரீரத்தினும், ஓர் கால் நாடிகளினும், மற்றோர்காற் பிரமத்தினுமாக ஆன்மா நித்திரைசெய்கின்றான் எனப் பூருவபக்ஷஞ் செய்யின்,

(சித்தாந்தம்) ஆன்மா அவையனைத்தினும் ஒருங்கு நித்திரை செய்கின்றான்; எதனால்? அநேக பிரயோசனமுண்மையின். எங்ஙனமென்னின், இதயத்திருக்கும் பிரமத்தைப் போய்ச் சீவான்மாச் சேர்தற்கு நாடி ஓர் வாயில்லாம். ஆன்மா ஒரேகாலத்திற் சரீரத்திலும் பிரமத்திலும் துயிலும்; (சரீரமும் பிரமமும் முறையே) மேடையும் படுக்கையும் போல்வனவாமாதலின் விரோதமின்று; இங்ஙனம் ஆன்மா நாடிவாயிலாகப் போய்ச் சரீரத்துள்ள பிரமத்திலே துயில்கின்றான். வெவ்வேறிடமும் வெவ்வேறு பிரயோசனமுமுடைமையின், தொகுப்பே ஈண்டுக் கொள்ளப்பட்டது. (எ)

ஸதஃ ஏவாபீதோ ஏஷ்யதி (சு. உ. அ)

(கூஉஉ) ஆதலினால், அதிலிருந்து விழித்தல்....

ஸ்த ஸூமஃ் ந விஜ்ஞாத ஸுஜ்ஞாஃஹை (சாந். சு. க0. உ)

"அவர்கள் சத்திலிருந்து மீண்டுஞ் சத்திலிருந்து மீண்டேம் என்று அறியார்" என்ற சுருதி ஆன்மா பிரமத்திலிருந்து விழிக்கின்றது எனக் கூறுகின்றது. ஆகலின், அவை அபேதத்தின் தொகுப்பே ஈண்டுக் கொள்ளப்பட்டது. அவற்றில் ஒன்றைக்கொண்டால், அது எண்விதத் தோஷத்துக்குள்ளாகும். "எப்போது ஆன்மா நாடிகளிலே உறங்குகின்றானே" என்னும் (சாந். அ. சு. ங-ஆம்) வாக்கியத்தை அங்கீகரிப்பின், அப்போது சரீரத்தையும் பிரமத்தையும் பற்றிய (பிரு. ச. க. ககூ; சாந். சு. அ. க) வாக்கியங்களிற் கூறியாங்கு உறங்குகின்றான் என எய்திய பிரமாணத்தை விடுத்தலாகவும், எய்தாததும் அப்பிராமாண்ணியமுமாயுள்ளதை அங்கீகரிப்பதாகவும் முடியும்; பின்னர் "அவன் சரீரத்திலும் பிரமத்திலும் எப்போது உறங்கின்றானே" என்னும் இரு வாக்கியங்களையும் அங்கீகரிப்பின், அப்போது சரீரப்பிரம வாக்கியங்களில் முன்னர் விடுக்கப்பட்டதைப் பிரமாண்ணியமாக அங்கீகரித்தலாகவும், முன்னர் அங்கீகரித்ததை அப்பிராமாண்ணியமாக விடுத்தலாகவும் முடியுமென எய்தியதை விடுத்தலும், எய்தாததைச் சுவீகரித்தலும், விடுத்ததைச் சுவீகரித்தலும், சுவீகரித்ததை விடுதலுமாக நான்கு தோஷங்கள் விளையாநின்றன. (இத்தோஷங்கள்) சரீரம் பிரமம் என்பவற்றைப்பற்றிய வாக்கியங்களை அங்கீகரித்தலால் நேர்கின்றன. அங்ஙனம் நாடிவாக்கியத்தைக் கொள்ளுங்காலும், நான்கு தோஷங்கள் உளவாகின்றன. இங்ஙனம் எட்டுத் தோஷங்கள் பிறப்பனவாயின. ஆகலின், தொகுப்பே பொருத்தமாகுங்கால், விகற்பம்பொருத்தமில்லை. (அ)

## (ஈ) கர்மானுஸ்மிருத்தியதிகரணம்.

ஸ வஸவ தூ கஃர்ம நூஜ்ஞ திஸ்ஷவியிஷ்யஃ (சூ. உ. சூ)

(ஈஉஈ) ஆனால் கர்மம், ஞாபகம், சுருதி, விதி என்பன உண்மையான், அவன்றானே.

ஸ்தா வெளஃ் தஷா ஸஂவஹோ ஸவதி (சாந். சு. அ. க)

"சௌமிய! அவன் *சத்தோடே சம்பன்னனாகின்றான்" என்னுஞ் சுருதியே இப்பொழுது ஆராயப்போந்த விஷயம்.

மேலே ஆன்மாவுடைய சுழுப்தியவஸ்தை நிரூபிக்கப்பட்டது. ஈண்டுப் பிரமத்திலே சுழுப்தி செய்தவன்றானே? இன்றேல் மற்றொருவனே? விழிக்கின்றான் என்பது சந்தேகம்.

---

*இச்சத்தின் பொருளைச் (க. க. இ-ஆம்) சூத்திரக்குறிப்பிற் காண்க.

(பூருவபக்ஷம்) பிரமத்தை அடைந்தவனுக்கு மீளுதல் உசிதமன்றுதலின், மற்றொருவனென்றே கொள்ளப்படும். நிரதிசயானந்த பிரமத்திற் சாமியமுற்ற ஆன்மாவுக்குப் பின்னர்த் துக்கமயமாகிய சம்சாரவிருத்தி பொருந்தாதன்றே. சத்தாகிய பிரமத்தை அடைந்தவன் எங்ஙனம் வெளி வருவான்? அவ்விரண்டுக்கும் பேதம் என்னே? எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சத்தோடு சம்பன்னனாயினும், நித்திரை செய்தவனே விழித்து எழுந்திருக்கின்றான்; ஞானமில்லாமையாற் செய்த கன்மபலத்தை அவன் துய்க்கற்பாலனாதலானும், மீட்டும் முன் அனுபவித்தவற்றை நினைக்கின்றனாதலினாலும்,

த உஹ வ்யாஹ்ரா வா ஸிம்ஹொ வாவ்ருகோ வா வராஹொ வா கீடோ வா வடகமெரு வா ஏகொ வா ஸரீகோ வா யத்ர ஏவஸ்மி ந்ஜாயதே (சாந். சு. கo. உ)

"புலியாயேனும், சிங்கமாயேனும், ஓநாயாயேனும், வராகமாயேனும், புழுவாயேனும், விட்டிலாயேனும், கொசுகாயேனும், ஒலுங்காயேனும் இங்கே இந்தச் செந்துக்கள் எங்ஙனம் இருக்கின்றனவோ, அங்ஙனமே அவை மீட்டும் மீட்டும் ஆகின்றன" என ஆன்மா முன்னிருந்தவாறு மீட்டும் ஆகின்றான் என்னும் சுருதியுண்மையானும், மோக்ஷோபாயம் விதிக்கும் வாக்கியமெல்லாம் அப்பிரயோசனமாய் முடியுமாதலினாலுமாம்.

ஸ த ஸுப்தீ ந விஜ்ஞாஃ (சாந். சு. கo. உ)

"அவர்கள் சத்தினின்று மீண்டும் (சத்தை) அறிந்திலர்" என்னுஞ் சுருதி பிரமானந்தத்தின் ஞானம் இல்லை என்று கூறுதலால், முத்திதசையிலே போல ஆன்மா பிரமத்தில் இலயமுற்றானல்லன். ஆகலின், முதற்கண் நித்திரைக்குப்போந்தவனே மீண்டும் விழிக்கின்றனன் என்று கோடல் யுக்தம். (கூ)

## (சா) முக்தாதிகரணம்.

---

ஸம்பத்யாவிர்பாவஃ ஸ்வேந ஶப்தாத் (சு. உ. கo)

**(கூஉசு) மூர்ச்சித்தபோது பரிசேடத்தினால், அது அரை (மரணம்) ஆகின்றது.**

ஓர் புருஷன் மூர்ச்சித்தான் என்னும் வியவகாரமுண்மையான், மூர்ச்சை எனப்படும் ஓர் அவஸ்தை அனுபவிக்கப்படுகின்றது. இந்த அவஸ்தை சுழுப்திமுதலியவற்றினின்று வேறுபடுதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஜாக்கிரசொப்பன சுழுப்திக்கு வேறுஞ் ஓர் அவஸ்தை உளதாம் என் அறியப்படாமையான், மூர்ச்சை என்பது சாக்கிரமுதலிய வற்றுள் அடங்கியதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. மூர்ச்சையடைந்த புருஷனுடைய அவஸ்தை அரை மரணத்துக்குச் சமம்; பரிசேடத்தினுற் சுழுப்திமுதலிய மற்றினின்று வேறுபட்டுள்ளது. பிரபஞ்சஞானமில்லாமையான் சாக்கிரசொப் பனங்களில் அடங்கியதில்லை. சுழுப்திகாலத்தில்மூகம் பிரசன்னமாயிருத் தன் முதலிய இலக்ஷணத்தினுலும், மூர்ச்சையிலே அது விகாரமூறுதலாம் இலக்ஷணத்தினுலுமாகப் போந்த பேதத்தினுற் சுழுப்திக்கு வேறுபட்ட மூர்ச்சை. (கo)

## (நி) உபயலிங்காதிகரணம்.

ந ஸ்தா நதொ உ வி வரவெ்யாலயமிமு0 ஸவ-த்ரஹி

(கூ. உ. கக)

(நூஉநி) இடத்தைப்பற்றியும் பரத்துக்குத் தோஷப்பிர சங்கமில்லை; யாண்டும் உபயலிங்கமுண்மையான்.

மேலை அதிகரணங்களிலே துவம்பதார்த்த ஆன்மாவுடைய ஸ்வரூப தர்மமும், போதல் மீடல்களும், அவஸ்தா விசேஷங்களும் நிரூபணஞ் செய் யப்பட்டன. அதன் பின்னர்த் தத்பதார்த்தமாகிய சிவபெருமானுடைய சொரூபதர்மமுதலாயின நிரூபிக்கப்படுகின்றன.

வொதராஉதரo வாவிஸ்தி்ஸ்ராதரo ஸ்வ்யாவிஸ்ரு।

(அதர்வசிரசு)

"அவர் உள்ளினுள்ளேப் பிரவேசித்தனர்; திக்கின் உள்ளேப் பிரவேசித்தனர்"

யஃ வ்ருயிவ்யாக்ஷ்டீ (பிரு. நி. எ. கூ)

"எவர் பூமியிலுள்ளார்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, சிவபெருமான் யாண்டும் வியாபித்துப் பிரவேசித்து நிற்கின்றமை கேட்கப்படுகின்றது.

எல்லா அவஸ்தைகளினும் சர்வாந்தரியாமியாயிருக்குங்கால் அவர் பல வகைப் பரிசரோதாஷத்துக்கு ஆளாவாரா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தோஷத்துக்கு ஆளாவார். அங்ஙனமே,

கஸ்ஞ்ஞஃநண்ண ஹ்ருவ்ய (பிரு. நி. அ. அ)

"ஸ்தூலமிலரும், அணுவிலரும், குறுக்கமிலருமாயுளர்"

நிஷ்கூo நிஷ்ரியo ஸாஜ்ஞo நிரவத்யo நிரஞ்ஜநஃ (சுவே. சு. கசு)

"நிஷ்களரும், நிஷ்கிரியரும், சாந்தரும், பாவமிலரும், நிரஞ்சனரு மாயுளர்" என்றற்றொடக்கத்த சுருதிகளானும் சிவபெருமானுக்கு அவ்வியல்பினதாகிய ரூபமில்லை என்று கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட பரிசதோஷம் எய்தி விடுமோ என்னும் பயத்தினுற்றான்,

வஷ்ய ஜ்ஞாநஸ்ய ஸுஹ (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என அவருக்கு அபரிச்சின்னமாகிய சத்தியஞானமாத்திரசொரூபங் கூறப்படுகின்றது. பிரகிருதி விகாரசம்பந்த முடையரே எனின், அவரும் ஆன்மாவைப் போலச் சமஸ்தவிகாரதோஷங் களுக்கும் ஆஸ்பதமாய் விடுவரெனின்,

(சித்தாந்தம்) அன்று. அவஸ்தைகள் அனேத்தினும் சர்வாந்தரியாமி யாய் இருப்பினும் சிவபெருமானுக்கு எவ்வித தோஷமும் பற்றாது. எங்ங னமெனின்,

வஷ ரூத்ர ஸுஹ்ருவாஸ்ய விஜரோ விம்ருத்யு விஹொகொ விஜிவத்ஸா ஸுவிவாஹஸ்ய காமஸ்ய ஹ்ருஷ்டாகூஷ்ட (சாந். அ. க. நி)

"பாவமில்லாததும், ஜரையிலாததும், மரணமில்லாததும், துக்கமில்லாததும், பசியில்லாததும், தாகமில்லாததும், சத்தியகாமசத்தியசங்கற்பத்துவமுடை யதுமாயது (பரம) ஆன்மா"

ஸுவர்ணகர்ப்பவயுநாதிரவிணீயாந்ஸுணாராரயம்।
வஷ்டிலொகஸ்ய நிர்மாதா ஸர்வேஸ்வரஸிவோஸ்துணம்॥

"எல்லையில்லாத ரமணீய குணங்களுக்கு ஆசிரயராயும், சமஸ்தலோகத்தை யும் படைப்பவராயும், பசுபாசங்களுக்கு விலக்ஷணமாயுமுள்ளார்" என் றற்றொடக்கத்த வாக்கியங்களிற் சமஸ்த தோஷகளங்கமில்லாமையும், நிரதி சய மங்களாகாரத்தன்மையுமாம் இரண்டு குண லிங்கங்களும் அவருக்குப் பிரசித்தமன்றே. ஆகலின், அவர் பிருதிவியாதிகளில் அந்தரியாமியாயி ருந்தவிடத்தும், தோஷமில்லை. (கக)

ஸுஹாதிதிஷ்ஹ வ்ருதிகுஹேதிஷ்வபாஸ (கூ. உ. கஉ)

(கூஉசூ) பேதமுண்மையான் அவர் (தோஷமுடையரா) ஏனின், அன்று; ஒவ்வோரிடத்தும் மறுப்புண்மையான்.

(ஆக்ஷேபம்) ஆன்மா இயற்கையாகவே பாவமின்மை முதலிய குணங் களையுடையனெனினும், தேவாதி சரீர சம்பந்தமுறுதலாம் அவஸ்தாபேதத் தினுற் கூறப்பட்ட தோஷம் எங்ஙனம் அவனுக்கெய்துகின்றதோ, அங்ங னமே சிவபெருமானுக்கும்

யஸ்ய வ்ரயிவீ ஸரீரம் (பிரு. நி. எ. கூ)

"அவருக்குச் சரீரம் பிருதிவி" எனச் சரீரசம்பந்த முறுதலாம் அவஸ்தா பேதத்தினால் அத்தோஷம் எய்தாதோ எனின்,

(உத்தரம்) அன்று; அவருக்கு ஒவ்வோரிடத்தும் தோஷமின்றென மறுக்கப்படலான்.

யஸ்ய வ்ரயிவீ ஸரீரம் (பிரு. நி. எ. கூ)

"அவருக்குப் பிருதிவி சரீரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே

வனஷ்தி ரூ-தாஜயு-ர்ரிஷ்ரு-தர் (பிரு. நி. எ. கூ)

"அவர் உன் அந்தரியாமியாகிய அமிர்தர் (சிவன்)" என அந்தரியாமிக்கே தோஷமின்மை கூறப்படுகின்றது. ஆன்மாவுக்கோ எனின், (கூ. உ. ச) பரசங்கற்பத்தினால் அதன் சொரூபம் மறைக்கப்பட்டதெனக் கூறப்பட்டது. (கஉ)

கவிதெவவெதெ (கூ. உ. கஙூ)

(கூஉஎ) மேலும் அங்ஙனஞ் சிலர் கூறுகின்றனர்,

ஆவ-வணி-ர வ ய-ஜா வவாயா வஸோ நo வ்ரக்ஷo வரிஷ வஜாதெ கயொ ரநிஃ விவலo வ்வா உகந்ந நெந்ர zஹிஆகஸீதி|

(முண். கூ. க. க)

"அழகிய இரு பறவைகள் நண்பாய் எப்போதும் பிரியாது ஒரே மரத்தில் இருக்கின்றன; அவற்றுள் ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று சுருதி கூறுமாறு, ஒரே சரீரத்தில் ஆன்மாவும் சிவபெருமானும் வசித்தாலும், ஒன்று தோஷத்துக்குச் சம்பந்தமுறுவதாயும், மற்றது தோஷசம்பந்தமுறுதலதாயும் இருத்தலே பேதமாம். ஆகலின், ஆன்மாவைப் போலச் சிவபெருமான் தோஷத்துக்காளாகார். (கஙூ)

ஆன்மாவும் சிவபெருமானும் சரீரத்திருப்பினும், இருப்பிலே பேருமுளதாம் எனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

கரி-வவவெவ ஹி கவீ்யா நஷ்வாஸ (கூ. உ. கச)

(கூஉஅ) அவர் அரூபம் போலவே உள்ளார்; அது (ரூபம்) அவரைப் பிரதானமாய்க் கொண்டமையான்.

பரப்பிரமமாகிய அந்தச் சிவபெருமான் தேவாதி சரீரங்களிலே சரீரியாயிருந்தாலும் ரூபமில்லாப் பொருள்போலவேயுளர்; எதனால்? அவர் முக்கியமாய் நாமரூபங்களைப் படைத்தலான். அங்ஙனமே சுருதியும்,

ஸுகாஸோ ஹவெ நாஸி நாஸரூபயோர்-மத்⁻ஹிதா தெயஷ ஜாதஸ்ரீர்வஹ (சாந். அ. கச. க)

"ஆகாயம் எனப்படுபவர் நாமரூபங்களைப் படைப்பவராகின்றனர்; இந்த நாமரூபங்களுள்ளே உள்ளது அந்தப் பிரமம்" என்று கூறுகின்றது. நாம ரூபமத்தியிலேயுள்ள அவர் அந்த ரூபகாரியங்களினுற் றொடக்குண்ணா ளர். அவர் அவற்றின் மத்தியிலே உள்ளார் என்றமையான், அவர் சுவா தந்திரியமாயுள்ளார் என்று கூறப்பட்டது. ஆன்மா கன்மபலந் துய்க்கு மாறே சரீரத்தில் வசிக்கின்றான். ஆகலின், அவ்விருவர்க்கும் பேதம். (கச)

வ்ருகாஸவச்சா zவெயர்-மாத (சூ. உ. கரு)

(சூஉசு) பிரகாசம் போன்றும் (அவர் திவ்யகுணங்களை டையர்), சுருதிகள் வியர்த்தமில்லாமையான்.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்ம" என்னும் வாக்கியம் வியர்த்தமில் லாமைபற்றி, சுவப்பிரகாசமுண்மையாற் பிரமம் ஞானரூபம் எனப்படுகின் றதன்றே; அங்ஙனம்

நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஸாந்தம் (சுவே. சூ. கசு)

"நிஷ்களம், நிஷ்கிரியம், சாந்தம்" எனவும்,

அவஹதகவாவா (சாந். அ. க. நி)

"பாவமில்லாதவர்" எனவும்,

ஸத்யாத்ம ப்ராணாராமம் (தைத். க. சு. உ)

"சத்தியான்ம பிராணாராமம்" எனவும்,

மநஆநந்தம் (தைத். க. சு. உ)

"மன ஆனந்தம்" எனவும்,

யஸ்ஸர்வ-ஜ்ஞஸ்ஸர்வ-வித் (முண். க. க. சு)

"சர்வஜ்ஞரும், யாவும் அறிபவரும்" எனவும்,

ய ஆத்ம அபஹதபாப்மா (சுவே. சூ. கசு)

"பிரதானம் க்ஷேத்திரஜ்ஞன் என்னும் இரண்டுக்கும் பதியாகிய குணங்களை யுடையர் ஈசர்" எனவும்,

வராஹ ஸக்தி வி-விதைவ ஸ்ரூயதே (சுவே. சூ. அ)

"அவர் நானாப் பிரகாரமாயுள்ள பராசத்தியுடையர் என்று கூறப்படுகின்ற னர்" எனவும்,

கூய கஷ்ஷாடூயுதெ ஹோதெவொ யஷ்ஷவஃடூ ஹாவா ஸ்ரீரிகுஜ்ஜாதே ஜாநயொதெஸ்ஸுவையஃ ஶஹதி ஶஹீயதெ கஷ்ஷாடூயுதெ ஶஹரதெவஶீ।

(அதர்வசிரசு)

"எதனால் அவர் மகாதேவர் எனப்படுகின்றனர்? சமஸ்த இயல்புகளெல்லாம் விடுத்துப் பரமான்மஞானயோகசுவரியத்தினால் மகத்தாயிருத்தலின் அவர் மகாதேவர் எனப்படுவர்" எனவும் போந்த நூற்றுக்கு மேலாய சுருதி வாக்கியங்கள் வியர்த்தமாகாமையின், கூறுறுணக் கல்யாணகுணங்களுக்கு ஆஸ்பதமாயுள்ளது பிரமம் என இரு லிங்ககுணங்களே (எய்திய). (கநி)

ஸுஹ ய தி நாத்ரு (கூ. உ. கசு)

(கூகூ0) (சுருதியும்) அதனை மாத்திரம் கூறுகின்றது.

ஸத்ய0 ஜ்ஞாந ஶநந்த0 ஸ்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்ம" என்னுஞ் சுருதி பிரமத்துக்கு முடிவிறந்த ஞானமாத்திரத்தையே கூறுகின்றது. பிற குணங்களை அது மறுத்கின்றிலது; விசேஷமின்மையானும் விரோதமின்மையானுமாம். சுவர்ணகிரீடம் என்றளவிற் சுவர்ணரூபமாத்திரையே பேசியதன்றி, அதிலே பதிக்கப்பட்ட இரத்தினாதிகளை இல்லை என்று மறுக்கவில்லை; அங்ஙனமே ஈண்டும் சத்தியம் ஞானம் அனந்தம் என இயல்பாகவே மகாப்பிரகாசரூபத்தினாற் பரப்பிரமத்துக்குப் பரம ஞானுகாரமாத்திரையே கூறும் சுருதியானது, பிரமத்துக்குப் பின்னர்த் (தைத். உ. க) கூறும் (விபச்சித்தை) சர்வஞ்ஞதையை எங்ஙனம் மறுக்க வல்லதாம்? பற்பல வஸ்து சமூகங்களைப் பார்த்து அறியும் ஞானம் எவர்க்குளதோ, அவர் விபச்சித் எனப்படுவர். ஆகலின் விரோதமில்லை. (கசு)

ஓஸ்ரயதி ஆயொ கவி ஸ்யுஃதெ (கூ. உ. கஎ)

(கூகூக) சுருதியும் (அதனைக்) கூறுகின்றது; பின் மிருதியுமாம்.

யாண்டும் ஹேயகுணமில்லாமையும் கல்யாணகுணமுடைமையுமாக உபயலிங்கத்தையும் கூறுகின்றது மங்களசுருதி.

ஆகாஸஶரீர0 ஸ்ரஹ்ம (தைத். க. சு. உ)

"ஆகாசசரீரம் பிரம்ம"

ஸத்யாத்ம ப்ராணாராம0 மந ஆநந்தம்ழி (தைத். க. சு. உ)

"சத்தியான்ம பிராணாராமம், மன ஆனந்தம்"

ஶாந்திஸம்ருத்திதழி (தைத். க. சு. உ)

"சாந்தியினால் நிறைந்த சிவம்"

வ்ராவீநயொமெ்ராவாவ்ஷ (தைத். க. சூ. உ)

"பிரர்சீனயோக்கியனே, தியானி" எனச் (சுருதி கூறுகின்றது). யாண்டும் பிரகாசிப்பதால் ஆகாயம் பிரகாசமெனப்படும்; இந்த ரூபம் சிதம்பரம்; (அது) சத்தியாண்ம சத்தாரூபமாயுள்ளது. ஆன்மாவிலே (தம்மிலே) ஆனந்தமன்றிப் பாஹ்யத்தில் அன்றும் என்பது பிராணராமம். மனசிலே ஆனந்தமன்றிப் பாஹ்யகரணங்களிலன்றும் என்பது மனஆனந்தம். சுண்டு மனம் என்றது ஞானம் எனப்படும் உட்கரணமென்று கூறப்படுகின்றது. பாஹ்யகரணமில்லாமல் அபரோக்ஷமாகிய சகல பாஹ்யவஸ்து விலாசத்தினலும், நித்திய நிஷ்களங்கத்தினலும் சர்வஜ்ஞதையுடையது பிரமம் எனப்படுகின்றது; இதனல் அபரிமித சொரூபானந்தானுபவமே மன ஆனந்தம். இராகத்துவேஷ முதலிய இழிந்த குணங்கள் முற்றுமில்லாதது சாந்தி; அதினல் நிறைந்து சமஸ்ததோஷகளங்கமில்லாதிருத்தலாற் சாந்தி சமிர்த்தம் எனவும், அநாதிமுத்தரா தலின் அமிர்தம் எனவும் படுவர். அவர் சத்தியஞானரூபமுடையர், அவர் சர்வஜ்ஞர்; ஆன்மாவின் நிரதிசய ஆனந்தசத்திவிலாசம் உடையர்; சமஸ்ததோஷமில்லாதவர்; இங்ஙனம் (சுருதி) யானது பரப்பிரமம் உபயலிங்கமுடையதெனக் கூறுகின்றது. அங்ஙனமே,

நிஷ்கலம் நிஷ்கிரியம் சாந்தம் (சுவே. சூ. ககூ)

"நிஷ்களம் நிஷ்கிரியம் சாந்தம்"

யோவஹ்ம வாவநூ ஹெராழி (சுவே. சூ. சு)

"திருமத்தைப் தருபவரும், பாவத்தைத் தரப்பவரும், பகேசருமாயுள்ளார்"

தீஷ்வராணாம் வரம் மெஹேஷ்வரம் (சுவே. சூ. எ)

"ஈசுவரருள்எல்லாம் பரமாகிய மகேசுவரர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் உபயலிங்கமுடையது பிரமம் என்று கூறுகின்றன.

கூநாழிலே ஸம்மெ்ஷவ்ராஹவாவ்ஷிமெஷ்கீ।
கூகீஜகவரிம்ஹாகூா ஸிவ ஊகீ்ஹ்யுதெ விஹ்ம்।
கூழவா கூநஜகயுாண மூணெைகவந ஈரம்ஷ்வரீ।
ஸிவ ஊகீ்ஹ்யுதெ வஷ்ஹ்ஸிவகூவாவ்ஷ்வெஷிஹீ॥

(வாயு. பூ. உஅ: உஅ, உகூ)

"விசேடித்து அநாதிமலத்தோடக்கில்லாது அத்தியந்த பரிசுத்தான்மாவாய்ச் சர்வவியாபகராயிருத்தலிற் சிவன் எனப்படுவர்; அனந்தகல்யாணகுணங்களால் நிறைந்த நித்தியாகிய ஈசுவராதலின் சிவன் எனப்படுவர் என்று சிவதத்துவத்தை அறிந்த சத்துக்களாற் கூறப்படுவர்" என ஸ்மிருதியும் சிவசப்த வாச்சியமாகிய பிரமம் உபயலிங்கமுடையதெனக் கூறுகின்றது. பரம

விசுத்தமங்கள குணவாசகமாகிய சிவசப்தத்தினுலே சமஸ்ததோஷகளங்க மில்லியாய், நிரதிசய புருஷார்த்த குணங்களாற் பரிபூரணமாயுள்ளது பிரமம் எனக் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிரமம் சிவசப்தத்தினுற் கூறப்படுதலின் (பிரமத்துக்கு) உபயலிங்கஞ் சித்திக்கின்றது. (கள)

கூத வனவொவோ வ-ியு-ுகாதிவசு (கூ. உ. கஅ)

(கூகூ) ஆதலினுலும் உவமை பரிதிமுதலிய போல்.

பிருதிவிமுதலியவற்றில் யாண்டும் உளரேனும், சிவபெருமான் தோஷ ரகிதரும் கல்யாணகுணங்களுக்கு நிதியாயுமுள்ளார். ஆதலினற்றன் சாஸ் திரங்களில் ஜலத்திலே சூரியாதிகள் போல என உவமை கூறப்படுகின்றது.

சூகாஸுகூ ஹி யயா வடாதிஷ-ு வ்யகூ்யகூயாதெதெகா ஹ்யுநகவ்யோ ஜலாயாரெவ்விவாபஸ-ுோநீ|

"எங்ஙனம் * ஆகாசம் ஒன்றுதானே கடாதிகளிலே வெவ்வேறுயிருக் கின்றதோ, அங்ஙனமே பரமான்மா ஒருவரே வெவ்வேறு ஜலாதாரங்களிற் பிரதிவிம்பிக்குஞ் சூரியன் போல, பலவற்றிற் றங்கி வெவ்வேறுயிருக்கின்ற னர்" என வாஸ்தவத்தில் (வெவ்வேறிடங்களின் மாத்திரம்) இருக்கும் ஆகாயமும், (வெவ்வேறு பிரதிவிம்பங்களிலே வாஸ்தவமாகவில்லாத) சூரி யனுமென இரு உபமானங்கள் எடுத்தாளப்பட்டன. இந்த அபிப்பிராயத்தி னுலே, ஏகமாய ஆகாயம் குடமுதலிய வெவ்வேறிடங்களில் வெவ்வேறுய் வாஸ்தவத்தில் இருப்பது போல, ஏகராகிய சிவபெருமானும் பிருதிவி ஆன்மா முதலியவாம் ஒவ்வோரிடங்களில் வேறுவேறுக வாஸ்தவமாகவே உளர். சிவபெருமானும் அநேக வஸ்துக்களில் வாஸ்தவமாக உளராதல் பொருத்தமாகின்றது. இதுபற்றியே ஆகாயவுபமானம் (போந்தது). ஜலா தாரங்களில் வாஸ்தவமாய் உளதாகாத சூரியன் விகாராதிதோஷமடையாத வாறுபோல, சிவபெருமான் பிருதிவிமுதலியவைகளில் உளராயினும், அவற் றின் விகாராதி தோஷங்கள் அவர்க்கின்று. சர்வாந்தரியாமியாயுள்ள சிவ பெருமான் தோஷமுறுமலும், சொரூபகுணம் குறைவுறுமலும் உளராயி னர்; இதுபற்றிச் சூரியோபமானம். இங்ஙனமே ஆகாயாதி உவமையினுற் சர்வான்மாவாகிய சிவபெருமானுக்கு உபயலிங்கம் உண்டென்று சித்தித் தது. (கஅ)

எண்டுச் சூத்திரகாரர் ஆசங்கிக்கின்றனர்.

கூவை-வதுமூஹணாதி-ு நதியாகூழி (கூ. உ. ஙஙூ)

---

* எண்டு ஆகாய ஆதித்திய உபமானங்களை எக்கருத்திலே சைவபாஷ்யகாரர் உப யோகித்தின்றுர் என்பதனைந்து தெளிந்து மாயாவாதிகூற்றினுல் மயங்கார் சைவர்.

(கூகூக) ஆயின் நீரிற்போற் கொள்ளாமையின், அது அங்ஙனமின்று.

(ஆக்ஷேபம்) நீரிலே சூரியன் அபரமார்த்தமாகக் கொள்ளப்படுவது போலல்லாமற் பிருதிவியாதிகளிற் சிவபெருமான் பரமார்த்தமாகக் கொள்ளப்படுதலின், அவருக்கு எங்ஙனம் நிர்த்தோஷத்துவமாம் என்று ஆசங்கிப்பின், (கசு)

(உத்தரம்) அதற்குப் பரிகாரம் கூறப்படுகின்றது.

வுஜிஹுாவஹுாகீ கூஜேஹுஹுாவாஹுஹுயஹுாஜேஹுயுாஜெவ ஏஹுஹுநாஹுயு (கூ. உ. உ0)

(கூகுச) வளர்ச்சி குறுக்கல் இல்லை; உள்ளே உளதாகலின். இரண்டு உவமையும் சாமஞ்சசமாதலினாலும், அங்ஙனம் ஒத்த இடத்தில் (உவமைகள்) காணப்படலானும்.

மேலிச் சூத்திரத்துப் போந்த ந (இல்லை) என்னும் மொழி ஈண்டு அனுவர்த்திக்கின்றது. வாஸ்தவத்திற் பிருதிவியாதிகளிலே அந்தர்ப்பாவமாயிருப்பினும் சிவபெருமானுக்கு அவற்றுக்குள்ள வளர்ச்சி தேய்வுகள் இல்லை. மேலே உரைத்த இரு திருஷ்டாந்தக்கொள்கைகளின் பொருத்தத்தினாலே தான் இங்ஙனம் பெறப்படுகின்றது. (பிரதிவிம்பத்தில்) உண்மையில் இராத சூரியனும், எப்பொருள்களினும் உண்மையாயிருக்கும் ஆகாயமுமாம் இரண்டு உவமைகளாற் கொள்வது சிவபெருமான் எப்பொருள்களினும் உளரேனும் இல்லாதவர்போல அவற்றின் ரோஷத்தினுற்றொடக்குறாதிருப்பர் என ஞாபகப்படுத்தற்காம். அங்ஙனமே "சந்திரன் போன்ற முகம்" என்பதிலே போலச் சில விசேஷதருமசாமியத்தைக் காட்டும்பொருட்டே உவமைகள் உபயோகிக்கப்படுகின்றன. ஆதலாற் பிருதிவி முதலிய பொருள்களிலே பரமார்த்தமாக அவர் உளரேனும், அவர்க்கு உபயலிங்கம் உளதாம் என்பது சித்திக்கின்றது. இல்லையேல்,

கூஹுவ ஹுவொஹுணி வியஹுயவாவழி (சாந். அ. கூ. க)

"சூதிரை உரோமங்களை உதறிவிடுதல் போலப் பாவங்களை உதறி" என்றற் றொடக்கத்த சுருதிகளிற் குறிக்கப்பட்ட சில தருமத்தின் ஒற்றுமை பற்றியே திருட்டாந்தம் காணப்படுகின்றது. ஆதலின், குறிக்கப்பட்ட தருமங்களின் ஒற்றுமையினற் பிரமம் உபயலிங்கமுடையதென்பது சித்திக்கின்றது. (உ0)

(சு) பிரகிருதைதாவத்துவாதிகரணம்,

---

உபயலிங்கமும் பொருந்தாதென்பதைச் சூத்திரகாரர் ஆசங்கித்துக்கூறுவாராயினர்.

வருஷதெதாவகூ0 ஹி வரதிஷெயதி கதொ ஹ்ரவீதி ஊ ஹ்ரியஃ|
(சூ. உ. உக)

(சூசுரி) அவர் இயல்பு இவ்வளவென்பதைச் சுருதி மறுத்து, பின்னரும் கூறுகின்றது.

மேலே அதிகரணத்திற் பிரமம் இரண்டு இலிங்கமுடையதெனச் சாதிக்கப்பட்டது. அது மறுக்கப்பட்டதா? அன்று? என்பது சந்தேகம்.

* (பூருவபக்ஷம்)

ஷெ வாவ ஹ்ரவுணொ ரூபெ ஸ்தூ-ஷெஹ்வாஸ்தூ-ஹ்ஹ|
(பிரு. ச. சூ. க)

"மூர்த்தமும் அமூர்த்தமுமான இரண்டு ரூபமே பிரமத்துக்குள்ளது" எனப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய வடிவாகிய மூர்த்தாமூர்த்தப்பிரபஞ்ச ரூபத்தைப் பிரமத்தின் ரூபம் எனக் கூறிச் சுருதியானது பின்னரும்,

அதாத ஆதெஸொ நெதிநெதி (பிரு. ச. சூ. சு)

"ஆதேசம் இங்ஙனமன்று, இங்ஙனமன்று" எனக் கூறுகின்றது. ஈண்டு இதி (இங்ஙனம்) என்னும் மொழி மேலே கூறியதைக் குறித்தலான், பிரமத்துக்கு மேலே கூறிய மூர்த்தமும் அமூர்த்தமுமாம் பிரபஞ்சரூபத்துவம் நிஷேதிக்கப்படுகின்றதே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். "இங்ஙனமன்று" "இங்ஙனமன்று" என்றது பிரமம் பிரபஞ்சரூபம் என மேலே சித்தித்ததை நிஷேதித்ததன்று; முன் அறியப்படாததாய்ப் புதிதாய் விதித்ததொன்றை மறுப்பது பொருந்தாதாமாகலின். பின் அதன் பொருள்யாதோ எனின், இயல்பாக இத்தனை மாத்திரந்தான் பிரமம் (அதற்குமேல்) இல்லை என்னும் கூற்றை மறுத்தற்கே (நேதி நேதி=இல்லை இல்லை எனப்பட்டதென்று) கூறுவதே யுக்தம்; எதனால்?

நஹ்யதஸ்மாதிதி நெதரூ நாமதெயꣳ வரதுவரு வரதுரிதி வாசா ஒவ வரதுர் (பிரு. ச. சூ. சு)

"இங்ஙனமன்று என்று கூறப்பட்டவரினும் பரமானது ஒன்றுமில்லை; சத்தியத்தின் சத்தியம் என்னும் நாமதேயம் போந்தது; உயிர்கள்தான் சத்தியம்; இவைகளுள்ளே சத்தியம் அவரே" என முன்னர்க் கூறப்படாத குணசமூகங்களை மீட்டும் விதந்து சுருதி அடுத்துரைத்தலினால் (என்பது). ஈண்டு,

நஹ்யதஸ்மாத் (பிரு. ச. சூ. சு)

என்னும் வாக்கியத்தில், இங்ஙனமன்று இங்ஙனமன்று என்றமையிற் குறிக்கப்பட்ட பிரமத்தினும் உயர்ந்ததொன்றில்லை எனக் கூறப்படுகின்றது.

கூய நாசியையo ஸதூஸ்ய ஸதாழி (பிரு. ச. கூ. சு)

"பின்னர்ச் சத்தியத்தின் சத்தியம் என்றது (அவரது) நாமதேயம்" என்றும், ஆன்மாக்கள் தான் சத்தியம், அவர்களுள் இவர் சத்தியம் என அதின் (சுருதியின்) அர்த்தம் கூறப்படுகின்றது. (அஃதாவது) பிராணன்கள் எனப்படும் ஆன்மாக்கள் ஆகாயாதிபோல உற்பத்தியில்லாமையாற் சத்தியம் எனப்பட்டனர். அத்தச் சத்தியங்களுள்ளே (ஆன்மாக்களுள்ளே) இவர் சத்தியம்; சத்தியமாகிய ஆன்மாக்களின் ஞானம் போல் அவர் ஞானம் சங்கோச முதலியவின்மையின், "இங்ஙனமன்று, இங்ஙனமன்று" என்னும் வாக்கியமானது பிரகிருதமாகக் கூறப்பட்ட தருமம் இத்துணையதென்பதை நிஷேதிக்கப்போந்ததன்றி, பிரமத்துக்கு முன்னார்ச் சித்தித்த உபயலிங்கத்தையும் குறைக்கப்போந்ததன்றே;

(ஆக்ஷேபம்) "கடம் சத்தியம், படம் சத்தியம்" என்றற்றொடக்கத்தனவாக எப்பொருள்களினும் உள்ள இருப்புத்தான் பிரமம். "இங்ஙனமன்று" "இங்ஙனமன்று" என்று சுருதி நிஷேதித்தமை கடம் படமுதலியவற்றையாம் எனின், (உக)

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

தஉவுதுதோஹஹி (கூ. உ. உஉ)

(கூகசு) அது அவ்வியக்தம் எனச் சுருதி கூறுகின்றதன்றே.

பிரமரூபமானது பிரத்தியக்ஷமுதலியவற்றினும், பிற பிரமாணத்தினும் வெளிப்படாது.

ந ஸந்த்ருஸே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சனைநம்
ஹ்ருதா மநீஷா ..... ஏவம் (கட. சு. சு)

"அவர் ரூபம் கண்ணுள் நிற்கின்றிலது; *கண்ணினால் எவரும் அவரைப் பார்க்கின்றிலர்; அருளினால் (ஹ்ருதா) அவர் வெளிப்படுகின்றனர்" என்றற் றொடக்கத்த சுருதி கூறுகின்றது.

ஆகலின், பிரத்தியக்ஷாதியினால் வெளிப்பட்ட இருப்பானது பிரமமாகாது. (உஉ)

பிரமசொரூபத்தைக் கிரகிக்கும் ஏதுக் கூறுகின்றனர்.

கவிஸஂராயநெ வாகுக்ஷா நாஸோ நாஸ்ரு (கூ. உ. உங)

---

*"உளக்கணுக் கல்லா தூன் கணுக்கோளித்து"
(பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை)

(கூகூ) மேலுஞ் சுருதிஸ்மிருதிப்பிரகாரம் *தியானத்தில் (வெளிப்படுகின்றனர்).

மேலும் தியானரூபமாம் ஞானத்தினால் கன்மாக ஆராதித்தலாற் பிரம சொரூபம் பற்றப்படுகின்றது. தங்களைப் பிரமம் என்று (உபசரிதமாகப்) பிரமபாவனை செய்பவர்களுக்குப் பிரமத்தின் சொரூபம் வெளிப்பட யோக்கியமாகின்றதெனச்சுருதி ஸ்மிருதிகளினால் அறியப்படுகின்றது.

நாயமாத்மா ப்ரவசனேந லப்⁴யோ ந மேத⁴யா ந ப³ஹுனா ஶ்ருதே|
யமேவைஷ வ்ருணுதே தேன லப்⁴ய ஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் (கட. உ. உகூ)

"இந்தப் (பரம) ஆன்மாவானவர் வேதாத்தியயனத்தினாலேனும், புத்தியினாலேனும், அநேக சிரவணத்தினாலேனும் எய்தார்; எவனை இவர் விரும்புகின்றாரோ, அவனால் அவர் அடையப்படுகின்றனர்; அவனுக்கு (பரம) ஆன்மாவானவர் தமது ரூபத்தைப் புலப்படுத்துகின்றனர்"

தத³ஸ்து தம் வ்யாத்³ருக்ஷ நிஷ்கலம் த்⁴யாயமாந: (முண். கூ. க. அ)

"தியானஞ் செய்பவன் நிஷ்களமாக அவரைப் பார்க்கின்றனன்" என்றற் றொடக்கத்தனவாகச் சுருதியும்

நாவிரத வ்ருத்தோவிஷயீ|

"இவர் பிரத்தியகூவிஷயத்தினால்லர்" என்றற்றொடக்கத்தனவாக ஸ்மிருதியும் போந்தன. (உகூ)

வ்ருஷாகபிர்வ்ருஷணமஶ்வ வ்ருஷாஸ்ய ரேதோ ரயிமாவிவேச|
(கூ. உ. உச)

(கூகூஅ) பிரகாச முதலியவற்றிற் போற் பேதமில்லை; (தியானத்) தொழிலே இடையீடின்றி அப்பியசித்தலிற் பிரகாசமும் எய்தும்.

இடையீடில்லாத தியான ஆராதனையினாலே எவர்களுக்குப் பிரமம் பிரகாசிக்கின்றதோ, அவர்களுக்கு அந்தப் பிரமதரிசனவாயிலாக விஷயீகரித்தலிலே அந்தப் பிரமஞானானந்தம் ஜகதீசுவரத்துவம் என்பன பேதமின்றி எய்துகின்றன. அங்ஙனமே,

ஸுஷo உந்மூலவo வஸ்யஃபுல்ல (பிரு. கூ. ச. கo)

---

* அருப்புப்போன் முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டெல்லிட்டமாய்த்
திருப்புத்தூராளைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றினுமண்ணிக்குங்காண்மினே.
(அரிசிற்கரைப்புத்தூர். திருக்குறுந்தொகை. நா. கி)

"*நான் மனுவாயிருந்தேன்; சூரியனுமாயிருந்தேன்" (என்று இருஷி வாமதேவர் கண்டுணர்ந்தார்),

கo ரோரோய ரஜ்ஜத ரூவாவ்வ (கௌஷீ. கூ. உ)

"நீ என்னை ஆன்மாவாகவும் சிவமாகவும் உபாசி" (என்று கூறினவன் இந்திரன்)

---

(க) வாமதேவர், (உ) கிருஷ்ணர், (கூ) அகஸ்தியர், (ச) விசுவாமித்திரர் என்போர் சிவோகம்பாவனையினுலோங்கிய சிவபக்தர்:—

(க) வாமதேவர்:—

இந்தப் பிருகதாரணியத்திலே மூன்றும் அத்தியாயத்து நான்காம் பிராம்மணத்துப் பத்தாம் மந்திரத்திலே (பிரு. கூ. ச. கo), வாமதேவமுனிவர் "மனுவாயினேன் சூரியனுயினேன்" என்னும் பாவனை செய்தார் என்று கூறப் பட்டவிடத்து, "அஹம்பிரம்மாஸ்மி" என்னும் மகாவாக்கியபாவனையும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த வாமதேவமுனிவர் ஏகான்மவாதியா? வைணவரா? சைவரா? என உபப்பிருங்கணவாயிலாக ஆராயப்புகின்,

வாய்ய வாய்ய ரஹாஹாருவாரஷெவ ரூநீஷ்வரு।
கூவீதீவ ஸிவெ ஹகூ ஸ்ரீவஜ்ரநவதாo வரூ (கைலா. அ: க)

"நன்று! நன்று!! மகாபாகரும், முனீசுவரருமாகிய வாமதேவரே! நீவிர் சிவஞான முடையவருட் சிரேட்டராய், சிவபெருமானிடத்திலே மிகுந்த பத்தியுடையராய் உள்ளீர்" என்றற்றொடக்கத்தனவாக (முருகப்பிரான்) வாமதேவரை விளித்து அவருக்கு வைதிக பாசுபததீக்ஷை செய்து, சிவாத்துவிதம் உபதேசித்து, பிரணவத்தின் மந்திரார்த்தம், யந்திரார்த்தம், தேவதார்த்தம், பிரபஞ்சார்த்தம், சிவசுத்திரார்த்த முதலியவற்றை உபதேசித்தாராகக் கைலாச சங்கிதை எட்டாம் அத்தியாயந் தொடங்கிப் பதினெராம் அத்தியாயம் இறுதியாகக் கூறப்படலான், வாமதேவர் ஏகான்மவாதியருமன்று, வைணவருமன்று, பின் சிவபக்தரே; (க. க. கூக-ஆம்) சூத்திரபாஷ்யத்தில் இந்திரனது பிரமபாவனை கூறப்பட்டுள்ளது.

(உ) கிருஷ்ணர்:—

உவதிரு்வஸ்த்ர கூஷ்ணாய தீக்ஷாதிதாஸ்ருரூஹ।

"உபமன்னியு என்பார் இந்தப் பாசுபததீக்ஷையைக் கிருஷ்ணர்க்கு உபதேசித்தார்" என்று சனற்குமாரசங்கிதையைச் சார்ந்த காளிகாகண்டத்து முப்பதிரண்டாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

.ஹதோ ஹி தெவகீவஸுநு ரூவதிரு்வ ரூதீக்ஷயக்ஷ।
ஹதஸ்ரீவாஸு ரோமஹர்ஷஸு வ கூஷ்ணெ zவொயி தந்ரவாக்ஷ॥
(சிதம்பரமான்மியம், உச: நூச, நூநு)

"உபமன்னியு என்பார் தேவகி புதல்வராகிய கிருஷ்ணர்க்குத் தீக்ஷை செய்தார்; அவராற் சிவாகமார்த்தங்களையும் அந்தக் கிருஷ்ணர் அறிந்துகொண்டார்" என்று சிதம்பரமான்மியத்து இருபத்துநான்காம் அத்தியாயத்திற் காணப்படலானும்,

ஹஹாநீo ஸி ஹகூா ஸ்ருரா ஹவதிரு்வா ஸிஹாதந்ரஸ்ஃ।
ஸ்ரீவதீக்ஷாவ்ய நிவ-ர்ஜ்ஜா ஸ்ரீவாஹ ஸிஸாரஹாக்ஷ॥
(உபதேசகாண்டம், அo: சூநூ, சூச)

என்றற்றொடக்கத்த சுருதிகளிற் பிரமோபாசகர்கள் அந்த ஐக்கிய பாவனையினல், அந்தப் பிரமத்தின் அசாதாரண குணங்களை அடைகின்றனர் எனக் காணப்படுகின்றது.

திவ்ய உதாதி தெ யக்ஷுஃ வர்ஷையொ மெஶ்வரி।
(பகவற்கீதை. கக. அ)

---

"இப்பொழுது எனது பக்தசிரேட்டரும், மகாத்துமாவும், சிவாகமஞ்ஞருமாகிய உபமன்னியுவாயிலாக அவர்க்கு (கிருஷ்ணர்க்கு) சிவதீக்ஷை முற்றியது" எனச் சங்கரசங்கிதை உபதேசகாண்டத்து எண்பதாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

நஶ்ருகார ஶ ஶ்ரஷ்டா யௌஶ்ரூஜஶ்ரெஷ்ட்டிஜாஃ।
வேஶ்ரொ நநெவ க்ருஷ்ண ஸ்ரீ க்ருகூ வெவ வ்ருஷ்ணிஜி।

தஸ்யாவயொகநாதெவ ஶ்ரெஃ க்ருஷ்ஸ்யஶிஶஃ।
நஷ்டஶெவ ஶஶ வஷ்ட க்ராயஜ கஶிஜ்ஜதயா।

ஹஸ்டெநாஜ்ஞெஷ நஶ க்ருகூ உவசிந்ரு ஶிஷ்ஹாஸ்ரூதீஃ।
தீர்ஸிரிதி விவெஶ்ரூ வாயுரிதுர்தஶிஜி க்ருசிஷ்ட।
திவ்ய வாஸுவதக ஜாநந வ்ருஷ்ணெள வீர்தசாநஸஃ॥
(இலிங்கபுராணம். பூ. கஅ: நி—அ)

"முனிவர்களே! தெளமியர் தமையனாகிய அந்த உபமன்னியுவைக் கிருஷ்ணர் கமல்கரித்து, வெகுமானத்தோடு மும்முறை வலஞ் செய்தார்; அந்த முனிவருடைய பார்வையினலே புத்திமானாகிய கிருஷ்ணர் காயத்தினலும் கர்மத்தினலும் இயற்றிய பாவம் அனைத்தும் ஒழிந்தன; "அக்கினி" என்றற்றொடக்கத்த மந்திரங்கொண்டு முறைப்படி மகாப்பிரதாபமுடைய உபமன்னியுவானவர் பஞ்சமோத்தானஞ் செய்து, பிரிய மனசோடு திவ்ய பாசுபததீக்ஷைசெய்தார்" என்று இலிங்க புராண பூருவபாகத்து நூற்றெட்டாம் அத்தியாயத்தில் உரைக்கப்படலானும்,

ஹருவநீ ஸ்ரொதஶ ஶிஹாதி தெவெவ்ரு தெவெந ஹாவதிஜி।
திவ்ய வாஸுவதக ஜாநந விஹஸ்தி திஹாவ்ரு க்ருஷ்ணஃ॥
(வாயு. பூ. உ: சு)

"(கிருஷ்ணர் உபமன்னியுவை நோக்கி) பகவானே! சிவபெருமானல் உமாதேவியார்க்குக் கூறப்பட்ட திவ்ய பாசுபதஞானமும் அவருடைய வியூதியுமாம் அனைத்தையும் கேட்கவிரும்புகின்றேன்" என்று வேண்ட, அதற்கு உபமன்னியு விடையாக இறுத்தமையும், அவர்க்குத் தீக்ஷை செய்தமையும் பிறவும் வாயுசங்கிதை உத்தரபாகத்தில் மிகவிரிவாய்க் கூறப்படலானும்,

வஷ ஶ்ரூ உதெள ஜாந ஶ்ரவ்ரு ஶிஹாஶ்ரிஃ।
வ்ரதக வாஸுவதக யொஹ க்ருஷ்ணாத்திஷ்டகுஶ்ரெ॥

"இத்தப் பிரகாரம் மகாமுனிவராகிய உபமன்னியு (சிவபெருமானுடைய மகிமை களைக்) கூறியருளி, கடினமில்லாத கர்மத்தை முற்றுவிக்கும் கிருஷ்ணர் பொருட்டுப் பாசுபதயோகதீக்ஷாஞானத்தைக் கொடுத்தனர்" என்று கூர்மபுராணம் இருபத்தைந்தாம் அத்தியாயத்தினும், தருமசங்கிதை இரண்டாம் அத்தியாயத்தினும் விளக்கப்படலானும்,

"நான் உனக்குத் திவ்விய நேத்திரத்தைக் கொடுக்கின்றேன்; என் ஐசுவரிய யோகத்தைப் பார்" என்றற்றொடக்கத்த வாக்கியங்களிலே, கிருஷ்ணர் முதலாயினோர்க்கு அந்த ஐக்கியபாவனையினல் அந்த ஜகதீசுரத்துவம் பிரகாசிக்கின்றதெனக் காணப்படுகின்றது. பிரம பாவனைப்பியாசத்தினுலேதான் விஸ்வாமித்திரர் அகஸ்தியர் முதலாயினோர் (முறையே) மற்றோர் சுவர்க்கத்தைச்

---

திநzஷ்டிதம் விவைரண தீக்ஷிதாzஹமயீவியி|

(பா. அநுசாசனிபருவம், கச: கூஎச)

"அஷ்டமியிலே உபமன்னியுவினல் விதிப்பிரகாரம் தீக்ஷிக்கப்பட்டேன்" என்று வைசம்பாயனர் உதிஷ்டிரர் பீஷ்மர் என்போர்க்குக் கிருஷ்ணர் உரைத்ததாக மகாபாரதம் அநுசாசனிபருவத்துப் பதினன்காம் அத்தியாயத்திற் பேசப்படலானும்

ஸ வஷ ரு ஊஹக்ஷு கௌவொ ரு ஹூவ0ஹவஂ|
வவ-ம்ஏ-ஔ0 ஹவ0 ஜாகூவ ழி0ஹ்ஷ்ஷ்ய-தி வ்ரஹ-ழ்||

(பார. துரோணபருவம், உ0உ: கூச)

"சிவபெருமானினின்று உதித்தவரும், சிவபக்தருமாகிய அந்தக் கேசவர் உலகமனைத்துக்கும் காரணம் சிவலிங்கமென்றறிந்து எப்பொழுதும் பிரபுவாகிய சிவபெருமானே அர்ச்சிக்கின்றனர்" என்றும்,

ஷஷழி0 வஷ-ம் வஹஹவ்ராணி தாவஜ்ஜ்வ ஸுதாஜிய|
கூஸொஷ்ய-தூஷ்டூதா நo வாய-ஹஜ்கூா z0வை-ஜைகூஷணஂ|
வ ஜெத ந தவவா தாத வ்ரவழ ஹ-ழ்ஜிதா யஷ்zஹவகூ|
தஜெதா விஸ்ரஸ்ரo யொஜி0 விஸ்ரவ்ரு ஜகதீவை-திழ்
ஏஏஸ-ம்ஹ்ரஸ ஊஷ-ம்ஸ-ம்0 வவ-ம் ஜெவொ ரீஸ்ரவ்ரழ்||

(பா. துரோணபருவம், உ0உ: நிகூ, சக, கூஉ)

"அறுபத்தாருயிரம் வருஷம் வாயு ஜலபக்ஷணஞ் செய்து, தம்மை ஒறுத்து, அந்தத் தபஸினல் எப்போது பிரமமாயினரோ, அப்போது விசுவேசுவரரும் (விசுவ) காரணரும் விசுவமாகிய ஜகத்துக்குப் பதியாயினருமாகிய சர்வதேவேசுவர சிவபெருமானைத் தரிசித்தார்" என்றும் துரோணபருவத்து இருநூற்றிரண்டாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

அதனல் உபரிடதங்களிலே பிரதிபாதிக்கப்படாததாய், இராமாநுஜரால் கிருகாயணபுரத்திலே இற்றைக்கு அ0 வருஷத்துக்கு முன்னே, (அஃதாவது) சக வருஷம் ஆயிரத்துக்குமேற் பன்னிரண்டு சென்ற பகுதானியவருஷத்திலே புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டதாயுள்ள தீருமண்ணை காராயணருக்கு ஓரிடத்தும் வைணவர் காலர்யிரப்பிரபந்தமானது எற்றிக் கூறுது,

ஹவ்யாரூண வ0வஹொ33ஹஜ்ஞா ஹவிஷ்ய்-தி|

"விஸ்வதாரண சம்பன்னனுயுள்ளான் எனது (சிவபிரானது) அடியானுவன்" என்று பிருகச்சாபாலோபநிடதம் (கூ. கக) கூறியாங்கு, நாராயணரைச் சிவபக்தராகக் கொண்டு

ஹாவ்ஷ்ஸ்ரீவ-ஜ்ஞ்ரா ஹவிஜ்ஜெத ஹ்ஸ்ரீதவ்ஸ்ரவ்ஜெ-நூள நீஜ்ரீவ்ஜ்ஜவ்வா நூ ஷ-ஜ்ஜ்ரீ| கிரஜ்ஜஸ்ரஜ்ஜெ-தவி ஷ நூ ஷ-ஜ்ஜ்ரo விஜிஜ்ஜய-நூஜ்ஜஜாவஷ ணை-ர்ஹ நீ||

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

சிருட்டித்தல், சமுத்திரத்தைக் கவளீகரித்தன் முதலிய செய்கைகளைச் செய்யச் சாமர்த்தியமுடையராகின்றனர். உலகத்திலே மாந்திரிகர் கருட மந்திராப்பியாசத்தினாலே கருடனுடைய அசாதாரணகுணத்தை அடைகின்றனர். ஆகலின், பிரமாஹம்பாவனை முற்றியபோது பிரமத்துக்குரிய அசாதாரண குண அம்சத்தின் விசேஷநிலை உபாசகர்க்கு எய்தும் என்பதில் யாதும் தனியில்லை.

---

"விளங்காநின்ற திரிபுண்டரத்தையுடையவரும், விபூதியினால் வெளுத்தவரும், மௌனமுடையரும், ஜடையுடையரும், மரவுரியுடையருமாகிய நாராயணர் இடையீடின்றி மனசிலே சந்திரசூடராகிய சிவபிரானைச் சிந்தித்துப் பஞ்சாக்ஷரஞ்செபித்தார்" என்று பாரதத்தைச் சார்ந்த அரிவம்சத்திற் கூறப்படுவது கண்டு,

"கரியமேனியிசை வெளியநீறு சிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன்" .....

எனத் திருவாய்மொழியில் (சு. இ. சு) விபூதியையும்,

"உடையார்த்தவாடையன்தண்டுகையனுடைநாணினன்
புடையார் பொன்நூலினன் பொன் முடியன் மற்றும் பல்கலன்
கடையாவுடைத்திரு நாராயணன்"

எனத் திருவாய் மொழியில் (சு. ச. எ) உருத்திராக்ஷத்தையும் அவர்க்கேற்றிக் கூறினமையாலும், சிவபெருமானுக்கு ஒன்றைச் சமர்ப்பிக்கின் அது அவரையே சாரும் என்றும், சிவனடியார்க்கு ஒன்றைச் சமர்ப்பிப்பின் அது அச்சிவனடியார்க்கும் சிவோகம்பாவனையினால் அவ்வடியாரிடத்துத் தயிரில் நெய் போல விளங்கப்பெறும் சிவபெருமானுக்குமாக ஈரிடத்தும் எய்தப்பெறும் என்பராய்,

படமாடுங் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடுங் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயிற்
